# ஒப்பிலக்கிய நோக்கில்

# திருக்குறளும் தம்மபதமும் மனுதருமமும்

சு. முருகன்

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

5
42

LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERS

# ஒப்பிலக்கிய நோக்கில்

# திருக்குறளும் தம்மபதமும் மனுதருமமும்

சு. முருகன்

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

பதிப்புரிமை :

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை– 625 021

Copyright :

Publications Division,
Madurai Kamaraj University,
Madurai - 625 021.

பதிப்பு எண் : **163**

விலை : ரூ. **75**

பதிப்பு விவரங்கள் :

255232

031,1C5:9
P01

| | | |
|---|---|---|
| 1. ஆசிரியர் | : | முனைவர். **சு. முருகன்,**<br>கண்காணிப்பாளர்,<br>மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,<br>மதுரை – 625 021. |
| 2. தலைப்பு | : | **ஒப்பிலக்கிய நோக்கில்**<br>**திருக்குறளும் தம்மபதமும் மனுதருமமும்** |
| 3. பதிப்பித்தோர் | : | பதிப்புத்துறை,<br>மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,<br>மதுரை – 625 021. |
| 4. ஆண்டு | : | 2000 |
| 5. பக்கங்கள் | : | 290 + X |
| 6. பொருள் | : | ஒப்பிலக்கியம் |
| 7. பொதுப்பதிப்பாசிரியர் | : | முனைவர். **இரா. காசிராசன்,**<br>பதிப்புத்துறை,<br>மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,<br>மதுரை– 635 021. |
| 8. அச்சிட்டோர் | : | அருண் ஆப்செட்,<br>மதுரை. |

# அணிந்துரை

Dr. T. P. M. LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERSITY

பேராசிரியர் மு. சாலிகு,
துணைவேந்தர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
பல்கலைநகர்,
மதுரை - 625 021

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கண்காணிப்பாளராகப் பணியாற்றும் முனைவர் சு.முருகன் அவர்களின் 'ஒப்பிலக்கிய நோக்கில் திருக்குறளும் தம்மபதமும் மனுதர்மமும்' என்ற இந்நூல் இப்போது பதிப்புத்துறை மூலமாக வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது.

இன்றைய தமிழ் ஆய்வு வளர்ச்சியில் ஒப்பிலக்கிய ஆய்வு காலத்தின் தேவையாக விளங்குகிறது. தமிழ்மொழி இலக்கியங்களைப் பிறமொழி இலக்கியங்களோடு ஒப்பிட்டு, மொழித்துறை வளர்ச்சியையும், மொழிக்குச் செய்ய வேண்டுவனவற்றையும் கண்டறிதல் கடமையாகும். இந்நிலையில் மனித வாழ்க்கைக்கு நல்லறங்களைப் போதிக்கும் தமிழ், பாலி, வடமொழி ஆகிய மொழிகளில் தோன்றிய திருக்குறள், தம்மபதம், மனுதர்மம் ஆகியவற்றின் அறநெறிக் கூறுகளை ஒப்பிட்டு, அறம் உணர்த்துவதில் திருக்குறள் தனிச்சிறப்புப்பெறுவதை இந்நூல் சிறப்புடன் விளக்குகின்றது.

நூல்கள் அறிமுகம் என்னும் தலைப்பில் அமையும் முதல் இயல், திருக்குறள், தம்மபதம், மனுதர்மம் ஆகிய மூன்று நூல்களையும் அறிமுகம் செய்வதாக அமைகின்றது. இம்மூன்று அறநூல்களை ஒப்பிட்டு, அவற்றிற்கிடையேயான ஒற்றுமை, வேற்றுமைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் கூறி இருப்பது நூலாசிரியரின் புலமையை வெளிக்காட்டுகின்றது.

'குடும்பஅறம்' என்ற இயலில் கணவன், மனைவி இருவரும் கற்பு நிலை வழுவாது இணைபிரியாது வாழும் வாழ்க்கையை மனுவும்,வள்ளுவரும் விரும்பியதையும், பிறனில் விழையும் இன்னா ஒழுக்கத்தை மூன்று அறநூல்களும் கடிந்துரைத்தலை விளக்குவதோடு, திருவள்ளுவர் களவுவழித் திருமணத்தையே ஆதரிக்கும் நிலையையும் இந்நூல் திறம்படக் காட்டுகிறது.

'அரசியல்அறம்' என்னும் பகுதியில் திருவள்ளுவர், அரசரைச் சாதாரண மனிதராகக் கருதுவதோடு, அவரது அரசியல் இன்றைய அறிஞர்கள் போற்றும் நடைமுறை அரசியலாகத் திகழ்கிறது எனக் கூறியுள்ள நயம் பாராட்டற்குரியது. அந்தணர், அந்தணர் அல்லாதார் என்ற இன அடிப்படையில் அறம் செய்தல் வேண்டும் என்று மக்களை வேறுபடுத்தும் மனு நெறியிலிருந்து வள்ளுவர் மாறுபடுவதை இந்நூலாசிரியர் விளக்கும்திறம் அவரது நுண்மாண் நுழைபுலனைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

'சமுதாயஅறம்' என்ற நான்காவது இயலில் மனு கூறிய வருணப் பிரிவும் சாதிக்கலப்பும் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வை ஏற்படுத்தின, வருணப் பிரிவுகளும் அதனால் வளர்ச்சி பெற்ற சாதிப்பிரிவுகளும் வள்ளுவருக்கு உடன்பாடன்று என்ற கருத்து சிந்திக்கத்தக்கது.

'சமயஅறம்' என்ற பகுதியில், துறவு வேடங்கள் மட்டுமே ஒருவரைத் துறவி ஆக்குவதில்லை. வேடங்கள் இன்றியே உயிர்ப்பொதுமை உணர்வுடன் இருப்பதே சிறந்த துறவாகும் என்ற கருத்திலும், மகளிர் துறவு மேற்கொள்வதை வற்புறுத்தாமையிலும் மூன்று நூல்களும் ஒத்துக் காண்பதை விளக்கும் திறம் நயமுடைத்து.

'அறம் என்பது செயலே' என்ற புத்தர் பெருமானின் கோட்பாட்டை நுட்பமாக விளக்குவதுடன் இந்நூல்களுக்கிடையே அறச் சிந்தனைகளில் காணப்படும் ஒற்றுமைகளும் வேறுபாடுகளும் 'தனிமனித அறத்தில்' நன்கு விளக்கப்பட்டுள்ளன.

'அறம் உணர்த்தலில் திருக்குறளின் சிறப்புக்கள்' என்பதில், பிறப்பால் சாதிவேற்றுமையோ, தொழிலால் வகுப்புவேற்றுமையோ, வளத்தால் உயர்வு, தாழ்வுப் பாகுபாடோ அற்ற சமுதாயத்தை வள்ளுவர் காணமுயன்றதை, நூலாசிரியர் சிறப்புடன் சுட்டுகிறார். மனவொழுக்கம் குறித்த வள்ளுவரின் கொள்கை சாதி, சமய, இன, இடவேற்றுமைகளைக் கடந்து அனைத்துலக மனிதன் மண்ணில் நல்லவண்ணம் வாழ வழிகாட்டுகிறது என்ற செய்தி பாராட்டுக்குரியது. விருப்பு வெறுப்பின்றி நடுவு நிலை பிறழாது மூன்று அறநூல்களையும் தனித்தனியாகவும் ஒப்பிட்டும் ஆராய்வதால் திருக்குறளின் சிறப்பியல்புகளும், தனித்த தமிழ்ப் பண்பாடுகளும் இந்நூலின் மூலம் சிறப்புற வெளிப்படுகின்றன.

இவ்வரிய நூலைத் தமிழன்னைக்குச் சூட்டிய முனைவர் சு. முருகன் அவர்களுக்கு என் பாராட்டுக்கள். நூலை உரிய காலத்தில் செம்மையாக வெளியிட்ட மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை அலுவலரின் பணி பாராட்டுக்குரியது.

(மு. சாலிகு)

# பதிப்புரை

முனைவர் இரா. காசிராசன்,
பதிப்பாசிரியர்
பதிப்புத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை– 21.

முனைவர் சு. முருகன் அவர்களால், "ஒப்பிலக்கிய நோக்கில் திருக்குறளும் தம்மபதமும் மனுதருமமும்" என்ற நூல் இப்பொழுது மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை வெளியீடாக வருகிறது. திருக்குறள் உலகப் பொதுமறையாக இருந்தாலும் அது சைன சமயப் புலவரால் இயற்றப்பட்டது. சிந்தனை சைன சமயச் சார்புடையது. தம்மபதம் பௌத்தச் சார்புடைய நூல். மனு நீதி வேதியச் சிந்தனை மரபு சார்ந்தது. ஒன்று தென்னகத்துச் சிந்தனை. மற்றவை வட புலச் சிந்தனை. மனுதருமம் உலகியல் சார்ந்தது. சாதிக்கொரு நீதி என்பது போல் நீதிநெறிகளைப் பேசுவது. திருக்குறள் முழுக்க முழுக்க மனிதம் பற்றிப் பேசுவது. கருத்தியல் சார்ந்த உயர்ந்த நீதிகளை பேசுவது. சாதாரண மக்களால் எளிதில் பின்பற்றக் கூடியதாக இல்லாவிட்டாலும் அது மனித சமுதாயத்தின் உயர்வுக்கு வழிகோலுவது. தம்மபதம் பௌத்த சமய ஒழுகலாறுகளை குறிப்பாகக் கொல்லாமையை வலியுறுத்துவது. இத்தகைய மூன்று அற நூல்களையும் ஒப்பிட்டு, முனைவர் சு. முருகன் அவர்கள் இந்நூலில் விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. அவர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கண்காணிப்பாளராகப் பணியாற்றி, முதுகலை, எம்ஃபில், முனைவர் பட்டங்களைப் பெற்றவர், பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார். தமிழியல் ஆய்வில் ஆர்வம் மிக்கவர். எங்குத் தமிழியல் சார்ந்த கருத்தரங்குகள் நடந்தாலும் அதில் பங்கு பெறுபவர். அன்னாரின் இந்நூல், தமிழியல் ஆய்வாளர்களுக்கு குறிப்பாக ஒப்பிலக்கியத்துறை ஆய்வாளர்களுக்குப் பயனாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய ஒரு நூலினை வெளியிட்டுச் சிறப்பிப்பதில் மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பதிப்புத்துறை பெருமைப்படுகிறது.

இரா. காசிராசன்

# முன்னுரை

அறம் என்பதைப் பண்டைச் சான்றோர் ஒரு கொள்கையாகவோ கோட்பாடாகவோ, சமயமாகவோ கருதவில்லை. இதனை, அவர்கள் வாழ்க்கை நெறியாகவே கருதிப் போற்றினர். ஒழுக்க நெறிக்குரிய விதிமுறைகளின் தொகுப்பாகவே அறம் கொள்ளப்படுகின்றது. அறம், தனி மனிதன் ஒருவனுடைய கடமைகளையும், செயல் முறைகளையும் சமுதாயத்தின் ஓர் உறுப்பினன் என்ற முறையில் நெறிப் படுத்துகிறது. மனிதனைப் படிப்படியாகப் பண்படுத்துகிறது. மனித வாழ்வின் குறிக் கோளாகிய வீடு பேற்றை அடைய ஆக்கமும் ஊக்கமும் நல்குகிறது என்பது முன்னோர்களின் நம்பிக்கையாகும்.உள்ளத்தாலும் உரையாலும் செயலாலும் நன்மை செய்வதையே அறத்தின் பொதுநிலை எனக் கொண்டு நம் முன்னோர்கள் ஒழுகினர்.

அறம் என்ற சொல்லின் பொருள் பல்வேறு நிலையில் பிற்கால மக்களுடைய மனநிலைக்கும் பழக்க வழக்கங்கட்கும் தேவைகட்கும் ஏற்ப மாற்றமும் வளர்ச்சியும் அடைந்திருப்பதை அறிய முடிகின்றது. இன்றைய நிலையில் மனித வாழ்வில் கொள்ளத்தக்கனவும் தள்ளத்தக்கனவும் இவையென வரையறுப்பது அறம் எனலாம். இத்தகைய அறம் குறித்த செய்திகளை இந்திய நாட்டிலும் பிற உலக நாடுகளிலும் அவ்வப்போது தோன்றிய அற நூல்கள் வகுத்துரைத்துள்ளன. அவை கூறும் அறங்கள் அவை தோன்றிய காலத்து அவற்றின் மொழி தொடர்புபட்ட மக்களின் வாழ்க்கை ஏற்பிற்கேற்ப அமைந்திருத்தலைக் காணலாம். ஒவ்வொரு மொழியிலும் அமைந்த அறநூற் செய்திகளைத் தனித்த நிலையிலும் ஒப்பீட்டு நிலையிலும் ஆராய்ந்துணர்த்துவது வாழ்க்கை மேம்பாட்டிற்குப் பயனுடைய தாகும். அந்நிலையில் தம்மபதம், மனுதருமம், திருக்குறள் ஆகிய அற நூல்களில் உணர்த்தப்படும் அறக் கருத்துக்களை ஒப்பிட்டு ஆராய்ந்து ரைக்கும் வகையில், "ஒப்பிலக்கியநோக்கில் திருக்குறளும் தம்மபதமும் மனுதருமமும்" என்ற இந்நூல் வெளியிடப்படுகின்றது.

தம்மபதம் பௌத்த திருமுறைகளின் ஒரு பகுதியாக விளங்குகிறது. பாலிமொழியில் இயற்றப் பெற்ற பௌத்த சமயக் கருத்துக்களையும், கொள்கைகளையும் கொண்டமைந்ததோடு, பௌத்தத்தோடு தொடர் பில்லாத வேறுபல அறநெறிகளும் நீதியொழுக்கங்களும் இந்நூலில் நிறைந்துள்ளன.

இந்து சமயத்தின் தொன்மைக் கருவூலமாக வேதங்கள் திகழ்கின்றன. அவற்றுள் வாழ்க்கைக்குத் தேவையான அறநெறிகளை எடுத்துக்காட்டி, மறுமைக்கும் உதவுவனவாக வடமொழியில் எழுந்த தருமசாத்திரங்களுள் முதன்மையானதாக விளங்குவது மனுதரும சாத்திரம். இந்நூலில் வாழ்க்கைக்குரிய பலநெறிகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் தமிழில் தந்த திருக்குறள் மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டது. மனித வாழ்க்கை ஏற்றமும் எழிலும் பெற்று விளங்க வழிகாட்டும் அறம் உணர்த்துவது. உலகப்பொது நோக்கிலான அறம் இந்நூலில் கூறப்பட்டுள்ளது. எந்தச் சமயத்தையும் சாராது விழுமிய கருத்துக்களை எல்லாச் சமயத்தினரும் ஏற்கும் வகையில் திருக்குறளைத் திருவள்ளுவர் படைத்துள்ளார். அனைத்துலக மனிதனைப் பாடும் அறநூலாகத் திருக்குறள் திகழ்கிறது.

மேற்குறித்த வகையில் மனித வாழ்க்கைக்குரிய நல்லறங் களைக்கூறும் தம்மபதம், மனுதருமம், திருக்குறள் ஆகியவற்றின் அறநெறிக் கூறுகளை ஒப்பிட்டு ஆய்வதும் அதன் அடிப்படையில் திருக்குறள் அறம் உணர்த்தும் சிறப்பியல்புகளைக் கூறுவதும் இந்நூலின் நோக்கங்களாகும். இம்மூன்று நூல்களும் அற இலக்கிய வகையைச் சார்ந்த ஒப்புமை உடையனவாயினும் அவற்றின் நோக்கும் போக்கும் வேறாக இருக்கக் காணலாம். ப. ராமஸ்வாமி தமிழாக்கம் செய்த 'தம்மபதம்' என்னும் நூல் மூலமாகப் பயன்படுத்தப்படுகிறது. திரிலோக சீதாராம் மொழிபெயர்த்த 'மநுதர்ம சாஸ்திரம்', மூலமாகப் பயன்படுத்தப்படுகிறது. இவற்றோடு 'திருக்குறள் பரிமேலழகர் உரையும்' அடிப்படை மூலமாகப் பயன்படுத்தப்படுகிறது.

திருக்குறள், அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள்களையும் உணர்த்துகிறது. தம்மபதம், பௌத்த பிக்குகளுக்குரிய அறங்களையே அதிகமாக வலியுறுத்துகிறது. மனுதருமம், பொது அறத்தையும் வருணாசிரம தருமங்களையும் சமூகச் சட்டங்களையும் விளக்குகிறது. மேற் குறித்த மூன்று நூல்களிலும் கூறப் பெறும் அறக் கருத்துக்கள் மட்டும் இந்நூலில் ஒப்பீடு செய்யப்பட்டு விளக்கப்படுகின்றன.

எஸ். வையாபுரிப்பிள்ளை எழுதிய, 'இலக்கிய விளக்கம்' என்ற நூலில், 'வள்ளுவரும் மனுவும்' என்னும் இரண்டு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இக் கட்டுரைகள் சுருக்கமாக அமைந்துள்ளன. எஸ். ஜெயலட்சுமி

வெளியிட்டுள்ள 'திருக்குறளும் தம்மபதமும்' என்னும் நூல் இலக்கிய நோக்கில் ஒப்பீடு செய்யப்பட்டிருப்பதால் அறக் கருத்துக்கள் பற்றிய செய்தி குறைவாகவே காணப்படுகின்றது. 'திருக்குறளும் இந்திய அறநூல்களும்' என்னும் நூல் எழுதிய, க.த. திருநாவுக்கரசு, தம்மபதத்தோடு பத்துத் திருக்குறள்களையும், மனுதருமத்தோடு பதினொரு திருக்குறள்களையும் ஒப்பிட்டுரைத்துள்ளார். சுவாமி இராமானந்த பாரதியின் (K.R.R. Sastry) 'மனுவும் வள்ளுவரும்' (Manu and Thiruvalluvar) என்னும் நூலில் மனுதருமத்தோடு இருபத்திரண்டு திருக்குறள்கள் மட்டுமே ஒப்பிடப் பட்டுள்ளன. இவ்வாறு இதுவரையிலும் வெளிவந்தவை யாவும் சுருக்க மாகவே காணப்படுகின்றன. மேலும் இரண்டு நூல்கள் மட்டுமே ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன. ஆனால் திருக்குறள், தம்மபதம், மனுதருமம் என்னும் மூன்றின் அறவியல் கருத்துக்களின் அடிப்படையில் தமிழில் நூல் இதுவரை செய்யப் பெறவில்லை. இவ்வகையில் மேற்குறித்த மூன்று நூல்களில் காணலாகும் அறவியல் கருத்துக்களை முழுமையாகச் செய்யும் முதல் நூலாக இது அமையும்.

இந்நூல் வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்து இன்முகத்துடன் அணிந்துரை வழங்கிய மாண்புமிகு துணைவேந்தர் அவர்களுக்கு என்றும் நன்றியுடையேன். அவ்வண்ணம் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினருக்கும், பதிப்புத்துறை அலுவலர் அவர்களுக்கும் என்றும் நன்றி உரித்தாகுக.

சு. முருகன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நூல்கள் அறிமுகம் | 1 |
| 2. | குடும்ப அறம் | 21 |
| 3. | அரசியல் அறம் | 52 |
| 4. | சமுதாய அறம் | 109 |
| 5. | சமய அறம் | 167 |
| 6. | தனிமனித அறம் | 219 |
| 7. | அறம் உணர்த்தலில் திருக்குறள் சிறப்புக்கள் | 249 |

MADURAI-625 021
MADURAI KAMARAJ UNIVE

# 1. நூல்கள் அறிமுகம்

## முன்னுரை

திருக்குறள் தனித் தமிழ் நூல். தம்மபதமும், மனுதருமமும் மொழி பெயர்ப்பு நூல்கள். இம்மூன்றும் அற நூல்கள் என்பதால் இவை தொடர்புடைய செய்திகள் குறிக்கத்தக்கன. நூலாசிரியர் வரலாறு, நூலமைப்பு என்றவாறு இந்நூல்கள் பற்றிய செய்திகளும் அவற்றின் ஒற்றுமை, வேற்றுமைகளும் புலப்படுத்தப்படுகின்றன.

## திருக்குறள் வரலாறு

அறநூல்கள் என்று பொதுவாகக் கருதப்படுவன நீதி முறைகள், ஒழுக்கநெறிகள் என்பவற்றை நேரே எடுத்துக் கூறும் நூல்களேயாகும். அறநூல்கள் கூறும் வாழ்க்கைமுறை, உயர்ந்த குறிக்கோள் எனக் கருதித் தமிழர் அறநூல்களை இலக்கியங்களாகப் போற்றினர். தமிழில் காலந்தோறும் பல அறநூல்கள் தோன்றின. அவற்றுள் முதலானதும், முதன்மையானதும் திருக்குறளாகும்.

அறஇலக்கியங்கள் யாவும் யாதாகிலும் ஒரு சமயத்தின் அடிப்படையிலேயே அறக் கொள்கைகளை வெளியிடுகின்றன. இதற்குத் திருக்குறள் விதிவிலக்காக அமைந்துள்ளது. குறிப்பிட்ட எந்தச் சமயத்தையும் சாராது, அக்காலத்து நிலவிய பல்வேறு சமயங்களின் விழுமிய கருத்துக்களை ஏற்றுத் தம் அறநூலாகிய திருக்குறளில் அவற்றிற்குப் புதிய வண்ணத்தையும் வடிவத்தையும் திருவள்ளுவர் தந்துள்ளார். அதனால் பொதுமறையாகத் திருக்குறள் திகழ்கிறது.

"இத்தமிழ்மறை தொடக்கம் காணாததோர் முன்வரலாறும் வழி குறையாததோர் பின்வரலாறும் கொண்டது. இதனைப் பலநிலையில் ஆராயப்புகுதல் பல்லாயிரம் ஆண்டு தமிழ் இலக்கிய வரலாற்றையும், தமிழின் நாகரிக வரலாற்றையும், அவற்றோடு உலகப் பண்பாட்டு வரலாற்றையும் ஆராயப் புகுவதாகவே முடியும். ஆதலின் திருக்குறட் கேணியை அறிவுக்கருவியால் எத்துணைக்காலம் தோண்டினும் ஆராய்ச்சி ஊற்று வற்றாது"[1] என்பார் கருத்து நினைவு கொள்ளத்தக்கது.

1. வ.சுப. மாணிக்கம் (பொ.ப.ஆ.), காப்பியங்களில் திருக்குறள், பதிப்புரை, ப. V.

## திருவள்ளுவர் வரலாறு

திருவள்ளுவரின் வரலாற்றைத் தெளிவாகக் கூறும் நூல் எதுவும் இல்லை. அவரும் தம் வாழ்க்கை வரலாறு பற்றிக் கூறிச் செல்லவில்லை. அவருடைய பிறப்பு, ஊர், காலம், சமயம் ஆகியவற்றைப் பற்றிப் பல்வேறு கொள்கைகள் இருந்து வருகின்றன. திருவள்ளுவரின் வரலாறு பற்றிய குறிப்புக்கள் திருவள்ளுவமாலை, கபிலரகவல், ஞானாமிர்தம், தமிழ் நாவலர் சரிதை, தொண்டை மண்டல சதகம் முதலியவற்றில் காணப்படுகின்றன.

திருவள்ளுவர் யாளி தத்தரென்னும் அந்தண முனிவரின் மகனாகப் பிறந்தார். இல்லற ஒழுக்கத்திற்கு ஏற்ற வாசுகி என்னும் பெண்ணை மணந்தார். இருக்கு முதலிய நான்கு வேதங்களிலும் சிதறிக்கிடந்த உண்மைப் பொருள்களைத் திரட்டித் திருக்குறளென்னும் தமிழ் வேதத்தைப் படைத்துக் கடைச் சங்கத்தில் அரங்கேற்றம் செய்தார். "அங்கு வந்திருந்த நாமகள், வள்ளுவரின் நாவிலிலிருந்துதிருக்குறளைக் கூறியதாகத் திருவள்ளுமாலை"[1] குறிப்பிடுகின்றது. "நாமகளின் வாக்குத் திருவள்ளுவரின் வாயினிடத்துள்ளதால் அவர், நான்முகனின் அவதாரம் என்றும் கூறுவர்."[2] இதற்குமுரண்பட்ட மற்றொரு வரலாறும் காணப்படுகிறது. திருவள்ளுவரின் தந்தை பகவன்; தாய் ஆதி. உடன்பிறந்தார் அவ்வை, உப்பை, உருவை, வள்ளி, அதியமான், கபிலர் ஆக இவரோடு மொத்தம் எழுவர். தாயாகிய ஆதி, பகவனது கட்டளைப்படி, பெற்ற மக்களைப் பெற்ற இடத்திலேயே விட்டுச்சென்றாள். அக் குழந்தைகளை ஆங்காங்குள்ள பல்வேறு சாதி மக்கள் எடுத்து வளர்த்தனர். திருவள்ளுவர், வள்ளுவர் என்னும் சாதியினரால் வளர்க்கப்பட்டார்"[3] என்ற செய்தியும் காணப்படுகிறது. "திருவள்ளுவர் பெற்றோர் குடிப் பிறப்பு ஆகியன பற்றி வழங்கும் கதைகள் உண்மை உடையன அல்ல; வெறும் கட்டுக்கதைகளே என்பதைச் சோமசுந்தர பாரதியார் சான்றுடன் நிறுவியுள்ளார்."[4] அதனால் வள்ளுவரின்பெற்றோர் யார் என்பது சிந்தனைக்குரியதாகவே உள்ளது.

## திருவள்ளுவர் – பெயர்க்காரணம்

"வள்ளுவர் என்பது இயற்பெயரன்று; அது குலப்பெயரே என்பதை இலக்கியங்களால் அறியலாம். யானை மீது அமர்ந்து அரசனது ஆணைகளை

1. திருவள்ளுவமாலை, 2.
2. மேலது, 4, 28.
3 கி.வ. ஜகந்நாதன் (ப.ஆ.), திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, ப. 180.
4. செந்தமிழ் – தொகுதி 24, பகுதி 10.

முரசறைந்து நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பவர் வள்ளுவர் ஆவார். முரசறைவார் இழிகுலத்தைச் சார்ந்தவர். கீழ்க்குடியில் பிறந்து பெருநூல் செய்தாரை அக்குடிப்பெயரால் வழங்குதல் உலக வழக்கு. அதனால் குடிப்பெயரே வள்ளுவருக்கு இயற்பெயராக வழங்கிற்று"[1] என்று ரா. ராகவையங்கார் குறிப்பிடுகின்றார்.

"வள்ளுவர் இழிகுலத்தில் பிறந்தவர் என்பது பொருந்தாது. ஏனெனில், அறம், பொருள், அங்கங்களையும் அவற்றின் நுட்பங்களையும் திறம்பட விவரிக்கும் வள்ளுவர் ஆன்ற குடிப்பிறப்பும், அரசவைப் பழக்கமும் உடையவர் என்பதைக் குறளால் அறியலாம் என்று சோமசுந்தர பாரதியார் கூறுகின்றார்."[2] கடைச்சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்தில் வள்ளுவப்பெயர் சாதியைக் குறியாமல் மன்னரின் கருமத் தலைமைத் தொழிலைக் குறித்தது. இடைக் காலத்தில் அரச விழாக்களை அறிவிப்பவன் பெயராக இருந்தது. பிற்காலத்தில் புலை வகுப்பினரின் சாதிப் பெயராக வழங்கிற்று. வள்ளுவரின் இயற்பெயரும் அறிதற்கு இயலாத ஒன்றாகவே இருக்கிறது. திருவள்ளுவருக்கு இலக்கிய உலகில் பல பெயர்கள் வழங்குகின்றன. அவை, தேவர், முதற்பாவலர், பொய்யில் புலவர், மாதாநுபங்கி,தெய்வப்புலவர், செந்நாப்போதார், பெருநாவலர், நான்முகர், புலவர், நாயனார் என்பது. ஆனால் திருவள்ளுவர் என்ற பெயரே பெருவழக்காகக் காணப்படுகிறது. இப்பெயர்கள் யாவும் திருவள்ளுவ மாலையில் காணப்படும் சிறப்புப் பெயர்களாகும்.

## திருவள்ளுவரின் ஊர்

திருவள்ளுவரின் ஊர் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. திருவள்ளுவர், "தொண்டை நாட்டில் பிறந்தார்."[3] "வஞ்சி, திருச்செங்காட்டங்குடி, துறையூர் போன்ற தலங்களில் வசித்தார்"[4] என்பது ரா. ராகவையங்கார் கருத்து. ஆனால் மு. ராகவையங்கார் "வள்ளுவர் பிறந்த இடம் மதுரை. வாழ்ந்த இடம் மயிலாப்பூர் என்று

---

1. செந்தமிழ் – தொகுதி 1, பகுதி. 2.
2. செந்தமிழ், தொகுதி. 24, பகுதி. 10.
3. "கையா றிரண்டுடைக் காளைதன் வாயிற் கவிதைகொண்ட
   பொய்யா மொழிக்குப் புகழிடமானது பொய்கை யெல்லாம்
   செய்யார் கமலமலரவன் பிணங்கள் சென்று தமிழ்
   மையார் குவளை வயல் புடைசூழ் தொண்டை மண்டலம்"
   – தொண்டை மண்டல சதகம், 18.
4. செந்தமிழ் – தொகுதி. 5, பகுதி. 11.

கூறியுள்ளார்."[1] இதற்கு அரணாகத் திருவள்ளுவமாலையில், "புனற் கூடற்கு அச்சு"[2] என்ற தொடர் காணப்படுகிறது. மயிலாப்பூரைச் சேர்ந்தவர் என்ற கருத்தே பெருவழக்கில் இருந்து வருகிறது. ஆனால் சென்னையில் உள்ள மயிலாப்பூரில் நாயனார் வளர்ந்தார் என்பதற்கு அங்குச் சில ஆண்டுகளுக்கு முன் அமைக்கப் பெற்றுள்ள அவரது கோட்டத்தைத் தவிர வேறு சான்றுகள் இல்லை. "பாண்டி மண்டல சதகம், வள்ளுவரைப் பாண்டிய நாட்டினர் என்று குறிப்பிடுகிறது"[3] ஆனால் மேற்கூறிய கருத்துக்கள் யாவும் ஆதாரமற்றவை;

## திருவள்ளுவரின் காலம்

திருவள்ளுவரின் காலத்தை வரையறுக்கப் பலர் முயன்றுள்ளனர். "சங்க இலக்கிய ஆசிரியர்கள், திருக்குறள் கருத்துக்களையும் சொற்களையும் ஆண்டுள்ளனர். அதனால் திருக்குறளின் காலத்தைச் சங்க காலத்திற்கு முற்பட்டதாகக் கூறுவார் மா. இராசமாணிக்கனார்."[4] "சங்க இலக்கியங்களில் நீதிகள் விரவி இருப்பினும் திருக்குறள் வலியுறுத்தும் கள்ளுண்ணாமை, புலால் உண்ணாமை, கொல்லாமை போன்றவற்றைச் சங்க இலக்கியங்கள் இயம்பவில்லை. அதனால் திருக்குறள் சங்ககாலத்திற்குப் பிற்பட்டது"[5] என்று சாமி. சிதம்பரனார் கூறுகிறார். "பொய்யில் புலவன் என்று வள்ளுவரைத் தெளிவாகக் குறிப்பிடும் மணிமேகலைக்கு முற்பட்டது திருக்குறள் என்ற கருத்தும் காணப்படுகிறது."[6] "வ.சுப. மாணிக்கனார் திருக்குறளின் காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 3ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகும் என்று முடிவு கூறுகிறார்."[7] தமிழுலகில் வள்ளுவர் காலம் பற்றிய பல்வேறு கணிப்புக்கள் காணப்படுவதால் வள்ளுவரின் காலம் சிந்தனைக்குரியக்குரிய ஒன்றாகவே உள்ளது.

## திருவள்ளுவரின் சமயம்

திருவள்ளுவர் தாம் இன்ன சமயத்தைச் சார்ந்தவர் என்று யாண்டும் குறிப்பிடவில்லை. அவர் காலத்தில் வாழ்ந்த புலவர்களும் அவரது சமயத்தைப் பற்றிக் கூறிச் செல்லவில்லை. அதனால் வள்ளுவரின் சமயம்

---

1. செந்தமிழ் – தொகுதி. 7, பகுதி. 5.
2. திருவள்ளுமாலை, 20.
3. பாண்டி மண்டல சதகம், 22.
4. மா. இராசமாணிக்கம், திருவள்ளுவர்காலம் யாது?, ப. 8.
5. சாமி. சிதம்பரனார், வள்ளுவர் வாழ்ந்த தமிழகம், ப. 42.
6. ப. அருணாசலம், குறளின் செய்தி, ப. 292.
7. வ.சுப. மாணிக்கம், சிந்தனைக் களங்கள், ப 197.

யாதென அறிய இயலவில்லை. ஆனால் "உலோகாயதர், பூதவாதிகள், பௌத்தர், சைனர், சைவர், வைணவர், வேதாந்திகள், சித்தாந்திகள் முதலிய பல்வேறு சமயத்தவரும் திருவள்ளுவர் தங்கள் சமயத்தைச் சேர்ந்தவர் என்று கூறுகின்றார்கள்."[1] இவர்காட்டிய கொள்கை எச்சமயத்தவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க பொதுமைக் கூறுகளைக் கொண்டது.

## திருக்குறள்–பெயர்க்காரணம்

திருக்குறள் என்று இன்று வழங்கும் பெயர், திருவள்ளுவர் தம் நூலுக்கு வழங்கிய பெயரன்று. அது யாப்பு காரணமாக உலகோர் சூட்டிய உயர் பெயராகும். திருக்குறளின் அமைப்பு முறையை ஆராய்ந்த மு. சண்முகம்பிள்ளை, "திருவள்ளுவர் திருக்குறளுக்கு இட்ட பெயர் முப்பால் என்று குறிப்பிடுகின்றார். திரு என்பது நூலின் சிறப்புக்கருதி வழங்கும் அடைமொழி யாகும்.குறள் வெண்பா என்னும் பா வகையினால் நூல் செய்தி –ருப்பதால் குறள் என்னும் பெயர் நூலுக்கு வழங்குகிறது ."[2]

"வள்ளுவரும் அவர் மொழியும் திரு என்னும் அடை மொழியை அடுத்து இருப்பது மிகப்பொருத்தமானதே. குறளுக்கும் அதன் ஆசிரியருக்கும், கண்டவர்கள் கருத்தை எல்லாம் பிணித்து நிற்கும் பெருமை இருக்கின்றதல்லவா"என்று மகாமகோபாத்தியாய ஐயர் கூறுவதாகத் தண்டபாணி தேசிகர் குறிப்பிடும் கருத்தும் காட்டத்தக்கது."[3] இந்நூலின் தன்மை நோக்கிப் பல பெயர்களை அறிஞர்கள் இந்நூலிற்கு வழங்கினர். அவ்வகையில் முப்பால், பொய்யாமொழி, திருவள்ளுவப்பயன், வாயுறைவாழ்த்து, உத்தரவேதம், தெய்வநூல், பொருளுரை, வள்ளுவனார் வைப்பு, திருவள்ளுவர் தமிழ்மறை, பொதுமறை, முதுமொழி, அறம் என்னும் பெயர்கள் திருக்குறளுக்கு வழங்கப்படுகின்றன.

## திருக்குறள்–நூலமைப்பு

திருக்குறள் வள்ளுவரால் திட்டமிட்டு இயற்றப்பட்ட பெருநூல். திருக்குறளின் பெரும்பிரிவு, 'பால்' என்றும், சிறுபிரிவு, இயல்"என்றும் அதனிற் சிறுபிரிவு 'அதிகாரம்' என்றும் அமைக்கப்பட்டுள்ளது. வள்ளுவர் திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பிரிவாக அமைந்துள்ளது. அறத்துப்பால் 38 அதிகாரங்களும், பொருட்பால் 70

1. தி.அ.அரங்கநாத நயினார், திருக்குறள் ஆராய்ச்சியும் சைன சமய சித்தாந்த விளக்கமும், ப. 8.
2. மு. சண்முகம் பிள்ளை, திருக்குறள் அமைப்பும் முறையும், ப. 3.
3. ச. தண்டபாணி தேசிகர், திருக்குறள் அமைப்பும் அழகும், ப. 20.

அதிகாரங்களும், காமத்துப்பால் 25 அதிகாரங்களுமாக 133 அதிகாரங்களை உடையது. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் பத்துப்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்கள் கொண்டது. ஒவ்வொரு குறட்பாவும் முதலடியில் நாற்சீரும் ஈற்றடியில் முச்சீரும் கொண்டமைந்தது.

அறத்துப்பால் பாயிரம், இல்லறம், துறவறம், ஊழ் எனும் நான்கு இயல்களை உடையதாய் பகுக்கப்பட்டுள்ளது. பொருட்பாலில் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் என்ற ஏழு பிரிவுகள் உள்ளன. காமத்துப்பால், களவியல், கற்பியல் என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்தது.

ஒரு நூலுக்குப் பாயிரம் இன்றியமையாதது. இதனை "ஆயிர முகத்தான் அகன்றதாயினும் பாயிரம் இல்லது பனுவல் அன்றே"[1] என்ற கருத்தும் வலியுறுத்துகிறது. நூலின் தொடக்கத்தில் ஆக்கியோன் பெயர், வழி, எல்லை, நூற்பெயர் முதலியன கூறும் சிறப்புப்பாயிரம் அமைந்திருக்கும் அல்லது நூலாசிரியரால் கூறப்படும் தற்சிறப்புப்பாயிரம் காணப்படும்.

திருக்குறளில் காணப்படும் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் என்ற முதல் நான்கு அதிகாரங்களும் சேர்த்துப் பாயிரமாகக் கருதப்படுகிறது. ஆயினும் இலக்கணிகள் கூறும் பாயிர இலக்கணத்திற்கு வேறுபாடாகத் திருக்குறளின் பாயிரம் அமைந்துள்ளது. திருவள்ளுவரின் உண்மை வரலாறு, காலம் ஆகியவற்றை அறிய இயலாமைக்கும் திருவள்ளுவரைப் பற்றிப் பொய்க்கதைகள் வழங்குவதற்கும் பாயிர முரணே காரணம் எனலாம். இவ்வாறே இந்நூல் கடவுள் வாழ்த்திற்கும் ஏனைய நூல்களின் கடவுள் வாழ்த்திற்கும் வேறுபாடு உண்டு. புலவர்கள் தாம் எழுதத்தொடங்கும் நூல் இனிது நிறைவேறுவதற்காகத் தாம் வணங்கி வழிபடும் இறைவனை வாழ்த்துவர். இது கவிமரபு. ஆனால் திருக்குறள் கடவுள் வாழ்த்தில் கடவுளின் பொது இயல்பும் சிறப்பியல்பும் கூறப்பட்டுள்ளன. கடவுளை வணங்குதல் கற்றறிந்த மாந்தரின் கடமையாக வலியுறுத்தப் படுகிறது. இறைவனை வணங்குதல் அறமாகவே அறிவிக்கப்படுகிறது.

## திருக்குறளின் பெருமைகள்

தமிழ்மொழி திருக்குறளைப் பெற்றதால் நன்மதிப்புடன் விளங்குகிறது. "திருக்குறள் தோன்றிய நாள் முதல் தமிழிலக்கியங்களைக் கருத்தாலும் சொல்லாலும் வளஞ்செய்து வருகிறது. காப்பியங்கள் முதலாகப் புதினம்,

1. நன்னூல், 54.

நாடகங்கள் வரையிலும் குறள் நீர் பாயாத இலக்கியக் குளம் இல்லை."[1] உரைகள், உரைவேற்றுமைகள், உரைவளங்கள், உரைக்களஞ்சியங்கள், ஆய்வுரைகள், திருக்குறட்கு அமுதசுரபி போல மேன்மேலும் பொங்கி வருகின்றன. வள்ளுவர் பெயர்கொண்ட மன்றங்களும், கழகங்களும், நிறுவனங்களும், கோட்டங்களும்,போக்குவரத்துக்களும், கூட்டுறவுச் சங்கங்களும் பலப்பல. எண்ணற்ற உரைநடைகளும், சொற்பொழிவுகளும், கட்டுரைகளும், நாடகங்களும் திருக்குறள் பற்றி நாளும் வெளிவருகின்றன.

திருக்குறள் ஆங்கிலம், தெலுங்கு, இந்தி, செருமானி, பிரஞ்சு,இலத்தீன்போன்றமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதும் பெருமைக்கு உரியது. "அண்மையில் சௌராட்டிர மொழியிலும் மொழி பெயர்ப்பாயிற்று."[2] ஏறக்குறைய "முப்பத்தைந்து மொழிகளில் மொழி பெயர்த்துள்ள கருத்தும் காணப்படுகிறது"[3]

விலையில் பதிப்பு, மலிவுப்பதிப்பு, பரிசுப்பதிப்பு, கையடக்கப்பதிப்பு, குழந்தைப்பதிப்பு, சொல்லடைவு, பொருளடைவு என்று பல்வேறு பதிப்புக்கள் திருக்குறளுக்குப் பெருமை சேர்க்கின்றன.

தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை குறட்பாடம் இல்லாத வகுப்பில்லை. திருவள்ளுவர் மன்றம், திருவள்ளுவர் செந்தமிழ்க் கழகம், திருக்குறள் ஆராய்ச்சிக்கழகம், திருக்குறள் பயிற்சிக்கழகம் என்ற பெயர்களால் பட்டிதொட்டிகளில் குறள் பரப்பப்படுகிறது. திருக்குறளைப் பற்றிய செய்தி இல்லாச் செய்தித்தாள்களும் இல்லை. திருக்குறள் கலவாமல் பேசும் மேடைப் பேச்சாளரும் இல்லை.

## தம்மபதம்—வரலாறு

அன்பு நெறியை அனைத்துலகிற்கும் காட்டி, மண்ணகத்தில் விண்ணக வாழ்வை அடையுமாறு மக்கள் யாவரையும் புத்தர்பெருமான் தூண்டினார். அவருடைய அறிவுரைகள் தம்மபதத்தில் எளிமையும், இனிமையும், செறிவும், தெளிவும் வாய்ந்தனவாக உள்ளன. "பௌத்த சமயத்தைப் பற்றித் தெளிவாய்த் தெரிந்து கொள்வதற்கும் பௌத்த தரும ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் தம்மபதம் பயன்படுகிறது. அது தன்னிகரற்ற அழகுடையது. பொருள் நிறைந்த பழமொழிக் களஞ்சியம்,

1. வ.சுப மாணிக்கம், திருக்குறட்சுடர், முன்னுரை, ப. V
2. மேலது, ப. V
3. எஸ், ஜெயலட்சுமி, திருக்குறளும் தம்மபதமும், ப. 10.

பௌத்த சமயத்தைத் தெரிந்துகொள்ள விரும்புவோர் திரும்பத் திரும்பப் பார்த்துத் தெளிவுபெற வேண்டிய நூல்"[1] என்ற இந்நூல் பற்றிய கருத்துரை குறிக்கத்தக்கது.

## புத்தரின் வரலாறு

இந்திய நாட்டுச் சமயங்களுள் ஒன்று பௌத்தம். இப்பௌத்த சமயத்தைச் தோற்றுவித்தவர் சித்தார்த்தர் என்னும் புத்தர். "காசியிலிருந்து வடக்கே நூறு மைல் தொலைவில் நேப்பாள நாட்டின் எல்லையிலுள்ள கபிலவத்து என்னுமிடத்தில் அரசாண்ட சுத்தோதனார் என்ற சாக்கிய குலக் குறுநில மன்னரின் மகனாராகக் கி.மு. **563**ஆம் ஆண்டில் (கி.மு. **6**ஆம் நூற்றாண்டு) பிறந்தார்"[2] என்று கலைக்களஞ்சியம் கூறும் செய்தியைப் 'பிற அறிஞர்களும்'[3] ஏற்கின்றனர்.

புத்தர் பிறந்தபொழுது நன்னிமித்தங்கள் பல தோன்றியதாகக் கூறப்படுகிறது. அவர் பிறந்த ஏழு நாட்களில் அன்னையார் இறந்தார். மகாபிரசாகி என்னும் சிற்றன்னை அவரைப் பேணி வளர்த்தார். பத்தொன்பதாம் வயதில் முறைப் பெண்ணான யசோதரை என்னும் மங்கையை மணந்து, இராகுலன் என்னும் மகனைப் பெற்றெடுத்தார். அவர் மனைவி யுடனும் குழந்தையுடனும் வெளியுலகு தெரியாத இனிய வாழ்க்கை நடத்தினார்.

இவ்வுலக வாழ்க்கை நிலையற்றதென்று உணர்ந்த சித்தார்த்தர், தமது இருபத்தொன்பதாம் வயதில் துறவு பூண்டார். மனைவியையும் மகனையும் விடுத்து, அரண்மனையையும் நீங்கிச்சென்றார். மனிதனுக்கு ஏற்படும் துன்பங்களை நீக்கும் வழி யாது என்று சிந்திக்கலானார். கடுமையான விரதங்களை மேற்கொண்டார். உடல் மெலிந்தார். இறுதியில், சாகுந்தறு வாயில் சுஜாதா என்னும் ஆயர்குலமகள் தந்த பாலைப்பருகி உடல்நலம் பெற்றார். அதன்பின்னர் ஏழு வாரங்கள் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்தார். ஒருநாள் விடியற்காலையில் அவருக்கு ஞானம் உதயமாயிற்று. அதன் பயனாகத் துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்னும் தத்துவங்களை அறிந்தார். பின்னர் தம்மைத் ததாகதர் (உண்மையை அடைந்தவர்) என்று கூறிக்கொண்டார். பௌத்தர்கள் புத்தர் ஞானம் பெற்றதற்கமைந்த அரசமரத்தைப் போதிமரம் என அழைத்தனர்.

1. Oldenberg, Herman, Buddha: Life his Doctorine His order, PP 195–196.
2. கலைக்களஞ்சியம், தொகுதி. 8, ப. 428.
3. சோ. ந. கந்தசாமி, பௌத்தம், ப. 1.

"புத்தர் தாம் கண்ட அறமார்க்கத்தை, காசிக்கருகில் உள்ள மான்வனம் சென்று அங்குள்ள துறவிகளுக்கு உபதேசித்தார். அதன் பிறகு நாற்பத்தைந்து ஆண்டுகள் ஊர் ஊராகச் சென்று தமது அறநெறிகளைப் பரப்பினார். இவரது சீடர்களின் எண்ணிக்கை கூடவே புத்த சங்கம் அமைத்து அறத்தைப் போதித்தார். தம் எண்பதாம் வயதில் குசிநகரில் உள்ள இரணியவதி ஆற்றங்கரையில் பரிநிருவாணம் அடைந்தார். இவ்வாண்டு கி.மு. 483 என்பர்."[1] புத்தர் பிறந்ததும், புத்தரானதும், பரிநிருவாண மடைந்ததும் வைகாசித்திங்கள் நிறைமதி நாளன்று என்று கூறுவர். இந்நாள் பௌத்தர்களுடைய புண்ணிய நாளாகக் கருதப்படுகிறது.

## புத்தர்—பெயர்க்காரணம்

புத்தர்பெருமானின் இயற்பெயர் சித்தார்த்தர். குடும்பப்பெயர் கௌதமர். அவர் ஞானமடைந்த பிறகு ஏற்பட்ட பெயரே புத்தர். புத்தர் என்றால் பூர்ண ஞானம் பெற்றவர். எவரும் வெல்ல முடியாத வெற்றியை அடைந்தவர் (த.177) என்று பொருள். ஆனால் புத்தநிலையை அடைதல் அரிது. புத்தர்கள் பலர் இருந்தனர் என்பதைத் தம்மபதம் (182) கூறுகின்றது. "கௌதம புத்தருக்கு முன் ஆறு புத்தர்கள் இருந்தனர் என்ற செய்தியும் காணப்படுகிறது. புத்தவமிசம் என்ற நூலில் 24 புத்தர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. மகாயான நூல்களில் புத்தர்கள் எண்ணற்றவர்கள் என்ற செய்தி காணப்படுவதாக அறிஞர் சோ.ந. கந்தசாமி குறிப்பிடுகின்றார்."[2] இதனை, "இறந்த காலத்து எண்ணில் புத்தர்களும்"[3] என்ற சாத்தனார் கருத்தும் அரண் செய்கிறது.

## புத்தரின் பிறபெயர்கள்

புத்தர் படிப்படியாக மனவளர்ச்சியும், அறிவுவளர்ச்சியும் அடைந்து ஊன் உடலை ஒளிவீசும் உடலாக அமைத்துக் கொண்டவர். உள்ளத்தில் பொங்கிய ஞானஒளி உடல் முழுவதும் பொலிந்ததுடன் சுற்றப்புறமெல்லாம் சூழ்ந்து பாய்ந்தது. அதனால் புத்தரைப் 'புத்தஞாயிறு' என்று போற்றினர். புத்தஞாயிற்றிற்கு அறமே ஒளியாகும். ஆதலின் கவிமணியும் புத்தசோதியை, ஆசிய சோதியாக மதித்துத் துதித்துப் பாடியுள்ளார்.

புத்தர் பெருமானின் அருளாற்றல்களைப் புலப்படுத்தும் வகையில்

1. கலைக்களஞ்சியம், தொகுதி 8, ப. 430.
2. சோ. ந. கந்தசாமி, பௌத்தம்., ப. 2.
3. மணி. 30: 14.

தேவன், பகவான், போதிமுனிவன், போதிநிழற்புனிதன், தருமராசன், விநாயகன், போதிமாதவன், தயாவீரன், பிறவிப்பிணி மருத்துவன் என்று பல பெயர்கள் வழங்கின. இவை தவிர ஆதிமுதல்வன், ஆதிசால முனிவன், ஆதிசினேந்திரன், மன்னுயிர் முதல்வன், தொல்லோன், தலைவன், பெரியவன், மாரனை வென்றவீரன், காமற் கடந்த வாமன் என்ற பெயர் களையும் சாத்தனார் குறிப்பிடுகின்றார். இப்பெயர்களால் புத்தர் வரலாற்று மனிதர் என்றில்லாமல் பரம்பொருளின் தோற்றமாகக் கருதப்பட்டார் என உணரலாம்.

## திரிபிடகங்கள்

"புத்தர்பெருமானின் போதனைகளும் அவர் தமது சீடர்களுக்குக் கூறிய பொன்மொழிகளும் அவர் மறைவிற்குப் பின்னர் தொகுக்கப்பட்டன. அவை தொகுக்கப்பட்ட வரலாற்றுக் குறிப்புக்களும் காணப்படுகின்றன."[1]

புத்தர் நிருவாணம் அடைந்தபிறகு, புத்த பிட்சுகளின் முதற்கூட்டம் பீகார் மாநிலத்தில் உள்ள நாலந்தாவுக்கு அருகில், இராசகிருகம் என்ற பிம்புசார மன்னனின் தலைநகரில் கூடியது. ஐந்நூறு பிட்சுகளின் கூட்டத்திற்கு மகாகாசியபன் அவைத்தலைவராக இருந்தார். புத்தரின் நெருங்கிய சீடர்களாகிய உபாலி, ஆனந்தர் முதலியோர் புத்தரின் பொன்மொழிகளைப் படித்துத் தொகுத்தனர். அவற்றை வினயபிடகம், தம்மம் என்று அழைத்தனர். மீண்டும் வைசாலி நகரில் இரண்டாம் சபை கூடியது. சப்பகாம மகாதேர் என்ற பிட்சுவின் தலைமையில் எழுநூறு பிட்சுக்கள் கூடினர். சுத்தபிடகம் தொகுக்கப்பட்டது. அதன்பின்னர் 'மாமன்னன் அசோகன் ஏற்பாட்டில் பாடலிபுரத்தில் மொக்கலி புத்ததிண்ண என்ற பிட்சுவின் தலைமையில் ஆயிரம் பிட்சுக்கள் கூடினர். அபிதம்ம பிடகம் தொகுக்கப்பட்டது. இவ்வாறு வினயபிடகம், சுத்தபிடகம், அபிதம்மபிடகம் என்று திரிபிடகங்கள் தொகுக்கப்பட்டன. பின்னர் கி.மு. முதலாம் நூற்றாண்டில் இலங்கையில் கூடிய நான்காம் சங்கம் திரிபிடகங்களை முறைப்படுத்தித் தொகுத்து வெளியிட்டது.

பிடகம் என்றால் கூடை என்று பொருள்படும். ஒரு பொருளை ஓரிடத்தில் வைக்கவும், கொண்டு செல்லவும் கூடைகள் உதவுகின்றன. அதுபோல் ஞானச் செல்வங்களை ஒருவரிடமிருந்து, ஒருவருக்கு, ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குச் சேர்க்கும்

1. மு.கு. ஜகந்நாதராஜா, தீகநிகாயம், ப. 10.

நூல்கள் பிடகங்கள் எனப்பட்டன. திரிபிடகங்கள் என்றால் மூன்று கூடைகள் எனப்படும்.

## தம்மபதமும் பொருள் விளக்கமும்

பாலிமொழியில் அமைந்த திரிபிடகங்களின் அளவு மிகப்பரந்துபட்டது. வினயபிடகம், சுத்தபிடகம், அபிதம்மபிடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைத் தவிர உட்பிரிவுகள் பல உள்ளன. சுத்தபிடகத்தில் குத்தகநிகாயம் என்ற தொகுதிஉள்ளது. அதில் பதினைந்து நூல்கள் அடங்கியுள்ளன. அவைகளுள் இரண்டாவதாகத் தம்மபதம் எனும் அறநூல் இடம்பெற்றுள்ளது. பகவத் கீதை, குறள் ஆகியன போலத் தம்மபதம் தனிச் சிறப்புடைய அற நூலாகும். இந்நூல் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தம்மபதம் என்பது தருமம் + பதம் எனும் இருசொற்களின் சேர்க்கை—யாகும். தருமம் எனும் வடமொழிச்சொல் பாலி மொழியில் தம்மம் என்று திரிந்து வழங்குகிறது. தம்மபதத்தில் தருமம் எனும் சொல் மனநிலை (த. 3), சட்டம் (த. 5), அறம் (த. 24), கொள்கை (த. 38), உண்மை (த. 64), புத்தரின் அறவுரை (த. 79), அறவுரை (த. 82), ஒளிமிகு வாழ்க்கை நெறி (த.87), கொள்கையின் ஓர் அசை (த. 100), நற்பண்புகள் (த. 107) எனும் பத்துவகைப் பொருள்களைத் தருகிறது. பதம் என்ற சொல்லிற்கு மூன்று வகையான விளக்கங்களைத் தருவர். அவை:

1. "பதம் எனும் சொல் அடி, அடிப்படை எனும் பொருள் பயக்கும். ஆதலால் தருமத்தின் அடிப்படையை உணர்த்துவது தம்மபதம் என்பர்.

2. பதம் என்பது செய்யுளின் அடியை (பாதத்தை)ச்சுட்டும். எனவே தம்மபதம் என்பது தருமத்தைப் பற்றிய பாடல்களின் தொகுதி என்றும் கூறுவர்.

3. பதம் என்பது முதுமொழிகளையும் குறிப்பதால் முதுமொழிகள் அடங்கிய அறநூல் எனவும் கூறுவர்"[1] இவ்வாறு பல்வேறு விளக்கங்கள் காணப்படினும் புத்தரின் போதனையாகிய அறவழியைத் தம்மபதம் உணர்த்து—கிறது எனலாம்.

## தம்பதத்தின் அமைப்பு

தம்மபதம் அளவில் மிகச்சிறிய நூல். புத்தரின் சிந்தனைகள் இனிய,

1. சு.த. திருநாவுக்கரசு; திருக்குறளும் இந்திய அறநூல்களும், ப. 78.

எளிய, சிறுசிறு பாக்களில் வடிக்கப் பெற்றுள்ளன. இந்நூலில், இரட்டைச் செய்யுட்கள், கருத்துடைமை, சிந்தனை, மலர்கள், பேதை, ஞானி, முனிவர், ஆயிரம், தீயொழுக்கம், தண்டனை, முதுமை, ஆன்மா, உலகம், புத்தர், களிப்பு, இன்பம், கோபம், குற்றம், சான்றோர், மார்க்கம், பலவகை, நரகம், யானை, அவா, பிக்கு, பிராமணன் எனும் இருபத்தாறு இயல்களும், நானூற்று இருபத்துமூன்று (423) பாக்களும் உள்ளன. இயல் ஒன்றுக்குக் குறைந்தது பத்துப் பாக்களும் (த. 7,12) அதிகப்படியாக நாற்பத்தொரு பாக்களும் (த. 26) இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு இயலிலும் வரையறைக்கு உட்பட்ட பாடல் எண்ணிக்கை அமைப்புக் காணப்படவில்லை. அதனால் இந்நூல் திட்டமிட்டுத் தொகுக்கப்படவில்லை என்பது தெளிவு.

## தம்மபதம் – மொழிபெயர்ப்புகள்

இந்தியாவில் தோன்றிய அறநூல்களில் உலகமொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப் பெற்ற சிறப்புக்குரிய நூல்களுள் தம்மபதமும் ஒன்றாகும். பாலிமொழியில் எழுதப்பெற்ற தம்மபதம் பல மொழிகளில் மொழி பெயர்க் கப்பட்டுள்ளது.

"முதன் முதலாக எழுதப்பட்ட சீன மொழிபெயர்ப்பு கி.பி. 972இல் அச்சிடப் பெற்றது. சீன மொழியில் முப்பத்தொன்பது அதிகாரங்களையும், 760 பாக்களையும் கொண்டதாக விரிந்துள்ளது. சீன மொழி பெயர்ப்பில் கதைகள், விளக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன."[1]

"கி.பி. 1870இல் ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து ஆழ்ந்த ஆராய்ச்சியோடு வெளியிட்டவர் மாக்ஸ் முல்லர். இவர் தாம் மொழி பெயர்த்த தம்மபதத்துக்கு விளக்கமாக வரும் கதைகளையெல்லாம் பர்மிய மொழியிற் பயின்று காப்டன் ரோஜர்ஸ் என்பவர் மொழிபெயர்ப்போடு சேர்த்து வெளியிட்டார். கி.பி. 1885 இல் பாஸ்பால் என்பவர் இந்த அறநூலை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். பின் வெபர், காகர்லி, உப்உறப், பட்நாட் என்ற ஐரோப்பியர்கள் பிற மொழிகளில் மொழிபெயர்த்தார்கள். கி.பி. 1916ஆம் ஆண்டு வடமொழி இதழில் தம்மபதத்தின் மூலபாடம் ஆராய்ச்சிக் குறிப்புரையுடன் வெளி வந்தது. கி.பி. 1950ஆம் ஆண்டு இராதாகிருட்டிணன் என்பார் ஆறு பதிப்புகளை வெளியிட்டார். பகவத் என்பவரும் ஆங்கிலத்தில் கையடக்கப்பதிப்பாக இதனை வெளியிட்டுள்ளார்."[2] "ஆங்கிலத்தில் மட்டும் நாற்பது மொழி பெயர்ப்புக்கள் உள்ளன. ஜெர்மனி, பிரஞ்சு, இத்தாலி, ருஷ்ய,

1. எஸ். ஜெயலட்சுமி, திருக்குறளும் தம்மபதமும், ப. 17.
2. க.த. திருநாவுக்கரசு, திருக்குறளும் இந்திய அறநூல்களும், ப. 79.

இலத்தீன் மொழிகளிலும் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. வங்காளம், கன்னடம் முதலியவற்றிலும் இந்நூலின் மொழி பெயர்ப்புக்கள் உள்ளன."[1]

தமிழில் கி.பி. 1952இல் மும்மணி என்பவர் இந்நூலைத் தம்மபதம் அல்லது அறவழி என்ற பெயரில் உரை விளக்கங்களுடன் வெளியிட்டார். கி.பி. 1979 இல் அ.லெ. நடராசன் என்பாரும் இந்நூலினைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். ப.ராமஸ்வாமி என்பவரும் புத்தர் பெருமான் அருளிய அறநெறியைத் தம்மபதம் என்னும் பெயரில் கி.பி. 1987ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து தி. ராசகோபாலன் என்பவர் புத்தரின் அறநெறியும் அருளுரையும் என்னும் பெயரில் தம்மபதத்தை வெளிவரச் செய்தார். ஏ.வி.எம். சரவணன் அவர்களும் தம்மபதத்தை, 'தர்மபாதை' என்னும் பெயரில் கி.பி.1991 இல் வெளியிட்ட நூலும் காணப்படுகிறது. செயப்பிரகாசம் மொழிபெயர்த்த, தம்மபதம் என்னும் நூலைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட உள்ளது.

## தம்மபதத்தின் காலம்

தம்மபதக் கருத்துக்கள் புத்தரால் போதனை செய்யப்பட்டவையே அன்றி அவரால் புத்தகவடிவில் எழுதப்படவில்லை. எனவே புத்தர் வாழ்ந்த காலத்திற்கும், தம்மபதக் காலத்திற்கும் வேறுபாடு உண்டு.

புத்தசங்கத்தில் உள்ள அனைவரும் தொகுக்கப்பட்ட மூன்று பௌத்த நூல் தொகுதிகளையும் ஒழுங்காக மனப்பாடம் செய்தனர். "அசோக மன்னனின் முயற்சியால் இலங்கையிலும் பௌத்தம் பரவியது. அசோக மன்னன் அரியணை ஏறிய ஆண்டு கி.மு. 207."[2] தேரவாத பௌத்த மதம் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. இவர்கள் திரிபிடகங்களை எழுதி வைக்கத் தொடங்கினர். இலங்கைத் தீவை கி.மு. முதல் நூற்றாண்டில் அரசாண்ட வட்டகாமினி என்னும் அரசன் காலத்தில் மலைய நாட்டிலே மாத்தளை என்னும் ஊரில் உள்ள அலு (ஆலோக) விகாரை என்னும் பௌத்தப் பள்ளியில், முன்பு வாய்மொழியாக ஓதப்பட்டுவந்த திரிபிடகம் நூல்வடிவாக ஏட்டில் எழுதப்பட்டது."[3] பாலி மொழியின் சிறந்த நூல்களுள் கி.மு. 70 இல் இயற்றப்பட்ட தம்மபதம் குறிப்பிடத்தக்கது"[4] என்ற கருத்தும்

1. எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கிய விளக்கம், ப. 99.
2. நல்லூர் நாகலிங்கம், கௌதமபுத்தர், ப. 93.
3. மேலது, ப. 182.
4. Herbert H Cowire D D., A History of Indian Literature, P 18.

காணப்படுகிறது. இவ்வாறு தம்மபதத்தின் காலம் பற்றிப் பல்வேறு கருத்துக் கள் காணப்படுகின்றது.

"புத்தர் மறைந்து சில நூற்றாண்டுகள் கழிந்த பிறகே பௌத்த சங்கத்தினரால் தம்மபதம் தொகுக்கப்பட்டது. எனவே, அது வரையிலும் பௌத்த சங்கத்தில் ஒருவர் மற்றொருவருக்குச் சொல்லச் செவி வழியாகவே வழங்கி வந்த உபதேசங்களில் சங்கத்தைச் சேர்ந்த தத்துவ மேதைகளின் இடைச் செருகல்களும் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனினும் அந்த இடைச்செருகல்களும் பகவான் புத்தரின் மையக் கருத்துக்களிலிருந்து பிறழாததாகத்தான் இருக்கும் என்பதில் எவருக்கும் கருத்து வேற்றுமை யில்லை என்பார் மொழி பெயர்ப்பாசிரியர்."[1]

## மனுதருமம்—வரலாறு

மக்களின் நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் சமுதாயச் சிந்தனைகளையும், அரசநீதியையும் புலப்படுத்தும் "தரும சாத்திரங்களுள் மனுதருமசாத்திரமே முதன்மையானது. தொன்மையாலும் வேதத்தின் ஒப்புதல் பெற்றமையாலும் இந்தத் தனிச்சிறப்பு அதற்கு அமைந்துள்ளது."[2]

## மனுதருமத்தின் ஆசிரியர்

ஆதி தருமசாத்திரமான மனுதரும சாத்திரத்தை இயற்றியவர் யாரென்பது சிந்தனைக்குரியதாகவே உள்ளது. தருமம் என்பதைப்போலவே மனு என்ற பெயரும் மிகப்பழமையானது. இருக்குவேதத்தில் நான்கு மனுக்கள் குறிப்பிடப்படுகின்றனர். "பிரஜாபதியாகப் போற்றப்பட்டார் ஒரு மனு. அவரை ஆதி மனு என்பர். அவர் உயிர்களை எல்லாம் கடல்கோளி லிருந்து காப்பாற்றினார் என்பர். அவருடைய வழி வந்தமையால் 'மக்கள்' மனிதர் எனச் சுட்டப்படுவதாகக் கூறுவர்."[3]

"நினைப்பது என்று பொருள்படும் மன் என்ற தாதுவிலிருந்து மானவன், மனுஷ்யன் என்ற சொற்கள் பிறந்தன என்றும் அதிலிருந்து ஆதிபிதாவின் பெயரை மனு என்று கற்பித்திருக்கலாமென்றும் ஆராய்ச்சி யாளர் கூறுவர்."[4] பகவக்கீதை நான்கு மனுக்களைக் கூறுகிறது. ஆனால் இந்த அறநூலோ மனுக்கள் எழுவர் என்றும், நாம் ஏழாவது மனுவின்

1. அ.லெ. நடராசன், தம்மபதம், முன்னுரை, ப. 1.
2. திருலோக சீதாராம் (மொ.ஆ.), மநுதர்ம சாஸ்திரம், அறிமுகம், ப. 3.
3. க.த. திருநாவுக்கரசு, திருக்குறளும் இந்திய அறநூல்களும், ப. 43.
4. கலைக்களஞ்சியம், தொகுதி 8, ப. 201.

காலத்தில் வாழ்வதாகவும் தெரிவிக்கிறது (மனு. 1:36).

மனித இனத்தின் பழக்கவழக்கங்களையும் சமுதாய அமைப்பையும் அமைத்துத் தந்தவர் ஒரு மனு. அவர் வழிவந்த வேறொரு மனுவே இந்த தரும சாத்திரத்தை இயற்றியதாகத் தெரிகிறது. அவரே மனித இனத்தின் பிதாமகன் எனப்போற்றப்படுகிறார். மேலும் "பொறிவாயில் ஐந்தவித்து விசய சுகங்களை நாடாமல் மனத்தைத் திருப்பி, பரம்பொருளிடத்தே ஊன்ற நிறுத்திய சுவயம்பு மனு (மனு. 1:1) வேதத்தின் சாரங்களை முற்றும் உணர்ந்த பெருமான் (மனு. 1:3) வரம்பிகந்த வல்லமைகள் வரப்பெற்ற மனு (மனு.1:4) என்றெல்லாம் புகழப்படுகின்றார். இதற்கேற்ப "வடிவமாற்றம் கொண் டெழுந்த நானே உங்கள் முன்னால் இயங்காநிற்கும் இவ்வுலகுக்கெல்லாம் முதலாமவன் (மனு. 1:33) என்ற கருத்தும் காணப்படுகிறது. இதனால் இறையின் மறுவடிவமே மனு; அவர் தொன்மைச்சிறப்பும் தெய்வத்தன்மையும் வாய்ந்தவர் என்ற கருத்து காணப்படுகிறது. இக்கருத்திற்கு முரணாக, "பாரதநாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவரும் வரலாற்றுக் கதைகளை நோக்கினால் மனு என்பவர் ஒரு தனிமனிதர் என்றில்லாமல் அது அறம் வகுக்கும் அண்ணலின் பதவி அல்லது பட்டத்திற்குரிய பெயராகும்"[1] என்ற செய்தியும் நிலவுகிறது. இதற்கு அரணாக "ஒரு தேவயுகம் எழுபத்தோரு தடவை வரிசையாக வந்து போகுமானால் ஒரு மனுவுக்கு சிருஷ்டிக்கும் பதவிக்காலம் முடிவாகிறதென்று மன்வந்தரம் என்ற சாத்திரம் கூறுகிறது (மனு.1:79) என்ற கருத்தும் நூலினுள் அமைந்திருப்பதால் மனு என்னும் பெயர் பதவி அல்லது பட்டத்திற்குரிய பெயர் என்பது வெளிப்படை.

## முதல்நூல்

"மகாபாரதத்தையும் புராணங்களையும் போன்று மனுவின் அறநூல் மக்களிடையே பெருவழக்குடையதாக விளங்குகிறது. இந்த உபநிட தங்களைப் படிக்க இயலாத மக்களுக்குப் பயன்படும் வகையில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. சமயத்திற்கும் சட்டத்திற்கும் இடையேயுள்ள நெருக்கமான தொடர்பினை இத்தருமநூல் காட்டுகிறது"[2] என்பதுஇந்நூல் குறித்த செய்தியாகும்.

"இதற்கு முதல்நூலொன்று இருந்திருக்கிறது. அது லட்சம் சுலோகங்களைக் கொண்ட மானவதரும சாத்திரம், வாய்மொழியாகப் பயின்றுவந்த* அப்பெரு நூலிலிருந்து சிதைவுற்று மிஞ்சியதே இப்போதுள்ள

1. திருலோக சீதாராம் (மொ.ஆ.), மநுதர்ம சாஸ்திரம், அறிமுகம், ப. 5.
2. Radhakrishnan, Indian Philosophy, Vol.1, P. 516.

மனுதரும சாத்திரம்."[1] ஆனால் அது இன்று கிடைக்கவில்லை. அந்நூலின் பல பகுதிகள் பாரதத்திலும், கௌடல்யரின் அர்த்த சாத்திரத்திலும் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. ஆனால் அவை இன்று கிடைத்துள்ள மனுதரும சாத்திரத்தில் காணப்படவில்லை. அந்த நூலின் சுருக்கப்பதிப்பே இன்று வழங்கும் மனுதரும சாத்திரம் என்று கூறுவர்."[2]

## மனுதருமத்தின் அமைப்பு

"நால் வருணத்தாரும் மற்றோரும் கடைப்பிடிக்கத்தக்க அவரவர் செயல்களை, கடமைகளை எமக்கு உணர்த்துவீராக" (மனு.1:2) என்று தேவமுனிவர்கள் மனுவிடம் வேண்டினர். இப்பேரண்டத்தின் தோற்றத்தைப் பற்றிக் கூறத்தொடங்கிய மனு, "எனது குமாரரான பிருகு இந்தத் தருமசாத்திரத்ரைச் சற்றும் பிறழாமல் உங்களுக்குக் கூறுவார் (மனு.1:59) என்று கூறிச்செல்கின்றார். பிருகு முனிவரே விருப்பத்துடன் நூல் முழுவதையும் கூறி முடிக்கின்றார் இவ்வாறு மனுதருமம், மனுவினால் தொடங்கப்பட்டுப் பிருகு முனிவரால் நிறைவுசெய்யப்படுகின்றது. இந்நூலில் 2683 செய்யுட்கள், பன்னிரண்டு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

1. படைப்பும் அதன் பான்மையும்
2. கல்வியும் கடமைகளும்
3. இல்லறவியல்
4. பொருளியலும் தனிமனித ஒழுகும்
5. உணவு, சுத்தி, மாதர்
6. வானப்பிரஸ்த தர்மம்
7. அரசநீதி
8. நீதிநெறிச்சட்டம்
9. ஆண் பெண்களின் அறம்
10. கலப்பு சாதிகள் – ஆபத்து தருமம்

1. திருலோக சீதாராம் (மொ.ஆ.), மநுதர்ம சாஸ்திரம், அறிமுகம், ப. 6.
2. க.த. திருநாவுக்கரசு, திருக்குறளும் இந்திய அறநூல்களும், ப. 35.

11. குற்றங்களின் கழுவாய்

12. வினைப்பயன்.

## புகழ்மாலை

"மனுதரும சாத்திரத்தின் கொள்கைகளும் தத்துவங்களும் ஈரான், எகிப்து, பாலஸ்தீனம், கிரேக்கம் ஆகிய நாடுகளில் பரவியிருந்தன. கிரேக்க சரித்திராசிரியரான ஹிரோடோட்டஸ் நான்கு வகுப்பார்கள் என்று குறிப்பிடுவது மனுவின் நான்கு வருணத்தாராகவே இருத்தல் வேண்டும். மனு, பிராம்மண, சத்திரிய, வைசியரென்று மக்களைப் பகுத்திருப்பது போலவே கிரேக்க அறிஞர் பிளேட்டோவும் வகுத்துக்கூறியுள்ளார். உரோமாபுரிச் சட்டங்களில் மனுவின் விதிகளாகிய அடைக்கலப்பொருள், கடன்கள், விற்பனை, திருமணம், தந்தையின் அதிகாரம் ஆகியன இடம் பெற்றுள்ளன. இதை அடிப்படையாகக்கொண்டு தற்காலத்தில் மேல்நாடு களில் சட்டங்கள் இயற்றப்பெறுகின்றன. பர்மா, மலாய், இந்தோனிசியா முதலிய நாடுகளின் சட்டங்களிலும் மனுவின் சட்டங்கள் இடம் பெற்றுள்ளன."[1]

"சர் வில்லியம்ஸ் என்பவர் மனு தருமத்தை இந்துச்சட்டத்தைப் பற்றிய மிகப்பழமையான நூல் என்று பாராட்டியுள்ளார்."[2] நீட்சேசு என்பவர் "விவிலியத்தை மூடுங்கள்! மனுவின் நூலைத் திறந்து படியுங்கள்!" என்று அறிவுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் உலகில் தன்னம்பிக்கை ஊட்டும் தனிப்பெருநூல் மனுதருமம் என்றும் கூறியுள்ளார்"[3]

## மனுதருமத்தின் காலம்

மனுதருமம் தோன்றிய காலம் பற்றி ஆராய்ந்துள்ள மேலைநாட்டு அறிஞர் பலரும் தத்தமக்குக் கிடைத்த ஒருசில ஆதாரங்களைக்கொண்டு பலவிதமாகக் குறித்துள்ளனர். "மனுதருமம் வேதங்களோடு ஒப்பத் தொன்மை வாய்ந்தது. கிறித்து பிறப்பதற்கு ஆயிரம், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் அவை தோன்றியிருக்கலாம் என்பர். வேதங்களும் மனுதருமமும் நூல்களாக எழுதப்படுவதற்கு முன்பு ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக மக்களால் வாய்மொழியாகப் பயிலப்பெற்று வந்தவை. அவை ஆரிய இனத்தவரின் அழியாப் பெருங்கருவூலங்கள். சிந்து வெளிப்புதை

1 திருலோக சீதாராம் (மொ.ஆ), மநுதர்ம சாஸ்திரம், அறிமுகம், ப. 13.

2 க.த. திருநாவுக்கரசு, திருக்குறளும் இந்திய அறநூல்களும், ப. 46.

3. Nietzsche, The Will to Power, Vol 1, P 126.

பொருள் ஆராய்ச்சி யால் பண்டை ஆரிய நாகரிகம் கி.மு. 500 ஆண்டுகட்கு முன்னரே சிறப்புற்று விளங்கிய பெருமை புலனாகின்றது. ஆனால் சாத்திரங்களைக் கற்ற பிளாவட்ஸ்கி அம்மையார் போன்றவர்கள் அது தவறென்பர்.வேதங்கள், தரும சாத்திரங்கள் சுமார் 30,000 ஆண்டுகட்கு முற்பட்டவை என்பது அவர்கள் துணிபு."[1]

"இன்றைக்கு வழக்கில் உள்ள மனுதருமம் மூலநூலான மானவ தரும சாத்திரத்தின் திருந்தப்பெற்ற புதுவடிவம் என்பர். இவ்வாறு திருந்தப்பெற்ற காலம். கி.மு. 200க்கும் கி.பி. 200க்கும் இடைப்பட்டதாகத் தெரிகிறது."[2] ஆனால்"மோனியர் வில்லியம்ஸ் மனுவின் காலத்தை கி.மு. 6ஆம் நூற்றாண்டு என்றும், மாக்ஸ் முல்லர் கி.மு. 200 என்றும் குறிப்பிட்டுள்ளனர்."[3] இவ்வாறு அறிஞர் பலரும் பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளனர்

## மொழிபெயர்ப்பு

மனுதருமம் வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல். கி.பி.1929இல் இராமாநுஜாசாரியார் என்பவர் 'மநுதர்மசாஸ்திரம்' என்ற நூலைத் தமிழில் வெளியிட்டார். மநுதர்மசாஸ்திரம் என்ற மற்றொரு மொழிபெயர்ப்பு கி.பி. 1961ஆம் ஆண்டு திரிலோக சீதாராம் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து தமிழ்நாடன், சுப்பிரமணி ஐயர் ஆகியோரும் மனுதருமத்தைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். "ஆங்கில மொழியிலும் மனுதருமம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது."[4]

## இடைச்செருகல்

மனுதருமத்தின் முதல் இயலான "படைப்பும் அதன் பான்மையும் " இறுதி இயலான "வினைப்பயனும்" பிற்காலச் சேர்க்கைகளென ஆய்வாளர் கருதுகின்றனர். நூலினுள் முரண்பட்ட கருத்துக்கள் பல காணப்படுகின்றன. ஒரு பிராமணன் சூத்திரப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று கூறும் மனுநூலார், சூத்திரப்பெண் பிராமணனுடைய மனைவியாக முடியாது என்றும் அறமுரைத்துள்ளார். இந்த முரண்பாடுகளின் காரணமாக அந்தணர் இல்லற ஒழுகு (மனு. 4: 1–24; 5:1–4) கலவைச் சாதியினரின்

---

1. திருலோக சீதாராம் (மொ.ஆ.), மநுதர்ம சாஸ்திரம், அறிமுகம், ப. 3–4.
2. PV Kane, History of Dharma Sastra, Vol 1,P. 242.
3. K R R Sastry, Manu and Thiruvalluvar, P 8.
4. Vibhuti Bhushan Mishra, From the Vedas to the ManuSamhita P. 172

தோற்றம் (மனு .10:1–25) நால்வகை வருணத்தாரின் கடமை களாக மீண்டும் கூறப்படுவன (மனு.10:101–131) ஆகியன இடைச்செருகலாக இருக்கலாம் எனக்கருத இடமுள்ளது. மேலும் விதவை மறுமணம், மகப்பேற்றுக்காகக் கணவரல்லாதவரோடு கூடல் போன்றவைகளை விரும்பாத பிற்கால அறிஞர்கள் புதிய விதிகளையும் சேர்த்திருக்கலாம். ஆயினும் இப்புதிய சேர்க்கைகள்,"கி.பி.மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரே செய்யப் பட்டவையாக இருத்தல் வேண்டும் என்று அமைதியும் கூறப்படுகிறது."[1]

## மூன்று நூல்களின் ஒப்பீடு

திருவள்ளுவர், புத்தர், மனு இம்மூவருடைய வாழ்க்கை வரலாறு களையும் நூல்மைப்புகளையும் ஒப்பிட்டு நோக்கும் பொழுது ஒற்றுமைகளை விட வேற்றுமைகளே அதிகமாகத் தெரிகின்றன.

மூன்று அறநூலார்களும் சமுதாய நலத்தைப் பெரிதாக எண்ணிய வர்கள், சமுதாயம் வாழ வழிவகுத்தவர்கள். திருவள்ளுவரும் புத்தரும் தாங்கள் கூறிய அறங்களுக்கேற்ப இம்மண்ணுகில் வாழ்ந்து காட்டியவர்கள். வள்ளுவர், புத்தர், மனு மூவருமே புகழ்கருதிப் பாடவில்லை. பிறரை மகிழ்வித்துப் பொருள்பெற விரும்பவில்லை. மூவரும் உலகிற்கு அறிவுறுத்த வேண்டிய அறநெறிகளை அஞ்சாது கூறினர்.

திருவள்ளுவர் பற்றி முரண்பட்ட கருத்துக்களை உடைய கதைகள் பல வழங்குவதால், அவருடைய வாழ்க்கை வரலாறு பற்றிய செய்திகள் மேலும் சிந்தனைக்குரியதாகவே உள்ளன. புத்தரின் பெற்றோர், பிறந்த இடம், வாழ்வு ஆகியன பற்றி அறிஞர்களிடையே ஒருமித்த உறுதியான கருத்துக்கள் நிலவுவதால் புத்தரின் வாழ்க்கை வரலாறு பற்றிய செய்திகள் தெளிவாக அறியப்படுகின்றன. மனுவின் வாழ்க்கை வரலாறு சுட்டப்படவில்லை. திருவள்ளுவர் ஒருவரே. புத்தர்கள் பலர் வாழ்ந்தனர். மனுக்கள் பலர் வாழ்ந்தனர். திருவள்ளுவர் என்பது குலப்பெயராக இருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது. புத்தர், மனு என்னும் பெயர்கள் பதவி அல்லது பட்டத்தைக் குறிக்கும் பெயர்களாகச் சுட்டப்படுகின்றன. திருவள்ளுவமாலை வள்ளுவரை நான்முகனின் அவதாரமாகக் குறிப்பிட்டாலும் இன்று வரையிலும் வள்ளுவர் மக்களிடையே மனிதராகவே மதிக்கப்படுகின்றார். இறை நம்பிக்கையற்ற புத்தர் மக்களால் இறையென வணங்கப்படுகின்றார். தெய்வத்தன்மை வாய்ந்த ஆதிபிதாவாக மனுதருமம் குறிப்பிடும் மனுவை

---

1. திருலோக சீதாராம் (மொ.ஆ.), மநுதர்ம சாஸ்திரம், அறிமுகம், ப. 45.

மக்கள் மாமுனிவராகக் கருதுகின்றனர். வள்ளுவருக்குச் சீடர்கள் இல்லை. புத்தருக்கும் மனுவிற்கும் சீடர்கள் இருந்தார்கள். திருவள்ளுவருக்கும் புத்தருக்கும் உலகில் சிறப்புப்பெயர்கள் காணப்படுகின்றன. மனுவிற்குச் சிறப்புப்பெயர்கள் இல்லை. திருவள்ளுவரும் புத்தரும் மணந்த துறவிய ராயினும் வள்ளுவர் புத்தரைப் போல் இல்லறத்தைத் துறந்து செல்லவில்லை.

திருக்குறள் தனிநூல். திரிபிடகங்களுள் ஒரு சிறு பகுதியே தம்மபதம். தரும சாத்திரங்களுள் ஒன்று மனுதருமம். திருக்குறள் குறட்பாக்களால் அமைந்தது. தம்மபதம் பதங்களால் ஆகியது. மனுதருமம் சுலோகங்களின் தொகுப்பாகும். திருக்குறள் என்பது யாப்பு காரணமாகப் பெற்றப்பெயர். தம்மபதமும் மனுதருமமும் பாடுபொருளால் பெயர்பெற்ற நூல்கள். திருக் குறளுக்கு இலக்கிய உலகில் வேறுபெயர்கள் வழங்குகின்றன. தம்மபதத் திற்கும் மனுதருமத்திற்கும் வேறுபெயர்கள் எதுவும் சுட்டப் படவில்லை. திருக்குறள் மட்டுமே திட்டமிட்டு எழுதப்பட்ட நூல். தம்மபதத்திலும் மனுதருமத்திலும் இதுபோன்ற வரையறைகள் எதுவும் காணப் படவில்லை. திருக்குறள் திருவள்ளுவரால் மட்டுமே எழுதப்பட்ட நூல். தம்மபதமும் மனுதருமமும் வாய்மொழியில் ஓதப்பட்டுப் பின் சீடர்களால் தொகுக்கப்பட்ட நூல். திருக்குறளில் இடைச்செருகல் இல்லை. தம்மபத்திலும் மனுதருமத் திலும் இடைச்செருகல்கள் இருக்க வாய்ப்புள்ளன. 423 பதங்களை உடைய தம்மபதமே அளவில் மிகச் சிறிய நூல். வள்ளுவத்திற்கும் தம்மபதத்திற்கும் முதல்நூல் இல்லை. மனு தருமத்திற்கும் மானவதரும சாத்திரத்தை முதல்நூலாகக் கூறுகின்றனர். மூன்று நூல்களும் பிறமொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. எனினும் எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறளே ஆகும். மூன்று நூல்களும் புகழ்பெற்ற நூல்களேயாயினும் திருக்குறளின் பெருமைகள் அளப்பரியன. திருக்குறள் தமிழ் மறையாகக் கருதப்படுகிறது. தம்மபதமும் மனுதருமமும் சமயஞ்சார்ந்த நூல்கள். திருவள்ளுவரின் காலமே திருக்குறளின் காலமாகும். புத்தரின் காலம் வேறு; தம்மபதம் வெளிவந்த காலம் வேறு. மனுவின் காலமும் மனுதருமத்தின் காலமும் வேறு. திருக்குறளின் நூலமைப்பிலும் கருத்துப்போக்கிலும் ஓர் ஒழுங்கான ஒன்றிற்கொன்று தொடர்பான அமைப்பைக் காணலாம். தம்மபதத்திலும் மனுதருமத்திலும் இத்தகு ஒழுங்குமுறைகளைக் காண இயலாது. திருக்குறளில் காணப்படுகின்ற பால்பிரிவோ, அதிகாரப்பிரிவோ, அதிகாரத்திற்குப் பத்துப்பாடல்கள் என்ற வரையறையோ, புத்தர், மனு ஆகியோர் நூல்களில் இல்லை. பாயிரம் என்ற அமைப்பு திருக்குறளில் மட்டுமே காணப்படுகிறது. தமிழ் நூலாதலால் கடவுள் வாழ்த்துப் பாடும் மரபு வள்ளுவத்தில் மட்டும் இடம்பெற்றுள்ளது.

# 2. குடும்ப அறம்

## முன்னுரை

சமுதாயத்தில் மிக முக்கியமான கூறாகத் திகழ்வது குடும்பம். "குடும்பம் தாய், தந்தை, குழந்தைகள் ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவாகும். குழந்தைகளைப் பெற்று அவர்களை வளர்பபதற்காக ஏற்பட்ட திட்டவட்டமான தொடர்புகளின் பால் உறவமைந்த குழுவே குடும்பம். இக்குடும்பத்தை இரத்த உறவின் அடிப்படையில் அமைந்த சமுதாய நிறுவன மாகக் குறிப்பிடலாம்."[1] மனிதன் தான், தனக்கு எனத் தன்னலவாழ்வு வாழாமல் மனைவி, மக்களுக்காக, பெற்றோர், உற்றார், மாற்றார், உறவினர் களுக்காக மேற்கொள்ளும் அறவாழ்வே குடும்ப வாழ்க்கை எனலாம். இக்குடும்ப வாழ்விற்கு வேண்டிய நெறிமுறைகளை வகுத்துக் காட்டும் வழிகாட்டிகளாக அறநூல்கள் திகழ்கின்றன.

## சமூகத்தில் குடும்பம்

சமூக அமைப்பில் தொன்மையான வடிவம் குடும்பம். பல குடும்பங்கள் இணைந்ததே சமூகம். குடும்பத்தின் உறவுநிலை தொடர்ந்து நிலைபெறு வதற்குப் பரந்த மனப்பான்மை, விட்டுக்கொடுக்கும் தன்மை, அன்பு, இரத்தஉறவுத் தொடர்பு ஆகியவை காரணமாகலாம். குடும்பப்பண்பு, சமுதாயப் பண்பாகப் பரவவில்லையென்றால் அது இன்பமாக வளர முடியாது. சமூக உறுப்பினராகக் குடும்ப உறுப்பினர்கள் அமைவதால் அவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்கள் இன்றியமையாதன. ஒரு நாட்டின் சமூகத்தைக்கொண்டே அந்நாட்டுக் குடும்பத்தை நிர்ணயிக்க முடியும். குடும்பத்தினால் உறவின்முறை, வம்சவழி, சொத்துரிமை முதலிய தொடர்புகள் உண்டாகின்றன. ஒரு சமுதாயத்தின் குடும்ப அமைப்பினை அறிவதன் மூலம் அச்சமுதாயத்தின் பண்பாட்டினை அறிந்து கொள்ள முடிகிறது என்பதால் குடும்பம் பற்றிய சிந்தனையும் இன்றியமையாதது. இல்வாழ்வைத் துறந்து சென்ற புத்தர் குடும்பவாழ்வு பற்றிய செய்திகளைக் குறிப்பிடவில்லை. மனுவும் வள்ளுவரும் இல்வாழ்வாரை நெறிப்படுத்தும் நோக்கில் அறம்பல கூறியுள்ளனர்.

---

1 கே. [illegible] கோமதி சங்கர், சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம், ப. 5.

## குடும்ப அமைப்பு

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் குடும்பம் குடும்பமாக வாழ்கின்றனர். சமுதாய அமைப்பிற்குக் குடும்ப அமைப்பே அடிப்படையாகத் திகழ்கிறது. குடும்ப அமைப்பு,

1. கூட்டுக்குடும்பம்

2. தனிக்குடும்பம்

என இரண்டுவகைப்படும்.

## கூட்டுக்குடும்பம்

"ஒரே குல மரபிற்குட்பட்ட இரத்த உறவுடையவர்கள் ஒருவரோ அதற்கு மேற்பட்டவர்களோ ஒரே வீட்டில் மூத்தவர் ஒருவரின் தலைமையின் கீழ் மனைவி, குழந்தைகளுடன் இணைந்து வாழ்கின்ற முறையைக் கூட்டுக் குடும்பம் என வரையறுப்பர்[1] "ஆரம்பகாலச் சமுதாயம் கூட்டுக்குடும்ப முறையிலேயே இயங்கி வந்திருக்கிறது. இந்திய நாட்டின் வரலாற்றை ஆய்ந்த அறிஞர் பலர், பண்டைக்காலத்தில் இந்நாட்டில் கூட்டுக்குடும்ப வாழ்க்கையே நிலவியதாகக் கூறுகின்றனர்.[2] இக்கூட்டுக் குடும்பங்கள் இருவகையாக ஏற்படுதல் கூடும். ஒரு தாய், தந்தை, ஆண்மக்கள், அவர்களின் மனைவியர், குழந்தைகள் ஆகியோர் ஒரு குடும்பமாகின்றனர். ஓர் ஆடவன், பல மனைவியரை மணந்து, பற்பல குழந்தைகளைப்பெற்று வாழும் பொழுது ஒரு குடும்பமாகின்றனர். இதற்கேற்ப மனுகாலச் சமுதாயத்தில் ஒருவனுக்கு இரண்டு, மூன்று மனைவியர் இருந்ததாகத் தெரிகிறது (மனு. 9: 122). அதோடு தந்தை, கணவன், உடன்பிறந்தோர், மைத்துனன் (மனு. 3: 55), அண்ணன், தம்பி, மருகி (மனு. 9: 58) தன்பிள்ளை வயிற்றில் பிறக்கும் பிள்ளை, பங்காளி போன்ற உறவுமுறைச் சொற்களும் காணப்படுகின்றன. பாகப்பிரிவினை (மனு. 9 :109-125) சீதனம் (மனு. 9: 131) ஆகிய குடும்பப்பழக்கங்களும் இடம்பெற்றிருப்பதால் கூட்டுக்குடும்ப முறையே தரும சாத்திரக்காலத்தில் நிலவியது எனலாம்.

## தனிக்குடும்பம்

கூட்டுக்குடும்பத்தின் சிதைவிலிருந்து தோன்றியது தனிக்குடும்பம்.

1. கே எம். கே. கோமதி சங்கர், சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம், ப. 6.
2. காமாட்சி ஸ்ரீனிவாசன், குறள் கூறும் சமுதாயம், ப. 44

"குடும்பத்தின் மூலக்கூறுகளான கணவன், மனைவி ஆகிய இருவரோடு அவர்தம் பிள்ளைகளைக்கொண்ட குடும்பத்தைத் தனிக்குடும்பம்"[1] என்பர். வள்ளுவர் கூறும் சமுதாயத்தில் தாத்தா, பாட்டி, பேரன், பேத்தி போன்றோர் சேர்ந்து வாழும் கூட்டுக்குடும்பக் காட்சிகள் இல்லை. மனைவியை வாழ்க்கைத்துணை எனக் கூறிய வள்ளுவர் ஒருதார முறையையே வலியுறுத்துகின்றார். ஆனால் அவர் காலத்தில் குடும்பத் தலைவன் வரைவின் மகளிரை நாடிச்சென்ற வழக்கம் இருந்திருக்கலாம். அதையே அவர், வரைவின் மகளிர் என்ற அதிகாரத்தில் கண்டித்துக் கூறியுள்ளார். இல்லத் தலைவனுக்குத் துணையாக இருந்து இல்லறக் கடமைகளைச் செய்பவள் மனைவி. காமத்துப்பாலில் களவு வாழ்வின் வளர்ச்சி நிலை களையே வள்ளுவர் குறிப்பிடுகின்றார். தலைவன், தலைவி, தோழி, செவிலி போன்றோரைத் தவிர வேறு குடும்ப உறவுகள் காணப்படவில்லை. அதனால் ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழ்ந்து, நன்மக்களைப்பெற்று, நல்லறங்களைச் செய்து வாழும் தனிக்குடும்ப வாழ்வையே வள்ளுவர் நல்வாழ்வாகக் கருதுகின்றார். அதனால், இக்குடும்பத்தை இன்பத்தின் கொள்கலமாகவும் குறிப்பிடுகின்றார் வள்ளுவர் (குறள். 1029).

## இல்லறம்

அறம் என்பது யாண்டும் நிகழக்கூடிய ஒன்றாகும். எனினும் அதனைச் சான்றோர்கள் இல்லறம், துறவறம் என இருவகையாக வகுத்துச்சென்றனர். இல்லறம் என்பது ஒருவன், மனைத்தக்க மாண்புடையாளை மணந்து, நல்லொழுக்க நெறி நின்று, துறவோர் முதல் எல்லா உயிர்கட்கும் வேண்டியன நல்கி, இனிது வாழ்தலாகும். "இல்லறமே அருள்நெறியின் அறப் பணியின் தொடக்கமாகும். இல்லம் மக்களின் அருள்நெறிப் பயிற்சி சாலை. அறப்பணிப் பயிற்சிக்கூடம் எனல் சாலவும் பொருந்தும்"[2] என்ற கருத்து குறிப்பிடத்தக்கது. இல்லறம் பேணாதவர் உலகில் அறம் போற்றல் இயலாது. இல்லத்தில் அருள்நெறியையும், அதன் பயனாகிய அறப்பணியையும் பயின்று தேர்ந்த பின்னரே பற்றற்ற துறவை மேற்கொள்ள வேண்டும் என்று அறநூலார் குறிப்பிடுகின்றனர்.

அனைத்துயிர்களும் பிராணவாயுவினால் வாழ்ந்திருப்பது போன்று பிரம்மசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி மூவரும் இல்வாழ்வானைச் சார்ந்து வாழ்கின்றனர். இம்மூவரும் வேதம் ஓதவும், பிச்சை ஏற்கவும் ஆதாரமாக

1. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப. 61.
2. புலவர் செந்துறை முத்து, வள்ளுவர் வகுத்த அறம், ப. 12.

விளங்குவதால் இல்வாழ் வின் ஏற்றமிகு பண்புகளை, ஒழுக்கங்களை மனுவும் வள்ளுவரும் விதந்து கூறியுள்ளனர்.

## திருமணம்

இல்லறத்தின் நுழைவாயிலாகத் திகழ்வது திருமணம். தருமசாத்திரக் காலத்தில் மக்களின் விருப்பங்களுக்கேற்ப பல்வேறு வகைத் திருமணங்கள் வழக்கில் இருந்தன. அவை, குழந்தைமணம், எண்வகைமணம், பொருந் தாமணம், காதல் மணம், பலதாரமணம், கலப்புமணம், மறுமணம் ஆகியன.

''திருமணம் புரிந்து இல்வாழ்க்கை நடத்துவது இன்பத்திற்காக மட்டுமன்று, அறத்திற்காகவுமே. அதனால் இன்பம் விலக்கப்படுவதன்று. அறம் மறக்கத்தக்கதும் அன்று. இரண்டும் இணைந்ததே இல்வாழ்க்கை.''[1]

மனிதர்கள் தெய்வத்தால் தமக்கு வாய்க்கின்ற மனைவியரை அடைகின்றனரேயன்றித் தமது விருப்பப்படியே பெறுவதில்லை. மனுவின் காலத்தில் அகநூல்கள் குறிப்பிடுகின்ற களவுவழித் திருமணங்கள் நிகழவில்லை; பெற்றோரால் மணம்பேசி, ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்கள் நிகழ்ந்தன. பெண்ணின் பெற்றோர் மணமகனிடம் பரியமாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டு பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தனர். ஆகையால் கற்புடைய தம் மனைவியைக் காத்து வேள்வி முதலியன இயற்றினர் (மனு. 9: 95). திருமணமான நாள்முதல் இல்லறத்தாரின் நல்லறக்கடமைகள் இருவருக்கும் பொது வானவை (மனு. 9: 96). கணவன், மனைவியர் இறக்கும்வரை கற்புநிலை பிறழாது இருக்கவேண்டும் (மனு. 9: 101). அதோடு இருவரும் இணைபிரியாமல் அறம், பொருள், இன்பம் ஆகிய பேறுகளைப் பெற்றும் செய்தும் வரவேண்டும் (மனு. 9: 102).

மேற்குறித்தவற்றால் இல்லறத்தார் இருவரும் கற்புநிலை பிறழாமலும், இணைபிரியாமலும் இல்லறக்கடமைகளைச் செய்து இன்பம் பெறுதலையே மனு விரும்பினார் எனக்கொள்ளலாம்.

## எண்வகைமணம்

தரும சூத்திரங்களும், மனுவும் எட்டுவகையான திருமண முறைகளைக் கூறுகின்றன. அவை, பிராமம், பிராசாபத்தியம், ஆருடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்பன (மனு. 3: 21).

1. காமாட்சி ஸ்ரீனிவாசன், குறள் கூறும் சமுதாயம், ப. 56.

அவற்றுள், பிராமம், பிராசாபத்தியம், தெய்வம், காந்தருவம் என்ற நான்கும் பெண்ணுக்கு ஈடாகப் பணம் வாங்காமல் கொடுப்பதால் அறத்தின்பாற்பட்டன.

ஆசுரம், ஆருடம் என்ற இரண்டும் தாய், தந்தையர் இருவரும் பரியப்பொருள் பெற்றுக்கொள்வதால் அவை அறத் தின் பாற்பட்டவை அல்ல என்றும் கூறுவர் (மனு. 3: 54). அவ்வாறு பணம் வாங்குவது பெண்ணை விற்றதற்கே சமம் என்கிறார் (மனு.3: 53). இராக்கதம், பைசாசம் இரண்டும் இழிந்தோர் மணங்களாகக் கருதப்படுகின்றன.

பிராமம், பிராசாபத்தியம், ஆருடம், தெய்வம் என்ற நான்கு வகைத் திருமணங்களினாலும் பிறக்கின்ற பிள்ளைகள் எழில், வலிமை, பண்பு, செல்வம், புகழ், நிறைந்த அனுபவம், அறம் இவை பொருந்தியவராய் நூறாண்டுகள் வாழ்வர் (மனு. 3:40). ஏனைய நான்குமுறை மணத்தாலும் பிறந்தோர் கொலை, பொய், வேத, யாக, தர்ம, நிந்தை இவற்றைப் புரிவோராய் இருப்பர் (மனு. 3: 41). உத்தம மணத்தாற் பெறும் பிள்ளைகள் சாதுக்களாயும், பழிக்குரிய மணத்தால் பிறக்கும் சந்ததிகள் கெட்ட நடத்தையினராயும் இருப்பதால் தாழ்ந்த மணத்தை (மனு. 3: 42) மனு விரும்பவில்லை என்பது தெளிவு.

தருமசாத்திரங்கள் கூறிய எட்டுவகை மணங்களைப்பற்றித் தொல் காப்பியரும் கூறியுள்ளார்.[1] ஆயினும் அவர், அவற்றை ஆரியர் நாட்டனவாகக்கருதி, மறையோர் தேயத்து மன்றல் எட்டு எனக் குறிப்பிட்டுள்ளார்.[2] வடநூலார் கூறும் எட்டு மணத்தையும், தமிழ்நூலார் முதல் நான்கைப் பெருந்திணையின்பாலும் கந்தர்வம் ஐந்திணைக்கும் பின்னுள்ள மூன்றையும் கைக்கிளையின்பாலும் அடக்குவர்.[3] ஆயினும் வடமொழி மணவகைகளைத் தமிழ்மண முறைகளுடன் பொருத்துவது சிறப்புடையதன்று. மனுகாலச் சமுதாயத்தில் சிலரே இம்முறையில் மணம் புரிந்திருத்தல் வேண்டும். ஏனெனில் பிறவகை மணங்களும் நிகழ்ந்தன.

## குழந்தைமணம்

தற்காத்துத் தற்கொண்டாரையும் குழந்தைகளையும் பேணிக் காப்பதில் சோர்விலாதவள் பெண். இப்பெண்ணின் இல்லறம், நல்லறமாகத் திகழவேண்டும். இன்னல்களும், இடையூறுகளும் எதிர்ப்படாது, இனிமை

---

1. K.A. Nilakanda Sastri, A History of South India, P 120.
2. தொல். பொருள். 92.
3. *தி.க. பாலசுந்தரம்பிள்ளை, தொல்.பொருள். 132.*

பயத்தலையே மனு நாடினார்.

"பெண் பருவமடைந்து விட்டாலும், இறக்கும் வரை தன் இல்லத்திலேயே கன்னியாக இருந்துவிட்டாலும் கூடக் குற்றமில்லை. குணமில்லாத ஆடவனுக்கு மட்டும் ஒரு பெண்ணைக் கொடுக்கக்கூடாது" (மனு. 9: 89) என்று மானிட சமுதாயத்தை மனு எச்சரிக்கின்றார். இக்கருத்து எக்காலத்திற்கும் பொருந்துவதாகும். அவ்வாறே சிறுவயதிலிருந்தே பெண்ணின் கற்பு பாதுகாக்கப்பட வேண்டும். அதற்குத் திருமணமே ஏற்ற நெறி என்பதை,

"குலத்தாலும் ஒழுக்கத்தாலும் மிக்கவனாயும் ஒத்த நலத்தினனாயும், ஒத்த இனத்தினனாயும் உள்ள ஒருவனுக்குத் தனது பெண் எட்டு வயதுக்குட்பட்டவளாயினும் விதிப்படி மணம் புரிவித்துவிடலாம்" (மனு. 9: 88) என்று எடுத்துரைத்துள்ளார். இந்தமணம் தடைப்பட்டுவிட்டால் அப்பெண்ணிற்கு வாழ்வு கொடுப்பதைக் கடமையாகக் கருத வேண்டும்.

"மணக்க விருந்தவன் இறந்துவிட்டால் அவனுடைய உடன்பிறந்தோர் அவளை மணம் செய்துகொள்ள வேண்டும்" (மனு. 9: 69) என்கிறது மனுநூல். அவ்வாறே திருமணம் செய்துகொடுப்பதாக வாக்களித்த பெண்ணின் தந்தை இறந்தாலும் அவ்வாக்கை மாற்றக்கூடாது. வேறொருவனுக்குக் கொடுத்தால் ஆயிரம் உறவினர்களைக் கொன்ற பாவம் வந்துசேரும் (மனு. 9: 71) என்பது மனுவின் கொள்கையாகும். எட்டுவயதில் பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பதை மனு ஆதரிக்கின்றார்.

## பொருந்தாமணம்

பொருந்தாக்காமம் என்பது பெருந்திணை என்பதாகத் தொல்காப்பியத்தில் கூறப்படும். இதற்கு,

> "ஏறியமடல் திறம் இளமைதீர்திறம்
> தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
> மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
> செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே"[1]

என்று விளக்கம் கூறுவர் .இப்பெருந்திணைத் திருமணத்தையும் மனு வரவேற்கின்றார்.

"முப்பது வயதுள்ள ஆணுக்குப்பன்னிரண்டு வயதுள்ள பெண்ணை

1. தொல். பொருள். 54.

யும், இருபத்து நான்கு வயதுள்ளவன் எட்டுவயதுப் பெண்ணையும் மணக்கலாம். இதற்குமுன்பே திருமணம் செய்ய அவசரப்பட்டால் வேதம் ஓதுதல் போன்ற அறச்செயல்கள் தடைபடுதலும், அதனால் பின்னர் துன்பமும் வந்தடையும்'' (மனு. 9: 94) எனக் கூறுகிறது மனுநூல்.

ஆடவர்களுக்குக், "குஞ்சியழகும், கொடுந்தானைக் கோட்டழகும் அழகல்ல; கல்வி அழகே அழகு''[1] என்பதால் இல்வாழ்வை நடத்துவதற்குரிய அறநெறிகளை அறிவிக்கும் வேதங்களையும் நல்லொழுக்கங்களையும் கற்றபின் திருமணம் செய்தல் நல்லது. ஆதலால் ஆடவர்களுக்குக் கல்வி தேவை என வலியுறுத்திய மனு, பெண்களுக்கும் கல்வி தேவை எனக்கூறுவில்லை. பெண்ணின் திருமண வயது எட்டு முதல் பன்னிரண்டு வரை; ஆணின் திருமண வயது இருபத்துநான்கு முதல் முப்பது வரை என்பதால் முப்பது வயதிற்குள் ஆடவர்கள் கற்க வேண்டியதைக் கற்றுத் தெளிதல் வேண்டும் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது.

### காதல்மணம்

உரு, திரு, உணர்வு முதலியவற்றால் ஒத்து விளங்கும் தலைவனும் தலைவியும் நல்லூழின் செயலால் தாமே எதிர்ப்பட்டு, அன்பினால் ஒருவரை யொருவர் இன்றியமையாதவராய், உலகத் தார் அறியாது மறைந்தொழுகுதல் களவாகும்; மறைவில் நிகழும் ஒழுகலாறு[2] என்னும் களவு மணத்தை மனு விரும்பவில்லை. ஆனால் பெண்ணின் திருமணம் ஏற்ற வயதில் நடை பெறவில்லை என்றால் காதல் மணம் புரியலாம் என்பதை, "பெண் பருவ மெய்தியது முதல் மூன்றாண்டுகள் வரை தந்தை தன்னைத் தக்க ஆடவனுக்கு மணம் செய்விக்கவில்லை எனில் தனக்கேற்ற வனைத் தானே தேடிக்கொள்ளலாம்'' (மனு. 9: 90). என்று பெண்ணுரிமை பேசுகிறது தருமசாத்திரம். இவ்வாறு திருமணம் செய்வதால் யாதொரு பாவமும் நேரிடாது (மனு. 9: 90).

தானே திருமணம் செய்துகொள்கிறவள், முன்பு தனக்கு வழங்கப்பட்ட அணிகலன்களை எடுத்துக்கொள்ள உரிமையில்லை; அவ்வாறு செய்வது திருட்டுக்குச் சமமாகும் (மனு. 9: 92) என்கிறது மனுநூல். பருவப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கத் தவறிய தந்தை, கடமை தவறியவனாதலால் பரியம் பெறும் உரிமையை இழக்கின்றான் (மனு. 9: 93) என்றும் கூறுகின்றது. இவ்வாறு காதல் மணத்தால் தந்தையும் மகளும்

1. நாலடி., 131 : 1–2.
2. க. வெள்ளைவாரணன், *சங்ககாலத் தமிழ் மக்கள்*, ப. 25.

தங்கள் உரிமைகளை இழக்கும் நிலை இன்றைய சமுதாயத்திலும் வேரூன்றிவிட்டது.

## பலதாரமணம்

"பண்டைக்காலத்தில் ஒருதாரம் கொள்ளும் வழக்கமும், பலதாரம் கொள்ளும் வழக்கமும் இருந்தன."[1] ஆடவர் சிலர் பல மனைவியரை மணக்கும் பழக்கம் தருமசாத்திரக் காலத்திலும் இருந்திருக்கிறது. எனினும் ஒருதாரமுறையையே மனு விரும்பினார் எனக் கொள்ளல் பொருந்தும். பலதார மணம் செய்தல் தவறு என்பதை மனு,

> " மணம் புரிந்து மக்களையும் பெற்றபின்னர் காமத்தால்
> மீண்டும் மற்றொரு மணம் செய்தவனுக்குக் கிடைக்கும்
> பயன் பெண்ணின்பம் துய்த்தல் மட்டுமே" (மனு. 9: 5)

என்று வெளிப்படையாகக் கூறியுள்ளார். மேலும் இத்திருமணத்திற்காகப் பிறரிடம் பொருள் உதவிபெறக்கூடாது. ஏனெனில் அத்திருமணத்தினால் பிறந்த பிள்ளைகள் இயற்றும் தருப்பணம் முதலிய கடமைகளின் பலன், பொருள் உதவி செய்தவனுக்கே போய்ச்சேரும். அதனால் தந்தைக்கு யாதும் பயனில்லை என்கிறார்.

## கலப்புமணம்

மனுகாலச் சமுதாயத்தில் வருணக்கலப்புத் திருமணங்கள் நடைபெற்றன. அதனால் அநுலோமர், பிரதிலோமர் பற்றி விளக்கங்களைக் கூறுகிறார். உயர்ந்த வருணத்தார், தாழ்ந்த வருணப்பெண்ணுடன் கூடிப் பிறப்பவர்கள் அநுலோமர் என்றும், தாழ்ந்த வருணத்தார் உயர்ந்த வருணப்பெண்ணுடன் கூடிப்பிறப்பவர்கள் பிரதிலோமர் என்றும் விளக்கியுள்ளார் (மனு. 10: 10,11,12).

உயர்ந்தவர் தாழ்ந்த வருணப்பெண்ணுடன் கூடுதலை அறமென்றும், தாழ்ந்தவன் உயர்ந்த வருணப்பெண்ணுடன் கூடுதலை அறமல்ல என்றும் மனு கூறுகின்றார். இதற்கு ஆடவரை வித்தாகவும், பெண்ணை விளை நிலமாகவும் கூறி இவர்களுக்குப் பிறக்கும் குழந்தை தந்தையின் அறிவை ஒத்திருக்கும் என்ற காரணத்தைக் கற்பிக்கின்றார். இவ்வாறு கூறுவது அந்தணர் பிற வருணப் பெண்களை மணக்கலாம். அந்தணர் குலப்

1. புறம்., 164: 61–62; 10: 9–10

பெண்களைப் பிற வருணத்தார் மணக்கக் கூடாது என்ற கொள்கையை வலியுறுத்தி அந்தணர்க்கு ஏற்றம் காட்டுவதைப் போலக் கண்டிக்கவும் செய்கிறார். தாழ்குலப் பெண்ணுடன் கூடும் அந்தணன் நரகம் அடைவதோடு, பிள்ளை உண்டாக்கினால் பிராம்மணத் தன்மையையும் இழப்பான் எனக்கூறித் திருத்த முயல்கிறார். மேலும் கலப்புமணம் புரியும் அந்தணனுக்குப் பிறக்கும் குழந்தைக்குக் கழுவாயே இல்லாத பாவம் வந்தடையும் என்பதால் அந்தணர் நீங்கிய ஏனைய மூவருணத்தாரும் கலப்புமணம் செய்வதில் தவறில்லை என்று மனு கூறுவதாகத் தெரியலாம்.

## மறுமணம்

அக்காலத்தில் மனைவி இருக்கக் கணவன் மறுமணம் செய்து கொண்டான். மனைவி பிள்ளைப்பேறு அற்றவளாக, தீயகுணங்களை உடையவளாக, நோயுற்றவளாக இருந்ததே அதற்குக் காரணங்களாகக் கூறப்பட்டுள்ளது. பிள்ளைப்பேறு, இல்லையென்றால் மறுமணம் செய்து கொள்ளும் உரிமையைக் கணவனுக்குக் கொடுக்கின்றார் மனு. அதனால் பலதார மணம் என்னும் நிலை சமுதாயத்தில் உருவாகிவிட்டது. பிள்ளைப் பேறற்ற மனைவியை உடைய கணவன் காலவரையறை கடந்த பின்னர் மறுமணம் செய்துகொள்ளலாம் என்பதற்கு,

> "மலடியான மனைவியை எட்டாண்டுகளுக்கு மேலும், அடிக்கடி பிள்ளை இறக்கும் வயிற்றினளைப் பத்தாண்டுகளுக்கு மேலும், பெண் குழந்தையையே பெறுபவளைப் பதினோராண்டுகளுக்கு மேலும், பொல்லாங்கு சொல்பவளை உடனேயும் நீக்கிவிட்டு வேறு மணம் செய்துகொள். இம்மனைவியர்க்கு மனமகிழ்ச்சிக்குப் பொருள் யாதும் கொடுக்க வேண்டியதில்லை" (மனு. 9: 81)

என்பார் மனு. இதனால், மக்கட்பேற்றின் நிமித்தமே மகளிர் என்னும் மனுவின் கொள்கையும் வெளிப்படுகிறது.

கற்பென்பது இருவருக்கும் பொது என வலியுறுத்திய மனு, பிள்ளைப்பேறு இன்மைக்கு மகளிர் மட்டுமே காரணம் எனக் கூறியிருப்பது ஏற்புடையதன்று. மேலும் கட்குடியள், தீநடையுடையவள், கொண்டவனுக்கு இரண்டகம் செய்பவள், தீராப்பிணியள், ஊதாரி என்றிவ்வாறான மனைவியர்க்கு ஜீவனாம்சம் கொடுத்து விலக்கிப் பின் மறுமணம் செய்துகொள்ளலாம் என்கிறது மனுநூல் (மனு. 9: 80). ஆனால் நல்லொழுக்கமுடைய மனைவி பிணியுற்றவளாயினும் வேறு மணம்

வேண்டுவோன் அவள் அனுமதி பெற்றே செய்தல் வேண்டும். அவளை ஒருபோதும் அவமதித்தல் கூடாது (மனு. 9: 82) என்றும் இந்நூல் கூறுகிறது.

தகுதி வாய்ந்த இல்லத்தலைவியை உடைய இல்லமே நல்லில்லமாகத் திகழும். ஒருவனின் மனையாளிடம் மனைக்கேற்ற மாட்சியும், இல்லறத்தை நடத்தும் இயல்பும் இல்லாவிடில் அவன் வாழ்க்கை செல்வம் முதலிய பல நலன்களைப் பெற்றிருந்தாலும் பயனற்றதாகும். அதனால் ஒரு குடும்பம் பல்கலைக்கழகமாகத் திகழ இல்லத்தலைவி நலமுடையவளாக, பண்புடைய வளாக இருத்தல் வேண்டும். நலமும் குணமும் அவளுக்குக் குடும்ப நலத்தைப் பேணுவதில் உறுதி நல்குகிறது என்பதை அறிந்தே மனு இவ்வாறு கூறியிருக்கலாம். ஆனால் மனு, ஆடவர் மறுமணம் செய்து கொள்வதைப் போல மகளிரும் மறுமணம் செய்துகொள்ளலாம் என்று சமஉரிமை கொடுக்கவில்லை. "கௌடலீயர், மகப்பேறுவை அடிப்படையாகக் கொண்டு மறுமண உரிமையை இருபாலர்க்கும் வழங்குகின்றார்"[1] என்ற கருத்து நோக்கற் குரியது. இதனால் மகப்பேறு உடையார்க்கு மணவிலக்கு அறவே இல்லை என்பது தெளிவு.

## வள்ளுவர் கூறும் திருமணம்

திருக்குறளை ஆராய்ந்தால் மனு கூறிய மணமுறைக்ள் வள்ளுவர் காலத்தில் இல்லை எனலாம். அறநூல்கள் கூறும், கற்பு என்ற வளர்ச்சி நிலையே வள்ளுவர் கூறும் குடும்ப வாழ்க்கையிலும் காணப்படுகிறது. களவு வழிப்பட்ட திருமணத்தையே வள்ளுவர் கூறுகின்றார்.

தலைவன், தலைவியர் தாமே எதிர்ப்பட்டு உள்ளத்தால் இணை கின்றனர். தலைவன் தான் கண்ட தலைவியை, அணங்கா! ஆய் மயிலா! பெண்மகளா! என்று அறிய இயலாது மயங்குகிறான். தலைவியின் காதல் உண்மையைத் தலைவன் அறியும் தன்மையைக் 'குறிப்பறிதல் ' என்னும் அதிகாரம் புலப்படுத்துகிறது. அவர்களின் காதல்,

> "உடம்பொ டுயிரிடை என்ன மற்றதன்
> மடந்தையொ டெம்மிடை நட்பு" (குறள். 1122)

என்று தலைவன் வியந்து கூறும் அளவிற்கு வளர்கிறது. இவர்களின் அன்பிற்குத் தடை ஏற்பட, தலைவன் மடலேறத் துணிவான். தலைவி இற்செறிக்கப்படுவாள். அவர்களின் உறவு குறித்து ஊரார், அலர்

1. இரா. வேலு, திருக்குறள் கௌடலியம் ஒப்பாய்வு, ப. 225.

தூற்றலுமுண்டு. 'அலர் அறிவுறுத்தல்' என்ற அதிகாரம் 'கௌவை எடுக்கும் இவ்வூர்' (குறள். 1150), 'அலர் எமக்கு ஈந்த திவ்வூர்' (குறள். 1142) என்று அலர் பற்றிய செய்திகளை அறிவிக்கிறது. இக்களவு, திருமணத்தில் முடியாத போது உடன்போக்கு நிகழும் என்பதை,

> " தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
> அஃதாண் டவள்செய் தது" (குறள். 1279)

என்ற குறள் புலப்படுத்துகிறது. அகத்தால் வேறுபாடின்றி இணைந்து இன்ப வாழ்க்கை வாழ்வோரால் புறவாழ்விலும் பெருமை சேர்க்க இயலும் என்பதால் களவில் தொடங்கிக் கற்பாக மாறும் மனமொத்த மணமுறையை வள்ளுவர் விரும்பினார் என்பதைக் காமத்துப்பால் அறிவிக்கின்றது.

## தந்தைவழிக் குடும்பம்

ஒரு குடும்பத்தின் தலைமைப்பொறுப்பு தாயிடம் இருந்தால் அதைத் தாய்த் தலைமைக்குடும்பம் எனலாம். தலைமை தந்தை அல்லது கணவனிடம் இருக்குமேயானால் அதைத் தந்தை வழிக்குடும்பம் எனலாம். மனுதரும சாத்திரத்தில் தாய்வழி முறை இருந்ததற்குச் சான்றுகள் இல்லை. மனைவி குடும்பத்தில் தலைமையிடம் பெறுவதையும் கணவன் மனைவியின் விருப்பப்படி நடப்பதையும் மனு ஏற்கவில்லை.

"தேடிப்பெற்ற பொருளை மனைவியிடம் கொடுத்து வேண்டியபோது செலவிடும்படி கூறல் வேண்டும். அதோடு வீட்டையும் வீட்டுப் பொருட்களையும் தூய்மை செய்தல், அடுக்களைப் பொறுப்பு போன்ற இல்லக்கடமைகளை மனைவியைக் கொண்டு செய்வித்தல் வேண்டும்" (மனு. 9:11) என்று மனு குறிப்பிடுகின்றார். இதனால் குடும்பத்தில் கணவனே தலைமைப்பொறுப்பேற்றிருந்தான். இல்லறக் கடமைகளைச் செய்வதற்கு மனைவி துணையாக இருந்தாள். இல்லப் பணிக்குப் பெண்களும், நாட்டுப்பணிக்கு ஆடவரும் என்ற நிலை தருமசாத்திரக்காலச் சமுதாயத்தில் வளர்ந்திருந்தது.

வினையே உயிரெனக் கருதிய த்லைவன் பொருளீட்டி வருவதால் இல்வாழ்வு இல்லற வாழ்வாக மலர்ந்தது. அதனால் குடும்பத்தலைவன், 'இல்வாழ்வான்' (மனு. 3 :77) என்று சிறப்பிக்கப்படுகிறான். மனைவி மக்களையும், பெற்றோர், உற்றார், உறவினர்களையும் காக்கின்ற தலைவன் சமுதாயத்தில் வாழ்கின்ற எல்லோரையும் பேணிப் பாதுகாத்தான். அனைத்து

உயிர்களும் உயிர்க்காற்றால் வாழ்ந்து வருவதைப் போன்று பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி எனும் மூவரும் இல்வாழ்வானைச் சார்ந்து வாழ்கின்றனர் (மனு. 3: 77) என்று மனு குறிப்பிடுகின்றார். இதனால் இல்லத்திலும் சமுதாயத்திலும் இல்வாழ்வான் உயர்ந்தவனாகச் சிறப்பிக்கப் படுகின்றான்.

மகளிர் பிறரால் அடக்கப்படாமல் உரிமையுடன் வாழ வேண்டும் என்பதே வள்ளுவரின் நோக்கம். ஆயினும் இல்லத்தில் தலைமை ஆடவனுக்கே உரியது என விரும்பினார். மனைவி குடும்பத்தில் தலைமையிடம் பெறுவதையும், கணவன் மனைவியின் விருப்பப்படி நடப்பதையும் அவர் ஏற்கவில்லை. மனைவியை 'வாழ்க்கைத்துணை' என்று குறிப்பிடுவதன் வாயிலாகத் தந்தைவழித் தாய் உரிமையை நிலை நாட்டுகிறார். பெண் ஏவல் செய்தொழுகும் ஆண்மையைக் (குறள். 907) கண்டிக்கும் நோக்கில் 'பெண்வழிச்சேறல்' என்னும் அதிகாரத்தையும் அமைத்துள்ளார்.

குடும்பத்தலைவனை 'இல்வாழ்வான்' என்று சிறப்பிக்கின்றார். பொருளீட்டல் ஆடவர் கடமையாகக் கருதப்பட்டது. அதனால் 'தற்கொண்டான் வளத்தக்காண் வாழ்க்கைத்துணை' (குறள். 51) என்று கூறினார். மனைவி, மக்களுக்குத் துணையாக அமைந்த தலைவன் மற்றையோருக்கும் உதவினான். மாணவன், மனையாளுடன் தவஞ்செய்யக் கானகம் சென்றவன், முற்றும் துறந்தவன் ஆகியோருக்கும் துணையானான். இதனை,

> "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றின் நின்ற துணை" (குறள். 41)

என்ற குறளாக வடித்துள்ளார். இயல்புடைய மூவர் என்பதற்குப் பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி என மணக்குடவர், பரிதியார், காளிங்கர் உரைகளால் அறியலாம். இம்மூவருக்கும் இல்வாழ்வான் துணையாம் என்று மனுவும் வள்ளுவரும் கூறியுள்ளனர்.

## இல்லத்தலைவி

ஈன்று புரந்து, விருந்தோம்பி, இல்லறம் புரிவதற்கு மாதரே ஏற்றவர். அதனால் இல்லத்திற்கு எழில்தரும் பெண்டிரும் இலக்குமி தேவியும் ஒருவரே. செல்வமில்லாத வீட்டைப்போல மாதரில்லாத வீடும் விளக்கம் பெறுவதில்லை

எனக்கூறும் தரும சாத்திரம் மனைவியின் சிறப்பியல்புகளை,

> "நன்மக்கள் பெறுதல், தீ வளர்த்தல் ஆகிய நற்கருமம் செய்தல், பணிபுரிதல், கூடிச்சுகித்தல், தனக்கும் தென்புலத்தாருக்கும் சொர்க்கசுகம் தருதல் இவையாவும் மனைவியின் மாண்புகளே" (மனு. 9: 28)

என்று எடுத்துரைக்கிறது. இத்தகு இல்லத் தலைவியிடம் சிறப்பாக வேண்டப் படும் பண்புநலன் கற்பே. கற்பு அவளுக்குக் கணவன் நலத்தையும் குடும்ப நலத்தையும் பேணுவதில் உறுதி நல்குகிறது. கற்புடைய பெண்ணின் சிறப்பை,

> "மனமொழி மெய்களால் கணவனின் படிகடவாத பாவை இம்மையில் மேலோரால் கொண்டாடப் பெற்று மறுமையில் கணவனுடன் நல்லுலகம் சேர்கிறாள்" (மனு. 9: 29)

என்று பாராட்டிய மனு, படிகடக்கும் பாவி உலகநிந்தை பட்டுழன்று, பின்னர் நரியாய்ப் பிறந்து நலிவாள்" (மனு. 9: 30) என்றும் எச்சரித்துள்ளார். ஆனால் இல்லத்தில் கணவன், மனைவியையோ அல்லது தந்தை, மகளையோ இல்லத்தை விட்டு வெளியே செல்லக்கூடாது எனத் தடுத்து அவளுரிமையைத் தடைசெய்யும் முறையை மனு விரும்பவில்லை. கற்பைக் காத்தல் மாதர்தம் கடமையாகும் என்பதை,

> "தமது நிறை தாமே காத்தல் மாதர்தம் கடன். அதுவே அவர்களுக்கு நல்ல காப்பாகும். அஃதன்றி வலிய காவலரை வைத்து வீட்டுக்குள்ளேயே பூட்டி வைப்பதால் பயன் என்ன?" (மனு. 9: 12)

என்று மொழிந்துள்ளார். இதனால் பெண் பிறரால் காக்கப்பட வேண்டியவள் அல்லள்; தன்னைத்தானே காத்துக்கொள்ளும் கடப்பாடு உடையவள்; இத்தகு மாதர் தத்தம் இல்லங்களில் உரிமையுடன் வாழ்தல் வேண்டும் என்பதே மனுவின் கருத்தாகின்றது.

ஒருவனுக்கு மனைவி சிறந்தவளாக இருந்தால் இல்லத்தில் செல்வம் முதலியன இல்லாவிடினும் யாவும் உள்ளது போலாகும் என்று வள்ளுவர் கூறுகின்றார். நன்மக்களைப் பெறல், துறந்தாரைப் பேணல், விருந்தயர்தல், வறியார்மாட்டு அருளுடைமை ஆகியன இல்லாளின் கடமைகளாகக் கருதப்பட்டன. பெண்ணின் சிறப்பை,

" தற்காத்துத் தற்கொண்டார் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (குறள். 56)

என்று வள்ளுவர் போற்றுகின்றார். இதற்கு, "கணவன் அறவழி யிலிருந்து வழுவாமலும், பொருள்வழியில் சோர்வுறாமலும், இன்ப வழியில் நிரை தடுமாறாமலும் காப்பவள் பெண்"[1] என்று கூறும் கா.அப்பாத் துரையாரின் விளக்கம் கருதத்தக்கது.

மகளிர் கற்பும் ஒழுக்கமும் உடையவர்களாகத் திகழ வேண்டும் என்பதே வள்ளுவர் நெறி. இக்கற்பு மற்றவர்களால் பாதுகாக்கக்கூடிய நெறியன்று என்பதை,

" சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை" (குறள். 55)

என்ற குறளில் குறிப்பிடுகின்றார் வள்ளுவர்.

கற்புநெறியைச் சிறந்த அறமெனக் கருதும் இருநூலாரும் அதுபற்றிக் கூறும் முறையிலும் ஒன்றுபடுகின்றனர்.

இல்லறத்தின் பெருமையை எடுத்துரைக்கும் தரும சாத்திரம் மனையாளின் கடமைகளையும் வரையறுத்துக் கூறுகிறது. அக்கடமை களுள், "கற்பினளாய பெண் தன் கணவனைத் தெய்வமாகப் பேணுக" (மனு. 5: 154) என்ற பண்பும் இடம்பெற்றுள்ளது. இல்லறத்தில் கணவன் கடவுளை மறவாதும், மனைவி தன் கணவனே கடவுள் என்பதை மறவாதும் வாழ்க்கையை நடத்தி வரவேண்டும் என்கிறது பின்வரும் வள்ளுவம்.

" தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (குறள். 55)

இக்குறளுக்கு விளக்கவுரை தருவது போல் இளங்கோ வடிகளாரும்,

" தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுதகைமை – தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து"[2]

1. கா. அப்பாத்துரை (உ.ஆ.), திருக்குறள் மணி விளக்கவுரை, குறள் 56.
2. சிலம்பு., 23: 201–204.

என்று பாடினார். இதனால் வேறு தெய்வத்தை வணங்காளாய்த் தன் கணவனை, வணங்குவாளைத் தெய்வமும் வணங்கும் என்பது தெளிவு.

மனுவும் வள்ளுவரும் கற்புக்கடம் பூண்ட பொற்புடை மகளிரின் கடமையை ஒருசேரக் கூறியுள்ளனர். எனினும் கணவனைத் தெய்வமாகக் கருதி வழிபடும் நெறியில் நிற்கும் மகளிர் நினைத்தது நினைத்தபடி நிகழச்செய்வர் எனக்கூறிக் கற்புடைய மகளிரின் பெருமையையும் வள்ளுவர் சிறப்பித்துள்ள நுணுக்கம் நோக்கற்குரியது.

## இல்லத்தலைவனும் தலைவியும்

இல்லாளுக்கு இருக்கவேண்டிய கற்பையும், பிற குணநலங் களையும் கூறிய மனு, கணவனும் மனைவியும் ஒருவரால் ஒருவர் அடையத் தக்க சிறப்பையும் கூறியுள்ளார். அவை பின்வருமாறு:

> "ஓடிச்சென்றடையும் கடலின் இயல்பை எய்தும் ஆற்றைப்
> போல் தனது கணவனின் இயல்பையே அவன்பால்
> இணையும் மாதும் அடைகிறாள்" (மனு .9: 22)

சான்றாக,

> "வசிஷ்டரை மணந்த அட்சமாலையும், மந்தபாலமுனியின்
> *மனைவியான சாரங்கியும் தாழ்குலப் பெண்களாக*
> இருந்தபோதிலும் முனிவர்களின் மேன்மையான
> தன்மையை அவர்களும் பெற்றுப் போற்றத்தக்க வராயினர்"
> (மனு .9: 23, 24)

இதனால் இல்லறத்தை ஏற்கும் பெண்டிர் தம் கணவர் மூலமாகப் பெருஞ்சிறப்பை எய்துகின்றனர் என்பது தெளிவு. அதோடு பெருமை என்பது குலத்தால் வருவதன்று; குணத்தால் வருவதென்பதும் தெரியலாம்.

கணவனும் மனைவுயும் ஒருவரால் ஒருவர் அடையத்தக்க சிறப்பை வள்ளுவரும் புலப்படுத்துகிறார்:

> "பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
> புத்தேளிர் வாழும் உலகு" (குறள். 58)

> "புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
> ஏறுபோல் பீடு நடை" (குறள். 59)

அன்புடைய கணவனை அடைவதால் மனைவி இம்மையிலும் மறுமையிலும் சிறப்படைகிறாள். நல்ல மனைவியைப் பெறுவதால் கணவனும் சமுதாயத்தில் மதிப்படைகிறான். புகழ் புரிந்த இல்லாளை உடையவன் இகழ்வார் முன் பீடுநடை நடக்கவல்லவனாகின்றான் என்ற வள்ளுவநெறி, மனுநெறி யிலிருந்து சிறிது மாறுபடுகிறது.

கணவனின் மேன்மையை மனைவி அடைவதாக மனு கூறியுள்ளார். மனைவியால் கணவனும் மேன்மையடைவான் என்று வள்ளுவர் குறிப்பிடு கின்றார். குலப்பெருமை பேசி, மாந்தரிடையே ஏற்றத்தாழ்வை ஏற்படுத்திய மனு, குடும்பத்திலும் கணவன், மனைவியரை ஒருவருக்கொருவர் துணை எனக் கூறாது தாழ்வு உணர்வை ஏற்படுத்துகின்றார்.

இருவர் இணைந்து வாழ்வதே இல்வாழ்க்கை ஆகும். கற்பு, நற்பால் ஒழுக்கம் முதலாய மாட்சிமைப் பண்புகள் யாவும் தலைமக்கள் இருவருக்கும் இணையானதே. ஆனால் மனுதரும நூலார், ஆடவருக்கு அளித்த மேன்மைகளை மகளிருக்கு அளிக்கவில்லை. மாறாக,

> "இழிநடத்தை, பரத்தையர் நட்பு, நற்குணமின்மை
> இவற்றை உடையவனாயினும் கற்பினளாய
> பெண் தன் கணவனைத் தெய்வமாகப் பேணுக" (மனு. 5 :154)

என்று ஆணையிடுகின்றார். அதோடு மனைவியை இழந்தவன் விதிப்படியே மறுமணம் செய்துகொண்டு வாழ்வதற்கும் உடன்படுகின்றார் (மனு. 5: 169). ஆனால் கணவனை இழந்த பெண்மணி, கைம்மையில் காய், கனி, கிழங்குகளை உண்டு காலந்தள்ளலும், மற்றொருவன் பெயரை நாவாற்கூற விரும்பாமையும் வேண்டும் என்று அறநெறி புகட்டுகின்றார். இவ்வாறு கற்பும் கைம்மையும் மகளிருக்கு மட்டும் உரிமை, பரத்தையை நாடியவனைத் தெய்வமெனப் பேணுதல் மகளிர் பண்பு என்பன தருமநூல் காட்டும் நெறிகளாகும். ஆனால் திருக்குறள் காமத்துப்பாலில் பெண்களைப்போலவே ஆணும் நெறி திறம்பாத நல்லோனாகக் காட்சி அளிக்கின்றான். காதல் நெறியைத் தூய்மைப்படுத்திக் கற்பை, ஆண், பெண் இருபாலர்க்கும் உரிமையாக்கிய பெருமை வள்ளுவருக்கே உரியதாகும். ஆதலால் பரத்தையர் நட்புடைய தலைவனைப் பொருந்தேன் எனச் சூளுரைக்கின்றாள் குறளின் தலைவி,

> "பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்
> நண்ணேன் பரத்தநின் மார்பு" (குறள். 1311)

கற்பும் காமமும் இருதலையாக இருத்தல் வேண்டும் என்பதை,

> "ஒருதலையான் இன்னாது காமங்காப் போல
> இருதலை யானும் இனிது" (குறள். 1196)

என்று வள்ளுவநெறி வலியுறுத்துகிறது. மக்கள் வாழ வழிவகுக்கும் திருக்குறள் பலநிலையறம் தழுவியது; எந்நிலை மாந்தரையும் முன்னேற்று வது. ஆதலால் மக்கள் யாவருக்கும் ஏற்றத்தாழ்வற்ற அறங்களையே எடுத்துரைக்கின்றது.

தவறு செய்த தலைவனையும் தெய்வமெனக் கருதிப் பேணுக எனக்கூறும் தருமநெறி, தலைவன் மீண்டும் மீண்டும் இன்னா ஒழுக்கம் புரிவதற்கு வழிகாட்டுவதாக அமைகிறது. ஆனால் தவறுசெய்த தற்கொண் டானை ஊடல் மூலம் திருத்திப் பேணுக எனக்கூறும் வள்ளுவ நெறியே வாழ்விற்கு ஏற்ற நெறி எனக் கருதலாம். ஊடல் உவகையை வள்ளுவர் மகளிர்க்குக் கற்பித்த புதுவகைப் புரட்சி எனலாம்.

## இரு கணவர்

ஒருவனுக்கு ஒருத்தி என்பது நமது பண்பாடு. ஆனால் மனுகாலச் சமுதாயத்திலும் இரண்டு கணவர் இருந்ததாகத் தெரிகிறது. மணம் புரிந்தவனே கணவனென்றும், கருக்கொளச் செய்தவனே கணவனென்றும் மாறுபட்ட இரு கருத்துக்கள் காணப்படுகின்றன (மனு. 9: 32). இக்கருத்துக் கள் தமிழ்ப் பண்பாட்டிற்கு முற்றிலும் முரண்பட்டவை.

தரும சாத்திரம் கூறும் முறை அரசனுக்கு உண்டாம் ஆட்சிமுறைச் சிக்கலைப் போக்குவதற்காக இருக்கலாம். "மனுவின் அரசன் பரம்பரை மரபுரிமை உடையவன். அரசமரபு, மகனை முதன்மையாகக் கொண்டது. அரசன் மகப்பேரற்றவனாகஇருந்தால் அரசு வழிமாறிவிட வாய்ப்புகள் உண்டு. அதனால் எப்படியும் ஆண்குழந்தையைப் பெற்றுக்கொண்டால் அரசமரபு மாறாது என்ற எண்ணத்தின் அடியாகத்தான் நிகோயாமுறை வடமொழிப் பொருணூலாசிரியர்களால் வற்புறுத்தப்படுகிறது."[1] தமிழ் மறையார் இதை ஏற்கவில்லை.

## நன்மக்கள்

அன்றுமுதல் இன்றுவரையிலும் குழந்தைகளைச் செல்வ மாகப்

---

1. இரா. வேலு. திருக்குறள் கௌடலியம் ஒப்பாய்வு, ப. 227.

போற்றுதல் இந்திய நாடெங்கும் பரவிருக்கும் செய்தியாகும். ஆதலால்,

> "மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
> பயக்குறை இல்லைதம் வாளும் நாளே"[1]

> "குழவி தளர்நடை காண்ட லினிதே
> அவர்மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே"[2]

> "தாமரைக் கைப்பூநாறும் செய்யவாய் மக்களை
> இல்லாதவர் பொன்னுடைய ரேனும் புகழுடையரேனும்
> மற்றென்னுடைய ரேனும் உடைய ரல்லர்"[3]

என்றெல்லாம் இலக்கியங்கள் இயம்புகின்றன. நாடு முழுவதும் பரவிருந்த இக்கருத்துக்களோடு பொருந்தவே மனுவும் கூறியுள்ளார். மக்கள் செல்வத்தை வலியுறுத்தும் மனு, கூறும் முறையில் மாறுபடுகின்றார். "சந்ததி இன்றிக் குலமே முடிவடையுமானால் ஒரு பெண் தனது கணவன், மாமனார் முதலியோரின் இசைவு பெற்றுத் தனது மைத்துனன் அல்லது கணவனுக்கு ஏழு தலைமுறைக்குட்பட்ட பங்காளி இவர்களுடன் முறைப்படிக் கூடியிருந்து குலத்தின் வளர்ச்சியை முன்னிட்டுத் தக்க பிள்ளையைப் பெறலாம்" (மனு. 9: 59) என்பதால்.மக்கட் செல்வத்தின் இன்றியமையாமையை அறிகிறோம். எனினும் கற்பை விடக் குழந்தைப்பேற்றுக்கு முதன்மை கொடுத்திருப்பது சிறப்பன்று. இது மாக்களுக்கு ஏற்ற நெறியேயன்றி மக்களுக்கு ஏற்ற நெறியன்று என்பதால் வள்ளுவர் இது பற்றிப் பேசவில்லை.

மக்கட்பேறு என்பது நன்மக்களைப் பெறுதலாகும். "தம்மரபு புகழ்பெற அறங்களைச் செய்தலும், வலிமை யற்றவர்களுக்கு வேண்டியன அளித்தலும், பெற்றோர், ஆசிரியர் ஆகியோர்களின் மொழியைத் தப்பாது பணிபுரிதலும், தங்கள் குலதெய்வ வழிபாடு நெறியில் நிற்றலும், நீண்ட வாழ்நாளும், நற்பண்புகளும், கல்வியும், அறிவும், கொடையும், நல்லொழுக்கமும் ஆகிய இவைகளை உடையவன் நன்மகனாவான்."[4] இத்தகு நன்மக்களைப் பெறுதலே இல்வாழ்வின் பயனாகும். ஆதலால்,

> "பெண்ணொருத்தி எவ்வித ஆடவருக்குச் சூல்கொள்கிறாளோ
> அவ்விதமே குழந்தையைப் பெறுகின்றாள். அதனால்

---

1. புறம்., 188.
2. இனியவை., 14.
3. நளவெண்பா, 234–235.
4. அறப்பளீசுர சதகம், 3.

தூயதான சந்ததி அவளிடம் தோன்றும் பொருட்டு
அவளைக் காப்பாற்றுக" (மனு. 9: 9)

என்று மனு எச்சரிக்கின்றார். இல்லந்தோறும் மகளிரைப் பேணும் பண்பாடு நிலவினால் நாட்டில் குற்றங்கள் மலியாமல் தடுக்கலாம். ஒவ்வொரு பெண்ணும் நன்மக்களைப் பெற்றுத் தீயவழியில் செல்லாது, அவர்களை நிறையுள்ளவர்களாக வாழச்செய்வதே சமுதாயத்தில் கொலை, களவு போன்ற குற்றங்கள் நிகழாமல் காப்பதற்குத் தலையாய வழியாகும் என்பது மனுவின் கருத்தால் வெளிப்படுகிறது.

நன்மக்களைப் பெறவேண்டும் என்று மனு கூறும் கருத்தொற்றுமை வள்ளுவரிடமும் காணப்படுகிறது. அறிய வேண்டியவற்றை அறிவதற்குரிய மக்களைப் பெறுவது போல மற்ற பேறுகள் சிறப்புடையவை அல்ல. அவர்கள் பழி பிறங்காப் பிள்ளைகளாய் அமைய வேண்டும். அப்பிள்ளைகளைப் பெற்ற பெற்றோருக்கு ஏழு பிறப்புகளிலும் துன்பங்கள் சென்று சேராது என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். (குறள். 61, 62).

'பழி பிறங்காப் பண்பாவது பிறர்க்குத் தீமை நினையாத நன்மையை நாடும் நற்குணம். இது அறிவால் வருவதாகும். இதன்மூலம் ஏழு பிறவியிலும் பெற்றோரைத் தீமைகள் அணுகுவதில்லை.'[1] இத்தகு நன்மை களைத் தம் செல்வமென்று பெற்றோர் பாராட்டுகின்றனர். இம்மக்கட் செல்வம் அவரவர் வினைக்கு ஏற்றவாறு வரும் (குறள். 63) என்பது குறள் நெறியாகும்.

பழி பிறங்கா மக்களைப் பெறவேண்டும் என்பதே இருநூலாரின் கருத்தாகும். ஆனால் தந்தையின் குணங்களுக்கேற்ப மகன் பிறப்பான் என்பது மனுநெறி. செய்யும் வினைக்கேற்ப மக்கட்செல்வம் பிறக்கும் என்பது வள்ளுவநெறி. இதனால் ஒரு குடும்பத்தில் தந்தையும் மக்களும் நல்லவர் களாக இருக்கவேண்டும்; நன்மக்கட் பேற்றிற்கு நல்வினைகள் செய்தல் வேண்டும் என அறியலாம்.

## பிறனில் விழையாமை

"அறம் கருதி வாழும் சமுதாய அமைப்பைப் பெரிதாக எண்ணுவோர் தம் குடும்பமும் அடுத்தவர் குடும்பமும் அமைதியாக அறப்பணியில் ஈடுபட வேண்டுமென விரும்புவதால் பிறனில் விழையாமையைப் பெரியதோர்

---

1. ஜி. வரதராசன், திருக்குறள் உரைவிளக்கம், ப. 28.

அறமென்று கொண்டனர்"[1] என்பர். ஏனெனில் வீரம், தீரம், இசைஞானம், இறையன்பு முதலிய நற்குணங்கள் உடைய இராவணனின் சிறப்பெல்லாம் பிறன் மனைவியை நோக்கியபோது இல்லாமல் போயிற்று. இவ்வாறு பிறனில் விழைவானுக்கு ஏற்படும் தீமைகளைத் தம்மபதம்,

"மாற்றான் தாரத்தினை நாடுகின்றவனுக்குப் பாவம்,
அமைதியான உறக்கமின்மை, பழி, நரகம் என்னும்
நான்கு தீமைகளும் உண்டாகின்றன" (த. 307)

என்று இயம்புகிறது. இதைத் தழுவிய வள்ளுவரும்,

"பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்" (குறள். 146)

என்று கூறிகிறார். காமமயக்கத்தால் பிறனுடைய இல்லாளை விரும்புதல் இன்னா ஒழுக்கமாகக் கருதப்படுகிறது என்பதால்,

"பிறன்மனைவியைக் கூடுவதைப்போல் இவ்வுலகில் ஒருவனது
வாழ்நாளைக்குறைக்கும் செயல் வேறு ஒன்றும் இல்லை"
(மனு. 4: 131, 134)

என்று மனுதருமம் சாடுகின்றது. இக்கருத்திற்கு அரணாக வள்ளுவரும்,

"விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார்" (குறள். 143)

என்று பாடியுள்ளார். 'பிறன்மனை நயந்தவன் செத்தா ரோடு ஒப்பான்' என்று பரிதியார் கூறுகிறார். வாழ்நாளைக் குறைக்கும் செயலெனக்கூறிப் பிறனில் விழைதலைத் தடுக்க முயல்கிறார் மனு. பிறனில் விழைபவரைச் செத்தபிணம் எனக்கூறிப் பிறனில் விழையாமையை வள்ளுவர் வலியுறுத்துகிறார். இவ்வாறு மூன்று அறநூலாரும் பிறனில் விழைதல் தவறெனத் தடுக்கின்றனர்.

## இல்வாழ்வும் இறைநிலையும்

அறவாழ்க்கைக்குப் பெரிதும் துணையாவது இல் வாழ்க்கை. "காதலர் ஒருவரிடத்தில் மற்றொருவர் செலுத்தும் அன்பே விரிவடைந்து அனை

1. தே. ஆண்டியப்பன், குறள் கண்ட நாடும் வீடும், ப. 332.

வரிடத்தும் செலுத்தும் தியாகப் பண்பாக உருவாகின்றது. காதலில் இருமனம் மட்டுமே கரைகின்றது. இல்லறத்தில் இருமனமும் ஏனைய மனங்களோடு ஒன்றிக்கலந்து உயர்பண்பை உருவாக்குகின்றது."[1] இல்வாழ்க்கையின் பயனால் துணைவியின் மேல் படர்ந்த அன்பு பிற உயிர்கள் மேலும் படர்ந்து அன்பறமாய் மாறுமானால் வாழ்க்கையின் நோக்கம் வெற்றிபெறும். துணைவியை, நேசித்து மனையிலிருந்து வாழ்ந்தால் மட்டும் இல்லறம் சிறந்துவிடாது. தானும் வாழ்வாங்கு வாழ்ந்து வையத்தையும் வாழவைக்கும் அறமே இல்வாழ்வும், நல்வாழ்வும் என்பதை,

> " *வறிஞராயினும் வாழ்வாங்கு வாழ்வாரே உயர்குலத்தோ*
> ரென்று மதித்துப் புகழத்தக்கவராகின்றனர்" (மனு. 3: 66)

என்று மனுநீதி எடுத்துரைக்கின்றது. இம்மனுநெறியே,

> "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள். 50)

என்ற குறள் வடிவம் பெற்றுள்ளது. வானுரையும் தெய்வ நிலைக்கு உயர்த்தும் ஆற்றல்மிக்கது இல்வாழ்க்கை. மானுடம் வாழ்வாங்கு வாழ்ந்தால் மன்பதை தேவருலகாகும். அதனால் இவ்வுலகில் இல்லறவாழ்க்கையைச் சரிவர நடத்தி ஒருவன் எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழ்வானாயின் அவன் மனித நிலையிலிருந்து மாறி அமரநிலையை எய்துவான் என்பதை மனுதரும நூலும் வள்ளுவ அறநூலும் எடுத்துரைக்கின்றன.

## விருந்தோம்பல்

விருந்தோம்பலின் இன்றியமையாமையை,

> "விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"[2]

*என்று கண்ணகி வருந்துவதினின்று,*

> "விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்"[3]

என்று சீதை வருந்துவதினின்றும் அறியலாம். இவ்வாறு தமிழ்க் காப்பியங்கள் கணவனும் மனைவியும் கூடி மேற்கொள்ளத்தக்க குடும்பச் செயற்பாடாக உணர்த்தும் விருந்தோம்பல் தருமசாத்திரத்தில் இல்லறக்

---

1. இ. சுந்தரமூர்த்தி, வான்மறை வள்ளுவம், ப. 56.
2. *சிலம்பு.*, 2: 85–86
3. நற்., 19.

கடமையாக வகுக்கப்பட்டுள்ளது. விருந்தோம்பலின் சிறப்பை வலியுறுத்துவதுடன் விருந்தோம்பலால் விளையும் நன்மையையும், விருந்தோம்பாமையால் ஏற்படும் குறைகளையும் கூறுகிறது. இவ்வாறு விருந்தோம்பலானது குடும்ப உறவோடு சமுதாய உறவையும் இணைக்க உதவும் அறநெறியாக அமைந்துள்ளது.

'விருந்து' என்னும் சொல்லின் பொருள் புதுமை அல்லது புதியன் என்பதாகும். 'அன்றாடம் வராமல் என்றைக்காவது ஒருநாள் நாடிவருவோனே ,விருந்தினன். ஓரிரவு மட்டுமே அவன் விருந்தினனாக மதிக்கப்படுவான்' (மனு. 3: 102). தம்மைக் காணவரும் உள்ளூவர்க்காரனும், வேள்வியின் பொருட்டு வருகின்ற அந்தணனும் விருந்தினர் அல்லர் (மனு. 3: 103). ஆனால் தற்காலத்தில் விருந்தினர் எனக் குறிப்பிடப்படுவோர் வீட்டிற்கு வரும் உறவினர் அல்லது நண்பர்களே ஆவர். இவர்களையும் பேணுதல் அறமேயாதலால் விருந்துபுரந்தருதல் இல்லத்தாரின் கடமையாகக் கருதப்படுகிறது. இதற்கு மாறாகச் 'சகல வசதிகளுடைய இல்வாழ்வான் ஒருவன் பிறன் வீட்டுச் சோற்றை விரும்பி விருந்தினனாகப் பாவனை செய்து விருந்துண்டால் அவன் மறுபிறவியில் மாடாகப் பிறந்து தனக்கு விருந்தளித்தவனுக்கு உழைப்பான்' (மனு. 3: 104) என்பதோடு இத்தகையோரை 'வாந்தி எடுத்த சோற்றை உண்ணும் பூதமெனவும் மனு சாடியுள்ளார். இவ்வாறு விருந்தோம்பல் புரிய வேண்டிய இல்வாழ்வான், பிறர் இல்லங்களில் விருந்தேற்றல் கூடாது என்பது மனுநெறி.

திருவள்ளுவரும் விருந்தோம்பலை இல்வாழ்வானின் கடமையாகக் கூறுகின்றார். 'கணவனும் மனைவியும் வீட்டிலிருந்து பொருள் சேர்த்துத் தம்மையும் தம் மக்களையும் காத்து வாழ்வதெல்லாம் விருந்தினரைப் போற்றும் அறத்தின் பொருட்டே' (குறள். 81) என்று கூறுகிறார்.

மேலும் விருந்தினர் வருகின்றபொழுது அவர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்க வேண்டும். வந்த விருந்தினரைப்புறத்தில் அமரச் செய்துவிட்டுத் தான் மட்டும் உள்ளிருந்து தனித்து உண்டல், 'சாவா மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று' (குறள். 82) என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

இல்வாழ்வான் விருந்தினரை உபசரிக்க வேண்டிய கடப்பாடு உடையவன் என்பதை மனுவும் வள்ளுவரும் ஒருசேரக் கூறியுள்ளனர். ஆனால் பிறர் இல்லங்களுக்குச் சென்று விருந்தேற்றல் கூடாது என்று மனு கூறியிருக்க, வள்ளுவரோ, தன் இல்லத்தில் கூடத் தான்மட்டும் விருந்துண்ணல் கூடாது என்று குறிப்பிடுகின்றார். மேலும் விருந்திரை வரவேற்கும்

முறை பற்றி மனு கூறவில்லை. முகம் திரியாது விருந்தினரை வரவேற்க வேண்டும் என்று வள்ளுவர் கூறியிருப்பது (குறள். 90) நோக்கற் குரியது.

விருந்தோம்பல் என்பது இல்வாழ்க்கையினர் தம்மிடமுள்ள உணவை நாடி வந்தோர்க்குப் பகுத்துக் கொடுத்து எஞ்சியதைத் தாம் உண்பதாகும்.

> "அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
> மறவாது இதுகேள் மன்னுயிர்க்கெல்லாம்
> உண்டியு முடையு முறையுளு மல்லது
> கண்டதில்"[1]

என்று சாத்தனாரும் மொழிந்துள்ளார். ஆதலால் தேடிவந்த விருந்தினனுக்குக் காலுக்கு நீர் கொடுத்து இருக்கையில் அமரச்செய்து இல்லில் உள்ள, உணவை விருந்தாக்கி உபசரிக்க வேண்டும் (மனு. 3: 99). விருந்தினனுக்குச் சோறிட இயலாது போயிடினும் படுக்கை, இருக்கை, தண்ணீர், இனியமொழியேனும் வழங்கல் அறத்தாறொழுகும் இல்வாழ் வானின் கடமையாகும். உணவு வேளையில் வந்த விருந்துக்கு அன்னமிட்டு, மேலும் யாரேனும் வரினும் அவர்களுக்கும் உணவளிப்பவனே இல்லறத்தான் (மனு. 3: 108). அவ்வாறே அல்லுணவின்போதும் பின்னரும் வரும் விருந்தையும் காலந்தாழ்ந்து விட்டதெனக் கூறாது, சோர்வடையாது படைத்து மகிழலாம் (மனு. 3: 106). புதுமணப்பெண், கன்னிகை, பிணியாளன், சூலி இவர்களை விருந்தினர் உண்ணுமுன்பே உண்பிக்கலாம். விருந்தினர் யாவரும் உண்டபின்னர் எஞ்சியதை இல்லறத்தார் உண்ணலாம் (மனு. 3: 116). இவ்வாறு விருந்தோம்புதலால் பொருளும், புகழும், ஆயுளும், நற்கதியும் கிடைக்கின்றன எனக்கூறி விருந்தோம்பும் பயனைச் சிறப்பித்துள்ளார் மனு. இச்சிறப்பினை,

> "மறப்பருங் கேண்மையொ டறப்பரிசாரமும்
> விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்"[2]

என்று சிலப்பதிகாரமும் எடுத்துரைக்கிறது. மனு காட்டிய நெறியில் விருந்தோம்பலை நள்ளிரவிலும விரும்பி மேற்கொள்ளும் நங்கையரை,

> "அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
> முல்லை சான்ற கற்பின்
> மெல்லியள் குறுமகள்"[3]

---

1. மணி., 24 : 227–230.
2. சிலம்பு., 2 : 85–86.
3. நற்., 19.

என்று சங்க இலக்கியமும் பாராட்டுகிறது. எனவே அறிமுகமில்லாத புதியவருக்கு அல்லுணவின்போதும் அதற்குப் பின்னரும் கூட உணவு படைத்துப் பேணுதல் அறமாகக் கருதப்பட்டதெனினும் புதுமணப்பெண், கன்னிகை, பிணியாளன், சூலி ஆகிய இவர்களை மற்ற விருந்தினர் உண்ணும் முன்பே உண்பிக்கலாம் எனக்கூறி விருந்திலும் அறத்தைப் பின்பற்று மாறு வலியுறுத்துவது மனுவின் கொள்கை.

விருந்தோம்பல் என்பது பயன்கருதாது செய்யும் அறமாகும். எனினும் வள்ளுவர் விருந்தோம்பலின் பயனையும் கூறுகின்றார். விருந்தோம்புதல் ஒரு வேள்வி. இந்த வேள்வி யின் பயன் இவ்வளவு என்று கூறுவதற்கு ஓர் அளவு இல்லை என்பதால் நாள்தோறும் வருகின்ற விருந்தினரைப் பேணு கின்றவனின் இல்வாழ்க்கை வறுமையால் கெடுவதில்லை (குறள். 83). இம்மையில் அவன் வாழும் இல்லம் திருமகள் வாழும் தெய்வீக இல்லமாகும் என்பதை,

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்" (குறள். 84)

என்ற குறட்பாவாகப் பாடியுள்ளார். விருந்தினர்களை எதிர்பார்க்கும் பண்புடையவன் வானத்தாருக்கு நல்ல விருந்தினன் ஆவான் என்கிறார் (குறள். 85).

இவ்வாறு இம்மை, மறுமைப் பயன்களைக்கூறி, விருந்தோம்பலின் இன்றியமையாமையை இரு அறநூலாரும் வலியுறுத்துகின்றனர்.

செல்விருந்தோம்பி, வரும் விருந்தையும் பேணுவதற்காக் காத்திருக்கும் கடப்பாடுடையவர் இல்லறத்தார். கழனிகளில் சிந்தியிருக்கும் நெல்மணிகளைப் பொறுக்கியெடுத்து அதைக் கொண்டு, பிழைப்பதாயினும் கடுந்தவமே புரிவதாயினும், விருந்தோம்பாதிருப்பின் தேடிவந்தும் உணவு கிடைக்காமல் திரும்புவோனுக்கு, இவன் தேடிய புண்ணியமெல்லாம் போய்ச் சேர்ந்துவிடும். அதோடு தனக்கு மட்டுமே உணவு, சமைத்துக் கொடுப்பவனைப் பாவத்தை உண்ணும் பாவி எனவும் தருமநூல் பறை சாற்றுகின்றது (மனு. 3: 100,118).

கழனிகளில் சிந்திய நெல்மணிகளைப் பொறுக்கி எடுத்தாவது விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்பது மனுநெறி. நிலத்தில் விதைக்க இருந்த நெல் விதைகளைக் கொண்டாவது விருந்து படைத்தல் வேண்டும்

(குறள். 85) என்பது வள்ளுவநெறி. இதனால் ஏழ்மை நிலையிலும் விருந்து படைக்க வேண்டும் என்பதை இருநூலாரும் வரவேற்கின்றனர். இந்நெறி யிலிந்து பிறழ்ந்து விருந்தோம்பல் செய்யாதவனுக்கு ஏற்படும் தீமையை,

> "பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
> வேள்வி தலைப்படா தார்" (குறள். 88)

என்று கூறி வள்ளுவர் எச்சரிக்கின்றார்.

எனவே இல்வாழ்வில் மனைவி, மக்களிடம் காட்டிய அன்பு, விருந்தினர்களை, முகம் திரிந்து நோக்காது ஆதரிக்கும் அளவிற்கு விரிந்துள்ளது எனலாம். இவ்வாறு விருந்தோம்பலால் விளையும் நன்மை களையும் விருந்தோம்பாமையால் ஏற்படும் குறைகளையும் கூறுவதன் வாயிலாக இரு அறநூலாரும் விருந்தோம்பலை வலியுறுத்தியுள்ளனர்.

## இல்லறத்தாரின் அன்றாடக் கடமைகள்

இம்மை மறுமைப் பேறுகளை விரும்புவோர் இல்லறம் காத்தல் கடன். ஒரு குடும்பத்தலைவன், தன் மனைவி, மக்களைக் காப்பாற்றல் வேண்டும். பின் சமூகத்தில் பலதிறத்தார்க்கும் உதவவேண்டும். இவ்வாறு அன்றாடம் சில கடமைகளைச் செய்தல் வேண்டும். முனிவர், தென்புலத்தார், தேவர், பூதங்கள், விருந்தினர் ஆகியோர் இல்வாழ்வானை நாடி வருகின்றனர். அவர்களுக்குப் பின்வருமாறு ஒழுகுதல் இல்வாழ்வார் கடன்.

வேதம் ஓதுதலால் முனிவரையும், அவி சொரிவதால் தேவரையும், சிரார்த்தத்தால் தென்புலத்தாரையும், உணவினால் விருந்தினரையும், பலியிடுவதால் பூதங்களையும் நிறைவுசெய்யலாம் (மனு. 3: 81). இறந்த முன்னோர்களை அன்றாடம் நினைந்து சோறு படைத்தோ, புனல் சொரிந்தோ, பால், கிழங்கு, பழம்படைத்தோ வழிபாடு செய்தால் அவர்கள் நிறைவடைவர் (மனு. 3: 83).

இல்வாழ்வார் இறந்து, மறைந்த முன்னோர்களுக்கும், விண்ணுலகில் வாழும் தெய்வங்கள், தேவர்கள், தேவதைகளுக்கும் மண்ணுலக உயிர் களுக்கும் உணவு படைத்து நிறைவுசெய்வதை அன்றாட அறமாகக் கருதவேண்டும். "தன் பெண்டு, தம்பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம் இவையுண்டு, தானுண்டு என்னும் சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்ட தன்னலப் பிறவிகளைத் திருத்தும் பயிற்சிக்களமாக இல்வாழ்க்கை

அமையவேண்டும்"[1] அறநெறியின் அடிப் படையில் தன்னலத்தைப் போக்கிப் பொதுநலத்தைப் போதிக்கும் கல்விச்சாலையாய் இல்வாழ்க்கை திகழ வேண்டும் என்பதே மனுவின் கொள்கை.

இவ்வுலகில் இல்வாழ்வோன், தென்புலத்தார். தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐந்திடத்தும் (குறள். 93) அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று குறள் கூறுகிறது.

தென்புலத்தார் என்னும் சொல் இறந்த முன்னோரைக் குறிக்கிறது. இறந்த முன்னோர்களுக்குச் செய்யவேண்டிய வழிபாடுகளை மக்கள் செய்யவேண்டும் என்பதே வள்ளுவர் கருத்து. 'பண்டைக்காலத்தில் இறந்தவர்களுக்காகத் தானங்கள் வழங்கினர்.'[2] இக்காலத்திலும் இறந்த முன்னோர்களுக்காகச் சில சடங்குகளைச் செய்கின்றனர். இது முன்னோர் களை நினைப்பதற்கும் அவர்வழி நிற்றலுக்கும் வழிகாட்டுகிறது. வள்ளுவர் மறுமையில் நம்பிக்கை உடையவராதலால் தென்புலத்தார்க்கு வழிபாடு செய்தல் வேண்டும் என்று கூறியுள்ளார் (குறள். 43).

தெய்வ வழிபாடும் இல்லறத்தார் கடமைகளில் ஒன்றாகிறது. கடவுள் வாழ்த்தில் இந்நெறியை வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். இம்மை, மறுமை நலம் கருதி மக்கள் இறையை வணங்கவேண்டும்.

அவ்வாறே விருந்தினரைப் பேணுதலும், சுற்றம் தழுவுதலும் சிறந்த அறமென வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். தன்னை ஓம்புதலும் அறமாகவே கருதப்படுகிறது. ஏனெனில் குடும்பத்தலைவன் தன் மனைவி மக்களையும் சமுதாயத்தில் வாழ்கின்ற மற்றோர்களையும் ஓம்பல் வேண்டும். இதுபோன்று பேணிப் பாதுகாத்தல் அறமாகவே கருதப்படுகிறது. மேற்கூறிய ஐவருக்கும் செய்யும் அறநெறியை வழுவாமற் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்பென இரு அறநூலாரும் கூறுகின்றனர்.

தெய்வம், விருந்தினர், பணியாள், பெற்றோர், தனது உயிர் என்ற ஐவரை மனு குறிப்பிடுகின்றார். தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐவரை வள்ளுவர் குறிப்பிடுகின்றார். சிறு வேறுபாடு காணப்படினும் இவர்கள் யாவரையும் பேணுதல் இல்வாழ்வானின் கடமை என்பது நூல் முழுவதும் காணப்படுகின்ற செய்தியாகும்.

1. மு.பி. பாலசுப்பிரமணியன், இலக்கிய நெஞ்சம், ப. 39.
2. புறம்., 232–234.

இல்வாழ்வோர் பல அறங்களைச் செய்தற்கு உரியவர். அதற்குப் பொருள் வேண்டும். பொருளீட்டுதலும் இல்வாழ்வோர் கடனாகும். பொருளுக்காகத் தலைவன் பிரிந்து சென்றதாகச் சங்க இலக்கியங்களும் கூறுகின்றன; வள்ளுவரும் குறிப்பிடுகின்றார். ஆனால் வேறொரு பெண்ணை நாடிச்சென்ற தலைவன் இருக்கும் இடத்திற்கு, மனைவி செல்லவேண்டும் என்ற கருத்தில் வள்ளுவருக்கு உடன்பாடு இல்லை. பரத்தையர் பிரிவுபற்றி வள்ளுவர் குறிப்பிடவில்லை. காமத்துப்பாலில் அன்பின் ஐந்திணை என்று சான்றோர் புகழ்ந்த ஒத்த அன்புடைய தலைமக்களின் வாழ்க்கையைக் கூறுகின்றார். "தலைவன் பிரிந்தாலும், பிரிவால் வருந்துவதாயினும் வருந்தலாம். ஆனால் ஒத்த அன்பு வாய்க்கப் பெற்றவர்கள் தலைவன் பிரிந்தாலும் மீண்டும் வருவர் என்ற செருக்கோடு வாழும் பேறுடையவர்கள். தலைவன் இருக்கும் இடத்தை நாடிச்செல்லார். ஏனெனில் காதல் என்பது ஒரு சார்பாக இருப்பது துன்பம். காவடி தாங்கும் இருபுறம் போல, இரு சார்பிலும் ஒத்த வேட்கை இருந்தால்தான் வாழ்வு சிறப்புறும்"[1] என்று மு.வ. குறிப்பிடுகின்றார். இத்தகு இயல்புகளுடைய தலைமக்களை வள்ளுவர் படைத்துக் காட்டியுள்ளார்.

பண்டைக்காலத்தில் ஓதல், பகை, தூது, பொருள் காரணமாக ஆடவர் பிரிந்து சென்றனர். இப்பிரிவு மனுவின் காலத்திலும் நிகழ்ந்தது. எனினும் இணைந்த இரு உள்ளங்களுக்கிடையில் பிரிவை ஏற்படுத்துவதும், அது நீடிப்பதும் கூடாது என்பது மனுவின் கொள்கை. அவ்வாறு பொருள்வயின் பிரிந்து வேற்றுநாடுகளுக்குக் கணவன் செல்ல நேரிட்டால் தான் திரும்பிவரும் வரையில் மனைவியின் வாழ்க்கைச் செலவுக்கு வேண்டும் பொருளை வைத்துவிட்டுச் செல்க (மனு. 4: 74) என்று கணவனுக்கு அறமுணர்த்திய மனு, மனைவிக்கும் பின்வருமாறு அறிவுரை பகர்கின்றார்.

> "கணவன் திரும்புமளவும் உயர்ந்த ஆடை அணிகள் பூணாமலும் அண்டை,அயல் இல்லங்களுக்குச் செல்லாமலும் இருக்க வேண்டும். பிழைப்புக்கு வேண்டிய பொருளை வைக்காமல் போய் விட்டாலும் கோலமிடல், நூற்றல் முதலிய தொழில்களைச் செய்து கற்புநிலை கெடாமல் பிழைக்க" (மனு. 9: 75).

தருமசாத்திரம் பிரிவின் காலத்தை மூன்றாண்டுகள் முதல்

1. மு. வரதராசன், *திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்*, ப. 53.

எட்டாண்டுகள் வரை என வரையறை செய்கிறது. அதற்கு மேலும் இல்லறத்தார் பிரிந்து வாழ்வதை மனு விரும்பவில்லை. அதனால்,

> "குருவின் ஆணை முதலியவற்றை நிறைவேற்றும் பொருட்டுப் பிரிந்து, சென்றால், எட்டாண்டுகளும் கல்வி, புகழ் இவற்றை நாடிச் சென்றால் மூன்றாண்டுகள் பார்த்திருந்தும் அவன் வரவில்லை என்றால் அவனிருக்குமிடத்திற்கு மனைவி செல்ல வேண்டும்"(மனு.9 :76)

என்று மனு ஆணையிடுகின்றார்.

## பாகப்பிரிவினை

பெற்றோர் இறந்தபின்னர், மைந்தர் ஒன்றுகூடிப் பெற்றோர், தேடிவைத்த பொருட்களைப் பிரித்துக்கொள்ளல் பாகப்பிரிவினை எனப்படும். ஆனால் பெற்றோர் இருக்கும் வரை அவர்கள் பொருளில் மக்களுக்கு உரிமை இல்லை (மனு. 9: 103). தந்தை இறந்தபின் மூத்தமகன் குடும்பப்பொறுப்பேற்று உடன்பிறந்தார்களைக் காத்தல்வேண்டும். இளையோரும் தந்தையைப்போல் தமையனை மதித்தல்வேண்டும் (மனு.9: 108). உடன்பிறந்தார் இணைந்து வாழலாம் அல்லது நேரிய முறையில் சொத்துக்களைப் பகிர்ந்து தனித் தனியாக வாழலாம். இதனால் கூட்டுக்குடும்ப வாழ்வை விடத் தனிக்குடும்ப வாழ்வை மனு வரவேற்கின்றார் எனக்கருதலாம். ஏனெனில், "ஒன்றாக நடைபெற்ற நல்லறங்கள், இதனால் பலவீடுகளில் தனித்தனியாக நடக்கு மல்லவா?" எனவே, பாகம் செய்துகொள்வது நல்லறத்தின் பாற்பட்டதென தருமசாத்திரம் கூறுகிறது (மனு. 9: 111). மூத்தவன் பண்பாளனாகவும், கல்விமானாகவும் இருந்தால் அவன் கூடுதல் பங்கு பெறலாம் என்ற தனிச்சலுகை காட்டியுள்ளார் மனு (மனு.9: 114, 117).

இயல்பாகச் சொத்துரிமை என்பது ஆடவர், பெண்டிர் இருபாலருக்கும் இருந்தது. உடன்பிறந்த பெண் திருமணமாகாமல் இருந்தால் அவருக்கும் சமபங்கு உண்டு. திருமணமாகிய பெண்ணிற்குச் சிறிது பொருளை மரியாதைக்குக்கொடுப்பர் (மனு. 9: 118). ஆண்பிள்ளை இல்லாமல், பெண் மட்டும் பிறந்திருந்தால், அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்குச் சொத்தைக் கொடுக்கலாம் (மனு. 9: 127). ஆனால் திருமணம் செய்துகொள்ளாத பேடி, பாவி, பிறவிக்குருடன், பிறவிச்செவிடன், பித்தன், மூடன், ஊமையன், நொண்டி போன்ற குறை உடையோர் பங்குக்குரியரல்லர் (மனு. 9: 201). இவர்கள் திருமணம் செய்தவராயின் சரிபாகம் பங்கு உண்டு (மனு. 9: 203).

இதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உடன் பிறந்தோராயினும் பெற்றோர் பொருளை அறம்பிறழாது தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதே அறம் எனக் கூறப்பட்டுள்ளது தெரியலாம். பாகப்பிரிவினை பற்றி வள்ளுவர் குறிப்பிடவில்லை.

## சீதனம்

இல்லத்திற்கு எழில்தரும் மகளிர் திருமகளைப் போன்றவர்கள். ஆதலால் அவர்களை ஆடைஅணிகலன்களால் மகிழ்வுப்படுத்த வேண்டும் என்ற கோட்பாடு அன்றுமுதல் இன்றுவரை சமுதாயத்தில் நிலவி வருகிறது பெண், மகிழ்ச்சிக்காக, மனநிறைவிற்காகப் பிறந்தகக்தாரும், புகுந்த–கத்தாரும் விரும்பிய பொருட்களைச் சீதனமாக நல்குகின்றனர்.

> "திருமணத்தில் தந்தையினால் தீயின் முன்வைத்து வழங்கியது,
> புக்ககம் செல்லும் போது தந்தை கொடுத்துனுப்பியது,
> கணவன் அன்பினால் வழங்கியது, திருநாட்களில் சகோதரன்
> கொடுத்தது, தாய் கொடுத்தது, உறவினர் மகிழ்ச்சியுடன்
> பரிசளித்தது" (மனு. 9: 194)

என்னும் அறுவகைச் சீதனங்களைப் பெண்களுக்குக் கொடுப்பது நல்லறமாகக் கருதப்படுகிறது; கடமையாகவும் சுட்டப்படுகிறது (மனு. 3: 55). இவ்வாறு பெண்களைப் போற்றி மகிழ்வுப்படுத்தும் இல்லங்களில் எல்லாத் தெய்வங்களும் எழுந்தருளும் (மனு. 3: 56); பெண்களை வருத்த மடையச்செய்யும் குலம் நசிந்து கெடும் (மனு. 3: 58) என்ற நம்பிக்கையும் அக்காலத்தில் இருந்தது. அதனால் பிறந்தகத்துத் திருநாட்களில் குலக்கொடியான பெண்களுக்கு ஆடை, அணிகளோடு விருந்து படைத்து மகிழ்வடையச்செய்தால் குடும்பத்தில் மங்கலம் நிறைந்திருக்கும் (மனு. 3: 59).

இவ்வாறு சேர்ந்த பொருளனைத்தையும் அவ்ளிறந்த பின்னர், அவளது பிள்ளைகளும், மணமாகாத பெண்களும், தந்தை இருந்தபோதிலும் தம்மில் பங்கிட்டுக்கொள்ளலாம் (மனு. 9: 195). மனைவியின் சீதனப் பொருள்களில் கணவனுக்கு உரிமை இல்லை.

## ஒப்பீடு

கணவன் மனைவி இருவரும் கற்புநிலை வழுவாது இணைபிரியாமல் இல்லறக் கடமைகளைச் செய்து இன்பம் பெறும் குடும்ப வாழ்க்கையை

மனுவும் வள்ளுவரும் விரும்பினர்.

பலதார மணத்தை மனுவும் வள்ளுவரும் ஆதரிக்கவில்லை

மனுதரும சாத்திரமும் திருக்குறளும் தந்தைவழிக் குடும்பத்தையே சிறப்பிக்கின்றன. இல்லப்பணிகளை மகளிருக்கும் நாட்டுப்பணிகளை ஆடவருக்கும் உரிமை யாக்கினர்.

தம் நிறைகாத்தல் மாதர்தம் கடன் என்னும் அறநெறியை வலியுறுத்து வதில் இருநூலாரும் ஒன்றுபடுகின்றனர்.

கொழுநற்றொழுதெழும் பழக்கம் மகளிர்க்குரிய தலையாய கடமை யாக இருநூலாலும் கருதப்படுகிறது.

காம மயக்கத்தால் பிறனில் விழையும் இன்னா ஒழுக்கத்தை மூன்று அறநூல்களும் கடிந்துரைக்கின்றன.

மானிடர் வாழ்வாங்கு வாழ்ந்து மண்ணுலகைத் தேவருலகாக்க வேண்டும் என்பதே மனுதருமம் மற்றும் திருக்குறள் காட்டும் நெறியாகும்.

இல்வாழ்வான் விருந்தினரை உபசரிக்க வேண்டிய கடப்பாடு உடையவன் என்பதை மனுவும் வள்ளுவரும் ஒருசேரக் கூறியுள்ளனர்.

மனுதரும சாத்திரம் கூட்டுக்குடும்ப வாழ்க்கையை மேற்கொள் வதற்கான அறநெறிகளை விளக்குகிறது. திருக்குறள் தனிக்குடும்ப வாழ்விற்கு வேண்டிய நெறி முறைகளை வகுத்துச் செல்கிறது.

மனுவின் காலத்தில் குழந்தைமணம், எண்வகைமணம், பொருந்தா மணம், காதல்மணம், பலதாரமணம், கலப்புமணம், மறுமணம் ஆகிய பல்வேறு திருமணங்கள் நிகழ்ந்தன. திருவள்ளுவர் தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்ற களவுவழித் திருமணத்தையே ஆதரிக்கின்றார்.

பெண்ணின் பெற்றோர் மணமகனிடம் பரியமாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டு பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும் முறை மனுவின் சமுதாயத்தில் இருந்தது. வள்ளுவர் இதுபற்றிக் குறிப்பிடவில்லை.

பெண்ணின் திருமண வயது எட்டுமுதல் பன்னிரண்டு வரை என்பது மனுவின் கணிப்பு.ஆனால் வள்ளுவர் திருமண வயதை வரையறுக்க வில்லை.

பெற்றோர் திருமணம் செய்து கொடுக்கத் தவறினால் பருவமகளிர்

தமக்கேற்ற கணவனை மணந்துகொள்ளலாம் என்பது மனுநெறி. பெற்றோர் திருமணம் செய்துகொடுப்பதற்கு முன்பே மகளிர் தமக்கேற்ற துணையோடு இணையலாம் என்பது குறள்நெறி.

மறுமணமும் மணவிலக்கும் மனுவின் காலத்தில் மலிந்திருந்தன. வள்ளுவத்தில் இவை இடம்பெறவில்லை.

தவறு செய்த தலைவனைத் தெய்வமெனப் பேணுக என்பது தரும நெறி. தவறு செய்த தலைவனை ஊடல் மூலம் திருத்திப் பேணுக என்பது குறள்நெறி.

ஒருத்திக்கு இரு கணவர் என்பது மனுவின் பண்பாடு; ஒருத்திக்கு ஒருவன் என்பது தமிழ்ப்பண்பாடு.

மக்கட்செல்வத்திற்காகக் கற்பை இழக்கும் மனுநெறியைத் தமிழ் மறையார் ஏற்கவில்லை. பாகப்பிரிவினை, சீதனம் ஆகியவை பற்றி வள்ளுவர் குறிப்பிடவில்லை.

# 3. அரசியல் அறம்

## முன்னுரை

அரிஸ்டாட்டில் ஆட்சிக்கலையை அறிவியல் என்று போற்றினார். மகாபாரத்தில் பிதாமகனான பீசுமர் தருமனுக்கு தரும நீதியை விரிவாக விளக்கியுள்ளார். கௌடலியரின் அர்த்தசாத்திரமும் மனுஸ்மிருதியும் அரசநீதியை முறையாகப் பேசுகின்றன. இவற்றிலிருந்து இந்திய அரசியல் சிந்தனையின் தொன்மையை ஒருவாறு உய்த்துணரலாம்.

"புத்தர் அரச மரபில் பிறந்தவர் ஆதலின் நல்லாட்சிக்குரிய இலக்கணங்களை நன்கறிந்து வரையறுத்துள்ளார். அறவழி தான் அரசனின் அடையாளம். ஐவகைச் சீலங்களை அரசன் உலகெங்கும் பரப்பவேண்டும் என்று வலியுறுத்துகிறார். இவைகள் சுத்தபிடகத்தின் ஒருபகுதியாகிய தீகநிகாயத்தின் சக்கவத்தி சுத்தத்தில் இடம்பெற்றுள்ளன."[1] ஆனால் தம்மபதத்தில் அரசியல் தொடர்பான அறநெறிகள் தொகுக்கப்படவில்லை. மனுதரும சாத்திரத்தில் நாட்டு ஆட்சியை நல்லமுறையில் நடத்துவதற்கு அரசன் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அரசியலின் ஒழுகலாறுகளைக் கண்டு, உணர்ந்து காலங் கடந்த நெறிகளைத் தெரிவிப்பது திருக்குறள்.

## அரசியல் அற்ம் (இராஜ தர்மம்)– விளக்கம்

'தொடக்க காலத்தில் இந்தியாவில் அரசியல் என்னும் சொல், அரசதர்ம்ம், அரசசாத்திரம், அரசநீதி, அர்த்தசாத்திரம், தண்டநீதி, நீதிசாத்திரம் போன்ற சொற்களால் வழங்கப்பட்டது. இச்சொற்களில் அரசதர்மம், அரசசாத்திரம், அரசநீதி போன்றவை இந்நாட்டில் மிகப் பழங்காலத்தில் வழக்கில் இருந்த முடியாட்சி முறையை விளக்கு பவைகளாகும்.'[2]

"அரசியலின் முதல் நோக்கமும் பயனும் அறம் காத்தலே என்று பெரியோர் துணிந்தனர். பகை நீக்கிக் குற்றம் கடிந்து, அச்சம் தவிர்த்துப் பொருள் பெருக்கிக் குடிகளை ஒம்புவதற்கே தண்டம் தோன்றியது என்பார்

---

1. சோ. ந. கந்தசாமி, பௌத்தம், ப. 164.
2. கோ. சுப்பிரமணியன், வள்ளுவர் கண்ட அரசியலும் மனுவும், வள்ளுவர் வகுத்த அரசியல், ப.95.

பீசுமர். பிரபஞ்சத்தையும், மனித குலத்தையும் காப்பதற்காகத் தருமத்தின் உருவாக அமைந்ததே தண்டம் என்பார் மனு."[1] அதனால் தம்காலத்தில் நிலவிய அரசியலை இராஜதர்மம் (அரசியல் அறம்) என்னும் பெயரில் மனு விளக்கியுள்ளார்.

தருமம் என்னும் சொல் வடமொழியில் விரிந்த பொருளுடையதாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனினும் தருமம் எனும் சொல்லைக் கடமை என்னும் பொருளில் மனு பயன்படுத்தியுள்ளார். ஒருசில இடங்களில், 'அறம்' எனும் பொருளில் அதனைப் பயன்படுத்தியுள்ளார். மனிதன் பல்வேறு கடமைகளைச் செம்மையாகச் செய்து அதன்மூலம் அறவாழ்வை, ஆன்மீகப் பேற்றை அடைவதே வாழ்க்கையின் குறிக்கோளாகச் சுட்டப்படுகிறது.

## அரசன்

மனுவின் காலத்தில் அரசாட்சியின் தலைமை முடியரசனே. ஆதலால் அரசனின் தோற்றம், செங்கோல் ஆகியன பற்றித் தருமசாத்திரம் விளக்குகிறது. சமூகம் சிறப்புடனும் ஒழுங்குடனும் செயல்பட மன்னன் தேவை. ஏனெனில் மன்னன் உலகில் இல்லை என்றால் வலியோரிடம் எளியோர் அச்சத்தால் அழிந்துபோவர். அதனால் உலகம் அழியாமல் இருக்கும் பொருட்டு இறைவன் மன்னனைப் படைத்தான் (மனு. 7: 1). இதனை, தம்தம் தருமத்தை நடத்துகிற நான்கு வருணத்தாரையும் நான்கு ஆசிரமத்தாரையும் காப்பாற்றுவதற்காக அரசன் பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டான் (மனு. 7: 35) என்ற கருத்தால் அறியலாம்.

இந்திரன், வாயு எமன், சூரியன், நெருப்பு, வருணன், சந்திரன், குபேரன் ஆகிய திசைக்காவலர்களின் வடிவமும் தன்மையும் உடையவன் அரசன் (மனு. 7: 4,5). தன் திறமையினால் சூழ்நிலைகளுக்கேற்ப அவ்வப்போது நெருப்பாகவும், காற்றாகவும், சூரியனாகவும், இந்திரனாகவும் இருப்பான். இவ்வாறு திசைக்காவலர்களான தேவர்களின் கூட்டமே அரசன் என்பது மனுநீதி.

வள்ளுவரும் 'இறைமாட்சி' என்ற அதிகாரத்தில் அரசனின் சிறப்பியல்புகளைப் பற்றிக் கூறியுள்ளார். இவ்விடத்தில் மனுவும் வள்ளுவரும் வேறுபடுகின்றனர். இறைமாட்சியில் காணப்பெறும் அரசன் இறை என்று வைக்கப்படும் தகுதியை உடையவன் என்பதை,

---

1. எஸ். இராமகிஷ்ணன், கம்பன் கண்ட அரசியல் , ப. 72.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" (குறள். 388)

என்று குறள் புலப்படுத்துகிறது. இக்குறளுக்குப் பரிமேலழகர், 'அரசன், உலகபாலர் உருவாய் நின்று உலகம் காத்தலின் இறை என்றார்' என்று உரை கூறியுள்ளார். 'இறை என்ற சொல்லுக்குத் தலைமை, தலைவன் எனப் பொருள் கொள்ளலாம்'. அரசனது தலைமைச் சிறப்பைச் சுட்டிக்காட்ட இச்சொல்லை அவர் ஆண்டிருக்கலாம். இறை என்ற சொல்லுக்குத் தெய்வம் என்ற பொருளும் உண்டு. அரசர் தெய்வம் என்றும் வைக்கப்படுவர் என்னும் கருத்தையும் சுட்டிக்காட்ட வள்ளுவர் இச்சொல்லைப் பயன்படுத்தி இருக்கலாம். எனவே திருவள்ளுவர் மன்னனை இறையாகக் கருதாமல் இறையை ஒப்ப உயர்ந்தவனாக மட்டுமே கருதியுள்ளார் எனக்கூறலாம். அதனால் அரசரைச் சாதாரண மனிதர்களுள் ஒருவராக அல்லாது கடவுளாகத் திருவள்ளுவர் காணவில்லை என்று திட்டவட்டமாகக் கூறலாம்.

தருமசாத்திரம் கூறும் அரசன் உலகின் உயர்ச்சிகளோடு, திசைக்காவலரான தேவர்களின் கூட்டமாகத் தெய்வாம்சமும் பெற்றவனாக இவ்வுலக வாழ்வில் காணாதவனாக இருக்கிறான். ஆனால் வள்ளுவர் கண்ட அரசன் உலகிற்கு உரியவனாக விளங்குகிறான். அதனால் வள்ளுவரது அரசியல் இன்றைய அறிஞர்கள் போற்றும் நடைமுறை அரசியலாகத் திகழ்கிறது எனலாம்.

அரசன்—ஒளி

"உலகம் காக்கின்ற வேந்தரிடத்து ஓர் ஒளி உண்டென்றும், அவ்வொளியே உலகினைக் காக்கும் பெருந்திறமென்றும், அவ்வொளியே அவர்மாட்டுள்ள தெய்வத்தன்மையை உணர்த்துமென்றும் தமிழ்நூல்கள் கருதுகின்றன."[1] இக்கருத்திற்கு ஒப்ப மனுநெறியும்,

"அரசன் மற்ற மனிதர்களை விட ஒளி உடையவனாகவும், ஆட்சித் திறன் உடையவனாகவும் திகழ்கிறான்" (மனு. 7: 8)

என்று கூறுவது அறியத்தக்கது.

"ஏறிட்டுப் பார்க்கும் எவரையும் அவரது கண்ணையும் மனத்தையும் காந்தச் செய்வதால் யாரும் அரசனுக்கு எதிரே நின்று பார்க்கக்கூடாதவராகின்றனர்" (மனு. 7: 6)

1. ரா.பி. சேதுப்பிள்ளை, திருவள்ளுவர் நூல்நயம், ப.56

என்றும் எடுத்துரைக்கின்றது. மேலும் இத்தகு அரசன் வயதில் சிறியவனாக இருப்பினும் அவனை மனிதனென்று அவமதிக்கக்கூடாது (மனு. 7: 8) என்றும் வலியுறுக்கிறது.

"முடிசூடிக்கொள் பவனுக்கு இன்ன வயது இருக்கவேண்டும் என்ற வரையறை இல்லை. சங்ககாலக் கரிகாற்சோழன் ஐந்து வயதில் முடிசூட்டப் பெற்றதும் பல்லவ மன்னன் பன்னிரண்டு வயதில் முடிசூட்டப்பெற்றதும், இரண்டாம் இராசாதிராசன் இரண்டு வயதில் அரசபதவி ஏற்றதும்"[1] நினைக்கத்தக்கன. தலையலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பகைவரை வென்று திரும்பிய போது, "தாலிகளைந்தன்றும் இலனே"[2] என்று புலவர் வியந்துள்ளார். அதாவது நெடுங்செழியன் ஐம்படைத்தாலியை நீக்காத சிறுவனாக இருந்தான். இவ்வாறு அரசன் அகவையில் சிறியனேயாயினும் அவனிடம் உள்ள ஒளியால் அவனைப் போற்றவேண்டும் என்பது மனுநெறி.

இறைமாட்சி கூறும் வள்ளுவரும் அரசன் அகவையில் சிறியனே யாயினும் அவனிடம் உள்ள ஒளியால் அவனைப் போற்றவேண்டும் என்பதை,

"இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்" (குறள். 698)

என்று தெரிவித்துள்ளார். மனு மன்னனை இளையர் என்று இகழ்தல் கூடாது என்று கூறியுள்ளார். தெய்வப்புலவர், இளையர், இனமுறையர் என இகழக்கூடாது என்று கூறி யிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இக்கருத்திற்கு,

"உறங்குமாயினும் மன்னவன் தன்ஒளி
கறங்கு தென்திரை வையகங் காக்குமால்
இறங்கு கண்ணிமை யார் வழித்தேயிருந்து
அறங்கள் வெளவ அதன்புறம் காக்கலார்"[3]

என்ற பாடலும் சான்றாகத் திகழ்கிறது. அரசன் உறங்குகின்ற காலத்தும் அவனுடைய ஒளி உலகத்தைக் காக்கும் என்ற உண்மையைப் புலப்படுத்துகிறது.

---

1. மா. இராசமாணிக்கனார், தமிழக ஆட்சி, ப. 33.
2. புறம்., 77.
3. சீவக., 248.

## செங்கோன்மை

"குடிமக்களின் உயிரையும் உடைமையையும் பாதுகாப்பது அறம் எனப்பட்டது. அறத்தைப் பாதுகாப்பது அரசனது கடமை."[1] ஆதலால் குற்றத்தையும் குணத்தையும் சீர்தூக்கி ஆராய்ந்து செம்மையாக ஆட்சிசெய்வதே செங்கோன்மையாகும். இச் செங்கோலே, அறம் என்று குறிக்கப்படுகிறது.

> "உயிர்கள் அனைத்தையும் புரக்கும் பொருட்டு அறத்தின்
> வடிவமானதும், ஒளிபொருந்தியதுமான செங்கோலைப்
> பிரமன் படைத்தான்" (மனு. 7: 14)

என்கிறது மனுநீதி. இச்செங்கோல் எல்லா மக்களையும் ஆணையிடுகிறது; காக்கிறது; மற்றவர் தூங்கும் போது அது விழிப்புடன் இருக்கிறது. அதனால் அறமே செங்கோல் என்பதை,

> "தண்டமானது எல்லாப் பிரசைகளையும் ஆஞ்ஞை செய்கிறது.
> எல்லாரையும் காப்பாற்றுகிறது. தூங்குகின்றவர் களிடத்தில்
> விழித்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் தருமத்தையே
> தண்டமாகப் பெரியோர்கள் கருதுகிறார்கள்" (மனு. 7: 18)

என்று மனுநூல் எடுத்துரைக்கிறது. செங்கோல் செலுத்தும் நாட்டில் கருத்த மேனியும் சிவந்த கண்களுமுடைய, பாவத்தைப் போக்குவதுமான தண்டநீதியாகிய தெய்வம் சஞ்சரிக்கிறது. ஆதலால் அங்கு வாழும் மக்கள் துயருறார் (மனு. 7: 25). இவ்வாறு தண்டநீதி செலுத்தப்பட்டால் குடிகள் இன்புறுவர்; கோல் சாய்ந்தால் யாவும் அழிவடையும் என்று மனுநீதி கூறுகிறது

திருக்குறளிலும் செங்கோன்மை என்ற அதிகாரம் இடம்பெற்றுள்ளது. யாரிடத்தும் கண்ணோடாது நடுவு நிலைமையுடன் ஆட்சிபுரிவதே செங்கோன்மை (குறள். 541) என்று கூறிய வள்ளுவர்,

> "அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
> நின்றது மன்னவன் கோல்" (குறள். 543)

என்றும் சுட்டியுள்ளார். செங்கோல் மன்னன் நாட்டில் பருவமழையும் நிறைந்த விளைவும் ஒருசேர ஏற்படுவன. ஆதலால் அரசற்கு வெற்றி அளிப்பது செங்கோலே ஆகும் (குறள். 546). அறமே செங்கோல் என்று மனுநீதியும்

---

1. மா. இராசமாணிக்கனார், தமிழக ஆட்சி, ப. 24.

அறத்திற்கு அடிப்படையாய் அமைவது செங்கோல் என்று வள்ளுவமும் கூறியிருப்பது நோக்கற்குரியது.

செங்கோலன் நாட்டில் தண்டநீதியாகிய தெய்வம் சஞ்சரிப்பதால் மக்கள் துன்புறார் என்று மனுவும், செங்கோல் மன்னன் நாட்டில் பருவ மழையால் நிறைந்த விளைச்சல் கிடைப்பதால் மக்கள் இன்பமுடன் வாழ்வர் என்று வள்ளுவரும் கூறியுள்ளனர். இவ்வாறு செங்கோலின் சிறப்பை ஏற்றிக்கூறிய, இரு ஆசிரியர்களும் கூறும் முறையில் சிறிது மாறுபடுகின்றனர்.

## அரசனின் பண்புகள்

அரசனின் பண்புகளாக அறிவுடைமை, பெரியாரைத் துணைக்கோடல், அறிவுடையார் கேண்மை, காட்சிக்கு எளிமை, அன்பு வார்த்தை கூறல், குற்றங்கடிதல், புலனடக்கம், ஊக்கமுடைமை, துணிவுடைமை ஆகியன அறநூல்களில் கூறப்பட்டுள்ளன.

## அறிவுடைமை

"மன்னர்கள் நாடாளும்போது நாட்டின் பழக்க வழக்கங்களை அறிந்து மதித்து ஒழுகல் வேண்டும் என்பது ஓர் இந்திய மரபு; உயர்நெறி, முறையும்கூட, மனுகாணும் வேந்தனும் இம்மரபு வழிப்படுவோனாக இருக்கிறான்."[1] ஆளும் நாட்டின் பழக்கவழக்கங்களை அறியாதும் மதிக்காதும் மன்னன் ஒழுகுவானாயின் குடிமக்களின் வெறுப்பை அவன் தேடிக் கொள்வான்; குடிபழி தூற்றும் கோலன் ஆவான். குடிதழீஇக் கோலோச்சும் மன்னன் உலகத்தோடு ஒட்ட ஒழுக வேண்டுமாயின் அறிவுடையவனாக இருத்தல் வேண்டும். அதனால்,

> "முறையாய் மூன்று வேதம் கற்றோரிடம் வேதத்தையும்
> அறநூல் அறிந்தோரிடம் நீதியையும், தர்க்கநூலாரிடம்
> விவாத அறிவையும், மொழிவல்லாரிடம் மொழிகளையும்
> அரசன் கற்க வேண்டும்" (மனு. 7: 43)

என்று மனுநெறி வலியுறுத்துகிறது.

வள்ளுவரும் அரசனுக்குக் கல்வி வேண்டும் என விதித்துள்ளார். அரசர் கற்கவேண்டியன அறநூலும் நீதிநூலும், யானை, குதிரை, தேர்,

---

1. தி. முருகரத்தனம், குறள் கூறும் இறைமாட்சி, ப. 85.

படைக்கலமென்று இவற்றின் நூல்களும் முதலாயின என்று பரிமேலழகரும் உரை கூறியுள்ளார். இறைமாட்சியில் கல்வி (குறள். 383) என்னும் சொல்லிற்கு 'அருமறை முதலாக அறநீதி முடிவாகத் தாம் கற்கத் தகுந்தவற்றைக் கற்கும் கல்வி' என்று காளிங்கர் பொருள் குறித்துள்ளார். இதனால் கல்வி, கேள்விகளால் அறிவு நிரம்பப்பெற்ற அரசனே நாடாளும் தகுதி உடையவனாகக் கருதப்படுகிறான் என அறியலாம்.

## பெரியோரைத் துணைக்கோடல்

மக்களை நன்னெறியில் செலுத்தும் அரசன் பெரியோரைத் தனக்குத் துணையாகக் கொள்ளவேண்டும். பெரியோரைத் துணைக்கோடலால் அறிவு, அறனறிதல், இறைஞானமறிதல், முறைசெய்தல், போர்க்கலை ஆகிய பெரும் பண்புகளைப் பெற்று அச்சமின்றி ஆட்சி நடத்துவர் என எதிர்பார்க்கலாம். அரசன் துணைக்கொள்ளத்தக்க பெரியயோர்களாக அமைச்சர், தந்திரி (மனு. 7: 28); புரோகிதர், ரித்துவிக் (மனு. 7: 78); அந்தணர் (மனு. 7: 38); மேலோர் (மனு. 7: 40) என்போரை மனு குறிப்பிட்டுள்ளார். அதோடு பெரியோரின் பண்புகளையும் விளக்கியுள்ளார்.

அமைச்சரும் தந்திரியும் அரசனுக்கு ஆட்சிப்பணியில் அறிவுரை வழங்குவோராவர். இவர்கள் துணையின்றி மன்னன் கோலோச்சக் கூடாதென மனு எச்சரித்துள்ளார். அவ்வாறே, மன்னன் தனக்கென்று புரோகிதனையும் ரித்விக்கையும் நியமித்துக்கொள்ள வேண்டும். இவர்கள் முறையே, அரசனுக்குப் போர்க்கலை, தீவளர்த்தல் போன்ற கடன்களைக் கற்பித்தும், நடத்தியும் வைப்பர் (மனு. 7: 78). அந்தணரைத் துணையாகக் கொண்டால் அவர்கள் அசுவமேதம் முதலிய வேள்விகளை நடத்தி அறிவுரை வழங்குவதோடு, அறச்சாலைகளையும் கவனிப்பர் (மனு. 7: 79).

மனு குறிப்பிட்டுள்ள பெரியார்களுள் சிறப்பிடம் பெறுபவர் மேலோர் ஆவர். மேலோர் எனப்படுபவர் நீதிநெறி அறிந்தவர்களாக இருத்தல் வேண்டும். அதனால்,

> "மன்னன்நீதிகள்அறிந்தவனாயினும்,எதன்தீர்ப்பையும் மேலோரிடம் வணங்கிக் கேட்டறிவது நலம். ஏனெனில் மேலோரின் துணிபுகள் ஆக்கந்தருவனவாகும்" (மனு. 7: 39)

என்று எடுத்தியம்பிய மனு மேலோரின் துணியின் வழி நீதி வழங்கிய மன்னர் பலர் நன்மை பெற்று உயர்ந்ததையும் மேலோரின் துணைஇழந்ததால் தீமை

பெற்று நலிந்ததையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"மேலோரிடம் பணிவிலாத வேனன், நகுடன், சுதர்சன், யவனன், சுமுகன், நிமி ஆகியோர் நாட்டையிழந்து தாமும் அழிந்து போயினர்" (மனு. 741).

"பிருகு, மனு இவ்விரு பேரரசர்களும் மேலோரிடம் கொண்டிருந்த பணிவன்பினால் நாட்டையும், குபேரன் அளவிறந்த செல்வத்தையும், விசுவாமித்திரன் பிராமணத் தன்மையையும் பெற்றார்கள்" (மனு. 7: 42).

என்பதிலிருந்து மேலோரைத் துணைக்கோடலோடு அவர்களிடம் பணிவும் அன்பும் காட்டவேண்டும் எனத் தெரிகிறது. மேலோரைப் பிழையாமை நன்று என்பதை மனு இவ்வாறு சுட்டியிருக்கலாம். மேலோரிடம் பணிவன்பு காட்டல் மன்னர்களுக்கு மட்டுமே உரிய பண்பன்று. பொருளுடையோரும் அருளுடையோருங் கூட மேலோரிடம் பணிவன்பு காட்டி உய்திபெற்ற செய்தியும் புலப்படுகிறது.

மனு கூறிய பெரியோர்களைப் போலவே சங்ககாலத்தில் வாழ்ந்த அறிவுசான்ற புலவர்களும் மன்னர்களுக்குத் துணைபுரிந்தனர். "மதுரைக்காஞ்சி கொண்ட தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைச் சேரன், சோழன், எழினி, எருமையூரன், இருங்கோவேள், பொருநன் ஆகிய ஏழு அரசர் ஒருங்குகூடிப் பொருதகாலத்தும், மாங்குடி மருதன் போன்ற சிறந்த புலவர்களைத் துணைக்கொண்டமையின் வென்றமையும், பாரியை மூவேந்தரும் முற்றுமையிட்ட காலத்துக் கபிலரால் பறம்புமலை உணவும் நீரும் பெற்று உய்ந்தமையும் கருதுதற்குரியன."[1]

வள்ளுவரும் பெரியோர் நட்பின் பயனை,

"*தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்*
*வன்மையு ளெல்லாந் தலை*" (குறள். 444)

என்று குறளில் வடித்துள்ளார். பெரியோரை வணங்கவேண்டும் என்று மனு கூறியிருக்கப் பெரியோரைத் தமராக ஒழுகவேண்டும் என்று வள்ளுவர் கூறியுள்ளார். இத்தகு பெரியோரால் மன்னர் பலர் பண்பட்டதையும் தருமசாத்திரம் விளக்கி நிற்கின்றது (மனு. 7: 41, 42). இங்ஙனம் பெரியோர்

1. கு. மதுரை முதலியார், திருவள்ளுவர் அரசு, ப. 68.



Dr. T. P. M. LIBRARY ★ MADURAI-625 021.

நட்பால் பெருநன்மைகள் பல விளையும் என்பதை இரு அறநூலார்களும் கூறுகின்றனர்.

## அறிவுடையோர் கேண்மை

நல்லாட்சி நடத்த அரசன், கல்வி, வயது ஆகியவற்றில் முதியராயும், அகமும் புறமும் தூய்மை உடையவராயும் உள்ளவரைப் போற்றவேண்டும். ஏனெனில் மேலோரைப் போற்றுவோனுக்கு அரக்கராலும் அச்சம் ஏற்படாது (மனு. 7: 38) என்று மனுதருமம் வலியுறுத்துகிறது. இவ்வாறே வள்ளுவமும் அறிவுடையாரின் கேண்மையையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும்,

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்" (குறள். 441)

" உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்" (குறள். 442)

என்ற குறட்பாக்களில் புலப்படுத்தியுள்ளார். அரசன் ஓர் அரும்பெரும் தொழிலைச் செய்யமுயலும் முன் தன்னைச் சுற்றியுள்ள அறிவுடையாரில் அத்தொழில்முறை நூலறிவோடு நுண்ணறிவும் அமையப்பெற்றவர்களுடன் ஆலோசித்து அவர்கள் கருத்தைத் தழுவியே தான் எண்ணிய செயல்களைத் திண்ணமாய் முடிப்பான். ஆதலால் அறிவிலும் அகவையிலும் முதிர்ந்தோர் கேண்மையை வரவேற்பதில் இருநூலாரும் ஒன்றுபடுகின்றனர். இத்தகு மேலோரைப் போற்றவேண்டும். அவர்களுடன் நட்புக்கொள்ளவும் வேண்டும் என்பதே இருநூலாரின் கருத்து.

## காட்சிக்கு எளிமை

காட்சிக்கு எளிமை அரசர்க்குரிய பண்பென மனுநூல் விளக்குகிறது. தருமசாத்திரக் காலத்தில் அரசனே அதிகாரமுடையவன். முறை வழங்கும் முதல்வனாகவும் குறைதீர்க்கும் குணமுடையவனாகவும் அவன் திகழ்ந்தான். தன்குடி மக்களுக்கு அவனே ஆதரவானவன். அதனால் முறை வேண்டினார், வலியரால் நலிவடைந்தார், குறைவேண்டினார், வறுமையில் இரந்து நின்றார் போன்றோர் அரசனை, உடனே தடையின்றி விரைந்து காணுமாறு அரசன் காட்சியளிக்க வேண்டும். இதனை,

" வைகறையில் துயிலெழுந்து, காலைக்கடன்,
இறைவழிபாடு, அந்தணரைப் பேணல் ஆகியன

முடித்து, அத்தாணி மண்டபம் செல்லவேண்டும்'' (மனு. 7: 145)

"அங்கமர்ந்து காணவரும் மக்களுக்குக் காட்சிக்கு
எளியனாய், அவர்களுடன் அன்பு வார்த்தையாடி
அனுப்பிய பின்னர் தனது அமைச்சர்களுடன்
நாட்டு நிர்வாகம் குறித்துச் சிந்திக்கவேண்டும்'' (மனு. 7: 146)

என்ற பகுதிகள் தெரிவிக்கின்றன. குடிமக்களின் தேவைகளையும் குறைகளையும் முறைகளையும் நேரில் கேட்டறிந்து, குறை களைந்து பேணுதலே மன்னனின் அன்றாடக் கடமைகளுள் முதற்கடமையாக இருந்தது என்பதை அறிகிறோம். இம்மாண்புகளை,

"காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்'' (குறள். 386)

என்ற குறளிலும் கூறப்படுதல் காணலாம். இவ்விரு பண்புகளும் இன்றியமையாதவை என்று மனுவும், இவ்விரு பண்புகளை உடைய மன்னனின் நாடு உலகோரால் புகழப்படும் என்று வள்ளுவரும் கூறியுள்ளனர். ஆதலால் மக்கள் அன்றாடம் அணுகுவதற்கு அரசன் அரியனாக இல்லை என்பது தெளிவு. இத்தகு, "காட்சிக்கெளிமை, மன்னவனை மக்களுக்கு நெருக்கமுள்ளவன் ஆக்குகின்றது. குடிகளின் துன்ப, துயரங்களை நேரில் கண்டு தீர்வுகாண வழிகோலுகிறது. குடிமக்களுக்கு மன்னவன் நம்மவன்; நமக்காக ஆள்பவன் என்ற உணர்வு இதனால் தோன்றும். அந்த உணர்வே அவர்கள் வாழ்க்கைப் பயிருக்கு வான்துளி''[1] என்ற அறிஞர் கருத்தும் இவண் நோக்கற்குரியது.

## இன்சொல் கூறல்

இன்சொற் கூறலை மனு அன்பு வார்த்தை என்றும் வள்ளுவர் கடுஞ்சொல் அல்ல என்றும் வேறுபட்ட சொல்லாட்சிகளைப் பயன்படுத்தியிருந்தாலும் அவை புலப்படுத்தும் பொருள் ஒன்றே.

காவலன் காட்சிக்கு எளியவனாக இருந்தது போலவே, தன்னை நாடிவந்த மக்களிடம் தாயினும் சாலப்பரிந்து அன்புடன் இன்சொற் கூறினான். இது மன்னனுக்கே உரிய உயர் பண்பாகச் சுட்டப்பட்டுள்ளது. மன்னன் அன்பு வார்த்தை கூறாது வன்சொற் கூறினால் குறைவேண்டவும்

1. தி. முருகரத்தனம், குறள் கூறும் இறைமாட்சி, ப. 63

முறைவேண்டவும் இயலாது. மன்னன் பொறுமை அற்றவனாய், செவி கைப்பச் சொற்கூறினால் மக்கள் அஞ்சி ஓடுவர்.

> "மக்களுக்குக் காட்சிக்கு எளியனாய் அவர்களுடன் அன்பு
> வார்த்தையாடி அனுப்பினான்" (மனு. 7: 146)

என்று மனு கூறுகின்றார். மன்னன் கடுஞ்சொல் கூறாமையால் நாட்டுமக்கள் பயனடைவர்; மகிழ்வர். அதோடு நாடாளும் மன்னனுக்கும் நன்மை உண்டு என்பதை, 'மீக்கூறும் மன்னன் நிலம்' (குறள். 386) என்று வள்ளுவம் உணர்த்துகிறது.

மேற்குறித்தவற்றால் மனுவும் வள்ளுவரும்கூறும் அரசன் நாட்டுமக்களோடு நெருங்கிய உறவுடையவனாக இருத்தல் வேண்டும் என்பது தெளிவு. ஆனால் வள்ளுவர் கூறும் அரசனின் உறவு, பண்பும் பயனும் உடையதாக இருந்திருக்கிறது. மக்கள் நலமே மன்னனின் நலமாதலால் எளிமையும் இனிமையும் மன்னனின் இன்றியமையாப் பண்புகளாகக் கருதப்படுகின்றன.

## குற்றங்கடிதல்

அறிவுடைய அரசனேயாயினும் குற்றங்கடிதல் வேண்டும். அதுவே பண்படுதலுக்கு வழியாகும். குற்றங்கடிதலாவது, காமம், சினம் இவைகளை அரசன் தன்கண் நிகழாமல் கடிதல் வேண்டும். ஏனெனில்,

> "காமத்திற் பற்றுள்ள மன்னன் அறம் பொருள் இரண்டையும்
> இழப்பான். சினம் மிகுந்த அரசன் தன் தேகத்தையே
> இழந்து போவான்" (மனு. 7: 46)

என்று எச்சரிக்கை செய்துள்ளார் மனு. வள்ளுவரும்,

> "செருக்குஞ் சினமுஞ் சிறுமையும் இல்லார்
> பெருக்கம் பெருமித நீர்த்து" (குறள். 431)

என்று மொழிந்துள்ளார். பரிமேலழகர், சிறுமைக்குணமாவது காமம் என விளக்குகிறார். செருக்கு என்பது பிறர்மனை நயத்தில் என்கிறார் மணக்குடவர். உரையாசிரியர்களின் நோக்கில் பிறர்மனை நயத்தலும், சினமும், காமமும் ஆகிய இந்தக் குற்றங்கள் இல்லாதவருடைய வாழ்வில் காணும் பெருக்கம் மேம்பாடு உடையதாகும் என்பதே குறள் நெறியாகும்.

இதனால் காமம், சினம் இவையிரண்டும் ஒன்றையொன்று விஞ்சிய துயரம் தருவன. ஆதலால் அவற்றைக் கடிதல் வேண்டும் என இருநூலாரும் வலியுறுத்துகின்றனர்.

## புலனடக்கம்

"தன் மனத்தை வெல்வதே அரசனது முதலாவது கடமை என்பார் பீசுமர். காமம், வெகுளி, உலோபம், நன்மையின் நீங்கிய மானம், மதம் என்ற செல்வக்களிப்பால் ஏற்படும் செருக்கு, அளவுகடந்த உவகை ஆகியவற்றைப் பகைவர்க்கமென்று குறித்து இவற்றை நீக்கிப் பொறி அடக்க வேண்டுமென்று கௌடலியர் கூறினார்."[1] அதனால் இரவு, பகல் எப்பொழுதும் புலனடக்கம் பெறுவதே மன்னனின் வலிமையாகக் கருதப்பட்டது. இல்லையேல்,

> "காமத்தின் விளைவுகளான வேட்கை, சூதாடல், பகல்துஞ்சல்,
> வம்பாடல், பெண்களுடன் குலாவுதல், குடித்தல், இசை,
> கூத்து, பல்லியம் இவற்றில் மனம் போனபடி அலைதல்" (மனு.7: 47)

என்ற பத்துக் குணங்களையும் மன்னன் பெறுவான். அவ்வாறே சினத்தின் விளைவுகளான,

> " கோள், பொய்த்துணிவு, இரண்டகம், பொறாமை, பிறர்நலம்
> காணச்சகியாமை, பிறன்பொருள் விழைதல், காரணமின்றி ஒறுத்தல்,
> வசைகூறல்" (மனு. 7: 48)

என்ற எட்டுக் குணங்களும் வந்துசேரும். இவ்விரு வகையாலும் வரும் பதினெட்டுத் தீக்குணங்களுக்கும் காரணமான மேலோர் கூறும் தீயகுணங்களைக் களைதல் வேண்டும் என்பதே மனுநெறி.

பண்புடை வேந்தனுக்குச் சினமும் சிறுமைக்குணமும் ஆகாது என்கிறார் வள்ளுவர் (குறள். 431). சிறுமைக் குணமாவது, காமநுகர்ச்சியும், சூதும், கள்ளும், வேட்கையும் முதலாயினவற்றின் மிக்கு ஒழுகுதல் என்று பரிப்பெருமாள் விளக்குகிறார்.சினம் காக்க வேண்டும் என்று கூறிய வள்ளுவர், குற்றங்கடிதல் என்னும் அதிகாரத்தில் காமத்தைக் கடிந்துரைக்க வில்லை.

---

1. எஸ். இராமகிருஷ்ணன், கம்பன் கண்ட அரசியல், ப.73.

## ஊக்கமுடைமை

மன்னனுக்குரிய பண்புகளில் தருமசாத்திரம் வலியுறுத்தும் மற்றொரு பண்பு ஊக்கமுடைமை. இப்பண்பு மனிதர்கள் யாவருக்கும் இன்றி யமையாதது எனினும் வேந்தனுக்கு இருகாரணங்களால் வேண்டப் படுகிறது. வேண்டிய பொருளைச் சேர்ப்பதற்கும் போர் செய்வதற்கும் மன்னனுக்கு ஊக்கம் தேவை என்பதை மனுநூல் கூறுகின்றது (மனு. 9: 300).

ஊக்கமில்லையெனில் அரசன்வெற்றி பெற இயலாது. படைக்குத் தலைமை ஏற்றுப் போர்செய்யும் மனுவின் அரசனுக்கு இவ்வூக்கம் சிறப்பாக வேண்டப்படுகிறது. போர்ப்பணியைப் படைத்தலைவனிடம் ஒப்படைத்து விட்டு, அரண்மனையிலிருந்து ஆணையிடும் அரசன் அல்லன் மனுநெறி காட்டும் அரசன். அதனால் போர்ப்பணி புரியும் மன்னனுக்கு ஊக்கம் இன்றியமையாததென மனு வரையறுப்பது ஏற்கக்கூடிய கருத்தாகும்.

வள்ளுவர் ஊக்கம் பற்றி ஓர் அதிகாரம் அமைத்துள்ளார். அரசனின் பண்புகளில் ஒன்றான ஊக்கமுடைமைக்கு வள்ளுவர் தரும் சிறப்பு இதனால் அறியப்படுகிறது. 'ஊக்கம் உடைமையே நிலையான உடைமை' (குறள். 591) என்கிறார் வள்ளுவர். மேலும்,

'உள்ள முடைமை உடைமை' (குறள். 592)

'உர மொருவற் குள்ள வெறுக்கை' (குறள். 600)

என்றும் சிறப்பிக்கின்றார். இத்தகு ஊக்கமுடையவரிடம் செல்வம் தானாகவே சென்றடையும் என்பதை,

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை" (குறள். 594)

என்ற வள்ளுவத்தால் அறியலாம். இதனால் ஊக்கத் தையும் ஆக்கத்தையும் அரசனின் இருகண்களென இருநூலாரும் சிறப்பிக்கின்றனர் எனத் தெரியலாம்.

## துணிவுடைமை

உலகத்துக் குற்றமும் குணமும் ஆராயுங்கால் மயங்கக்காணாது உண்மையை ஆராய்ந்து துணிதல் நிலனாள்பவர்க்கு வேண்டும். இவ்வாறு ஆராய்ந்து துணியும் மன்னனால் ஆளப்படுகின்ற நாட்டில் மக்கள்

அச்சமில்லாத வராய் நீரேறிய பயிர்போல் செழித்து வளர்வார்கள். அதனால் கள்வர் பயமின்றி மக்கள் வாழ மன்னன் வகைசெய்யவேண்டும். கரந்து நின்றும், வெளிப்பட்டிருந்தும் அயலார் பொருளைக் கவரும் கள்வரை வேவுகாரரைக் கொண்டு கண்டறிதல் மன்னன் கடமை.

நல்லோரைப்போல் வேடமிட்டுத் திரியும் கயவரே கரந்துறையும் கள்வர். காட்டில் கரந்துறைந்து கொள்ளையிடும் வேடர் முதலியோர் மறைவான திருடர்கள் (மனு. 9: 257). பொய்த்தராசு கொண்டு வியாபாரம் செய்வோர், லஞ்சம் வாங்குவோர், ஒருவனுடைய கிரகம் போதாது என்று கூறி, அவனை மிரட்டிப் பல தானங்களைக் கற்பித்து, அவனுடைய பொருளைக் கவர்வோர், பொன் முதலிய துணிகளை இரவலாகப் பெற்று அதில் கலப்படம் செய்வோர் தனக்குப்பொருள், பிள்ளை இருக்கிறதென்று அகங்கரிப்போர், நல்லவர்போல் வேடமிட்டுப் பாவநெஞ்சினராய் இருப்போர், ரேகை, சோதிடம் சொல்லிப் பிழைப்போர், யானையைப் பழக்கிப் பிழைப்போர், போலி மருத்துவர், ஓவியர், வேசையர் ஆகிய இவர்களைப் பகிரங்கக் கள்வர் என்பர் (மனு. 9: 258–260). இவ் விருவகைக் கள்வரையும் பொதுமக்கள் அறியுமாறு தண்டிக்க வேண்டும்.

தவறு செய்தவர்களைத் தண்டித்தல் மன்னனின் கடமையாயினும் கொள்ளை, கொலை போன்ற குற்றங்களுக்குப் போதுமான தடயம் கிடைத்தாலன்றி வீணில் ஒரு திருடனைக் கொல்லக்கூடாது என்பது மனுநெறி. ஆதலால் தடயம் கிடைத்துவிட்டால் தயங்காமல் அவனைக்கொல்லலாம் (மனு. 9: 270) என்பதால் துணிவுடைமையும் வேந்தனின் பண்பாகச் சுட்டப்படுகிறது. ஊர்க்காவற்காரரும், எல்லைக்காவல் புரியும் வீரரும், திருடருக்கு உடந்தையாகவோ, உதவியாகவோ இருப்பின் அவர்களையும் மன்னன் தண்டித்தான். ஆதலால் தருமசாத்திரக்கால மன்னன் தேரா மன்னனாக, இறைமுறை பிழைத்த வேந்தனாக இல்லை என்பது தெளிவு.

வள்ளுவர், வேந்தனின் பண்புகளுள் ஒன்றான துணிவுடைமை பற்றி விரிவாக விளக்கவில்லை. ஆனால், உலகத்துக் குற்றமும் குணமும் ஆராயுங்கால் மயங்கக் காணாது உண்மையை ஆராய்ந்து துணிதல் ஒரு தலையாக நிலனாள்பவர்க்கு வேண்டும் என்று பரிப்பெருமாள் தரும் விளக்கம் மனுவின் கருத்தோடு ஒத்துள்ளது.

## அரசனின் அரண்மனை வாழ்க்கை

நாடாளும் மன்னனுக்கு வேண்டிய அறநெறிகளை எடுத்தியம்பிய மனு, அவனுடைய அரண்மனை வாழ்க்கைக்குரிய நெறிமுறைகளையும் வலியுறுத்தியுள்ளார்.

## அரண்மனை

அந்தாணி மண்டபத்தில் அமைச்சர், புரோகிதருடன் வீற்றிருந்து செங்கோலோச்சும் மன்னன் உறைவதற்கு அரண்மனை இன்றியமையாதது. அதனால் காவலும் வளமையும் பொருந்திய அரண்மனையை அரசனே அமைத்துக் கொண்டான் என்பதை,

> "அந்தப்புரம், கொல்லுலை, ஆயுதச்சாலைகளுடன் வெளிச்சுவர் உடையதாயும், பழமரங்களை உடையதாயும், வாவி உடைய தாயுமுள்ள அரண்மனையை அமைக்கவும்" (மனு. 7: 76)

என்று மனுதருமம் புலப்படுத்துகிறது. குடிகளைப் பாதுகாக்கும் மன்னனே ஆனாலும் அவனுக்கும் பாதுகாப்புத்தேவை என்பதை அறிந்த மனு, சுற்றுப்புறச்சுவரால் புறக்காப்பும், கொல்லுலை ஆயுதச்சாலைகளால் அகக்காப்பும் உடையதாக அரண்மனை அமையவேண்டும் என்று கூறுகிறார். அதோடு ஐம்புலன்களுக்கும் விருந்தளிக்கும் வகையில் இயற்கை வளமுடையதாகவும் படைத்துக்காட்டியுள்ளார்.

## மன்னனின் திருமணம்

நல்லறங்களை மேற்கொள்ளும் மன்னன் இல்லறம் பேணலும் வேண்டும். ஆனால் மன்னன் திருமணம் செய்துகொள்ளத் தக்க வயது வரையறை பற்றி மனு குறிப்பிடவில்லை. அரண்மனையை அமைத்துக்கொண்டபின் திருமணம் செய்துகொள்ளலாம். மன்னனின் மணநெறி பற்றி,

> "அரண்மனையிற் புக்க பின்னர் ஒத்தகுலம், எழில், குடிப்பிறப்பு, குணம், மெல்லுடல், இவற்றுடன் கூடிய பெண்ணை மணந்துகொள்ளவேண்டும்" (மனு. 7: 77)

என்று மனுநூல் கூறுகிறது. அரசபதவியை ஏற்றபின்னரே மன்னன் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பது தெளிவு.

### நலம்பேணல்

மக்களின் நலங்கருதும் மன்னன் தன் நலத்தையும் பேணல் வேண்டும். ஆதலால் அரசனால் நியமிக்கப்பட்ட பணியாளர்களே மடைப்பள்ளியில் பணியாற்றினர். அவர்களால் படைக்கப்பட்ட நல்லுணவை நஞ்சகற்றும் மந்திரங்களைக் கூறி மன்னன் உண்டான். நஞ்சகற்றும் மூலிகைகளையும் உணவில் சேர்த்துக்கொண்டான். இரத்தினங்களையும் கையில் அணிந்திருந்தான். மன்னன் உண்ணும்பொழுது பணிப்பெண்கள் நறுமணப் புகை, விசிறி, சாமரை, நன்னீர் இவற்றால் உபசரிப்பர். உண்டபின் அந்தப்புரத்தில் தனது பெண்களுடன் சிறிதுநேரம் தங்கியிருப்பான். (மனு. 7: 217–222).

## பொழுதுபோக்கு

அரசுப்பணிகளில் மூழ்கிய மன்னன் அவற்றிலிருந்து விடுபடுவதற்குச் சில மாற்றங்களை நாடினான். மாலையில் இறைவழிபாடு நடைபெறும். பின் இராவுணவு உண்டபின் இசை, கூத்து, பல்லியம் இவற்றைக் கண்டுகளிக்கும் மன்னன் அந்தப்புரத்தில் துயின்று வைகறையில் துயில் எழுவதாக மனு குறிப்பிட்டுள்ளார் (மனு. 7: 225)

### ஆட்சி

“அரசு என்பதிலிருந்து வேறுபட்டதே ஆட்சி என்பதாகும். அரசு பெற்ற உருவமே ஆட்சி எனலாம். அரசே தன்னிடம் இயல்பாக அமைந்த அதிகாரத்தை ஆட்சி எனப்படும் ஆளுங் கணத்துக்குத் தந்து செயல்படுகிறது. இவ் ஆளுங்கணம் வரலாம், மாறலாம், போகலாம். ஆனால் அரசு நிலையானது, மாறாது. சுருங்கக்கூறின் அரசின் கையாள் போன்று இருந்து பணிபுரிவதே ஆட்சி.”[1] ஆளுங் கணங்களான அங்கங்கள், அரண், அமைச்சு, தூது, அரசலுவலர், ஊராட்சி, நகராட்சி பற்றியும் தருமசாத்திரமும் வள்ளுவமும் விரிவாகப் பேசுகின்றன.

### அங்கங்கள்

> “ மன்னன், அமைச்சன், பட்டினம், நாடு, கருவூலம், படைகள்,
> நட்பு இவ்வேழு, பிரகிருதிகளும் ஓர் அரசின் அங்கங்களாக”
> (மனு. 9: 294)

இருத்தல்வேண்டும் என்பது தருமநெறி. இவ்வாறே மன்னனுக்குரிய

1. தி. முருகரத்தனம், குறள்கூறும் இறைமாட்சி, ப. 38.

அங்கங்களை,

> "படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
> உடையான் அரசரு ளேரு" (குறள். 381)

என்ற குறளும் வகுத்துரைக்கிறது. மன்னன் உட்பட ஏழு அங்கங்களை மனு கூறியிருக்க, மன்னன் இல்லாமல் ஆறு அங்கங்களென வள்ளுவர் தெரிவித்துள்ளார். இதனால் அங்கங்கள் ஆறென்பது தெற்றெனப் புலனாகின்றது. ஆனால் மனு கூறியுள்ள, பட்டினத்தை வள்ளுவர் கூறவில்லை. வள்ளுவர் கூறிய அரணை மனு கூறவில்லை. இவற்றுள் மனுதருமம் கருவூலம் என்றதைக் கூழ் என்றும், நாடு என்றதைக் குடி என்றும் வள்ளுவர் கூறினார். மன்னனை ஓர் உறுப்பாக மனுநீதியார் கூற, இவர், 'உடையான்' என உடம்பொடு புணர்த்தலால் அரசனை ஓரங்கமாகக் கூறினார் எனலாம். அன்றியும் மனுநீதியார், அரசியலுக்குரிய உறுப்புக்களை ஓதினார். வள்ளுவர், அரசனுக்குரிய உறுப்புக்களை ஓதினார் என்று வேறுபாடு காணலாம்.

## அரண்

ஓர் அரசனுக்கு இன்றியமையாது வேண்டப்படும் ஆறு அங்கங்களுள் ஒன்று அரண். 'அரண் என்பது கோட்டை.'[1] பகைமன்னர்களிடமிருந்து தம் நாட்டு மக்களைப் பாதுகாக்கக் கோட்டைகளை அமைத்திருந்தனர். "அரண் என்பது காவல் என்ற பொருளையும் தரும் சொல்லாகும். அரசமாளிகைகளை இன்றும் அரண்மனை என்று சொல்லும் மரபுண்டு. 'எம் அம்பு கடிவிடுதும் நும் அரண்சேர்மின்' என்ற பாடலும் காப்பான இடம் என்ற பொருளையே தருகிறது. அரசர்க்குரிய தலைநகரங்களும் அவர்தம் மாளிகைகளும் அரண்களைப் பெற்றிருக்கும். அவை சிற்றரண், பேரரண் என்று இருவகைப்படும். சிற்றரணைக் குறும்பெனக் குறிப்பர். பேரரணை அருப்பம் எனப்பேசுவர்."[2] அவற்றைக் கோட்டை என்றும் குறிப்பர். மனுவின் காலத்தில் நகரைச்சுற்றிக் காவற்கோட்டைகள் அமைந்திருந்தன. அவை:

1. பன்னிரண்டு முழ உயரமுள்ள கற்கோட்டை
2. ஆழமான நீரகழி

---

1. ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழர் வீரம், ப. 47
2. அ.க. நவநீதகிருட்டிணன், வள்ளுவர் சொல்லமுதம், ப. 96.

3. ஒரு யோசனை தூரம் வளைந்திருக்கும் காடு

4. நால்வகைப் படைகள்

5. ஐந்து யோசனை தூரம் சுற்றிலும் நீரில்லாத மண்பரப்பு

6. மலையரண் (மனு. 7: 71)

எனும் இவற்றில் ஏதேனும் ஒன்று அரசனுடைய தலைநகரைச் சூழ்ந்திருத்தல் வேண்டும். இவற்றுள் மலையரண் உயர்ந்தது. இவ் அரண்களில்,

| | | |
|---|---|---|
| கற்கோட்டை | – | பெருச்சாளி முதலியவற்றாலும் |
| நீரகழி | – | முதலை முதலியவற்றாலும் |
| காடு | – | குரங்கு முதலியவற்றாலும் |
| படைகள் | – | வீரர்களாலும் |
| மண்பரப்பு | – | மிருகங்களினாலும் |
| மலையரண் | – | தேவர்களாலும் |

நிறைந்திருத்தல் வேண்டும் (மனு. 7: 72) என்கிறது மனுநூல். இந்த அரண்களில் வாழும் பிராணிகள் வேட்டையாடப்படாமல் இருந்தால் அரசன் பகைக்கு அஞ்சவேண்டியதில்லை. இத்தகு கோட்டைக்குள் படைக்கலங்கள், பொருள், தானியம், குதிரை, யானை, அந்தணர், பொறிஞர், புல், வைக்கோல், தண்ணீர் நிறைந்திருக்கவேண்டும் (மனு. 7: 75) என்று மனு மொழிந்துள்ளார்.

அரணுள் எல்லாப்பொருளும் கிடைக்கப்பெறல் வேண்டும். அதோடு யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நால்வகைப்படைகளை அமைத்து வலிமைபெறச் செய்தல்வேண்டும் என்ற கௌடலியர் கருத்தும் நோக்கற்குரியது."[1] புறநானூறும் கோட்டை பற்றிய செய்திகளைப் பின்வருமாறு கூறுகிறது.

"நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி
வான்தோய் வளைபுரிசை விசும்பின்
மீன்பூத் தன்ன ஒருவ ஞாயிற்
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை
அருங்குறும் புகுத்த கானப்பேரெயில்."[2]

---

1. இரா. வேலு, திருக்குறள் கௌடலியம் – ஒப்பாய்வு, ப. 112.
2. புறம். 21: 2–6

வள்ளுவர் நாட்டிற்குப் பெருங்காவலாய் அமைந்த கோட்டைகள் நான்கு என்று கூறுகிறார். அவை நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என்பன.

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடைய தரண்" (குறள். 742)

அரண் பற்றிய செய்தியை இரு அறநூலாரும் குறிப்பிடுகின்றனர். ஆனால் மனு கூறிய அரண், அரசனுடைய தலைநகரைச் சுற்றியிருக்கும் காவற்கோட்டையைக் குறிப்பதாகும். அரண்களில் பெருச்சாளி, முதலை முதலியன வாழ்ந்திருத்தல் வேண்டுமென மனு கூறியிருப்பது அரணுக்கு அரண் செய்வதாக அமைந்துள்ளது. ஆனால் வள்ளுவர் கூறியிருப்பது நாட்டரண் ஆகும். பகைவர் படையெடுப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முயல்வார்க்கு அவ்அரணே சரணாய் அமைவது; படை வலியுடையார்க்கும் அஃது இல்லார்க்கும் இன்றியமையாதது.

ஆனால் மனுவும் வள்ளுவரும் கூறிய அரண் பற்றிய கருத்துக்கள் இந்த இருபதாம் நூற்றாண்டுக்கு அவ்வளவாகப் பொருந்தாதவை என்று கூறலாம். ஏன் என்றால் இன்று வளர்ந்திருக்கின்ற போர் முறைகள் அரண் என்ற பாதுகாப்பில் அடங்குகின்றனவாக இல்லை. விமானத்தில் வந்து குண்டு வீசுகின்ற போர்முறையும், இருந்த இடத்தில் இருந்துகொண்டே நூற்றுக்கணக்கான மைல்கள் கடந்து குண்டுகளை எறிந்து அழிக்கின்ற அளவுக்குத் திறம் பெற்ற கொடுமைகளும் மலிந்துள்ள இக்காலத்தில் நாம் மண்ணும் மலையுமுடைய அரண்களை வைத்து அரண்செய்து கொண்டிருத்தல் இக்காலத்திற்குப் பயன்படாது.

## அமைச்சரவை

கோனாட்சி நிலவிய பண்டைக்காலத்திலும், குடியாட்சி நிலவும் இக்காலத்திலும் அமைச்சரவை இன்றியமையாததாக இருந்து வந்திருக்கிறது. ஏனெனில், "அரசன் அறிவாலும் ஆற்றலாலும் சிறந்தவனாக இருந்தபோதிலும் தனியனாக நாட்டு ஆட்சியைத் திறம்பட நடத்த முடியாது என்று கருதப்பட்டதால் அரசருக்குத் துணையாக அறிவுரை வழங்க அமைச்சரவை ஏற்பட்டதெனக் கூறலாம்."[1] இத்தகு அமைச்சரவையில் அமர்த்தப்படும் அமைச்சர்களின் தகுதிகளையும் செயல்களையும் பற்றித்

1. கோ. சுப்பிரமணியன், வள்ளுவர் கண்ட அரசியலும் மனுவும், வள்ளுவர்வகுத்த அரசியல், ப. 103.

தருமசாத்திரமும் வள்ளுவமும் தெளிவாகக் கூறுகின்றன.

மனுவின் காலத்தில் முடியாட்சியே சிறந்திருந்தது. மன்னனே நாட்டை ஆளும் உரிமை பெற்றிருந்தான். எனினும் அமைச்சர், அறிஞர், பெரியோர் இவர்கள் காட்டும் நெறியில் நின்று செயலாற்றினான்.

> "சாதாரணக் குடும்பத்தையே ஒருவன் தனியாக நடத்துவது இயலாததாயிருக்க, பெரும் பொறுப்புக்களை உடைய இராச்சிய நிர்வாகத்தைத் தனிப்பட்ட ஒருவன் நிறைவேற்ற இயலாது." (மனு. 7: 55).

அதனால் ஏழு அல்லது எட்டுப்பேர் கொண்ட அமைச்சரவை, அரசனுக்குத் துணையாக அமைந்திருந்தது. மன்னனே தமக்கேற்ற அமைச்சர்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டான்.

வள்ளுவர் காலத்தில் அமைச்சரவை இருந்ததால் 'அமைச்சு' என்னும் ஓர் அதிகாரம் அமைத்துள்ளார். அமைச்சு என்ற சொல்லை நான்கு இடங்களில் அவர் (குறள். 631–634) பயன்படுத்தியுள்ளார். மந்திரி என்ற சொல் வள்ளுவத்தில் ஓரிடத்தில் (குறள். 639) காணப்படுகிறது. அமைச்சு என்ற சொல் ஒருமையைக் குறிப்பதாகத் தெரியவில்லை. பன்மையைக் குறிப்பதாகக் குழுவைச் சுட்டுவது போல் உள்ளது. 'வல்லது அமைச்சு' (குறள். 633, 634), 'மதிநுட்பம்நூலோடு உடையார்க்கு' (குறள். 636), 'திறப்பாடு இலாஅதவர்' (குறள். 640), 'மாண்டது அமைச்சு' (குறள். 632) என வள்ளுவரும் அமைச்சர் குழுவைச் சுட்டுகிறார். ஆனால் எண்ணிக்கை பற்றிய எண்ணம் வள்ளுவரிடம் இல்லை.

## அமைச்சரின் தகுதிகள்

"மன்னருக்கு நன்னெறி காட்டும் பொறுப்புடையவர்கள் அமைச்சர்களே ஆவர். ஆதலால் எப்பொருள் எத்தன்மை யாயினும் அப்பொருளை அமைச்சர்கள் நன்கு ஆராய்ந்து தெளிவார்கள். அவ்விதம் ஆராய்ந்து கண்ட கொள்கைகளை நேர்மையாகவும் இனிமையாகவும் மன்னனிடம் எடுத்துரைப் பார்கள்."[1] நாட்டின் நலத்தையும் அரசன் நலத்தையும் கண்ணும் கருத்து மாகக் காக்கும் நல்லமைச்சின் இலக்கணத்தை,

> "பாட்டன் நாள்முதல் மந்திரித்தனஞ்செய்த வம்சத்தார் களாயும், நீதிசாஸ்திரம், வேதாந்தம், தனுர்வேதம் இவை களறிந்தவர்களாவும்

1. ரா.பி. சேதுப்பிள்ளை, திருவள்ளுவர் நூல்நயம், ப. 110.

பலமுள்ளவர்களாயும், நற்குலத்தில் பிறந்தவர்களாயும் இருக்கிற மந்திரிகளை ஏழு அல்லது எட்டுப்பேர் கொண்ட அமைச் சரவை மன்னனுக்குத் துணையாக அமையவேண்டும்'' (மனு. 7: 54)

என்று மனுசாத்திரம் எடுத்துரைக்கிறது. பரம்பரை, பரம்பரையாக அமைச்சர் பதவி வகித்த குலத்தில் தோன்றிய நல்லறிவும் நல்லொழுக்கமும் வாய்ந்தவர்களே அமைச்சர் களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது தெளிவு. "சந்திரகுப்தனின் கல்வெட்டு இதற்கு விளக்கம் தரும் முறையில் ஒரு பிராமண அமைச்சர்தன் முன்னோர்களின் வாரிசு என்ற முறையில் பாரம்பரியம் கொண்டாடிப் பதவி வகிப்பதைத் தெரிவிக்கிறது. மந்திரி என்ற சொல்லே மந்திரத்தை உயைவன். அதாவது பிராமணன் என்னும் கருத்துக் கொண்டது."[1] "எட்டு மந்திரிகள் என்ற குழுவின் அமைப்புப்பற்றிக்கூறும் சாந்திபருவம் அவர்களில் நான்குபேர் பிராமணர்களாக இருக்கவேண்டும். மூன்றுபேர் விசுவாசம், கட்டுப்பாடு, கீழ்ப்படியும் தன்மை ஆகியவை உடைய சூத்திரர், ஒரு சூதர் என்ற அந்தக்குழு அமையவேண்டும்"[2] என்று வகைப்படுத்தியிருப்பது இவண் நோக்கற்குரியது.

மனுவின் காலத்தில் வேதம் பயின்றவர்களே மந்திரிப் பதவியில் அமர்ந்தபபட்டனர். வள்ளுவர் கூறும் அமைச்சர், அறம், பொருள், இன்பம், உயிரச்சம் என்ற நான்கு (குறள். 501) முறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வள்ளுவர் காலத்தில் திறனுக்குத் தகுந்து தேர்வு செய்தல் முறை இருந்தது என்பதை,

"இதனை இதனான் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்" (குறள். 517)

என்று கூறுவர். இதனால் மனுவின் காலத்தில் அமைச்சர், பதவி பரம்பரையாக வழங்கப்பட்டது. ஆனால் வள்ளுவர் கூறும் அமைச்சர் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது தெளிவு.

## தலைமை அமைச்சர்

ஏழெட்டுப்பேர்கொண்ட அமைச்சரவையில் தலைமை அமைச்சரும் இருந்ததாகத் தெரிகிறது. ஒவ்வொரு அமைச்சரும் தகுதி பற்றியே அமர்த்தப்பட்டனர். எனினும் தலைமை அமைச்சனின் தகுதியையே அரசன்

1. ஆர். எஸ். சர்மா, பழங்கால இந்தியாவில் அரசியல் கொள்கைகள், நிலையங்கள், சில தோற்றங்கள், ப. 217.
2. மகாபாரதம், சாந்திபருவம். 85: 7–10

சிறப்பாகக் கவனித்தான். ஏனெனில்,

> "அறநிலை திரியா அன்பின் அவையத்து
> திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து
> மெலி கோல் செய்தே னாகுக"[1]

> "நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
> கொடி தோர்த்த மன்னன்"[2]

என்னும் பகுதிகளும் முதலமைச்சன் அரசியலில் எவ்வளவு தனிப்பொறுப்பும் அதிகாரமும் வாய்ந்தவன் என்பதை உணர்த்துகின்றன. "ஏற்கனவே துணை அமைச்சராய் ஊழியம் செய்து உண்மை காணப்பட்டவரே பின்னர் தலைமையமைச்சராய் அமர்த்தப்பெறுவர். ஆதலால் மனுகாலத்தில் அந்தணரே தலைமை அமைச்சர் பதவியிலிருந்தனர்."[3] அமைச்சர்களுள் அந்தணராக இருக்கும் அமைச்சனிடம் பகையைச் சமாதானப்படுத்துவது, எதிர்ப்பது, போரிடுவது, பகைச்சேனையைச் சூழ்ந்து கலைப்பது, தஞ்சம் புகுவது ஆகியவற்றை மன்னன் ஆலோசிப்பான். அன்றாடம் அந்தண அமைச்சரிடம் யாவும் கூறி, ஆலோசித்துப் பின்னரே ஒன்றைத் தொடங்கவேண்டும்" (மனு. 7: 58,59) என்பது மனுவின் ஆணை. அந்தணர் என்று குறிப்பிட்டிருப்பதால் தலைமை அமைச்சர் அந்தணராகவும், மற்ற அமைச்சர்கள் அந்தணரல்லாதவர்களாகவும் இருந்தனர் என்பது புலனாகும்.

வள்ளுவர், அமைச்சர்க்குரிய செயல்திறங்களையும், மனத்தூய்மை, வினைத்தூய்மை, வினைசெயல்வகை, வினைத்திட்பம் போன்ற பண்புகளையும் விளக்கியுள்ளார் (குறள். 64,65,66,67). ஆனால் அமைச்சர், தலைமை அமைச்சர் என்ற வேறுபாடு வள்ளுவரிடம் இல்லை. அதோடு அந்தண அமைச்சர் பற்றிய குறிப்பு வள்ளுவத்தில் இடம்பெறவில்லை. இதனால் வடமொழியாளர் கொண்ட அமைச்சுக் கொள்கையிலிருந்து வள்ளுவர் முற்றிலும் வேறுபடுகிறார்.

## மற்ற அமைச்சர்கள்

"அரசன் என்பதற்கும் அரசு என்பதற்கும் உள்ள பொருள் வேற்றுமையை நன்கு அறியவேண்டும். அரசன் எந்தச்செயலையும் தனிப்பட்ட முறையில் செய்ய முடியாது. அரசு என்ற அணைப்பில்தான்

1. புறம்., 7.
2. கலி., 8.
3. ஞா. தேவநேயன், பழந்தமிழராட்சி, ப. 40.

செய்யமுடியும். அரசன் செய்யும் எந்தச்செயலும் யாராவது ஓர் அமைச்சனின் உடன்பாடு பெற்றதாகவே தெரிகிறது."[1]

" அமைச்சர்களின் கருத்தைத் தனித்தனியே கேட்டறிந்து அனைவரும் ஏற்றுக்கொண்ட செயலைத் தனக்கும் மனதிருந்தால் அரசன் செயல்படுத்தலாம்" (மனு. 7: 57)

என்று மனுநீதி கூறுகின்றது. மேலும் அமைச்சர்களுடன் போர், சமாதானம், சேவைகள், கருவூலம், நாடு, பசு, தானியம், கொடை இவைபற்றியெல்லாம் மன்னன் ஆராய்ந்து தெளிதல் வேண்டும் (மனு. 7: 56). மாத, வருடாந்திர வரிகளை அமைச்சுத் துறைகளின் மூலம் குடிமக்களிடமிருந்து மன்னன் பெற்றான் (மனு. 7: 80). பண்டைக்காலம் போரும் பூசலும் நிறைந்த காலம். ஆதலால் போர் தொடர்பான செயல்களும், வரிவசூல் செய்வதும் அமைச்சரவையின் பணிகளாக இருந்தன.

அரசியற் காரியங்களை மன்னன் அமைச்சர்களோடு நன்கு ஆராய்ந்து செய்தான் என்று மனு கூறும் கொள்கை வள்ளுவரின் கொள்கையுடன் ஒப்புமையுடையது (குறள். 671–677). ஆனால் அமைச்சர்கள் வரிவசூல் செய்த செய்தி வள்ளுவத்தில் இல்லை.

## தூதர்

"பண்டைய முடிமன்னர்களின் அரசவை வளர்த்த செய்தொழில்களுள் ஒன்று தூது. இரு நாடுகளுக்கிடையில் பகை உண்டாகி விடுமானால் இருநாடுகளும் போர் தொடுத்து உயிர்கட்கும் பொருள்களுக்கும் பெருத்த அழிவு உண்டாதல் இயல்பு. அந்த அழிவை நீக்கவேண்டிச் சான்றோர்கள் இரு நாட்டு மன்னர்பாலும் சென்று அறநெறியில் அறிவுரை மொழிந்து இரு மன்னர்களையும் சமாதானப்படுத்தி அமைதியான முறையில் நாடுகளைக் காவல் புரியச்செய்வது வழக்கமாயிருந்தது."[2] அதனால் போர் எழுதல், சமாதானம் செய்துகொள்ளல் இவற்றை மன்னன் தூதன் மூலமாகவே நடத்திக்கொள்ள வேண்டும் என்ற வரையறை மனுவின் காலத்தில் இருந்தது.

பகைவரை நண்பராக்கவும், நண்பரைப் பகைவராக்கவும் வல்லவன் தூதன். வெளிநாடுகளில் போரும் அமைதியும் ஏற்படுவதற்குத் தூதன் காரணமாவான். அதனால்,

---

1. ஞா. தேவநேயன், பலநாட்டு அரசியல் அமைப்பு, ப. 4.
2. வி. சி. சசிவல்லி, பண்டைத்தமிழர் தொழில்கள், ப. 175.

"சகல சாத்திரமறிந்தவனாயும், சொற்குறி, கண்சிமிட்டுதல்
முதலிய சாடை, சிட்டிகை போடுதல் முதலிய செய்கை,
இவைகளைக் கண்டுபிடிக்கிறவனாயும், பொருளாசை இல்லாதவனாயும்,
சமர்த்தனாயும், நல்ல குலத்திற் பிறந்தவனாயும் இருக்கிற ஒரு
தூதனை அரசன் தன்னிடத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்."(மனு.7: 63)

என்று மனுதரும சாத்திரம் வலியுறுத்துகிறது.

மேலும் பொருளாசை இல்லாத, நல்ல குலத்திற் பிறந்த தூதனையே அரசன் தன்னிடம் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்திற்கேற்ப, தூதனாகப் பதவி வகிப்பவன் செல்வக்குடும்பத்தைச் சார்ந்தவனாயும் சத்திரியக்கடமைகளைச் செய்பவனாகவும் இருக்கவேண்டும். அவன் குருக்களாகவோ இராணுவ சாதியைச் சேர்ந்த அதிகாரியாகவோ இருக்கலாம்"[1] என்ற கருத்தும் காணப்படுகிறது.

ஓர் அரசு அமைதியான முறையில் செயலாற்றுவதற்கும், நாட்டில் மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கும் தூதரின் நற்பணி இன்றியமையாதது. அதனால் யாவற்றிலும் சிறந்த சகலகலா வல்லவனாக இருக்கும் ஒருவனைத் தூதுவனாக மன்னன் நியமிக்கவேண்டும் என்பது தெளிவு.

வள்ளுவர் கூறும் தூதன் அன்புடைமை, ஆன்றகுடிப் பிறத்தல், வேந்துஅவாம் பண்புடைமை (குறள். 681) போன்ற நல்லியல்புகளை உடையவனாக இருந்தான். மேலும்,

"அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று" (குறள். 682)

என்று குறிப்பிடுவதால் மனு விரும்பும் தூதுவனை விட வள்ளுவர் குறிப்பிடும் தூதுவன் உயர்பண்பாளனாக, நூலாருள் நூல் வல்லானாகக் (குறள். 683) காணப்படுகிறான். தூதுவனுக்குரிய இலக்கணத்தை வரையறுப்பதில் இருநூலாரும் முற்றிலும் வேறுபடுகின்றனர்.

தூதுவன் அரசனுக்கும் தன் நாட்டுக்கும் நன்மை பயக்கின்ற முறையில் செயலாற்றவேண்டும் என்பதே மனுவின் கொள்கை. ஆதலால்,

"நல்லன்பு, திறமை, பொருளாசையின்மை, நினைவுத் திறன்
இடம், பொருள், அறிவு, உடல்வலிமை, அச்சமின்மை,

1. ஆர்.எஸ். சர்மா. பழங்கால இந்தியாவில் அரசியல் கொள்கைகள் நிலையங்கள், சில தோற்றங்கள், ப. 218.

வடமொழி ஆகிய பல்மொழி பேசும் ஆற்றல் இவையா வற்றையும் உடையவனான தூதன், தனது மன்னனுக்குப் பெருமைதேடித் தருவான்" (மனு. 7: 64)

என்று மனுநெறி கூறுகிறது. இரு மன்னர்களுக்கிடையே மாறுபாடு நிகழ்ந்தால் அப்பிணக்கைத் தீர்த்து இணக்கத்தை உண்டாக்கும் பொறுப்பு தூதர்க்கே உரியது. அதனால்,

"வேற்றரசனுடைய கருத்து, செயல், வலிமை, தானையின் தன்மை இவற்றை மறைந்துநின்று தூதன் சென்றறிவான்" (மனு. 7: 67)

என்கிறது அந்நூல். எதிரியின் நிலையை இவ்வாறு அறியும் காலத்தில் தனக்குத் தீங்கு நேரிடாதவாறு தற்காத்துத் திரும்பிவரவேண்டும் (மனு. 7: 68). இத்தகு தூதர் பெருமையைக் காவியங்களிலும் காணலாம். பாண்டவர்க்காகத் தூது சென்ற கண்ணபிரானின் செம்மையை,

"மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தாரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே"[1]

என்று இலக்கியமும் பாராட்டுகிறது. ஆதலால் தூதனாக இருப்பவன் அரசனிடமும் மற்றவரிடமும் அன்புகொண்டு, நன்மையானவற்றை ஆராய்ந்து அறியும் அறிவும் வேற்று அரசரிடம் சென்று தூது உரைக்கும் காலத்தில் சொல்வன்மையினையும் பெற்றிருத்தல் வேண்டும் என அறியலாம்.

வேற்றரசனிடம் செல்லும் தூதுவன் அறிவு, உரு, ஆராய்ந்த கல்வி இம்மூன்றிலும் செறிவுடையவனாக விளங்குதல் வேண்டும் (குறள் 684). வேற்றரசனிடம் வெறுப்பான செய்திகளைக் கூறும்பொழுது கடுஞ் சொற்களை நீக்கி இன்சொற் கூறுதல் வேண்டும் என்கிறார் வள்ளுவர். அதோடு, கடன் அறிந்து, காலம்கருதி, இடன் அறிந்து எண்ணி உரைக்கும் தலையாயவனாகவும் (குறள். 687), தூய்மை, துணைமை, துணிவுடைமை இம்மூன்றையும் வாய்மொழி உரைக்கும் பண்புடையவனாகவும் (குறள். 688) தூதுவன் இருத்தல்வேண்டும் என்கிறார் அவர். இந்நிலையில் மனுவின் கொள்கையிலிருந்து வள்ளுவர் வேறுபடுதல் தெரியலாம்.

1. சிலம்பு., 17: 138–143

தூதுவன் தனக்குத் தீங்கு நேரிடதவாறு தற்காத்துத் திரும்பிவர வேண்டும் என்றும் வள்ளுவர் குறிப்பிடவில்லை. மாறாகத் தனக்கு,

> "இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்
> குறுதி பயப்பதாம் தூது" (குறள். 690)

என்பதால் கடமை உணர்வுடையவனாகத் தூதுவன் இருக்க வேண்டும் என்று மட்டும் கூறுகிறார். இதனால் வடமொழியாளர் குறிப்பிடும் தூதர் கொள்கைக்கு, வள்ளுவர் முற்றிலும் முரண்படுகிறார் என உணரலாம்.

## அரசுப்பணியாளர்

பழைய காலந்தொட்டே ஆட்சித்துறையில் அரசனுக்கு உதவிபுரிய அரசியல் மேதைகளும் சான்றோரும் நாட்டுப்பிரதிநிதிகளும் இருந்து வந்ததாகத் தெரிகிறது. இவர்கள் குடிகளின் நலன்களையும், தேவைகளையும் அரசனிடம் எடுத்துக்கூறிப் பாதுகாக்கப்பயன்பட்டனர். "நாட்டில் சமயத்தொடர்பான செயல்களைப் புரோகிதர் கவனித்தனர். மருத்துவர் நாட்டுச்சுகாரத்தைக் கவனித்து வந்தனர். கணியர், நாட்டில் நடைபெற வேண்டிய நல்ல செயல்களைத் தொடங்குதற்குரிய நாளையும் நேரத்தையும்,குறிக்கவும் வருவது உரைக்கவும் பயன்பட்டனர். நாட்டின் வருவாயையும் அரசாங்கச் செலவையும் நீதிமுறையையும் அமைச்சர் கவனித்தனர். ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியே தலைநதரத்தில் கூடித் தம் கடமைகளைச்செய்து வந்தனர்."[1] அரசுப்பணியாளர்களை மன்னனே நியமித்துக்கொண்டதாகத் தெரிகிறது. அமைச்சர், புரோகிதர், ஒற்றர், தூதர் போன்ற உயர் அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம் பற்றி மனு குறிப்பிடவில்லை. அவர்களின் பணிகள் மட்டுமே கூறப்பட்டுள்ளன.

## மேல்நிலை ஊழியர்கள்

ஊழியர்களில் வலிமை, திறமை, குடிப்பிறப்பு இவை பொருந்தியோர் நெற்களஞ்சியம், பொக்கிசம், தங்கச்சாலை இவற்றின் பொறுப்புக்களுக்கு அமர்த்தப்பட்டனர் (மனு. 7: 62). மாத வருடாந்திர வரிகளைத் தக்க அமைச்சுத் துறைகளின் மூலம் குடிமக்களிடம் பெற்றான் (மனு. 7: 80). நாற்படைகளுக்கும் மருத்துவமறிந்தவர்கள் மேற்பார்வையாளர்களாக அமர்த்தப்பட்டனர். அவர்கள் தங்கள் துறை ஊழியர்களை எச்சரிக்கையுடன் நியமித்தனர் (மனு. 7: 81). கற்றறிந்த அந்தணர்கள் அமைச்சராகவும்,

---

1. மா. இராசமாணிக்கனார், தமிழக ஆட்சி., ப. 5.

அறங்காவலராகவும், அறிவுரைபகரும் ஆசானாகவும், வேள்விபுரிவோராகவும் பணியாற்றினர்.

## கடைநிலை ஊழியர்கள்

அச்சம் உடையோர் அந்தப்புரத்திலும், மடைப்பள்ளியிலும் பணியாற்றினர் (மனு. 7: 62). இவர்கள் நாள்தோறும் ஆறுபணமும் மாதம் இரண்டு துணியும் ஆறு துரோண நெல்லும் ஊதியமாகப் பெற்றனர். ஏவல் புரிய வெள்ளாட்டியும் வேலைக் காரர்களும் இருந்தனர். இவர்களுக்கு அன்றாடச்சம்பளம் அளிக்கப் பட்டது (மனு. 7: 125). இவர்களைவிடக் கீழ்த்தர ஊழியர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு அன்றாடம் ஒருபணமும், ஆறுமாதத்திற்கு இரண்டு ஆடைகளும், மாதத்திற்கு ஒரு துரோண நெல்லும் சம்பளமாகக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு அரசுப்பணியாளர்களைத் திறனறிந்து தேர்தலும், பணியில் அமர்த்தலும், ஊதிய மளித்தலும் அரசனது பணியாக இருந்தது. மனுகால அரசுப் பணியாளர்களுக்கு உணவிற்காக நெல்லும் உடையும் பணமும் ஊதியமாக அளித்திருப்பது மன்னனின் வளமையை வெளிப்படுத்துகிறது.

## பணியாளர்களின் குற்றங்கடிதல்

அரசனுடைய அலுவலர்களுள் பெரும்பான்மையர் பொருள் ஆசையால் கையூட்டுப் பெறுபவர்களாக இருந்தனர். அவர்களிடமிருந்து குடிமக்களைக் காத்தல் காவலனின் கடமையாதலால்,

“லஞ்சம் பெற்றுக்கொண்டு மன்றோரம் சொன்னவர்களின் பொருள் முழுவதையும் மன்னன் பறிமுதல் செய்துக்கொண்டு அந்தப்பாவிகளையும் நாட்டைவிட்டு வெளியேற்றி விட வேண்டும் (மனு. 7: 124)

என்று மனுசாத்திரம் ஆணையிடுகிறது. ஆட்சிப்பணியில் இருக்கும் அரசலுவலர் கையூட்டுப்பெறும் கொடிய பழக்கம் மனுவின் காலத்திலும் இருந்திருக்கிறது. அவ்வாறே மன்னனின் பாதுகாவலில் உள்ள பொருட் களைக் காவல்புரிபவர் யாரேனும் திருடிக்கொண்டால் அவர்களை யானையின் காலால் இடறச் செய்ய வேண்டும் (மனு. 8: 34).

“அரசு வினையாளரிடம் கையூட்டை எங்ஙனம் ஒழிப்பது என்ற நம் இந்தியத்தலையரசும் உறுப்பரசுகளும் மும்மரமாக ஆராய்ந்து கொண்டிருக் கின்றன. பல குழுக்களைப் புதுவதாக அமைக்க எண்ணுகின்றன. இக்குழுக்களுக்குள் கையூட்டு நுழையாது என்று யார் உறுதிகூறமுடியும்? கையூட்டைக் கண்டுபிடிக்க வழிசெய்தலைக் காட்டிலும் கையூட்டு நிகழாத

வாறு அலுவல் நெறிகளை அமைப்பதிற் கருத்துச் செலுத்தவேண்டும்.''[1] இதுபற்றி அரசியற் சான்றோராகிய மனு,

''அரசனுடைய பணியாளர்கள் பலர் பொருளாசையால் கைக்கூலி பெற்றுக்கொண்டு மூடத்தனத்தால் மக்களைப் பெரிதும் தொல்லைப் படுத்துகிறார்கள். ஆதலால் அவர்களிடத்தினின்றும் குடிகளைக் காப்பது அரசர் கடன்'' (மனு. 7: 123)

என வலியுறுத்துகிறார். இவ்வாறே திருவள்ளுவரும்,

'' நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு'' (குறள். 520)

'' நாடொறும் நாடி முறைசெய்யா மன்னன்
நாடொறும் நாடு கெடும்'' (குறள். 553)

என்று எச்சரிக்கின்றார். மக்களின் வேண்டுகோள் தூங்காதபடியும் திட்டங்கள் காலங்கடவாதவாறும் உடனுக்குடன் செயல்படுத்தப் படுகின்றனவா என்று மேலவர்கள் தம் பணியாளர்களை நாள்தோறும் கவனிக்க வேண்டுமென இடித்துக்காட்டுகிறார். காலதாமதமின்றிக் காரியம் நடக்குமென்றால் கையூட்டுக் கொடுக்க யாரும் விரும்பார். ஆதலால் வள்ளுவர் கூறியாங்கு செய்தால், கையூட்டுக்கள் ஒழிந்துவிடும் என்று நம்பலாம்.

மன்னனின் கடமைகளுள் ஒன்றாகக் கையூட்டைத் தடுத்தல் என்பதை நினைவுப்படுத்துகின்றார் மனு. ஆனால் கடனறிந்த மன்னனுக்கு அதைத்தடுக்கும் வழிகளையும் வள்ளுவர் கூறியிருப்பது எக்காலத்திற்கும் ஏற்கும் கருத்தாக அமைந்துள்ளது. இத்தீவினை செய்யாதவர்களைத் தேர்ந்தெடுத்துப் பணியில் அமர்த்துவதில் மன்னன் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும் எனத்தெரிகிறது. அதோடு கடமையும் கட்டுப்பாடும் உடைய அலுவலர்களை அமர்த்தி நாட்டுக்கு நன்மை பயக்கும் பணிகளை மேற்கொள்ளச் செய்தல் வேண்டும் என்பது வெளிப்படை.

அரசலுவலர் பற்றிய கருத்துக்கள் குறளில் இடம்பெற வில்லை. ஏனெனில் ''குறளால் அறியப்படும் அரசின் துறைகளும் பணிகளும் பல. அவற்றில் பணிபுரிவோரும் பலராக இருந்திருத்தல் வேண்டும். சான்றாக, இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்து வகுத்தலும் வல்லதாக அரசு இருத்தல்

1. வ.சுப. மாணிக்கம், இலக்கிய விளக்கம், ப. 91.

வேண்டும் என்கிறது குறள் (குறள். 385). ஆனால் நிதித்துறை அலுவலராக அது யாரையும் பதவி சுட்டிக் குறிப்பிடவில்லை."[1] அமைச்சர், தூதர், ஒற்றர் பற்றித் தனித்தனி அதிகாரங்கள் அமைந்துள்ளன. படையில் பணிபுரிவோர் பற்றிய செய்தியும் காணப்படுகிறது. புரோகிதர் பற்றிய குறிப்பு குறளில் இல்லை. அலுவலர்கள் பெற்ற ஊதியத் தொகை பற்றியும் குறிப்பிடவில்லை. ஆனால் அரசலுவலர் அனைவரையும் தேர்தலும், பணியில் அமர்த்தலும் ஆள்தலும் அரசனது ஆள்தல் பணியாக இருந்தது.

## ஊராட்சி

மன்னன் தலைநகரில் தங்கி ஆட்சிபுரிந்தான். தலைநகரை ஒட்டிச் சிறுசிறு பாக்கங்களும் அமைக்கப் பட்டிருந்தன என்பதை,

> "தலைநகரை ஒட்டிப் பைம்பழனங்கள், நன்செய்கள்,
> வர்த்தகம், மக்கட்பகுதியினர் இவற்றுடன் கூடிச் சோலைகள்
> உடைய சிறுபாக்கங்களையும் அமைக்கவேண்டும்" (மனு. 7: 69)

என்ற கருத்து வெளிப்படுத்துகின்றது. மக்கள், உழவு, வாணிபம் போன்ற தொழில்களைச் செய்திருத்தல் வேண்டும். இத்தகு பாக்கங்களையே மனு ஊர் எனக்குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

ஊர்கள் யாவும் பத்துக்கிராமங்கள், நூறு கிராமங்கள், ஆயிரம் கிராமங்கள் என்று பற்பல தொகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு தொகுதிக்கும் தலைவர்கள் மன்னனால் நியமிக்கப்பட்டனர் (மனு. 7: 115). திருட்டு முதலான குற்றங்களை அந்தந்தக் கிராம அதிகாரியும், பெரிய குற்றங் களை முறையே பத்துக்கிராமங்களின் அதிகாரியும், அவனால் தீர்வு காண முடியாதவற்றை இருபது கிராமங்களின் தலைவனும், அவனால் முடியாததை நூறு கிராமங்களில் அதிகாரியும் கவனித்துத் தீர்ப்பளித்தனர். இதற்கு ஊதியமாகப் பத்துக் கிராமங்களை ஆள்பவனும், இருபது கிராமங்களின் தலைவனும் தானியங்களைப் பெற்றனர். நூறு கிராமங்களின் தலைவன் ஒரு கிராமத்தையும், ஆயிரம் கிராமங்களின் அதிபதி ஒரு நகரையும் தங்கள் பிழைப்புக்காகப் பயன்படுத்தலாம் (மனு. 7: 119) என்று மனுநூல் கூறுகின்றது. "ஆயிரம் கிராமங்கள் கொண்டதுதான் மிகப்பெரிய பகுதி. அதன் தலைவர் சகஸ்ரபதி எனப்பட்டார்."[2] இவர்கள் கூறும் தீர்மானங்கள் குடிமக்களுக்கு முரணாக இருந்தால் அரசனிடம் சென்று

1. தி. முருகரத்தனம், குறள் கூறும் இறைமாட்சி, ப. 119.
2. மகாபாரதம், சாந்திபருவம், 88: 8–9.

ரைத்தனர்.அம்முறையீட்டை அமைச்சர் மூலமாக மன்னன் தீர்த்து வைத்தான். ஊராட்சியாளருக்கு அரசன் நேரடியாகச் சம்பளம் கொடுக்க வில்லை.

## நகராட்சி

மனுவின் காலத்தில் நகராட்சி முறையும் நடைமுறையில் இருந்தது. அதனால்,

> "பட்டணங்கள் தோறும் எல்லாவற்றையும் விசாரிக்கத் தக்க
> நியாயாதிபதிகளை ஏற்படுத்தி, தாரகை நடுவண் வெள்ளியைப்
> போல் ஒளியுடன் விளங்கும் உயர்ந்த கோட்டையுள்ள
> மாளிகையை அவ்வலுவலர்க்கும் கொடுத்து வசிக்கச்செய்தல்"(மனு.7:121)

> "மன்னன் கடமையாக இருந்தது. நகராட்சி புரிவோர் தமக்குக்
> கீழ்பட்ட கிராமபதிகளை, நேரில் சென்று விசாரித்தனர்.
> வேவுகாரர்களின் மூலம் மக்களின் கருத்தறிந்தும் விசாரித்து முடிவு
> கூறினர்" (மனு. 7: 122)

இவ்வாறு மனுவின் அரசன் ஊராட்சி, நகராட்சி மூலமாகவும் குறைகளைந்து முறைசெய்து விழிப்புடன் மக்களைக் காத்தான் என்றறிகிறோம். ஊராட்சி, நகராட்சி பற்றி வள்ளுவர் குறிப்பிடவில்லை.

## அரசர் பணி

பண்புடை வேந்தனின் பணி நாடாளுதல் மட்டுமன்று; பற்பல பணிகளையும் உள்ளடக்கியதாகும். ஆதலால் மன்னன் ஆற்றிய பணிகள் யாவையென விளக்கப்படுகிறது.

## குடியோம்பல்

பகை நாட்டு மன்னனிடமிருந்து மக்களைக் காத்தல் மட்டுமல்லாது மற்றொரு காவலையும் மன்னனுக்கு மனு நினைவுப்படுத்துகிறார். குடிகளை நலியாமல் காத்தலும் ஒரு காவலாகும். மக்களை நன்கு காப்பதே மேலான அறமாகக் கருதப்படுகிறது. இதனை,

> " கற்ற கல்வியையும் நல்லொழுக்கத்தையும் அறிந்து தக்கபடி
> அவரவர்க்குரிய பிழைப்பை வகுத்துக் கொடுத்து , பிள்ளையைப்
> பேணும் தந்தையைப்போலத் திருடர் முதலான அச்சத்தினின்றும்
> அவர்களைக் காத்தல் அரசர் கடன் (மனு. 7: 135)

என மனுநூல் குறிக்கிறது. ஏனெனில் அமைச்சு முதலிய அங்கங்களுடன் அரசாளும் ஒருவனுடைய நாட்டில் மக்கள், கள்வர் முதலானவர்களால் அஞ்சி வாழ நேரிட்டால் அவ்வரசன் இருந்தும் இறந்தவனாவான். அவ்வாறே கற்றறிந்த மேலோர் பசியினால் வாடினால் அந்நாட்டின் அரசன் தன் தேசமெல்லாம் பஞ்சத்தால் வாடியழியக் காண்பான் (மனு. 7: 134) எனக்கூறிக் குடியோம்பலின் சிறப்பை மன்னனுக்கு உணர்த்துகிறார் மனு.

வள்ளுவர் குடி என்னும் சொல்லால் மக்களைக் குறிப்பிடுகிறார் குடிஓம்பல், குடிதழுவல் அரசனின் கடமை என ஆங்காங்கே வற்புறுத்திக் கூறுகிறார். நாடு என்னும் அதிகாரத்தில் குடிமக்கள் பற்றிச் சில கருத்துக்களைத் தெரிவிக்கிறார். அதனால் வள்ளுவர் குடிமக்களைத் தனியே ஒரு கூறாகக் கருதுதல் தெளிவாகிறது.

குடிமக்களைப் பகையிலிருந்து காத்தல் வேண்டும். அதோடு குடிகளை நலியாமல் காத்தலும் மன்னனின் கடமையாகிறது என்பதற்கு,

> "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
> சேரா தியல்வது நாடு" (குறள். 734)

> "பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
> அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து "(குறள். 738)

என்ற குறட்பாக்கள் சான்றாகத் திகழ்கின்றன.

## வரி வாங்குதல்

மன்னன் குடிமக்களுக்கு அல்லவை செய்தல் கூடாது. அதனால், "வரியினை வேந்தன் நெறியறிந்து கொளின் செல்வம் மிகுந்து நாடு செழிக்கும். வரிசை அறியாது ஒரேயடியாக இறைப்பொருள் வெளவின் யானை புக்க நிலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடும்."[1] அதனால் குடிகளிடம் வரி வாங்கும்பொழுது அரசன் அவர்களை வருத்தி வாங்குதல் கூடாது என்ற நெறிமுறையை மனுவும் வலியுறுத்தியுள்ளார். தானும் மக்களும் பயன்பெறத்தக்கவாறு நன்கு சிந்தித்து அரசன் தீர்வை வாங்கவேண்டும் என்பதை,

> "இரத்தம், பால், தேன் இவற்றை அட்டை, கன்று, வண்டு
> ஆகியவை எவ்வாறு சிறுகச்சிறுகச் சேமிக்கின்றனவோ, அவ்வாறு

1. புறம். – 184.

அரசனும் தனக்குக் குடிகள் கொடுக்கவேண்டிய தீர்வையைச் சிறிது, சிறிதாக வாங்கவேண்டும்." (மனு. 7: 129)

என்று மனுதரும சாத்திரம் கூறுகிறது.

"பொருள், பசு இவற்றின் இலாபத்தில் ஐம்பதில் ஒன்றும் நிலத் தன்மையைப் பொறுத்து விளைவில் எட்டு, ஆறு அல்லது பன்னிரண்டில் ஒருபங்கு வீதமும் தீர்வை வாங்கவேண்டும்" (மனு. 7: 130) என்று மனு கூறுகின்றார். காய்கறி முதலியவற்றைத் தன் நாட்டில் கொண்டுவந்து விற்றுப் பிழைக்கும் ஏழைகளிடம், இனிப்புப் பண்ட வியாபாரிகள், சிற்பிகள், முட்டைக்காரர் இவர்களிடம் மாதத்திற்கு ஒரு நாள் வேலை வாங்கிக் கொள்வதே அரசன் இவர்களிடம் பெறும் வரியாகும் (மனு. 7: 138). ஆனால் எளிய அரசானாலும் வேதமறிந்த அந்தணனிடம் வரி வாங்குதல் கூடாது (மனு. 7: 133) என்பது மனுநெறி. அவ்வாறே வள்ளுவமும்,

" உறுபொருளும் உல்கு பொருளுந் தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்" (குறள். 756)

என்ற குறளில் அரசன் சிலவழிகளில் வருவாய் பெறுவது முறையே என எடுத்துரைக்கிறது. இக்குறளில் உல்குபொருள் என்று கூறியிருப்பது ஒரு வரியே. இறை, உல்கு, திறை முதலானவற்றை மக்களிடமிருந்து மன்னன் பெற்றான்; ஆனால் எம்முறையில் பெற்றான் என்பதுபற்றி வள்ளுவர் கூறவில்லை. "குடிதழீஇ கோலோச்ச வேண்டுமென்று குறள் பொதுவாகக் கூறுகிறதேயன்றி வரி வாங்கும் முறைபற்றி விதந்து கூறவில்லை"[1] என்ற அறிஞர் கருத்தும் நோக்கற்குரியது.

மனுவின் காலத்தில் வருவாய்க்கு ஏற்ப வரி வாங்கப்பட்டது. வரி செலுத்த இயலாதோர் உழைப்பை வரியாக நல்கினர்; அந்தணர்கள் வரி விலக்குப் பெற்றிருந்தனர்.

## இயற்றல், ஈட்டல், காத்தல்

ஒரு நாட்டில் செங்கோல் செலுத்தும் அரசன், கொடை, அளி உடையவனாக இருத்தல்வேண்டும். இதற்கு இன்றியமையாது வேண்டப் படுவது பொருள். அதனால்,

---

1. இரா. சாரங்கபாணி, வள்ளுவர் அரசியலும் பிற இலக்கியத்தார் அரசியலும், வள்ளுவர் வகுத்த அரசியல், ப. 51.

"தன்னிடமில்லாத அரும்பொருள்களை மேலும் மேலும் தேடுதலும், தேடியவற்றைக் காத்தலும், காத்து வைத்ததைப் பெருக்கியும், பெருக்கிய பொருளைப் பாத்திரமறிந்து வழங்கியும் வருதல் அரசர் அறமாகக் கருதப்படுகிறது." (மனு. 7: 99)

பொருள்வரும் வழிகளை மேலும், மேலும் உளவாக்கல் வேண்டும் என்பதால், "தான் அடையவேண்டியவற்றைப் போரில் வென்று பெற வேண்டும். அதனைத் தன்வசம் ஆக்கிக் காப்பாற்ற வேண்டும். அதை வாணிபத்தினால் பெருக்கி, நன்கொடைகளில் செலவிட வேண்டும்" (மனு. 7: 101) என மனு மேலும் விளக்குகிறார்.

பகைவரை வென்று, அவர்மனம் விரும்பிக்கொடுத்த நாடு, பொருள் ஆகியன திறை எனப்படுகிறது (மனு. 7: 206). மாத, வருடாந்திர வரிகளைத் தக்க அமைச்சுத்துறைகளின் மூலம் குடிமக்களிடம் பெற்று அவர்களுக்குத் தந்தைபோல் அன்புடையவனாக இருத்தல்வேண்டும் (மனு. 7: 80) என்றும் மனுநூல் கூறுகிறது. இதுவும் ஒரு வருவாய் வழியாகும். இவைமட்டுமல்லாது வேறுசில வழிகளையும் வேந்தன் மேற்கொண்டு அரசின் செல்வத்தைப் பெருக்கலாம். அவை:

"உரியவர் இன்னாரென்று அறியப்படாத பொருள்கள் மன்னனிடம் வந்துற்றால்மூன்றாண்டுகளுக்குப்பின் அது அரசனுடையமையாகும்" (மனு. 8: 30)

"ஒருவன் கை நழுவிவிட்ட பொருளை அரசனுடைய ஆட்கள் கண்டெடுத்தால், அதைக் காத்தற்காக ஆறு அல்லது பத்துப்பங்கை மன்னன் பிடித்துக்கொண்டு மீதியை உடையவனுக்குக்கொடுக்கலாம்" (மனு. 8: 33).

"மன்னனுக்குப் புதையல் கிடைத்தால் அதையும் உடைமை யாக்கலாம்" (மனு. 8: 38).

நாட்டில் குற்றம் புரிந்தோருக்குப் பொன்னையும் பொருளையும் தண்டமாக விதித்துப்பெறலாம். இப்பணிகளை எல்லாம் அரசனுக்காக இயற்றும் அலுவலர்கள் இருந்தனர். இவர்கள் பொருளைப் பலவழிகளில் பெற்று, அரசனின் அரண்மனையில் சேர்த்தனர். இப்பொருளைக் காத்தல் மன்னனின் கடமையாகும்.

இவை அரசர்க்குரிய அறங்களாகவும் கருதப்படுகின்றன என்பதை,

" இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" (குறள். 385)

என்ற குறளும் வழிமொழிகின்றது.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றனுள் வாழ்க்கைக்கு அடிப்படையாய்த் தலைமையிடம் பெறுவது பொருள். பொருளால் அறமும் இன்பமும் வந்தெய்தும். ஆனால் அப்பொருளை அறவழியில் ஈட்டல் வேண்டும் என்பதை,

"பாட்டு, கூத்து, தகுதியற்றவனுக்கு வேள்விகள் இயற்றித் தருதல் போன்ற அறமல்லாத செயல்களால் பொருள் ஈட்டுதல் கூடாது. தன்னிடம் பொருள் இருப்பினும் இல்லாவிடினும் பாவிகளிடத்தில் தானம் பெறலாகாது" (மனு. 2: 15) என்று மனுநெறி எடுத்துரைக்கிறது. இவ்வாறே அறநெறி வழுவாது பொருளீட்டவேண்டும் என்பதை,

" அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்" (குறள். 755)

" அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" (குறள். 754)

என்று திருக்குறளும் கூறுகிறது. தீதின்றி வந்த பொருள் என்று வள்ளுவர் குறிப்பிடுதல் நோக்கற்குரியது. மக்கள் பொருளீட்டும் நெறியை மட்டுமே மனுதருமம் உணர்த்துகிறது. மக்கள் மட்டுமன்றி அரசினரும் அவ்வாறே அளப்பரும் செல்வத்தை நல்வழியில் பெருக்கவேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. இச்சிறு வேறுபாடு காணப்படினும் அறத்தாலும் ஒழுக்கத்தாலுமே பொருள் சேர்க்கப்படுதல் வேண்டும் என்ற நெறியையே இருநூலாரும் வலியுறுத்துகின்றனர்.

## அறங்காவல்

அரசர்கள் அறங்காவலர்களாகத் திகழவேண்டும். ஆதலால் அறன் ஓம்பலும், காவலர் கடமையாகக் கூறப்படுகிறது. அறச்சாலைகளை நியமித்துக் கொடை வழங்கவேண்டும் என்பதே மனுவின் விருப்பம்.

" குருகுலவாசம் முடித்துவந்த பிரம்மசாரிகளுக்கு அவர்கள்
செலுத்துவதற்குரியகுருதட்சணைக்கும்அவர்களது திருமணத்திற்கும்

> வேண்டிய பொருள் கொடுத்துப் போற்றவேண்டும். அப்படிக் கொடுக்கும் பொருள் அரசர்க்கு நற்கதியருளும்" (மனு. 7: 82)

என்று கூறிய மனு, அந்தணர்க்கு ஒன்று அளிப்பது அழிவற்ற புதையல் ஆதலால் அதனை அரசன் செய்க என்று ஆணையிடுகின்றார். அந்தணர் அல்லாதவர்களுக்குக் கொடுக்கும் கொடை நல்விளைவு மட்டும் தரும். ஆனால் வேதம் ஓதுகின்றவர்களுக்குக் கொடுக்கும் தானத்தின் பலனுக்கு அளவில்லை (மனு. 7: 83—85) எனக்கூறி, அறம் செய்தலை வலியுறுத்துகிறார். மாத, வருடாந்திர வரிகளைப்பெறும் மன்னன், மக்களின் கல்வி, திருமணம் போன்ற தேவைகளுக்கும், அந்தணர் வாழ்விற்கும் அறம்செய்தல் வேண்டும் என்று தெரிகிறது.

மன்னன், ஈகைக்குணம் உடையவனாக (குறள். 382), ஈத்து அளிக்கும் வல்ல அரசனாக (குறள். 387) இருக்கவேண்டுமென்பதே வள்ளுவரின் விருப்பம் என்பதை,

> "கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
> உடையானாம் வேந்தர்க் கொளி" (குறள். 390)

என்ற குறளில் புலப்படுத்தியுள்ளார். காத்தபொருள் வருவாய்களை அறம், பொருள், இன்ப வழிகளில் அரசன் செலவிட்டான் (குறள். 385). அதோடு,

> "அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
> நின்றது மன்னவன் கோல்" (குறள். 543)

என்றும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். ஆனால் அந்தணர், அந்தணர் அல்லாத பிறர் என்ற இன அடிப்படையில் அறம் செய்தல் வேண்டும் என்று மக்களை வேறுபடுத்தும் இயல்பு வள்ளுவரிடம் இல்லை. எல்லோருக்கும் உதவிசெய்யும் பெருமிதப் பண்புடைய மன்னனையே வள்ளுவர் (குறள். 613) படைத்துள்ளார்.

## போர்ப்பணி

"இவ்வுலகில் போர் இல்லாத இடமே இல்லை. காட்டிலே விலங்கொடு விலங்கு போராடுகிறது. எளிய விலங்கை வலிய விலங்கு கொல்லுகிறது. நீரில் மீனோடு மீன் போராடுகின்றது. சிறியமீன், பெரிய மீனுக்கு இரையாகின்றது. நாட்டிலே அரசும் அரசும் போராடுகின்றன. எளியவர்

நாட்டை, வலியவர் கவர்ந்து ஆளுகின்றனர்."[1] அதனால் புறப்பகையிலிருந்து மக்களைக் காத்தல் ஓர் அரும்பணி. "பண்டைக்காலத்தில் நாடுகளிடையே நல்லுறவு என்பது அரிதாய் நிலவியது. இகல் என்பதே இயல்பான உறவு எனக்கருதப்பட்டது. பகைப்பாங்கால் போரும் பூசலும் எந்நேரமும் ஏற்படலாம். அரசன் ஆண்டில்'பலநாட்களைப் போரிடலில் கழிக்க நேரலாம்."[2] ஆதலால் மனு வாழ்ந்த காலத்தில் அரசர்க்குப் போர்ப்பணி தவிர்க்கமுடியாத பணியாக இருந்தது. அதனால் போர் செய்யும் காலம், போர் செய்யும் முறைகள், அறப்போர் ஆகியன பற்றி அறநூலார் இருவரும் குறிப்பிட்டுள்ளனர். இப்போர் முறைகள் ஓர் அரசனுக்கு வழிகாட்டும் வகையில் அமைந்துள்ளன.

## ஆராய்ந்து அறிதல்

அரசன் போர் வினைகளை மேற்கொள்ளும் முன் ஆராய்ந்து தொடங்குதல் வேண்டும் என்று மனு வலியுறுத்துகின்றார். ஏனெனில் போரின் இயல்பும், போரின் விளைவும் கடுமையானவை. அது அரசனையும் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதிக்கும். ஆதலால் நாடாளும் அரசன் தனித்தோ அல்லது அமைச்சருடன் சூழ்ந்தோ ஆராய்ந்தபின்னரே அமர் தொடங்கவேண்டும் என்பதை,

> " பகைவனுடைய சமாதானம், பொருதல், போரெழல்
> எழாதிருத்தல், தானையைப் பகிர்தல், வலியவனைச்
> சார்தல் இவ் ஆறையும் நன்கு எண்ணிய பின்னரே
> தக்கவாறு துணிய வேண்டும்" (மனு. 7: 160,161)

என்று மனுதரும சாத்திரம் எடுத்துரைக்கிறது. இவ் ஆறுவகையும் ஒவ்வொன்றும் தம்மில் இருவகைப்படுவனவாகும். தனது அமைச்சும், பணியாளர்களும் போரில் நாட்டமும் திணவும் உடையவர்களாகும்போது, தனக்கு நால்வகைப் படையும் நன்கமையப் பெற்றிருந்தால் போரெடுக்கலாம். இப்பணியே போர்ப்பணியின் முதற்கட்டம்.

இக்கருத்திற்கு வள்ளுவரும் உடன்பாடு தெரிவிக்கின்றார் (குறள் .865) திட்டமிட்டு செயல்பட வேண்டியதன் இன்றியமையாமையைத் 'தெரிந்து செயல்வகை' என்னும் அதிகாரத்தில் வலியுறுத்துகிறார்.

இவ்வதிகாரத்தில் மன்னன் போர் செய்வதற்கு முன் அதனால்

1. ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழ் விருந்து, ப. 17.
2. தி. முருகரத்தனம், குறள் கூறும் இறைமாட்சி, ப. 109.

வினையும் அழிவையும் ஆக்கத்தையும் ஒப்புநோக்கி அறிதல் நன்று (குறள் 461). தனித்தோ அல்லது பெரியோர்களுடன் சூழ்ந்தோ ஆராய்தலின் மேன்மையை,

"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
அரும்பொருள் யாதொன்று மில்" (குறள். 462)

என்று சிறப்பிக்கிறார் வள்ளுவர். இதனையே, 'எண்ணித் துணிக கருமம்' (குறள். 467), 'எண்ணிச் செயல்வேண்டும்' (குறள். 470) என்று மீண்டும் வலியுறுத்துகிறார். அதனால் போர் வினைகளை மேற்கொள்வதற்கு முன் ஆராய்ந்து தொடங்குதல் வேண்டும் என்பதை இரு அறநூலாரும் வற்புறுத்துகின்றனர் என்பது தெளிவு.

## வலியறிதல்

அயலரசர்களைப் போரில் வென்று வாகைசூட விரும்பும் வேந்தன் தன் வலியையும் மாற்றான் வலியையும் அறிதல் வேண்டும். வெற்றி வலியறிதலைப் பொறுத்தது. ஆதலால்,

"நன்வலியும், படைபலமும் திறமுடையதாகவும் ஊக்கமுடையதாகவும்
இருக்கும்போது பகைவன் வலியும் அவன்படை வலியும்
தாழ்வுற்றிருப்பதாகத் தெரிந்து அவனுடன் போருக்கு எழலாம்"
(மனு. 7: 171)

என்று தருமசாத்திரம் கூறுகிறது. இக்கருத்தின் சாயல்,

"வினைவலியுந் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியுந் தூக்கிச் செயல்" (குறள். 471)

என்ற குறளாக அமைந்துள்ளது. அறப்போர் செய்யும் அரசன் பல படைகளை உடையவனாய் விளங்கினாலும், பகைவர் மேல் போர்செய்யத் தொடங்கும் பொழுது காலமும் இடமும் எதிரியின் வலிமையும் அறிந்தே போருக்கு முயலவேண்டும். வலியறியாது செல்லும் அரசனது படை இடர்ப்படும். ஆதலால் பகைவரின் வலியறிந்த, பின்பே படையோடு செல்லவேண்டும் என்ற நெறியை மனுதருமமும் திருக்குறளும் ஒருசேரக் கூறுகின்றன.

மேற்கூறிய நான்குவகை வலியறிதலோடு, "போராடும் வேந்தன் தன் பொருள் வலியும் அறிதல் வேண்டும். போர் என்றால் பெரும் பொருளும் செலவாகும். இன்று சட்டமன்ற ஆட்சிமுறை அமைந்த குடியரசு நாடுகளில்

வரவு செலவினங்கள் சட்டமன்றங்களின் ஒப்புதல் பெற்று நடைபெறுகின்றன. ஆனால் அன்று கோனரசு நடைபெற்றதால் அரசனே வரவு செலவினங் களைக் கவனித்து வந்தான். ஆதலால் பொருளின் வலிஅறிதலும் அவன் பணியாகிறது என்பதால்,"[1]

"முன் செய்த செயலால் விளைந்த லாபம், அப்பொழுது இயற்ற வேண்டிய வினை, தான் மேற்கொண்டவற்றால் விளையக்கூடிய வரவு, செலவு இவையனைத்தையும் தீர யோசிக்கவேண்டும்" (மனு. 7: 178)

என்று மனு எச்சரிக்கை செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே வள்ளுவரும்,

"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை" (குறள். 478)

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்" (குறள். 479)

என்ற குறட்பாக்களில் எச்சரிக்கை செய்துள்ளார்.

## காலமறிதல்

போரிடும் வேந்தன் வலியறிதலோடு காலமறிதலும் வேண்டும். காலமாவது மார்கழி, பங்குனி, சித்திரை என்று மனு விளக்குகிறார்.

"மார்கழிமாதத்தில் போரேடுத்தல் நலம். குறைவற்ற
வலிமிகுந்து பகைநாட்டை எதிர்க்க மனமும் இருந்தால்
பங்குனி, சித்திரையிலும் போரெடுக்கலாம். மற்ற
மாதங்களில் பகைவன் வலி குறைந்திருந்து தனக்கு வெற்றி
உறுதி எனத் தெரிந்தால் போரெடுக்கலாம்" (மனு. 7: 182, 183)

போர் மறவர்கள் ஓய்வு பெற்றிருக்கும் காலமே, போர் தொடங்குவதற்கு ஏற்ற காலம் என்பதைவிடப், போர் தொடங்குவதற்கு ஏற்ற செவ்வி, தக்கசமயம் என்று கூறலாம். பகைமன்னனை வென்ற தனக்கு வெற்றி வாய்ப்புக்கிட்டும் நிலை இருந்தால் மன்னன் மார்கழி மாதத்திற்காகக் காத்திராமல் எக்காலத்திலும் போர் தொடுக்கலாம் எனத்தெரிகிறது. இவ்வாறு செவ்வி பார்த்துச் சமரிடுதல் வேந்தர் கடமைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

1. தி. முருகரத்தனம், குறள் கூறும் இறைமாட்சி, ப. 114.

வள்ளுவரும் போரிடும் வேந்தனுக்குக் காலமறிதலின் இன்றியமை யாமையை விளக்க ஓர் அதிகாரம் அமைத்துள்ளார். பகைவரைப் போரில் வெல்ல விரும்பும் அரசனுக்கு அதற்கேற்ற காலம் வேண்டும் என்பதை,

"பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது" (குறள். 481)

என்ற குறிளில் வள்ளுவர் புலப்படுத்தியுள்ளார். காலமாவது, "வெம்மையும் குளிர்ச்சியும் தம்முள் ஒத்து நோய் செய்யாது, தண்ணீரும் உணவும் முதலிய உடைத்தாய்த் தானை வருந்தாது செல்லும் இயல்பிணதாம்" என்று பரிமேலழகர் விளக்குகிறார். காலமறிதல் வேண்டும் எனக்கூறிய வள்ளுவர் அது எக்காலம் என்பதை மனு குறிப்பிட்டதைப்போலக் குறிப்பாகக் கூறவில்லை.

நாடாளும் அரசன் வீரனேயாயினும், நாற்படைப்பலமும் உடையவனேயாயினும் எல்லாக் காலங்களிலும் போர் செய்யவேண்டும் என்ற நியதி இல்லை. வெல்லும் காலம் வரும் வரை பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். வந்தபின் செயலாற்ற வேண்டும். இதுவே வெற்றிக்கு வழியாகும் என்பதை,

"ஓடும்நீரில் உறுமீன் வரும் அளவும் வாடிஇருக்கும் கொக்கைப்
போன்று பகைவெல்லும் வழியை நாடி நிற்கவேண்டும்" (மனு. 7: 106)

என்று மனுதருமம் கூறுகிறது. பொறுமையோடு காத்திருத்தலுக்கும் விரைந்து செயல்படுவதற்கும் கொக்கு உவமையாயிற்று. இத்தொழில் உவமையைப் பயன்படுத்தி வள்ளுவரும்,

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து" (குறள். 490)

என்று கூறுகின்றார். ஞாலம் முழுவதையும் கைப்பற்றக் கருதியிருக்கும் அரசர் காலம் கருதியிருப்பார். நீரோடையில் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கைப்போல், தனக்கேற்ற காலம் வரும் வரையில் பசுப்போலிருந்து பின் பகைவர் மேல் புலிபோல் பாய்ந்து அரசன் வெற்றிபெறுவான். இவ்வாறு காலத்தோடு ஒட்டி ஒழுகும் அரசனையே வெற்றி நாடிச்செல்லும் எனும் கருத்தை இரு நூலாரும் ஒன்றுபோல் வலியுறுத்துகின்றனர்.

## வழியறிதல்

மன்னன் பகைநாட்டின் மீது படையெடுத்துச் சென்றபின்பு, வேற்று நாட்டார் தன்னாட்டின் மீது படையெடுதது வருதல் கூடும். அக்காலங்களில் தன் நாட்டைப் பாதுகாக்கும் பொருட்டுத் தன் நால்வகைப் படைகளை இரண்டாகப் பகுத்து ஒரு பகுதியை நாட்டில் விடுத்துச் செல்லவேண்டும் என்பது அறநெறி. ஆதலால்,

> "தலைநகரில் தக்க பிரதிநிதியை நால்வகைப்படை வலியுடன் காவலுக்கு வைத்து, பின் தக்க ஊர்திகளுடன் பகை எல்லையில் இருக்கும்காலத்தில் வேண்டிய உணவுப்பொருள்களையும் சேமித்துக்கொண்டு தனது படைகளையும் தனது ஆணையிற் கொண்டடக்கி ஒற்றர்களுடன் புறப்பட வேண்டும்" (மனு. 7: 184)

என்று மனு அறிவுறுத்துகிறார். நாடு பிடிக்கும் ஆசையில் தன் நாட்டை இழந்துவிடக்கூடாது. காவலனின் காவல் நாட்டு மக்களுக்கு எக்காலத்தும் இன்றியமையாதது. இவ்வாறே போர் மேற்செல்லும் மன்னன் வழியில் இடையூறுகள் நிகழாதவாறு தன் படையினர்க்குத் தக்க பாதுகாப்பளித்தல் வேண்டும். ஆரவாரமின்றி அமைதியோடு படை நடத்திச்செல்லும் திறனை,

> "வழியில் மரங்களையும், புதர்களையும் வெட்டி, மேடுபள்ளங்கள் நிரவி, வேவுகாரர்களால் பகை மோப்பம் பிடித்து நால்வகைப் படைகள், அவற்றின் தளகர்த்தர்கள், ஊழியர்கள் இவ்வாறு பலவகைப் பரிசனங்களுடன் போர் அறப்படி பகைவன் தலைநகர் நோக்கி மெதுவாகச் செல்லவேண்டும்" (மனு. 7: 185)

என்ற மனுதருமக் கருத்துக்களால் அறியலாம். குடியாட்சிக் காலத்தில் படைத்தளபதிகளே படைகளை நடத்திச்செல்வர். ஆனால் கோனாட்சிக் காலத்தில் மன்னன் தலைமையில் படையினர் சென்றதால் வழியறிதலும் அவன் கடமையாயிற்று. வழியறிதலும் மன்னனின் கடமை என்பதை வள்ளுவர் வலியுறுத்தவில்லை.

## இடமறிதல்

பகை நாட்டை முற்றுகையிட வேண்டிய இயல்பை மன்னன் முதலிலேயே எண்ணித் தேர்ந்து போர் தொடங்கவேண்டும். இல்லையேல் பகை வெல்லல் அரிது. ஆதலால், "முற்றுகையிட வேண்டியவைகளை, தண்டவியூகம், சகடவியூகம், வராகவியூகம், மச்சவியூகம், சூசிகாவியூகம்,

காருடவியூகம் என்று மனு குறிப்பிட்டுள்ளார்."[1] நாற்றிசையில் எதிர்ப்பு ஏற்படுகையில் தண்டவியூகமும் பின்புறம் எதிர்ப்பு ஏற்படுகையில் சகடவியூகமும், இருபுறமும் எதிர்ப்பு வரும்போது வராக காருடவியூகங்களும், முன்னும் பின்னுமாக எதிர்ப்பு நேரிடுகையில் மச்சவியூகமும், முன்னே மட்டும் பயம் வரும்போது சூசிகாவியூகமும் கொண்டு பகைவர்களை எதிர்க்க வேண்டும். சேனாதிபதிகளையும், தானைத்தலைவர்களையும் முற்றுகையிட்ட நகரின் நாற்புறமும் அணிவகுத்து நிறுத்தவேண்டும் (மனு. 7: 189). புல், நெல், விறகு, தண்ணீர், உணவு முதலியன பகைநாட்டிற்குச் செல்லாமல் தடுக்கவேண்டும் (மனு. 7: 195). இவ்வாறு பகைநாட்டை முற்றுகை இடவேண்டிய இயல்பு பற்றி அறிவுரை பகர்கிறது தருமசாத்திரம்.

வள்ளுவர் போரிடும் நிலத்தின் இயல்பு பற்றி விளக்குகிறார். இதனை, 'முற்றும் இடம் கண்டபின் அல்லது தொடங்கற்க எவ்வினையும்' (குறள். 491) என்ற வள்ளுவத்தால் தெளிலாம். பகைமாந்தர் உறையும் இடத்தின் இயல்பை மன்னன் முதலிலேயே எண்ணித் தேர்ந்து போர் தொடங்க வேண்டும் எனக்கூறிய திருவள்ளுவர், 'நெடும்புனலுள் முதலை வெல்ல இயலுமா?' (குறள். 495) எனக்கேட்டு இடமறிதலின் சிறப்பையும் கூறுகிறார்.

பகைநாட்டை முற்றுகையிட வேண்டிய படைபலத்தை மனு விளக்குகிறார். அவ்வாறே, வள்ளுவரும் இடனறிதலோடு படைபலமும் வேண்டும் என்பதை,

> "சிறைநலனுஞ் சீரும் இலரெனினும் மாந்தர்
> உறைநிலத்தோ டொட்ட லரிது" (குறள். 499)

என்ற குறட்பாவின் மூலம் புலப்படுத்தியுள்ளார்.

## போர் அறமறிதல்

"அக்காலத்து அரசர் பெரும்பாலும் தம் வினைகளிலெல்லாம்

---

1. மனு. 7: 107.

| | | |
|---|---|---|
| தண்டவியூகம் | – | சேனைத்தலைவனை முன்னும், தளபதி ஒருவனைப் பின்னும் நிறுத்தி, மன்னன் நடுவிலிருந்து இருபுறமும் யானை, குதிரைகளும், பின் காலாட்படைகளையும் வகுத்தல். |
| சகடவியூகம் | – | முன்னே சிறிது சேனையும் பின்னே பெருஞ்சேனையும் நிறுத்தி நடுவில் இருப்பது. |
| வராகவியூகம் | – | முன்னும் பின்னும் சொற்பப்படைகளும் இடையில் பெரும் படையும் வகுத்தல். |
| காருடவியூகம் | – | சிற்றெறும்புச் சாரைபோல் படைகளை வகுத்தல். |
| மச்சவியூகம் | – | மச்சவியூகம் காருடவியூகத்திலிருந்து வேறானது. |

அறத்தைக் கடைப்பிடித்தனர். சிறுவர், மெலியார், தூயர் முதலியோரைக் கொல்லாமையும், பொருதும் நிலையற்றவன், தோற்றோடுபவன் முதலியோரொடு பொருதாமையும், அடைக்கலம் புகுந்தவனைக் கைவிடாமையும் போர் அறங்களாகப் பின்பற்றப்பட்டன."[1] இவ்வாறு போரிலும் அறத்தைப் பின்பற்ற வேண்டிய அறநெறிகளை மனு வலியுறுத்துகிறார். அவை, "படைக்கலன் ஒன்றைப்போல் மற்றொன்றை உருமாற்றிக் காட்டவும், சல்லடை அம்புகள், நஞ்சு தோய்ந்த சரங்கள், தீயிற் காய்ச்சியவை இவற்றால் பகைவரைக் கோறலுமாகாது. தேரை விட்டுக் கீழே இறங்கிய பேடி, தன்னிடம் தஞ்சமடைந்தவன், சிகை விரித்தவன், உட்கார்ந்திருப்பவன், கை தொழுது நிற்பவன், இவர்களையும் கொல்லக் கூடாது. உறங்குபவன், மகிழ்ச்சியற்றவன், ஆடையில்லாதவன், நிராயுதன், எதிர்த்து நிற்காதவன், சண்டையைப் பார்ப்பவன், பிறருடன் பொருது நிற்பவன் இவர்களையும் கொல்லக் கூடாது. படைக்கலமொடிந்தவன், குழந்தை இறந்து துயரத்தில் இருப்பவன், அடிபட்டுக்கிடப்பவன், புறமுதுகிட்டவன் இவர்களை ஒறுக்காமல் விட்டுவிட வேண்டும்" (மனு. 7: 90–93).

மனுதரும சாத்திரக் கருத்துக்கள் வள்ளுவருக்கும் ஏற்புடையதே. நஞ்சிடல் கோட்பாடு வள்ளுவர் அறியாதது. அதோடு, அறப்போர் செய்யும் அரசன் மாற்றார் வலியிழந்து நிற்குங்கால் அவரை வெல்லுதல் அழகன்று என்பதை,

> "பேராண்மை என்ப தறுகணொன் றுற்றக்கால்
> ஊராண்மை மற்றதன் எஃகு" (குறள். 773)

என்று வான்மறையும் நவில்கிறது. வலிமையோடு போர் செய்தல் ஆண்மையேயாயினும், மாற்றரசனுக்குத் தாழ்வு வந்தவிடத்து அவன்மீது இரக்கம் கொண்டு அன்பு பாராட்டுதலே ஆண்மையாகும். அரசர் எஞ்ஞான்றும் அறநெறி பிறழ்ந்த மறப்போர் செய்யலாகாதென்பதை அறநூல்கள் கூறுகின்றன.

## போர்மறம்

போருக்கு அழைப்பவன் உயர்ந்தவன், சரிநிகரானவன், தாழ்ந்தவன் என்ற ஏற்றத்தாழ்வு கருதாது போரை ஏற்றுப் பொருது நிற்றல் மன்னர் கடன் ஆதலால் போர்க்களத்தில் போர் செய்யும் நெறிமுறைகளைப்பற்றியும்

1. ஞா. தேவநேயன், பழந்தமிழராட்சி, ப. 109.

மனுநெறி புலப்படுத்துகிறது.

> "திறமையான சேனாதிபதிகளோடு கூடிய சில படைகளைப் போர்க்களத்திற்கு வெகுதொலைவில் நிறுத்தி, பேரி, கனகதப்பட்டை முதலியன முழங்கும் போது படைகள் 'மேல்வருக' என்றும், வேறு வகைப் பல்லியம் முழங்குகையில் 'ஓடிவிடுக' என்றும் குறிப்புக்கூறி வைக்கவேண்டும்" (மனு. 7: 190)

> "குருசேத்திரம், மச்சதேசம், பாஞ்சாலம், சூரசேநம், இவ்விடத்தாராகவும் தடித்தவராயும் உள்ளவர்களைப் படைக்கு முன் நிறுத்திப் போரிடச்செய்யலாம்" (மனு. 7: 193).

> "வலிமையற்ற வீரர்களைக் கும்பலாகவும், பலமுள்ளவர்களைத் தனித்தனியாகவும் நின்று எதிர்க்குமாறு ஆணையிடலாம்"(மனு. 7: 191).

> "சமதரை யில் பரி, தேர் இவற்றுடனும் நீர்நிலைகளில் ஓடம், யானைகளின் மீது நின்றும் செடி, புதர் நிறைந்த இடங்களில் அம்புகளாலும் அவை இல்லாதவிடத்து உலக்கை , கத்தி முதலியவற்றாலும் போரிடவும்" (மனு. 7: 192).

படையினருக்கு வெற்றியைக் குறித்து ஊக்கமும் தோல்வியைக் குறித்து நாணமும் வருமாறு வீரமொழிகளை, இதமாகக்கூறி, வெற்றிப்பாதையை நம்பி அச்சமின்றிப் போரிடவேண்டும்.

மனு கூறிய குருசேத்திரம், மச்சதேசம் போன்ற அமைப்பு திருவள்ளு வருக்கும் தமிழ்ப் படைகளுக்கும் ஏற்றதல்ல என்பதால் அவை வள்ளுவத்தில் இடம்பெறவில்லை. ஆனால் மனு கூறிய படைக்குணங்கள் வள்ளுவரின்,

> "அடல்தகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
> படைத்தகையால் பாடு பெறும்" (குறள். 768)

> "தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
> போர்தாங்கும் தன்மை அறிந்து" (குறள். 767)

என்று படைமாட்சி கூறும் கருத்துக்களுடன் ஒத்துள்ளன.

போர்க்களத்தில் இறங்கிய மன்னன் வெற்றி ஒன்றையே முதன்மையாகக் கருதவேண்டும். அதற்குரிய நெறி முறைகளையும் அறநூலார் எடுத்துரைக்கின்றார். தன்னை முன்னம் அவமதித்த மன்னன்

வழியிற் பிறந்தவனை அவனது அமைச்சர்களுடன் சேர்ந்து வெற்றிபெற வேண்டும் அல்லது பகைவர்க்குப் பயன்படும் நீர்நிலைகளைத் தகர்த்து, கோட்டை, உழலைமரம் இவற்றையும் நாசப்படுத்தி எதிரியின் நாற்படைகளைத் தன்னுடையவைகளாக்க வேண்டும் (மனு. 7: 196,197). இவ்வாறு வெற்றிபெற்றபின்னர் தேர், பரி, கரி, குடை, ஆடை, தானியம், பசு, பெண், படைக்கலம் முதலியன போரில் வென்றவனுக்கே உரிமையுடையனவாகின்றன. மண், பொன், வெள்ளி, இரத்தினம் ஆகிய உயர்ந்த பொருட்களைத் தகுதி அறிந்து வீரர்களுக்குப் பகிர்ந்தளித்தல் மன்னனின் கடமையாகின்றது. மனு கூறிய போர்முறைகள் வள்ளுவருக்கு ஏற்புடையதெனலாம்.

பகை முடித்த வேந்தன் வெற்றிக்குக் காரணமான தேவரையும், அந்தணரையும் போற்றிப் பாராட்டியபின் பகைநாட்டு மக்களையும் மகிழ்விக்க வேண்டிய கடப்பாடுடையவனாகின்றான். ஆதலால் அதற்குரிய நெறிமுறைகளையும் தருமசாத்திரம் வகுத்துரைக்கிறது.

> “பகைநாட்டு மக்கள் யாவரும் அச்சமின்றி வாழ்க என்று அறிவிக்க வேண்டும். அதோடு வென்ற நாட்டின் குடிகள் அமைச்சர் ஆகியோரின் மனநிலையை அறிந்து, பகையரசனின் குடியில் பிறந்த ஒருவனை, அந்நாட்டுக்கு முடிசூட்ட வேண்டும்” (மனு. 7: 202).

> “தனக்கு அடங்கி நடப்பதாக அவனிடம் உறுதிமொழி பெற்று, அமைச்சர் முதலிய அரசு அலுவலர்களை அமைத்துக் கொடுத்து, இரத்தினம்,ஆடைகள் முதலியவற்றைப் பரிசளித்து அவனைமகிழ்விக்க வேண்டும்” (மனு. 7: 203).

> “அவனால் கொடுக்கப்படுகின்ற பூமி, பொருள் இவற்றை வழிச் செலவுக்குப் பெற்றுக்கொள்ளலாம்” (மனு. 7: 207).

இவ்வாறு போருக்குப்பின்னர் பகைநாட்டு மன்னனையும் மக்களையும் காப்பதால் மன்னனுக்குப் புரவலன் என்ற பெயரும் ஏற்பட்டிருக்கலாம்.

## படை காத்தல்

போர் செய்து வெற்றிபெறல் மட்டும் மன்னனின் நோக்கமன்று. வெற்றிக்குக் காரணமான நால்வகைப் படைகளையும், எப்பொழுதும் பேணிப் பாதுகாத்தல் வேண்டும். படைகளைப் பேணுதல் மன்னனின் அன்றாடக் கடமைகளுள் ஒன்றாகும். ஆதலால்,

"யானை, குதிரை, தரைப்படை இவற்றின் தன்மைகளையும் மருத்துவத்தையும்அறிந்துள்ளவர்களை மேற்பார்வைக்கு நியமித்துக்கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் துறை ஊழியர்களை எச்சரிக்கையுடன் நிர்வகிக்க வேண்டும்"(மனு. 7: 81)

என்று தருமசாத்திரம் கூறுகிறது. செல்வத்தை ஈட்டவும், காக்கவும் மன்னன் எவ்வாறு பாடுபடுகிறானோ அவ்வாறே படைகளின் பொருட்டும் பணியாளர்களை நியமித்துப் பாதுகாத்தல் வேண்டும். நால்வகைப் படைகளும் விழிப்புடனிருக்கும் மன்னனுக்கே குடிமக்களும் பகைநாட்டாரும் அஞ்சி நடப்பர். அதனைக்கொண்டே தனது ஆட்சியை நிலவச் செய்யலாம் (மனு. 7: 103). ஆதலால் வில் பயிற்சிக்கூடம், வாகனம், அணிகள், ஆயுதம் முதலிய சாலைகளையும் மன்னன் அன்றாடம் பார்வையிட்டான் (மனு. 7: 222) என்று தருமசாத்திரம் கூறுகிறது.

அரசரின் உடைமைகளுள் படையும் ஒன்றாகும் என மொழிந்த வள்ளுவரே படைமாட்சியும் படைச்செருக்கும் பற்றி மொழிகின்றார். நாட்டின் செல்வத்துள் படையே தலைமைச் செல்வம் என்று வலியுறுத்துகின்றார்.

"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசரு ளேறு" (குறள். 381)

என்ற பொருட்பாலின் முதற்குறளில் குறித்த முதற்சொல் படை. படையின் இன்றியமையாத முதன்மையை இங்ஙனம் வள்ளுவர் உணர்த்தினார் எனக்கருதலாம்.

படை என்றால், யானை, தேர், குதிரை, காலாள் ஆகிய நான்கையும் ஒருசேரக் குறிப்பதாகவும் (குறள். 765). இதோடு தொல்படையும் (குறள். 762), தூசிப்படையும் (குறள். 767) இருந்தன. இப்படைகளை எல்லாம் பாதுகாத்தல் மன்னனின் கடமையாகும். ஆதலால் படைக்குத் தேவையான நிலை மக்களையும் தானைத்தலைமக்களையும் (குறள். 770) நியமித்து மன்னன் பாதுகாத்தான். இங்ஙனம் படையைப் பேணுதல் மன்னனின் அன்றாடக்கடமை என்பதைத் தருமசாத்திரமும் வள்ளுவமும் வலியுறுத்துகின்றன.

## ஒற்றாடல்

போருக்குத் திட்டமிடும் மன்னன் தன் திட்டங்களைப் பகைவர் அறியவிடக் கூடாது. ஆனால் பகைவன் திட்டங்களைத் தான் அறிந்திருக்க

வேண்டும். இதற்கு ஒற்றரை ஆளுதல் வேண்டும். ஆதலால் ஆளும் மன்னன்,

> "தனது அமைச்சர்களிடம் வஞ்சகமாய் நடவாமலும், பகைப் புலன்களை ஒற்றரால் அறிந்தும் இருக்கவேண்டும்" (மனு.7: 104)

என்கிறது மனுதருமம். ஏனெனில் ஒற்றின்றி மன்னன் வெற்றிபெறல் அரிது. ஒற்றர் ஒருவரல்லர், பலர் இருந்தனர் என்பதை,

> "மாலையில் இறைவழிப்பாட்டிற்குப்பின் அரண்மனைக்குள் ஒற்றர்கள் கூறும் செய்திகளை விசாரித்து அறிந்த பின் அவர்கள் ஒவ்வொரு வரையும் விடை கொடுத்தனுப்ப வேண்டும்" (மனு. 7: 223)

என்று மனு குறிப்பிடுகின்றார்.

ஒற்றர் கூறும் செய்தி மற்றவர் அறியாது, பாதுகாக்கப்பட வேண்டிய செய்தியாதலால் மன்னனும் ஒற்றரும் அரண்மனையில் உரையாடினர். மன்னன் தனிமையில் அமர்ந்து சிந்திப்பதற்கு ஏற்றவாறு மாலைவேளையில் உரையாடியிருத்தல் வேண்டும் அல்லது வேற்றுப்புலம் சென்ற ஒற்றர் திரும்பி வருவதற்கு மாலைவேளையாகி இருக்கலாம். ஆனால் அரசனின் அன்றாட அரசுப்ணிகளுள் இறுதியான பணி ஒற்றர்களை விசாரித்தறியும் பணியே என்பது தெளிவு.

ஒற்றாடலுக்காக வள்ளுவர் ஓர் அதிகாரமே அமைத் துள்ளார். ஆளும் மன்னன், ஒற்றரைத் தம் கண்ணொளியெனக் கருதவேண்டும் (குறள். 591). ஒற்றரின்மூலம்அரசுப்பணியாளர்,அரசரின் உறவினர், பகைவர் ஆகியோரைப் பற்றிய செய்திகளை அரசன் அறிந்திருக்கவேண்டும் (குறள். 584). ஒற்றர் ஒருவரன்றிப் பலர் இருந்தனர் என்பதை,

> "ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
> ஒற்றினால் ஒற்றிக் கொளல்" (குறள். 588)

என்ற வள்ளுவத்தால் அறியலாம். ஒற்றர் கூறும் செய்தி மற்றவர் அறியாது பாதுகாக்கப்பட வேண்டியதாகும். அதனால் ஒற்றனுக்குச் செய்யும் சிறப்பை மன்னன் பிறர் அறியாதவாறு செய்தான் (குறள். 590). இவ்வாறு ஒற்றாடல் பற்றி மனுவும் வள்ளுவரும் பரக்கப் பேசுகின்றனர்.

## அறநெறி

நல்லனவே செய்தல் வேண்டும். தீயனவிலக்க வேண்டும். இவையே அறநெறியின் அடிப்படையாகும். இவற்றிலிருந்து எழுவனவே மற்ற நெறிகள் அனைத்துச் சட்டவிதிகளுக்கு மக்களில் பலர் பணிந்து நடப்பது அச்சத்தால் மட்டுமன்று அறவுணர்வால் தான் என்பதை மனு வலியுறுத்தியுள்ளார்.

> "உடலுடன் உலகத்தொடர்புகள் அழிகின்றன. அறம் ஒன்றே பின்னும் நம்மைத் தொடர்வது. ஆதலால் அறம் ஒன்றே உயிர்க்கு உற்ற துணை" (மனு. 8: 17)

என்ற மனுதருமத்தின் அடிப்படையில் வள்ளுவரும் அறத்தை வலியுறுத்தி யுள்ளார். எனவே அறம் என்பது உயிர்க்கு உற்ற துணையாகும் என்பதில் அறநூலாசிரியர்கள் கருத்தொற்றுமை காட்டியுள்ளனர்.

## அறமும் சட்டமும்

சட்டக்கொள்கைகள் பல அறத்தின் அடிப்படையில் தோன்றியவை. "குற்றம் செய்தவர்களைத் தண்டிக்க வேண்டும் என்பது அறநெறி. குற்றம் இழைத்தோரைத் தண்டிக்கிறது சட்டம். கற்பைக் காக்கவேண்டும் என்று அறம் கூறுகிறது; கற்பை அழித்தல் கடுங்குற்றம் எனச் சட்டம் விதிக்கிறது. பிறருக்கு இன்னா செய்யாமையைப் போற்றுகிறது அறம். இன்னாசெய்தலைத் தடுக்கிறது சட்டம். அடுத்தவர் மீது அன்புகாட்டு என்ற அறநெறியே அயலாருக்குத் தீங்கு விளைவிக்காதே என்ற சட்டவிதியாக மாறுகிறது."[1] "நன்மையைச் செய் என்று அறம் கூறுகிறது; தீமையைச் செய்யாதே என்று சட்டம் தடுக்கிறது. அறம் காரணங்காட்டி மக்களை நல்வழிப்படுத்துகிறது; சட்டம் கட்டாயப்படுத்தி அவர்களை நூல்வழியில் நிறுத்துகிறது. அறம் அறிவுறுத்துகிறது; சட்டம் அச்சுறுத்துகிறது."[2] இவ்வாறு அறமும் சட்டமும் இணைந்து செயல்படுகின்றன.

"தருமத்தின் காவலர் என்றுதான் பழங்கால இந்தியாவில் அரசன் கருதப்பட்டான். தர்மத்வஜ, தர்மகேது, தர்மாதிபதி என்ற உயர்நிலைகளையும் புத்தமத நூல்கள் அரசனுக்கு வழங்கிச் சிறப்பிக்கின்றன."[3] இப்பெயர் களுக்கேற்பத் தன் குடையின்கீழ் வாழும் மக்களைப் பாதுகாத்தல்

1. மா. சண்முக சுப்பிரமணியம், குறள் கூறும் சட்டநெறி, ப. 40.
2. மா.சண்முக சுப்பிரமணியம், திருக்குறளும் வழக்கியலும்,'செந்தமிழ்', தொகுதி 63, பகுதி 1.
3. ஆர். எஸ். சர்மா, பழங்கால இந்தியாவில் அரசியல் கொள்கைகள், நிலையங்கள், சில தோற்றங்கள், ப. 76.

மன்னனின் கடமை. மன்னனின் காவலுக்காக மக்கள் தீர்வை செலுத்து கின்றனர். அதனால் ஆளும் அரசன் அறநெறிப்படி நல்லோரைக் காத்தலும் தீயோரை ஒறுத்தலும் வேண்டும். குற்றம் செய்தோர் தண்டிக்கப்பட வேண்டும் என்ற வரையறை இருந்தது (மனு. 8: 316). திருடல் முதலான மறச்செயல் புரிவோரை, ஊரைவிட்டு அனுப்பல், கை, கால் வாங்குதல், நெருப்பிடல் போன்ற தண்டனைகளால் அடக்கினான் மன்னன். குற்றத்திற்கேற்பத் தண்டனைகள், பொருளின் மதிப்பிற்கேற்பத் தண்டனை மடங்குகள், வருணாச்சிரம முறைப்படியும் தண்டனையில் உயர்வுதாழ்வுகள் முதலியவற்றைத் தரும சாத்திரம் எடுத்துரைக்கிறது; வள்ளுவமும் இதனை வலியுறுத்துகிறது.

"அரசன் தர்மத்தைக் கைவிட்டால் ஒருவருக்கும் சொந்தமாக மனைவியோ, செல்வமோ, வீடோ இராது. ஏனைய தர்மங்கள் அழிந்து விட்டால் நான்கு வருணங்களை நிலைநாட்டவும், ஒழுக்கத்தைப் பேணவும் உரிய சட்டங்களை இயற்றி அது தழைத்தோங்கச் செய்வது மன்னன் கடமை யாகும்"[1] எனும் கருத்துக் கருத்தக்கது.

## முறைசெய்தல்

ஆதிகாலத்தில் இருந்தே இந்திய நாட்டில் நீதி வழங்குதல் என்பது அரசனின் கடமையாக இருந்தது. மன்னனே நீதிபதியாக வீற்றிருந்து அடக்கத்தோடு வழக்கை விசாரித்தான். "வழக்குகளை ஆய்ந்து துணிய விரும்பும் மன்னன் ஆய்ந்துரைக்கவல்ல அமைச்சர், அந்தணரோடு வணக்க முள்ளவனாய் நீதிமன்றம் சென்று, நின்றிருந்தவாறே வழக்கை விசாரிக்க வேண்டும் (மனு. 8: 1,2) என்று மனுதருமம் கூறுகிறது. மன்னன் அன்றாடம், "பதினெட்டுவிதமான வழக்குகளை"[2] அறநூல் துணிபாலும் ஆன்றோர் கொள்கையாலும் விசாரித்து நீதி வழங்கினான்.

நீதி வழங்குதல் என்பதை முறைசெய்தல் என்கிறார் வள்ளுவர்.

---

1. ஆர். எஸ். சர்மா, பழங்கால இந்தியாவில் அரசியல் கொள்கைகள், நிலையங்கள், சில தோற்றங்கள், ப. 77.

2. வழக்குகள் பதினெட்டாவன:

"கடன்கோடல், அடைக்கலப்பொருள், பிறன் உடைமையை விற்றல், கூடித்தொழில் செய்து பொருளீட்டல், வாக்களித்தபடி வழங்காமை, ஊதியம் கொடாமை, கட்டுப்படி நடவாமை, கொண்டு கொடுப்பவற்றில் பின்னர் விளையும் ஐயம், மாட்டையுடையானுக்கும் மேய்ப்பவனுக்கும் இடையே வழக்கு, எல்லை வழக்கு, அடித்தல், வசைமொழிதல், களவு, வன்செயல், பிறன்மனை பறித்தல், மாதராடவர்கடன், பங்கிட்டுக்கொள்ளல், கவறாடல் இவை பதினெட்டுமாம்" (மனு. 8: 4–7).

முறைசெயல், முறை வழங்கு மன்றங்கள் வழக்குகளின் இயல்பு ஆகியவை பற்றிய குறிப்பு வள்ளுவத்தில் இல்லை. அரசன் நல்லமுறையில் முறை வழங்கவேண்டும்.முறை செய்து மக்களைக் காக்கும் மன்னன் இறைவனாகக் கருதப்பட்டான் (குறள். 388). முறை செய்யாதவன் இறை என்று கருதப்பட மாட்டான் என்ற உட்கோளும் வள்ளுவர் கருத்தில் அடங்கியுள்ளது. அக்காலச்சமுதாயத்தில் மன்னனே நீதிபதியாக வீற்றிருந்து மக்களின் வழக்குகளை விசாரித்தான் என்ற கருத்தை இரு நூலாசிரியர்களும் புலப்படுத்தியுள்ளனர்.

"பண்டை உலகில் அரசனே முறை வழங்குவோன் முறைமன்றங்கள் அன்று இருந்திருக்கலாம். ஆனால் தலைநகரில் வாழும் அரசனே இறுதித் தீர்ப்பிற்கு உரியவன்"[1] என்ற அறிஞர் கருத்தும் இவண் நோக்கற்குரியது. இவ்வாறு மன்னன் இயற்ற வேண்டிய விசாரனணகள் எந்தநாட்டில் நான்காம் வருணத்தானால் நடைபெறுகின்றதோ அந்நாடு சேற்றில் அகப்பட்ட பசுவைப்போல் கண்முன்னே துன்பமுறுகின்றது (மனு. 8: 31) என்றுகூறி, மன்னன் வழக்கை விசாரிக்க வேண்டிய கடமையுடைவன் என்பதை மனு மேலும் வலியுறுத்தியுள்ளார்.

## ஆராய்ந்து நீதி வழங்குதல்

மக்களுக்கு எளிதில் நீதி கிடைக்கவேண்டும். அதுவும் விரைவில் கிடைக்கவேண்டும். இதுவே நல்லரசின் முதற்கடமை. இதற்கு மாறாக நீதிமுறை செய்யாத அரசன் தாழ்நிலை அடைந்து தானாகவே அழிந்துவிடுவான். ஆராய்ந்து நீதி வழங்காத பாண்டியன் நெடுஞ் செழியனின் இறப்பும் இதற்குச் சான்று பகர்கின்றது. அதனால் ஆராய்ந்து நீதி வழங்கவேண்டும் என்பதே மனுநெறி. "குற்றமற்றோரைப் பெருளாசையால் தண்டித்தோ, குற்றவாளிகளைக் கண்ணோட்டத்தால் விடடொழித்தோ விடுகின்ற மன்னன் இம்மையில் ஒளி இழந்து, மறுமையில் நரகம் உய்வான்"(மனு. 8: 128) என்று மனு கூறுகின்றார். ஆராய்ந்து உண்மைக்கு ஏற்பத் தீர்ப்புச்செய்யாத அரசன், பழி, பாவம் எய்தித் தாழ்ந்த நிலையில் நின்று தானே கெடுவான் என்பதை வள்ளுவர்,

" எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தன்பதத்தான் தானே கெடும்" (குறள். 548)

என்ற குறளில் கூறியுள்ளார். ஆராய்ந்து நீதி வழங்கவேண்டும் என்ற

1. தி. முருகரத்தனம், குறள் கூறும் இறைமாட்சி, ப. 127.

கருத்தில் இரு நூலாசிரியர்களும் உடன்படுகின்றனர்.

## அந்தணர் நீதி வழங்கல்

அன்றாடம் அரசனே அறங்கூறும் அவையத்திற்குச் சென்று நீதி வழங்கினான் எனக்கூறிய மனு, அந்தணனுக்கும் நீதி வழங்கும் உரிமை இருந்தமையையும் கூறுகிறார். "பிணியுற்ற போதோ, வேறு காரியங்களுக்குச் சென்றிருந்த போதோ, மன்னன் நேரில் இருந்து விசாரிக்க முடியாதபொழுது அவ்வழக்கின் உண்மையைக் கண்டறியும் பொருட்டு கற்றறிந்த அந்தணனைக் கொண்டு விசாரித்தான்" (மனு. 8: 9). கற்றறிந்த அந்தணனுக்குத் தன் குலத்தொழிலோடு நீதி வழங்கும் உரிமையும் அளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அந்தணர் நீதி வழங்கியதாக வள்ளுவர் குறிப்பிடவில்லை.

## நீதி வழங்கும் சபை

மனுவின் காலத்தில், அரசனது அங்கீகாரம் பெற்ற அல்லது அரசனால் அனுமதிக்கப்பெற்ற ஊராரும் சான்றோரும் அமர்ந்து நீதி வழங்கும் சபை இருந்தது. சபிகர் மூவரும், நியமிக்கப்பட்ட நீதி அந்தணனும் கொண்டதே சபை (மனு. 8: 11) என்கிறது மனுநூல்.

நால்வர் கொண்ட சபையினர், நடுவுநிலை பிறழாது தங்கள் கடமையைச் செய்தனர். விசாரணையில் நீதி துலங்காமல் போனால் தங்களுக்குப் பாவம் வந்துசேர்வதாக நம்பினர். வழக்கினை ஆய்ந்து விசாரிக்கவில்லையெனில் நீதிபதியே தன்னைக் குற்றவாளியாகக் கருதினார் (மனு. 8: 14,18,19). நீதி வழங்கும் சான்றோர் நடுவுநிலையிலிருந்து அணுவளவேனும் அகலாமல், நேர்மை பிறழாமல் செயல்படுதல் இன்றி–யமையாதது என்பதை,

> "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
> கோடாமை சான்றோர்க் கணி" (குறள். 118)

> "கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
> நடுவொரீஇ அல்ல செயின்" (குறள். 116)

என்ற இரு குறட்பாக்களில் அறிவுறுத்தியுள்ளார்.

அக்காலத்தில் அறநிலை திரியா அவையங்கள் இருந்தன என்பதற்கு,

" அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன் கோலன்ன செம்மைத்தாகிச்
. . . . .
சிறந்த கொள்கை அறங்கூற வையம்" [1]

என்ற இலக்கியச்செய்தியைச் சான்றாகக் காணலாம்.

## குற்றமும் தண்டனையும்

"குற்றம் என்பது சட்டத்தை மீறிய செயல் எனப்படும். பொதுவாகக் குற்றம் என்பது ஓர் அரசாலோ அல்லது ஒரு சமுதாயத்தாலோ வகுக்கப்படும் சட்டதிட்டங்களைப் புறக்கணித்துச் செய்யப்படும் செயலாகும் என்பர். மனித இனத்தின் தன்னலமிக்க செயலே குற்றம் எனவும் கருதப்படுகிறது"[2]

மேலும், "எந்தக்காலத்திலும் சட்டங்களும் கட்டுப்பாடுகளும் சமுதாயத்தால் விரும்பி ஏற்கப்படுவன அல்ல. ஒரு சமூகம் குற்றம் என்று காட்டும் ஒரு செயலையே மற்றொரு சமூகமும் குற்றம் என்று கொள்ளும் என்பது இல்லை. ஏனெனில் அச்சமூகத்தில் அது ஏற்றுக் கொள்ளக்கூடிய செயலாக இருக்கலாம். எனவே சமூகங்கள் தோறும் குற்றங்களும் சட்டங்களும் வேறுபடுகின்றன."[3]

குற்றங்களுக்குத் தண்டனை வழங்குதல் அரசனுடைய கடமைகளுள் மிக முக்கியமானது எனலாம். தருமசாத்திரம் இதைத் 'தண்டநீதி' என்று குறிப்பிடுகின்றது. தண்டனை வழங்குவது என்பது நாட்டில் அமைதிநிலவச் செய்வதையும் குற்றங்கள் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டது. மேலும் "குற்றவாளிக்குத் தண்டனை விதிப்பது அவன் மீண்டும் குற்றம் செய்வதைத்தடுத்து, சமுதாயத்தைக் காத்தல் வேண்டும் என்பதற்காகத்தான் என்பது இன்றைய சட்ட வல்லுநர்களின் ஆய்ந்த முடிவாகும்"[4] பயிரைப் பாதுகாப்பதற்காகவே உழவன் வயலிலிருந்து களைகளை அகற்றுகிறான். களைகள் மீது வெறுப்போ, சினமோ குடியானவனுக்கு இல்லை. இம்முறையில் சமுதாயம் என்ற பயிரைப் பாதுகாக்கும் பொருட்டுக் களைகள் போன்ற குற்றவாளிகள் அகற்றப்படுகின்றனர், ஒறுக்கப்படுகின்றனர்

---

1. மதுரைக் காஞ்சி. 489-492.
2. ஜலஜா கோபிநாத், பழந்தமிழகத்தில் குற்றமும் தண்டனையும், தமிழியல் ஆய்வுக்கட்டுரைகள், ப. 43.
3. ச. தண்டபாணிதேசிகர், காப்பியங்கள், ப. 29.
4. மா. சண்முகசுப்பிரமணியம், சட்ட இயல், ப. 88.

என்பதை,

> "களை எடுத்துப் பயிரைக்காத்தல் போலும் தன்நாட்டில்
> தீயாரை விரட்டி நல்லோரைக் காக்கவேண்டும்" (மனு. 7: 110)

என்று மனு விளக்கியுள்ளார். குற்றங்கடிதல் களை எடுத்தலுக்கு நிகரான செயலாகக் கருதப்படுகின்றது.

"குற்றம் செய்தாரை ஒறுக்க வேண்டும், அடிக்கவேண்டும் என்று மனு கூறியுள்ளார். குறி, வயிறு, நா, கை, கால், கண், மூக்கு, காது, பொருள், உடல் என்பன தண்டிக்கப்பட வேண்டிய இடங்கள் பத்து. எந்த உறுப்பால் குற்றமிழைக்கப்படுகிறதோ அந்த உறுப்பில் அடிப்பதே தக்க தண்டனை என்பது கருத்து (மனு. 8: 1126). மேற்கூறிய பத்து இடங்களுள் ஒன்றாகப் பொருளும் சுட்டப்பட்டுள்ளது. பிறர் பொருளைக் கவர்ந்தால் தண்டமாகப் பொருளையே திருப்பிக் கொடுக்குமாறு செய்தல் வேண்டும் என்பதாகும். தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே மனுவின் நோக்கமாகும்.

இந்நெறியின் அடிப்படையில் திருக்குறளும்,

> "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனோடு நேர்" (குறள். 550)

என்று கூறுகின்றது.

"கொடியவர்களை வடநூலார் ஆததாயிகள் என்பர். இல்லம் முதலிவற்றில் நெருப்பிடுவாரும், நஞ்சிடுவாரும் ஆயுதம் முதலியவற்றால் கொலைபுரிவாரும் பிறர்பொருளை அறவே கவர்வாரும் பிறர் நிலத்தை அபகரிப்பாரும், பிறர்மனை நயப்பாரும் ஆகிய இவர்கள் ஆததாயிகள் ஆவர்."[1] இவர்கள் செய்த குற்றத்தின் தன்மைக்கு ஏற்பத் துன்பஞ் செய்தல், பொருட்கோடல், கோறல் முதலானவற்றை அளித்து நல்லாட்சி நிலவச்செய்தல் வேண்டும். இச்செயலை, 'பசும்புல் களைகட்டதனோடு நேர்' என்று இரு நூலாரும் குறிப்பிடுகின்றனர். இதையே,

> "நீ மெய் கண்ட தீமை காணின்
> ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி"[2]

என்று இலக்கியமும் சுட்டுகிறது.

---

1. சுக்கரநீதி 3: 41.
2. புறம்., 10: 45–46.

## தக்காங்கு நாடி ஒத்தாங்கு ஒறுத்தல்

குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை விதிக்கும் முறை பற்றிச் சட்டவியலில் பல கொள்கைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று குற்றவாளியின் வயது, மனநிலை, குற்றத்தின் தன்மை, குற்றம் இழைத்த சூழ்நிலை ஆகியவற்றைத் தக்காங்கு நாடித் தண்டனையை நிர்ணயித்தல் வேண்டும் என்பது. இதற்கேற்ப மனுவும், "குற்றவாளியைத் தண்டிப்பதில் இடம், நேரம், திறன், அறிவு, இவற்றை எல்லாம் எண்ணிப்பார்த்தே ஏற்றவாறு தண்டிக்கவேண்டும்" (மனு. 7: 16). "முதற் குற்றவாளி மீது பரிவு காட்டும் சட்டம் பழங்குற்றவாளிக்குக் கடுந்தண்டனை விதிக்கும்படி கூறுகின்றது. முன்னரே ஒருமுறை தண்டனை பெற்றவன் திருந்தவில்லையானால் அவன் திருந்துவதற்கென்று கடுமையான தண்டனையைச் சட்டம் விதிக்கும் "[1] என்ற சட்டவியல் கருத்தும் இவண் நோக்கற்குரியது.

## கண்ணோட்டம் இன்மை

"நீதிதேவனுக்குக் கண்கள் இல்லை (The Goddess of Justices is blind) என்று கூறுவர். தம்முன் நிற்பவர்கள் யார் என்று கண்டால் அவர்கள் மீது பரிவு ஏற்படலாம். எனவே தம்முன் நிற்போர் யார் என்று காண இயலாத நிலையில் கண்களின்றி அமைகிறது நீதிதேவதை."[2] இங்ஙனம் காட்டுதற்கு நீதிபதிகள் வழக்கின் இயல்பை ஆராய்ந்த பின்னர் வழக்கின் தரப்பினர் யார்மாட்டும் கண்ணோட்டம் இன்றி ஒழுகவேண்டும் என்பதே கருத்தாகும். "வலியார், மெலியார், செல்வர், வறியர் ஆட்சிநடத்துபவர், ஆளப்படுபவர் என்ற பாகுபாடு காட்டாமல் ஒரேநிலையில் வைத்து நீதி வழங்குவதே முறை. சட டக்கொள்கைகளை மக்களிடையே வேறுபாடு காட்டாமல் நீதிமன்றத்தினர் செயற்படுத்துகின்றனர். நீதி வழங்குகையில் ஒருவரை விட மற்றொருவர் மீது அதிகமாக மதிப்புக் காட்டுவது முறையன்று."[3] இப்பணிகளை,

> "வெகுளி, புலனின்பம், இவற்றை அடக்கி, இயமதருமனைப்போல், யாரிடத்தும் விருப்பு, வெறுப்பு இல்லாதவனாய் நீதியுடன் யாவருக்கும் பொதுவாக நடப்பது மன்னர் அறம்" (மனு. 8: 173)

---

1. மா.சண்முகசுப்பிரமணியம், சட்டஇயல், ப. 157.
2. மேலது, ப. 198.
3. தி. முருகரத்தனம், வள்ளுவர் வகுத்த அரசியல், ப. 20.

என்று மனுதருமம் எடுத்துரைக்கிறது. வள்ளுவரும்,

"ஓர்ந்து கண் ணோடா திறைபுரிந்தி யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை" (குறள். 541)

என்று கூறியுள்ளார். 'கண்ணிற்கு அணி கண்ணோட்டம்' (குறள். 575) என்று கூறிய வள்ளுவரே முறைசெய்வோர்க்குக் கண்ணோட்டம் கூடாது என்று கூறியுள்ளார்.

## உடமை காத்தல்

ஒருவனது செல்வத்தை அவனது உடமை எனலாம். தான் வைத்திருக்கும் உணவைத்தான் ஒருவன் உண்ண முடியும். தன்னிடமுள்ள உடமைகளைத்தான் ஒருவன் அணிந்து கொள்ள முடியும். எனவே உணவு, உடை, வீடு போன்ற வாழ்விற்கு இன்றியமையாத பொருள்கள் நம் உடமையில் இருந்தால்தான் நம்மால் வாழமுடியும். "ஒருவன் உண்ணும் உணவை, இன்னொருவன் தட்டிப் பறித்துக்கொள்ளலாம் என்றால், ஒருவன் அணிந்துள்ள உடைகளை மற்றொருவன் பிடுங்கிக்கொள்ளலாம் என்றால், ஒருவன் குடியிருக்கும் வீட்டைவிட்டு அவனைப் பிறர் துரத்திவிடலாம் என்றால் மனிதவாழ்க்கையே இல்லை. ஆதலால் ஒருவனது உடமையைப் பாதுகாப்பது சட்டத்தின் தலையாய கடனாகின்றது."[1] இது மன்னனின் கடமையும் ஆகும் என்பது மனுநீதி. "தக்க வயதடையாத (பதினாறு வயதுவரை) சிறுவனுடைய பொருளை அவனது குருகுலவாசம் முடியும் வரையிலாவது தக்க வயதடையும் வரையிலாவது மன்னன் காப்பாற்றித் தரவேண்டும் (மனு. 8: 27). மேலும் மலடி, குழந்தையைப் பறிகொடுத்தவள், நாடோடியாய்ப் போனவனுடைய கற்புமனைவி, உற்றார், உறவினர் அற்ற பெண்கள், விதவை இவர்களின் பொருளையும் மன்னனே காக்கும் கடப்பாடுடையவன்" (மனு. 8: 28). அவர்களின் உறவினர், பொருளை அபகரித்துக்கொண்டு, காப்பாற்றாமல் கைவிட்டுவிட்டால், அப்படிச் செய்தவர்களைத் திருடர் எனக்கருதித் தண்டிப்பதோடு,பொருளை உரியவர்க்கு அறமறிந்த அரசன் மீட்டுக்கொடுக்க வேண்டும் என்பது மனுநெறி.

## ஒப்பிடு

அரசன் அகவையில் சிறியனேயாயினும் அவனைஇளையர், இன முறையர் என இகழ்தல் கூடாது. அவனிடம் உள்ள ஒளியால் அவனைப்

1. மா. சண்முகசுப்பிரமணியம், சட்ட இயல், பக். 229–230.

போற்றவேண்டும் என்ற கருத்தை மனுவும் வள்ளுவரும் வலியுறுத்து கின்றனர்.

நாட்டை ஆளும் அரசனுக்குரிய பண்புகளாக அறிவுடைமை, பெரியோரைத்துணைக்கோடல், அறிவுடையார் கேண்மை, காட்சிக்கு எளிமை, இன்சொல் கூறல், குற்றங்கடிதல், புலனடக்கம், ஊக்கமுடைமை ஆகியவற்றைத் தருமசாத்திரமும் திருக்குறளும் வலியுறுத்துகின்றன.

ஆளுங் கணங்களான அங்கங்கள், தூது, ஒற்று ஆகியன பற்றித் தரும சாத்திரமும் வள்ளுவமும் விரிவாகப் பேசுகின்றன.

அரசியற் காரியங்களை மன்னன், அமைச்சர்களோடு நன்கு ஆராய்ந்து செய்தான் என்று மனு கூறும் கொள்கைக்கு வள்ளுவரும் உடன்படுகின்றார்.

குடிகளை நலியாமல் காத்தலும் மன்னனின் கடமை என்பதையும் மன்னன், குடிமக்களை வருத்தி வரி வாங்குதல் கூடாது என்பதையும் இரு நூலாரும் ஏற்கின்றனர்.

அரசலுவலர் கையூட்டுப்பெறுவதை இரு நூலாரும் விரும்பவில்லை.

அரசன் தனித்தோ அல்லது அமைச்சர்களுடன் சேர்ந்தோ ஆராய்ந்த பின்னரே அமர் தொடங்கவேண்டும் என்ற கருத்தை இரு நூலாரும் ஏற்கின்றனர். போர் தொடங்கும் மன்னனுக்குரிய இன்றியமையாப் பண்புகளாகிய காலமறிதல், இடமறிதல், வலியறிதல் ஆகியன பற்றி மனுவும் வள்ளுவரும் விரிவாகக் கூறுகின்றனர்.

நால்வகைப் படைகளையும் பேணுதல் அரசனின் அன்றாடக் கடமை யாகக் கருதப்படுவதை தருமசாத்திரத்திலும் வள்ளுவத்திலும் காணலாம்.

தண்டனை அளித்துக் குற்றவாளிகளைத் திருத்துதல் மன்னனின் கடமையாகும் என்னும் கருத்தைத் தருமநூலும் குறளும் ஒருசேரக் கூறுகின்றன.

சமுதாயத்திற்கு மன்னன் தேவை என்ற அடிப்படைக்கொள்கையில் மனுவும் திருவள்ளுவரும் ஒன்றுபடுகின்றனர். தருமசாத்திரம் கூறும் அரசன் தேவர்களின் கூட்டத்தில் பொருந்தியவனாகக் காணப்படுகிறான்; குறள் கூறும் அரசன் மனிதர்களுள் உயர்ந்தவனாகச் சிறப்பிக்கப்படுகிறான்.

செங்கோலன் நாட்டில் தண்ட நீதியாகிய தெய்வம் சஞ்சரிப்பதால் மக்கள் துன்புறார் என்று மனு கூறுகிறார். செங்கோல் மன்னன் நாட்டில் பருவமழையால் விளைச்சல் கிடைப்பதால் மக்கள் இன்பமுடன் வாழ்வர் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

பெரியோர் துணையைப்பெற்ற அரசன், அவர்களை வணங்க வேண்டும் என்பது மனுநெறி. பெரியயோரைத் தமராகக் கருத வேண்டும் என்பது குறள் நெறி.

மனு குறிப்பிடுகின்ற மன்னனின் அரண்மனை வாழ்க்கை, தன்நலம் பேணல், பொழுதுபோக்கு ஆகியன பற்றி வள்ளுவர் குறிப்பிடவில்லை.

அரண் பற்றிய செய்தியை இரு நூலாரும் குறிப்பிடுகின்றனர். ஆனால் மனு கூறும் அரண் தலைநகரைச் சுற்றியிருக்கும் காவற் கோட்டையைக் குறிக்கிறது; வள்ளுவர் கூறியிருப்பது நாட்டரண் ஆகும்.

மன்னனுக்குத் துணையாக ஏழு அல்லது எட்டுப்பேர் கொண்ட அமைச்சரவை பற்றி மனு விளக்குகிறார். அமைச்சர் குழுவைக் குறிப்பிடும் வள்ளுவரிடம் எண்ணிக்கை வரையறை இல்லை.

மனுவின் காலத்தில் அமைச்சர் பதவி பரம்பரையாக அளிக்கப்பட்டது. வள்ளுவர் காலத்தில் அமைச்சர் தகுதியின் அடிப்படையில் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

அமைச்சர், தலைமை அமைச்சர் என்ற வேறுபாடு வள்ளுவரிடம இல்லை. அதோடு அந்தண அமைச்சர் பற்றிய குறிப்பு வள்ளுவத்தில் இடம்பெறவில்லை.

தூதுவனுக்குரிய இலக்கணத்தை வரையறுப்பதில் இரு நூலாரும் முற்றிலும் வேறுபடுகின்றனர்.

அரசுப்பணியாளர்களைத் தேர்தலும், பணியில் அமர்த்தலும், ஊதியமளித்தலும் மனு கூறும் அரசனது பணியாக இருந்தது. அரசலுவலர் பற்றிய செய்திகள் குறளில் இடம்பெறவில்லை.

மனு குறிப்பிடுகின்ற ஊராட்சி, நகராட்சி பற்றிய செய்திகள் வள்ளுவத்தில் காணப்படவில்லை.

மக்கள் பொருளீட்டும் நெறியை மட்டும் மனுதருமம் வலியுறுத்துகிறது. மக்கள் மட்டுமன்றி அரசினரும் நல்வழியில் பொருளீட்டவேண்டும் என்று வள்ளுவர் வற்புறுத்துகிறார்.

அந்தணர், அந்தணர் அல்லாதார் என்ற இன அடிப்படையில் அறம் செய்தல் வேண்டும் என்று மக்களை வேறுபடுத்தும் மனுநெறியிலிருந்து வள்ளுவர் முற்றிலும் வேறுபடுகிறார்.

# 4. சமுதாய அறம்

## முன்னுரை

இல்வாழ்க்கை நடத்திவரும் குடும்பங்கள் பல சேர்ந்தே ஒரு சமுதாயம் உருவாகின்றது. சமுதாயத்தில் மனிதனாகப் பிறந்து பிறந்தபின் உலகின் பல்வகை நிலைகளை உணர்வதற்காக கல்வியைக் கற்று, கற்றுத்தெளிந்து மனைவியுடன் இல்லறக் கடமைகளையும் சமுதாயக் கடமைகளையும் ஆற்றிவரும் மக்களைப்பற்றி மனு கூறுகிறார். வள்ளுவர் அவருக்கு முந்தியகாலச் சமுதாய வாழ்வியல் முறைகளையும் பழக்க வழக்கங்களையும் தம் கொள்கைக்கேற்ப மாற்றிப் புதிய நோக்கங்களைக் கூறுகின்றார். தனிமனிதனாக இருந்தாலும் சமுதாயமாக இருந்தாலும் அறஅடிப்படையில்தான் செயலின் நோக்கம் அமையவேண்டும் என மனுவும் வள்ளுவரும் வற்புறுத்துவர். புத்தரும் சில சமுதாய அறங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

## நால்வகை வருணத்தார் அறம் (வருணாசிரம தருமம்)

"வர்ணாசிரம தருமமாவது பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நால்வகை ஆரியச் சாதியினரும், பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் விதிப்படி ஒழுகும் ஒழுக்கமாகும்."[1] வேதம், மனு முதலிய ஆரிய அறுநூல்களில் ஒவ்வொரு சாதிக்கும் நிலைக்கும் தனித்தனி ஒழுக்கங்கள் கூறப்படுகின்றன. நான்கு வருணங்களைப் பற்றிய குறிப்பு வேதத்தில் உள்ளது. பின்னர் தோன்றிய பிராமணங்களும் உபநிடதங்களும் தருமசாத்திரங்களும் இவ்வருண வேறுபாட்டை விரிவடையச் செய்தன.

"ஆரியர்கள் இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய பின்னர்ப் பூர்வீக மக்களை அடக்கி ஆளவும் ஒடுக்கவும் வருணாசிரம தருமத்தைக் கையாண்டனர். இந்தியாவில் ஆரியர் வருகைக்கு முன்னர் சிந்துவெளிப் பகுதியில் ஆண் பெண் அடிப்படையிலான வருண முறையே இருந்தது."[2] தமிழகத்தில் ஆரிய நாகரிகமும் பண்பாடும் பரவுவதற்கு முன் சில ஏற்றத்தாழ்வுடைய சாதிவருண வேறுபாடுகள் தமிழ்நாட்டில் இல்லை.

1. புலவர் குழந்தை, திருக்குறளும் பரிமேலழகருரையும், ப. 69.
2. அரங்க முருகையன், சாதீயம், ப. 24.

## மனு கூறும் வருணப்பிரிவு

ஆரிய மக்களின் வாழ்க்கை முறைகளை மனுதரும் சாத்திரம் பிறப்பின் அடிப்படையிலும் தொழில் அடிப்படையிலும் வேறுபடுத்திக் காட்டுகிறது. இதனால் ஏற்றத்தாழ்வு நிறைந்த சமுதாயத்தையே மனு படைத்துக் காட்டியுள்ளார்.

## பிறப்புவழி வருணப்பிரிவுகள்

இந்த உலகம் பிரம்மாவால் படைக்கப்பட்டது. "மக்கள் தங்களது சந்ததிகளைப் பெருக்கிக்கொள்ள மனிதர்களைப் படைக்கும்பொழுதே பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வருணங்களாகப் பிரம்மா படைத்தார். பிரம்மாவின் முகத்திலிருந்து பிராமணரும், தோளிலிருந்து சத்திரியரும், தொடையிலிருந்து வைசியரும், பாதத்திலிருந்து சூத்திரரும் தோன்றினர்" (மனு.1:37) என மனுநூல் கூறுகின்றது.

மனுவின் கருத்துப்படி, பிரம்மாவின் உடம்பிலிருந்து தோன்றியதால் நால் வருணத்தாரும் பிரம்மாவின் குழந்தைகளே எனலாம். ஆனால் படைப்புக்கடவுளின் வெவ்வேறு உறுப்புக்களிலிருந்து தோன்றியிருப்பதால் இறைவனின் படைப்புத்தொழில் சமத்துவம் இல்லை. பிறப்பிலேயே ஏற்றத்தாழ்வு கற்பிக்கிறது மனுதருமம்.

மக்களின் படைப்பு பற்றிய செய்தி வள்ளுவத்தில் யாண்டும் காணப்படவில்லை. பிறப்பால் வேறுபட்ட சமுதாயத்தை வள்ளுவர் படைக்க விரும்பவில்லை. அதனால்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (குறள். 972)

எனக்கூறிச் சமுதாயத்தில் சமத்துவத்தை நிலைநாட்ட முயன்றிருக்கின்றார். பிறப்புவழி வருணமுறையை வள்ளுவர் ஆதரிக்கவில்லை என்பது தெளிவு.

## தொழில்வழி வருணப்பிரிவுகள்

நான்கு வருணத்தாரிடையில் சமத்துவம் நிலவுவதை மனு விரும்பவில்லை. அதனால் ஒவ்வொரு வருணத்தாருக்கும் விதித்துள்ள கடமைகளில் வேற்றுமைகள் இருந்தன. 'உலகில் அறம் நிலைக்கும்

பொருட்டு நால் வருணத்தாருக்கும் உரிய கடமைகளைத் தனித்தனியே கடவுள் விதித்ததாக' (மனு.1:87) மனு குறிப்பிடுகின்றார். நால் வருணத்தாருக்குரிய பொதுத்தொழில்களையும் குலத்தொழில்களையும் கூறுவதோடு, செய்யக்கூடாத தொழில்களையும் மனு சுட்டியுள்ளார்.

| | | |
|---|---|---|
| பிராமணர் கடமை | : | வேதம் ஓதல், ஓதுவித்தல், வேள்விகள் புரிதல், புரிவித்தல், ஈதல், ஏற்றல் ஆகியன. |
| சத்திரியர் கடமை | : | உலகை ஆளுதல், ஈகை, வேள்விசெய்தல், வேதம் பயிற்றுவித்தல், மனதை அலையவிடாமல் உறுதியுடன் இருத்தல் ஆகியன. |
| வைசியர் கடமை | : | ஆநிரைகளைக் காத்தல், தானம் கொடுத்தல், வாணிபம் செய்தல், வட்டிக்கு விடுதல், பயிர்த்தொழில் செய்தல் ஆகியன. |
| ஏவலர் கடமை | : | பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய மூவருக்கும் பொறாமையின்றிப் பணிபுரிதல் வேண்டும். |

நவீன காலத்தில் நாம் ஜனநாயகம் என்ற கொள்கைப்படி மக்களாட்சியை விரும்புகிறோம். ஆனால் மனு, மன்னராட்சியை விதித்துள்ளார். 'ஓதுவித்தல், வேள்வி செய்வித்தல், தானம் பெறல் என்ற மூன்றும் அந்தணர்களுக்கே உரிய தொழில்கள். இம்மூன்றையும் சத்திரிய, வைசியர்களுக்கு மனு அனுமதிக்கவில்லை' (மனு.10:78). ஆனால் இவ்விரு வருணத்தாரும் ஆன்மீக முயற்சிகளுக்காக ஓதல், வேள்விசெய்தல், தானம் கொடுத்தல் ஆகிய தொழில்களைச் செய்யலாம் (மனு.10:79). இவையாவும் பொதுத்தொழில்களே.

மூவருணத்தாருக்கும் அவரவர்க்கென்ற குலத்தொழிலும் இ[illegible]தது. அந்தணர், ஓதி வைத்தலையும், அரசர், அரசாட்சியையும், வைசியர், வாணிபத்தையும் குலத்தொழிலாகக் கருதினர். (மனு.10:80).

ஒவ்வொரு வருணத்தாரும் தங்களுக்கென்று விதிக்கப்பட்ட தொழில்களை மட்டுமே செய்தல் வேண்டும். பிராமணர்களும் சத்திரியர்களும் உழவுத்தொழில் செய்வதை மனு ஆதரிக்கவில்லை. (மனு.10:83)

சூத்திரன், மூன்று வருணத்தாருக்கும் தொண்டு செய்யாவிடில் உலகம் அழிந்துவிடுமாதலால், அரசன் சூத்திரனைத் தண்டித்துப் பணி விடை செய்வித்தான். சூத்திரன் பொருளாசையால் உயர்ந்தோர்க்குரிய தொழில்களைச் செய்தால் அவன் பொருள்கள் உயர்ந்த வருணத்தாரின் ஆதிக்கத்தால் பறிக்கப்பட்டன. மீறினால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அதனால் சூத்திரர் அவர்களுக்கென்று ஒதுக்கப் பட்டிருந்த வேலையை மட்டுமே செய்தல் அறமாகக் கருதப்பட்டது.

மனுவின் சமுதாயத்தில் வருண அடிப்படையில் தொழில்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பரம்பரையாக அத்தொழில்களையே தொடர்ந்து செய்தல் வேண்டும் என்ற வரையறை இருப்பதால் ஒவ்வொருவரும் தங்கள் திறமைக்கேற்ற தொழிலைச் செய்ய இயலாது. கீழ்க்குலத்தாருக்குத் திறமைக்கேற்ற உழைப்பும் உழைப்புக்கேற்ற ஊதியமும் அங்கீகரிக்கப் படவில்லை. இதனால் சமுதாயத்தில் சமத்துவமின்மை நிலவக் காரணமாகலாம். இதன் பின்விளைவுகளை அம்பேத்கர் தெளிவாக விளக்கியுள்ளார்.

"1. சாதி, மனிதனை முயற்சி அற்றவனாக்கி விடுகிறது.

2. சாதி, தொழிலாளரைப் பிரிக்கிறது.

3. சாதி, அடிப்படைத் தொழிலின் ஆர்வத்தை வளர்த்துக் கொள்வதைத் தடுக்கிறது.

4. பெற்றோர் செய்த தொழிலையே பிள்ளைகளும் செய்தல் வேண்டும்."[1]

சமுதாயத்தில இழிவான வேலைகளைச் செய்வோர் அந்த வேலைகளைச் செய்வதிலிருந்து நழுவவும் தவிர்க்கவும் விரும்புவர். பிராமணன் தன் அறிவை வளர்த்துக்கொள்ள அனுமதித்த சாதிக்கோட் பாடு உழைக்க அனுமதிக்கவில்லை. அடிமைத்தொழிலைச் செய்யும் சூத்திரன் தன் அறிவை வளர்த்துக்கொள்ள அனுமதிக்கப் படவில்லை. தங்கள் குலத்தொழிலை வழுவாது செம்மையுடன் செய்பவரே அக்குலத்தினர் என்று கூறிக்கொள்ளும் தகுதி உடையவராவர். தம் தொழிலை நெறிமுறைகளுடன் செய்யாதார் தம் குலத்திலிருந்து வழுவினராகக் கருதப்பட்டனர்.

---

1. டாக்டர் அம்பேத்கர், பேச்சும் எழுத்தும், ப. 91.

“பழங்காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நில வேறுபாடுகளும், அங்கு வாழ்ந்த குன்றவர், ஆயர், உழவர், பரதவர், எயினர் என்ற இனவேறுபாடுகளும் இருந்தன என்பர் அறிஞர்.”[1] இவை அவரவர் அந்நிலத்திற்குரியர் என்ற திணைநிலைப் பெயர்களேயன்றி இவற்றில் ஏற்றத்தாழ்வு இல்லை. இவ்வாறு நிலத்திற்கேற்ப மக்கள் பகுக்கப்படும் முறையைத் தொல்காப்பியத்திலும் சங்கநூல்களிலும் காணலாம். ஆனால் தொல்காப்பியர் காலத்திலேயே வருண வேறுபாடுகள் தமிழ்நாட்டில் புகத்தொடங்கிவிட்டன. சங்ககாலத்திலும் பரவின.

சங்க நூல்களில் வருண சாதி வேறுபாடுகள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்,

“வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே”[2]

என்றான். இவ்வரிகளினின்றும் வேற்றுமை தெரிந்த நாற்பால் (நான்கு வருணங்கள்) தமிழ்நாட்டில் இருந்தன. அவற்றில் சிலமேல் எனவும் சிலகீழ் எனவும் கருதப்பட்டன. நான்கு வருணங்கள் மட்டுமன்றிப் பல சாதி வேறுபாடுகளும் சங்ககாலத்தில் தோன்றத் தொடங்கின. இவ்வேறு பாடுகள் தோன்றுதற்கு ஆரியர் செல்வாக்கு மட்டுமன்றி நாகரிகம் முதிரப் பல புதுத் தொழில்கள் நாட்டில் தோன்றியமையும் காரணமாதல் கூடும். தொழிலின் வழியே சாதிவேறுபாடுகள் தோன்றின.

ஐந்து நிலங்களையும், அவற்றுக்குரிய மக்கட் பாகுபாட்டையும் பற்றிய குறிப்புக்கள் குறளில் காணப்படவில்லை. ஐவகை நிலப்பெயர் களும், அங்கு வாழ்ந்த மக்களுக்குரிய நாடன், குன்றன் போன்ற திணைநிலைப் பெயர்களும் ஆளப்படவில்லை. அதனால் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்கு பாகுபாடுகள் வள்ளுவர் காலத்தில் இருந்திருக்காலம் எனக்கருதலாம். அந்தணர் பற்றிய செய்திகள் குறளில் காணப்படுகிறது. அவர்கள் அறுதொழிலோர் (குறள்.560) என்று அழைக்கப்படுவதால் 'ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறுதொழில்களைச் செய்தனர் என்பது தெளிவு. ஆனால்

1. N. Subramanian, The History of Tamil Nad, P. 335.
2. புறம்., 183: 8–10

அவர்கள் செய்த வேள்வியில் விலங்குகளைக் கொல்வதை வள்ளுவர் விரும்பவில்லை (குறள். 259). அறுதொழில் செய்யும் அந்தணர் பரம்பரையாக வந்த வகுப்பினரே ஆவார். இதை,

"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" (குறள். 134)

என்ற குறளால் அறியலாம்.

வள்ளுவர் காலத்தில் அரசர்கள் இருந்தனர் என்பதை 'அரசியல்' பகுதி புலப்படுத்துகிறது. வணிகர் வாழ்ந்தனரென்பதால்,

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தம்போல் செயின்" (குறள். 120)

என்ற குறள் பாடப்பட்டுள்ளது. வேளாளர்களைக் குறித்து உழவு எனும் அதிகாரத்தை எழுதினார். ஆனால் 'வேளாளர்' என்றசொல் திருக்குறளில் காணப்படவில்லை. எனவே வள்ளுவர் காலத்தில் வருணசாதி வேறுபாடுகள் சமுதாயத்தில் நிலவியிருந்தன எனத்தெளியலாம். ஆயினும் தருமசாத்திரங்கள் கூறிய வருணசாதி வேறுபாடுகளை வள்ளுவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சாதி அடிப்படையில் ஏற்றத் தாழ்வுடைய சமுதாயத்தை வள்ளுவர் படைக்க விரும்பவில்லை. அதனால்,

"............... சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (குறள். 972)

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்" (குறள். 973)

என்று பாடினார். இதனால் செய்யும் தொழில்களும் செயல்களுமே ஏற்றத் தாழ்வை ஏற்படுத்துவன; பிறப்பன்று என்பது தெளிவாகிறது.

வடநூலார் கூறுவது போன்று நான்கு வருணங்களையும் குறிப்பிட்டு இன்ன, இன்ன வருணத்தில் பிறந்தவர், இன்ன, இன்ன தொழிலைத்தான் செய்தல் வேண்டும் என வள்ளுவர் எங்கும் குறிப்பிடவில்லை. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்கு வகுப்பார் இருந்தனர். அவர்களுக்குரிய அறங்களை ஆங்காங்கே தம் நூலில் கூறினார். வருண அடிப்படையிலான பிறப்பையோ விதிகளையோ

வள்ளுவர் கூறவில்லை. அந்தணர், தாம் கற்றதை மறவாது இருப்பதுடன் உயர் ஒழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும் ; வணிகர் நடுவுநிலை பிறழாது வாணிகஞ் செய்தல் வேண்டும் ; உழவர் நிலத்தில் உழைத்து அதிக உணவுப்பொருட்களைப் பெற்றதால் இரப்பார்க்கு ஈதல் வேண்டும் என்று தொழில்முறை அறங்களை வள்ளுவர் வலியுறுத்தினார். ஆயின் சாதிகளுக்கேற்ற நீதிகளைக் கூறவில்லை.

## சாதி வளர்ச்சி

பண்டைய இந்தியாவில் ஆரியர்களும் . திராவிடர்களும் உடலளவிலும் பண்பாட்டளவிலும் கலந்தனர். இதன் காரணமாகக் கலப்பினங்கள் தோன்றின. அக்கலப்பினங்கள் பின்னாளில் தனித்தனிச் சாதிகளாக வளர்ந்தன. மனு வருண அடிப்படையில் சமுதாயத்தைப் பிரித்து, வருணக்கலப்பால் பற்பல சாதிப் பிரிவுகளையும் விளக்கியுள்ளார். அவ்வகையினர்களை அநுலோமர். பிரதிலோமர் என்றும் குறிப்பிட்டுள்ளார். அநுலோமர் வகையை ஆறாகவும், பிரதிலோமர் வகையை ஆறாகவும் (மனு.10:10,12) மொத்தம் பன்னிரண்டு வகைச் சாதிகளைக் கூறுவர். அநுலோமர், பிரதிலோமர் தங்களுக்குள் கலப்புத்திருமணம் செய்துகொண்டதால் மக்கள் சமுதாயம், பலசாதிப்பிரிவுகளாகப் பிரிந்து வளர்ந்தது. அவ்வாறு தோன்றியவர்கள் பாகிய சாதியினர். இவர்கள் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்டனர் (மனு.10:25). தீண்டத்தகாத சாதியினர் எண்ணெய் தேய்த்தல், கை, கால் பிடித்தல், பிச்சை எடுத்தல், ஓடம் விடுதல், காவல் புரிதல், குற்றவாளிகளை அடித்தல், இடுகாட்டைக் காத்தல் போன்ற பல்வேறு தொழில்களைக் குலத்தொழில்களாகக் கொண்டனர். 'இப்படி இழிபிறப்பாளர் பெருகிவரும் நாடு விரைவில் குடிமக்களுடன் அழியும்' (மனு.10:61) எனக்கூறிக் கலப்புத்திருமணத்தைத் தடுக்கவும் மனு முயன்றுள்ளார்.

சாதிகள் பிற சாதிக்கலப்பின்றித் தூய்மையாக இருக்கவேண்டும். "சாதிகளில் தூய்மை இருந்தால் மக்களும் அரசாங்கமும் செழிப்பான நிலையில் இருப்பர். சாதிகளின் தூய்மை கெட்டால் மக்களுடன் சேர்ந்து அரசாங்கமும் அழிவும்."[1] அதனால் சாதி அமைப்பை நீடித்திருக்கச் செய்வது தர்மத்தின் இன்றியமையாத பகுதி என்று கருதப்பட்டது. "நான்கு வருணப்பிரிவே இந்தியாவின் சாதி வளர்ச்சிக்குக் காரணம் என்ற

1. ஆர்.எஸ். சர்மா, பழங்கால இந்தியாவில் அரசியல் கொள்கைகள் – நிலையங்கள், சில தோற்றங்கள், ப. 74.

கொள்கையும் நோக்குதற்குரியது."[1] மனு கூறிய வருணப்பிரிவும் சாதிக்கலப்பும் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தின. மக்களுக்குச் சம உரிமையும் வாய்ப்பும் கொடுக்கப்படவில்லை எனலாம்.

கலப்புச்சாதிகள் பற்றி வள்ளுவர் குறிப்பிடவில்லை. அவர் குலம், குடி என்று கூறுவ்தெல்லாம் குடும்பம், மக்கள் என்ற பொருளில் வழங்குவர். வருணப்பிரிவுகளும். அதனால் வளர்ச்சிபெற்ற சாதிப் பிரிவுகளும் வள்ளுவருக்கு உடன்பாடன்று. சாதி அமைப்பு சமுதாயத்தில் எல்லோருக்கும் சமஉரிமையும் வாய்ப்பும் வழங்கவில்லை என்பதால் வள்ளுவர் அதை ஏற்கவில்லை.

## பிறப்பறம்

குழந்தை பிறக்கும் பொழுதும் பிறந்தபின்னும் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றியும் மனு வலியுறுத்தியுள்ளார்.

## பிறப்பு

பிறந்த குழந்தைகளை இம்மண்ணில் நல்லவண்ணம் வாழ வேண்டும் என்று வாழ்த்தும் நோக்கில் மனுதருமம்,

> "தொப்பூழ் கொடியறுக்குமுன் ஆண்குழந்தைக்கு
> நெய்யும் தேனும் குழைத்து நாவில் தடவவேண்டும்" (மனு.2:29)

எனக்கூறுகின்றது. இப்பழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது. ஆனால் ஆண், பெண், என்ற வேறுபாடின்றி எல்லாக் குழந்தைகளுக்குமே இம்முறை பின்பற்றப்படுகிறது.

## பெயரிடல்

குழந்தை பிறப்பதற்கு வித்திடுபவன் தந்தை. ஆதலால் பிறந்த குழந்தைக்குப் பெயரிடும் உரிமை தந்தைக்கு உண்டு. குழந்தை பிறந்து பத்து அல்லது பன்னிரண்டாவது நாளில் பெயர் சூட்டுவர். அல்லது வளர்பிறை, புண்ணிய தினத்தில் நன்மீனுலவும் நாளில் பெயர் சூட்டலாம் (மனு.2:30) வருண அடிப்படையில் பெயரிடப்பட்டன.

பிராம்மணனுக்கு மேன்மையைக் குறிக்கும் – சர்மன்

---

1. J.A. Dubois Abbu (Trans) Beauchamp, Henry, K., Hindu Manners Customs and Ceremovics, P. 14-15.

| | | |
|---|---|---|
| சத்திரியனுக்குப் பலத்தைக் குறிக்கும் | – | வர்மன் |
| வைசியனுக்கு வளத்தைக் குறிக்கும் | – | பூபதி |
| நாலாமவனுக்குப் பணிவிடையைக் குறிக்கும் | – | தாசன் |

என்று அவரவர் பெயர்களுடன் பட்டங்கள் வழங்கி வரவேண்டும் (மனு.2:32) என்று மனுதரும சாத்திரம் கூறுகிறது. சர்மன், வர்மன், பூபதி, தாசன் என்னும் பெயர்கள் முறையே மேன்மையையும் பலத்தையும் வளத்தையும் பணிவிடையையும் குறிக்கும் காரணப்பெயர்கள்; தொழிலடிப் படையில் தோன்றியவை. ஆடவர்கள் தங்கள் இயற்பெயருக்குப்பின் தங்கள் இனப்பெயரையும் இணைத்துக் கொள்ளலாம். பெண்களுக்கு இனப்பெயர்கள் சுட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் பெண் குழந்தைக்கு மதுரமும், தெளிவும், அழகும், மங்கலமும் நிறைந்த பெயர் சூட்ட வேண்டும். அப்பெயர் நெடில் ஈற்றாயும், வாழ்த்தொலிப்ப தாயும் அமைதல் நன்று (மனு.2:33)

வருண அடிப்படையில் பெயரிட வேண்டும் என்பதே மனுவின் கருத்து. இதனால் சாதாரண மனிதனுக்குக் கண்ணியமான பெயரைச் சூட்டிக்கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. நாலாம் வருணத்தைச் சேர்ந்தவனுக்கு மேன்மையான பெயரைச் சூட்டினால் அவன் பிராம்மணனுக்குப் பணிவிடை செய்யமாட்டான். இது பிராம்மணர்களுக் குரிய ஏற்றத்தைக் குறைக்க ஏதுவாகலாம் என்ற நோக்கில் மனு இவ்வாறு கூறியிருக்கலாம்.

## சோறூட்டல்

தாய்ப்பால் அருந்தும் குழந்தை சோறுண்ணும் அகவையை அடையலாம். ஆதனால் பிறந்த நான்காம் மாதத்தில் குழந்தையை வீட்டுக்கு வெளியில் கொண்டு வந்து சிறிதுநேரம் ஞாயிற்றின் கதிர்கள் படும்படி வைத்திருப்பர். பின் ஆறாம் மாதத்தில் சோறூட்டலாம். அல்லது குடும்ப வழக்கப்படி மூன்றாம் மாதம் தொடங்கியபின் இவ்விரண்டினையும் செய்யலாம் (மனு.2:34) இச்செய்தி வள்ளுவத்தில் இல்லை.

## சிகை எடுத்தல்

இன்றைய சமுதாயத்தில் குழந்தைக்குப் 'பிறந்த முடி எடுத்தல்' என்ற சடங்கு நடைபெறுகிறது. குலதெய்வம் குழந்தையைக் காக்க வேண்டும் என்ற நோக்கில் கோயில்களில் முடி எடுப்பர். "முதல் மூன்று

வகுப்பாரும் குழந்தை பிறந்த வருடத்திலோ அல்லது மூன்றாம் ஆண்டிலோ சிகை எடுக்க வேண்டும்'' (மனு.2:35) என்பது மனுவின் கொள்கை. இச்சடங்கு பற்றி வள்ளுவர் குறிப்பிடவில்லை.

## தந்தை செய்யும் உபநயனம்

குழந்தைகளின் இளம் வயதில் செய்யக்கூடியது உபநயனம் என்னும் சடங்கு. காயத்திரி உபதேசத்துடன் கூடிய உபநயனம் காலதாமதம் செய்யத்தக்கதன்று. மூன்று குலத்தாருக்கும் உரியது உபநயனம். ஆதலால், ''பிராம்மணனுக்கு ஐந்திலிருந்து பதினாறு வயதிற்குள்ளும் சத்திரியனுக்கு ஆறிலிருந்து இருபத்திரண்டு வயதிற்குள்ளும் வைசியனுக்கு எட்டிலிருந்து இருபத்து நான்கு வயதிற்குள்ளும் உபநயனம் செய்தல் இன்றியமையாதது'' (மனு.2:37).

இவ்வாறு உபநயனம் செய்யப்பெறாதவர் காயத்திரி உபதேசம் பெற அருகதை அற்றவராகக் கருதப்படுவர். மேலும் அவர்கள் வைதிகக் காரியங்களிலிருந்தும் விலக்கப்படுவர். வேதம் ஓதுவித்தல் தகாது. அதோடு வறுமை வந்தெய்திய காலத்திலும் அந்தணர் இவர்களிடமிருந்து எப்பொருளையும் பெறக்கூடாது (மனு.2:40) என்று மனு வரையறை செய்துள்ளார்.

குழந்தைகள் கல்விகற்கச் செல்லவேண்டுமாயின் உபநயனம் செய்யப்பெற்றவராக இருத்தல் வேண்டும் என்பது தெளிவு. இந்த உபநயனம் முதல் மூன்று வருணத்தாருக்கு மட்டுமே உரியது. நான்காம் வருணத்தாருக்கும் பெண்களுக்கும் உபநயனம் வற்புறுத்தப்படவில்லை என்பதால் இவர்களுக்குக் கல்வி கற்கும் உரிமை இல்லை என்பதை அறியலாம்.

## கல்வியறம்

மனித வாழ்வின் முதற்கட்டம் பிறப்பு, இரண்டாம் கட்டமாகிய கல்வி கற்றலை இரண்டாம் பிறப்பாக மனு சுட்டியுள்ளார். கல்வி கற்கும் பருவத்தில் மாணவர்கள் குருவின் இல்லத்தில் தங்கியிருப்பர். அங்கு அவர்களுக்கு நல்லொழுக்கங்களும், அன்றாடம் ஆற்றவேண்டிய கடமைகளும், வேதமறிதலும் கல்வியாகக் கற்றுக் கொடுக்கப்பட்டன.

## குருகுலக்கல்வி

"உடல் எடுப்பது முதல் பிறவி. வாழ்க்கை முறையை மேலானதாக மாற்றிமைக்கும்பொழுது அது இரண்டாவது பிறவி. யார் ஒருவன் மேலாம் வாழ்வுக்குத் தகுதி உடையவன் ஆகின்றானோ அவன் இரு பிறப்பாளன் எனப்படுவான். மனிதனை இரு பிறப்பாளனாக்குவது சிறந்ததொரு லட்சியமாகும்."[1] "பண்டைக்காலத்தில் கற்றவர்கள் சிலர், கல்லாதவர்கள் பலர். இப்பொழுது இருப்பது போன்று பள்ளிக்கூடங்களோ, கலாசாலைகளோ, கல்லூரிகளோ இல்லை. அதனால் கல்வி கற்க விரும்புவோர் கற்றவர்களிடம் சென்று அவர்கள் கருணையை எதிர்பார்த்துக் கல்வி கற்கவேண்டும். அவர்கள் ஏவின பணிகளை எல்லாம் செய்யவேண்டும். அவர்கள் எப்பொழுது படிப்புச் சொல்லிக்கொடுக்கிறார்களோ அப்பொழுது கற்றுக் கொள்ள வேண்டும். இப்படிக் கற்றுக்கொள்ளும் முறைக்குக் குருகுலவாசக் கல்வி என்று பெயர்."[2] ஆதலால் அரசர் குலத்தில் பிறந்தவனாயினும், அரண்மனையில் வளர்ந்தவனாயினும் கற்கும் பருவத்தில் குருவின் இருப்பிடத்தை அடைந்து, வேதங்களைக் கற்கும் காலங்களில் உண்ணும் உணவிலும், உடுக்கும் உடையிலும், அணியும் பூணுலிலும் தம் குருவின் எளிமையைப் பின்பற்றி, அவர் வழியில் தூய்மையையும், நல்லொழுக்கங்களையும் அறிந்ததன் பயனாக வேதங்களைக் கசடறக் கற்றுத் தேர்தல் வேண்டும்.

தரும சாத்திரக் கொள்கைப்படிப் பிறப்பிற்கும் திருமணத்திற்கும் இடைப்பட்டது குருகுலக் கல்விப் பருவமாகும். வேதங்களைக் கற்றுத் தேர்தலே திருமணம் செய்துகொள்ளவதற்குரிய தகுதியாகவும் வயதாகவும் கருதப்பட்டது. முதல் மூன்று வருணத்தாருக்கு மட்டுமே குருகுலக்கல்லி சற்றுக்கொடுக்கப்பட்டது. நாலாம் வருணத்தாரும் பெண்களும் குருகுலக் கல்வி கற்கும் தகுதி உடையவர்களாக மதிக்கப்படவில்லை. மாறாகப் பெண்களுக்குத் திருமணமே உபநயனம்; கணவனுக்குப் பணிபுரிதலே குருகுலவாசம்; இல்லத்தைக் காத்து நடத்தலே பேரறம் என்னும் வழக்கங்கள் நிலவின.

"உண்பது, உறங்குவது, நீராடுவது, நடப்பது, விளையாடுவது, உறவாடுவது, பணிவிடை செய்வது, பேசுவது, கடவுள் வழிபாடு செய்வது, அறிவு வளர்ச்சிக்கு ஏதுவான யோகசாதனம் செய்வது, பிணியாளர் களைப்

---

1. சுவாமி சித்பவானந்தர், கல்வி, ப. 179.
2. சாமி சிதம்பரனார், பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், ப. 25.

பேணுவது, சமுதாயச்சேவை செய்வது ஆகிய பயிற்சிகள் மாணாக்கர்களுக்கு ஆசிரியர்களோடு கலந்து அல்லும் பகலும் நடைபெறும். இவ்வாறு வாழ்க்கைக்கு மக்களை ஆயத்தப்படுத்துவதே குருகுலப் படிப்பின் நோக்கமாகும். பன்னிரண்டு வருடகாலம் ஒருவன் முறையாகக் குருகுலவாசம் செய்வானாகில் அவனுடைய அமைப்பையே மேலானதாகப் புதுப்பித்து விடலாம்."[1] அதனால் மனுவும் குருகுலக் கல்வியை வலியுறுத்துவதற்காகக் 'கல்வியும் கடமைகளும்' என்னும் ஓர் இயலைப் படைத்துள்ளார்.

## குரு செய்யும் உபநயனம்

இரண்டாவது பிறப்பின் தொடக்கமாக உபநயனம் கருதப்படுகிறது. குரு தனது மாணவனுக்கும், தந்தை தன் மகனுக்கும் உபநயனம் செய்வர். முதலில் தூய்மையைக் கற்பித்து, பின் நல்லொழுக்கத்தையும், தீ வளர்த்தலையும், வைகறை, நண்பகல், மாலைப்பொழுதுகளில் செய்ய வேண்டிய கடமைகளையும் கற்பிக்க வேண்டும். இவ்வாறு உபநயனம் செய்யப்பெற்றுவரே காயத்ரி மந்திரத்தைக் கற்கத் தகுதி உடையவர். முதல் மூவருணத்தார் மட்டுமே வேதம் பயிலலாம் (மனு.2:68,69) என்கிறார் மனு.

மனுவின் காலத்தில் கல்வி கற்றல் இரண்டாவது பிறப்பாகக் கருதப்பட்டது. கல்வியின் தொடக்கமாகத் தூய்மையும், நல்லொழுக்கமும் கற்றுக் கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கவை. வேதம் கற்கத் தகுதி, மாணவர் உபநயனம் செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

## நன்மாணாக்கர்

ஆசிரியரிடம் அடக்கத்துடன் அமர்ந்து செவி வாயாகக்கொண்டு கேட்டதை விடாது உள்ளத்தில் நிறுத்துபவன் நன்மாணாக்கன் ஆவான். "மாணவன் தூயவனாக, கடமை தவறாதவனாக, வித்தையை ஏற்றுக் கொள்பவனாக, கவனமுடையவனாக, பொறாமையற்றவனாக இருக்க வேண்டும். குருவுக்குத் தெரியாமல் அவரிடமிருந்து வித்தையைக் கிரகித்துக் கொள்பவன் வேதத்தைத் திருடியவனாகி நரகத்தில் வீழ்வான் (மனு.2:114–116) தர்க்கம், வேதம், வேதாந்தம் இவைகளை ஓதுவிக்கிற குருவைப் பார்க்கும் போதெல்லாம் வணங்கவேண்டும் (மனு.2:117) என்று தரும சாத்திரம் கூறிகிறது.

---

1. சுவாமி சித்பவானந்தர், கல்வி, ப. 167.

"வைதாலும், கொடுமை செய்தாலும், சீறி இகழ்ந்தாலும் சிறிது மனம் மாறுபடாமல் எனக்கு அன்னையும், தந்தையும் நீரே எனக்கூறி ஆசிரியரை வழிபாடு செய்து, என் பொருளும், உடலும், உயிரும் உன்னுடையவை என்று கூறி ஆசிரியரின் மலரடிகளில் வீழ்ந்து அறிவுபெற விழைபவர் நன்மாணாக்கராவர்"[1] என்று நீதிநூலும் எடுத்துரைக்கிறது. இதனால் மாணவர்களுக்குக் கற்றலை விட நல்லொழுக்கமே இன்றியமை யாததாக வேண்டப்படுகிறது.

## ஆடை

கற்கும் பருவத்தில் மூவருணத்தாரும் மேலாடையும், அரையில் அணியும் ஆடையும் அணிந்திருந்தனர், அவை விலங்குகளின் தோலாலும் நாராலும் செய்யப்பட்டவை என்பதை,

> "மூவருணத்தவரில் பிரம்மச்சாரிகள் முறையே கருப்புமான், புள்ளிமான், வெள்ளாடு இவற்றின் வரிகளை மேலாடைகளாக அணிய வேண்டும், சணப்பனார் பட்டு, செம்மரியாட்டின் ரோமம் இவைகளாலான அரையாடைகளையும் அணியலாம்" (மனு.2:41)

என்ற கருத்துக்கள் புலப்படுத்துகின்றன. மான் தோலும், ஆட்டின் தோலுமே குருகுல மாணவர்களின் ஆடையாகப் பயன்பட்டன. அரசர் குல மாணவர்கள் பட்டாலான அரையாடைகளை அணிந்திருந்தனர். இக்கால மாணவர்கள் பள்ளிச்சீருடை அணிதல் போல அக்கால மாணவர்கள் தோலாடை அணிந்திருந்தனர் என்பது தெளிவு.

## அரைஞாண்

பிறப்பு முதல் இறப்பு வரையிலும் ஆடவர்கள் அரைஞாண் அணிந்திருந்தல் இன்றியமையாத பழக்கமாகக் கருதப்படுகின்றது. ஆதலால் தங்கத்தாலும், வெள்ளியாலும், கயிற்றாலுமான அரை ஞாண்களை ஆடவர் அணிகின்றனர். அவ்வாறே குருகுல மாணவர்கள் புல்லாலும் நாராலும் செய்யப்பட்ட அரைஞாண்களை அணியவேண்டும் என்பதை,

> "முஞ்சாப் புல்லினாலும், முருவற் புல்லினாலும், சணப்ப நாரினாலும் இழையெடுத்துப் பிண்ணி முறுக்கி மூவட அரைஞாண்களை மூவருணத்தாரும் முறையே இடுப்பில்

1. அறப்பளீசுர சதகம், 6.

அணியவேண்டும். இவை கிடைக்காதபோது தருப்பை, நாணல், சவட்டக்கோரை இவற்றால் தயாரித்து, மூன்று அல்லது ஐந்து வடஅரைஞாண்களை ஒற்றை முடிச்சுடன் கட்டியதாகப் பயன்படுத்தலாம்" (மனு.2:42,43)

என்று தரும சாத்திரம் வலியுறுத்துகிறது. இவை கிடைக்காதபொழுது மாற்றுவழிகளாலாவது அரைஞாண் அணிதல் வேண்டும் என்று கூறியிருப்பதால் அரைஞாண் அணிதலின் இன்றியமையாமை புலப்படுகிறது.

## பூணூல்

இன்றைக்கு அந்தணர் குலத்தைச் சேர்ந்த ஆடவர்கள் நிரந்தரமாகப் பூணூல் அணிந்திருப்பதைத் காண்கிறோம். மற்றவர் களிடையே சடங்குகளின் பொழுது மட்டும் பூணூல் தரிக்கும் பழக்கம் காணப்படுகிறது. மனுவின் கால மாணவர்களுக்குப் பூணூல் அணிதல் வேண்டும் என்ற வரையறை உறுதியாக இருந்தது. அந்தணர் பஞ்சினாலும், அரசர் சணப்பையினாலும், வைசியர் வெள்ளாட்டு ரோமத்தாலும் நூலிழைத்து மூவடமாகத் தோளில் பூணூல் அணிதல் வேண்டும் (மனு.2:44) என்று அறநூல் வலியுறுத்துகிறது. தமிழர் திருமணத்தில் மங்கலநாண் சிறப்பிடம் பெறுவதுபோல அக்காலக் கல்விப் பருவத்தில் பூணூல் அணிதலும் கட்டாயமாக்கப்பட்டிருந்ததெனலாம். அதிலும் வைசியர் ரோமத்தாலான பூணூல் அணிந்திருந்தனர் என்பது சிறப்பிற்குரியது.

## தண்டம்

முடியாட்சிக் காலத்தில் மன்னர்கள் செங்கோலேந்தியிருந்ததாக அறிகிறோம். அஃது அவர்களின் தலைமைப் பொறுப்பிற்கு ஆதார மெனலாம். அவ்வாறே அறநூற்கால மாணவர்கள் தண்டம் ஏந்தியிருந்தனர். இதனை,

"அந்தணர் வில்வம் அல்லது பலாசம்,
அரசர் ஆல் அல்லது கருங்காலி,
வைசியர் அரளி அல்லது அத்தி
இவற்றில் ஒன்றைத் தண்டமாக ஏந்தவேண்டும்"
(மனு.2: 45)

என்ற தருமசாத்திரக் கருத்தும் எடுத்துரைக்கிறது. "இந்தக் கோல்கள் மூவருக்கும் முறையே கால்முதல் தலை, நெற்றி, நாசி அளவாக அமைவனவாகும். இத்தண்டங்கள் கோணலின்றி, வடுப்படாதனவாய் பார்வைக்குக் கவர்ச்சிகரமானவையாய், பட்டைகளுடன் கூடியனவாய், தீயில் வாட்டி எடுக்கப்பட்டனவாய்த் திகழவேண்டும்" (மனு.2:46,47)

வேதம் கற்றலே குருகுலக் கல்வியின் நோக்கமாகும். அப்பயிற்சியின் அடிப்படையில் இன்றைக்கும் வேதம் கற்ற சமயப் பெரியோரும் தலைவரும் தண்டம் ஏந்தியுள்ளனர். முக்குலப் பிரம்மச்சாரிகளும் அணிந்துகொள்கின்ற மிஞ்சி, மேலாடை, பூணூல், தண்டம் ஆகியவை மாசுபட்டால் அல்லது பழுதாகிவிட்டால் அவற்றை நீரிற் புதைத்துவிட்டுப் பின்னர் புதியவற்றை ஏற்கலாம் (மனு.2:64) என்பதால் இவை குருகுல மாணவர்களுக்குத் தேவையான அடிப்படைப் பொருள்களாக வேண்டப்பட்டன.

### பிச்சை ஏற்றல்

மாணவன் தண்டேந்தி, சூரிய வணக்கம் செய்தபின் தீயை வலம் வந்து விதிப்படிப் பிச்சை ஏற்கச் செல்லவேண்டும்.

| | | |
|---|---|---|
| பிராம்மண பிரம்மச்சாரி | – | 'பவதி பிச்சாந்தேகி' என்றும் |
| சத்திரியன் | – | 'பிச்சாம் பவதிதேகி' என்றும் |
| வைசியன் | – | 'தேகி பிச்சம்பவதி' என்றும் |

கூறிப் பிச்சை கேட்கவேண்டும். முதலில் தாயிடமும், பின்னர் உடன் பிறந்தாளிடமும் மற்றும் தனது சகோதரியிடமும், இறுதியில் தன்னிடம் பற்றுடைய எப்பெண்ணிடமாவது அன்னத்தைப் பிச்சை ஏற்கவேண்டும் (மனு.2:49). மற்ற நாட்களில் குருகுல மாணவன் அனைத்து வீடுகளிலும் பிச்சை ஏற்கவேண்டும் என்ற வரையறை இல்லை. அவர்கள் வேதம் ஓதித் தீ வளர்க்கும் ஒழுக்கங்களைக் கடமையாகக் கருதும் இல்வாழ்வான் இல்லத்தில் பிச்சை ஏற்கவேண்டும். குருவின் இல்லமும் அவருடைய உறவினர் இல்லமும் பிச்சை ஏற்பதற்கு ஏற்ற இடமன்று (மனு.2:183,184).

### உணவு உண்டல்

மாணவன்தனக்கு வேண்டிய உணவைக் குறைந்தது மூவரிடமிருந்து பெற்றுத் தன் குருவுக்குப் படைத்துப் பின்னர் கிழக்குத்

திசை நோக்கியிருந்து உணவு உண்ணலாம் (மனு.2:51). உண்ணும் உணவு திருமாலின் வடிவமாதலால் அதனை நிந்தனை செய்யாது போற்றி மகிழ்வுடன் சுவைத்து உண்ணவேண்டும். இவ்வாறு சோற்றைச் சுவைத்து மகிழ்வுடன் உண்பதால் துணிவும் வலிமையும் உண்டாகும். வேண்டா வெறுப்புடன் உண்பதால் இவ்வை அழிந்துவிடும் (மனு.2:54,55). இரவு, பகல் இருவேளை மட்டுமே உண்ணவேண்டும். பெருந்தீனியினால் நோயும், ஆயுட்குறைவும், புண்ணியக்குறைவும் உண்டாகும். எனவே பெருந்தீனியை நீக்குக (மனு.2:56,57). வேள்வி, தென்புலத்தார் கடன் போன்ற நிகழ்ச்சிகளின் போது விருந்துக்கு அழைத்தால் புலால், கள் இவற்றைத் தவிர்த்து முனிவர்களைப் போல் சென்று உண்ணலாம் (மனு.2:189).

## முடி எடுத்தல்

குழந்தை பிறந்த ஓராண்டில் முடி எடுத்தல் என்பது சடங்காகச் செய்யப்படுகிறது. அவ்வாறே படிக்கும் பருவத்தில் மூவருணத்தாரும் முறையே பதினாறு, இருபத்திரண்டு, இருபத்திநான்கு வயதுகளில் முடி எடுத்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. (மனு.2:65)

## புலனடக்கம்

குருகுலவாசத்தில் மாணவன் புலனடக்கிச் சில நோன்புகளை மேற்கொள்ள வேண்டும். அவை பின்வருமாறு:

வைகறையில் ஆற்று நீராடித் தூய்மையுடன் தன் வழிபாட்டுக்குரிய தெய்வத்தை வணங்கி, இருவேளையும் தீ வளர்க்க வேண்டும் (மனு.2:176). தேன், சந்தனம், மலர், இனிப்பு, பெண், தயிர், பால், நெய், மோர், உயிர்க்கொலை, எண்ணெய் முழுக்கு, கண்ணுக்கு மையெழுதல், செருப்பு, குடை, காமம், குரோதம், கூத்து, பாட்டு, வம்பளத்தல், பழித்தல், பொய்கூறல், பிறருக்கு இரண்டகம் எண்ணுதல் இவ்வனைத்தும் நீக்கவேண்டும் (மனு.2:177,179). குருகுலத்தில் சுவைதேடி உண்பதும், அலங்காரமான ஆடை அணிவதும் கூடாது (மனு.2:149) என்ற கருத்துக் களிலிருந்து கண்ணுக்கு மை எழுதும் பழக்கம் ஆடவரிடமும் இருந்ததாகத் தெரிகிறது. நோன்பு மேற்கொள்வார் சில விதிமுறைப் பழக்கங்கள் மேற்கொள்ளல் இன்றும் நடைமுறையில் உள்ளது. மார்கழித் திங்களில் பாவை நோன்பை மேற்கொள்ளும் மகளிரும் நோன்புக் காலங்களில்,

“நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலை நீராடி

மையிட்டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம்"[1]

என்று பாடினர்.

## மாதா பிதா குரு தெய்வம்

"சிறுவன் ஒருவன் தன்னை மாண்புடையவனாக மாற்றியமைத்துக் கொள்ள முயன்றுவரும்போது அவனுக்கு மாணாக்கன் என்றும் பெயர் வருகிறது. மாண்பைத் தன்னகத்தே ஆக்கிக்கொண்டிருக்கிறான் என்று அது பொருள்படுகிறது. மனம், மொழி, மெய் என்னும் மூன்று கரணங்களால் மாணவர்கள், தாய் தந்தையரையும் ஆசிரியரையும் தரையில் வீழ்ந்து வணங்கக் கடமைப்பட்டிருக்கிறான். பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் உரியவன் என்பதை அவ்வணக்கத்தின் மூலம் உறுதிப்படுத்துகிறான். இவர்களைப் போற்றாது பெருநிலைக்கு உயர்ந்தவர் உலகில் இருந்ததில்லை. இவர்களைப் போற்றிக் கீழ்மையடைந்த வருமில்லை."[2] மனுவும் தாய், தந்தை ஆசாரியன் இவர்களை வழிபடுதலே சிறந்த தவமாகும் (மனு.2:229) என்கின்றார். ஏனெனில்,

"பிறவிக்குக் காரணமாயிருக்கின்ற தந்தை பிரம்மா,
தன்னைச் சூல் கொண்டு பெற்ற தாய் பூமிதேவி,
ஞானம் உணர்த்துகின்ற ஆசாரியன் இறைவன்" (மனு.2:225)

அதனால் "தாயிடம் பக்தியால் இம்மை இன்பமும், தந்தையிடம் பக்தியால் மறுமை இன்பமும், ஆசாரியிடம் பக்தியால் பிரம்மலோகமும் வாய்க்கும்" (மனு.2:233) என்று மனு சாத்திரம் எடுத்துரைக்கிறது. மேலும் அம்மூவரும், மூவுலகமாகவும், வேதங்களாகவும், முத்தீயாகவும் திகழ்கின்றனர். மூவரிடமும் பக்தி உடையோன் மூவுலகையும் வென்று தேவர்களைப்போல் ஒளிவீசுவான் (மனு.2.230). இவர்களுக்குச் செய்யும் பணிவிடையே மேலானது. ஏனையன இரண்டாந்தரமென்று கூறப்படுகிறது. (மனு.2:237).

## குரு வழிபாட்டின் தேவை

மாக்களிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவது அறிவு. அறிவு வளர்ச்சிக்குத் துணை நிற்பவர் ஆசிரியர். கண்ணெனத்தகும்

---

1. திருப்., 2
2. சுவாமி சித்பவானந்தர், கல்வி, பக். 193–195.

எண்ணையும் எழுத்தையும் கற்றுத்தரும் ஆசிரியரை இறை எனக்கருதி வழிபாடு செய்து கற்றல் வேண்டும். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான். அதனால் குரு வழிபாட்டின் இன்றியமையாமையை,

> "மண்வெட்டியால் தோண்ட நீர் ஊற்றெழுவது போன்று தனது
> வழிபாட்டாலேயே ஒருவன், ஒருவனிடமிருந்து வித்தையைப்
> பெறுகிறான்" (மனு.2:218)

என்று தரும சாத்திரம் விளக்குகிறது. தோண்டும் அளவிற்கு நீர் ஊற்றெடுப்பது போலக் குருவை வழிபடும் அளவிற்கு வித்தையைக் கற்றறியலாம் என்பதுவே மனுவின் கொள்கை. வழிபாடு என்றால் உண்மையான, உள்ளார்ந்த வழிபாடாக இருத்தல் வேண்டும் என்பதற்காகவே மண்வெட்டியால் மண்ணைத் தோண்டும் உவமை பயன்படுத்தப்பட்டுள்ளது. மனுவின் நெறியில்,

> "தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு" (குறள். 396)

என்று குறள்நெறியும் அமைந்துள்ளது. தோண்டிய அளவிற்கு நீர் ஊறுவதைப்போலக் கற்கும் அளவிற்கு அறிவு ஊறும் என்பதே வள்ளுவ நெறி. தொட்டனைத்தூறும் நீரை இரு அறநூலாரும் உவமையாகக்கூறிக் கருத்தை விளக்கியுள்ளனர். இவ்வாறு கூறும் முறையில் ஒன்றுபட்டாலும் கூறிய கருத்தில் மாறுபடுகின்றனர்.

அறிவு வளர்ச்சிக்குக் குரு வழிபாட்டை அளவு கருவியாகக் காட்டுவது மனுநெறி. அறிவு வளர்ச்சிக்குக் கற்கும் நூல்களை அளவு கருவியாக வரையறுப்பது குறள்நெறி. இக்குறள் நெறியின் விளக்கமாக, "கற்றற்குரிய நூல்களாவன அறநூலும் நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலமென்று இவற்றின் நூல்களும் முதலியன என்ற உரையாசிரியர் கருத்தும் அமைந்துள்ளது. ஒருவனின் அறிவு வளர்ச்சிக்குக் குரு வழிபாடு மட்டும் போதாது. அறிவுசான்ற நூல்களைக் கற்கும் முயற்சியும் வேண்டும். ஆதலால் குரு பக்தியும், கற்றற்குரிய நூல்களைக் கற்றலும் அறிவு வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணங்கள் என்பதை இரு அறநூலாரின் கருத்துக்களால் தெளியலாம்.

## குரு வணக்கம்

குரு வணக்கமே பிராம்மாஞ்சலி எனப்படுகிறது. படிப்பறிவு

இல்லாதவர் கற்றறிந்த அறிவுடையார் முன் சென்று வணக்கத்தோடு பணிந்து நின்று கல்வி அறிவைப் பெறவேண்டும். நிலையான கல்விச்செல்வத்தைப்பெற,

> "மாணவன் நெடுங்கிடையாகக் குருவின் முன் விழுந்து தனது
> இருகரங்களையும் நீட்டி மாற்றிவைத்து வலக்கரத்தால் குருவின்
> இடதுபாதமும் இடக்கரத்தால் அவரது வலதுபாதமும்
> தீண்டுமாறு வணங்கி எழவேண்டும்" (மனு.2:72)

என்று மனுநீதி கூறுகிறது. இவ்வாறு கற்றுக்கொள்ளாதவர் தாழ்ந்தவரே. செல்வத்தைவிடக் கல்வி சிறப்புடையது. அழியும் செல்வத்தைச் சேர்க்க முயல்வது போல அழியாச் செல்வமாகிய கல்வியைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதை,

> "உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
> கடையரே கல்லாதவர்" (குறள். 395)

என்று திருக்குறள் குறிப்பிடுகின்றது.

இருநூலாரும் மாணவரின் பணிவுடைமை பற்றி விளக்குகின்றனர். மாணவன் நெடுங்கிடையாகக் குருவின் முன் விழுந்து வணங்கவேண்டும் என்பது மனுநெறி. உடையார்முன் இல்லாதவர் போல் பணிந்து நின்று குருவிடம் மாணவன் கல்வி பெறவேண்டும் என்பது வள்ளுவநெறி. குரு பக்தியை மிகுவித்துக் காட்டும் மனுநெறி குருகுலக் கல்விமுறைக்கு ஏற்பு டையதாகலாம். குருபக்தியை மிகாமலும் குறையாமலும் நாட்டும் வள்ளுவ நெறியை இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் ஏற்றதெனக் கூறலாம்.

## குருவிற்குப் பணிவிடை

"பண்டைக்காலத்துக் குருகுலங்களில் மாணாக்கர் சேவை செய்ய முதலில் கற்றுக்கொண்டனர். மற்ற கல்விகள் அதன்பிறகு வந்தமைந்தன. தாய் தந்தையருக்குப் பணிவிடை, குருவிற்குப் பணிவிடை, விருந்தினருக்குப் பணிவிடை, இப்படிப் பணிவிடையானது விரிவடைந்துகொண்டே போயிற்று. இளமையில் பணிவிடை செய்து பழகுகின்றவர்கள் முதுமையில் சமுதாயத்தொண்டர் ஆகின்றனர். இளமையில் பணிவிடை செய்து பழகுதல் நல்ல கல்வி முறையாகும்."[1] ஆதலால் குருகுல மாணவன் வைகறையில் குருவுக்கு முன்

1. சுவாமி சித்பவானந்தர், கல்வி, ப.170.

எழுந்து இரவில் அவர் உறங்கியபின் உறங்கவேண்டும் (மனு.2:194). இடைப்பட்ட நேரங்களில் மாணவன் உற்றுழி உதவுவதோடு, உறுபொருளையும் உணவையும் தேடிக்கொடுத்தல் வேண்டும். அதோடு பிச்சை எடுத்து உண்பவனே மாணவன். பிச்சை ஏற்பதே பிரம்மசாரிக்கு உண்ணா நோன்பாகும்.

## குருபக்தி

ஆசிரியர் மாணவர் உறவே குருபக்தி எனப்படுகிறது. "குருபக்தி மேலோங்குமளவிற்கு மனத்தெளிவும் உண்டாகும். மாணாக்கன் மனத்தினுள் மாசற்றவன் ஆகின்றான். அத்தகையவனுக்கு ஆசிரியருடைய ஆசியும் இயல்பாக ஊற்றெடுத்து வருகிறது. குருபக்தி இல்லாதவனுக்குப் பிறவிப்பேறாக அமைந்துள்ள அறிவுதானே மழுங்கிவிடும். குருபக்தி உடையவனுக்குப் பிறவியிலேயே அறிவு அமையாது போய்விடினும் நாளடைவில் அது உருவெடுக்க ஆரம்பிக்கிறது. அறிவை வளர்க்கக் குருபக்திக்கு நிகரான உபாயம் இல்லை."[1] ஆதலால் குருபக்தியின் தேவையை மனு பின்வருமாறு வலியுறுத்தியுள்ளார். "குரு கூறும் கட்டளைகளைப் படுத்திருந்தும், சாப்பிட்டுக்கொண்டும் நடந்துகொண்டும் கேட்கக்கூடாது. மறுமொழி கூறுதலும் கூடாது. அவர் அமர்ந்திருந்தால் நின்று கொண்டும், அவர் நிற்கும்போது அருகில் தான் நின்றும், தன்னை அணுகிவந்தால் தான் எதிர்சென்றும், அவர் செல்லும்பொழுது பின் தொடர்ந்து ஓடியும், தூரத்தில் இருக்கும்பொழுது அருகில் சென்றும், படுத்திருக்கும்போது வணங்கி நின்றும் குரு கூறும் கட்டளைகளை மாணவன் கேட்கவேண்டும்" (மனு.2:195–198). மேலும் மனைவியுடன் குரு தனித்திருக்கையில் அருகில் சென்று வணங்கலாகாது. குருவின் மனைவி, மகனையும் வணங்க வேண்டும். தனது குருவிற்குக் குருவானவர் எழுந்தருளும்போது அவரையும் குருவாகப் போற்றுதல் நன்று. குருகுலத்தில், வசிக்கும்போது தன் தாய், தந்தையர்வரினும் குருவின் அனுமதியின்றி அவர்களை வணங்குதல் இல்லை (மனு.2:205). குருவின் முன் அமர்தலும், அவர் கேளாதிருக்கையில் வலிய உரைத்தலும் கூடாது (மனு.2:203). குருவின் ஆசனம் படுக்கை இவற்றைவிடத் தன்னுடையவை தாழ்ந்திருக்க வேண்டும். அவர் பார்வையில் படுமாறு ஆசனத்தில் அமரக்கூடாது (மனு.2:198) என்பது மனு நெறியாகும்.

இத்தகு பணிவுடையவனே கல்வி கேள்விகளில் சிறந்தவனாக

1. சுவாமி சித்பவானந்தர், கல்வி, ப. 195.

இருந்தல் முடியும் என்பதை,

"நின்றக்கால்நிற்க அடக் கத்தா லென்றும்
இருந்தக்கால் ஏவாமை ஏவார் பெருந்தக்கார்
சொல்லிற்செவி கொடுத்துக் கேட்பீர் மீண்டும்
வினாவற்க சொல்லொழிந் தக்கால்"[1]

என்று நீதிநூலும் எடுத்தியம்புகின்றது.

## ஒழுக்கம்

"மனிதனைப் பண்புடைய நல்ல மனிதன் ஆக்குவதே கல்வியின் குறிக்கோளாகும். மனிதனுக்கு விழுப்பம் அனைத்தையும் தருவது ஒழுக்கம். ஆதலால் உயிரில் வைத்திருக்கும் பற்றுதலை விட அதிகமான பற்றுதல் ஒழுக்கத்தில் வைத்திருக்க வேண்டும்."[2] ஆசிரியரிடம் மரியாதையாகச் செயல்படவேண்டும்; அவர் இல்லாதபொழுது உபாத்தியாயர் என்ற மரியாதைக்குரிய சொல்லைத்தவிர அவருடைய பெயரைக்கூடக் கூறலாகாது. ஆசிரியரைப்போல நடந்தும், பேசியும் காட்டிப் பரிகசித்தல் நன்றன்று. ஏனெனில்,

"குருவின் பிழைகளை எடுத்துக்காட்டி விமர்சிப்பவன்
கழுதையாகப் பிறப்பான். பிழைகாண வேண்டுமென்றே
கற்பித்துக்காட்டுபவன் நாயாகப் பிறப்பான். அவரது உடமைகளை
அனுமதியின்றி அனுபவிப்பவன் புழுவாகப் பிறப்பான். குருவிடம்
பொறாமைப்படுபவன் நீண்ட வால்பூச்சியாகப் பிறப்பான்"
(மனு.2:201)

எனக்கூறி, மாணவர்கள் நல்வழியில் நடப்பதற்கு மனு வழிகாட்டியுள்ளார். இதனை எக்காலத்திற்கும் பொருந்தும் அறநெறி எனலாம்.

## கற்கும் ஆண்டு

குருகுல மாணவர்கள் குறைந்தது ஒன்பது ஆண்டுகள் முதலாக, அதிகப்படியாக முப்பத்தாறு ஆண்டுகள் வரையிலும் கல்வி பயிலலாம் என்பது மனுநெறி, இதனை,"மூன்று வேதங்களையும் கற்கும் மாணவன் ஒருவன் தொடர்ந்து முப்பத்தாறு ஆண்டுகள் குருகுலவாசம் செய்யலாம்

1. ஆசாரக்கோவை, 14.
2. சுவாமி சித்பவானந்தர், கல்வி, ப. 170

அல்லது பாதிகாலமோ, நாலிலொரு பங்கு ஆண்டுகளோ அல்லது வித்தை முழுவதும் பயின்றாகும் வரையிலோ குருகுலவாசம் செய்யலாம்'' (மனு.3:1) என்று மனுதருமம் எடுத்துரைக்கிறது.

'இளமையிற் கல்' என்பது முதுமொழி. இதற்கேற்ப மக்கள் இளமையிலேயே கற்கவேண்டும் என்று வள்ளுவர் விரும்பினார். அதனால் கல்வியை மக்கட்குக் கண் என்று கூறினார். ஓரளவு கற்றவுடன் போதும் என்று மனநிறைவு பெறுதல் கூடாது. மனிதன் இளமையிலிருந்து வாழ்வின் இறுதிவரையிலும் கற்கவேண்டும் என்பதே வள்ளுவரின் நோக்கமாகும். அதனால்,

> "................ என்னொருவன்
> சாந்துணையுங் கல்லாத வாறு" (குறள். 397)

என்று வினவுவதன் வாயிலாகக் கல்வியைக் கற்பதற்கு வயது வரையறை இல்லை என்று கூறினார். கற்றுக்கொண்டே இருக்கவேண்டும் என்பது வள்ளுவநெறி.

## குருதட்சணை

கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் விரும்பும் பொருளையே மாணவர் தட்சணைகளாகக் கொடுத்தார்கள். ஆனால் அதை வேதம் ஓதும் முன்பு கொடுக்கலாகாது. ஓதி முடிந்து, இல்லறம் புகும்போது குருவின் விருப்பப்படி தட்சணை கொடுக்கவேண்டும். மண், பொன், பசு, குதிரை, செருப்பு, குடை, ஆசனம், தானியம், கறியமுது, ஆடை ஆகியன குரு மகிழ்ந்தேற்கும் தட்சணைகளாகும். (மனு.2:245,246).

மாவணன் கற்றுத்தெளிந்த பின்பே குருதட்சணை வழங்கப்பட்டது என்பது சிறப்பிற்குரியது எனலாம். நிலம், பொன், பொருட்கள் குருதட்சணையாக வழங்கப்பட்டதிலிருந்து மாணவர்கள் அவரவர் தகுதிக்கேற்பத் தட்சணை வழங்கினர் எனலாம்.

## நல்லாசிரியர்

தாய், தந்தையின் கலப்பால் எடுக்கும் உடல்பிறவி விலங்குத் தன்மை உடையது. பிரம்ம உபதேசத்தால் பெறும் இரண்டாவது பிறப்பு அழிவற்ற, மூப்பற்ற தன்மையையும் புண்ணியலோகவாழ்வையும் தருவது (மனு.2:147,148) ஆதலால் இரண்டாவது பிறவிக்குக் காரணமான

நல்லாசிரியர் தந்தைக்கு நிகரானவர் (மனு.2:150) நல்லாசிரியர்கள் அவர்களின் செயலுக்கேற்ப ஆசாரியன், உபாத்யாயன், குரு, ரித்விக் என்று அழைக்கப்பட்டனர்.

இவை யாவும் காரணப்பெயர்கள் என்பதைப் பின்வரும் விளக்கங்களால் அறியலாம்.

ஆசாரியன் : உபநயனம் செய்வித்து, மந்திரங்களையும் வேதங்களையும் ஓதுவிக்கின்றவன் ஆசாரியன். (மனு.2:140).

உபாத்தியாயன் : மேற்கூறியவைகளைப் பொருள் பெற்றுக் கொண்டு செய்விப்பவன் உபாத்யாயன் (மனு.2:141). பொருள் பெறாமல் கடமை கருதிச் செல்வதால் ஆசாரியன் உபாத்யாயனை விடப் பத்துமடங்கு உயர்ந்தவனாக மதிக்கப்பட்டான் (மனு.2:145).

குரு : வாழ்வில் பின்பற்றவேண்டிய நல்வழியைக் கற்றுக்கொடுப்பவன் குரு. சாத்திர விசயமாகத் துணைசெய்பவனும் குருவே. (மனு.2:142,149).

ரித்விக் : தன்னை வந்து பிறர் விரும்பிக் கேட்டுக் கொண்டால் தீ வளர்த்தலையும் வேள்விகளையும் செய்விப்பவன் ரித்விக் (மனு.2:143)

ஆசாரியன், உபாத்யாயன், குரு, ரித்விக் என்னும் நால்வகை நல்லாசிரியர்களுள், பொருள் பெறாமல் உபநயனம் செய்வித்து மந்திரங்களையும் வேதத்தையும் கற்றுக்கொடுப்பதால் ஆசாரியன் உயர்ந்த சான்றோராவர். இவரை வேதத்தை விற்றுப் பிழைக்காத அறவோர் எனக்கூறலாம்.

ஆசிரியரின் இலக்கணம் பற்றி வள்ளுவர், தனி அதிகாரத்தில் சிறப்பித்துக் கூறவில்லை. ஆயினும் கல்வி போற்றப்பட்ட வள்ளுவர் காலச் சமுதாயத்தில் ஆசிரியர்கள் பலர் இருந்திருத்தல் வேண்டும். இவர்கள் மற்றவர்களுடன் இனிமையாகக் கூடிப் பழகுதல் வேண்டும் என்பதை,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்" (குறள். 394)

என்ற குறள் புலப்படுத்துகிறது.

## கற்றுக் கொடுத்தற்கேற்ற மாணவர்கள்

பிரம்மதேவனால் படைக்கப்பட்டது வேதம். இவ்வேதமறிந்த நல்லாசிரியர்கள் அதைத் தக்காருக்குக் கற்றுக்கொடுப்பதே சிறந்த அறமாகக் கருதப்படுகின்றது. இதை,

"குருமகன், ஒருசாலை மாணவன், அறிவறிந்தவன், தருமம் தெரிந்தவன், ஆசாரசீலன், கிராஹ்ய சக்தியுள்ள கொடையாளி, உறவினன், பங்காளி, பொய்பேசாதவன் ஆகிய பதின்மரும் வேத உபதேசம் செய்விக்கத்தக்கவர்கள்" (மனு.2:109) என்ற தரும சாத்திரத்தாலும் அறியலாம். மேலும் விரும்பிக் கேளாதவனுக்கும், முறைப்படிப் பயிலாதவனுக்கும் கற்பித்தல் கூடாது. அவ்வாறே குணமற்றவனுக்குக் கற்பித்தல் களர்நிலத்தில் வித்திட்டது போல் பயனற்றதாகக் கருதப்படுகிறது (மனு.2:112). அதனால் தகுதி உடையாருக்கு மட்டுமே வேதங்களைக் கற்பித்தல் வேண்டும்; விற்றுப் பிழைத்தல் கூடாது (மனு.2:113) என்னும் மனுநெறி இக்காலத்தில் காசுப்பட்டறைகளாகத் திகழும் கல்விநிலையங்களுக்குக் கூறும் அறநெறி எனலாம்.

## கற்பிக்கும் முறை

"முறை தவறிக் கற்பிப்பதும் கற்பதும் ஒருவனுக்கு ஆயுள் குறைவையும் இருவரிடையே பகையையும் உண்டாக்கும் (மனு.2:111). ஆதலால் ஆசிரியன் முறையோடு கற்பித்தல் வேண்டும். மேலும் பெற்றோருக்கு நிகரானவன் குரு. அதனால் நல்லொழுக்கங்களைக் கற்பிக்கும்போது பிரம்பு போன்றவற்றால் மாணவரை அடிக்காமலும், கொடிய சொற்களைக் கூறாமலும் தாய்மை உணர்வுடன் கற்பிக்க வேண்டும். (மனு.2:159). இவ் அறநெறி எக்காலத்திற்கும் பொருந்தும் பொதுநெறி எனலாம். அதோடு கற்பிக்கும் ஆசிரியர் தாயுமானவராகப் பரிவு காட்டவேண்டும் என்று கூறியிருப்பது சிறப்பிற்குரியது.

## வேதம் கற்றலும் கற்பித்தலும்

எந்தச்சமுதாயமும் பொதுமக்கள் மதக்கருத்துக்களைப் படிப்பதையும் அறிந்துகொள்வதையும் தடுப்பதில்லை. பொதுமக்கள் அறிவைத்தேடி அடைவது குற்றமாகக் கருதித் தண்டனை அளித்ததில்லை. பொதுமக்களுக்கு அறிவைத்தர மறுத்த தெய்வீகச் சட்டவல்லுனராக மனு கருதப்படுகின்றார். ஏனெனில் பிராமணரும் சத்திரியரும் வைசியரும் வேதம் படிக்கலாம். இவருள் பிராமணர் மட்டுமே வேதத்தைக் கற்பிக்கலாம் (மனு.1:88,89,90). ஆனால் சூத்திரரும் பெண்களும் வேதம் படிக்கக்கூடாது என்பது மட்டுமல்ல, படிக்கும் இடத்தில் நின்று அதைக்கேட்க உரிமையில்லை (மனு.10:199; 4:99).

சூத்திரர்கள் வேதம் பயின்றால் தண்டனைக்குரியவராயினர். "சூத்திரன் மனப்பாடம் செய்யும் நோக்கத்துடன் வேதம் படிப்பதைக் கேட்டால் அவனது காதுகளில் காய்ச்சிய ஈயத்தையும் அரக்கையும் ஊற்றவேண்டும். அவன் வேதம் ஓதினால் நாக்குத் துண்டிக்கப்பட வேண்டும். வேதத்தில் முழுத்தேர்ச்சி அடைந்தால் அவனது உடம்பு துண்டு துண்டாக வெட்டிச் சிதைக்கப்பட வேண்டும்" (மனு.12:4) என்று தரும சாத்திரம் கூறுகிறது.

இவ்வாறு வேதம் பயிலும் உரிமை சிலருக்கு மறுக்கப்பட்டது. இதனால் உலகவாழ்வில் எழுத்தறிவின்மையும் அறியாமையும் பரவ ஏதுவாயின. எழுத்தறிவும் படிப்பறிவும் வேதம் கற்பாருக்கு மட்டுமே தேவைப்படுவதாயின. இதனால் மனு கூறிய விதிமுறைகள் எழுத் தறிவையும் படிப்பறிவையும் கொடுப்பதற்கும் மறுப்பதற்கும் விதி முறைகளாக மாறின. எழுதப்படிக்கும் உரிமை ஒருசில மேற்குடியினருக்கு மட்டுமே இருந்தது. எழுத்தறிவின்மை எண்ணற்ற மக்களது தலைவிதி ஆயிற்று.

## வள்ளுவர் கூறும் கல்வி

வள்ளுவர் கல்வியைப் போற்றினார். சமுதாயத்தலைவன் நெறியோடு ஒழுகவேண்டுமானால் கல்வி அறிவு உடையவனாக இருத்தல் வேண்டும். அவனுடைய ஆட்சியின்கீழ் வாழும் குடிகளும் அறிவுடையவர்களாகத் திகழக் கல்வி அறிவு தேவை என்பதால் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்ற நான்கு அதிகாரங்களை அமைத்தார்.

## யாவர்க்கும் கல்வி

கல்வி என்னும் அதிகாரத்தில் அரசனுக்குக் கல்வி தேவை என வள்ளுவர் கூறுகின்றார். இறைமாட்சி என்னும் அதிகாரத்திலும், 'தூங்காமை கல்வி துணிவுடைமை' (குறள். 383) என்று கூறுவதன் மூலம் அரசனுக்குரிய இயல்புகளுள் ஒன்றாகக் கல்வியைக் குறிப்பிடுகின்றார். இக்கல்வி அரசனுக்கு மட்டுமன்றி, நாட்டில் வாழும் யாவருக்கும் தேவை என்பதை, 'வாழும் உயிர்க்கு' (குறள். 392), 'மாந்தர்க்கு' (குறள். 396), 'ஒருவன்' (குறள். 397), 'ஒருவன்' (குறள். 398) எனவரும் சொற்களில் வலியுறுத்துகிறார். மேலும் உயர்குலத்தில் பிறந்தோரே கல்வி கற்க வேண்டும் என்று வள்ளுவர் கருதவில்லை. எல்லாக்குலத்தினரும் கற்பதற்கு உரியவர் என்பதை,

> "மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
> கற்றா ரனைத்திலர் பாடு" (குறள். 409)

என்ற குறளால் அறியலாம். கல்வி கற்றால் எக்குலத்தினரும் மேன்மை அடையலாம் என்பதே வள்ளுவரின் கருத்து.

கல்வியின் இன்றியமையாமையையும் வள்ளுவர் விளக்குகின்றார். கற்றவர் மட்டுமே கண்ணுடையவராகக் கருதப்படுவர். மற்றவர்கள் முகத்திரண்டு புண்ணுடையவர்களாவர். இக்கல்வியே ஒருவனுக்கு அழிவற்ற செல்வம். ஏழுபிறவிகளிலும் காவலாக இருந்து கற்றவனுக்குப் பயன்படும். எனவே நல்லதொரு சமுதாயம் அமையக் கல்வி தேவை (குறள். 400,300) என்று உணர்த்துகிறார்.

## கேள்வி

செவி உணவாம் கேள்வி அறிவைப்பற்றியும் வள்ளுவர் பத்துப் பாடல்களில் புலப்படுத்துகிறார். நாட்டில் வாழும் எல்லோருக்கும் கற்கும் வாய்ப்பு இருந்திருக்கும் என்று கூற இயலாது. இத்தகையோரைக் கேள்வி அறிவைப் பெறும்படி வள்ளுவர் உணர்வூட்டுகிறார், ஓரளவு கற்றவர்கள், தாம் கற்றறியாத நூல்களைக் கற்றோர்பால் கேட்டுப் பயனடையலாம் என்பதைக் 'கற்றிலனாயினுங் கேட்க' (குறள்.414) என்று கூறி அறிவுறுத்துகிறார்.

## கல்வியின் வகைகள்

மக்கள் பல்துறைக் கல்வி கற்கவேண்டும் என்பது வள்ளுவரின் நோக்கம். அதனால்,

"எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (குறள். 392)

என்றார். இதனால் கணிதமும் இலக்கியமும் கற்போரால் கற்கப்பட்டன. அறநூல்களையும் நீதிநூல்களையும் அரசர் கற்றனர் என்று பரிமேலழகர் கூறியுள்ளார். தூதுவராகச் செல்லக்கூடியவர் பிற அரசரது அவை மாடத்துப் பிறர் வினாவும் வினாக்கட்கு அஞ்சாது பதிலளித்தற்காக அளவை நூற்கல்வியும் தமிழ்நாட்டில் இருந்ததாக அறியலாம். "மருந்து என்னும் அதிகாரத்தில் நூலோர், கற்றான் என்னும் சொற்களை, மருத்துவரைக் குறிக்க வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார். இதனால் மருத்துவ நூல்கள் இருந்தமை தெளிவாகின்றது. இவை ஆயுர்வேத நூல்களாகவோ, சித்தவைத்திய நூல்களாகவோ இருக்கலாம்."[1] உழவுக்கும் வாணிபத்திற்கும் உரிய நூல்கள் இருந்தன. அமைச்சர் அவற்றையும் கற்றல் ஏற்றதன்று (குறள் 725) என்று மணக்குடவர் உரை கூறியுள்ளார். இதனால், சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான கல்வியைக் கற்றுத் தெளிந்தனர் என்பதை அறியலாம்.

## கசடறக் கற்றல்

மாணவர்கள் கற்றதற்குரிய நூல்களைக் கசடறக் கற்றல் வேண்டும். "கசடறக் கற்றலாவது விபரீத ஐயங்களை நீக்கி, மெய்ப் பொருளை நல்லோர் பலருடன் பலகாலும் பயிறல்" என்பர் உரையாசிரியர். அறநூலாராகிய மனுவும்.

"குருகுலவாசம் புரிந்த சீடன் மூன்று வேதங்களையுமோ,
இரண்டினையோ, ஒன்றையோ, பழுதறக் கற்றுத்தேர்ந்தபின்
இல்லறவாழ்வை மேற்கொள்ளலாம்" (மனு.3:1,2)

என்று கூறியுள்ளார். எவ்வளவு கற்கவேண்டும் என்பதைவிட, எப்படிக் கற்கவேண்டும் என்பதே அழுத்தமாகக் கூறப்படுகிறது. ஒரு வேதத்தைக்

---

1. காமாட்சி ஸ்ரீனிவாசன், குறள் கூறும் உறுதிப்பொருள், ப. 230.

கற்றாலும் பழுதறக் கற்கவேண்டும் என்பதே மனுவின் கொள்கை. இக்கருத்தின் அடிப்படையில் வள்ளுவரும், 'கற்க கசடறக் கற்பவை' (குறள். 391) என்று மொழிந்துள்ளார். கசடறக் கற்றல் என்பதற்குப், "பழுதறக் கற்றல்" என்றே பரிமேலழகரும் உரை கூறியுள்ளார்."[1] அதனால் கற்கும் நூல்களைப் பழுதறக் கற்றுத் தெளிந்த அறிவைப்பெறல் வேண்டும் என்று மனுவும் வள்ளுவரும் வலியுறுத்துகின்றனர்.

## கற்றவழியில் நிற்றல்

மனிதன் அறுத்தெறிய வேண்டிய தளைகளுள் முதலாவதாகப் புத்தரால் சுட்டப்பட்டது பேதைமை. இப்பேதைமை நீங்கி, மெய்யறிவு பெறக் கல்வி இன்றியமையாதது. கல்வி வெறும் பிழைப்புக் கல்வியாக மட்டும் அமையாமல் வாழ்வைச் சீர்திருத்தும் செம்மைக் கல்வியாகவும் அமைந்தால் நலம் பயக்கும். ஆதலால் புத்தர்பெருமான்,

> "சாத்திரங்கள் அனைத்தையும் கற்று ஒப்பித்தாலும் வாழ்க்கையில்
> அவற்றின்படி நடக்காதவன் ஊரார் பசுக்களைக் கணக்கிட்டு
> எண்ணும் ஆயனைப் போன்றவன்" (த.19)

> "சாத்திரங்கள் சிலவற்றைக் கற்றவனாயினும் வாழ்க்கையில்
> அவற்றின்படி நடப்பவனாயும் ஆசை, துவேசம், மோகம்
> முதலியவற்றைக் களைந்து மெய்யறிவு பெறல்வேண்டும்" (த.20)

என்று வலியுறுத்தியுள்ளார். மெய்யறிவு பெறலே கல்வியின் பயன். அதனால் இனவேறுபாடின்றி யாவரும் கல்வி கற்று, கற்றதற்கேற்பச் செயல்படவும் வேண்டும் என்பதே பௌத்த நெறி. அவ்வாறே, வள்ளுவரும் வேந்தர்க்கு மட்டுமே கல்வி தேவை என்று கூறாது, 'மாந்தர்க்கும் கற்றனைத்தூறும் அறிவு' என்று பொதுபடக் கூறியுள்ளார். அதோடு, கற்றவழியில் நிற்றல் வேண்டும் என்பதை,

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக" (குறள். 391)

என்று குறளாகவும் மொழிந்துள்ளார். மெய்யறிவு பெறக் கற்கவும், கற்ற வழியில் நிற்கவும் வேண்டும் என்பதே இருநூலாரின் நோக்கமாகும்.

---

1. பரிமேலழகர் உரை (உ.ஆ.), திருக்குறள், 391.

## கற்றவர்க்குச் சிறப்பு

கற்றறிந்த சான்றோர்க்குத் தம் நாடும், ஊருமேயன்றி எல்லா நாடும், ஊரும் சொந்தமாகும். அறிவுடையார் எல்லாம் உடையார். ஆதலால் கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புக்கிடைக்கும். எனவே கல்வியில் நாட்டம் செலுத்தவேண்டும் என்பதைப் புத்தர் பெருமான்,

> "சீலமும் அறிவும் படைத்தவன் புகழும் செல்வமும் எய்துகின்றான்.
> அவன் எந்தெந்த இடத்தில் தங்கியிருந்தாலும் அங்கங்கே
> போற்றப்படுகின்றான்" (த.301)

என்று தெளிவுறுத்தியுள்ளார். புத்தரின் வழிநின்ற வள்ளுவரும்,

> "யாதானும் நாடாமால் ஊராமல் என்னொருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு" (குறள். 397)

என்று அறிவுறுத்தியுள்ளார். இருவர் கருத்தும் ஒத்திருத்தல் குறிப்பிடத் தக்கது.

## அவையஞ்சல்

நாடெங்கும் மேடைப்பேச்சும் சொற்பொழிவுகளும் பெருகி வருகின்றன. அதனால்,

> "கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்தும்
> நல்லா ரவையஞ்சு வார்" (குறள். 729)

என்று மேடைக்கு அஞ்சும் பெரும்படிப்பாளியைப் படியாதவனினும் கடையென்று இகழ்கின்றார் வள்ளுவர். பேடிக்கும் வாளுக்கும் என்ன தொடர்பு? இவனுக்கும் நூலுக்கும் என்ன தொடர்பு? என்று இழிவு படுத்துகிறார். இவன் வாழ்பவனா? செத்தவன் காண் என்று உயிரோடு பாடையில் ஏற்றுகின்றார். இவ்விடித்துரைகளை நோக்கும்போது, நூற் கல்விக்கும் மேடைப்பேச்சுக்கும் வள்ளுவர் ஓர் இணைப்பை வற்புறத்தக் காணலாம். நிரம்பக் கற்றவனுக்கு, நன்கு சொல்லவும் தெரியவேண்டும் என்ற, வள்ளுவரின் கல்வித்திட்டம் விரிந்த ஒரு புதுநோக்குடையது எனலாம்.

பொருட்செல்வம் போலக் கல்வியும் ஒரு செல்வம் எனப்படும். இதைக் 'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்றார் வள்ளுவர். செல்வத்துப் பயனே ஈதல் என்பது செல்வத்துக்கெல்லாம் ஒரு பொது இயல்பு. பொருட் கொடையால் பிறர்பொருள் பெறுவர். கொடை கொடுத்தவன் புகழ் பெறுவான். ஆனால் கல்விக்கொடையால் கேட்டார் அறிவுநலம் பெறுவது போலக் கற்றுக்கொடுத்தவனும் அறிவு வளர்ச்சி பெறுவான் என்பதால்,

"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொற்றெரிதல் வல்லார் அகத்து" (குறள். 717)

"உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று" (குறள். 718)

என்று கூறுகிறார். இதனால் நாடெங்கும் கல்வி பரவவேண்டும் என்னும் நோக்குடையவர் வள்ளுவர் என்பது தெளிவு. அக்கல்வி பரப்பும் பொறுப்பு கற்ற ஒவ்வொருவனையும் சாரும் என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார். எல்லோரும் கற்கவேண்டும், எல்லோரும் கற்பித்தல் வேண்டும் என்பதே வள்ளுவர் நோக்கம். அதனால் கற்கும் மாணாக்கர், நல்லாசிரியர் இலக்கணம் பற்றி வள்ளுவர் குறிப்பிடவில்லை.

மனு விரும்பும் சமுதாயத்தில் கல்வி என்பது வேதங்களைப் படிப்பது மட்டுமே என்று கருதப்படுகிறது. கலை, அறிவியல் கல்வியைக் கற்றுத் தரும் பொறுப்பு, அக்காலக் குருகுலக்கல்விமுறையில் இல்லை. ஒவ்வொரு குடும்பத்தலைவனும் தான் ஈடுபட்டுவந்த தொழில் பற்றிய அனுபவ அறிவை, இளைய தலைமுறையினருக்குக் கற்றுக் கொடுத்திருத்தல் வேண்டும். வணிகருக்கு வேண்டிய அடிப்படைக் கல்வியான கணிதம், புவியியல், பன்மொழி அறிவு ஆகியவற்றைத் தந்தையிடமிருந்து வணிகம் செய்யும் நோக்கில் மகன் கற்றுத் தெரிந்திருத்தல் வேண்டும். இவ்வாறே கைத்தொழிலாளர்களும், கலைஞர்களும் தமது குழந்தைகளுக்குத் தொழில் செய்யும்பொழுதே கற்றுக்கொடுத்திருப்பர். வீட்டுக்கல்வியே பரவியிருந்திருக்காலம். இம்முறை ஒரு குறிப்பிட்ட தொழில் வளர்ச்சிக்கு மட்டுமே பயன்பட்டிருக்கும். இதில் புதிய கண்ணோட்டங்களுக்கும் கருத்துக்கும் இடமில்லை.

## வீட்டுக்கடமைகள்

"ஒவ்வொருவருக்கும் இரு கடமைகள் உண்டு. ஒன்று வீட்டுக்கடமை; மற்றொருன்று சமுதாயக் கடமை. இவற்றுள் வீட்டுக் கடமை வெளிப்படையானது, இயல்பானது. பெற்றோர்க்கும் சுற்றத்தார்க்கும், குடும்பத்துக்கும், குழந்தைகட்கும் செய்வெனவெல்லாம் பள்ளத்து நீரோட்டம் போல இயல்பான கடமைகளாகும். இவற்றைச் செய்வதால் புகழ் வருவதில்லை, செய்யாவிட்டால் பழிவரும்."[1] ஆதலால் பெற்றோர்களையும், மனைவி, மக்களையும் ஒருவன் தன்னைவிட்டுத் தள்ளலாகாது. அப்படி அவர்களைத் துறப்போனுக்கு அறுநூறு பணம் தண்டமாக விதிக்கப்பட்டது (மனு.8:388) என்று மனு கூறுகின்றார்.

"திருமணம் போன்ற இருபது பேருக்கு அதிகமாகக் கூடியிருந்து விருந்துண்டு களிக்கும் திருநாட்களில் அண்டை அயலாரையும் அழைத்து உண்பிக்கவேண்டும். உண்பிக்காதவனுக்கு ஒரு பொன்மாடம் தண்டம் (மனு.8:391). அவ்வாறே வீட்டில் நடக்கும் நற்காரியங்களில் வேதமறிந்த வனை அழைத்துச் சோறிடாதவன் ஒரு பொன்மாடத்தைத் தண்டமாகக் கொடுத்து, இரட்டிப்பாக அவ்விருந்தையும் வழங்கவேண்டும்" (மனு.8:392) என்பதும் மனுநெறி.

குடும்பம் சமுதாயத்துடன் ஓர் உறுப்பு என்ற எண்ணத்தோடு ஒற்றுமையாகவும் முயற்சியாகவும் இல்லறத்தை நடத்தவேண்டும். குடும்பம் சீரடைந்தால் ஊரும், ஊர் சீரடைந்தால் நாடும் ஏற்றமடையும்.

## பெண்கள் நிலை

மனுகாலச் சமுதாயத்தில் மகளிர் தனித்து வாழ்தல் அறமாகக் கருதப்படவில்லை. அதனால் இளமையில் தகப்பன், பருவத்தில் கணவன், விதவையானபின் மக்கள் இவர்களின் காவலில் வாழ்ந்தனர். (மனு.5:148). தந்தை, உடன்பிறந்தான், கணவன் போன்றோருக்கு வாழ்நாள் முழுவதும் பணிவிடை புரிந்தனர் (மனு.5:151). வீட்டுவேலையில் திறமும், மகிழ்வும், பொருள்களைப் பேணுதலும் சிக்கனமும் பொருந்தியவர்களாகத் திகழ்ந்தனர். இம்மையில் இன்பமளிப்பவன் விதிப்படி மணந்த கணவனாதலால் அவனுக்கு வேண்டிய பணிகளைச் செய்தால் மறுமையிலும் இன்பமடையலாம் என நம்பினர். அதனால், 'இழிநடத்தை,

---

1. வ.சுப. மாணிக்கம், இலக்கிய விளக்கம், ப. 41.

பரத்தையர் நட்பு, நற்குணமின்மை இவற்றை உடையவனாயினும் கணவனையே தெய்வமாகப் பேணினர்' (மனு.5:154). இவ்வாறு கணவனைப் பேணுதலே மறுமை இன்பத்திற்குரிய நல்லறம் எனப்பட்டது. அதனால் மறுமை இன்பத்தில் நாட்டமுடைய பெண்மணி, தன் கணவன் இருப்பினும் இறப்பினும் அவன் கருத்துக்கு மாறாகச் செயல்படவில்லை (மனு.5:156).

மாதர் பற்பலர் இளமையிலும் பிரம்மச்சரியத்திலும் இறந்து வானின்பம் பெற்றனர். கற்பரசிகளுக்கு மறுமணம் விதிக்கப்பெறவில்லை. கணவன் தாழ்ந்தவனென்று விடுத்து, உயர்ந்தவனைப் பற்றும் ஒருத்தியை நிந்தை வந்தெய்தியது. ஓடிப்போனவளென்ற பெயரும் கிடைத்தது (மனு.5:163). மனம், சொல், புலன் இவற்றை அடக்கி, நெறி தவறாமல் இருந்தவள் கற்பரசி என்று போற்றப்பட்டாள்.

### கூடாவொழுக்கம்

தகாத வகைகளில் தன் மனைவியிடம் ஈடுபடுதலும் பிறன்மனை விழைதலும் பரத்தையர் உறவும், ஒருவனையன்றிப் பலரை நாடும் பெண்ணின் வெறிச் செயலும் காமத்தின் கொந்தளிப்பேயாகும். இத்தகைய பொருந்தாக்காமச் செயல்கள் நோயும் மிடியும் பாய்ந்து சமுதாயக் கட்டுக்கோப்பினையும் குலைத்துவிடும். ஆனால் சமுதாயம் தோன்றிய நாள்முதல் கூடாவொழுக்கம் என்னும் தீநெறி மக்களிடையே பரவலாகக் காணப்பட்டது. அதனால் அறநூலார் மூவருமே கூடா வொழுக்கத்தைக் கண்டித்தனர்.

'காமவெறி போன்ற அனல் வேறில்லை' (த.249) அதனால் 'காமத்தோடு புலன்களின் இன்பங்களில் புகவேண்டாம்' (த.27) என்று தம்மபதம் எச்சரிக்கை செய்கிறது. அஞ்சி நடுங்கும் ஒருத்தியுடன் ஒருவன், அஞ்சிக்கொண்டே துய்க்கும் இன்பம் மிகவும் அற்பமானது. அரசனும் கடுமையான தண்டனை விதிக்கிறான். ஆதலால் எந்த மனிதனும் பிறன் மனைவியை விரும்பலாகாது என்று தம்மபதம் கூறும் இக்காமத்தினால் பிறப்பும் சோகமும் பயமும் தோன்றும் என்பதையும்,

> "காமத்திலிருந்து சோகம் தோன்றுகிறது.
> காமத்திலிருந்து அச்சம் தோன்றுகிறது,
> காமத்தைக் கடந்தவனுக்குப் போகமில்லை
> பயந்தான் ஏது" (த.21)

என்று தம்மபதம் எடுத்துரைக்கிறது.

மனு விரும்பும் சமுதாயத்தில் பொருட்செல்வத்தையும் விட மனைவியைப் பிறர் கூடாமல் காத்தலே எவ்வருணத்தார்க்கும் மேலான கடமையாகக் கருதப்பட்டது. ஏனெனில் பிறன்மனையைச் சேர்வதால் உலகில் வருணக்கலப்பு உண்டாகும். அதனால் தரும காரியங்கள் நடவாமல் உலகில் மழையின்றி அழிவேற்படும் என்ற நம்பிக்கை இருந்தது. இதன் அடிப்படையில் பிறன்மனை விரும்புவோரை மன்னன், உதடு, மூக்கு முதலியவற்றைக் கொய்து அடையாளம் செய்து ஊரைவிட்டு ஓட்டினான் (மனு.8:351).

பிறன் மனைவியைக் கூடும் ஒருவனைத் தழலேற்றிப் பழுத்த இரும்புப் பலகையில் படுக்கச்செய்து உடல் வேகும் வரை கட்டைகளையும் மேலே போடுமாறு மன்னன் ஏவினான் (மனு.8:371). இவ்வாறு தண்டிக்கப் பெற்றவன் மீண்டும் அவளைக் கூடினால் தண்டனை இருமடங்காக்கப் பட்டது.

விருப்பமற்ற கன்னியை வலிந்து புணர்வோனைக் குறி முதலியவற்றை அறுத்துக் கொல்லவேண்டும். என்று மனு ஆணையிடு கின்றார். ஆனால் விரும்பி இணங்கும் பெண்ணுடன் கூடியவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படவில்லை. பாதுகாவலற்ற உயர்குலப் பெண்ணைத் தாழ்குலத்தோன் கலந்தால் அவனது மர்ம உறுப்புக்களை அறுக்குமாறும், பாதுகாவலில் உள்ள பெண்ணைக் கூடினால் அவனது அங்கங்களின் எல்லாப் பாகங்களையும் வெட்டி அவனது எல்லாப் பொருளையும் கவருமாறும் மனு ஆணையிடுகின்றார். கற்புடைய பிராமணப் பெண்ணைக் கூடிய சத்திரியனுக்குத் தண்டனையாகக் கழுதை மூத்திரத்தை விட்டு, அவன் தலை மொட்டை அடிக்கப்பட்டது (மனு.8:374). கற்பினளாய அந்தணத்தியைப் புணர்ந்த வைசிய, சத்திரியர்களுடைய பொருள் முழுவதையும் கவர்ந்து ஊரைவிட்டு ஓட்டுக. அல்லது பழுத்த இரும்புப் பலகையில் கிடத்துக என்பது மனுநெறி (மனு.8:326).

கூடாவொழுக்கம் புரிந்த பிராம்மணனுக்கு உயிர்த்தண்டனை விதிக்கப்படவில்லை. காயமின்றி அவன் பொருளுடன ஊரைவிட்டுச் செல்லுதலே தண்டனையாக விதிக்கப்பட்டது. மற்ற வருணத்தார்க்கும் உயிர்த்தண்டனை அளிக்கப்பட்டது (மனு.8:378).

காம மயக்கத்தோடு பிறன் மனைவியை நோக்கும் நோக்கமே

ஒழுக்கக்கேட்டிற்கு வழிவகுப்பது. அவளுடைய மனத்தையும் கெடுப்பது. ஆகையால், அவ்வாறு நோக்காமல் வாழ்வதைத் திருவள்ளுவர் போற்றிக் கூறுகின்றார். அதனைப் பேராண்மை என்கின்றார்; அறம் என்கின்றார்; நிறைந்த ஒழுக்கம் என்கின்றார்.

பிறர் உரிமைக்கு இடையூறு செய்யாதவர்களுக்கே உலக நன்மையில் உரிமை உண்டு. ஆகையால், இந்தப் பரந்த உலகத்தில் நன்மைக்கு உரிமை உடையவர் யார் என்றால் பிறனுக்கு உரியவளாகிய ஒருத்தியின் தோளைச் சேராதவரே ஆவர்.

"நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
பிறர்க்குரியாள் தோள்தோயா தார்" (குறள். 149)

என்பது வள்ளுவம். இக்கருத்திற்கு அரணாக,

"கௌதமன் தேவி அகலிகையைக் கூடியதால்
இந்திரன் தன்மேனியெங்கும் ஆயிரம்
கண்களைப் பெற்றான். பாஞ்சாலியைக் கண்டு கீசகன்
மையலுற்றமையால் மாண்டான். வாலி தன்தம்பி
காதலியின் மேலுற்ற விரகத்தினால் வீழ்ந்தான்"[1]

என்ற சதகக்கருத்தும் திகழ்கிறது. ஆதலால், காமம் கூடாது; பிறனுடைய இல்லாளை விரும்புதல் கூடாது; அத்தகையோரிடம் அறமும் ஒழுக்கமும் நாணும் நிலைபெறறுவதில்லை; பெருமை இழந்து சிறுமையடைவர் என்பது தெளிவு.

பெண்களுக்குச் காமம் கூடாது என்பதை, 'பெண்ணுக்கு இழுக்கு தீய நடை' (த.240) என்ற கருத்தால் புத்தர் வலியுறுத்துகிறார். மனு காலச் சமுதாயத்தில் கூடாவொழுக்கம் புரிந்த தண்டனையை விடப் பெண்களுக்குக் கூடுதல் தண்டனை விதிக்கப்பட்டது. ஒரு பெண், மற்றொரு பெண்ணுடன் கூடினால் அவளது தலையை மொட்டையடித்து, விரல் இரண்டையும் நறுக்கி, கழுதை மேல் ஏற்றி நெடுவீதிகளில் துரத்தினர் (மனு.8:369). குலம், குணத்தால் மிக்குயர்ந்து, செருக்குற்ற ஒருத்தி, தன் கணவனை விடுத்து, மற்றொருவனைச் சேர்ந்தால் அவளைப் பலர் காண நாயை ஏவிக் கடிக்கும்படி செய்தான் மனிதன் (மனு.8:370)

---

1. விநாயக சதகம், 22.

கூடாவொழுக்கம் புரிந்த இருபாலர்க்கும் உயிர்த்தண்டனையும், கொடுந்தண்டனைகளும் விதிப்பதன் வாயிலாகக் கற்புநெறி வலியுறுத்தப் படுகிறது.

## வன்செயல்

வசைமொழிவோன், திருடன், அடிப்பவன் இவர்களை விட வன்செயல் செய்வோன் பெரும்பாவியாகக் கருதப்படுகிறான். ஏனெனில் வன்செயலால் அறத்திற்கே அழிவு ஏற்படும். அப்பொழுது அவ்விடத்தில் மன்னன் இல்லையென்றாலும் மூவருணத்தாரும் ஆயுதமேந்தி அறத்தைக் காக்கலாம் என்பது தருமசாத்திரநெறி (மனு.8:347). அதனால் வன்செயல் புரிவோர் குரு, சிறுவன், வயோதிகன், வேதமறிந்தவன் ஆகியோர்களாக இருந்தாலும் யோசிக்காமல் அவர்களைக் கொல்லலாம் (மனு.8:349). ஒருவன் மற்றொருவனைக் கொல்லவரும்பொழுது வந்தவனைப் பத்துப் பேரறியவோ, யாருமறியாமலோ கொன்றால் அது குற்றமில்லை. அதற்குத் தண்டனையும் இல்லை (மனு.8:350) என்பது மனுநெறி.

மக்களிடையே நிகழும் வன்செயல்களைத் தடுக்கும் உரிமை நால்வருணத் தாருக்கும் அளிக்கப்பட்டிருந்தது. அதனால் மன்னன் மட்டுமன்றி, மற்ற மூவருணத்தாரும் ஆயுதமேந்தி, வன்செயல்களைத் தடுத்து அறத்தை நிலைநாட்டும் கடப்பாடுடையவர்களாக இருந்தனர்.

## வன்சொற் கூறல்

சமுதாயத்தில் ஒருவர் மற்றொருவரை வன்சொற்களால் திட்டுதல் குற்றமாகக் கருதப்பட்டது. இக்குற்றத்திற்கு வருண அடிப்படையில் தண்டனை வழங்கப்பட்டது. வசைமொழிந்தோர் பணத்தை அபராதமாகச் செலுத்தினர்.

அந்தணனை அநீதியாக வசைமொழிந்த சத்திரிய வைசியருக்கு முறையே நூறு, இருநூறுபணம் அபராதமாக விதிக்கப்பட்டது. அவ்வாறே சத்திரிய, வைசிய, சூத்திரர்களை வசைமொழிந்த அந்தணன் முறையே ஐம்பது, இருபத்தைந்து, பன்னிரண்டு பணத்தை அபராதமாகச் செலுத்தினான் (மனு.8:267). ஒருவருக்கொருவர் வசைமொழிந்து கொண்ட அந்தணனுக்கும் சத்திரியனுக்கும் முறையே இருநூற்றைம்பது, ஐந்நூறு பணத்தை மன்னன் அபராதமாக விதித்தான் (மனு.8:276). வைசியனும் மற்றவனும் ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டால்

இருநூற்றைம்பது, ஐந்நூறு பணம் தண்டமாக விதிக்கப்பட்டது. (மனு.8:277).

பணத்தண்டம் விதித்து இன்சொல்லறம் வளர்த்த மனுநெறியை எக்காலத்திற்கும் ஏற்ற நெறி எனக்கூறலாம்.

## கடனும் வட்டியும்

மனுகாலச் சமுதாயத்தில் மக்களிடையே கடன் கொடுக்கல் வாங்கல் பழக்கம் இருந்தது. பொருளை ஈடாகக் கொடுத்துக் கடன் பெற்றனர். பொருளுக்குப் பதிலாகப் பணத்தை வட்டியாகக் கொடுத்தும் கடன் வாங்கினர்.

## வட்டிக்கு வாங்கும் கடன்

வட்டியினால் பிழைப்பவன் பொருள் வளர்ச்சிக்காக நூற்றுக்கு ஒன்றேகால் வட்டியை மாதந்தோறும் வாங்கலாம் (மனு.8:140). வட்டியை மாதந்தோறும், மூன்றுமாதத்திற்கு ஒருமுறை அல்லது ஆண்டுதோறும் ஒருமுறை, வட்டி செலுத்தத்தக்கது. இவ்வாறு கொடுக்க இயலாத போதிலும் வட்டிக்கு வட்டி வாங்குதல் கூடாது. இதைவிட அதிக வட்டியோ முதலுக்கு இரட்டிப்புக்கு மேலான வட்டியோ வாங்குதல் நிந்தைக்குரிய செயலாகக் கருதப்படுகிறது.

வருண அடிப்படையில் ஈடில்லாத கடனுக்கு இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து வட்டிகள் வாங்குதல் தவறாகக் கருதப்படவில்லை (மனு.8:142).

## ஈடு கொடுத்து வாங்கும் கடன்

விளைநிலம், வீடு, ஆடை, ஆபரணம் ஆகிய பொருட்களை ஈடாகக் கொடுத்தும் கடன் பெற்றனர். நிலத்தை ஈடுகாட்டி வாங்கிய கடனுக்கு ஒன்றேகால் வட்டியும் வாங்கக்கூடாது. குறித்த காலம் தவறினால் அந்த நிலத்தைத் தானமாகவோ விலைக்கோ கொடுக்க உரிமையில்லை (மனு.8:143). ஈடு வைத்த ஆடை, ஆபரணங்களை உடையவன் அனுமதியின்றி அனுபவிக்கக்கூடாது. அனுபவித்தால் பொருளுக்கு ஏற்படும் அழிவை அழிப்பவனே ஏற்றுக்கொள்வான். மாற்றான் பொருளைப் பத்தாண்டுகள் வரை அனுபவித்தால், அனுபவித்தவனுக்கு அப்பொருள் உடைமையாகிவிடும் (மனு.8:147). பின்னர் அதன்மீது வழக்கிடல்தகாது.

ஆனால் வீட்டை அடகுபெற்று, அவன் அனுமதியின்றி அனுபவிக்கும் அறிவிலி, அரை வட்டி வீட்டுக்காரனுக்குத் தள்ளுபடி செய்து கொடுத்தல் வேண்டும். வலிந்து பயன்படுத்தினால் முழுவட்டியையும் தள்ளுபடி செய்யலாம் (மனு.8:150).

## பிணையாளரின் மூலம் வாங்கும் கடன்

கடன் வாங்கும்பொழுது அதற்குச் சாட்சியாகக் கையொப் பமிடுபவர், பிணையாளர் எனப்படுவார், பிணை நிற்பவன் கடன் கொடுத்தவன் விரும்பும்போது கடன்காரனை அவன்முன் அழைத்து வரவேண்டும், தவறினால், பிணையாளனே கடனைச் செலுத்தும் நியதி இருந்தது (மனு.8:158). தகப்பன் பிணை நின்ற கடனை, அவனது பிள்ளை கொடுக்கவேண்டும் (மனு.8:159). கடன் வாங்கியவன் கடனைத் திருப்பிக் கொடுக்காதபொழுது பிணை நின்றுவனும் அவனது சந்ததியும் கடன் தொகையைக் கொடுக்கவேண்டும்.

ஒரே குடும்பமாக இருந்தபோது பட்ட கடனைக் கடன்பட்டவன் கொடாமல் இறந்தால், சொத்தைப் பங்கிட்டுக் கொண்ட சகோதரர்கள் கடனைக் கொடுத்தனர் (மனு.8:166).

எசமானனின் குடும்பத்திற்காக வேலைக்காரர் வாங்கும் கடனை எசமான் கொடுத்தனர் (மனு.8:167). கடனைத் தீர்க்க வழியில்லாதபோது தன் குலத்திற்கேற்ற தொழிலைக் கடன் கொடுத்தவனுக்குச் செய்து கடனைத் தீர்க்கலாம். கடன்பட்டவன் மேற்குலத்தவனாயின் சிறுகச் சிறுகக் கடனைத் தீர்க்கும் நிலை இருந்தது. (மனு.8:177).

## தண்டம்

கடன்பட்டோரைச் செருக்கினால் துன்புறுத்தக்கூடாது. துன்புறுத்தினால் கடன் தொகையில் கால்பகுதி தண்டம் விதிக்கப்பட்டது (மனு.8:176). கொடுத்தவன் கேட்கும்போது கொடாமல் வழக்கு, நீதி மன்றத்திற்கு வந்த பின்னர் கடனை ஏற்றுக்கொண்டால் நூற்றுக்கு ஐந்து பணமும், கடனை மறுத்துப் பொய் கூறினால் நூற்றுக்குப் பத்துப்பணமும் தண்டம் விதிக்கவேண்டும் என்பது மனுவின் கட்டளை (மனு.8:139).

## தள்ளப்படும் கடன் வழக்குகள்

குடிவெறி, பிணி, பித்தம், வாலைப்பருவம், கிழத்தனம்

உடையோருக்கு அவர்களின் உடன்பிறந்தார் அல்லது தந்தை இவர்களின் அனுமதியின்றிக் கொடுத்த கடனைப்பற்றி ஏற்படும் வழக்குகள் தள்ளி விடத்தக்கன (மனு.8:163). தருமத்திற்கும் வழக்கத்திற்கும் மாறாக எழுத்துமூலம் செய்யப்பட்டனவாயினும் ஒப்பந்தங்கள் செல்லுபடியாகா. கட்டாயப்படுத்தி ஒருவன் மீது சுமத்தப்பட்டது. கட்டாயப்படுத்தி பிறனிடமிருந்து பெற்றது அல்லது கட்டாயப்படுத்தி எழுதி வாங்கப்பட்டது ஆகியனவற்றையும் செல்லாவென்று தள்ளிவிடவேண்டும் என்பது மனு வாக்கு (மனு.8:168).

மனு கூறிய அறநெறிகளுள் கடனும் வட்டியும் பற்றிய நெறிகள் மட்டுமே அன்றுமுதல் இன்றுவரையிலும் மாறுபாடின்றி நடைமுறையில் செயல்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. வட்டிவிகிதம் சாதிக்குச் சாதி வேறுபடுகிறது. ஒருமாதத்திற்கு ஒன்றேகால் பணம் என்பது நியாயமான வட்டியாகக் கூறப்பட்டுள்ளது.

வள்ளுவர்காலச் சமுதாயத்தில் கடன்பெறல், கொடுத்தல் பழக்கம் இருந்தது. இதை,

"வறியார்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து" (குறள். 221)

என்ற குறள் புலப்படுத்துகிறது. ஆனால் வட்டிக்குக் கடன் வழங்கல் என்றில்லாமல், ஈகையில் அடிப்படையில் பின்னர் கொடுப்பர் என்ற நோக்கில் கடன் கொடுக்கப்பட்டது.

## திருட்டு – களவு

மனுவின் காலத்தில் மக்களிடையே திருட்டுத்தொழில் பரவலாக இருந்தது. திருட்டுக்கேற்பத் தண்டனைகளும் அளிக்கப்பட்டன.

## கடத்தல் – திருட்டு

நாட்டு மக்களைக் கடத்திச்செல்லுதலும் களவாகக் கருதப்பட்டது. அதனால், "நாற்குலத்தும் உதித்த ஆடவர், கற்பினரான மாதர் ஆகியோரைக் கடத்திச் செல்வோருக்கு மரணதண்டனை" (மனு.8:322) அளிக்கவேண்டும் என்பது மனுநெறி. அடிமைத்தொழில் செய்வதற்காக இவர்கள் கடத்தப்பட்டிருக்கலாம். அல்லது வீரர்களாயின் போர் செய்வதற்காகவும், மூத்தோராயின் அறிவுரை பகர்வதற்காகவும்,

அறிவுடையோராயின் ஆன்றதொழில் செய்வதற்காகவும் இவர்களைக் கடத்திச்சென்றிருக்கலாம். ஊனுக்கு ஊன் என்பது போல உடலுக்கு உடல் என்னும் அடிப்படையில் கடத்தல், களவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருப்பது ஏற்புடையதெனலாம். திருட்டு பற்றிய செய்தி, தம்மபதத்திலும், குறளிலும் இடம்பெறவில்லை.

## வன்திருட்டு

ஒருவன் பொருளை அவன் பார்த்திருக்கும்போதே வலிமையினால் கவர்ந்துகொண்டாலும், ஒருவன் இல்லாதபோது திருடிக்கொண்டாலும், திருடியதில்லை என்று சாதித்தாலும் அதைக் களவு என்றே கூறியிருக் கிறார்கள் (மனு.8:331). ஆதலால் அதை வன்திருட்டு எனக்கருதிய மனு, வன்செயலுக்குரிய தண்டம் விதிக்குமாறு ஆணையிடுகின்றார். இதனை,

“மனிதனை அடித்த திருடனை, மீண்டும் அவன் அவ்விதம் செய்யாமலிருக்கும் பொருட்டாக அவன் பிறருடைய எந்த உறுப்பை அடித்தானோ, அவனுடைய அதே உறுப்பை வெட்டித்தண்டிக்கவும்” (மனு.8:333) என்று தரும சாத்திரம் கூறுகிறது. வலியோரால் மெலியோர் தாக்கப்படுவதையும், பொருள் இழப்பதையும் வன்திருட்டு எனக்கூறித் தண்டனை அளிக்கும் மனுவின் கொள்கை சிறப்பிற்குரியதாகும்.

## காலத்திருட்டு

மண்ணுலகில் பிறந்த மன்னன் முதல் மாந்தர் அனைவரும் தங்களுக்குரிய கடமைகளைச் செய்தல் வேண்டும். கடமைகளை ஆற்றாது காலத்தை வீணில் விரயம் செய்தலும் களவாகக் கருதப்பட்டது. அதனால், “தந்தை, ஆசிரியன், நண்பன், தாய், மனைவி, பிள்ளை, புரோகிதன், இவர்களாயினும் அவரவர்க்குரிய அறங்களைச் செய்யாமல் புறக்கணிப்பராயின் அவர்களைத் தண்டிக்காமல் அரசன் விடக்கூடாது” (மனு.8:334) எனக்கூறிய மனு, தண்டம் விதிக்கத் தக்கதாகக் கூறப்பட்ட குற்றங்களை மன்னனே செய்வானாகில் அவனுக்கும் ஆயிரம் பணம் தண்டம் விதிக்குமாறு வேண்டியுள்ளார் (மனு.8:336). இதையே, ‘காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது’ என்ற பழமொழியும் உணர்த்துகிறது. கடமையை வலியுறுத்துவதற்காக மக்களுக்கும் மன்னனுக்கும் தண்டனையைப் பொதுவாக்கிய மனுநெறி குறிப்பிடத்தக்கது.

## பொன்திருட்டு

மக்களால் விரும்பக்கூடிய பொருள்களுள் ஆடை அணிகலன்கள் சிறப்பிடம் பெறுகின்றன. ஆதலால், "தராசில் நிறுக்கத்தக்க தங்கம், வெள்ளி, பட்டாடைகளை, நூறு பலத்திற்கு மேல் திருடியவனை மரணம் வரையில் தண்டிக்கவும்" (மனு.8:320) என்பது மனுநெறி, அவ்வாறே ஐம்பது முதல் நூறு பலத்துக்குட்பட்ட பொருளைத் திருடினால் கைகளைக் குறைத்தலே தண்டனை. அதற்குக் குறைந்த திருட்டுக்குப் பொருளின் மதிப்பை விடப்பதினொரு பங்கு அபராதம் செலுத்தவேண்டும் (மனு.8:321). பொன், வெள்ளி ஆகியன உயர்ந்த செல்வங்களாகக் கருதப்பட்டதால் அவற்றைத் திருடியவனுக்குப் பொருளின் அளவிற்கேற்ப ஆயுள் தண்டனை, அங்கக்குறைப்பு, அபராதம் ஆகியன தண்டமாக விதிக்கப்பட்டன.

## தானியத்திருட்டு

மக்களின் வாழ்விற்கு இன்றியமையாதது உணவு, உணவிற்குப் பயன்படும் தானியங்களைத் திருடுதல் தலையாய திருட்டாகக் கருதப்பட்டது. அதனால் தானியத்தின் அளவிற்கேற்பத் திருடுகிறவனுக்கு உறுப்புக்களைக் குறைத்தலோ, மரணதண்டனையோ வழங்கப்பட்டது. குறைந்த அளவுத் தானியமாயின் அப்பொருளுக்குப் பதினோரு பங்கு தண்டம் விதித்து, உடையவனுக்குத் திருடுபோன பொருளும் வாங்கிக் கொடுக்கப்பட்டது (மனு.8:319).

## ஆநிரைத்திருட்டு

பண்டுமுதல் ஆநிரைகள் சிறந்த செல்வங்களாக மதிக்கப்பட்டன. அந்தணர் வேள்விகளிலும் பலியிடப்பட்டன. "அந்தணர்களின் யாகப் பசுக்களைத் திருடியவனுக்கு முழங்காலை முறிப்பது தண்டனையாகக் கூறப்பட்டுள்ளது (மனு.8:324). அவ்வாறே சுமை தூக்கும் பொருட்டாக மலட்டுப்பசுக்களுக்கு மூக்குக் குத்தினவனுக்கும் இதே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதனால் பசுக்களை வேள்விக்கு மட்டுமே பயன் படுத்தவேண்டும் என்பதே மனுவின் கொள்கையாக இருக்கலாம், அல்லது மலட்டுப்பசுவாயினும் அதற்குத் துன்பம் விளைவித்தல் கூடாது என்ற அறநெறியை வலியுறுத்தலாகவும் இருக்கலாம்.

## விலங்குத்திருட்டு

வீட்டிற்குப் பயன்படும் விலங்குகளையும், விலங்குகளைப்போல் உழைக்கும் உழைப்பாளியாகிய வேலைக்காரனையும் அபகரித்தல் களவாகும். ஆதலால்,

> "தொழுவத்து மாடு, குதிரை இவற்றை அவிழ்த்துவிடுகிறவன்,
> குதிரை, தேர் இவற்றை அபகரிப்பவன், இவர்களுக்கு
> அங்கங்களைக் குறைப்பதும், அப்பொருளைப் பறித்தலும்
> தண்டமாகும்" (மனு. 8 : 341).

விலங்கும் வேலைக்காரனும் ஒன்றெனக் கருதப்பட்ட மனுவின் காலத்தை அடிமைத்தனத்தில் ஆரம்பகாலமென்றால் அது மிகையாகாது.

## பொருள் திருட்டு

மக்களுக்கு அன்றாடம் பயன்படும் உணவு, உடை வகைகளையும் இதரப் பொருட்களையும் களவாடியவனுக்கும், அபகரித்தவனுக்கும் தண்டனைகள் வழங்கப்பட்டன. களவு செய்தவன் உடைமையாளனுக்கு அன்னியனாயின் நூறு பணமும், சம்பந்தப்பட்டவனாயின் ஐம்பது பணமும் தண்டம் விதிக்கப்பட்டது (மனு.8:325–330). இதனால் உறவுமுறைக் கேற்பத் தண்டனைகள் குறைக்கப்பட்டன என்பது தெளிவு.

## தண்டனையற்ற திருட்டு

அடுத்தவர் பொருளை அவருக்குத் தெரிந்தோ தெரியாமலோ எடுத்துக்கொள்வது குற்றமாயினும் சில பொருட்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. அவை "வேலியில்லாத அத்தி, ஆல் முதலியவற்றின் கனிகள், கிழங்கு, புல் இவற்றை அயலான் மண்ணி லிருந்து கேளாமல் எடுத்துக் கொண்டாலும் அதனைத் திருட்டென்று கொள்ளலாகாது. அதற்குத் தண்டிக்கவும் கூடாது (மனு.8:338). அவ்வாறே பிழைப்புக்கு வழியில்லாதவனும், வழிப்போக்கனும் அயலானின் கருப்பங் கழிகளையும், இரண்டு கிழங்கையும் எடுத்துக் கொண்டால் அது திருட்டாக கருதப்படவில்லை (மனு.8:340) ஏனெனில் மரம், செடி, புல் போன்ற இயற்கைகளில் இருந்து கிடைக்கும் காய், கனி, கிழங்குகள் மக்கள் யாவருக்கும் பொதுவுடைமையாதலால் அவற்றை எல்லோரும் துய்க்கலாம். பசிக்கொடுமைக்காக அயலான் பொருளை அளவோடு எடுத்தல் தவறவில்லை என்ற கருத்து புலப்படுகிறது.

## திருட்டும்–தண்டனையின் அளவும்

திருட்டின் தன்மையை அறிந்து அவற்றிற்கேற்பத் தண்டனை அளிக்கப்பட்டதாயினும் வருணாச்சிரம முறையில் தண்டனையில் மாற்றங்கள் இருந்தன. திருடன் நான்காம் வருணத்தானாயின் எண் மடங்கும், வைசியனுக்குப் பதினாறு மடங்கும், சத்திரியனுக்கு முப்பத்திரண்டு மடங்கும், அந்தணனுக்கு அறுபத்துநான்கு மடங்கும் தண்டம் விதிக்கப்பட்டதாகத் தருமசாத்திரம் கூறுகிறது (மனு.8:336–337). திருட்டுத்தொழில் புரிந்தவர்களுள் அந்தணர்களுக்கே கூடுதல் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் கல்வி, கேள்விகளில் சிறந்த அந்தணன் திருடினால் வரும் குற்றங்களையும் அறிந்திருப்பான். அதனால் அறிந்து தவறுசெய்த அந்தணனுக்குக் கூடுதல் தண்டமும், அறியாமையால் தவறுசெய்த நான்காம் வருணத்தானுக்குக் குறைந்த தண்டமும் விதித்திருப்பது பொருத்தமுடையதாகத் தெரிகிறது.

சமுதாயத்தில் பரவலாகத் திருட்டு மலிந்திருந்ததற்கு வறுமையே காரணம் எனலாம். அதனால் மனுகாலச் சமுதாயத்தை வறுமைச்சமுதாயம் எனலாம்.

## சமூக மக்கள் கடமைகள்

"அரசு சமுதாயப் பெருநலங்களைச் செய்தாலும் மக்கள் செய்ய வேண்டிய சமுதாயக்கடமைகளும் பலவுள. சிறுதுளி பெருவெள்ளம், ஒருபிடி, பலபடி என்பது போல ஒவ்வொருவரும் தாங்கள் செய்வேண்டிய கடமைகளைச் செய்தால் சமுதாயம் கூட்டுவளம் பெறலாம்"[1] என்பதால் ஒவ்வொரு சாதியினரும் அவரவர் குலத்தொழில்களைச் செய்தனர்; தவறியவர் தண்டனையை ஏற்றனர்.

## வண்ணான் கடமை

மேடுபள்ளமில்லாமல் ஒரே மட்டமாய் இருக்கும் இலவம் பலகையில் ஒருவர் துணிகளைத் துவைத்து, அவற்றை வேற்றார் பயன்படுத்துமாறு இரவல் கொடுக்காமல், ஒருவர் துணியைக்கொண்டு மற்றவர் துணி மூட்டையைக் கட்டாமல், துணிகளை உடையவர்களுக்குக் கொடுக்க வேண்டியது வண்ணான் கடமை. இவ்வாறு செய்யத் தவறியவர்

---

1. வ.சுப. மாணிக்கம், இலக்கிய விளக்கம், ப. 42.

மன்னனின் தண்டனையை ஏற்றனர் (மனு.8:395).

## சேடன் (நெசவாளர்) கடமை

நெசவுக்குத் தன்னிடம் கொடுக்கப்பட்ட பத்துப்பலம் எடையுள்ள நூலை நெய்து பதினோரு பலமாகத் துணியை எடையிட்டு, உரியவரிடம் கொடுக்கவேண்டும். தவறிடின் பன்னிரண்டு பணம் தண்டம் விதிக்கப் பெறுவதுடன் உடையவர்க்கு உரிய அளவில் பொருளையும் சேர்ப்பிக்க வேண்டும். (மனு.8:396).

## தோணிக்காரன்

நிலப்பரப்பின் தன்மை, நீரின்தொலை, பருவகாலம் இவற்றை அனுசரித்துத் தோணிக்காரன் ஆற்றைக் கடப்பதற்குக் கட்டணம் வகுத்துக் கொள்ளலாம். பாய் விரித்துச்செல்லும் கடல் கடத்தலுக்குத் தக்கவாறு கட்டணம் வசூலிக்கலாம் (மனு.8:405).

சூலி, துறவி, காடுறைந்து வாழ்வோன், பிரம்மசாரி, அந்தணன் இவர்கள் தோணியில் கட்டணமின்றி அனுமதிக்கப்பட்டனர் (மனு.8:406).

படகில் ஏற்றிய பொருள் படகு வலிப்போரின் கவனக்குறைவால் சேதமுற்றால், தண்டுவலிப்போர் அனைவரும் விகிதப்படி உடையவனுக்கு ஈடுசெய்தனர் (மனு.8:407).

## வணிகர்

முகத்தல் அளவைக் கருவிகளையும், நிறுத்தல் எடைகளையும் கண்காணித்து மக்களுக்குக் குறைவில்லாத பொருள் கிடைக்கச் செய்துள்ளார் மனு (மனு.8:402). அளவுகருவிகளுக்கு அரசு முத்திரை யிட்டு அவை சரியாக இருக்கின்றனவா என்பதை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சோதித்தறியச்செய்து சரியில்லை என்றால் தண்டனை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். மண்ணில் விளைவனவும், கடலாரமு மாகிய பலவிதப் பொருட்களைக் கொணர்ந்து ஆயச்சாவடியில் வணிகம் செய்யவேண்டிய விதிகளை வகுத்தார். வணிகர் பெறும் லாபத்தில் இருபதில் ஒருபங்கு தீர்வை பெறுதல் மன்னன் கடமையாகும் (மனு.8:392).

அரண்மனைப் பணிகளுக்குப் பயன்படும் யானை, குதிரைகளையும் இன்றியமையாத பொருட்களையும் வேற்றுநாட்டுக்குக் கடத்தினால் அப்

பொருள் முழுவதையும் அரசன் பறிமுதல் செய்துவிட வேண்டுமெனக் கூறி ஏற்றுமதிப் பொருட்களுக்குத் தடைவிதித்துள்ளார். வியாபாரப் பொருட்களின் தோற்றுவாய், அவை சென்றடையும் சந்தை, கொள்முதல் விலை, விற்பனையாகும் வரையில் உண்டான நாட்களின் வட்டி, போக்குவரத்துச் செலவு, எடுபிடிக்கூலி, இவற்றை எல்லாம் கணக்கிட்டு ஏற்ற விலையை மன்னன் நிர்ணயித்தான்.

அடிக்கடி விலை இறங்கக்கூடிய பொருட்களுக்கு மன்னனும் வியாபாரிகளும் கலந்தாலோசித்து, அவ்வப்பொழுது விலைகள் குறைக்கப்பட்டன (மனு.8:400,401). முறைகேடான வழிகளில் வாணிகம் செய்வோர் திருந்தவேண்டும் என்பதற்காக அவர்களிடமிருந்து எண் மடங்கு தண்டத்தீர்வை வாங்கப்பட்டது (மனு.8:399).

ஒருவனின் உடைமைகளை அவன் அனுமதியின்றி எடுத்துத் திருட்டுத்தனமாக விற்கும் பழக்கம் சமுதாயத்தில் பரவலாக இருந்தது. அத்திருட்டுச் சொத்தை விலைக்கு வாங்கியவன் தண்டிக்கப்படவில்லை. ஏனெனில் அவன் அதற்கு நியாயமான விலை தந்து நாலுபேரறிய திருட்டுச் சொத்தென்று அறியாமல் வாங்கியதால் பொருளுக்குரியவன் கிரயத் தொகையை வாங்கியவனுக்குக் கொடுத்து அப்பொருளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். (மனு. 8:201)

### சூத்திரர்

நாட்டு வளமையையும் வறுமையையும் நிர்ணயிப்பது பொருளாதாரமே. மனுவின் சமுதாயத்தில் அந்தணர்கள் எல்லாப் பொருள்களுக்கும் உரிமையுடையவர்களாக உயர்நிலையில் வாழ்ந் தார்கள். சத்திரிய, வைசியர்கள் செல்வந்தர்களாகக் கருதப் பட்டார்கள். ஆனால் மனுதருமம் சூத்திரனுக்குச் செல்வம் திரட்டும் உரிமையைத் தரவில்லை.

சூத்திரனுடைய கடமை மூன்று மேல் வருணங்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் சூத்திரனின் முயற்சி, திறமை, அவன் குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை ஆகிய வற்றைப் பொறுத்துத் தங்கள் வருவாயின் ஒருபகுதியைக் கூலியாகக் கொடுப்பர். (மனு.10:124). மேலும் மிஞ்சிவிடும் உணவைத் தந்துவிட வேண்டும். பழைய கந்தைத் துணிகளையும் பழைய வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களையும் கொடுப்பர். (மனு.10:125) இதுவே கூலி பற்றிய மனுவின் சட்டவிதிமுறை. சூத்திரர்களுக்குச் சொத்துரிமை இல்லை. சூத்திரன்

பொருள் திரட்டவும் கூடாது. (மனு.10:129)

இதனால் சமுதாயத்தில் சூத்திரர்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரமும், பொருளாதாரப் பாதுகாப்பும் இல்லை. சூத்திரன் பொருளாதார உறுப்பினராகக் கருத வாய்ப்பில்லை. அது பொருளற்ற தாகும். பொருளாதார நிலையில் அவன் மற்றவர்களைச் சார்ந்தே இருந்தான்.

## உணவு கொள்ளல்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முதுமொழி. நோய் வருவதற்கும் போவதற்கும் அடிப்படைக்காரணம் உணவு. அதனால் உணவு உண்ணும் முறையில் பசித்தபின் உண்ணுதல், வேளாவேளைக்கு உணவருந்தல் முதலிய நல்ல முறைகளைப் பின்பற்றல் நன்று.

> "பசித்தீயின் அளவு தெரியாமல் பெரிதுண்டு தவிக்கும் தவிப்பு அளவற்ற நோய்க்கு அடிப்படையாகும். ஆதலின் நெடுநாள் வாழவிரும்புவோர் பசித்தபின் நல்லுணவைத் தேர்ந்தெடுத்து அளவோடு உண்டு வரவேண்டும். அப்போது பிணியில்லை. பிழையும் இல்லை"[1]

என்பர் அறிஞர். இவ்வாறே, தம்மபதத்தில் பிறவிக்கு வித்தாகப் பெருந் தீனியும், சோம்பலும் உறக்கமும் சுட்டப்பட்டுள்ளது. "நிதான உணவு கொள்க" (த.183) என்றும் புத்தர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மனுதரும சாத்திரத்தில், 'உணவு, சுத்தி, மாதர் என்னும் தலைப்பில் ஓர் இயல் அமைந்துள்ளது. அறநெறியாளராகிய மனு, மருத்துவத் துறையிலும் பயிற்சி பெற்றவராக இருந்திருத்தல் வேண்டும். அதனால் அவர்கூறிய உண்ணத்தக்கன, உண்ணத்தகாதன போன்ற மருத்துவ முறைகள் சமுதாயம் ஒப்புக்கொண்ட வழக்கங்களாக இருந்தன. உண்ணும் உணவின் அளவையும் முறையும் பற்றி,

> "இரவுபகல்களிலும் சோற்றை மிகுதியாகக் கொள்ளலாகாது, வயிற்றில் பாதி அண்ணமும், கால்பங்கு நீரும் கொண்டு மீதி கால்பாகம் காற்றுலாவவும் விடவேண்டும். சூரிய உதயம் அஸ்தமனம் இவற்றில் உண்ணக்கூடாது. பகல் உணவு விசேடமாயிருந்தால் அல்லுணவு கூடாது"
>
> (மனு.4:62)

1. தே. ஆண்டியப்பன், குறள் கண்ட நாடும் வீடும், ப. 371.

என்று மனு கூறுகின்றார். நோய் வராமல் தடுப்பதற்கு உரிய வழியை, அளவாக உண்ணும் அறநெறியின் மூலம் மனு வலியுறுத்துகின்றார். அவ்வாறே வள்ளுவரும், 'அற்றால் அளவறிந்து உண்க' (குறள் 943) என்று ஆணையிடுகின்றார். ஏனெனில்,

"மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு" (குறள். 945)

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி உணின்" (குறள். 942)

என்று பாடியுள்ளார். 'மருந்து' என்ற தலைப்பில் அமைந்திருக்கும் பத்துக் குறள்களிலும், "நோய் வராமல் தடுப்பதே மக்களின் முதற் கடன் என்ற கருத்தே வலியுறுத்தப் படுகின்றது. சிகிச்சை செய்வதை விட நோய் வராமல் தடுப்பதே தமிழ் மருந்துவக் கொள்கையின் அடிப்படையாக இருந்திருக்கிறது"[1] என்னும் மருத்துவ அறிஞர் கருத்தும் நோக்கற் குரியது.

## இரத்தல்

சமுதாயத்தில் சிலருக்குச் செல்வம் சேர்வதும் பலருக்கு வறுமை பெருகுவதும் இயல்பு. தருமநூலார்,

"விவசாயி, குடும்பநண்பன், மாடுமேய்ப்பவன், தொண்டடிமை,
நாவிதன், பிழைப்புக்காக அண்டியவன் இவர்கள் தமக்கு
மேலோரிடம் வாங்கிப் புசிக்கலாம்" (மனு. 4 : 252).

"யாருமற்ற அனாதைகளும், ஒண்டியாக இருப்பவனும்
நல்லோரிடம் இரந்து வாழலாம்" (மனு. 4 : 253)

என்று இல்லோர்க்கு ஆதரவளிக்கின்றார். இரவின் இழிவைப்பாடிய வள்ளுவரும், வேறுவழியற்ற நிலையில் வறியவர்கள் இரப்பதும்.பழியாகாது என்ற கருத்தில் இரவு அதிகாரமும் பாடியுள்ளார். இரத்தலும் ஈதலையே ஒக்கும் என்பதை,

---

1. லலிதா காமேஸ்வரன், திருக்குறள் காட்டும் மருத்துவம், திருக்குறள் கருத்தரங்கக் கட்டுரைகள், ப. 2.

"இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
*கனவிலும் தேற்றாதார் மாட்டு*" (குறள்.1054)

என்ற குறளில் புலப்படுத்தியுள்ளார். அள்ளிக்கொடுக்கும் கொடை வள்ளலிடம் இரத்தல் இழிவன்று என்பது இரு அறநூலாரின் துணிபாகும். எனினும் கொடுக்கும் கொடையாளியை, மேலோர் என்றும் நல்லோர் என்றும் மனு சிறப்பிக்கின்றார். ஆனால் வள்ளுவர் 'கனவிலும் கரவு அறியாதார்' என்று கூறியிருப்பது மனு நெறியையும் விஞ்சியதாகும்.

## ஆநிரை மேய்த்தல்

மக்கள் மேற்கொண்ட தொழில்களுள் ஆநிரை மேய்த்தலும் ஒன்றாகும். மாடு மேய்க்கும் தொழிலாளிக்கு வேண்டிய அறநெறிகளையும் தருமசாத்திரம் எடுத்துரைக்கிறது. மேய்ப்பவன், பசுக்களைக் காலையில் மேய்ச்சலுக்கு ஓட்டிக்சென்று, மாலையில் உடையவனிடம் சேர்ப்பிக்கும் வரையில் அப்பசுக்களுக்கோ, அவற்றால் பயிருக்கோ தீங்கு நேரிட்டால் மேய்ப்பவன் பொறுப்பாளியாவான். பத்து மாடுகளுக்கு ஒரு மாட்டைக் கறந்து கொள்வதே மேய்ப்பவனுக்குரிய கூலியாகும் (மனு.8:231). ஆநிரைகள் மேயும்பொழுது கள்வர் கூட்டமாக வந்து கவர்ந்து சென்றால் அதனை மேய்ப்பவன் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் மந்தையிலிருந்து தவறிப்போகிறதும், புலி முதலியவற்றால் இறந்தும், செந்நாய் முதலியவற்றால் அறையப்பட்டும், கவனக்குறைவால் சேதமுற்றும் போகிறதுமான பசுவின் இழப்பை மேய்ப்பவன் உடைய வனுக்குத் திருப்பித்தருதல் வேண்டும் (மனு.8:232). காட்டில் பசுக்கள் தாமாகவே இறந்துவிட்டால் அவற்றின் காது, தோல், வால், மயிர் இவற்றை அடையாளமாகக் கொண்டுவந்து உடையவனுக்குக் காட்டவேண்டும்.

கிராமத்தைச் சுற்றி நானூறு முழப் பரப்புக்கு மந்தைவெளி ஏற்படுத்தப்பட்டிருக்கும். அங்கு ஆநிரைகளை மேயவிடுவர். வேலியற்ற பயிரை மாடுமேய்ந்தால் மேய்ப்பவனுக்கு மன்னன் தண்டம் விதிப்பதில்லை. ஆனால் பாதை, ஊர் ஓரங்களில் உள்ள பயிர், வேலி கட்டிய பயிர் இவற்றை மாடு மேய்ந்துவிட்டால் மேய்ப்பவனுக்கு நூறு பணம் தண்டம். மேய்ப்பவன் இல்லையெனில் பயிர்க்காரன் மாட்டைப்பிடித்துக் கட்டிக்கொள்வான் (மனு.8:240).

ஈன்று பத்து நாளாகாத பசு, கோயில்மாடு, சூடுபோட்ட பசு, பொலி காளை, எருது இவை மேய்ந்தால் மேய்ப்பவன் இருப்பினும், இல்லாவிடினும்

தண்டம் கிடையாது (மனு.8:242).

ஆநிரைகளைக் கள்வர் கவர்ந்து செல்லும் பழக்கம் மனுவின் காலத்திலும் இருந்திருக்கிறது. பசுவின் மேய்ச்சலுக்காக மந்தைவெளி அமைக்கப்பட்டிருந்தது. ஆநிரைகளைப் பாதுகாப்பதில் உடையவனை விட மேய்ப்பவனுக்கே கூடுதல் பொறுப்புக்கள் இருந்தன. மேய்ப்பவன் கூலியாகப் பணத்தையோ தானியத்தையோ பெறவில்லை. மாறாக ஆவின் பாலையே கூலியாகப் பெற்றான். பயிரை, மாடு மேய்ந்துவிட்டால் பயிர்க் காரன் அம்மாட்டைப் பிடித்துக் கட்டிவைக்கும் பழக்கம் இன்றைக்கும் உள்ளது.

## எல்லைத்தகராறு

ஊருக்கு உள்ளேயும், ஊருக்கு வெளியேயும் எல்லைத் தகராறுகள் நிகழ வாய்ப்புண்டு, ஊருக்கு வெளியே இரண்டு கிராமங்களிடையே எல்லைத் தகராறு வந்தால் மன்னன் கண்ணுக்குப் புலனாகும் புறச்சான்றுகளாலும் அகச்சான்றுகளாலும் எல்லையை வரையறுக்கலாம். தகராறு தீராவிடில் சான்றினர், பக்கத்துக் கிராமத்தார் இவர்களால் எல்லையைத் தீர்மானிப்பான். இவர்களாலும் முடிவு ஏற்படவில்லையெனில் அருகிலுள்ள வனவாசிகளைக் கேட்டுத் தெளியலாம் என்று தருமசாத்திரம் எல்லைத் தகராறுகளைத் தடுக்க வழி கூறுகிறது (மனு.8:258).

எல்லைத் தகராறு ஏற்பட்டால் வரப்பு முதலிய அடையாளங்களால் இருதரப்புக்கும் பாதிப்பு இல்லாமல் எல்லையை மன்னன் வகுப்பான் (மனு.8:248). எல்லைக்கோட்டில் ஆல், அரசு போன்ற மரங்களை அடையாளமாக ஏற்படுத்தலாம். எல்லை நடுவில் குளம், கிணறு, கோயில் போன்றவற்றை அமைத்து எல்லையை அழியாமல் காக்கலாம். இவை கண்ணுக்குப் புலனாகும் புறச்சான்றுகளாகக் கூறுப்பட்டுள்ளன (மனு.8:245–248).

மறைவான சில அடையாளங்களையும் மன்னன் ஏற்படுத்த வேண்டும். காலத்தால் பூமியில் கிடந்தும் அழிந்துபடாத பதினொரு பொருட்களைக் குடத்திலிடடு எல்லையில் அடையாளமாகப் புதைக்க வேண்டும். இவ்வித அக அடையாளங்களால் மன்னன் எல்லையை முடிவுசெய்தான் (மனு.8:352).

இருதரப்பார், ஊரார், கிராமத்தலைவர் இவர்களின் முன்னிலையில் எல்லையைக் குறித்துச் சாட்சியும் கேட்கவேண்டும். சான்றினரால்

எல்லையை உறுதிப்படுத்திய பின் அதைப் பத்திரத்தில் எழுதி வாங்கவேண்டும் (மனு.8:255). சான்றினர் இல்லாவிடில் பக்கத்து நான்கு கிராமத்தார் மன்னர் முன் சத்தியம் செய்து எல்லையை வகுப்பர் (மனு.8:258). சான்றினர், பக்கத்துக் கிராமத்தார் இவர்களால் முடிவு ஏற்படவில்லையெனின் அருகில் உள்ள 'வனவாசிகளை' மன்னன் கேட்டறியலாம் (மனு.8:260). அடிக்கடி அக்கிராமத்தின் வழியாய்ப் போகிறவர்களாதலால் எல்லையை அவர்கள் அறிந்திருப்பர்.

இவர்களின் அடையாளப்படி, இரண்டு கிராமங்களின் ஓர் எல்லையை அமைப்பதே அறநெறியாகக் கூறப்படுகின்றது. எல்லை தொடர்பாகப் பக்கத்துக் கிராமத்தார் பொய்யுரைத்தால் அவர்க்கு ஐந்நூறு பணம் தண்டமாக விதிக்கப்பட்டது.

ஊருக்குள் வயல், கிணறு, குளம், மலர்ச்சோலை, வீடு இவற்றினால் எல்லைத்தகராறுகள் ஏற்பட்டன. இதற்கு அக்கம்பக்கத்துச் சாட்சிகளின் சத்திய வசனத்தைக்கொண்டு மன்னன் முடிவுசெய்தான் (மனு. 8 : 262).

## சாலைவிபத்துக்களைத் தவிர்த்தல்

கவனமின்றி வண்டி ஓட்டும் ஓட்டுனரால் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்படுதல் இயல்பு. ஆதலால் அத்தகைய திறமிலியை வேலைக்கு வைத்துக்கொண்ட உரிமையாளர் இருநூறு பணம் தண்டம் அளிக்கவேண்டும் என நியதி செய்துள்ளார் மனு. அதுமட்டுமல்லாமல் எதிரில் வண்டியோ மாடுகளோ வருவதை அறிந்தும் தன் வண்டியை நிறுத்தாமல் ஓட்டி உயிர்ச்சேதம் உண்டாக்குவோனுக்கு யோசிக்காமல் மன்னன் தண்டம் விதிக்கவேண்டும் எனவும் மனு வலியுறுத்துவர் (மனு.8:293,295). பாகனால் மனிதர்க்குத் துன்பம் விளைந்தால் ஆயிரம் பணமும், பசு, யானை, குதிரை இவற்றிற்குச் சேதம் நேரிடின் ஐந்நூறு பணமும் தண்டம் விதிக்குமாறு வரையறை செய்வர் (மனு.8:296).

இவ்வாறு ஓட்டுனருக்குக் கூறப்பட்ட மனுநெறிகள் இக்காலத்திற்கும் பொருந்துவனவாக அமைந்துள்ளன.

## குற்றங்களின் கழுவாய் (பிராயச்சித்தம்)

முற்பிறப்பிலும் இப்பிறவியிலும் செய்த தீச்செயல்களின் விளைவாக மறுபிறப்பில் உணர்ச்சியற்றவராய், ஊமையராய், குருடராய், செவிடராய், உயிர்கள் பிறந்து, உலகத்தாரால் பழிக்கப்படுவர். மேலும் இப்பிறவியில்

துன்பப்பட்டும் உழல்வர் (மனு.11:52). அதனால் செய்த பிழைகளுக்கு அவ்வப்பொழுது கழுவாய் இயற்றவேண்டும். இல்லையேல் மறுமையில் நரகும், மறுபிறப்பில் ஊனமும் அடைவர் (மனு.11:53). எனவே பலவிதமான கொலை, களவு, கள்ளுண்ணல், கூடாவொழுக்கம் போன்ற பெரும்பாவங்களையும் சிறுபிழைகளையும் செய்யும் பாவிகளுக்கு நாலு வகுப்பாருக்கும் உரிய கழுவாய்களைக் கூறி அறத்தை நிலைநாட்ட முயன்றிருக்கின்றார் மனு. ஆனால்,

"ஆன்முலையறுத்த அறனில் லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாய் இல்லென
அறம் பாடிற்றே ஆயிழை கணவ"[1]

என்ற பாடலால் மாற்றீடு, கழுவாய், பிராயச்சித்தம் ஏதும் இல்லாத கடுங்குற்றங்களும் நிகழ்ந்திருக்கின்றன என்பது தெளிவு.

கழுவாய் செய்யும் பழக்கம் வள்ளுவர் காலத்தில் இருந்திருக்கலாம். அதனால்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள் 110)

என்று பாடியுள்ளார். இதுபற்றி விரிவாக அவர் கூறவில்லை.

## கொலை செய்ததற்குக் கழுவாய்

"ஐம்பெரும் பாவங்களுள் மிகவும் கொடியது கொலை, ஒருயிரும் கொல்லாதிருப்பது அறங்கள் எல்லாம் ஒழுங்கு செய்வதற்கு ஒப்பாகும். பிறிதோர் உயிரைக் கொலை புரிவது பாவச்செயல்கள் எல்லாவற்றையும் ஓவாது விளைவிக்கும். கொலைப்பாவம் விளைவிக்கும் துன்பம் பிறபாவங்கள் எல்லாம் கூடினாலும் விளைவிக்கமாட்டா"[2] ஆதலால் அறியாது செய்தால் அதற்குக் கழுவாய் உண்டு. மனுதரும நூலில் அந்தணரைக் கொன்றதற்குரிய கழுவாயும் பிற மூவருணத்தாரைக் கொன்றதற்குரிய கழுவாயும் கூறப்பட்டுள்ளது.

அந்தணர் என்போர் அறவோர் ; ஆதலால் அவர்களுக்குத் தீமை

1. புறம்., 34.
2. அ.க. நவநீதகிருஷ்ணன், வள்ளுவர் சொல்லமுதம், ப. 34.

செய்தல் கூடாது. அவர்களைக் கொலை செய்தலும் கூடாது என்பது மனுநெறி. ஆனால் ஓர் அந்தணனை மற்றோர் அந்தணனோ அல்லது மற்ற வருணத்தாரோ கொலை செய்தால் அதற்குக் கழுவாய் உண்டு. அவை பின்வருமாறு:

> "அந்தணன் மற்றொரு அந்தணனைக் கொன்றுவிட்டால்
> கொலையுண்டவ னுடைய மண்டை ஓட்டையோ அல்லது
> மற்றொன்றையோ கரத்தில் ஏந்தி நாள்தோறும் ஏழுவீடுகளில்
> பிச்சை ஏற்று உண்டு பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில்
> குடிசைகட்டி வாழவேண்டும்" (மனு.11:72)

சத்திரியன் அந்தணனைக் கொன்றுவிட்டால் வில்லாளி ஒருவனால் எய்யப்பட்டு உயிரை விடலாம். அம்பால் எய்யப்பட்டு உயிர் இழந்தாலும் பிழைத்தாலும் பிழை நீங்கும் அல்லது எரியில் தலைகீழாக மும்முறை வீழ்க" (மனு.11:73). இவ்வாறே மூன்று வருணத்தாரும் அறிவீனத்தால் இத்தகைய குற்றமிழைத்து விட்டால் அசுவமேதம், கோமேதகம், அபிசித், விசுவசித் ஆகிய வேள்விகளில் ஏதேனும் ஒன்றை இயற்றவேண்டும் (மனு.11:74).

ஓர் அந்தணன், அந்தணரையோ அல்லது மூவருணத்தாரையோ கொலை செய்தல் கூடாது. அறியாமல் செய்துவிட்டால் அதற்குக் கழுவாயாகத் தானம் செய்யலாம். அல்லது தனித்து வாழ்ந்து விரதம் மேற்கொள்ளலாம் என்பதைப் பின்வரும் அறநெறிகள் புலப்படுத்து கின்றன.

"அந்தணன் அறியாமல் குணமுள்ள சத்திரியனைக் கொன்றால் ஓர் எருதுடன் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்க. அல்லது சபிதாரியாக மூன்றாண்டுகள் ஊருக்கு வெளியில் மரத்தடியில் வசிக்க. ஒழுக்கமுள்ள வைசியனைக் கொன்றால் ஓராண்டு விரதமோ அல்லது ஓர் எருதும், நூறு பசுக்களும், கொன்றால் ஆறுமாதம் விரதமோ ஒரு எருதுடன் பத்துப்பசுக்களைத் தானமோசெய்க" (மனு.11:180). எவ்வுயிரையும் தன்னுயிர்போல் கருதவேண்டும் என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் சாதியின் அடிப்படையில் உயிர்களை மதிப்பீடு செய்து அதற்குக் கழுவாய் கூறியிருப்பது ஏற்பதற்குரியதன்று. இஃது மனுகாலச் சமுதாயத்தில் சாதியின் அடிப்படையில் மக்களிடையே நிலவியிருந்த ஏற்றத்தாழ்வு களைப் புலப்படுத்துகின்றன எனலாம்.

பிராம்மணக் கருவைக் கலைத்தல், பார்ப்பணப்பெண், வேள்விக்கு

முயன்றிருக்கும் சத்திரியர், வைசியர் இவர்களைக் கொன்றாலும் மேற்கூறிய கழுவாய்களே செய்தல் வேண்டும் (மனு.11:87).

இக்கழுவாய் யாவும் அறியாமையால் செய்த பிழைகளுக்கேயன்றி அடமாக விரும்பிச்செய்த பிழைகளுக்குக் கழுவாய் இல்லை (மனு.11:89).

## கள்ளுண்டதற்குக் கழுவாய்

சாராயம் மூன்றுவகைப்படும். அவை, கௌடி (வெல்லத்தயாரிப்பு), பைசடி (அரிசி மாவில் வடித்தது), மாத்வி, இவற்றில் ஒன்றையும் பருகலாகாது. (மனு.11:94). அரிசிமாவிலிருந்து வடிக்கும் சாராயம் சோற்றின் மலமாகும். அதற்குப் பாவம் என்றே பெயராதலால் மூவருணத்தாரும் அதைக்குடிக்கக்கூடாது (மனு.11:94). மற்ற சாராயங்களும், புதியதாக இறக்கிய கள்ளும் இராக்கதர், பைசாசர், அசுரர் ஆகியோரின் உணவாகும். ஆதலால் அவி உணவை உண்ணும் அந்தணர் அரக்கர்தம் உணவை உண்ணக்கூடாது (மனு.11:95).

அந்தணன் சாராயத்தால் மயக்கமுற்றால் தவறாக மந்திரம் கூறுவான். சாராயத்தால் மாசுபடுகின்ற அவனுடைய ஆன்மா தாழ்நிலை அடையும்; ஆதலால் ஒருபோதும் குடிக்கக்கூடாது (மனு.11:97). வெறியினால் சாராயம் குடித்துவிட்டால் அந்தச் சாராயத்தையே நெருப்பு நிறமாகக் காய்ச்சிக் குடித்து உடல் வெந்துபோவதே தக்க கழுவாய் (மனு.11:90). அல்லது அவ்விதம் காய்ச்சிய கோமுத்திரம், தண்ணீர், பசுநெய், சாணத்தண்ணீர் இவற்றில் ஒன்றை ஒரிரு தடவை பருகலாம் (மனு.11:91).

## களவு செய்ததற்குக் கழுவாய்

பொன்னையும் பிறபொருட்களையும் களவு செய்தால் அப்பொருளை உடையவனிடம் சேர்த்தல் வேண்டும். சேர்த்தபின்பு கழுவாய் இயற்றல் வேண்டும்.

பொன்னைத் திருடிய அந்தணனுக்கு அரசனுடைய தண்டனையும் தவமும் கழுவாயாகக் கூறப்பட்டுள்ளது. பொன்னைத் திருடிய அந்தணன் தன் தோளில் தாங்கிய உலக்கையுடன் மன்னனிடம் சென்று குற்றத்தை ஒப்புக்கொண்டு, தன்னைத் தண்டிக்குமாறும் கூறுவேண்டும் (மனு.11:99). மன்னன் அவ்வுலக்கையால் குற்றவாளியை ஒருதடவை அடிக்கவேண்டும்.

அந்த அடியால் திருடன் இறந்தாலும் பிழைத்தாலும் தூய்மை அடைவான். தவறு செய்தவன் வேதமறிந்த அந்தணன் என்றால் அவனை அடிக்க மன்னன் உடன்படா விட்டால் அவனே தவத்தால் தூய்மை அடையலாம் (மனு.11:10). பொன் களவிட்ட பிழையைப் போக்க விரும்பும் அந்தணன் மரவுரி உடுத்திக் காட்டில் பன்னிரண்டாண்டுகள் விரதம் இருக்க வேண்டும் (மனு.11:101).

புல், வைக்கோல், விறகு, மரம், அரிசி, வெல்லம், ஆடை, தோல், புலால் இவற்றைத் திருடினால் மூன்றுநாட்கள் உண்ணாமை வேண்டும் (மனு.11:166). மணி, முத்து, பவளம், செம்பு, வெள்ளி, இரும்பு, வெண்கலம் இவற்றைக் களவிட்டால் நொய்யரிசியைப் பன்னிரண்டுநாட்கள் புசித்திருக்க வேண்டும் (மனு.11:167) ; பஞ்சு, பட்டு, ஆட்டுரோமம், மாடு, பறவை, குதிரை, தந்தம், மூலிகை, கயிறு இவற்றைத் திருடினால் பால் மட்டும் உண்டு விரதம் இருத்தல் வேண்டும் (மனு.11:168). இதனால் பிறர் பொருட்களைத் திருடினாலும், திருடிய பொருட்களை மீண்டும் உடையவனிடம் திருப்பிக்கொடுத்தாலும் கழுவாய் இயற்றுதல் வேண்டும் என்பது தெளிவு.

## காமத்திற்குக் கழுவாய்

"பத்துத்திங்கள் சுமந்து ஈன்றவள் முதற்றாய், அவ்வாறே நீராட்டிய்வள், தினமும் பாராட்டிப் பாலூட்டியவள், குருவின் தேவி ஆகியோர்களும் தாய் எனக் கருதப்படுவார்கள்."[1] ஈன்ற தாயையும், தாய்க்கு நிகராகக் கருதப்படும் குரு மனைவியையும் புணர்ந்தவன் செத்தொழிய வேண்டும். அவன் செய்த தவறுக்குக் கழுவாய் இல்லை என்பதை,

> "தாய், குரு மனைவி இவர்களைக் கலந்தவன் மேலோராகிய
> அரசன், முனிவர் முன் தனது பாவத்தைக் கூறிப் பழுக்கக்
> காய்ச்சிய இரும்புப்படுக்கையில் படுக்கவும் அல்லது பெண்
> வடிவமுள்ள காய்ச்சிய இரும்புத்தூணைத் தழுவி உயிர்விடுக"
> (மனு. 11 : 103)

என்று அறநூல் எடுத்துரைக்கிறது. ஆனால் குரு மனைவியைத் தனது

1. விநாயக சதகம், 5.

மனைவி என்று தவறாகக் கருதி, அறியாமையால் கலந்தவன் மரவுரி தரித்து, மனதை அடக்கி ஓராண்டு விரதம் இருந்தால் பாவம் நீங்கும் (மனு.11:105). இவ்வாறே சகோதரி, நண்பன் மனைவி, மருகி, துறவினள், சண்டாளி, இவர்களுடன் கூட்டுறவு கொண்டு கூடினால் குரு மனைவியைக் கூடியவனுக்குக் கூறிய கழுவாய் பொருந்தும் (மனு.11:170). இவை கூடாவொழுக்கங்களாகக் கருதப்படுகின்றன.

## பசுவதை புரிந்ததற்குக் கழுவாய்

பசுவதை புரிந்தவன் அதன் தோலைப் போர்த்தவாறு நொய்யரிசி உண்டு ஒருமாதம் பசுத்தொழுவில் குடியிருக்க வேண்டும் (மனு.11:108); அவனை கோமூத்திரத்தால் நீராட்டவேண்டும். பசுக்கள் நோயுறினும், திருடர், புலி இவர்களால் வெருட்டப்பட்டாலும், மேடு, பள்ளமான தரையில் விழுந்துவிட்டாலும், சேற்றில் மாட்டிக்கொண்டாலும் அவற்றைக் காப்பாற்ற வேண்டும் (மனு.11:111). பசுவதை புரிந்தவன் மூன்று திங்கள் விரதம் இருந்து பாவம் போக்கவேண்டும் (மனு.11:115) வேதம் ஓதியபின் அந்தணனுக்குப் பத்துப் பசுவையும் ஓர் எருதையும் தானமாகக் கொடுக்கலாம் அல்லது தன் பொருள் முழுவதையும் தானமாகக் கொடுக்கலாம் (மனு.11:116).

## சிறுபிழைகளின் கழுவாய்

பூனை, அணில், காக்கை, காடை, தவளை, நாய், உடும்பு, கோட்டான் இவற்றைக் கொன்றால் நாலாம் வருணத்தவனைக் கொன்றதற்கான கழுவாய் இயற்றுக (மனு.11:131); அன்னம், கொக்கு, நாரை, மயில், குரங்கு, பருந்து ஆகிய பறவைகளைக் கொன்றால் அந்தணனுக்கு ஒரு பசுவைக் கொடுக்க (மனு.11:135).

| | | |
|---|---|---|
| குதிரையைக் கொன்றால் | – | புத்தாடையும், |
| யானையைக் கொன்றால் | – | ஐம்பது கருப்பு எருதுகளையும், |
| ஆடுகளைக் கொன்றால் | – | ஓர் எருதையும், |
| கழுதையைக் கொன்றால் | – | பசுவின் கன்றையும் தானம் செய்க |

(மனு.11:136).

பழமரம், செடி, புதர், படர்கொடி, பூத்தபூசணி முதலியவற்றை அறியாமல் கொன்றால் நூறுமுறை காயத்ரி ஜெபம் செய்க (மனு.11:142). நிலத்தில் முளைத்த செடிகளைக் காரணமின்றி வெட்டினால் ஒருநாள் பால்

மட்டும் பருகியிருந்து பசுவின் பின் சென்று உபசரிக்கவும் (மனு.11:144).

ஓணான் முதலியவற்றைக் கொன்றால் பிராம்மணனுக்கு ஒரு பணம் தானம் கொடுக்க, கொசுவைக் கொன்றால் பிராணாயாமம் செய்தால் பாவம் தீரும். ஈ, எறும்பு, கொசு முதலியவற்றை ஒரு வண்டிச்சுமைவரை கொன்றாலும் நாலாம் வருணத்தவனைக் கொன்றதற்குரிய கழுவாய் இயற்றுக (மனு.11:140).

நாலாம் வருணத்தாரை, ஈ எறும்புகளுக்கு இணையாகக்கருதி கழுவாய் கூறியிருப்பது ஏற்புடையதாக இல்லை. மரம், செடி, கொடி போன்ற இயற்கைகளை அழிப்பதற்குக் கழுவாய் கூறிய மனுவின் கொள்கை, 'வாடியை பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் அறக்கொள்கையை ஒத்துள்ளது.

மனுவின் அறக்கொள்கையே இன்றைக்கு வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம், வனங்களைப் பாதுகாப்போம் என்னும் கொள்கையாகப் பின்பற்றப்படுகிறது எனில் அது மிகையாகாது.

கழுவாய் செய்துகொள்ளாத பாவிகளுடன் கொடுக்கல் வாங்கல் முதலான எதுவும் கூடாது. கழுவாய் செய்து கொண்டவரை முன்செய்த பாவத்திற்காகப் பழிக்கவும் கூடாது (மனு.11:189). குழந்தை, பெண் இவர்களைக் கொன்றவள், நன்றிகொன்றவன், அண்டியவனை அழித்தவன் ஆகிய இவர்கள் கழுவாய் செய்து கொண்டாலும் அவர்களோடு உறவாடக்கூடாது (மனு.11:190). ரிக், யசூர், சாம, வேத, உபநிடதம், கீதைகளில் ஒன்றைப் பொருளுணர்ந்து மூன்றுதரம் ஜெபித்தால் எல்லாப்பாவமும் போகும்" (மனு.11:262).

மக்கள் செய்யும் குற்றங்களைக் குறைப்பதற்காக மனுநூலார் பின்பற்றிய உத்திகள் இரண்டு. ஒன்று தண்டம் விதித்தல் ; மற்றொன்று குற்றங்களின் கழுவாய். மனுவால் விதிக்கப்பட்ட தண்டனையும் கழுவாயும் செய்த குற்றங்களை விடக் கொடுமையானதாகவும் கூடுதலாகவும் இருக்கின்றன. இவை அறத்தை நிலைநாட்டுவதற்காக மனுவால் கூறப்பட்ட நெறிகளேயாயினும் அறம் பிறழ்ந்த அநீதி நிறைந்த அக்காலச்சமுதாயத்தைப் புலப்படுத்துவனவாக அமைந்துள்ளன. இவைபற்றிய செய்திகள் திருக்குறளிலும் தம்மபதத்திலும் இடம்பெற வில்லை.

ஒப்பீடு

இயல்புடைய மூவர்க்கும் இல்வாழ்வான் துணை என்ற கருத்தைத் தருமசாத்திரமும் திருக்குறளும் ஒரு சேரக் கூறுகின்றன. இதனால் இல்வாழ்வானுக்கு உழைத்துப் பொருளீட்டும் ஆற்றல் வேண்டும். துறந்தவருக்கும் வறியவருக்கும் துணையாய் இருப்பதோடு, பகுத்துண்ணும் பண்பும் வேண்டும் என்பதை இருநூலும் வற்புறுத்து கின்றன.

கற்கும் நூல்களைப் பழுதறக் கற்றல் வேண்டும் என்பது மனுநெறி. இக்கருத்திற்கு அரணாகக் கசடறக் கற்றல் வேண்டும் என்று குறள்நெறியும் கூறுகிறது.

எல்லோரும் கற்க வேண்டும்; கற்றவழியில் நிற்கவேண்டும் என்னும் பௌத்த நெறியே குறள்நெறியுமாகும்.

கூடாவொழுக்கத்தை மூன்று அறநூலாரும் கண்டிக்கின்றனர். காமத்தினால் சோகமும் பயமும் தோன்றும் என்கிறது தம்மபதம். பிறர் மனையைச் சேர்வதால் இவ்வுலகில் மழையின்றி, வளங்குன்றி, வறுமை நிலவும் என்பதால் கூடாவொழுக்கம் புரிந்தோர்க்கும் கடுந்தண்டனை விதிக்கிறது தருமசாத்திரம். பிறனில் விழைந்தோர்க்கு இவ்வுலக நன்மைகளில் உரிமை இல்லை என்று உரைக்கிறது திருக்குறள். மூன்று அறநூலாரும் கூறும் முறையில் வேறுபட்டாலும் கூறும் அறம் ஒன்றே.

மாணவர்கள் நெடுங்கிடையாகக் குருவின் முன்விழுந்து வணங்க வேண்டும் என்பது மனுநெறி. உடையார் முன் இல்லார் போல் மாணவன் ஆசிரியரிடம் பணிந்து நிற்கவேண்டும் என்பது குறள்நெறி. இவ்வாறு மாணவருக்கு வேண்டிய பணிவுடைமையை இருநூல்களும் வலியுறுத்து கின்றன.

பிரம்மாவின் உடம்பிலிருந்து மக்கள் பிறந்ததாகக் கூறுகிறது மனு தருமம். மக்களின் படைப்பு பற்றிய செய்தி தம்மபதத்திலும் வள்ளுவத்திலும் காணப்படவில்லை.

மனுவின் சமுதாயத்தில் வருணவேறுபாடுகள் இருந்தன. வருண அடிப்படையில் குலத்தொழில்களும் பொதுத்தொழில்களும் நிர்ணயிக்கப் பட்டன. வருண அடிப்படையிலான பிறப்பையோ தொழில்களையோ

புத்தரும் வள்ளுவரும் குறிப்பிடவில்லை.

நான்கு வருணத்தாரைத் தவிரத் தீண்டத்தகாதவர் எனப்படும் பாகிய சாதியினரைப் பற்றியும் மனு கூறுகின்றார். இத்தகு வருணப் பிரிவுகளிலும், சாதிப்பிரிவினால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளிலும் புத்தருக்கும் வள்ளுவருக்கும் உடன்பாடன்று.

பிறந்த குழந்தைக்குப் பெயரிடல், சோறூட்டல், சிகைஎடுத்தல், தந்தை செய்யும் உபநயம் ஆகியனபற்றித் தருமசாத்திரம் விளக்குகிறது. இவைபற்றிய விளக்கங்கள் தம்மபதத்திலும் வள்ளுவத்திலும் இல்லை.

கற்கவேண்டும் என்னும் நெறியை அறநூலார் மூவரும் வலியுறுத்தகின்றனர். ஆனால் மனு கூறுவது குருகுலக்கல்வி; வள்ளுவர் கூறுவது பொதுக்கல்வி; புத்தர் கூறுவது துறவுக்கல்வி.

கற்கும் பருவத்தில் மாணவர்கள் அணியவேண்டிய ஆடை, அரைஞாண், பூணூல், தண்டம், பிச்சைஏற்றல் போன்றவற்றை வருண அடிப்படையில் மனு வேறுபடுத்துகிறார். இவை தம்மபதத்திலும் குறளிலும் இடம் பெறவில்லை.

கற்றுத்தேர்ந்தபின்பு மாணவர்கள் குருவின் விருப்பப்படித் தட்சணை வழங்கியதாகத் தருமசாத்திரம் கூறுகிறது; வள்ளுவத்தில் இச்செய்தி கூறப்படவில்லை.

கற்ற எல்லோருக்கும் சென்ற இடமெல்லாம் சிறப்புக்கிடைக்கும் என்னும் நெறியைப் புத்தரும் வள்ளுவரும் புலப்படுத்திகின்றனர்; கற்ற அந்தணர் மட்டுமே சிறப்புடையர் என்பர் மனு.

அறிவு வளர்ச்சிக்குக் குரு வழிபாட்டை அளவு கருவியாகக் காட்டுவது மனுநெறி; அறிவு வளர்ச்சிக்குக் கற்கும் நூல்களை அளவுகருவியாக வரையறுப்பது குறள்நெறி. 'புத்தர் இதுபற்றிக் கூறவில்லை.

மாணவர்கள் இரந்துண்டு கல்வி பயிலவேண்டும் என்று மனு குறிப்பிடுகின்றார். பௌத்த பிக்குகளும் இரந்துண்டு வாழ்பவரே. இக்கருத்து வள்ளுவத்தில் காணப்படவில்லை.

குருகுல மாணவர்கள் ஒன்பது வயது முதலாக முப்பத்தாறு வயதுவரையிலும் கல்வி பயிலலாம் என்று தருமசாத்திரம் கூறுகிறது. கல்வி

கற்பதற்கு வயது வரையறை இல்லை என்று வள்ளுவம் வலியுறுத்துகிறது. மாணவர்களுக்குரிய அறங்களைத் தம்மபதம் வரையறுக்கவில்லை.

மனுவின் சமுதாயத்தில் நல்லாசிரியர்கள் அவர்களின் செயலுக்கேற்ப ஆசாரியன், உபாத்யாயன், குரு, ரித்விக் என்று அழைக்கப் பட்டனர். வள்ளுவர் காலச்சமுதாயத்தில் ஆசிரியர்களுக்குரிய இப் பெயர்கள் வழக்கில் இல்லை.

மனுகாலச் சமுதாயத்தில் கூடாவொழுக்கம் புரிந்த இருபாலர்க்கும் உயிர்த்தண்டனையும் கொடுந் தண்டனைகளும் விதிக்கப்பட்டன. புத்தரும் வள்ளுவரும் விரும்பும் சமுதாயத்தில் இதுபோன்ற கடுந்தண்டனைகள் விதிக்கப்படவில்லை.

ஆயுதம் ஏந்தி வன்செயல்களைத் தடுப்பதற்குச் செல்லும் உரிமையை மட்டும் மனு நால்வருணத் தாருக்கும் வேறுபாடின்றி அளித்துள்ளார். நால்வருணத்தாரும் ஆயுதம் ஏந்தும் உரிமையைப் புத்தரும் வள்ளுவரும் அளிக்கவில்லை.

# 5. சமய அறம்

## முன்னுரை

'சமயம்' என்பது மனிதனுக்கும் மனித நிலைக்கும் மேற்பட்டதாக உள்ள ஆற்றல் அல்லது ஆற்றல்களுக்கு உள்ள தொடர்பு பற்றியதாக எண்ணப்படுகிறது. எங்கெல்லாம் புனித உணர்வு தோன்றுகிறதோ அங்கெல்லாம் சமயம் வேரூன்றி நிற்பதாகக் கொள்ளலாம். சமய நம்பிக்கை மிக்கிருந்த காலத்தில் துறவு நெறியும் மந்திரங்களும் தந்திரங்களும் மனிதனை உய்விக்கலாம் என்ற நோக்கில் மனு சமயநெறிகளைக் கூறியுள்ளார்.

மெய்ஞ்ஞானம் பெற்ற புத்தர் பெருமான், மனிதன் மற்றவர்களால் முன்னேற முடியாது. தன் முயற்சியாலும் ஒழுக்கத்தாலுமே உயரமுடியும் என்று கூறினார். அதற்கேற்ப வாழ்ந்தும் காட்டினார். திருவள்ளுவருக்கு இறை நம்பிக்கை இருந்தது. ஆனால் எந்தச்சமயத்திற்கும் முதன்மை கொடாமல், எம்மதப்பெயரையும் குறிப்பிடாமல் தம் நூலை யாத்துள்ளார். எல்லாச்சமயங்களுக்கும் ஒத்த கொல்லாமை, இன்னாசெய்யாமை, புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை, துறவு முதலிய சமயச்சார்பான அறங்களையும் ஏற்கிறார். இவ்வாறு மூன்று அறநூல்களிலும், சமயஞ் சார்ந்த சிறப்புக் கொள்கைகளும், பொதுநெறிகளும் பரவலாகக் காணப்படுகின்றன.

## நான்கு உண்மைகள்

ஆதியில், அச்சப்பட்ட மனிதர்கள் மலைகளையும் வனங்களையும் புனிதமான மரங்களையும் புண்ணியத்தலங்களையும் புகலிடமாகக் கொண்டார்கள் (த.186). இந்த அடைக்கலம் நல்ல பாதுகாப்பு அல்ல. இந்த அடைக்கலத்தால் மனிதன் வேதனைகளிலிருந்து விடுதலை பெறுவதில்லை. ஆதலால் நான்கு உன்னத உண்மைகளைத் தேர்ந்த ஞானத்தால் தெரிந்துகொண்டனர். அவை துக்கம், துக்ககாரணம், துக்கநிவாரணம், துக்கநிவாரண மார்க்கம் என்பன. "புத்தர்பெருமான் போதிமரத்தடியில் மெய்ஞ்ஞானம் பெற்றபொழுது இவற்றை அறிந்தார்."[1] தாம் அறிந்தவற்றை மன்பதை பயனுற மொழிந்தார் என்பதை,

---

1. ந. சுப்புரெட்டியார், காலமும் கவிஞர்களும், ப. 152.

"துக்கம், துக்காரணம், துக்கநிவாரணம், துக்கநிவாரண
மார்க்கமாகிய அஷ்டாங்க மார்க்கம்" (த.189)

என்று தம்மபதம் புலப்படுத்துகிறது. இதுவே, பாதுகாப்பான புகலிடம். இதுவே தலைசிறந்த சரணம். இந்த அடைக்கலத்தை அடைந்தபிறகு மனிதன் எல்லா வேதனைகளிலிருந்தும் விடுபடுகின்றான்.

## துக்கம்

துக்கம் என்பது நோய். "உலகில் பிறப்பு, இறப்பு, பிணி, மூப்பு, எல்லாம் துன்பம். நண்பர்களைப் பிரிதல் துன்பம். அன்பற்றவர்களின் தொடர்பு துன்பம். விரும்பியதைப் பெறாமை துன்பம். ஐம்புலன்களின் வழியே அறிந்து ஆசைகொண்ட யாவும் துன்பத்தில் முடிகின்றன."[1] ஆதலின் இவை துக்கம் என்ற முதல் வாய்மையின் பாற்படுவன. இதைப் புத்தர்பெருமான் விசுத்திமார்க்கம் அல்லது மிகவும் பரிசுத்தமான வழி என்று கூறியுள்ளார். இதுபற்றி,

"படைக்கப்பெற்ற யாவும் துக்கமயமானவை. இதை அறிவால்
உணர்ந்தவன் துக்கத்தில் அழுங்குவதில்லை. இதுவே
விசுத்திமார்க்கம்" (த.276)

என்று தம்மபதம் கூறுகின்றது.

## பிறப்பு

நோய்களுக்கெல்லாம் தலையாயது பிறப்பு. வேட்கையிலிருந்து பற்றும், பற்றிலிருந்து கர்மத்தொகுதியும், கர்மத்திலிருந்து பிறப்பும் தோன்றுகின்றன. செய்யும் வினைகளுக்கேற்ப உயிர்கள் மீண்டும் மீண்டும் பல பிறவிகள் எடுக்கின்றன. இப்பிறப்பு துக்கமானது என்னும் புத்தரின் அனுபவத்தை,

"பலவிதமான பிறவிகளை நான் எடுத்தாயிற்று. இந்த உடலாகிய குடிலைக் கட்டியவனை நான் இரவும்பகலும் தேடியும் காணவில்லை. மீண்டும் மீண்டும் பிறப்பது துக்கமாகவே உள்ளது" (த.51) என்ற பொன்மொழிகளால் அறியலாம். பிறப்பு நீங்கி நிவாரணமடைந்தால் துக்கத்திலிருந்து விடுபடலாம். இதனை,

"குடிலைக் கட்டிய கொற்றவனே! இப்போது உன்னைக்கண்டு

1. ப. ராமஸ்வாமி, தம்மபதம், ப. 95.

கொண்டேன், குடிலை நீ காட்டமுடியாது. உன்னுடைய உத்திரங்கள் எல்லாம் உடைந்துவிட்டன. என் சித்தம் நிருவாணப்பேற்றில் இலயித்துவிட்டது. அதனால் ஆசைகள் அவிந்தொழிந்துவிட்டன" (த.152)

எனவரும் கருத்துக்கள் விளக்குகின்றன.

பிறப்பினைத் தோற்றம் என்றும் குறிப்பர். இதனைச் சாத்தனார்,

"பிறப்பெனப் படுவதக் கருமப் பெற்றியின்
உறுப்புண ருள்ளஞ் சார்பொடு கதிகளிற்
காரண காரிய உருக்களிற் றோன்றல்"[1]

என்றார். "மனிதன் இறந்ததும் விஞ்ஞானம், கந்தம், முன்வினைகளின் நுண்ணுருக்கொண்டு அறுவகைப்பிறப்பில் ஒன்றற் குரிய, தாயின் கருவில் சேர்ந்து புதுப்பிறவியை உருவாக்குகிறது. இவ்விஞ்ஞானக் கந்தத்தில் தான் நாமரூபம் (அருவுரு) தோன்றுகிறது"[2] என்று அறிஞர் விளக்கியுள்ளார். பிறப்பின் தன்மையை வள்ளுவர்,

'உறங்கி விழிப்பது போலும் பிறப்பு' (குறள். 339) என்று விளக்குகிறார். மேலும் பிறவிகள் பல உண்டு என்பதை வள்ளுவர்,

"ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு" (குறள். 835)

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து" (குறள். 398)

என்ற குறட்பாக்களில் புலப்படுத்துகிறார். எனவே பிறப்புக் கொள்கையில் இருவரும் உடன்படுகின்றனர்.

## பிணி

"பிணி எனப்படுவது இயல்பான உடல்நிலையை வேறாக்கித் துன்பம் பயப்பதாகும்."[3] வினைப்பயனின் உறுப்பாக உள்ள பிணியினைப் புத்தர்,

---

1. மணி., 30: 95-96.
2. சோ.ந. கந்தசாமி, பௌத்தம், ப. 241.
3. மேலது, ப. 242.

"இப்போது நீ உலர்ந்த சருகு ஆகிவிட்டடாய். எமதூதர்கள் உன்னை அணுகிவிட்டனர். நீயும் புறப்பட்டு வாயிலுக்கு வந்துவிட்டாய். செல்லும் வழிக்குக் கட்டுச்சாதம் எதுவும் உன்னிடம் இல்லை" (த.235)

என்றுகூறி மனிதனை எச்சரிக்கை செய்கிறார். பிறப்பைத் தொடர்ந்து பிணி நெருங்குவது இயல்பு. ஆதலால் நிருவாணப்பேற்றுக்கு வேண்டிய நல்வினைகளைச் செய்தல் வேண்டும் என்பதே பௌத்தநெறி. இந்நெறியினை,

"பிணியெனப் படுவது சார்பிற் பிறிதாய்
இயற்கையிற் றிரிந்துடம் பிடும்பை புரிதல்"[1]

என்று சாத்தனார் சாற்றியிருப்பதும் நோக்கற்குரியது.

## மூப்பு

முதுமை என்பது அகவை முதிர்ச்சியை மட்டும் குறிப்பதன்று; அறிவு முதிர்ச்சியையும் குறிப்பதாகும். ஆதலால்,

"தலைமயிர் நரைத்து விட்டதனால் மட்டும் ஒருவர் முதிர்ச்சி அடைந்த பெரியவர் ஆக இயலாது. அவர் அடைந்த முதிர்ச்சி பயனற்ற முதிர்ச்சி" (த.260)

என்று புத்தர் முதுமைக்கு இலக்கணம் வகுத்துள்ளார். மனிதனுக்குத் தனி வாழ்விலும் பொதுவாழ்விலும் அடிப்படையாகத் தேவைப்படுவது அறிவு. சரியான வழியில் ஒருவன் சரியாக நடந்து செல்வதற்கும் அது துணை யாகிறது. ஆனால் முதுமை என்பது இறப்பிற்கு அறிகுறியாகும். ஆதலால் அறிவினால் மனிதன் அறத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதை,

"அழகுபடுத்தி அலங்கரிக்கப்பட்ட அரசனுடைய தேர்கள் அழிந்து போகின்றன. அதேபோல இந்த உடம்பும் முதுமையால் தளர்ந்து அழிந்து போகின்றது" (த.151)

என்ற போதனை புலப்படுத்துகிறது. இதனை,

" மூப்பென மொழிவ தந்தத்தளவும்
தாக்குநிலை யாமையிற் றுந்தளர்ந்திடுதல்"[2]

1. மணி., 30: 98–99.
2. மேலது, 30: 100–101.

என்ற இலக்கியச்சான்றாலும் அறியலாம். இதற்குப் புத்தர்பெருமான் அலங்கரிக்கப்பட்ட தேரினை உவமை கூறியிருத்தல் சாலப்பொருந்தும்.

## இறப்பு

தோற்றம் உண்டேல் மரணம் உண்டு. மனிதன் மரணத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது. தப்பித்துக்கொள்ளும் இடம் பரந்த வானிலும் இல்லை. ஆழ்கடலிலும் இல்லை. மலைக்குகைகளிலும் இல்லை" (த.128). ஆயுள் நாட்கள் கடந்துசெல்கின்றன.

அதனால்

"சாவு வரும்போது உற்றார், உறவினர், சுற்றத்தார் யாரும் உனக்கு உதவமுடியாது. உறவினரோ, தந்தையோ, புத்திரர்களோ யாரும் ஒருவனைக் காப்பாற்ற முடியாது. மரணத்தின்பிடிப்பில் சிக்கியவனைச் சுற்றத்தார் எவராலும் காப்பாற்றமுடியாது" (த.288). வாழ்வு முடிந்தபின் நம்முடன் வருபவை பாவ, புண்ணியங்கள் மட்டுமே என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. இவ்வுணர்வு அறம் புரிவதற்கும் ஒரு தூண்டு கோலாகும்.

இறப்பின் தன்மையை வள்ளுவர்,

'உறங்குவது போலுஞ் சாக்காடு' (குறள். 339)

என்று சுருக்கமாகக் கூறியுள்ளார்.

## துக்க காரணம்

இது நோய்த்தோற்றம் எனப்படும். "சகல துக்கங்களுக்குக் காரணம் ஆசை அல்லது அவாதான். இதைத் திருஷ்ணை என்பர்."[1] துக்கோற்பத்தி என்ற இரண்டாவது வாய்மையைப் பேதமை, செய்கை, வேட்கை, பற்று, பவம் என்ற ஐந்து சார்புகளும் விளக்குகின்றன. இவ்வைந்தும் துன்பம் தோன்றுவதற்குக் காரணங்களாகும்."[2]

## பேதைமை

பேதைமை என்பது யாதெனில், "பௌத்தத்தின் அடிப்படைக் கொள்கையாகிய சார்பில் தோற்றம், நான்கு வாய்மைகள் ஆகியவற்றை

1. ப. ராமஸ்வாமி, தம்மபதம், ப. 95.
2. சோ.ந. கந்தசாமி, பௌத்தம், ப. 258.

அறியாமையும், அளவைகளால் அறிந்துகொண்ட மெய்ப்பொருளை மறத்தலும், பிறர் கூறியதற்காக முயலுக்குக் கொம்புண்டு என்பதைக் கேட்டு நம்புதலும் ஆகும்."[1] இப்பேதைமை உடையவன் நல்லது, கெட்டது என்பதைப் பகுத்தறியும் அறிவற்றவன். இதை வள்ளுவர்,

"பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்
டூதியம் போக விடல்" (குறள். 831)

"நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்" (குறள். 833)

என்று கூறுகிறார். பேதமையின் தீமைகளை விளக்க ஓர் அதிகாரம் அமைந்துள்ளார்.

பேதைமையால் ஏற்படும் துன்பங்களையும் பேதைமை இன்மையால் ஏற்படும் நன்மைகளையும் தம்மபதமும் வள்ளுவமும் வரையறுத்துக் கூறுகின்றன.

பேதையர் தம் செயல்களாலேயே தீமைகளைத் தேடிக்கொள் கின்றனர். அதனால் துன்பம் அடைகின்றனர் என்பதை,

"புல்லறிவுள்ள மூடர்கள் தாமே தமக்குப் பகைவர். அவர்கள் பாவ கருமங்களைச் செய்துகொண்டு திரிகின்றனர். அவை கசப்பான துன்பக்கனிகளையே அளிக்கின்றன" (த.66)

என்ற புத்தரின் பொன்மொழிகள் புலப்படுத்துகின்றன. ஏனெனில் வயிரம் மற்ற மணிகளை அறுப்பது போல அவன் செய்த பாவமே அவனை அழித்துவிடுகிறது (த.159). அறியாமையால் செய்த பாவச்செயல்கள் உடனே பலனளிப்பதில்லை. 'நீறுபூத்த நெருப்பைப் போலக் கனன்று கொண்டே இருந்து அவனுக்கு இருக்கிற சிறிது இன்பத்தையும் அழித்து விடுகிறது' (த.71,72). அதனால் பேதையர் அறியாமையுடன் நூறு வருடங்கள் வாழ்வதைக்காட்டிலும் அவற்றை அறிந்த ஒருவன் ஒருநாள் வாழ்வதே மேலானது (த.111). ஏனெனில் இவர்கள் இருக்கும்போதே இறந்தவராகக் கருதப்படுகின்றனர். (த.21). இம்மருளுடையார் மெய்ப் பொருளை ஒருபோதும் அடைவதில்லை. அவர்கள் ஆசைகளைத் தேடித் தொடர்ந்து அலைவார்கள் (த.11). அதோடு அஞ்சவேண்டாத கருமங்களுக்கு அஞ்சியும், அஞ்சவேண்டியவைகளுக்கு அஞ்சாமலும்

1. மணி., 30: 51–54.

வாழும் மனிதர்கள் தவறான கொள்கைகளைப் பின்பற்றுவதால் தீய கதியை அடைவார்கள் (த.315,316) என்று புத்தர் விரிவாக விளக்கி யுள்ளார்.

வள்ளுவர் கூறும் பேதை, பெரிய செல்வம் பெறுவானானால் அவனைச் சார்ந்தவர் பசித்துன்பத்தால் வாடுவர். ஏதிலார் இன்பமடைவர் (குறள். 837). பிற வாய்ப்புகளையும் இவ்வாறே பேதை பயன்படுத்தத் தெரியாமல் துன்புறுவான் என்பார்.

இவ்வாறே விநாயகர் சதகமும், "இழி செயலுடைய பேதையர், ஊமை, குருடு, கூன், சந்ததிகளைப் பெற்று மனங்குழைந்து, விருந்து கண்டஞ்சி, கிளைஞர் பழிக்க வாலிபத்தில் துயரடைவர்"[1] என்று எடுத்துரைக்கிறது.

எதிர்மறை வாசகத்தால் அறம் உறைத்தல் புத்தருக்கு இயல் பாதலின் பேதைமை இன்மையால் ஏற்படும் நன்மைகளையும் கூறி அறன் வலியுறுத்தியுள்ளார்.

> "முன்னால் சிந்தனையற்றிருந்து, பின்னால் விழிப்படைந்து தெளிந்தவன் நன்னெறிகளைப் பின்பற்றி உயர்நிலையை அடைகிறான். மற்றவர்களையும் நல்வழிப்படுத்துகிறான் (த. 170)
>
> "பாவத்தைப் பாவமாகவும் பாவமின்மையைப் பாவமற்ற தாகவும் காண்பவர்கள் சத்தியமான கொள்கைளைப் பின்பற்றி நற்கதியை அடைகின்றனர்" (த. 317)
> இவர்கள் மெய்ப்பொருளை அடைவார்கள் (த. 12)

என்று தம்மபதம் கூறுகிறது.

## செய்கை

பேதைமையின் காரணமாகச் செய்கை தோன்றுகிறது. இச்செய்கை அறியாமையால் விளைதலின் தீவினை எனப்படும். தீவினையே துக்கத்திற்குக் காரணம் என்பதை, "மனிதனை மனோதர்மம் உருவாக்கு கின்றது. சிந்தனைகளே அதன் அடிப்படை. சிந்தனைகளாலேயே அது ஆக்கப்படுகிறது. மனிதன் தீய எண்ணத்தோடு பேசினாலும் செயல் புரிந்தாலும் வண்டிச்சக்கரம் மாட்டைத் தொடர்ந்து செல்வதுபோல் துக்கம்

1. விநாயக சதகம், 18.

அவனைத் தொடர்ந்து செல்லும்'' (த.1). அவ்வாறே, "தீய எண்ணங்களை உடையாரிடமும் துவேசம் நீங்காது நிலைத்திருக்கும்" (த.3) என்று பௌத்தநூலும் உரைக்கிறது.

"புத்தர், கருமம், மறுபிறவி என்னும் கோட்பாடுகளைக் கூறுகிறார். ஒருவன் என்ன கருமம் (செயல்) புரிகின்றானோ அதுவாகவே அவன் ஆகிவிடுகிறான். ஆதலால் ஒவ்வொருவனும் தானே தன்னை உருவாக்கு கிறான். ஆகவே நம்முடைய செயல்களிலிருந்து நாம் தப்பமுடியாது. என் கருமமே என் உடைமை. என் கருமமே என் பிதிரார்ச்சிதம். என் கருமமே என்னைத் தாங்கும் கருக்குழி. என் கருமமே என் இனம். என் கருமமே எனக்குப் புகழிடம் என்று புத்தர் கூறுகிறார்."[1] ஆதலால் வாழ்வில் எதிப்படும் இன்ப, துன்பங்களுக்கு அவரவர் செயல்களே காரணமாகும் என்பதை,

> "மாலுவக்கொடி கடம்பமரத்தைச் சுற்றிப் படர்ந்து மரத்தையே
> அமுக்கிவிடுவது போல ஒருவனுடைய தீவினையே அவனை
> அமுக்கிவிடுகிறது. பகைவர் செய்ய விரும்பும் தீமையை அவன்
> தானாகவே செய்து கொள்கிறான்" (த.160)

என்று *பௌத்தநெறி கூறுகிறது. ஆதலால்,*

> "தீயகருமத்தைச் செய்தவன் உலகவாழ்வில் வருந்துகிறான்.
> மறுமையிலும் வருந்துகிறான். இரண்டிலும் அவனுக்குத் துயரமே.
> தானே செய்த தீயகருமத்தின் விளைவைக்கண்டு அவன்
> வருந்துகிறான். நரகத்திலும் அவன் வேதனைப்படுகிறான்"(த.17).

அதனால், "ஒருவன் தன் நாவைக்காத்து, மனத்தை அடக்கி, உடலால் தீமை எதையும் செய்யாது இருப்பானாக. செயல்புரிவதற்கு ஏற்பட்ட இந்த மூன்று வழிகளையும் பரிசுத்தமாக வைத்திருப்பவன் பெரியோர் அருளிய நன்னெறியை அடைவான்" (த.279) என்று புத்தர்பெருமான் வழி காட்டியுள்ளார். இக்கருத்தை உளங்கொண்ட, வள்ளுவர் தீய செயல்களைச் செய்யக்கூடாது என்பதை வலியுறுத்தத் 'தீவினை அச்சம்' என்னும் ஓர் அதிகாரத்தை அமைந்துள்ளார். அதோடு,

> "தீயவை தீய பயத்தலால் தீயவை
> தீயினும் அஞ்சப் படும்" (குறள். 202)

---

1. கலைக்களஞ்சியம், 8: 429.

என்று எச்சரிக்கையும் செய்கிறார். இதுபோலவே சாத்தனாரும்,

"மனம், மொழி, மெய்களினால் தீவினைகள் புரிவோர் நரகர், பேய், விலங்கு ஆகிய மூவகைக்கதிகளில் பிறப்பர். மெய்யறிவு காரணமாகத் தீச் செய்கையின் நீங்கி, நற்செயல் செய்வோர், மக்கள், தேவர், பிரமர் ஆகிய உயர்கதிகளில் தோன்றுவர்"[1] என்று கூறிய கருத்து இவண் நோக்கற்குரியது.

## வேட்கை

வேட்கை என்னும் சார்பினை ஆசை, அவா, விருப்பு என்ற சொற்களால் சுட்டுவர். ஆசைகளைப் பெருக்கி நிறைவு பெறாத நிலையினை வேட்கை எனலாம். "எண்ணங்கள், ஆசைகள், பற்றுக்கள், உணர்ச்சிகள் ஆகியவற்றின் கோவையே ஒருவனுடைய அகவாழ்வாகும். இவற்றை எல்லாம் பிணைந்து நிற்பது உடல். உடலை உண்டாக்கும் பஞ்சபூதங்களைக் கலைத்தால் பிறவி அறும். இன்றேல் பிறவி தொடர்ந்து வந்து துக்கத்தைத் தந்துகொண்டே இருக்கும். பஞ்சபூதங்களைச் சேர்த்து வைக்கும் சக்தி, மனிதன் தனித்து வாழவேண்டும் என்று விரும்பும் ஆசையே. ஆதலால் ஆசையை அவித்துவிட்டால் பஞ்சபூதங்கள் கலைந்து விடும். மறுபிறவி உண்டாகாது."[2] ஆசைகளினால் ஏற்படும் துன்பங்களையும், ஆசைகளின் பெருக்கங்களையும் அதை அழிக்க வேண்டிய முறைகளையும் தம்மபதம் எடுத்துரைக்கிறது. அவை பின்வருமாறு:

"பேராசையே மிகப்பெரிய நோய்" (த.201)
"பேராசையிலிருந்து துன்பம் தோன்றுகிறது" (த.214)
"ஆசைப்பட்டதிலிருந்து சோகம் தோன்றுகிறது
ஆசைப்பட்டதிலிருந்து அச்சம் தோன்றுகிறது" (த.210)
"ஆசைகளுக்கு நிகரான அனல் வேறில்லை" (த.200)

வேட்கை உடையவர்களுக்குத் துன்பம் காட்டுப்புல்லைப்போல வளர்ந்து பெருகிக்கொண்டே இருக்கம் (த.333). அதனால் பழத்தை விரும்பும் குரங்கு அங்குமிங்கும் தாவுவது போல ஒரு பிறவியிலிருந்து மறு பிறவிக்கு அவன் தாவுகிறான் (த.334). இத்தகு மனிதர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பையும் மூப்பையும் அடைகிறார்கள். அவாவின் விலங்குகளில்

1. மணி., 24: 123-134.
2. மணி., 30: 91.

கட்டுண்டு நெடுங்காலம் துயரத்தை அனுபவிக்கிறார்கள் (த.340). ஆதலால் ஆசை வேண்டாம். ஆசைப்பட்ட பொருளை இழத்தல் துன்பம். ஆசையும் வெறுப்பும் அற்றவனுக்கு விலக்குகள் இல்லை என்று தம்மபதம் கூறுகிறது. இதனால் புத்தர்பிரானின் புனிதமொழி 'ஆசை 'அறுமின்' என்பதே.

வேண்டாமையன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை (குறள். 363) என்பது திருக்குறள். ஏனெனில் அவா என்பது பிறப்பீனும் வித்தாக அமைகிறது (குறள். 361). அதோடு வீடுபேறடைவதற்கும் தடையாக அமைகிறது என்பதை,

"அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா" (குறள். 366)

என்ற குறள் புலப்படுத்துகிறது.

இங்ஙனம் 'ஆசை அறுமின்' என்னும் நெறியைப் புத்தரும் வள்ளுவரும் ஒருசேர வலியுறுத்துவது அறியலாம்.

## பற்று

" பொருள்களில் ஒட்டிக்கொள்ளும் பந்தத்தினைப் பற்றெனக் கூறுவர். இச்சார்பினை வேட்கையில் ஒரு கூறாகக் கருதலாமே தவிர அதனின்றும் வேறுபட்டதாகக் கருதவொண்ணாது. "[1] இதனை,

"பற்றெனப் படுவது பசைஇய வறிவே" [2]

என்று பௌத்த நூலும் பகர்கின்றது.

ஒருவன் தன் மனைவி. மக்கள்மீது கொண்டுள்ள பாசமே பற்று எனப்படுகிறது. ஆசையைக் களைதல் போல பற்றையும் அகற்றவேண்டும் என்பது பௌத்தநெறி. ஒருவன் முதலில் தன்மீது கொண்டுள்ள பற்றினை நீக்கவேண்டும் என்பதை,

"சரத் காலத்துக் குமுதமலரைக் கையால் பறிப்பது போலத்
தன்மீது கொண்டுள்ள பற்றைக் களைந்து விடுவாயாக. புத்தர்
போதித்த நிர்வாணம் என்னும் அமைதி நெறியில் செல்ல
விரும்புவாயாக" (த.283)

1. கலைக்களஞ்சியம், 8: 429.
2. சோ.ந. கந்தசாமி. மு.நூ. ப. 155.

என்று தம்மபதம் இயம்புகிறது. ஏனெனில் பற்றினைப் பலமான தளையாகவும் கூறுகின்றனர். இரும்பு விலங்கையும், மரக்கட்டையையும், கயிற்றுக்கட்டையையும் அறிஞர் பலமான தளை என்று கூறுவதில்லை. ஆனால் பொன்னாலும் இரத்தினத்தாலும் செய்யப்பெற்ற அணிகலன் களிலும் மனைவி, மக்களிடம் வைக்கும் பாசமே மிகவும் பல முள்ளது என்பர் (த.343). இப்பாசம் தளர்ச்சியாக இருந்தாலும் அதை அவிழ்ப்பதோ அறுப்பதோ கடினம். ஏனெனில் இதுவே பலமான தளை, ஆசைகளற்ற இன்பங்களை விடுத்து உலகைத் துறப்பவர்கள் இதையும் அறுத்து விடுகிறார்கள் (த.344). எனவே பற்றும் உலகத்துன்பங்களுக்குக் காரணமாகிறது. மனைவி, மக்கள்மீது காட்டும் பாசமே பலமான தளை. ஆதலால் பற்றினைத் துறந்து வீடுபேறடைதலே சிறந்த நெறியாகச் சுட்டப் பட்டுள்ளது.

யான், எனது என்ற அக, புறப் பற்றுக்களும் உலகப்பொருள்களின் மேல் தீராத ஆசையும், காமம், வெகுளி, மயக்கங்களும் வாழ்க்கைத் துயரங்களுக்கு மூலகாரணங்களாகும். அத்துயரங்களை அகற்றப் பற்றை அழித்தல்வேண்டும். அவ்வாறு பற்றற்றார் பெறும் பயனை, "யாரொருவன் இச்சையின் காரணமாக இன்றி, பற்றற்றுக் கடமை புரிந்து கொண் டிருப்பானோ அந்த மேலோன் எதையும் வேண்டாதவனே ஆயினும், அவனுக்கு நிச்சயமான மோட்ச சாம்ராஜ்யம் உண்டு. அவன் எடுத்துள்ள பிறவியிலேயே வேண்டிய வேண்டியாங்கு எய்தும் வல்லமையும் அவனைச்சாரும்" (மனு.2:5) என்று மனுமொழி புகல்கின்றது. மனுவின் கருத்தை அரண்செய்வதுபோல வள்ளுவரும்,

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்" (குறள். 346)

என்று கூறுகின்றார்.

> வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் என்பது இந்த உலகத்திலேயே இருந்து பேரா இயற்கை அடையும் முயற்சியில் வானவர்க்கும் மேலான இந்த உலக வாழ்வின் சிறப்புப்படி நிலைக்குள் புகுதல்.

இவ்வாறு பற்றற்றார் பெறும் பயனை மூன்று நூலாரும் எடுத்துரைக் கின்றனர்.

### பவம்

வேட்கை, பற்று முதலியவற்றின் காரணமாகப் பவம் என்னும் பாவம்

தோன்றுகிறது என்பதை,

> "பவமெனப் படுவது கரும வீட்டம்
> தருமுறை யிதுவெனத் தாந்தாஞ் சார்தல்"[1]

என்று இலக்கியம் விளக்கமளிக்கிறது. பவம் என்பது பிறவிக்கு வித்தாகிய கருமத்தொகுதியாகும். அதனால்தான்,

> " மனிதன் பாவத்தைச் செய்துவிட்டால் அதையே
> திரும்பத்திரும்பச் செய்யாதிருப்பானாக. அவன் அதில்
> திளைத்திருக்க வேண்டாம். பாவமூட்டை மிகவும்
> துக்ககரமானது" (த.115)

என்று புத்தர் இயம்பினார். பாவத்திலிருந்து சித்தத்தை விலக்க வேண்டும் (த.114). ஏனெனில் பாவம் பயனளிக்காதவரை இன்பமாய்த் தோன்றும். பயனைக் கொடுக்கும்போது பாவி தன்பாவத்தை உணர்கிறான் (த.117). ஆனால்,

> "என் பக்கம் அண்டாது என்று பாவத்தை இலேசாக
> எண்ணவேண்டாம். துளித்துளியாக விழும் தண்ணீரால் குடம்
> நிறைந்துவிடும். பேதை கொஞ்சம், கொஞ்சமாகப் பாவத்தைச்
> சேர்த்தாலும் அவன் பாவத்தால் நிரம்பி விடுகிறான் (த.119)

அப்பாவத்திலிருந்து அவன் தப்பவே முடியாது என்பதை,

> "மனிதன் தன் பாவ கருமத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது.
> தப்பித்துக்கொள்ளும் இடம் பரந்த வானிலும் இல்லை.
> ஆழ்கடலிலும் இல்லை. மலைக்குகையிலும் இல்லை" (த.125)

என்ற கருத்துக்கள் தெளிவுறுத்துகின்றன. இதனால் துளிப்பாவமும் துன்பத்தில் ஆழ்த்துகின்றது என்பது புலனாகும்.

## துக்கநிவாரணம்

துக்கநிவாரணம் என்பது நோய் நீங்கும் வாய். ஆசைகளுக்குச் சிறிதும் இடங்கொடாமல் அதனை வேருடன் களைந்து நீக்குவதே மூன்றாவது உண்மை. புத்தர்பெருமாவின் போதனையும் இதுவேயாகும்.

வேட்கையை வேருடன் களைதல் வேண்டும். ஏனெனில் மரத்தை

---

1. மணி., 24: 123–134.

வெட்டினாலும் அதன் வேர் உறுதியாயிருந்தால் மீண்டும் மீண்டும் தளிர்த்துவிடுகிறது. அதுபோல அவாவின் காரணங்களான வேர்கள் அழிக்கப்படாவிட்டால் துக்கம் மீண்டும் மீண்டும் வளர்ந்துகொண்டே இருக்கும். அதனால் அவாவின் வேரைத் தோண்டி எடுக்கவேண்டும். அதோடு ஓர் ஆசையை மட்டும் அழித்தால் போதாது. ஆசைகள் யாவற்றையும் அழிக்கவேண்டும் என்பதே புத்தரின் அறவுரை. இதனை,

> "ஒரு மரத்தை மட்டும் வெட்டி வீழ்த்தாதீர்கள். ஆசையாகிய காடு முழுவதையும் வெட்டி வீழ்த்துங்கள். ஆசையாகிய காட்டிலிருந்து தான் ஆபத்து ஏற்படுகிறது. ஆகவே காடு முழுவதையும் புதர்களோடு வெட்டி அழியுங்கள்" (த.283)

என்று புத்தநூல் அணையிடுகிறது. மனிதனின் ஆசைப்பெருக்கம் அளவற்ற தாயினும் அதை வேருடன் களைதலே துக்கநிவாரணத்திற்கு வழியாகும். இதனை,

> "அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
> தான்வேண்டு மாற்றான்வரும். (குறள். 367)

என்று வள்ளுவரும் கூறுகிறார்.

ஆசைத்தளைகளை அகற்றியவனுடைய துன்பங்கள் தாமரை யிலையில் நீர்த்துளிகள் ஒட்டாமல் சிதறுவது போல ஒழிகின்றன. அறிவு பெற்றவர்கள் அவா என்னும் தலையை அறுத்துக்கொண்டதும் உலகைத் துறந்து, துக்கங்களை எல்லாம் கடந்து போகின்றனர். சகல துன்பங் களையும் அவாவின்மை வெல்கிறத. அதனால் வீடுபேறடையலாம் என்பதற்கு,

> "நான் யாவற்றையும் வென்றவன், வாழ்வின் நிலைகள் யாவற்றிலும் நான் ஒட்டுப்பற்றில்லாதவன். எல்லாவற்றையும் நான் துறந்தாயிற்று. அவாவை அழித்ததால் நான் முக்தி அடைந்தவன்" (த.351)

என்று புத்தர்பெருமான் சாட்சி பகர்ந்துள்ளார். துக்கத்திலிருந்து நீங்கி பற்றுக்கள் யாவற்றையும் அறுத்து, விடுதலை பெற்றவனுக்குத் துன்பமில்லை. காமிய இன்பங்களை விடுத்து, மனமாசுகளை அகற்றியவரும் ஆனந்தமடைவர் (த.80). ஆசையாகிய கறைகளற்

றவனைக்கண்டு தேவர்களும் பொறாமைப்படுவர் (த.96). இவர்களுக்குப் பிறப்பும் மூப்பும் இல்லை. இதுவே எடுக்கநேர்ந்த கடைசி உடம்பாகும்.

புத்தர்பெருமானின் கருத்திற்கு அரணாக,

> 'அவாவில்லார்க்கு இல்லாகுந் துன்பம்' (குறள். 368)
>
> "இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்
> துன்பத்துள் துன்பங் கெடின்" (குறள். 369)

என்ற வள்ளுவக் கருத்துக்களும் காணப்படுகின்றன. ஆனால் மனுவின் நூலில் இதுபற்றிய செய்திகள் இடம்பெறவில்லை.

ஆசைகள் அகன்றால் பேரின்பம் கிட்டும். "எதிலும் பற்று வைக்காமல் ஆசைகளை அடக்கி வென்று எவர்கள் மாசற்ற ஒளிமயமாய்த் திகழ்கிறார்களோ அவர்கள் இந்த உலகிலேயே நிருவாண மோட்சத்தை அடைகிறார்கள்" (த.89); "இந்த நிருவாணமே பரமசுகம்" (த.202). "போதிஞானம் பெற்ற புத்தர்பெருமான் தம் முப்பத்தைந்தாம் அகவை முதலாக இறுதிக்காலம் வரையும் இந்நிலையில் திகழ்ந்தார் என்பர்."[1] இவ்வுலகில் உள்ளபொழுதே துய்க்கும் பேரின்பத்தையே இது குறிப்பிடுகிறது. இவ்வாறு புத்தர்பெருமான் பிறவாமையையும் பேரின்பப் பாதையையும் வகுத்துக்காட்டி மக்களை நன்னெறிப் படுத்தியுள்ளார்.

## துக்கநிவாரண மார்க்கம்

துக்கநிவாரணம் என்பது, "நோய் நீக்கும் நெறி. நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லமைதி ஆகிய ஒழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகுவதே நான்கவாது உண்மையாகும். இவற்றை அட்டாங்க மார்க்கம் என்று வழங்குவர். இதைத்தான் பழுதிலா வாழ்க்கை என்பர்."[2] இந்நெறி, "அறிவுக்கண்ணைத் திறந்து மெய்யுணர்வு அளித்து மனவமைதியை வழங்கிப் பூரண மெய்ஞ்ஞானத்தையும் பயக்கும்."[3] புத்தர் காட்டிய நிவாரணமார்க்கங்கள் தம்மபதத்திலும் இடம்பெற்றுள்ளன.

---

1. ந. சுப்புரெட்டியார், மு.நூ., ப. 155.
2. சோ.ந. கந்தசாமி, மு.நூ., ப. 289.
3. ந. சுப்புரெட்டியாா, மு.நூ., ப. 155.

நற்காட்சி

துக்கம் முதலிய நான்கு வாய்மைகளையும் உணர்தல், பாவ, புண்ணியங்களைப் பகுத்தறிதல், உலகின் நிலையாமையைக்கண்டு மெய்ப் பொருளை அறிதல் ஆகியன நற்காட்சி எனப்படும்.

பாவபுண்ணியங்களைப் பகுத்தறிதல்

உலகில் நன்மையும் தீமையும் இன்பமும் துன்பமும் கலந்தே இருக்கின்றன. அதுபோல மக்களில் பேதையரும் தெளிவுடையாரும் இருக்கின்றனர். அவர்களுள் மெய்யை மெய்யாகவும், பொய்யைப் பொய்யாகவும் காணும் தெளிவுடையார் உயர்ந்தவராகக் கருதப் படுகின்றனர் என்பதற்கு,

"மெய்யை மெய்யாகவும் பொய்யைப் பொய்யாகவும் காணும்
தெளிவுடையார் மெய்ப்பொருளை அடைவார்க்ள் அவர்களே
மெய்யான வேட்கை உடையவர்கள்" (த.12)

என்ற கருத்துக்கள் சான்றளிக்கின்றன. அவ்வாறு இன்பத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கக்கூடியவை நற்செயல்களாகப் போற்றப் படுகின்றன. இதனை,

"எந்தக் காரியத்தைச் செய்தால் பின்னால் மனம்
இன்பமடையுமோ, எதன் பயனை உள்ளக்களிப்போடு
அனுபவிக்கவேண்டியிருக்குமோ அதுவே நற்செயல்" (த.68)

என்று தம்மபதம் எடுத்துரைக்கிறது.

இத்தகு நற்செயலாகிய, புண்ணியத்தை மனிதன் செய்வானாகில் அதையே திரும்பத்திரும்பச் செய்யவேண்டும். புண்ணிய மூட்டை மிகவும் இன்பகரமானது (த.116). ஆனால் புண்ணியத்தை ஒரேநாளில் செய்ய இயலாது. ஞானி, துளித்துளியாகப் புண்ணியத்தைச் சேர்த்தாலும் புண்ணியத்தால் நிரம்பிவிடுகிறான் (த.120). இந்நற்செயல்கள் ஒரேநாளில் பயனளிக்காதவரை துன்பத்தையே காண்கிறான். ஆனால் பயனைக் கொடுக்கும்போது அவன் நன்மையை அறிவான் (த.118). இத்தகு நற்செயல்கள் இம்மையிலும் மறுமையிலும் இன்பமளிக்கும். பேரின்ப வீட்டிலும் நலம் பயக்கும் (த.18). இவ்வுலக வாழ்வில் நண்பரும் அன்பரும் துணை செய்வதுபோல மேலுலக வாழ்வில் நாம் செய்த புண்ணியங்கள்

நம்மை வரவேற்கின்றன. "கருத்துடைமையால் நன்னெறியைப் பின்பற்றிய இந்திரன், தேவர்களின் தலைவனாக உயர்ந்தான்" (த.38). ஆதலால் பாவ, புண்ணியங்களைப் பகுத்தறியும் அறிஞர் இன்பமடைவர் என்பதைப் புத்தர் பெருமான்,

> "உடலின் தோற்றத்திற்குக் காரணமாயுள்ள மூலப்பொருள்களான
> ஸ்கந்தங்களின் சேர்க்கையையும் பிரிவையும் பற்றித் தெளியும்
> போதெல்லாம் இன்பமும் மகிழ்ச்சியும் அடைவர்.
> அறிந்தவர்களுக்கு அதுவே நித்தியமான வாழ்வு" (த.372)

என்று கூறியிருத்தல் நோக்கற்குரியது. பாவ புண்ணியங்களைப் பகுத்தறிந்த நன்னெறியைப் பின்பற்றியவர் மெய்ப்பொருளைக் காண்பர். இம்மையிலும் மறுமையிலும் இன்பமடைவர். இறப்புத் தளைகளிலிருந்து விடுபடுவர் என்பது புலனாகும்.

## நிலையாமையை அறிதல்

மன்னா உலகத்தே மன்னுதல் குறித்து மாந்தர் சிந்திப்பது இல்லை. "உலகம் நிலையாதது. உலகப்பொருட்கள் நிலையாதன. உடம்பு நிலையாதது. உடம்பின் இளமை நிலையாதது. உடம்பை வருத்தி ஈட்டும் பொருட்செல்வம் நிலையாதது. நிலையற்ற இவற்றை எல்லாம் மனிதன் நிலையானவையாகக்கருதி வாழ்கிறான். இவ்வாறு வாழ்வதனாலேயே மனிதன் இறந்திறந்து பிறந்துழலுகின்றான்."[1] இவை, சிறிய இன்பம் பயப்பவை என்று எண்ணினால் ஆசை என்னும் கடும்பகை தானே அகலும், பற்று நீங்கும். இதை உணர்ந்த புத்தர் பெருமான்,

> "சிறிய இன்பத்தைக் கைவிடுவதால் பெரிய இன்பத்தை
> அடையலாமெனில் சிறிய இன்பத்தை விட்டுவிட்டுப் பெரிய
> இன்பத்தில் அறிஞர்கள் நாட்டம் செலுத்தட்டும்" (த.290)

என்று போதித்துள்ளார்.

வள்ளுவர் நிலையாமையை உறுதிப்படுத்த ஓர் அதிகாரம் அமைத்துள்ளார். அதன் முதற்குறளில்,

> "நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
> புல்லறி வாண்மை கடை" (குறள். 331)

---

1. மொ.அ. துரை அரங்கசாமி, தொல்காப்பிய நெறி, ப. 325.

என்று பொதுப்பட நிலையாமை பற்றிக் கூறுகிறார்.

மேலும் உலகம், வாழ்க்கை, யாக்கை, செல்வம் ஆகியவற்றில் நாட்டம் செலுத்தும் மக்கள் அவற்றின் நிலையாமையை அறிந்து பேரின்பம் அடைவதற்கும் வழிகாட்டியுள்ளார்.

## உலக நிலையாமை

இவ்வுலகம் நிலையற்றது. படைக்கப்பட்ட யாவும் அழிவடையும் என்பதை அறிந்தால் பற்றுக்கள் நீங்கும். பற்று நீங்கினால் பிறவா நிலை எய்தலாம். இதற்கு நல்வழி என்னும் விசுத்திமார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதை,

> " படைக்கப்பெற்ற யாவும் அநித்யம்; நிலையற்றவை. இதை அறிவால் உணர்ந்தவன் துக்கத்தில் அழுங்குவதில்லை. இதுவே விசுத்திமார்க்கம்" (த.275) என்று அறநூல் அறிவுறுத்துகிறது. இந்நெறியைப் பின்பற்றினால் நிருவாணப்பேறு கிட்டும் உண்மையை,

> "இந்த உலகம் அரசனுடைய அலங்கரிக்கப்பெற்ற தேர்போல் ஜொலிப்பதை வந்து பார்! ஞானிகளுக்கு இதில் பற்றில்லை" (த.169).

என்ற கருத்துக்கள் எடுத்துரைக்கின்றன. உலக நிலையாமையை அறிந்தவர் ஞானியாகவும் போற்றப்படுகின்றார்.

## வாழ்க்கை நிலையாமை

நில்லா உலகில் வாழும் வாழ்க்கையும் நிலையற்றது. வாழ்வில் கிடைத்த பெற்றோர்களும் மக்களும் உறவுகளும் இறக்கும்பொழுது உடன் வருவதில்லை என்பதை,

> "என் பிள்ளைகள், என் செல்வம் என்ற சிந்தனையால் மூடன் துயரப்படுகிறான். அவனே அவனுக்குச் சொந்தமில்லை. பிள்ளைகளும் தனமும் எப்படிச் சொந்தமாகும்" (த.62)

எனும் மொழிகளால் அறியலாம். இக்கருத்துக்கள் வள்ளுவத்தில் காணப் படவில்லை.

## யாக்கை நிலையாமை

மக்களின் யாக்கை முற்பிறவியில் செய்த வினையின் பயனாக வந்தது. மீண்டும் வினை செய்வதற்கு ஏதுவானது. மூப்பு, சாக்காடு, நோய், கவலை போன்றவைகளுக்கு இருப்பிடமானது. துன்பம் பயக்கும் நிலையற்ற யாக்கையை,

> " இந்த உடலாகிய வண்ணம் தீட்டிய பொம்மையைப் பார்! இது புண்கள் நிறைந்தது. எலும்புகளாலும் சதையாலும் கோத்து வைக்கப்பட்டது. நோய்க்கு இடமானது. பல எண்ணங்கள் *நிறைந்துள்ளது. ஆனால் நிலையில்லாதது*" (த.145)

என்று புத்தர் இழித்துக்கூறிப் பற்றினைக் களைய வேண்டுகிறார்.

உடலை வர்ணம் தீட்டிய பொம்மை என்பதன் வாயிலாக உயிர் வாழும் உருவங்கள் யாவும் ஆன்மா அற்றவை என்பதையும் புலப்படுத்தியுள்ளார்.

அவ்வாறே இவ்வுடல் நலிந்து தேய்வது, நோய்களின் கூடு, மிகவும் நொய்மையானது, இந்த அசுத்தக் குவியல் உடைந்து சிதறிப் போகும் (த. 146). மூப்படைந்து அழியும் இயல்புடையது. ஆதலால் யாக்கை என்பது நிலைபேறு உடையதன்று. பலஇன்னல்களுக்குட்பட்டு மேனி தளர்ந்து நோய்வாய்ப் பட்டு கூனிக்குறுகி, நரை, திரைபடர்ந்து இறுதியில் காலனுக்கு உடைமையாகும் தன்மையுடையது.

யாக்கை நிலையாமையை வள்ளுவரும் விளக்குகிறார்.

> 'நெருந லுளனொருவன் இன்றில்லை' (குறள். 336)

ஆதலால் உலக உயிர்களுக்குச் சாக்காடு உறங்குவது போன்றது (குறள். 339), உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு கூட்டுக்கும் பறவைக்கும் உள்ள தொடர்பைப் போன்றது (குறள். 338). ஆகையால் இந்த உலகில் வாழும் பொழுதே செய்யத்தக்க நல்லறங்களைச் செய்தல் நல்லது. தூங்குவதற்கு முன் கடமையைச் செய்துமுடித்தல் போன்று, வாழும் பொழுதே அறத்தைச் செய்து உயரவேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

பிற சமயத்தாரும் யாக்கையை,

> "பொய்யானதே குடிகொண்டது,

புழுவானதே நெளிகின்றது,
சையோகமே விளைகின்றது,
சவமாகி மேல் விழுகின்றது"[1]

என்று பாடியிருப்பது நோக்கற்குரியது. நிலையாமையைச் சொல்வதே நிலை யானதைச் செய் என்பதற்கே. அதனால் உயிருள்ளபோதே இந்த உடம்பைக் கொண்டு நிருவாணப்பேற்றைத் தேடிக்கொள்ள வேண்டும்.

## செல்வ நிலையாமை :

இவ்வுலகில் இன்பம் பயக்கும் பொன், பொருள் போன்ற செல்வங்களை எல்லாம் தமதென்று உரிமை பாராட்டும் மானிடர்கள் அறியாமை உடையவர்கள். ஏனெனில்,

"உறங்கிக்கொண்டிருக்கையில் பெருவெள்ளம் வந்து
கிராமத்தையே அடித்துக்கொண்டு போய்விடுகிறது. அதுபோல
தன்மக்கள், பசுக்கள் முதலிய செல்வாங்களில் மகிழ்ந்து
மயக்கத்தில் உள்ள மனிதனை எமன் வந்து அடித்தக்கொண்டு
போகிறான்" (த.285).

இந்த உண்மையைத் தெளிந்து நிருவாணப்பேற்றிற்குரிய வழியில் எதிர்ப்படும் பற்று, வேட்கை போன்ற தடைகளை நீக்கவேண்டும் என்கிறது தம்மபதம்.

செல்வ நிலையாமையை வள்ளுவர்,

"கூஃத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று" (குறள். 332)

"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்" (குறள். 333)

என்ற குறட்பாக்களில் விளக்குகிறார். நிலையற்ற செல்வத் தைக்கொண்டு நிலையான அறங்களைச் செய்யவேண்டும் என்பது வள்ளுவர் கொள்கை.

## நற்கடைப்பிடி

"கருத்துடைமை, உடலைப்பற்றியும் உணர்ச்சி பற்றியும், உள்ளத்தைப் பற்றியும், உலக இயற்கை பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து, ஆராய்ந்து உண்மையை உணர்ந்து இடைவிடாது போற்றுதல். வனத்திலோ,

1. அருணாசல சதகம், 77.

மரத்தடியிலோ, ஏகாந்தமான ஓரிடத்தில் அமர்ந்து ஒருவன் தன் உடலையும் பிறர் உடல்களையும் பற்றிச் சிந்தித்து உண்மையை அறியமுடியும். பின்னர் உண்மையான ஞானத்தை அடைவதற்குரிய ஏழு கருவிகளையும் பயன்படுத்திக் கொள்வான். இவைகளால் ஞானமும் விடுதலையும் சித்திக்கும்.''[1]

## கருத்துடைமை

நற்கடைப்பிடியின் நாட்டமுடையவர் கருத்துடையவராவர். இவர்கள், "இன்ப, துன்பங்களில் அலட்சியமுடையவராகவும், செயல்கள் ஒடுங்கிய பிறவா நிலையாகிய நிருவாண நிலையை அறிந்தவராகவும், பந்தங்கள் யாவற்றையும் அறுத்துக்கொண்டவராகவும், நன்மை தீமை களுக்குரிய எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் முடிவுகட்டியவராவும் ஆசைகள் யாவற்றையும் அகற்றியவராகவும் இருப்பர்'' (த.97). நன்மை, தீமைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பதால் ஞானியர் என்றும் அழைக்கப்படுவர் (த.254). இவர்கள் இல்வாழ்வை விடுத்துச்செலும் சிறப்பைப் புத்தர் பெருமான் பின்வரும் உவமையின் வாயிலாக விளக்கியுள்ளார்.

> ''அன்னங்கள் கதிரவன் வழியில் செல்கின்றன. அவை
> தங்களுடைய அற்புத ஆற்றலால் ஆகாயவழியில் செல்கின்றன.
> மாரனையும் அவன் படைகளையும் வென்ற ஞானிகள் அவ்வாறே
> இந்த உலகை விட்டு வெளியே செல்கின்றார்கள்'' (த.173)

இவ்வாறு இருள்வழியை நீக்கி, ஒளியின் நெறியில் சென்றவர்கள் விரும்புவதற்கு அரிய விவேகத்தை நாடித்துறவு வாழ்க்கையின் ஏகாந்த இன்பத்தில் திளைக்க முயல்வர் (த.87). அதற்காக ஞானத்திற்கு உரிய சாமர்த்தியம், ஞாபகம், மனனம், திரிபிடகசாத்திர ஆராய்ச்சி, ஆனந்தம், சாந்தி, சமதிருஷ்டி என்ற ஏழு அங்கங்களிலும் சித்தத்தை நிலை நிறுத்துவர். அதனால் இந்த உலகிலேயே நிருவாண மோட்சத்தை அடைவர் (த.89). கருத்துடையவர் இறப்பதில்லை (த.21) உண்மையான ஞானத்தின் மூலம் விடுதலை பெற்றவனுடைய மனம் சாந்தியாயிருக்கும். சொல் சாந்தியாயிருக்கும். செயலும் சாந்தியாயிருக்கும் (த.96). இவர்களைக் கண்டு தேவர்களும் பொறாமைப்படுவார்கள் (த.94)

## ஞானியர் சிறப்பு

நிலையான பாறை புயல் காற்றுக்கு அசையாமல் இருப்பது போல்

1. ப. ராமஸ்வாமி, தம்மபதம், ப. 17.

ஞானியர் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் அசைவதில்லை (த.81). ஆழமாயும், தெளிவாயும், அமைதியாயுமுள்ள ஏரியைப் போல் சாந்தியடைகிறார்கள் (த.82). ஆதலால் சுகமோ துக்கமோ வந்தால் ஞானியர் எழுச்சி அடைவதுமில்லை. அயர்வு கொள்வதுமில்லை (த.83). உடலை அடக்கி, நாவை அடக்கி, மனதையும் அடக்கிய ஞானியர் மறு உலகிலும் சுகமடைகிறார்கள்.

இவற்றால் கருத்துடைய ஞானியர், இம்மையிலும் நிருவாண மோட்சத்தை அடைவர். மறுமையிலும் இன்பமடைவர் என்பது தெளிவு.

## நல்லமைதி

“இதை நற்தியானம் என்றும் கூறுவர். இது உள்ளத்தை ஒரு நிலைப்படுத்துதல் எனலாம். இதனால் உண்மை அறிவைத் தடுக்கும் ஆசை, துவேசம் முதலிய தடைகள் நீங்கும். உண்மை அமைதி பெறும். விருப்பு வெறுப்புக்களற்ற சித்த நிறைவு ஏற்படும். பின்னர் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் அப்பாற்பட்ட விடுதலையான பேரின்ப நிலை ஏற்படும்”[1]

மெய்ப்பொருள் காண முயல்பவர்கள் தியானம் செய்து சமாதி அடைதல் வேண்டும். மனதை ஒருநிலைப்படுத்துதல் தியானம் என்பதாகும். மனதை இவ்வாறு ஒருமுகப்படுத்துதல் மூலம் சத்திய தரிசனம் பெறலாம் என்னும் கொள்கையைத் தம்மபதம் ஏற்பதாகப் புலப்படவில்லை. தீவிர முயற்சியும் தளராத உறுதியுமுடைய அறிவாளர்களால் மட்டுமே தியானம் செய்ய இயலும் (த.23). இத்தகையோர் பிறர் கழித்து நீக்கிய ஆடைகளை அணிந்து, உடல் மெலிந்து, நரம்புகள் தெரியும்படி உலர்ந்து வனத்தில் சொந்தமாகத் தியானம் செய்வர் (த.393). இவ்வாறு முறையாகத் தியானம் செய்பவர்களின் மனச்சீர்கேடு நீங்கும். மனச்சீர்கேட்டுக்குக் காரணம் அதில் உண்டாகும் மனமாற்றங்களாகும்.

தியானத்தில் வெற்றி பெற விரும்புவோர் புறப்பொருளை விடுத்து அகப்பொருளை உணர்தல் வேண்டும். “பிறப்பிற்குக் காரணமாகிய பற்று தாயாகும். நான் என்னும் அகங்காரத்துக்கு உவமை தந்தையாகும். விடுதலை, சத்தியம் ஆகிய இரு கொள்கைகளையும் எதிர்க்கும் மன விகாரங்களே இரண்டு மன்னர்களாகும். ஐம்புலன்கள் செல்லும் பாதையே தியானத்துக்குத் தடையாகும். இவற்றை எல்லாம் நீக்குபவனே பிராமணன்

---

1. ப. ராமஸ்வாமி, மு.நூ., ப. 97.

ஆவான். அவன் செய்யும் தியானம் துக்கமற்றதாகும்."[1] இதுவே மேற்கூறிய புத்த போதனையின் விளக்கமாகும். இதனால், மனதை ஒரு நிலைப்படுத்துதல் தியானமன்று, மாறாகத் துன்பங்களுக்கெல்லாம் பிறப்பிடமாகிய பற்றையும் அகங்காரத்தையும் அழித்து, ஐம்புலன்களையும் அடக்கி ஆள்வதே தியானம் என்பது தெளிவு.

தியானத்தின் நோக்கம் பற்றி புத்தர், தருமம், சங்கம், உடல்நலம், அகிம்சை என ஆறு சுலோகங்களில் அழுத்தமாகக் கூறியுள்ளார். இதனை,

"கௌதமருடைய சீடர்கள் எப்போதும் கருத்துடன்
விழிப்பாயிருக்கிறார்கள். இரவும் பகலும் எப்போதும்
அவர்களுடைய சிந்தனையெல்லாம் பௌத்த தருமத்தைப்
பற்றியவையே. அவர்களுடைய சிந்தனையெல்லாம் பௌத்த
சங்கத்தைப் பற்றியவையே. அவர்களுடைய சிந்தனையெல்லாம்
உடலின் நன்மையைப் பற்றியவையே. அவர்கள் மனம்
அகிம்சையைப் பற்றியே சிந்தித்திருக்கும். அவர்கள் மனம்
தியானத்திலேயே திளைத்திருக்கும்" (த.294–299)

என்ற புத்தரின் பொன்னுரைகளால் அறியலாம்.

இவ்வாறு தனியே வாழ்ந்து, மடிமையை ஒழித்துத் தானே தன்னை அடக்கி வைத்துக் கொண்டால் ஆசைகளற்ற நிலையில் ஆனந்தமடையலாம். புத்தரின் போதனைகளைக் கேட்டல் என்பது அற நெறிகளைச் செவிமடுத்தல் அல்ல. அதன் மறைபொருளைச் சிந்தனை செய்தலாகும். மனதில் தீய சிந்தனைகள் எழும்பொழுது அதற்கு அடிப்படைக் காரணம் யாதெனச் சிந்தனை செய்து உண்மை விளக்கம் பெறுதல் தியானத்தின் ஒரு கூறாகும். புத்தர் தன்னுடைய போதனைகளைத் தீர ஆராய்ந்து கண்மூடித்தனமாக ஏற்க வேண்டாம் என்று அறிவுறுத்துகிறார். இவ்வாறு ஆராய்வதற்குத் துணை செய்வது நம்மிடம் மறைந்திருக்கும் ஆற்றலாகும். இதனை விவேகசக்தி எனத் தம்மபதம் குறிப்பிடுகிறது (த. 75).

மந்திரம் ஓதல் பற்றிப் புத்தர் வலியுறுத்தவில்லை. ஆனால் மந்திரத்தைப் பாராயணம் செய்ய வேண்டியதன் இன்றியமையாமை,

"மந்திரத்தின் குறை பாராயணம் செய்யாமை

1. நா. செல்லப்பா, திருமந்திரமும் தம்மபதமும், ப. 96.

வீட்டின் குறை பழுது பாராமை
அழகின் குறை சிரத்தையின்மை
காவலாளியின் குறை கவனக்குறைவு" (த. 239)

என்று பல உவமைகளின் வாயிலாக விளக்கப்பட்டுள்ளது. இறைவனைப் பற்றிய செய்திகளைக் கூறாத புத்தர் பெருமான் மந்திரம் ஓதுதலை ஆதரித்தல், வலியுறுத்தல் குறிப்பிடத்தக்கது.

தியான சமாதியே ஆன்மீக விடுதலைக்கு அடிப்படையாகும். ஆதலால் கருத்தோடு, முறைப்படி தியானம் செய்பவன் எல்லையற்ற இன்பமடைவான் (த.27). அதோடு பாவம், மரணம் என்னும் மாரனுடைய பந்தங்கள் நீங்கும் (த.274). அவன் பிறவியாகிய முட்களைக் களைந்தெறிவான். இவ்வுடம்பே அவன் எடுக்க நேர்ந்த இறுதி உடம்பாகும் (த.369). மேலும் உடலில் அமைதியும், பேச்சில் அமைதியும், உள்ளத்தில் அமைதியும் நிலவி உலகின் ஆசைத்தூண்டுதல்களை ஒழித்து உபசாந்தி பெறுவான் (த.376). தியானம் செய்வாரின் மேன்மையை,

"தீயொழுக்கத்துடன் அடக்கமில்லாமல் ஒருவன் நூறு வருடம் வாழ்வதை விட நல்லொழுக்கத்துடன் தியானம் செய்து வரும் ஒருவன் ஒருநாள் வாழ்வதே மேலானது" (த.108)

என்று அறநூல் சிறப்பிக்கின்றது.

## மும்மணிகள்

"நான்கு வாய்மைகளையும் ஏற்றுக் கொண்டவனே பௌத்த தருமத்தைப் பின்பற்ற முடியும். இந்தத் தருமத்தை மேற்கொள்பவன் தனியாக நின்று எதிலும் வெற்றிபெற முடியாது என்பதால் மூன்று புகலிடங்கள் – சரணங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. புத்தர், பௌத்த அடியார்களின் சங்கம், பௌத்த தருமம் ஆகிய மும்மணிகளே அந்தச் சரணங்கள்"[1] உலக வாழ்வில் கண்டதற்கெல்லாம் அச்சப்பட்ட மனிதர்கள் புத்தர் காலத்திலும் இருந்தனர். அவர்கள், மலைகளையும், வனங்களையும் புனிதமான மரங்களையும் புண்ணியதலங்களையும் புகலிடமாகக் கொண்டார்கள்" (த.186). இந்த அடைக்கலம் நல்ல பாதுகாப்பு அல்ல. இந்த அடைக்கலத்தால் மனிதன் வேதனைகளிலிருந்து விடுதலை பெறுவதில்லை (த.187). ஆனால் புத்தரையும் சங்கத்தையும் தருமத்தையும்

1. ப. ராமஸ்வாமி, தம்மபதம், ப. 92.

சரணமடைதலின் நான்கு உன்னத உண்மைகளைத் தெளிந்த ஞானத்தால் தேர்ந்து கொள்கிறான் (த.188). இதுவே பாதுகாப்பான புகழிடம். இதுவே தலைசிறந்த சரணம்.

## புத்தர்

கடவுளைப் பற்றிக் கவலைப்படாத புத்தரையே கடவுளாக உயர்த்திப் பௌத்தர்கள் வணங்கினர். "வரலாற்று மனிதராக விளங்கிய புத்தரைப் பரம்பொருள் என்றும், உலகில் நன்மை நலியும்பொழுது நல்லோரைக் காக்கவும், அல்லோரைத் திருத்தவும் புத்தர் அவதாரம் எடுப்பார் என்றும் நம்பினர்"[1] இதற்குக் காரணம், தீமைகளை எல்லாம் வென்று துக்க வெள்ளத்தைத் தாண்டி கரையேறிப் புத்த நிலையை அடைந்ததாகும். புத்த நிலையை அடைந்தவர்கள் பலர் என்பதை, 'இறந்த காலத்து எண்ணில் புத்தர்களும்'[2] என்ற செய்தியால் அறியலாம். "கௌதம புத்தருக்கு முன் ஆறு புத்தர்கள் இருந்தனர். புத்த வம்சம் என்ற நூலில் இருபத்து நான்கு புத்தர்களைப் பற்றி குறிப்பு காணப்படுகிறது"[3]. ஆதலால் புத்தர் என்பது இயற்பெயரன்று, அடைந்த பதவியின் பெயராகும் என்பதை,

> "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல்
> அரிது அரிது மானிட வாழ்க்கை
> அரிது அரிது நல்லறம் கேட்டல்
> அரிது அரிது புத்தநிலை அடைதல்" (த.180)

என்று தம்மபதம் புலப்படுத்தப்படுகிறது. புத்தர்களின் தோற்றம் நன்மையளிக்கும்.

## புத்த சங்கம்

சங்கம் என்பது பௌத்த பிட்சுக்களின் கூட்டம். சாதி வேறுபாடின்றிப் பிக்குகள் சங்கத்தில் சேர்ந்தனர். "இருபது ஆண்டு நிறைவு எய்தியவர்கள் நேராகவோ, துறவியாகவோ, சங்கத்தில் சேர்ந்து விடலாம். தொத்து நோய்களால் பீடிக்கப் பெறாதிருத்தல், கடனில்லா திருத்தல், அரச சேவையில் ஈடுபடாதிருத்தல், தாய் தந்தையரது இசைவு பெறல் முதலியவை துறவியாவதற்கு நடைமுறை விதிகளாக அமைந்தன"[4]

1. சோ.ந. கந்தசாமி, மு.நூ., ப. 2.
2. மணி., 30:14.
3. சோ.ந. கந்தசாமி, மு.நூ., ப. 2.
4. ந. சுப்புரெட்டியார், மு.நூ., ப. 2.

இந்த அடைக்கலத்தை அடைந்த பிறகு மனிதன் எல்லா வேதனைகளிலிருந்தும் விடுபட்டு நலம் பெறுவான் என்பதை,

"புத்தர்களின் தோற்றம் நன்மையளிக்கும்
அவர்களின் தரும உபதேசம் நன்மையளிக்கும்
பௌத்த சங்கத்தில் சேர்தல் நன்மையளிக்கும்
சங்கத்தில் சேர்ந்தவர்களின் தவமும் நன்மையளிக்கும்" (த.192)

என்ற அறநெறி புலப்படுத்துகிறது. இதனால், மும்மணிகளைச் சரணடைந்து மெய்யறிவும் உள்ளுணர்வும் பெற்று, நிருவாண நிலை பெறுதலே துன்ப நீக்கத்திற்கு வழியாகும் என்பது தெளிவு.

## பௌத்த சீடர்

"பௌத்த தருமத்தில் பயிற்சி பெறும் சீடர்களின் தகுதிக்கேற்ப நான்கு படிகள் உண்டு. முதற்படியில் உள்ளவன் சரோதமன்னன். இரண்டாம் படியில் உள்ளவன் சக்ரதகாமி. மூன்றாம் படியில் உள்ளவன் அநாகாமி. நான்காம் படியில் உள்ளவன் அருகத்து. இங்கு சீடன் என்றது கடைசியிலுள்ள அருகத்துப் படியை அடைந்தவனைக் குறிக்கும். அருகத்து சீடன் முக்தனுக்கு நிகரானவன்"[1] இத்தகு பயிற்சியுள்ள சீடன் இந்த உலகையும், தேவர்களுடைய எமலோகத்தையும் வெற்றி கொள்வான். பழக்கமுள்ள பூக்காரன் மாலைதொடுக்க நல்ல மலர்களைத் தேர்ந்தெடுப்பது போல நல்ல அறநெறிகளைத் தேர்ந்து அவற்றின் வழி செயல்படுவான் (த.45). அதனால் வழியில் கொட்டிய குப்பைக் குவியலிலிருந்து மனத்திற்கினிய மணத்துடன் தாமரை மலர்வது போலக் குருட்டு மக்களிடையே மெய்ஞ்ஞானச் சுடரான புத்தரின் சீடன் ஞானத்தால் ஒளிவீசுகிறான். (த.58,59)

கௌதமருடைய சீடர்கள் எப்பொழுதும் கருத்துடன் விழிப்பாயிருப்பர். இரவும் பகலும் அவர்களுடைய சிந்தனை, புத்தர், தருமம், சங்கம் ஆகியவைகளைப் பற்றியே இருக்கும் (த.294, 295, 296). பூரண ஞானம் பெற்ற சீடன் ஆசைகள் அனைத்தையும் அழிப்பதில் இன்புறுகிறான். வானுலக இன்பங்கள் கூட அவனுக்கு உவப்பானவை அல்ல.

---

1. ப. ராமஸ்வாமி, தம்மபதம், ப. 21.

"புத்தருக்கு முன் வேதநெறியினர் வருணாசிரம தருமங்களையும் சாதி பேதங்களையும் வளர்த்து வந்தனர். மனிதன் ஆற்றும் செயல்களே உயர்வு தாழ்விற்குக் காரணமாதலின் பிறந்த குலத்தினால் மேல், கீழ் என்று இனப்பாகுபாடு செய்யும் வைதீக வழக்கத்தைப் புத்தர் புறக்கணித்தார். உலகிலேயே முதன் முதலாகச் சமுதாய சமத்துவத்தினைப் போதித்த பெரியார் புத்தர்"[1] அதனால் ஒருவன் பிறப்பினாலோ அல்லது வெளிவேடங்களின்ாலோ பிராமணன் ஆவ தில்லை. பற்று, பாசங்களை நீக்கி உயர்ந்த நான்கு உண்மைகளையும் தெளிந்து செயல்படுபவனே பிராமணன் ஆவான். இதனை,

> "ஒருவன் பிராமணன் ஆவது சடைத்தலையால் அன்று தன் கோத்திரத்தால் அன்று. பிறப்பினாலும் அன்று. எவனிடம் சத்தியமும் தர்மமும் நிலைத்துள்ளனவோ அவனே பிராமணன்"
> (த.392)

என்ற பொன்மொழிகளால் அறியலாம். இவ்வாறு பிராமணர் என்ற சொல்லிற்குப் புதுப்பொருளும் விளக்கமும் நல்கி, சத்தியமும் தருமமும் உடைய யாவரும் அந்நிலையைப் பெறலாம் என்று புத்தர் வழி காட்டி யுள்ளார். ஆதலால் நிருவாணத்தை விரும்புபவர் யாவராயினும் பிராமண நிலை அடைதல் வேண்டும் என்பது தெளிவு.

தாயைக் கொண்டோ, குலத்தைக் கொண்டோ ஒருவன் பிராமணன் ஆகிவிட முடியாது எனக்கூறிய புத்தர், பிராமண நிலையை அடைவதற்குரிய வழிகளையும் வகுத்துள்ளார்.

> "தான் ஒரு குற்றம் செய்யாதிருந்தும் தனக்குக் கிடைக்கும் வசைகளையும் அடிகளையும் சிறைத் தண்டனைகளையும் பொறுமையோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்" (த.397)

> "பகைமை உணர்ச்சியுள்ளவர் நடுவே பகைமை மற்றும் தடியெடுத்தார் நடுவே சாந்தியுடனும், ஆசையுடையவர் நடுவே ஆசையற்றும் வாழ்தல் வேண்டும்" (த.401)

> "மானிடரின் போகங்களையும் தெய்வீகமான போகங்களையும் உதறி விட்டுப் பற்றுக்களிலிருந்து விடுதலை பெற வேண்டும்"
> (த.415)

1. சோ.ந. கந்தசாமி, பௌத்தம், ப. 155.

மேற்கூறிய நெறிநின்ற ஞானமுடையவன், பெருந்தன்மை யுள்ளவன், தீரன் பாசமற்றவன், மரணத்தை வென்றவன், முன் பிறவிகளை அறிந்தவன், கல்வியில் பூர்த்தி பெற்றவன், போதியடைந்தவன், நிறை வேற்ற வேண்டிய யாவற்றையும் நிறைவேற்றி முடித்தவன் யாவரும் பிராமணர்களே ஆவர்.

## புத்த தருமம்

அறத்தைப் பரப்புவதே புத்தர்களின் நோக்கமும் போதனையுமாகும் என்பதை,

> "நெடுங்காலம் துன்பத்தைத் தாங்கும் பொறுமையே
> முதன்மையான தவம், நிகரற்ற உயர்ந்த பதவி, நிருவாணமே
> என்று புத்தர்கள் கூறுகின்றனர்" (த.162)

என்ற தம்மபதக் கருத்துக்கள் புலப்படுத்துகின்றன. மேலும் நிந்தனையை ஒழித்தல், பிறரை வருத்தாமல் இருத்தல், அறத்திற்கு அடங்கியிருத்தல், நிதான உணவு, ஏகாந்தமாயிருந்து உயர்ந்த சிந்தனைகளில் ஒருமைப்பட்டிருத்தல், சகல பாவங்களையும் நீக்குதல், உள்ளத்தைச் சுத்தம் செய்தல் ஆகியனவும் புத்தரின் உபதேசங்களாகும்.

## நிருவாணம்

எல்லாச் சமயத்தார்களின் இறுதிக் குறிக்கோள் வீடு பேறு எய்தலாகும். வீடு பேற்றினை நிப்பாணம் என்றும் நிர்வாணம் என்றும் பௌத்தர் கூறுவர். இச்சொல்லிற்கு அவிந்து போதல், எரிந்தணைந்து போதல் என்ற எதிர்மறைவாய் பாட்டாலும், குளிர்தல், தண்ணென்றிருத்தல் என்று விதிமுறை வாய்பாட்டாலும் பொருள் விளக்கம் தருவர்"[1] நிருவாணம் என்பது அடைவதற்கு அரியதாகும். ஏனெனில் இந்த உலகம் அறியாமை நிறைந்தது. சிலரால் மட்டுமே விழிப்புற்று உண்மையை உணர முடியும். வலையிலிருந்து விடுபட்ட பறவை போலச் சிலர் மட்டுமே சுவர்க்கம் அடைகின்றனர் (த.174) என்று தம்மபதம் கூறுகிறது. "கருத்துடைமையே நிருவாண மோட்சத்திற்கு வழியாகும். மடிமையே மரணத்திற்கு வழியாகும்" (த.21). இதை அறிந்து எப்பொழுதும் தீவிர முயற்சியுடனும், தளராத உறுதியுடனும், தியானத்துடனும் இருக்கும் அறிவாளர்கள் விடுதலைப் பேறும் ஆனந்தமுமாகிய நிருவாணத்தை அடைகின்றனர் (த.23).

---

1. சோ. ந. கந்தசாமி, ப. 2,

நிருவாணத்தின் முதற்படியாகிய சோதாபத்திப் பயனை அடைந்தவர், பாருலகை ஒருகுடையின் கீழ் ஆள்வதை விட, சுவர்க்கம் புகுவதை விட, எல்லா உலகங் ்ரின் மீதும் ஆதிக்கம் செலுத்துவதை விட மேலான பதவியை அடைவர் (த.176). இப்பதவியாகிய,

"நிருவாணப் பேறு பேரின்பத்தைக் கொடுக்கும்" (த.201,202)

என்று புத்தர் புகன்றுள்ளார்.

## நிருவாணத்தின் வழி

"ஒருவன் அறியாமையை வென்று ஆசையை ஒழித்து ஞானம் பெறும் போது நிருவாண நிலை அடைகின்றான். அது இன்ப, துன்பமற்ற சமநிலையாகும். அதை மனத்தால் உருவகப்படுத்த இயலாது. அதுவே பிறவிப் பிணியிலிருந்து நீங்கிய வீடு. அதன் தன்மையை விளக்கப் புத்தர் மறுத்தார். ஆனால் தமது வழியைப் பின்பற்றினால் இந்தப் பிறவியிலேயே அந்த நிலை கிடைக்கும் என்று உறுதி கூறுகிறார்."[1] அவ்வாறே தம்மபதமும், "ஞானத்திற்கு உரிய ஏழு அங்கங்களில் சித்தத்தை நிலை நிறுத்தி, எதிலும் பற்று வைக்காமல், ஆசைகளை அடக்கி வென்று, எவர்கள் மாசற்ற ஒளிமயமாய்த் திகழ்கிறார்களோ அவர்கள் இந்த உலகிலேயே நிருவாண மோட்சத்தை அடைகிறார்கள்" (த.89) என்று எடுத்துரைக்கிறது.

உலக வாழ்வில் இருக்கும் போதே, ஒருவர் நிருவாணமடைய முடியும். ஆசை, துவேசம், அறியாமை என்னும் மலங்களை அறுத்து, 'நான்' 'எனது' என்ற பற்றற்று எல்லா உயிர்களிடத்தும் தாயன்பு கொண்டு வாழும் நிலை அது. விழிப்புடன் விளங்கி அல்லும் பகலும் தம்மை நல்வழியிற் பழக்கி, நிருவாண நாட்டத்தில் சிந்தையைச் செலுத்தியவர்களின் ஆசவங்கள் (காமம், வெகுளி, மயக்கம்) அழிந்து விடுகின்றன (த.224).

## பரிநிருவாணம்

ஆசைகள் அவிந்து, அறியாமை அகன்ற நிலையில் விளைவது நிருவாணம். இப்பிறவியிலேயே, இவ்வுலகிலேயே நிருவாண இன்பம் கிட்டும். இந்த நிலையில் பூத உடலை நீத்துப் பிறவியினின்றும் விடுபட்ட பேரின்பமே பரிநிருவாணம். "போதி ஞானம் பெற்ற புத்தர் பெருமான் தம்

1. கலைக்களஞ்சியம், 8 : 429.

முப்பத்தைந்தாம் அகவை முதலாக இறுதிக்காலம் வரையிலும் நிருவாண நிலையில் திகழ்ந்தார். இன்பத்தில் திளைத்தார். எண்பதாம் அகவையில் இவ்வுலகை நீத்துப் பரிநிருவாணம் பெற்றார்."[1] இந்நிலையைத் தம்மபதம்,

'நிருவாணமே பரம சுகம்' (த.202)

என்று மொழிகிறது. இதனை,

'பிறவி பூத்த பெற்றி'[2]

'பிறவார் உறுவது பெரும்பேரின்பம்'[3]

என்று சாத்தனாரும் சுட்டியுள்ளார். "அவா, சினம், மருள் இவற்றின் விளைவான பிறவித்துயர் யாவும் ஒழிந்த நிலையே நிர்வாணமாகும் இறுதிப் பேரின்பமாகும்"[4] என்ற கருத்தும் நோக்கற்குரியது.

## துறவறம்

"துறவு என்பது ஒரு பெருநிலை. தன்னலப்பற்று அற்ற நிலை. பிறர் நலத்தொண்டுக்குத் தம்மை ஆளாக்கிக் கொண்ட நிலை. விருப்பு வெறுப்பு அற்றுப்போன வியன்நிலை. மனத்துறவே துறவெனக் கண்டது தமிழுலகு."[5] அதனால் வீடுபேறு அடைவதற்குத் துறவுநெறியே தக்கநெறி. இல்லற வாழ்க்கையில் இனிது பயின்ற அறப்பணிகளின் துணையால் துறவறத்தையும் மேற்கொண்டு, தெய்வீகநெறி நின்று, இறைப்பணிகள் புரிந்து நிலையான பேரின்பத்தை அடைதல் வேண்டும். இல்லறத்தில் தொடங்கிய அறப்பணிகள் துறவறத்தில் நிறைவெய்திப் பிறவாப் போரின்பத்தை நல்கும். ஆதலால் மண்ணுலக வீட்டினைக் (இல்லம்) கொண்டே, பேரின்பமாகிய வீட்டினைப் பெறுதல் இறைமை. இதுவே அறநூலார் மூவரும் வகுத்துக்காட்டும் வாழ்வியல் நெறியாகும்.

## துறவறத்தின் பிரிவுகள்

மணவாத்துறவு, மணந்ததுறவு என்று துறவறத்தில் இருவகைப் பிரிவுகள் உள்ளன. இல்லறவாழ்க்கையில் ஈடுபடாது துறவற வாழ்க்கையை

---

1. சோ.ந. கந்தசாமி, குறள் கூறும் உறுதிப்பொருள், ப. 218.
2. மணி 26: 59.
3. மேலது, 2: 68.
4. ஆனந்த குமாரஸ்வாமி, கோதமபுத்தர், ப. 11.
5. இரா. இளங்குமரன், நல்ல துறவராக, ப. 3.

மேற்கொண்டு சிலர் வீடு பேறடைவர். இது மணவாத் துறவாகும். மணவாத்துறவிற்குச் சான்றாக இளங்கோவடிகளார், கவுந்தியடிகளார் மேற்கொண்ட துறவைக் கூறலாம். ஆனால் மணவாத்துறவைப்பற்றி அறநூல்கள் விதந்துரைக்கவில்லை. அவ்வாறே மறுத்துரைக்கவுமில்லை. ஆதலால் இது மணவத்துறவை ஏற்றுக் கொள்வதாகவும், மணந்த துறவையே வற்புறத்துவதாகவும் பொருள்படுகிறது.

ஏனெனில் இல்லறத்தின் மூலம் ஒருவன் பேரின்ப நிலையை எய்தமுடியாது. இக்கருத்துடையவர்கள் ஒரே இடத்தில் ஒய்ந்து கிடப்பதில்லை. நீர்நிலையை விட்டுப் பறந்துசெல்லும் அன்னங்கள் போல் அவர்கள் இல்வாழ்வை விட்டுப் போகின்றனர் (த.91). வீட்டை விட்டு விரும்புவதற்கு அரிய விவேகத்தை நாடி வாழ்க்கையின் ஏகாந்த இன்பத்தில் அவர்கள் திளைப்பார்கள் என்று பௌத்தம் எடுத்துரைக்கிறது. இதனை,

> "நெறியொழுகும் துவிஜர்கள் இல்லறம் புரிந்து, தூயராய்,
> புலனடக்கிப் பின்னர் வானப்பிரஸ்த ஆசிரமம் அடைந்து
> தபோவனத்தில் காலம் கழிக்கக் கடவர்" (மனு.6:1)

என்ற மனு நெறியாலும் அறியலாம். இதனால் இல்லறத்திற்குப் பின் துறவு பாடியுள்ள வள்ளுவரும் மணந்த துறவையே வலியுறுத்துகிறார் என்பது தெளிவு. அதோடு அத்துறவறத்தார் பின்பற்றவேண்டிய நெறிமுறைகளையும் அடையும் பயன்களையும் எடுத்து மொழிந்துள்ளார்.

## துறவறத்திற்கு ஏற்ற பருவம்

இல்லற வாழ்க்கையின் வழிவந்த துறவற வாழ்க்கையே, பல்லாற்றானும் விழுமியது என்பது அறநூலார் கொள்கை. ஆதலால்,

> "தன் உடலில் நரையும், தன் பிள்ளை வயிற்றில் பிறக்கும்
> பிள்ளையும் பார்க்கின்ற இல்வாழ்வான் அந்த வயதில்
> வானப்பிரஸ்தம் மேற்கொள்ள வேண்டும்" (மனு.6:2)

என்று துறவறத்திற்கு மனு இலக்கணம் வகுத்துள்ளார். இதை ஏற்றுக் கொண்ட தொல்காப்பியரும்,

> "காமச்சான்ற கடைகோட் காலை
> ஏமம்சான்ற மக்களொடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"[1]

என்று கூறியுள்ளார். இல்லற இன்பங்களைத் துய்த்தபின் துறவறத்தை மேற்கொள்ளலாம். ஏனெனில் இல்லறத்தில் செழுமை கண்டோர, துறவறத்தின் பெருமை அடைதல் இயல்பு என்பது மனுவின் துணுபு. இத்துணிபுக்கு மாமன்னன் தசரதனின் வாழ்க்கை மாண்பூட்டுகிறது என்பதை,

"....... இராமனுக் கரசை நல்கிப்
பேதைமைத்தாய் வரும் பிறப்பை நீக்குவான்
மாதம் தொடங்கிய வனத்தை ஒண்ணு வேற்கு
யாது நும்கருத்தென இறைகூறினான்"[2]

என்ற கம்பர் பாடலால் அறியலாம். தசரத மன்னன், அரசபாரத்தைத் துறந்து தவம் புரிய முனைந்த நிலை தருமசாத்திர நெறியில் நின்றதே யாகும். அதனால் காமம் சான்ற கடைப்பருவமே துறவறத்திற்கு ஏற்ற பருவம் என்று விளம்பலாம். இக்கடைப்பருவத்திலும் மனிதன் இறைப் பணிகளையும் அறப்பணிகளையும் ஆற்றவேண்டும் என்பதே ஆன்றோர் கொள்கை.

## துறவியர் தோற்றப்பொலிவு

துறவறத்தார்க்குத் தவக்கோலங்களாகிய புறக்கோலங்களை மனு வற்புறுத்தியுள்ளார். புறக்கோலங்கள் என்பவை சடைமுடியுடன் இருப்பதும் மொட்டையடித்துக் கொள்வதுமாகும். மரவுரி தரித்த துறவியர் சடை, மீசை, தாடி, நகம் இவற்றை வளர்த்தல் வேண்டும் (மனு.6:6) என்று கூறிய மனு,

"முடி, நகம், மீசை, இவையகற்றி, தண்டு, கமண்டலம், திரிதண்டம்,
தருப்பை, இவற்றைத் தரித்து யாரையும் வருத்தாமல், புலன்
வெற்றிகொண்டு எங்கும் நில்லாமல் யாண்டும் திரிதல்
வேண்டும்" (மனு.6:52)

என்று வலியுறுத்துகிறார். ஆயினும் இப்புறக்கோலங்களே துறவியருக்கு அடையாளங்கள் என்று கருதக்கூடாது. துறவிகட்கு இக்கோலங்கள் துணைக்காரணங்கள் ஆகுமே அன்றி அடிப்படையாகமாட்டா. ஆதலால்,

1. தொல். பொருள். 190.
2. கம்ப. அயோத். 33.

> "துறவு வேடங்கள் மட்டும் ஒருவனைத் துறவியாக்குவது இல்லை. வேடங்களின்றியே உயிர்ப்பொதுமை உணர்வுடன் இருப்பதே சாலும்" (மனு.6:66)

எனக்கூறுவதன் வாயிலாகத் துறவோருக்குரிய நல்லொழுக் கத்தையும் மனு வெளிப்படுத்துகிறார் எனலாம். இக்கருத்துக்களுக்குப் புத்தரும் வள்ளுவரும் உடன்படுகின்றனர். இதனால் துறவோர் நெஞ்சம் ஐம்புலன்களை வெல்லும் ஆற்றல் உடையதாகத் திகழவேண்டும் என்பதை அறியலாம்.

## உடம்புநனி சுருங்கள்

உடலை வருத்துதல் அல்லது ஒறுத்தல் போன்ற செயல்களை விட நல்லறிவும் தன்னடக்கமும் சிறந்த பண்புகளாகும் என்று போற்றுபவர் புத்தர். அதனால் உடம்பை வருத்தும் கடுந்துறவுக்கொள்கையைப் பின்பற்றாது இரண்டிற்கும் இடைப்பட்ட நடுப்பாதைக் கொள்கையைத் தூண்டினார்.

துறவு மேற்கொண்டோர்க்குப் பிறவித் துன்பத்தைக் கொடுக்கும் சுமையாக உடம்பு விளங்குவதால் துறவியர் யாக்கையின்மீது பற்றுக் கொள்ளக்கூடாது. ஆதலால்,

> "மூவேளையும் நீராடி, தேவர், முனிவர், பிதுர் தர்ப்பணமும் இயற்றி மாத உபவாசம் இருந்து யாக்கையை ஒடுக்கவும்" (மனு.6:24)

என்று மனு கூறியுள்ளார். உடம்புநனி சுருங்கவேண்டுமானால் ஒருநாள் உண்ணாதிருந்து மறுநாள் மாலையிலோ, மூன்று நாட்கள் உண்ணாமல் நான்காம்நாள் மாலையிலோ உண்ணலாம். அன்றியும் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை காய்ச்சிய கஞ்சியை ஓரிருவேளைகளில் பருகலாம். எப்படியும் புலனிச்சையை அடக்கவேண்டும் (மன. 6:20) என்று தருமசாத்திரம் வலியுறுத்துகிறது.

பேரின்பத்தை நாடித் துறவறத்தை மேற்கொண்ட துறவியர் ஐம்புலன்களை அடக்குதல் இன்றியமையாதது. இதற்கு அடிப்படையாக அமைவது உடம்பு. யாக்கையின் ஒடுக்கமே புலன்களின் அடக்கமாதலால் துறவியருக்கு உடம்பு நனி சுருங்கல் வேண்டும் என வற்புத்துகிறது.

'அடல் வேண்டும் ஐந்தான் புலத்தை' (குறள். 343) என்றுகூறிய வள்ளுவர் பிறவித்துன்பத்தைப் போக்க முனைந்தவர்களுக்கு உடம்பும் மிகையாகும் என்பது,

"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பும் மிகை" (குறள். 345)

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்" (குறள். 356)

என்ற குறப்பாக்களில் கூறியிருத்தல் நோக்கற்குரியது.

**உணவு**

அன்பான இல்வாழ்வைத் துறந்துசென்றோர் அருள்வாழ்வை மேற்கொள்ளும் போது அதற்கேற்ற உணவு வகைகளை உண்பதே ஏற்றது. அதனால்,

"பௌத்தபிக்கு கதிர்சுடும் உச்சிப்பொழுதிலும் திங்கள்போல் தண்முகத்துடன் திகழ்வர். நோன்பும் தவமும் மேற்கொண்டு சிற்றிலும் பேரிலும் நாடிச்சென்று ஐயம் ஏற்று உண்பர். வீட்டாரை விளித்துக்கூவுதல் இவர் இயல்பன்று. புனையா ஓவியம் போல் நிற்றல் மரபாகும்."[1] ஆதலால் இல்லறத்தார்க்கு எவ்வித இன்னலும் ஏற்படாதவாறு துறவி செயல்படவேண்டும். கோபம், சாபம் போன்ற இழிவான செயல்களைச்செய்தல் கூடாது என்பதை,

"மலரின் மணத்தையும் அழகையும் கெடுக்காமல் அதில் இருக்கும் தேனைத் தேனீ சேகரித்துக்கொள்வது போலவே துறவியும் உணவின் பொருட்டுக் கிராமத்தில் நடமாடவேண்டும்" (த.49)

என்று புத்தர் வரையறுத்துக் கூறியுள்ளார். அதனால் துறவியருக்கு,

"மண்ணிலும் நீரிலும் தாமாகவே தோன்றும் மலர், கிழக்கு, காய், கனி முதலியனவும் பெருமரங்களின் கனியில் கசிந்த தேனும் புசிக்கத்தக்கன" (மனு.6:13)

என்று மனு கூறியுள்ளார்.

1. மணி.,16: 130–131.

மேற்குறித்த உணவுகள் சிலவேளைகளில் கிடைக்காவிடில் அந்தணரிடமோ, அவர்களில்லையேல் வனம்புகுந்துறையும் இல்வாழ் வாரிடமோ தனக்கு வேண்டியதை மட்டும் கேட்டுப்பெறலாம். இவர்களும் இல்லாதபொழுது இரண்டு கைகள் நிறையவோ அல்லது மரப்பாத்திரம், தொன்னை இவற்றில் எட்டுக்கவளங்கள் சோறு பெற்று உண்ணலாம் (மனு .6:27,28). இந்த உணவையும் விருந்தினர் உண்டபின்னர் அமைதி பெற்றிருக்கும் இல்லங்களில் மட்டுமே துறவியர் பிச்சையாகப் பெறவேண்டும். பிச்சை உணவு கிடைத்தால் மகிழ்ச்சியும் அகப்படா விட்டால் கவலையும் கொள்ளல் தவறு. மேலும் தன்னைப்போற்றி ஒருவன் பிச்சையிட்டால் அதை ஏற்றல் நன்றன்று. ஏனெனில் அதில் விரும்புற்றால் கூடப் பிறவிப்பிணி வந்தெய்தும் (மனு.6:57,58) என்பது மனு கூறும் துறவோர்க்குரிய நெறிமுறைகளாகும்.

துறவியர் உணவுபற்றி வள்ளுவர் குறிப்பிடவில்லை. துறவியருக்கு இயற்கையாகக் கிடைக்கும் தாவர உணவு அல்லது இரந்துபெறும் உணவே ஏற்றது. இரந்துபெறும் உணவிலும் ஒருவேளைக்குப் போதுமான எட்டுக்கவளங்களை மட்டுமே ஒருநாள் உணவாக உண்ணவேண்டும் என்று வரையறை செய்வதன் வாயிலாக முற்றும் துறத்தலின் அல்லது பற்றுவிடலின் இன்றியமையாமை வலியுறுத்தப்படுகிறது.

உடை

ஒவ்வொரு சமயத்திலும் துறவிகள் உடுத்தும் ஆடை வேறு படுகிறது. சைனர்களும் கிறித்துவர்களில் கத்தோலிக்கர்களும் வெண்ணிற ஆடை அணிவர். வைதீக சமயத்தைச் சார்ந்தோர் காவி ஆடை அணிவர். "துன்பம் நிறைந்த உலக வாழ்க்கையை வெறுத்து இன்பத்தை வற்றாத அமைதியைத் தேடி அலையும் துறவியர் துவராடையில் துலங்குவார்கள்."[1] ஆனால் பௌத்த துறவிகளின் சிறப்பு அவர்கள் பின்பற்றும் ஒழுக்கத்தைப் பொறுத்துள்ளது; ஆடையின் நிறுத்தில் அமையவில்லை.

> "மனமாசுகள் நீங்கி, சகல சீலங்களிலும் நிலைத்து நின்று,
> அடக்கமும் உண்மையும் உடையவனே சீவர உடைக்கு
> உடையவன்"(த. 10). சீவர உடை என்பது துறவிகளின் மஞ்சள்

1. மா.வே. மணி, சித்தார்த்த கௌதமபுத்தர், ப. 40.

ஆடையைக் குறிப்பதாகும். பௌத்த பிக்குகள் பொன் போன்ற ஆடையை உடுத்தியிருப்பர், ஆனால்,

> "ஒருவன் அலங்காரமான உடை அணிந்திருந்தாலும் அவன் தெளிந்த சிந்தை உடையவனாயும் அமைதியானவனாயும், பௌத்த தரும நியமத்தில் நிற்பவனாயும் பிரம்மசாரியனாயும் எல்லா உயிர்களிடத்திலும் உணர்ச்சி நீங்கியவனாயும் இருந்தால் அவனே பிராமணன், அவனே சமணன், அவனே பிக்கு" (த.140)

என்று துறவிக்குப் புத்தர் இலக்கணம் வகுத்துள்ளார். புத்தர் காலத்தில் வாழ்ந்த பிராமணரையும் சாந்திபெற்றவரையும் சமணர் என்று கூறினர். உள்ளத்தை ஒழுங்குபடுத்தும் ஆற்றலை உடைய தவத்தினருக்கு மஞ்சள் ஆடை அணியவேண்டும் என்று தேவை இல்லை என்பதால் மனுவும் வள்ளுவரும் துறவியர் ஆடைபற்றிக் குறிப்பிடவில்லை.

## உறையுள்

தவமுனிவர்கள் வாழுமிடம் கானகமாயினும் இளங்கா ஆயினும் அது உயர்ந்த இடமாக மதிக்கப்பட்டது. ஏனெனில் அவர்கள் காமியங்களை நாடுவதில்லை. அதனால்,

> "முனிவர்கள் எங்கே வசிக்கின்றார்களோ அது நாடாயினும் காடாயினும் பள்ளமாயினும் மேட்டுநிலமாயினும் அதுவே இரமணியமான இடம்" (த.98) ஆகும். அதனால்தான் ஔவையும்,

> "எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே"[1]

என்று பாடியுள்ளார். நல்ல இடத்தைக்காட்டிலும் நன்மக்கள் வாழுமிடமே அதிக இன்பத்தைக் கொடுக்கும் என்பதால் மனுவும் வள்ளுவரும் துறவியர் வாழும் இடத்தை வரையறை செய்யவில்லை.

## உண்மைத்துறவு

தீயபண்புகளைத் துறத்தலே துறவின் இலக்கணமாகும். துறவு மேற்கொள்பவர்கள் புத்தரின் புனிதச்செயல்களையும் அருட்குணங்களையும் அடைதல் வேண்டும் என்பதைப் பௌத்தநூல் பின்வருமாறு புலப்படுத்துகிறது.

---

1. புறம்., 187.

"எவன் கைகளை அடக்கி, பாதங்களை அடக்கி, வாக்கை அடக்கித் தன்னை நன்கு காத்துக்கொண்டவனோ, எவன் தியான இன்பத்திலுள்ளவனோ, எவன் மனஅமைதி பெற்றத் திருப்தியுடன் ஏகாந்தமாக இருக்கின்றானோ அவனையே பிக்கு என்பர்" (த. 361).

மன அடக்கத்துடன் நற்பண்புகளைப் பின்பற்றுபவனே பிக்கு எனப் படுகிறான். துறவிகளைக் குறிக்கத் தேரன், முனிவன் பிக்கு, ஞானி, நீதிமான், அறிஞன் என்ற சொற்கள் தம்மபதத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளன. தேரன் பௌத்த துறவிகளில் முதன்மையானவன்; முதியோன், தேரன் எனப்பட்டான் என்பதை,

"எவனிடம் சத்தியம், தருமம், அகிம்சை, நிதானம், புலனடக்கம் முதலிய பண்புகள் நிலைத்திருக்கின்றனவோ எவன் மலங்கள் நீங்கிய புத்திமானாயிருக்கின்றனோ அவனே தேரன்" (த.259)

என்ற கருத்துக்களால் தெளியலாம். அவ்வாறே,

'பாவ உணர்ச்சிகளை அடக்கி ஆள்பவன் முனிவன்' (த.263).
'பிரம்மச்சாரியத்தைக் கைக்கொண்டு கருத்தோடு உலகில் வாழ்பவன் பிக்கு' (த.265)

எனப்படுவான்.

"நீதிநெறியில் மற்றவர்களுக்கு வழிகாட்டித் தருமத்தைக் காப்பவன் நீதிமான், வெறுப்பும் அச்சமுமின்றி உபசாந்தியோடு இருப்பவன் அறிஞன்" (த.25).

## இளமைத்துறவு

வானில் நடத்தல் போன்றது துறவு வாழ்க்கை. இளமையில் துறத்தல் செயற்கருஞ் செயலாகும். காமஞ்சான்ற கடைக்கோட்காலை மேற்கொள்ளும் மணந்த துறவைவிட, இளமையிலிருந்தே பின்பற்றும் மணவாத துறவையே பௌத்தம் வலியுறுத்துகிறது, இதனை,

"இளமையிலேயே பிரம்மசரியத்தைப் பேணாதவர் மீன்களில்லாத குளத்தில் இரைதேடிக் காத்திருக்கும் கிழக்கொக்குப்போலத் தவிப்பார்கள்" (த.153).

"உளுத்துப்போன விற்களைப்போல் பழமையை எண்ணி எண்ணிப் பரிதவிப்பார்கள்" (த.154)

என்ற உவமைகளின் வாயிலாக அறியலாம். இவர்கள்,

"இளவயதாயிருப்பினும் புத்த தருமத்தில் ஈடுபடும் பிக்கு, மேகத்திரையிலிருந்து விடுபட்ட வெண்மதிபோல, இவ்வுலகில் ஒளியைப் பரப்புகிறார்கள்" (த.380)

எனலாம். இளமைத் துறவினை மனுவும் வள்ளுவரும் வற்புறுத்தவில்லை.

## போலித்துறவு

கண்ணிற்குத் திரையிட்டுப் பிறரை ஏமாற்றும் போலித்துறவு துறவல்ல. அதனால் உலகவாழ்வு சீர்குலைந்து ஒழியுமேயன்றி நலம் காணமுடியாது. வெளிவேடங்களினால் மட்டும் துறவியாதலும் மனத்தூய்மை பெறுதலும் இயலாது. அதனால் புத்தர்,

"ஐயத்தில் உழல்வோனை ஆடையின்றி அலைதல், சடைத்தலை, புழுதியால் உடல் மாசடைதல், உபவாசம், வெறுந்தரையில் கிடத்தல், நீறுபூசுதல், அசைவில்லாமல் அமர்ந்திருத்தல் ஆகிய எதுவும் புனிதமாக்கிவிடாது" (த.131)

என்று போலித்துறவிகளைச் சாடுகிறார். மேலும் துறவு என்பது மனப்பக்குவமே அன்றி வெளிவேடமன்று.

"துறவுநெறிக்கு உரிய கடமைகளைக் கடைப்பிடித்துப் பொய்பேசும் ஒருவன் தனது தலையை மொட்டை அடித்துக்கொள்வதால் மட்டும் துறவி ஆகமாட்டான்" (த.362). அவ்வாறே,

'தலை நரைத்திருப்பதால் மட்டுமே தேரனாகி விடமாட்டான்' (த.258)

'பற்றை விடாத ஒருவன் துறவி ஆகமுடியாது' (த.264).

பிச்சை ஏற்று உண்பதாலும், ஒருவன் பிக்கு ஆவது இல்லை. அறநெறிகளை முழுவதும் பின்பற்றுவதால் மட்டுமே பிக்குவாக முடியுமேயன்றி அரைகுறையாகப் பின்பற்றுவதால் அல்ல (த.266). அதனால் அரைகுறையான போலித்துறவு முழுப்பயனளிக்காது என்று தம்மபதம் கூறுகிறது.

மக்களின் சமுதாய வாழ்க்கையைப் பல கோணங்களிலிருந்து ஆய்ந்த பேரறிஞர் மனு பல்வேறு நிலைகளிலிருந்து மக்களின் வாழ்வை நேரில் கண்டறிந்த பெரியார் ஆவார். வழிகாட்டும் கொள்கையில்லாத நடைமுறை குருட்டாட்டமாகும் என்பதைப்போலவே,

நடைமுறை அறியாத தவம் பயனற்றது என்பதை உணர்ந்த மனு, தாழ்வைத் துடைத்து வாழ்வில் நிறைவுகாணும் செயலையே விரும்பினார். எனவே துறவுச்செயலுக்கு வழிகாட்டும் முறையில்,

> "மனம்மொழி மெய்களால் தீவினை புரியாமல் அவற்றைக்
> கட்டுப்படுத்தி அடக்கி ஆள்பவனே உண்மையான
> திரிதண்டியேயல்லாது இல்லறத்தார் தன்னை
> வணங்கவேண்டுமென்றும் விரும்புகிறான் (த.73).

> "சீடனான பிக்கு மக்களுடைய மரியாதையை விரும்பாமல்
> விவேகத்தை நாடி உழைத்து வரவேண்டும்" (த.75)

என்பதால் உண்மைத்துறவியின் நோக்கம் வீடுபேறே அன்றி உலகியல் செல்வாக்கு அன்று எனலாம்.

## துறவியர் அறங்கள்

உலக மக்களுக்குத்துணையாவது அறம். இவ்வறம், இல்லற வாழ்வில் நிகழும் அறம் என்றும் துறவற வாழ்வில் நிகழும் அறம் என்றும் இருவகையாக வகுக்கப்பெற்றுள்ளது. துறவியர் அறம் அன்பின் அடிப்படையில் அருளுணர்வோடு செயல்படவேண்டும். ஆதலால் துறிவியரை நோக்கி,

> "தனக்கு உண்ணக்கிடைப்பதையே பலி, பிச்சை இவற்றிற்குத்தன்
> சக்திக்கேற்ப வழங்குக. தண்ணீர், கிழங்கு, கனி இவற்றால்
> தன்னை நாடிவருவோரை உபசரிக்க" (மனு.6:7)

என்று வேண்டுகோள் விடுக்கின்றது மனுநூல். உலகப்பொது அறங்களுள் விருந்தோம்பலும் ஒன்று. ஆதலால் இல்லறவாழ்வினர்க்கு மட்டுமன்றி துறவறத்தார்க்கும் விருந்தோம்பல் தலையாய அறமாகக் கருதப்படுகிறது. இவ்வாறு விருந்தோம்புதலும் அறம். உயிர்களைக் கொல்லாமையும் அறம். இன்சொல் கூறலும் அறம். இம்மூன்று அறங்களையும் மனு. துறவுக்கு வகுத்து அவற்றின் முறைகளையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

## துறவோர் தவிர்க்க வேண்டியவைகள்

கானகத்தில் கடுந்தவம் புரிவோராயினும் துறவியர் மருத்துவம் அறிந்தவராகவும், சோதிடம் தெரிந்தவராகவும் இருப்பர். இவர்களின் நல்லறிவை

> கையில் திரிதண்டமென்னும் துறவுவேடக் கருவியைத்
> தரிப்பதனால் மட்டுமே ஒருவன் திரிதண்டி ஆகிவிடமாட்டான்"
> மனு.2:10)

என்று எச்சரிக்கை செய்துள்ளார். புறவேடம் ஒரு பொருட்டன்று. அகத்தூய்மையே வேண்டற்பாலது என்பதில் நாட்டமுடைய பொய்யா மொழியாரும்,

> "மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
> பழித்த தொழித்து விடின்" (குறள். 280)

என்று புகன்றுள்ளார். "தவம் இயற்றுவோர் அதற்குரிய புறச் சின்னங்களைத் தாங்கி நெடுங்காலம் தவம் இயற்றினாலும் அகத்தூய்மை இன்மையால் அத்தவம் தோல்வியில் முடியும்"[1] என்ற அறிஞர் கருத்தும் நோக்கற்குரியது.

உலகம் பழிக்கும் செயல்களை அறவே நீக்கிய சீலர்களுக்குப் புறக்குறிகள் தேவை இல்லை. மாளிகையிலிருந்தாலும் மலைக்குகையில் வதிந்தாலும் மனத்தை அடக்கித் தூயநெறியாகிய துறவறநெறி பற்றி ஒழுகுதலே சிறப்புடையதாகும். அதனால் துறவு வேடங்கள் மட்டுமே ஒருவரைத் துறவி ஆக்குவதில்லை. வேடங்களின்றியே உயிர்ப்பொதுமை உணர்வுடன் இருப்பதே சிறந்த துறவாகும் என்பதை மூன்று அறநூலாரும் வலியுறுத்துகின்றனர்.

## புகழ்விரும்பி

பௌத்த பிக்கு கடமையைச் செய்யவேண்டும். பயனை எதிர்பார்த்தல் கூடாது. நிலையான பாறை, புயல் காற்றுக்கும் அசையாமல் இருப்பதுபோல் ஞானிகள் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் அசைதல் கூடாது **(த.81)**. ஆனால்

> "மூடனான பிக்கு போலியான புகழை விரும்புகிறான்.

---

1. வி. அசோக்குமாரன், வள்ளுவர் வகுத்த அறம், ப. 114.

பிக்குகளிடையே முதன்மையாயிருக்கவும்,

பௌத்த மடங்களில் தலைமையாயிருக்கவும்,

பல்லுயிர்களுக்கும் பயன்படவேண்டும். அதை விற்றுப் பிழைத்தல் பாவச்செயலாகும் என்பது மனுநெறி. இதனை,

"பூமிசாத்திரம், நிமித்தநூல், மருந்துவம், சோதிடம், தர்க்கம்
இவற்றைக் கற்பித்து ஊதியம் பெறலாகாது" (மனு.6:50)

என்ற மனுநூல் கருத்து புலப்படுத்துகின்றது. அறிவை விலை பேசுவோர்க்கு அவனியில் புகழில்லை. ஆதலால் துறவியர் தாங்கள் கற்றதைக்கொண்டு மற்றவர்களுக்கும் உதவவேண்டும் என்பது புலனாகின்றது. இச்செய்திகள் பற்றிப் புத்தரும் வள்ளுவரும் குறிப்பிடவில்லை.

## அருளறம்

பிற உயிர்களின் துயர் போக்குதலும், பிற உயிர்களுக்குத் துன்பம் இழையாமையும், பிற உயிர்களைக் கொல்லாமையுமாகிய மூன்றும் மன்னுயிர் ஓம்பும் மாண்புடைய பண்புகளாகும். இப்பண்புடையாரை அருளாளர், சான்றோர், ஆன்றவிந்தடங்கிய பெரியோர், துறவியர், முனிவர் என்று மொழிகின்றனர். இவர்களால் பின்பற்றப்படும் கொல்லாமையே அருளறமாகும். இந்த அருளறத்தை நிலைநாட்ட,

"தரையைப் பார்த்தவாறே தப்படி வைக்கவேண்டும்
துணியால் வடிகட்டியே நீர்பருக வேண்டும்" (மனு.6:40)
"இரவுபகல் எந்நேரமாயினும் தன்னால் சிற்றுயிரும் நோகாதவாறு
தரையைப் பார்த்து அடிவைக்கவேண்டும். ஒருவன் சாகும்போதும்
கடைப்பிடிக்கவேண்டும்" (மனு.6:68)

என்று மனு அறிவுரை பகர்கின்றார். வடிகட்டியே நீர்பருக வேண்டும் என்று கூறியிருப்பது தூய்மையைக் குறிப்பதாயினும் கொல்லாமையை வலியுறுத்தல் என்பதே ஏற்புடையது.

கண்ணுக்குப் புலனாகாத சிற்றுயிரையும் வதைத்தல் கூடாது என்பதே மனுநெறி. இந்நெறியை அருளாளர் பெருமாட்டியாகிய கவுந்தியடிகள் மதுரைக்குச் செல்லும் வழியில் கோவலன் கண்ணகியை நோக்கி நீராடும் வாய்க்கால் வழியே சென்றால் அதிலும் துன்பமுண்டு.

நீரில் வாழும் நண்டுகளும் நத்தைகளும் கரையில் ஊர்ந்து கொண்டிருக்கும். அவற்றின்மேல் அறியாமல் அடிவைத்து விடுவோமென்றால் அவ்வுயிர்கள் துன்புறும். அவை நம்மால் துன்பமடைந்தால் அக்கொலைப்பாவத்தை நம்மால் தாங்கமுடியாது. ஆனால் இவ்வழியைத் தவிர வேறுவழியில்லை. ஆதலால் அவ்விடங்களை உற்றுநோக்கிச் செல்வாயாக"[1] என்று கூறும் அறிவுரையாலும் அறியலாம்.

ஊன் உண்ணுதலைப்பற்றி விரிவாக விளக்கம் தருகிறது மனுநூல். அவை பின்வருமாறு :

"கொல்லப்பட்ட புலாலை ஒரு பிராமணன் உண்ணலாம்"
(மனு.5:27) ஏனெனில்,

"அசையும் உயிர்களில் மான் போன்றவற்றிற்கும் புல் முதலியனவும், புலி முதலிய கோரைப்பற்களுடையவற்றிற்கு மான் முதலியனவும், கைகளுள்ள மானிடர் முதலானோர்க்குக் கரங்கள் இல்லாத மீன் முதலியனவும், சிங்கமுதலிய கொடிய மிருகங்களுக்கு யானை முதலிய அஞ்சும் பண்புடையனவும் ஆகாரமாகும்" (மனு.5:29)

எனவே, "உரியவற்றை அன்றாடம் கொன்றுதின்றாலும் பாவமில்லை" (மனு.5:30).

"சிரார்த்தத்தில் வரிக்கப்பட்ட அந்தணன் புலால் உண்ணலாகதென்று எண்ணி மறுத்தால் இருபத்தோரு பிறவிகள் பசுவாய்ப்பிறப்பான்" (மனு.5:35)

என்று மனுமொழி பகர்கிறது.

இக்கருத்துக்களுக்கு முரணாகத் திருவள்ளுவர் கொல்லாமை, புலால் மறுத்தல் என்ற அதிகாரங்களை அமைத்ததோடல்லாமல்,

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை" (குறள். 327)

என்று ஆணையிடுகின்றார். அதோடு,

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்" (குறள். 251)

---

1. சிலம்பு., 11: 81–91.

என்று ஊன் உண்ணல் தீது என்பதையும் புலப்படுத்துகிறார்.

உயிர்க்கொலை வேள்வி வாழ்க்கைக்குத் தேவையற்றது. விருந்தோம்பும் வேள்வியே அறவேள்வியாகும் என்பதை,

"பரிந்தோம்பிப் பற்றற்றோம் என்பர் விருந்தோம்பி
கேள்வி தலைப்படா தார்" (குறள். 88)

என்று வள்ளுவர் கூறுவதும் நோக்கற்குரியது. மனுவும் பண்டைச் சான்றோரும் உயிர்க் கொலையையும் புலால் உண்ணலையும் வரவேற்கின்றனர். ஆனால் மலர்தலை உலகம் பயன்பெறும் வகையில் மாமறை பாடிய வள்ளுவர், கொல்லாமையையும் புலால் உண்ணாமையையும் வலியுறுத்தும் வகையில்அறப்புரட்சி செய்துள்ளார். ஆதலால் பண்டை நூல்களை விடத் திருக்குறள் உயர்வுடையதெனலாம்.

தீயசெயல்களை ஒருவன் அறவே ஒழிக்க வேண்டும். தீய செயல்களாவன ஒருயிர்க்குத் துன்பம் செய்தல், ஒருயிரைக் கொல்லுதல் முதலியன. ஆதலால்,

"பிராணிகளைக் கட்டிப்போடுதல், கொல்லுதல், வருத்துதல்
இவை செய்யாதவனே எல்லா உயிர்க்கும் உற்றவனாகவும்
எவ்வித இன்பமும் அடைபவனாகவும் இருக்கிறான்"(மனு.5:46).

"உயிர்களைக் கொன்றால் பேரின்பம் கிடைக்காது.
எனவே புலால் தவிர்க்கவேண்டும்" (மனு.5:48)

என்று கூறிய மனு பிசாசைப் போன்று புலால் உண்பதைத் தவிர்ப்பவன் உலகில் எல்லா உயிர்க்கும் அன்பானய் நோயற்று வாழ்வான் எனக்கூறிப் பிற உயிர்க்குத் துன்பம் செய்தலை ஒழித்தல் வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். அருள்நெறி நின்ற வள்ளுவரும் ஓர் உயிர்க்கு இன்னா செய்தலினும் அதைக் கொல்லுதல் பன்மடங்கு தீமை பயக்கும் எனக் கூறுகிறார்.

"நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழும் நெறி" (குறள். 324)

என்பதனால் கொல்லாமையே நன்னெறி என வள்ளுவரும் கூறுகின்றார்.

மனுதருமக் காலத்தில் வடநாட்டில் வேள்விகள் மிகுந்து உயிர்க்

கொலையும் பெருகின. அதனை ஒழித்து அருள்நெறியை நிலைநிறுத்தும் பொருட்டுப் புத்தர்பெருமானும் கொல்லாமையாகிய நன் னெறியை நாடெங்கும் பரப்பினார். அப்பழக்கம் வள்ளுவர் காலத்திலும் இருந்ததால் அதை ஒழிப்பதற்காக வள்ளுவரும் கொல்லாமையை வலியுறுத்தியுள்ளார் எனக்கருதலாம்.

## இன்சொல்லறம்

மனித இனத்துக்குத் துணைபுரியும் அறங்களுள் இன்சொற் கூறும் அறமேசிறந்தது;செலவற்றது. எல்லோரும் பின்பற்றக்கூடிய எளிமையானது அதனால் அருளுணர்ச்சி நிறைந்த நெஞ்சத்தில் பிறக்கும் சொற்கள் இனிமை பயக்கும் நற்சொற்களாக இருத்தல்வேண்டும். அதனால்,

> "தன்னைப் பிறர் சினந்தபோதும், தான் சினத்தலாகாது
> வன்சொல் வழங்கப்பெறினும் தான் இன்சொல் இயம்புக"
> **(மனு.6:48)**

என்று அறநூல் ஆணையிடுகின்றது. இதனால் இனியமொழி கூறியும் அறம் வளர்க்க இயலும் என்பது தெளிவு.

## துறவோர் இயற்றும் தவம்

இல்லறத்தில் தான் ஓம்பிவந்த தீயையும் அதன் பாத்திரங்களையும் உடன்கொண்டு, ஊரைத்தாண்டி வனம் புகுந்து தவம் செய்யும் துறவியருக்குரிய கடமைகள் பற்றியும் தருமசாத்திரம் எடுத்துரைக்கிறது.

தேவர்களுக்காக ஒளி வணக்கமாகிய வேள்விகளை இயன்ற அளவில் முறைப்படி செய்து, வீடு பேறடையும் நிலையை அடைதலே துறவின் அடிப்படை நோக்கமாகும். அதனால் சம்பா, கார்நெல்மணிகளைத் தானாக பொறுக்கித் தயாரித்த புரோடசம் என்ற அடை, உப்பின்றி வறுத்த அரிசியில் செய்த சரு என்ற அன்னம் இவற்றால் தேவர்களுக்கு ஓமம் செய்து வழிபடலாம் **(மனு.6:11)**. நிலத்தில் சிந்திய நெல்மணிகளைப் பொறுக்கிச் சேர்த்து நட்சத்திரயாகம். ஆக்ரயணம், சாதூர்மாசியம், உத்தராயணம் போன்ற யாகங்களையும் இயற்றவேண்டும். வேண்டிய உப்பை ஊவர் மண்ணிலிருந்து காய்ச்சிக்கொள்ளலாம் **(மனு.6:10)**. இத்தவங்கள் யாவும் நெறியுடன் ஓங்கும் பொருட்டு, மழையில் நனைந்துகொண்டும், பனிக்காலத்தில் ஈரத்துணியைப் போர்த்திக் கொண்டும் தவம் செய்தல் வேண்டும் **(மனு.6:23)**. இவ்வாறு வேதத்தில்

விளக்கியிருப்பது போன்று வேள்வி கடந்து, தெய்வம் கடந்து, ஆன்மாவும் தாண்டியிருப்பதான பிரம்மசொரூபத்தைத் தியானித்தலே துறவியின் நெறியாகும்.

இல்லறத்தில் இயற்றிய ஐம்பெருவேள்விகளையும் பிதுர்க் கடன்களையும் அடிப்படையாகக்கொண்டு, துறவறத்தில் வேத வேள்விகளைச் செய்தல் துறவியரின் கடன்களாகக் கூறப்பட்டுள்ளன.

ஐம்பெருவேள்விகள் பற்றிய செய்திகள் தம்மபதத்திலும் வள்ளுவத்திலும் காணப்படவில்லை.

## துறவியர் செயல்கள்

நன்மையை மட்டும் மேற்கொண்டு தீமையை விலக்குதல் துறவியர் இயல்பு. இவ் இயல்புநிலை பிறழா புத்தர், துறவியர் பின்பற்றவேண்டிய செயல்களையும் கைவிடவேண்டிய செயல்களையும் தம் போதனையில் கூறியிருப்பதை,

"ஐந்தை வெட்டித்தள்ளவும்
ஐந்தை கைவிடவும்
ஐந்தில் தேர்ந்து மேலே உயரவும்
ஐந்து தளைகளிலிருந்தும் தப்பிய பிக்கு
ஒக திண்ணா வெள்ளத்தைக் கடந்தவன்" (த.368)

என்று அறநூல் புலப்படுத்துகிறது. அவ்வாறே பிக்கு மற்றவர்களுக்குத் துன்பம் செய்தல் கூடாது, பிறர் தமக்குச் செய்யும் துன்பங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நன்னெறியை உபதேசிப்பதோடு அந்நெறியில் வாழ்ந்து காட்டவேண்டும். ஏனெனில்,

"தரும உபதேசத்தை மகிழ்ச்சியுடன் பின்பற்றி தருமத்திலேயே
திளைத்து, தருமத்தை எப்போதும் சிந்தனை செய்து, தரும
வழியிலேயே நடக்கும் பிக்கு உண்மையான தருமத்திலிருந்து
பிறழ்வதில்லை" (த.362).

புத்ததருமத்தில் நம்பிக்கை கொண்ட பிக்கு இன்புற்று வாழ்வான் (த.379). அந்நிலையில் அவன் உடலில் அமைதி, பேச்சில் அமைதி, உள்ளத்தில் அமைதியுடன் நிதான நிலைபெற்று உபசாந்தி பெற்றவன் ஆவான் (த.376). இக்கருத்துக்கள் தருமசாத்திரத்திலும் வள்ளுவத்திலும் காணப்படவில்லை.

துறவு என்பது பற்றினை விடுவது. "பற்று என்றால் ஒன்றைப்பற்றிக் கொள்வதாகும். எந்த ஒரு பொருளையும் நாம் விட்டுச்சென்றால் அதைத் தேடிக்கொண்டே அதனை விட்டுச்சென்ற இடத்துக்குப் போவது இயல்பு. எனவே, உலகில் எந்த ஒன்றில் ஆசை கொண்டாலும் அதை அடைய அவனியில் மீண்டும் பிறக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் பிறவித்துன்பத்தை ஒழிப்பதற்காகத் தவம் செய்பவர்கள் எந்த ஒரு பற்றையும் மனத்தில் கொள்ளக்கூடாது."[1] அகப்புறப் பற்றுக்களைத் துறந்து எளிய வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டும் என்பதை,

"மான்தோல் போன்றவை அல்லது மரவுரி தரிக்கவும். காலை
மாலை நீராடலும், சடை, மீசை, தாடி, நகம் இவற்றை
வளர்த்தலும் வேண்டும" (மனு.6:6).

"துறவு மேற்கொண்டவன் தூய்மையான கமண்டலம் தண்டு,
பவித்ரம் இவற்றுடன் வலிந்து யாரேனும் கொடுத்தாலும்,
சுகங்களில் நாட்டமின்றி, மௌனத்துடன் இருக்கவேண்டும்"
(மனு.6:41)

என்று தருமாசத்திரம் வலியுறுத்துகிறது. மான்தோல், மரவுரியும் அவர்களின் பற்றற்ற வளத்தைப் புலப்படுத்துகின்றன. மேலும் பொன், வெள்ளி, செம்பு இவை போன்ற பாத்திரங்களைத் தவிர்த்து மண், மரப்பாண்டங்களைப் பயன்படுத்தலாம். தெங்கின் குடுக்கை, சுரக் குடுக்கை, மரஓடு, தொன்னை, மண்பாண்டம், மூங்கில்படி இவை யெல்லாம் துறவியின் பாண்டங்கள் என்று மனு கூறியுள்ளார் (மனு.6:53,54) . மேலும் மரத்தடியில் வாசஞ்செய்து, மண்பாண்டத்தில் இரந்துண்டு, கந்தை உடுத்தித் துணையின்றி வாழ்ந்து வீடு பேறடையும் தகுதிபெறலே துறவியின் கடமையாகக் கருதப்படுகிறது. இதை வள்ளுவரும்,

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்" (குறள். 349)

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" (குறள். 350)

என்ற குறட்பாக்களில் விளக்குகிறார்.

1. புலவர் செந்துறைமுத்து, வள்ளுவர் வகுத்த அறம், ப. 114.

## மெய்யறிவு பெறல்

தவம் மேற்கொண்டார் மனம், பொறிவழி போகாது காத்தல் வேண்டும். அதற்காக விரதங்களால் உண்டி சுருக்கலும் கோடையில் வெயிலில் நிற்றலும், மாரியிலும் பனியிலும் நீர்நிலையில் நிற்றலும் மேற் கொள்வர். இதனால் வரும் துன்பம் வருத்த, வருத்தப் பாவம் நீங்கி ஞானம் பெறுவர். அவர்கள் ஞானம் பெறும் சிறப்பை,

> "தீயிலிட்ட பொன் மாசகன்று ஒளிர்தல்போல் உடல்
> குறைகள் அனைத்தும் பிராணாயாமத்தால் போகும்" (மனு.6:71)

என்று மனு மொழிந்துள்ளார். இவ்வாறே வள்ளுவரும் யாரும் உலகில் மக்காளய்ப் பிறந்தார்க்கு வரும் துன்பத்தின் தன்மையையும் அதன் பயனையும்,

> "சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
> சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" (குறள். 267)

என்று கூறியுள்ளார். தவத்தார் தமது நோன்புகளால் வரும் துன்பம் வருத்த வருத்த அவரொடு கலந்த பாவம் நீங்கி ஞானம் ஓங்கும். ஆதலால் சுடச்சுடரும் பொன்னை உவமையாகக்கூறித் தவத்தோர் பெறும் மெய்யறிவை இரு அறநூலாரும் சிறப்பித்துள்ளனர்.

## இறப்பு

துறவறத்தார் தனது உயிர்வாழ்வு அல்லது மறைவு இவைகளில் பற்றின்றி இருத்தல் வேண்டும். மாறாக, இவர்கள் இறக்கும் நாளையே எதிர்பார்த்து இருத்தல்வேண்டும் என்பதை,

> "ஊதியம் பெறுகிற நாளை எண்ணியிருக்கும் சேவகனைப்போல,
> உடல்வாழ்வு உதிர்ந்துபோகும் நாளை எதிர்பார்த்திருக்க
> வேண்டும்" (மனு.6:45)

என்ற உவமையின் வாயிலாக மனுநூல் வலியுறுத்துகிறது. துறவறத்தால் ஞானயோகம் பெற்றவரின் உயிர், மரக்கிளையை விட்டுப் பறந்துசெல்லும் பறவையைப்போல உடம்பை விடுத்துச்செல்லும். இத்தகையோருக்குப் பிறவிப்பிணி அணுகுவதில்லை; பிறவாமை வாய்க்கும்.

## மகளிர் துறவு

மணவாத்துறவு, மணந்த துறவு ஆகிய இரண்டும் இருபாலர்க்கும் பொதுவானவை. இல்லறவாழ்க்கையில் இனிது வாழ்ந்த இருபாலரும் துறவு வாழ்க்கையில் வளம் காணவேண்டும் என்பது தமிழ்மரபு. கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் என்று தொல்காப்பியர் கூறியிருப்பதும் இதனை வலியுறுத்துகிறது. இம்மரபின் அடிப்படையில்,

> "உலக நடை, இன்பம், ஏவல் அனைத்தும் விட்டு மனைவியைப்
> பிள்ளையிடம் ஒப்புவித்து, அல்லது அவள் விரும்பினால்
> அவளையும் பின்கொண்டு வனம் செல்லவேண்டும்" (மனு.6:3)

என்று வழிகாட்டியுள்ளார். இல்லறவாழ்வில் நிறைவெய்திய கிழவனும் கிழத்தியும் துறவறத்தை மேற்கொள்ளல் மேன்மையாயினும் மகளிர் துறவறத்தை மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப் படவில்லை.

புத்தரும் பெண் துறவு பற்றிப் பேசவில்லை. வள்ளுவரும் பெண் துறவை ஆதரிக்கவில்லை என்பது,

> "அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
> பெற்றாள் தமியள்மூத் தற்று" (குறள் 1007)

என்ற குறளிலிருந்து தெரிகிறது. இதனால் மகளிர் துறவு மேற்கொள்வதை மூவரும் வற்புறுத்தவில்லை; விரும்பினால் மறுக்கவும் இல்லை.

## வேள்வி

"வேள்வி என்பது தேவர்களுக்கு விருப்பமுண்டாகச் செய்யப்படும் தீத்தொழில். இது பாகவேள்வி, அவிவேள்வி, சோமவேள்வி என முப்பகுதியாய், ஒவ்வொரு பகுதியும் எவ்வேழாய் இருபத்தொரு வகைப்படும். இவையேயன்றி நாடோறும் செய்யப்படும் பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதிர்யாகம், பூதயாகம் என ஐம்பெரு கேள்விகளும் உண்டு. வேள்வி, யாகம், யக்ஞம், ஓமம் என்பன ஒருபொருட்கிளவி. வேள்வி செய்தல் ஆரியர்க்குரிய தொழில்களில் தலையாயதொன்று. ஆரிய வேதங்களிற் பெரும்பகுதியும் இவ்வேள்வி பற்றிய செய்திகளே. தேவர்களின் பொருட்டுச் செய்யப்படும் இவ்வேளவிகளில் ஆடு, மாடு முதலிய உயிர்களைக் கொள்வது கொலை

யாகாது என்று அவ்வேதம் கூறுகிறது."[1]

"உலக நன்மையை முன்னிட்டே நடைபெறுவன வேள்விகள். அது செய்யப்படும்போது பசுவதையாகாது" (மனு.5:39)

"வேள்விக்குப் பயன்படுகின்ற கொடி, பசு, மரம், விலங்கு, பட்சிகள் பின்னர் மேலான கதியை அடைகின்றன" (மனு.5:40)

என்று மனு கூறியுள்ளார். தமிழர்க்கு இவ்வேள்வி உரியதுமன்று, உடன்பாடுமன்று. அதனால் திருவள்ளுவரும்,

"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொனறாகும் ஆக்கங் கடை" (குறள். 328)

என்று கூறியுள்ளார். வேள்வியால் வரும் பயன் மிகுதி என்பது மனுதருமம். அவ்வேள்வியை விடக் கொல்லாமை எனும் விரதத்தால் வரும் பயனே பெரிதென்பது வள்ளுவம்.

## பிரணவ மந்திரம்

பிரம்மாவானவர் மூன்று வேதசாரங்களான அகார, உகார, மகாரங்களை ஓம் எனும் பிரணவ உறுப்புக்களையும் பூர், புவ, சுவர் (பூமி, ஆகாயம், சுவர்க்கம்) எனும் புனித உச்சரிப்புக்களையும் உண்டாக்கினார். அவ்வாறே 'தத்' என்று தொடங்கும் காயத்ரியின் மூன்றடிகளையும் மூன்று வேதங்களினின்றும் வடித்தெடுத்தார். பிரணவ மந்திரத்தையும் காயத்ரியையும் மூன்றுவேளைகளில் ஓதுவதால் மூன்று வேதங்களையும் ஓதிய பலனை மாணவன் பெறுகின்றான். ஊரைத்தாண்டி ஆற்றங்கரையிலோ, வனங்களிலோ ஒருமாத காலம் தினமும் ஆயிரம் முறை இதைப் பயில்பவன் தன் பாவங்களிலிருந்து பாம்பின் சட்டை கழன்று வருவதுபோல் நீங்கப்பெறுகிறான் (மனு.2:76,77,78,79).

ஓம் என்பது அழிவற்று விளங்குவதால் அதை 'அட்சரம்' என்று வேதம் கூறுகிறது. காயத்ரியை உச்சரிப்பவன் சத்தியத்தையே வாயாரச் சொல்கின்றவனாவான். அதனனால் வீடுபேறடைகிறான். அவன் வேறு வேள்விகளைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் ஒன்றே. பரம்பொருளில் ஒன்றிநின்று பிராம்மணன் என்ற பெயரையும் பெறுகின்றான் (மனு.2:87). வேதம் ஓதித் திரும்பும் குருகுலவாசம் முழுமையும் தீயில் ஓமம் செய்வது,

1. புலவர் குழந்தை. திருக்குறளும் பரிமேலடிகரும், ப. 83.

பிச்சை எடுப்பது, தரையில் படுப்பது, குரு பணிவிடை இவற்றைப் பிரம்மச்சாரி தவறாது செய்தல் வேண்டும் (மனு.2:108).

## தென்புலத்தார் கடன்

இறந்தோர் திறத்து இல்வாழ்வார் செய்யத்தக்க கடன்கள். இல்வாழ்வோர் இவ்வுலகில் தன்னோடு சமகாலத்தில் வாழ்கின்ற மக்கட்கு மட்டுமின்றி தென்புலத்தார்களுக்காகவும் சில கடமைகளைச் செய்தல் அறமாகும். தென்புலத்தாரைப் பிதிரர் என்றனர். இவ்வுலகத்து முன்பு வாழ்ந்து மரித்தோரே பிதிரராவார். "தென்புல வாழ்நர் என்னும் சொல் இறந்த முன்னோர்களைக் குறித்தே வழங்கப்பட்டது"[1]

பெற்றோர் இறந்தபின் அவர் மறுமை நலத்தின் பொருட்டுப் புதல்வர் சில கடமைகளைச் செய்தற்குரியவர். இறந்த முன்னோரின் நற்குண, நற்செயல்களைப் பின்னோர் பின்பற்றவும் இவை துணையாகலாம். முன்னோர் குறித்து எண்ணுதல் அவர்கள் செய்த அல்லது செய்ய முயன்ற அறங்களைத் தொடர்ந்து செய்தல், அவர் நற்கருத்துக்களைப் பின்பற்றல் என்னும் முறையில் செய்தல் அவர்திறத்துப் பின்னோர் தம் கடமையைச் செய்தல் கூடும்.

தேவ காரியத்தை விடப் பிதுர்க்காரியம் முதன்மையானது (மனு.3:203). இக்காரியத்தைத் தூய்மையான காடுகளிலும், ஆற்றங் கரையிலும், சந்தடியற்ற இடங்களிலும் இயற்றுவதால் பிதுர்க்கள் நிறைவடைவர் (மனு.3:207). முதலில் பிதுர்க்களுக்குக் காப்பளிக்கும் விஸ்வதேவரையும் பின்னர் பிதுர்க்களையும், இறுதியில் விட்ணுவையும் முறையாக வணங்கவேண்டும்.

பிதுர்க்காரியம் செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திற்கு பிராம்மணர் மூவரை வரவழைக்வேண்டும். தேவர்களுக்குக் கிழக்கு நோக்கியும், பிதுர்களுக்கு வடக்குமுகமாகவும் இருக்குமாறு இருக்கைகள் அமைத்து அவற்றில் அந்தணர் மூவர் அமர்வர். பின் சந்தனம், மலர் இவற்றால் தேவர்களையும் பிதுர்க்களையும் பூசிக்கலாம். அவர்களுடைய வலதுகரத்தில் எள்ளுடன் நீரை வார்த்து அவர்கள் முன்னிலையில் தீ வளர்க்கவேண்டும் (மனு.3:210). முதலில் அக்னி, சோமன், யமன் இவர்களுக்குத் தீயில் அன்னத்தை ஓமம்செய்து பின்னர் பிதுர்க்களுக்கு ஓமம் நடைபெறும்.

---

1. புறம்., 9.

பிதுர்க்கடன்களை இல்லாளுடன் இணைந்து செய்தல் வேண்டும். ஆனால் பிரம்மச்சாரி, மனைவியில்லாதவன் இவர்கள் செய்தால் அங்கு அமர்ந்திருக்கும் அந்தணன் கையில் அன்னத்தை இடுதலே ஓமம் ஆகும் (மனு.3:212). ஓமத்தீயின் தென்புறமாகப் பிதுர்க்களைக் குறித்து அன்னத்தைச் சொரிந்து, தருப்பையில் மூன்றிடத்தில் எள்ளும் நீரும் கையில் வார்க்கவேண்டும். ஓமம் செய்து, மிகுந்த அன்னத்தை மூன்று உருண்டைகளாக்கி வைத்து, அவற்றின்மேல் எள்ளும் நீரும் சொரிதல் வேண்டும். பின்னர் எஞ்சிய சோற்றையும் மூன்று உருண்டைகளின் அருகிலேயே வைக்கவேண்டும். இது மேலும் முந்தைய மூன்று முன்தலைமுறைப் பிதுர்க்களுக்காகும். பின் வடக்குநோக்கி அமர்ந்து பிதுர்க்களுக்குரிய மந்திரங்களுடன் வழிபாடியற்ற வேண்டும். தந்தை இருக்கும்போது தாய்க்குக் கடன் செய்தால் பாட்டன், முப்பாட்டன், அவன் தந்தை ஆகிய மூவரையும் நினைந்து வழிபடலாம். பாட்டன் இருக்கத் தந்தை இறந்தால், தந்தை, முப்பாட்டன், அவன் தந்தை ஆகியோரைக் குறித்து சிரார்த்தம் செய்யலாம்.

இவை முடிந்தபின்பு சோற்றைப் பரிமாறு முன்பே வடை, பாயசம், கிழங்கு, பழம், சுவையுள்ள மாமிசம், மணமுள்ள நீர் இவற்றைச் சுவைகள் இனியன என்று கூறியவாறே இலையில் படைக்கவேண்டும் (மனு.3:228). இவ்வேளையில் வேறு நினைவுகளின்றித் தூய மனமுடன் பரிமாற வேண்டும். பிராம்மணர் உண்ணும் வரையிலும், வேதம், அறநூல் நீதிக்கதைகள், இதிகாச புராணங்கள், தத்துவங்கள் இவற்றையும் படிக்கலாம் (மனு.3:232).

ஆறிப்போகாமல் படையல் இருக்கவேண்டும். உண்போர் உணவில் குறை காணலும், வாய்பேசலும் கூடாது. சூடு ஆறாத வரையிலும் மௌனமாகவும் குறைசொல்லாமலும் உண்ணும் வரையிலும் பிதுர்க்கள் புசிக்கிறார்கள் (மனு.3:237) என்றிவ்வாறு மனுநூல் கூறுகிறது.

## ஒப்பீடு

உயிர்களுக்குப் பிறவித்தொடர்ச்சி உண்டு. செய்யும் வினைகளுக்கேற்ப உயிர்கள் மீண்டும் மீண்டும் பல பிறவிகள் எடுக்கின்றன என்பதைப் புத்தரும் வள்ளுவரும் ஏற்கின்றனர்.

'தோற்றம் உண்டேல் மரணம் உண்டு' என்ற புத்தநெறியே வள்ளுவ நெறியுமாகும். இதன் வாயிலாக மக்களுக்கு நிலையாமை உணர்வைப்

புலப்படுத்துகின்றனர்.

பேதைமையால் ஏற்படும் தீமைகளையும் பேதைமையின்மையால் ஏற்படும் நன்மைகளையும் புத்தரும் வள்ளுவரும் ஒருசேரக் கூறுகின்றனர்.

வாழ்வில் ஏற்படும் இன்ப, துன்பங்களுக்கு அவரவர் செயல்களே காரணமாகும். ஆதலால் ஒருவன் தன் நாவைக் காத்து மனதை அடக்கி உடலால் தீமைகள் எதையும் செய்யக்கூடாது என்பது தம்மபதம். தீமை பயத்தலால் தீயசெயல்களைச் செய்யக்கூடாது என்பது திருக்குறள். புத்தரும் வள்ளுவரும் கூறும் முறையில் மாறுபட்டாலும் கூறும் செய்தி ஒன்றே.

அகப்புறப் பற்றுக்களைத் துறந்தவர்கள் தேவர்க்கும் கிட்டாத உயர்ந்த வீட்டுலகை அடைவர் என்னும் அறநெறியை மூன்று அற நூலாரும் எடுத்துரைக்கின்றனர்.

ஆசைகளை வேருடன் களைதல் வேண்டும் என்பது பௌத்தநெறி. இந்நெறியை வள்ளுவரும் வலியுறுத்துகிறார்.

உலகம் நிலையாதது; உலகப்பொருட்கள் நிலையற்றவை என்ற கருத்துக்களைத் தம்மபதமும் திருக்குறளும் விளக்குகின்றன. மக்கள் நிலையாமையை உணர்ந்து பேரின்பம் அடைவதற்கு வழிகாட்டுகின்றன.

துறவறத்தை மூன்று நூலாரும் விரித்துக் கூறுகின்றனர். காமஞ்சான்ற கடைக்கோட்காலை மேற்கொள்ளும் மணந்த துறவை மனு வலியுறுத்துகிறார்; இளமைத்துறைவைப்புத்தர் வலியுறுத்துகிறார் ; துறவு மேற்கொள்வதை வள்ளுவர் மறுக்கவில்லை.

துறவியர் உண்ணவேண்டிய • உணவு, உணவின் அளவு முறைகளைப் புத்தரும் மனுவும் வரையறுத்துள்ளனர். துறவியர் உணவுபற்றி வள்ளுவர் குறிப்பிடவில்லை.

போலித்துறவை மூன்று அறநூலாரும் ஏற்கவில்லை.

கொல்லாமை என்னும் அருளறத்தைப் புத்தர் நாடெங்கும் பரப்பினார்; மனுவும் வள்ளுவரும் கொல்லாமையை வலியுறுத்துகின்றனர்.

மகளிர் துறவை மூன்று அறநூலாரும் வற்புறுத்தவில்லை. மகளிர் விரும்பினால் துறவு மேற்கொள்ளலாம் என்பதே மூவரின் துணிபு.

பௌத்த சமயம் உணர்த்தும் துக்கம், துக்ககாரணம், துக்க நிவாரணம், துக்கநிவாரண மார்க்கம் என்னும் நான்கு வாய்மைகளையும் தம்மபதம் விரித்துரைக்கிறது.

பிறப்பு துக்கமானது. பிறப்பைப் தொடர்ந்து பிணியும் மூப்பும் நெருங்குவது இயல்பு. ஆதலால் மனிதன் தன் அறிவினால் நிருவாணப் பேற்றிற்கு வேண்டிய நல்வினைகளை விரைந்து செய்தல் வேண்டும் என்று புத்தர் வலியுறுத்துகிறார். இக்கருத்து தருமசாத்திரத்திலும் வள்ளுவத்திலும் காணப்படவில்லை.

கருத்தோடு முறைப்படி ஒருவன் தியானம் செய்தல் வேண்டும். தியான சமாதியே ஆன்மீக விடுதலைக்கு அடிப்படையாகும் எனக்கூறித் தியானத்தை வலியுறுத்தும் நெறியைத் தம்மபதத்தில் மட்டுமே காணலாம்.

மனிதர்கள் தனித்து நின்று வெற்றிபெற முடியாது என்பதால் புத்தர், சங்கம், தருமம் என்ற மூன்று புகலிடங்களைச் சரணடைய வேண்டும் என்ற கொள்கையைப் புத்தர் மட்டுமே வலியுறுத்துகிறார்.

ஆசைகள் அவிந்து அறியாமை அகன்றநிலையில் கிடைப்பது நிருவாணம். இப்பிறவியிலேயே, இவ்வுலகிலேயே நிருவாண இன்பம் கிட்டும் என்பது பௌத்த நெறி. இந்நெறி தருமசாத்திரத்திலும் குறளிலும் காணப்படவில்லை.

பிரணவமந்திரத்தின் விளக்கம் மனுதருமத்தில் மட்டுமே கூறப்பட்டுள்ளது.

மனுவின் காலத்தில் இறந்தோர் வழிபாடும் வழக்கில் இருந்தது. வள்ளுவத்தில் தென்புலத்தார் கடன் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. ஆனால் வள்ளுவர் அச்சடங்கு முறைகள் பற்றி விரிவாகக் கூறுவில்லை.

# 6. தனிமனித அறம்

## முன்னுரை

சமுதாயத்தில் ஓர் அங்கமாகக் கருதப்படுபவன் தனிமனிதன். " சமுகத்திலிருந்து எந்தவொரு தனிமனிதனும் வேறுபட்டு வாழமுடியாது. சமுக இயக்கங்களை நீக்கித் தனியாக வாழும் மனிதனைச் சமுகம் புறக்கணித்து விடுகிறது. மனிதன் சமுகத்தோடு சிக்கலற்ற உறவுநிலைகளைக் கொண்டிருக்க வேண்டுமெனில் சமுகம் போற்றகின்றவற்றைப் போற்றியும் தவிர்ப்பனவற்றை நீக்கியும் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்."[1] இந்நெறியை அறநூல்களும் வலியுறுத்து கின்றன.

## செய்ய வேண்டுவன

தனிமனிதன் மேற்கொள்ள வேண்டிய ஒழுகலாறுகள் இவையென்று வகுத்துரைக்கப்பட்டுள்ளன. அவை தனிமனித அறங்கள் எனக் கொள்ளப்பட வேண்டும். மனத்துக்கண் மாசின்மை, அறவழி நிற்றல், அன்புடைமை, அவாவறுத்தல், கற்றல், கடமையைச் செய்தல், சொல்லிய செய்தல், தன்குற்றம் நோக்கல், தன்னடக்கம், மனவடக்கம், நாவடக்கம், தெளிவுடைமை, நல்லார் நட்பு, நட்பின்பயன், பண்புடைமை, பொறை உடைமை, நல்வினை ஆகியன ஒவ்வொருவருக்கும் நல்வாழ்க்கைக்கு வேண்டப்படுவன.

## மனத்துக்கண் மாசின்மை

மனஇயல்புகளை ஊடுருவி ஆராய்ந்த சிறப்பு பௌத்தத்திற்கே உண்டு. தம்மபதத்தில் மனத்தூய்மை சிறப்பாகச் சுட்டப்பட்டுள்ளது. அது மாசுகளையும், அவற்றால் விளையும் தீப்பயன்களையும், மனத் தூய்மையினையும், அதனால் விளையும் நன்மையினையும் தெளிவாகச் சுட்டுகிறது."

"மனமாசுகள் நீங்காமல் எவன் அடக்கமும் உண்மையும்
இல்லாதவனோஅவன் சீவர உடைக்கு அருகனல்லன்" (த.9)

1. கே.எம்.கே. கோமதி சங்கர், சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம், ப. 1.

"மனமாசுகள் நீங்கி எவன் சகல சீலங்களிலும் நிலைத்து நின்று அடக்கமும் உண்மையும் உள்ளவனோ அவனே சீவர உடைக்கு உரியவன்" (த.10)

என்பன தம்மபதம் குறித்த செய்திகள். இப்பகுதியின் சாரம்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" (குறள். 34)

"உள்ளதால் உள்ளலுந்தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வே மெனல்" (குறள். 282)

என்ற குறட்பாக்களின் சாரமும் ஒத்துள்ளன.

"தூய்மை அற்றமனம் தானும் பண்படுவதில்லை. பிறர்க்கும் பயன்படுவதில்லை. தூய்மையே மனத்தின் ஆற்றல். தூய்மைமிக மிக ஆற்றலும் பெருகும். தூய்மையுள்ள மனமே முழுவதும் பயன்படும். முழுவாழ்வு வாழும். மனத்தூய்மையே அறத்தின் அடிப்படை"[1] என்ற வள்ளுவரின் அறக்கோட்பாட்டின் அடிப்படை மனத்தூய்மையில் அமைந் துள்ளது. புத்தரின் அறங்களுக்கு ஆணிவேர் மனத் தூய்மையில்தான் ஆழ்ந்திருக்கிறது.

மனமாசுடன் பேசும் சொல்லும் ஆற்றும் வினையும் வெறும் ஆரவாரத்தைப் போன்றனவே தவிர அறம் ஆகா என்பதை இருபெரும் சான்றோரும் எடுத்துரைத்துள்ளனர். எனினும் துறவறம் போற்றிய புத்தர் துறவிகளுக்கு மட்டுமே மனத்தூய்மை தேவை என்று கூறுகிறார். உலகப் பொதுமறை பாடிய வள்ளுவர் உலகோர் யாவருக்கும் மனத்தூய்மை இன்றி யமையாதது என வலியுறுத்துகிறார். மனத்தூய்மைபற்றி மனு குறிப்பிடவில்லை.

## அறவழி நிற்றல்

இல்வாழ்க்கையில் தொடங்கும் உலகவாழ்க்கை அறத்தை அடிப்படையாகக் கொண்டது. இல்லறத்திலிருந்து துறவறத்தை மேற் கொண்ட புத்தரும் ஆங்காங்கு சில இடங்களில் அறத்தை விரித்துள்ளார். அறம் என்பது யாது? எண்ணமா? சொல்லா? செயலா? எனில் சொல்லன்று. செயலே அறம் என்பதைப் புத்தர்பெருமான்,

1 மு. வரதராசன், திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம், ப. 279.

"அதிகமாகப் பேசுவதால் மட்டும் ஒருவன் அறத்தை ஆதரிப்பவனாகி விடமாட்டன். அறவிதிகளைச் சிறிதளவே அறிந்தவனாயினும் ஒருவன் தன்வாழ்வில் மன, மொழி, மெய்களால் அறத்தை உணர்ந்து தருமம் தவறாமல் நடந்தால் அவனே அறத்தை ஆதரிப்பவன்" (த.257)

என்று கூறுகிறார்.

ஒருவன் உயர்நிலையை அடைவதற்கு அறநெறியே சிறந்த வழிகாட்டியாக அமைகிறது. ஆதலால் உண்மை அறத்தை அறிந்த ஒருவரது ஒரு நாளைய வாழ்க்கை, அவ்வுண்மை அறத்தைக் காணாதவரது, நூறு ஆண்டுவாழ்வைவிட மேலானது (த.163). அத்தகு நல்லோர் அறத்தை அறிந்து அதை நல்லோர்களிடையே பரப்புகிறார்கள். அதைக் கேட்டறிந்து அறவழியில் நடப்போர் இம்மையிலும் மறுமையிலும் நலம்பெறுவர் (த.167). அதனால்தான் புத்தரும்,

'அறநெறியைக் கடைப்பிடித்து ஒழுகு' (த.167)

'தரும ஒழுக்கத்தில் நடப்பாயாக' (த.169)

என்று ஆணையிடுகின்றார்.

அறநெறியைப் பின்பற்றுவோர் பிறவிப்பெருங்கடலின் மறுகரையை அடைவர்; கூற்றுவனையும் வெல்வர்; இன்பத்தில் திளைப்பர் (த.79) என்பதும் தம்மபதக் கூற்றாகும். இதனை,

"நல்லறவுரையின்படி நடக்கிறவர் கடத்தற்கரிய மரணத்தைக் கடந்து வீடுபேறு என்னும் மறுகரையை அடைவர்" (த.86)

என்ற கருத்துக்களும் புலப்படுத்துகின்றன. இவற்றால் ஒருவன் வாழ்நாளில் செய்யத்தக்கது அறமே; பின்பற்ற வேண்டியதும் அறநெறியே. பிறவாமைக்கு அறமே வித்தாகும் என்பது தெளிவு.

புத்தரின் போதனையின் விளக்கங்களாக,

"அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை" (குறள். 36)

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாய்எல்லாஞ் செயல்" (குறள். 33)

என்ற குறட்பாக்கள் அமைந்துள்ளன.

## அன்புடைமை

அறம், மறம் என்னும் இருபாதையிலும் அன்பு பீடுநடை பயில்கிறது. அதன் முழுஇயல்பையும் அறியாதார் அன்பு அறத்திற்கே சார்பெனக் கருதுகின்றனர். இந்த அறியாமையை அகற்ற விரும்பிய புத்தர்,

"பகைமை பகைமையால் தணிவதில்லை
பகைமை அன்பினாலே தணியும்" (த.5)

என்று தம்மபதத்தில் மொழிந்துள்ளார். இம்மொழியின் நகலாக,

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" (குறள். 76)

என்ற குறள் அமைந்துள்ளது. பகையைப் போக்குவதற்கு அன்புநெறியைப் பின்பற்றும் இருநூலாரின் போக்கு போற்றற்குரியது. ஏனெனில் அன்புணர்வால் கொலையாளிகளையும் கொள்ளையர்களையும் திருத்தலாம் என்பது தெளிவு. அன்புடைமை பற்றி மனுநூலார் குறிப்பிடவில்லை.

## அவாவறுத்தல்

ஆசையை, அனல் (த.200) என்றும், பெருநோய் (த.201) என்றும் புத்தர் கூறியுள்ளார். பன்னிரு சார்புகளில் அவாவும் ஒன்று. ஆசைகளே பிறவிக்கு வித்தாகும் என்பதைத் தம்மபதம்,

"சிந்தனையில்லாமல் திரியும் மனிதனுக்கு அவா மாலுவக்
கொடிபோல் வளர்கிறது. வனத்திலே வானரம் பழத்தை
நாடி அங்குமிங்கும் தாவித்திரிவது போல் அவன் எடுக்கும்
பிறவிகளுக்கு அளவில்லை" (த.332)

என்று இயம்புகிறது. இக்கருத்தினை வள்ளுவரும்,

"அவாவென்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து" (குறள். 361)

என்று எதிரொலிக்கிறார்.

அவாவை அறுத்தவனே நிருவாணம் அடைகிறான் என்றும் தம்மபதம் கூறுகிறது. இதனை,

'சகல துன்பங்களையும் அவாவின்மை வெல்கிறது' (த.352)

என்ற கருத்தால் அறியலாம். இக்கருத்து,

'அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம்' (குறள். 368)

என்ற திருக்குறளிலும் படிந்துள்ளது. மேலும்,

'ஆசையும் வெறுப்பும் அற்றவனுக்கு விலங்குகள் இல்லை' (த.209)

"ஆசையற்றவனுக்குச் சோகமில்லை
'பயம்தான் ஏது?" (த.210)

"புத்தருடைய சீடன் ஆசைகளை
அழிப்பதில் இன்புறுவான்" (த.185)

என்று தம்மபதம் குறிக்கிறது.

அவாவை அழித்தவனுக்கு இப்பிறவி இறுதி (த.350). ஆதலால் அவன் முக்தி அடைந்தவன் (த.351) என்றும் கூறுகிறது. இவற்றின் சாரத்தை வள்ளுவர்,

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்" (குறள். 370)

என்ற குறளாக வடித்துள்ளார். பிறவிக்கு வித்தாகிய அவாவை அறுத்தால் பேரா இயற்கையாகிய வீடுபேற்றினை அடையலாம் என்பது இருநூலாரின் கருத்தாகும்.

## கற்றல்

சமுதாயத்தில் மக்கள் நெறியோடு ஒழுகுவதற்குக் கல்வி கற்கின்றனர். அவ்வாறே கற்றவர், வெறுப்பு, அச்சம், ஆரவாரம் இவைகளின்றி அமைதியாளராக இருத்தல் நன்று.

"அதிகமாகப் பேசுவதால் ஒருவன் கல்விமான் ஆகிவிடமாட்டான்.

வெறுப்பு இன்றியும், அச்சமின்றியும், அமைதியாக எவன் இருக்கிறானோ அவன் கல்விமான்" (த.258)

"சாத்திரங்கள் அனைத்தையும் கற்று ஒப்பித்தாலும் வாழ்க்கையுல் அவற்றின்படி நடக்காதவன் ஊரார் பசுக்களைக் கணக்கிட்டு எண்ணும் ஆயனைப்போன்றவன், சமயவாழ்வில் சமணன் அடைய வேண்டிய பயனை அவன் பெறமுடியாது" (த.19)

என்ற தம்மபதக் கருத்துக்கள் கருதத்தக்கன.

கற்ற சாத்திரங்களுக்கேற்ப செயல்படுவோன் சமணன் எனப்படும் பௌத்த தருமத்தைப் பின்பற்றுவோன் ஆவான். இயற்கையாகவே அமைந்துள்ள அறிவோடு நூற்கல்வியும் கேள்வி வாயிலாகப்பெறும் செயற்கை அறிவும் சேர்ந்து மக்கள் வாழ்க்கை சிறப்பது போன்று மாக்கள் வாழ்க்கை சிறவாது. ஆதலால், " கல்வியறிவு இல்லாதவன் மாடுபோல் முதிர்ந்து வளர்கிறான். அவனுடைய ஊன்தான் பெருகுகிறது. ஆனால் அறிவு வளர்வதில்லை (த.150). ஆதலால் அறிவு முதிர்ச்சியால் நற்பயன் உண்டு; வயது முதிர்ச்சியால் எப்பயனும் இல்லை என்ற கருத்து புலப்படுகிறது.

## சொல்லிய செய்தல்

வாழ்க்கை என்பது நல்லொழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. சொல்லும் செயலும் இணைந்து நடைபெறாத வாழ்க்கை போலிவாழ்க்கையாக, பகட்டு வாழ்க்கையாக அமைந்துவிடும். இரண்டும் இணைந்த வாழ்க்கை பெருமையையும் புகழையும் நற்பயனையும் கொடுக்கும். இதனைத் தம்மபதம்,

"அழகும் நல்லநிறமும் உடைய மலர் மணமற்று இருப்பின் பயன்படாதது போல, தான் சொன்னவண்ணம் நடவாத வனுடைய பேச்சும் பயன்படுவது இல்லை" (த.51)

"அழகும் நல்ல நிறமும் உடைய மலர் நறுமணமும் பொருந்தி இருப்பின் பயன்படுவது போல் தான் சொன்னபடி நடக்கும் ஒருவனது நன்மொழிகளும் தக்க பலனை விளைவிக்கும்" (த.52)

என்ற இரட்டைச் செய்யுட்களால் புலப்படுத்துகிறது.

இவ்வாறே வள்ளுவரும், 'கற்ற பொருளைப் பிறருக்கு எடுத்துக் கூறியும், தான் அவற்றின்படி நடக்காதவனைப் பேதை என்று சாடுகின்றார். இதை,

"ஓதிஉணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல்" (குறள். 834)

என்ற குறள் புலப்படுத்துகிறது.

சொல்லியவாறு செய்தல் வேண்டும் என்ற அறநெறியைப் புத்தரும் வள்ளுவரும் ஒருசேர வலியுறுத்துகின்றனர். ஆனால் மனுவின் நூலில் இவ்வறம் இடம்பெறவில்லை.

## தன்குற்றம் நோக்கல்

"தனிமனிதன் கையாளும் அறப்பாங்கு சமுதாயத்தைத் தழுவியதாக இருத்தல் வேண்டும். தன்னைத்தான் அறிதல் மனிதனின் தலையாய கடமை. தன்னை அறிந்தவன், தான் எவ்வாறு ஒழுக வேண்டும் என்பதையும் அறிவான். சமுதாயத்திற்கும் மனிதனுக்கும் ஓர் அறப்பிணைப்பு இருக்கிறது."[1] அதனால் சமூக நலத்தை நாடுபவன் தன் குறைகளையும் தான் செய்த குற்றங்களையும் நோக்கவேண்டும். பிறர் குற்றங்களையும் செயல்களையும் நோக்கற்கூடாது. ஆதலால்,

"தன் குறைகளையும் தான் செய்யத் தவறியவைகளையும்
சிந்தித்துப்பார்க்கவேண்டும். பிறருடைய குறைகளையும்
பாவச்செயல்களையும் கவனிக்க வேண்டாம்" (த.50)

என்று தம்மபதம் வலியுறுத்துகிறது. இதற்கேற்ப,

"ஏதிலார் குற்றம்போல் தங்குறறங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு" (குறள். 190)

என்ற திருக்குறளும் காணப்படுகிறது. பிறர் குறைகளை நோக்கினால் புறங்கூறல் என்னும் பாவச்செயலுக்கு ஆளாகுவதோடு அதனால் பூசலும் விளையும் எனவே தன் குறைகளை மட்டும் நோக்கினால் திருந்த வாய்ப்புண்டு என்பதை இருநூல்களும் வலியுறுத்துகின்றன. தருமநூலில் இச்செய்தி பற்றிக் கூறப்படவில்லை.

---

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி–2, ப. 37.

## தன்னடக்கம்

இல்வாழ்க்கை முடிந்தநிலைக்குத் தன்னடக்கம் வேண்டற்பாலது. மனம், மொழி, மெய் என்பவற்றைத் தன்னாட்சியின்கீழ் வைத்திருக்கும் ஆற்றல் வேண்டும். அந்த ஆற்றல் வாய்ந்த வாழ்வே சிறந்த வாழ்வு. பதினாயிரக்கணக்கான வீரர்களைப் போர்க்களத்தில் வென்ற வீரனையும் தன்னைத்தானே அடக்கிவென்ற வீரனையும் எடுத்துக்காட்டித் தன்னடக்கத்தைப் புத்தர்பெருமான் விளக்குகிறார் (த.103).

தன்னைத்தானே வெற்றிகொள்வது என்பது யான், எனது, என்னும் செருக்கையும் அவாவையும் அறுத்தலைக் குறிக்கும். ஆதலால் தன்னை வென்ற வீரனை மேலோரும், கந்தருவரும், மாரனும், பிரமனும் கூட வெல்லமுடியாது (த.105). தன்னை அடக்கப் பண்படுத்திக்கொண்டவன், தானே தனக்குத் தலைவனாவான். அவனால் பிறரையும் பண்படுத்தி அடக்க இயலும் (த.160). அடங்கி, அமைதியாக வாழ்வதென்றால், வெறுமனே இருப்பதன்று. ஐம்புலன்களும் ஒடுங்க இருப்பதன்று. ஐம்புலன்களை நன்னெறியில் செலுத்துவதும், தீய நெறியில் செல்லவிடாமல் தடுப்பதும் தன்னடக்கமாகும். இத்தன்னடக்கம் உடையவர் அறிஞராகப் போற்றப்படுவதை,

> "அம்பை நேராக நிமிர்த்துபவர் வில்லாளிகள், மரத்தில்
> சித்திரங்கள் பொறிப்பவர் தச்சர். தம்மைத்தாமே அடக்கி
> ஆள்பவர் அறிஞர்" (த.80)

என்ற கூற்றால் அறியலாம்.

அடக்கம் ஒருவனை உயர்த்தவல்லது; சிறந்த நன்மக்களிடம் சேர்க்கவல்லது. அதனால் அடக்கத்தை உறுதிப்பொருளாகக்கொண்டு போற்றிக் காக்கவேண்டும். உயிர்க்கு ஆக்கம் நல்குவது அதைவிட வேறு இல்லை என்பதை,

> "காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
> அதனினூஉங் கில்லை உயிர்க்கு" (குறள். 122)

> " அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
> ஆரிருள் உய்த்து விடும்" (குறள். 121)

என்ற குறட்பாக்களில் வள்ளுவர் புலப்படுத்தியுள்ளார். இதனால் அடக்கம்

என்பது ஒன்றும் செய்யாமல் வாளா இருப்பதன்று. அடக்கம் வேறு; ஒடுக்கம் வேறு; ஒடுக்கம் என்பது ஐம்புலன்களையும் தொழில் செய்யாத வாறு ஆற்றல் ஒடுங்கியிருக்கச் செய்வது. அடக்கம் என்பது ஐம்புலன்களையும் வேண்டியபோது தொழில் செய்யவிட்டு, வேண்டாதபோது ஆற்றலுடன் அடங்கியிருக்கச்செய்வது. அது ஆமை போன்ற நிலை. அவ்வாறு அடக்கும் வல்லமை பெற்றால் எழுமைக்கும் காவலாக அமையும் என்பதை,

> "ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
> எழுமையும் ஏமாப் புடைத்து" (குறள். 126)

என்று விளக்குகிறார் வள்ளுவர். இவ்வாறு அடக்கமுடைமையைப் புத்தரும் வள்ளுவரும் வலியுறுத்துகின்றனர்.

### மனவடக்கம்

எண்ணத்தாலும் பேச்சாலும் செயலாலும் அறத்தைத் போற்றி வாழவேண்டுமானால் மனம், மொழி, மெய் என்பவற்றைத் தன் ஆட்சியின்கீழ் வைத்திருக்கும் ஆற்றல் வேண்டும். மனம் முதலியவை அடங்கி ஒத்துழைக்கும் வாழ்வே சிறந்தது.அடக்கத்தில் சிறந்தது மனவடக்கமாகும். மனதை அடக்கினால் பிறபுலன்களும் தாமே அடங்கிவிடும். உருவமற்ற மனம் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டே இருக்கும். இதயமாகிய குகைக்குள் அது அடைந்தும் கிடக்கும். இத்தகு இயல்புடைய மனதை, வேடன் வில்லை நிமிர்த்துவது போல அறிஞர்கள் நிமிர்த்தி நேரியதாக வைத்துக்கொள்வர். இவ்வாறே, மனதை அடக்கிப் பயின்றவர்கள் மாரனிடமிருந்து விடுதலை பெறுவர் (த.37) அதனால், "தாய், தந்தையர், உற்றார் உறவினர் செய்யும் நன்மையைக் காட்டிலும் அடக்கமுள்ள மனம் ஒருவனுக்கு அதிக நன்மையைச் செய்கிறது (த.43). "கோவேறு கழுதைகளும் சிந்துநாட்டு உயர்சாதிக் குதிரைகளும், போர் யானைகளும் பயிற்சி பெற்றபின், சிறந்தவைகளாகக் கருதப்படுகின்றன. ஆனால் அடக்கமுடையவன் இவை அனைத்திலும் சிறந்தவன்" (த.322) என்கிறார் புத்தர். ஏனெனில் இந்த விலங்குகளால் நிருவாணப்பேற்றைப் பெறமுடியாது. மனப்பயிற்சியுள்ளவன் நிருவாணப்பேற்றை அடைகிறான் (த.223). எனவே அடக்கி ஆள அரிதான மனதை அடக்கினால் மகிழ்வடையலாம் என்பது புத்தநெறி.

மனத்தில் வெகுளி இல்லாமல் காத்து, கற்பன கற்று, அடங்கி

ஒழுகவேண்டும். அவ்வாறு ஒழுகுபவனை அறம் தானே தேடிவரும் என்பது குறள்நெறி. இதனை,

"கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செல்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து" (குறள். 130)

என்ற குறட்பாவால் அறியலாம். கல்வி வாயிலாக, மனத்தைத் தூய்மைப் படுத்திக்கொள்ள வேண்டும்.

இங்ஙனம் மனவடக்கத்தின் இன்றியமையாமையைத் தம்மபதமும் வள்ளுவமும் வலியுறுத்துகின்றன. மனுதருமத்தில் இவ்வறம் பற்றிக் கூறப்படவில்லை.

## நாவடக்கம்

அடக்கத்தில் சிறந்தது நாவடக்கம். நாவை அடக்கத் தவறினால் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்பப்பட நேரும். ஏனெனில் பல நல்ல சொற்களைக் கூறியிருந்தும் அவற்றில் ஒன்றாயினும் தீய சொல்லாய் இருந்து தீயபொருட்பயன் உண்டானால் மற்ற நல்ல சொற்களின் நன்மையும் கெட்டுவிடும். இதனால் நாவை அடக்கியுள்ள ஞானிகளே உண்மையான நல்லடக்கம் உடையவர்கள் என்பது புத்தரின் பொருளுரை. இதனை,

"நா அடக்கத்தில் பழகவேண்டும். வாக்கினால் உண்டாகும்
தீமையை ஒழித்து நல்லொழுக்கத்தைப் பேணி வரவும்" (த.230)

என்று தம்மபதம் கூறுகிறது. நாவடக்கத்தின் இன்றியமை யாமையை வள்ளுவரும்,

"ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்" (குறள். 128)

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு" (குறள். 129)"

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" (குறள். 127)

என்ற குறட்பாக்களில் கூறியுள்ளார். இருநூலாரும் கூறும் முறையில் சிறிது

வேறுபட்டிருந்தாலும் நாவடக்கத்தையே வலியுறுத்தி யுள்ளனர். மனுதருமத்தில் நாவடக்கம் பற்றி எடுத்துரைக்கப்பட்டவில்லை.

## தெளிவுடைமை

ஐயத்தை அகற்றிய தெளிவுடையார், மெய்ப்பொருளை அடைவர் என்பதை,

> "மெய்யை மெய்யாகவும் பொய்யைப் பொய்யாகவும் காணும்
> தெளிவுடையார், மெய்ப்பொருளை அடைவார்கள். அவர்களே
> மெய்யான வேட்கை உடையவர்கள்" (த.12)

என்ற புத்தரின் பொன்மொழி எடுத்துரைக்கிறது.

மயக்கத்தைக் களைய வள்ளுவரும் வழிகாட்டியுள்ளார். சான்றாக,

> "ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
> வானம் நணிய துடைத்து" (குறள். 353)

> "இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
> மாசறு காட்சி யவர்க்கு" (குறள். 352)

என்ற குறள்களைக் கூறலாம். மனிதன் பேதைமையிலிருந்து நீங்கி மெய்யறிவு பெற இருநூல்களும் வழிகாட்டி வரவேற்கின்றன. மனுவின் நூலில் இவ்வறம் கூறப்படவில்லை.

## நல்லார் நட்புக்கோடல்

"இயல்பாக நல்லுணர்ச்சி வாய்க்கப்பெற்றவராயினும், அறிவின் ஆற்றல் பெறாதபோது வாழ்வின் மேடுபள்ளங்களில் தடுமாறுவர். அன்னவர் நல்லாரைச் சேர்ந்து வாழ்ந்தால் நன்னெறியில் செல்வர். அவப்பேறாக அவருக்குச் சிற்றினம் அமைந்துவிட்டால் அறம் திறம்பிக்கெடுவர்."[1] அதனால் ஒவ்வொருவரும் தம் சுற்றச்சார்பும், நட்பினரும், பணி மக்களும் பிறரும் நல்லோராக இருக்குமாறு தேர்ந்து கோடல் நன்மை பயக்கும். தீயாரை நீக்கி நல்லாரைத் துணைக்கொண்டு வாழவேண்டும்.

---

1. எஸ். இர்ாமகிருஷ்ணன், கம்பன் கண்ட அரசியல், ப. 67.

"நல்லாரைக் காண்பது நன்று
அவரோடு இணங்கி இருப்பது எப்போதும் இன்பம்" (த.204)

என்பது புத்தரின் அறநெறியாகும். "ஞானியாயும், பேரறிவாளனாயும், கல்விமானாயும், பொறுமை உடையேனாயும், கடமை உணர்ந்தோனாயும், மேலோனாயும் இருப்பவர் நல்லோராவர்" (த.205). அத்தகு அறிவாளரின் இணக்கம் சுற்றத்தாரோடு பழகுவதைப் போல் இன்பமே பயக்கும் (த.205). ஆதலால் நட்சத்திர மண்டலத்தின் வழியைச் சந்திரன் பின்பற்றுவது போல நல்லோரை நாடிச் செல்ல வேண்டும். நல்லொழுக்கம் உடைய தோழன் கிடைப்பானாகில் எல்லா இடையூறுகளையும் கடந்து அவனுடன் கருத்தோடும் மகிழ்ச்சியோடும் நட்புக் கொள்ள வேண்டும் (த.326) என்பது தம்மபதம் காட்டும் நல்வழியாகும்.

வள்ளுவரும் நல்லறிவுடையார் நட்பையே வலியுறுத்துகிறார். நல்ல பண்புடையவரின் நட்பை,

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு" (குறள் 783)

என்று உவமையால் விளக்குகிறார். உள்ளம் கலங்காமல் முகநக நட்டலையும், நகுதற் பொருட்டு நட்டலையும் வள்ளுவர் கடிகின்றார். பொழுது போக்கிற்குத் துணையாக இருந்து கெடுக்காமல், வாழ்க்கைக்குத் துணையாக இருந்து திருத்தவல்லவர்களையே நண்பர்கள் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

பண்புடையாரைத் துணையாகக் கொண்டால் வன்மையுள் வன்மையாகும். தவறு கண்டபொழுது அல்லது அறியாமை மிகும் பொழுது இடித்துக்கூறி, அறிவுரை பகர்வோரை நட்பாகக் கொள்வோரைத் தீயோர் நெருங்கார். அவர்களால் தீமை செய்யவும் இயலாது. அந்த அளவிற்கு நல்லோர் நட்பு நன்மை பயக்கும்.

"ஒருவனிடம் காணப்படும் குற்றம் குறைகளைச் சுட்டிக் காட்டிக் கண்டிக்கும் அறிஞரைக் காணநேரின், செல்வப் புதையலைத் தனக்குக் காட்டிய அறிஞராகக் கருதி அவரைப் போற்ற வேண்டும். அந்த நட்பு நன்மை செய்யுமேயன்றித் தீமை செய்யாது" (த.76)

என்பது இதுகுறித்த புத்தநூற் செய்தியாகும்.

வள்ளுவரும், 'நட்புக் கொள்வது ஒருவரோடு ஒருவர் சிரித்து நகையாடுவதற்காக அன்று', தகாதன செய்து வரம்பு மீறும் போது முந்திச் சென்று கண்டிப்பதற்காகவே ஆகும். அழிவு தரும் கெட்ட வழியிலிருந்து நீக்கி நல்வழியில் செலுத்துவதே நட்பாகும்' என்று கூறியுள்ளார். இதனை

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு" (குறள். 784)

"அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு" (குறள். 787)

என்ற குறட்பாக்களால் அறியலாம். இக்கருத்திற்கேற்ப வேமனரும்,

"துணியில் இருக்கும் அழுக்கை நீக்கித் தூய்மைப்படுத்தும்
வண்ணான், அதனைத் தன் வலிமை எல்லாம் காட்டி அடித்துத்
தூய்மைப்படுத்துவது போன்று, பெரியோர் தம்மோடு சேர்ந்தவர்
தீயபண்பால், தீயசெயல்கள் செய்ய முனையும் பொழுது
இடித்துக்கூறி அவர்களை நல்வழிப்படுத்துவர் என்று
கூறுகிறார்"[1]

பண்புடைமை

பெருமை, சான்றாண்மைகளில் வழுவாது நிற்கும் சான்றோர், சமுதாய வாழ்க்கையில் தாம் பழகி ஊடாடி வாழ்க்கை நடத்தும் பலரின் இயல்புகளை அறிந்து ஒழுகுவர். ஆன்ற குடிப்பிறந்து, அன்பு கொண்டு அதனால் நல்லன செய்வோராய் அமைவர். இதுவே பண்புடைமையாகும். இப்பண்புடையாரின் இயல்பையும் மேன்மையையும்,

"ஒழுக்கம், பண்பு, மெய்யுணர்வு, அறத்தில் பிடிப்பு, நேர்மை, பிறர் அலுவல்களில் தலையிடாமல் தனது அலுவல்களை மட்டும் கவனித்தல் ஆகிய பண்புகள் உள்ளவரை உலகம் அன்போடு அரவணைத்துக் கொள்கிறது" (த.215)

என்று தம்மபதம் சிறப்பிக்கிறது.

---

1. தர்மாரெட்டி, வள்ளுவரும் வேமனாரும் – ஓர் ஒப்பாய்வு, ப. 132.

இக்கருத்திற்கு அரணாக வள்ளுவரும்,

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்" (குறள். 996)

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு" (குறள். 994)

என்று பண்புடையாரின் மேன்மையைப் பாராட்டுகின்றார். ஏனெனில், 'உப்பும் கற்பூரமும் தோற்றத்தில் ஒத்திருந்தாலும் அவற்றின் பண்பில் வேறுபடுகின்றன. எனவே மக்களுக்குள்ளும் அன்பும் அறனும் பண்பும் வாய்ந்த மக்களும் உண்டு. அவையற்றாரும் உண்டு."[1] ஆனால் பாடறிந்து ஒழுகும் பண்புடையாளரையே இவ்வுலகம் வரவேற்கிறது என்பது தெளிவு. பண்புடைமை பற்றி மனு குறிப்பிடவில்லை.

## பொறை உடைமை

"அடக்கத்தின் பெருமையை அறிந்து கொள்ளாத பலரும் அடங்கி நடப்போரை ஏளனப் பொருளாக எண்ணி அலட்சியப்படுத்துவதுண்டு. சிலபோது அவர்தம் பொறுமையைச் சோதிக்கவும் முன்நிற்பர். அப்போதும் அசையாதிருந்தால் அதைவிடப் பெருந்தவம் வேறொன்றுமில்லை."[7] தம்மபதம் நெடுங்காலம் துன்பத்தைத் தாங்கும் பொறுமையையே முதன்மையான தவம் என்று கூறுகிறது. இக்கருத்தின் எதிரொலியாக,

"பொறுத்த லிறப்பினை யென்றும் அதனை
மறுத்த லதனினும் நன்று" (குறள். 152)

என்ற குறள் காணப்படுகிறது. பொறுமையே தவம் என்று புத்தர் கூற, பிறர் செய்த தீமைகளைப் பொறுப்பதோடு மறுக்கவும் வேண்டும் என்று வள்ளுவர் கூறியிருப்பது புத்த நெறியினும் சிறப்பினதாகும். மேலும் பொறுமைக்கு நிலத்தை உவமையாகக் கூறும் மரபு பௌத்த நூலிலும் திருக்குறளிலும் காணப்படுகிறது. தம்மபதம்,

"பூமியைப்போன்ற பொறுமையுடனும் வீட்டுநிலை போன்ற
உறுதியுடனும், சேறில்லாமல் தெளிந்த நீர்நிலை போன்ற
தூய்மை உடையவனுக்குப் பிறப்புமில்லை இறப்புமில்லை" (த.95)

1. கா. செல்லப்பா, *திருமந்திரமும் தம்மபதமும்*, ப. 59.
2. தே. ஆண்டியப்பன், குறள் கண்ட நாடும் வீடும், ப. 378.

என்று கூறியிருப்பதால் பொறுமையின்மை பிறப்புக்கு வித்தாகும் என்பது தெளிவு. இதை வள்ளுவர்,

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை" (குறள். 151)

என்று பாடியுள்ளார்.

இன்னல்களைத் தாங்கி, இகழ்ச்சி உரைகளை ஏற்றுக் கொள்வதில் அறம் இருக்கிறது. அதனால் பொறுமை அறத்தைப் பின்பற்றுவதால் பிறவியிலிருந்து விடுபடலாம். இதுவே எடுக்க நேர்ந்த கடைசி உடம்பாகும் என்பது தெளிவு.

இரு அறநூலாரும் பூமியைப் பொறுமையின் பிறப்பிடமாகக் கூறியுள்ளனர். அதோடு பொறை உடைமையின் இன்றியமையாமையை வலியுறுத்த வள்ளுவர் ஓர் அதிகாரம் அமைத்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

## நல்லது ஆற்றல்

நன்மை செய்தவர் நலம் பெறுவர். தீமை செய்தால் அத்தீமை செய்தவருக்கே திரும்ப வந்து சேர்ந்திடும். ஆதலால் நல்வினையே செய்தல் வேண்டும் என்பது புத்தரின் குறிக்கோளும் எண்ணமும் ஆகும். இதனை,

"நல்வினை செய்தவன் உலகவாழ்வில் இன்பமடைகிறான்.
மறுமையிலும் இன்பமுறுகிறான்; இரண்டிலும் அவனுக்கு
இன்பமே" (த.16)

என்ற தம்மபதக் கருத்துக்களால் அறியலாம். இப்பொருளின் அடிப்படையில்,

"துணைநலம் ஆக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாந் தரும்" (குறள். 651)

என்ற வள்ளுவம் அமைந்திருப்பது நோக்கற்குரியது. நல்வினை செய்தல் வேண்டும் என்பது அனைத்து அறநெறியாளரும் கூறும் பொது அறம் ஆயினும் ஏற்படும் விளைவைக் கூறி, நல்வினை செய்தலை வலியுறுத்தும் முறையில் இருநூலாரும் ஒன்றுபட்டுள்ளனர் என அறியலாம்.

## செய்யக்கூடாதன

தனி மனிதன் செய்யக்கூடாதன பற்றியும் அறநூல்கள் எடுத்துரைக்கின்றன. அவை, பொய்யாமை, புறங்கூறாமை, கடுஞ்சொல் கூறாமை, பயனில சொல்லாமை, கோபம், அழுக்காறு, தற்பெருமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, கொல்லாமை, மருளுடைமை, பேதைமை, தீவினை.

## பொய்யாமை

தாம் கூறும் கூற்றிலிருந்து தவறியொழுகுதல் அல்லது மறைத்துப் பேசுதல் பொய் எனப்படுகிறது. "பொய் பேசுபவர் செய்யத்தகாத பாவம் எதுவுமில்லை" (த.174) ஆதலால் பொய்யாமையைச் சிறந்த சீலமாகப் பௌத்தர்களும் ஏனையோரும் பின்பற்றுகின்றனர். புத்தரும் 'சத்தியமே பேசு' (த.222) என்று ஆணையிடுகின்றார். ஏனெனில்,

> "உண்மையில்லாததைப் புணர்ந்துரைப்பவன் நரகத்தை
> அடைகிறான் ஒன்றைச் செய்துவிட்டு, அதை நான்
> செய்யவில்லை என்போனும் அப்படியே அடைகிறான்.
> மரணத்திற்குப்பின் மறுமையில் இருவரும் நிகராகி நரகம் என்ற
> ஒரே இடத்தை அடைகின்றனர்" (த.304)

இத்தகு, 'பொய்யனை மெய்யால் வெல்லவேண்டும்' (த.221) என்றும் புத்தர் வழிப்படுத்துகின்றார்.

> "பிறனுக்குத் தீங்கு வராமற் காக்கும் பொருட்டுத் தான் உண்மை
> அறிந்தவனாயினும் அதனை மாற்றிக் கூறுவோன்
> சுவர்க்கத்திலிருந்து நழுவமாட்டான்" (மனு.8:103)

> "உண்மையைச் சொன்னால் ஒருவனுடைய உயிருக்கு இறுதி
> நேரிடும் போல் இருந்தால் பொய்யே கூறலாம். அப்பொய்
> மெய்ம்மையினும் சிறந்தது" (மனு.8:104) என்பது மனுநீதி.
> இந்நீதியின் வெளிப்பாடாக,

> "பொய்மையும் வாய்மையிடத்த புரை தீர்ந்த
> நன்மை பயக்கு மெனின்" (குறள். 292)

என்ற குறட்பா அமைந்துள்ளது.

“மனைவியை மகிழ்விக்கவும், ஏதோ காரணத்தால் பிரிந்து விட்ட நண்பர்களை இணைக்கவும், ஆபத்தைப் போக்கவும் பொய் சொல்லலாம். அது தவறாகாது”[1] என்ற நபிகள் நாயகம் கருத்தும் இவண் நோக்கற்கரியது. தன்னலத்திற்காகப் பொய் கூறுவது சிறப்பாகா. பிறனுக்குத் தீங்கு வராமல் காக்கும் பொருட்டுப் பொய்யும் கூறலாம் என்பது மூன்று அறநூலாரின் கருத்தாகும்.

## பொய்ச்சான்று

பொருளாசை, அச்சம், குடிமயக்கம், நட்புரிமை, காமம், வெகுளி, அறியாமை, சிறுபிள்ளைத்தன்மை இவை காரணமாகப் பொய்ச்சான்று கூறப்படுகிறது (மனு.8:118). ஆனால் சட்டத்தில் பொய்ச்சான்று கூறுதல் குற்றமாகும். தமக்குப் பொய் என்று தெரிந்த ஒன்றை மெய்யாகக் கூறுதல் பொய்ச்சான்று எனப்படும். இக்கருத்தை மனுதருமம் பின்வரும் கருத்துக்களால் அச்சுறுத்துகிறது. அவை,

> “பொய்ச்சான்று கூறின் ஆடை இழந்து மொட்டை ஆண்டியாய்,
> கண்ணிழந்து பசி தாகத்தினால அல்லலுற்றுத் தன்
> பகைவனிடமே சென்று பிச்சை கேட்க வேண்டியதாகும்”
> (மனு.8:93)

> “சொற்ப லாபத்திற்காகத் தான் காணாததைக் கண்டதாக
> நீதிமன்றத்தில் பொய் கூறுகிறவன் ஆசை மிகுதியினால்
> மீனை முள்ளுடன் தின்னும் திருடனைப்போல் துன்புறுவான்”
> (மனு. 8:95)

அதனால் உண்மையே கூறுக என்று மனுநீதி அறிவுறுத்துகிறது. அதற்கு மேலும் பொய்ச்சான்று கூறினால் தங்கள் உறவினர்களைக் கொன்ற கொலைக்குற்றமும் வந்து சேரும் என்பதைப் பின்வரும் கருத்துக்களால் வலியுறுத்துகிறது. அவை,

| | | |
|---|---|---|
| ஓராட்டைக் குறித்த பொய் | – | ஐந்துஉறவினரையும் |
| ஒரு பசுவைக் குறித்த பொய் | – | பதின்மரையும் |
| ஒரு பரியைக் குறித்த பொய் | – | நூற்றுவரையும் |
| ஒரு மனிதனைப் பற்றிய பொய் | – | ஆயிரம் உற்றாரையும் |
| பொன்னைப் பற்றிய பொய் | – | பிறந்த, பிறக்கப்போகும் சந்ததிகளையும் |

1. ஆ.வே. இராமசாமி, வள்ளுவர் காட்டும் மனித வாழ்க்கை, ப. 18.

பூமியைப் பற்றிய பொய் — சகல பிராணிகளையும்

(மனு.8: 98, 99)

கொன்றதற்கு ஈடாகும். ஆதலால் இந்த விளைவுகளை எல்லாம் அறிந்து கண்டதையும், கேட்டதையும் உள்ளவாறு கூறவேண்டும் என்பது மனுநெறி. பொய்ச்சான்று கூறுதல், கொலைக்குற்றத்திற்கு ஈடாகிறது. உண்மையை உரைப்பதால் சான்றினன் தூயவனாகின்றான். அறம் வளர்கிறது என்பது தெளிவு. ஆனால் வள்ளுவர் விளைவுகளைக் கூறாமல், பொய் கூறினால் 'தன்னெஞ்சே தன்னைச் சுடும்' (குறள். 293) என வலியுறுத்துவர்.

## புறங்கூறாமை

புறங்கூறுதல் என்பது ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் கூறுதல். கோள் சொல்லுதல் என்பதும் இதுவே. நல்லது கூறுதல் எவ்வளவு பெருமை சேர்க்குமோ அவ்வளவுக்கு எதிரிடையான பழிசேர்ப்பது இப்புறங்கூறுதல். நேரில் கூறும் நேர்மையும் துணிவுமற்றவன் புறங்கூறுவதால் துக்கத்திலிருந்து விடுபடுவதில்லை. ஆதலால்,

> "எப்பொழுதும் புறங்கூறிக்கொண்டேயிருப்பவன் தன் குற்றங்களை
> வளரவிடுகிறான். அவன் தன் ஆசவங்களை அழித்தல்
> கடினமாகி விடும்" (த.251)

> "புறங்கூறுவோனுக்கும் முரடனுக்கும் தூர்த்தனுக்கும் வாழ்க்கை
> எளிதாகவே இருக்கிறது" (த.242)

அத்தகையோர் இம்மண்ணுலகில் எண்ணற்ற பிறவிகள் எடுப்பர் என்று தம்மபதம் கூறுகிறது.

ஒருவனைப் புறத்தில் பழித்துக்கூறி, நேரில் கண்டபோது பொய்யாகப் பழகுவது வஞ்சகம். அது அன்பான வாழ்க்கைக்கு முரண்பட்டதாகும். இதனை வள்ளுவர் பெருங்குற்றமாகக் கருதுகிறார். பிறரைப் பழித்துக் கூறுவோர் தாமும் பிறரால் அவ்வாறே பழித்துக் கூறப்படுவர். அதனால்,

> "புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
> அறங்கூறும் ஆக்கந் தரும்" (குறள். 183)

என்று வள்ளுவர் அறிவுரை கூறுகிறார். மேலும் புறங்கூறுவோர் மற்றவரின் குற்றங்களைக் காண்பது போலத் தம் குற்றத்தையும் காண நேர்ந்தால் அவர் உயிர்க்குத் தீங்கு நேராது. அவ்வாறு காண நேர்ந்தால் புறங்கூறல் குற்றமென அறிந்து, திருந்தி நன்மை அடைவார்கள் (குறள். 185, 190) என்று வள்ளுவர் கூறுகிறார். அதோடு, புறங்கூறுவதால், "உலகில் பகை உணர்வுகள் பெருகுகின்றன. ஒருவருக்கொருவர் வெறுப்புணர்வும் நம்பிக்கையின்மையும் ஏற்படுகின்றன. இத்தகு தீமைகளுக்கெல்லாம் கோள்மொழிகள் காரணமாக இருப்பதால் அவற்றை விட்டொழித்தல் வேண்டும்"[1] என்ற அறிஞர் கருத்தும் குறிப்பிடத்தக்கது. இவற்றால் புறங்கூறி, மற்றவர்களுக்குத் தீமை விளைவித்து வாழும் வாழ்க்கையைப் புத்தரும் வள்ளுவரும் வெறுத்துப் பேசுதல் அறியலாம்.

## கடுஞ்சொல் கூறாமை

"மனிதப் பிறப்பு மிக உயர்ந்தது. அவ்வுயர்வுக்கு ஒரு காரணம் மக்கள் பேச்சாற்றல் பெற்றிருப்பது. அப்பேச்சாற்றலால் பிறரை இகழாமையும், இழிந்த சொற்களால் ஏசாமையும் வேண்டும். அதுதான் சொல்லொழுக்கம். யாரிடத்துப் பேசினாலும் எந்நிலையில் பேசினாலும் பணிபுடையன் இன்சொலனாதல் வேண்டும். இது தான் நன்மனிதன் என்பது காட்டும் நாகரிக அடையாளம்"[2]. யாவர்க்கும் இன்சொல் வழங்குதல் சிறந்த நாகரிகமாகும். ஏனெனில், "இன்சொல் ஒருவன் வாழ்வை அழகுபடுத்துவதோடு, அறம் பெருகித் தழைக்குமாறு வழிகோலும், நல்லவை நாடி இனியவை கூறும் வழக்கம் நல்வாழ்விற்கே அடிப்படையாகும். அதனால் இனிய மொழி கூறி அறம் வளர்க்க இயலும்"[3]

பிறர் மனத்தைப் புண்படுத்தும் சொற்களையும் கசப்பையும் காழ்ப்பையும் ஏற்படுத்தும் மொழிகளையும் பேசுதல் கூடாது. எதிர்மறை வாசகத்தால் அறம் உரைக்கும் புத்தர் கடுஞ்சொல் பேசாதே என்று கட்டளையிடுகிறார். இதனை,

> "எவரிடத்தும் கடுஞ்சொல் பேசாதே, அதேமுறையில்
> மற்றவர்களும் பதிலுரைப்பார்கள். கோபமான பேச்சு
> துக்கமளிப்பதால் பதில் பேச்சு உன்னைத் தாக்கும்" (த.131)

என்று தம்மபதம் கூறுகிறது.

1. ப. பழனியம்மாள், தமிழில் சதக இலக்கியங்கள், ப. 104.
2. வ.சுப. மாணிக்கம், இலக்கிய விளக்கம், ப. 8.
3. தே. ஆண்டியப்பன், மு.நூ., ப. 391.

"தன்னைப் பிறர் சினந்தபோதும் தான் சினத்தால் ஆகாது
வன்சொல் வழங்கப்பெறினும் தான் இன்சொல் இயம்புக"
(மனு.6:48)

என்பர் அறநெறி அறிஞர் மனு. திருக்குறள் பல அறங்களைப் பலப்பட மொழிந்தாலும் எல்லா அதிகாரங்களிலும் குருதிஓட்டம் போல ஓடுகின்ற ஒரு பொதுவறம் உண்டு. அது தான் இன்சொல் அறம் என்பதை,

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது" (குறள். 99)

"முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்" (குறள். 93)

என்ற குறட்பாக்கள் புலப்படுத்துகின்றன. தண்ணீராலன்றி, வெந்நீரால் பயிர் விளையாது. இன்சொல்லாலன்றி, வன்சொல்லால் வாழ்க்கை சிறக்காது. ஆதலால் கடுஞ்சொல் கூறாமையை மூன்று அறநூலாரும் வலியுறுத்துகின்றனர்.

## பயனில சொல்லாமை

பயனற்ற சொற்களைப் பேசுவது வாழ்க்கையின் குறிக்கோளையும் பயனையும் கெடுத்துவிடும். "நடவைமாக்களும், நகைவேழம்பரும், விடரும், தூர்த்தரும், விட்டேற்றாளரும் பொழுதைப் போக்கும் சொற்களில் திளைப்பர். இவற்றால் ஒரு பயனும் விளைவதில்லை"[1]. அதனால் பொருளற்றதும் தேவையற்றதுமான சொற்களினின்றும் விடுபடுக என்பதே புத்தரின் போதனை. அவை பின்வருமாறு,

"பொருளற்ற ஆயிரம் சொற்களை விட மன அமைதியைத் தருகிற
பொருள் நிறைந்த ஒரு சொல் மேலானது" (த.100)

"அர்த்தமற்ற பதங்களைத் தொடுத்து நூறுபாடல்கள் ஒப்பிப்பதைப்
பார்க்கினும் பொருளுள்ள ஒரே பாசுரம் மேலானது.
அதைக்கேட்டதும் ஒருவன் உபசாந்தி அடைகிறான்" (த.101)

உபசாந்தி என்பது, இன்பத்திலும் துன்பத்திலும் சலிப்படையாத நிலை.

---

1. சோ.ந. கந்தசாமி, குறள் கூறும் உறுதிப்பொருள், ப. 180.

புத்தரின் போதனைக்கு வள்ளுவரும் உடன்படுகிறார். அதனால்,

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்" (குறள். 200)

என்று வலியுறுத்துகிறார். மேலும்,

'பயனில் சொல்லாமை நன்று' (குறள். 197) என்றும் கூறுகிறார். அறிவுடையார் பயனற்ற சொற்களை ஒரு போதும் கூறமாட்டார்கள். அவ்வாறு கூறின் அவர்கள் மக்களுள் பதர் என்று கருதப்படுவர் (குறள். 196) என்பது வள்ளுவம். இதனால் பயனுடையவற்றைப் பேசுதலும் பயனில்லாதவற்றைப் பேசாது விடுதலும் அறிவுடையார்க்கு அழகாகும் என்ற கொள்கையைப் புத்தரும் வள்ளுவரும் ஏற்கின்றனர் என்பது தெரியலாம்.

## கோபம்

கோபம் நம்மை அழிக்கும். பிறரையும் அழிக்கும். வெகுண்டு நிற்போர் வாழ்வில் அறிவிற்கும் அதிகம் வேலையில்லை. மனமானது உணர்ச்சி வயப்பட்டு முரண்பட்ட காரியங்களைச் செய்ய முந்தும். அதனால் ஏற்படும் தீமை பெரிதாதலின் சினத்தைக் காப்பது கடன் என அறிந்த புத்தர், 'கோபத்தை விடு' (த.219) என்று ஆணையிடுகின்றார். மேலும்,

'வாக்கினால் வரும் கோபத்தை அடக்கிக்காக்கவும்' (த.230)
'மனத்தினால் வரும் கோபத்தை அடக்கிக்காக்கவும்' (த.231)

என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படைக் காரணம் சினம் என்பதை உணர்ந்த வள்ளுவரும், 'சினம் காக்க' (குறள். 305) என்று ஆணையிடுகின்றார். மேலும்,

"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும்" (குறள். 303)

"உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்" (குறள். 309)

என்று பாடிய குறள்களில் பௌத்த நெறியின் சாயல் படிந்திருப்பதை

அறியலாம். 'கோபம் கூடாது' என்ற நீதியைப் புத்தர் நேர்முகமாகவும் வள்ளுவர் எதிர்மறையாகவும் கூறி வலியுறுத்தியுள்ளனர். கூறும் முறையில் வேறுபட்டாலும் இருவர் கருத்தும் ஒன்றே எனலாம்.

## அழுக்காறு

பண்புநலத்தின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் குணங்களில் அழுக்காறு முதலிடம் பெறும். அது சுயமுயற்சியின் ஆணிவேரை அறுத்தெறிந்து விட்டுப் பிறரிடம் பகை பாராட்டும்படி செய்துவிடும். பொறாமை என்னும் பண்பு மிகவும் பொல்லாத ஒன்று என்பதை அறிந்த புத்தர்,

> "மக்கள் தங்கள் தகுதிக்கும் தருமசிந்தனைக்கும் தக்கபடி தானம் செய்கின்றனர். பிறருக்கு உண்ண உணவும் குடிக்கப் பானமும் அளிப்பதைக் கண்டு பொறாமைப்படுவோர் பகலிலோ இரவிலோ மன அமைதி பெறுவதில்லை" (த.247)

என்று அறிவுறுத்தியுள்ளார். அழுக்காறு நெஞ்சில் குடியேறிவிட்டால் அழிவிற்கு வேறு பகைவர் தேவை இல்லை என்பது வள்ளுவரின் எண்ணம். ஆதலால்,

> "கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
> உண்பதூஉ மின்றிக் கெடும்" (குறள். 166)

என்று கூறியுள்ளார். அமைதியின்மையைக் கூறிப் புத்தர் அழுக்காறாமையை வலியுறுத்தியுள்ளார். அழுக்காறு உடையவன் மட்டுமன்றி அவன் உறவினரும் உண்ண உணவும் உடுக்க உடையுமின்றிக் கெடுவர் என்று வள்ளுவர் கூறியிருப்பது புத்தரினும் மிக்கு வலியுறுத்தியதாக அமைகின்றது.

## தற்பெருமை

உயிரோடு இருப்பவர் யாவரும் தம்மை மனிதரென்று மதிப்பது வீண் பெருமை. அதைவிடப் பெருமை தம்மைத் தாமே அறிவாளி என்று உயர்த்திக் கூறுவது. அகிலம் அதற்கு ஒப்புதல் அளிக்காது. அவர்களைப் புத்தர், 'தன்னைப் பண்டிதனாக எண்ணிக் கொள்ளும் பேதை முழுமூடனே ஆவான்' (த.63) என்று சாடியுள்ளார். அவ்வாறே வள்ளுவரும்,

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து" (குறள். 978)

என்று கூறியிருப்பது பௌத்த நெறியின் வடிவமெனலாம்.

## கள்ளாமை

பிறரால் கொடுக்கப்படாததை எடுக்காமல் இருத்தல் கள்ளாமை எனப்படும். மனிதன் நேரிய வழியில் சீரிய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமானால் அவன் கள்ளாமை என்னும் சீலத்தைப் பின்பற்ற வேண்டும். "தனக்குத் தானமாக வழங்கப்படாததைக் கவர்தல் குற்றமாகும். ஆள்வலிமையாலும் தோள் வலிமையாலும் வன்முறைகள் பிறவற்றாலும் வலியோர் பிறர்பொருளைக் கவர்தல் பழிச் செயலேயாகும். இங்ஙனம் இருட்டு வழியில் பொருள் திரட்டின் உழைப்பிற்கு மதிப்பின்றிச் சமுதாயச் சீர்கேடு விளைய நேரிடும்"[1]. ஆதலால் கள்ளாமை என்பதன் விழுப்பத்தை,

"இந்த உலகில் தனக்கென்று அளிக்கப்படாத எதையும் அது
நெடியதோ, குறுகியதோ, பெரிதோ, சிறிதோ, நல்லதோ,
கெட்டதோ ஏற்றுக் கொள்ளாதவன் எவனோ அவனையே நான்
பிராமணன் என்று சொல்வேன்" (த.40)

என்று தம்மபதம் போற்றுகிறது.

கள்ளாமையின் இன்றியமையாமையை வள்ளுவர்,

"எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு" (குறள். 281)

என்று பகர்கின்றார்.

களவு செய்தவர் தீராத துன்பமடைவர். 'கள்ளார்க்குத் தள்ளாது புத்தேள் உலகு' (குறள். 290) எனக்கூறிப் புத்தரின் கருத்தை வள்ளுவர் அரண் செய்கிறார். இந்நெறிக்கு மாறாகக் களவினைப் பின்பற்றுவோர் கடுந்துயர் அடைவர் என்பதை,

"களவேர் வாழ்க்கையர் உறூஉம் கடுந்துயர்
இளவேய்த் தோளாய்க் கிதுவென வேண்டா"[2]

1. சோ.ந. கந்தசாமி, பௌத்தம், ப. 135.
2. மணி., 13: 35–36

என்ற பாடலடிகள் வற்புறுத்துகின்றன. ஆதலால், அருளைப் பெற விரும்பி எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவராயிருப்பவர் பொருளை விரும்பி நயவஞ்சகமாகப் பிறர் அறியா வண்ணம் அவர்கள் சோர்ந்திருக்கும் நேரத்தில் அவர்களுடைய பொருளை வஞ்சித்துக் கொள்ளக்கூடாது என்பது தெளிவு.

## கள்ளுண்ணாமை

மயக்கமும் மடிமையும் பயக்கும் குடியைத் தவிர்த்தல் வேண்டும். "தாமும் கள்ளுண்ணக்கூடாது. பிறரையும் உண்ணத் தூண்டுதல் கூடாது. பித்தராக்கும் கட்குடியினால் பாவமே விளைகிறது. புலன்களை மயக்கித் தகாத செயல்புரியத் தூண்டும் கள்ளின் வகைகளை மக்கள் துறத்தல் வேண்டும் என்று புத்தர் தெருட்டியுள்ளார்."[1] கள்ளுண்டால் ஏற்படும் மயக்கம் மனித வர்க்கத்திற்குத் தீமை பயக்கிறது என்பதை,

"வெறி கொடுக்கும் மதுவகைகளைப் பருகுவோன் இவ்வுலகில்
தம் வேர்களைத் தாமே கல்லியெறிகிறான்" (த.245)

"மயங்குதலைப் போன்ற வலை வேறில்லை.
ஆசைகளைப் போல் அடித்துக் கொண்டு போகும் ஆறு
வேறில்லை" (த.249)

என்ற பொன்மொழிகள் புலப்படுத்துகின்றன.

மனுவின் காலத்தில் கள்ளுண்டல் பெருவழக்காக இருந்திருக்கிறது. மகளிரும் மதுவருந்தினர், அதனால்,

"குடிக்கக்கூடாதென்று கட்டளையிட்டும் திருமணம் போன்ற
திருநாட்களில் குடிக்கும் பின் மூன்றுவருணமாதருக்கு மன்னன்
ஆறுபொன் குன்றி அபராதம் விதிக்க" (மனு.9:84)

என்று ஆணையிடுகின்றது.

தருமநூல் காட்டும் மக்கள் வாழ்க்கைக்கும் சங்க இலக்கியம் புலப்படுத்தும் சமுதாய நிலைக்கும் வேறுபாடு இல்லை. அந்தணனாயினும் கபிலர் கள்ளும் கறியும் அயின்ற செய்தியைப் புறநானூறு புகலும். இன்னார் இனியர் என்ற வேறுபாடின்றிக் கட்குடி சங்ககாலத்தில் நாகரிகமாகக்

---

1. சோ.ந. கந்தசாமி, பௌத்தம், ப. 145.

கருதப்பட்டது. சங்கப்புலவருள் ஒருவர் கூடக் கள்குடியைக் கண்டித்துப் பாடவில்லை.

கள்ளுண்ணாமை என்ற பேரறத்தினை முதன் முதலில் தமிழர்க்குப் போதித்தவர் வள்ளுவரே. சங்ககாலத் தமிழரின் பழக்கவழக்கத்திற்குப் புறம்பான இச்சீர்திருத்தச் சிந்தனையை முதலில் கூறியவர் வள்ளுவரே. கள்ளுண்ணாமை என்ற அதிகாரம் மதுவினால் வரும் தீமைகளைக் கூறுகிறது.

மயக்குறு கள்ளினை அருந்துபவர் பாரை ஒப்பர் (குறள். 926); நஞ்சுண் ஒளி இழப்பர் (குறள். 921); ஈன்ற அன்னையாளும் வெறுக்கப்படுவர் (குறள். 923). நாண் என்னும் நல்லாளும் புறங்கொடுக்கும் (குறள். 924) என்றிவ்வாறு வள்ளுவர், 'உண்ணற்க கள்ளை' என்று கூறித் தடைவிதிக்கின்றார். முந்து நூல்கள் மகளிரும் கள்ளுண்டு களித்ததாகக் கூறியிருக்க வள்ளுவர்,

> "துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
> நஞ்சுண்பார் கள்ளுண் பவர்" (குறள். 926)

என்று சுட்டியுள்ளார்.

மனுதரும காலத்திலிருந்து இன்று வரையிலும் மக்களிடையே பிரிக்க இயலாதவாறு கள்ளுண்ணும் பழக்கம் வழக்கில் உள்ளது. தண்டம் விதிப்பதன் வாயிலாக மனு கள்ளுண்ணாமையை வலியுறுத்துகிறார். விளையும் தீமைகளை எடுத்துக் கூறுவதன் வாயிலாக கள்ளுண்டலுக்குத் தடை செய்ய முயல்கின்றார் வள்ளுவர்.

## கொல்லாமை

"ஒவ்வொரு பௌத்தரும், 'பாணஹிபாதா வேரமணி சிக்காபதம் சமாதியாமி' எனத் தினந்தோறும் ஓத வேண்டும். இதற்கு உயிர்களைக் கொல்லாமலும் துன்புறுத்தாமலும் இருக்கும் சீலத்தை மேற்கொள்கிறேன் என்பது பொருள்"[1]

துறவோர் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பவேண்டும் பான்மையர். அவர் உடலில் இருந்து உயிரைப் பகுத்துப் பிளக்கும் கொடுமையில் தலைப் படலாமா? வேள்விக்கே எனினும் கொலையை ஏற்கலாமா? அதனால்

1. மயிலை சீனி. வேங்கடசாமி, கௌதமபுத்தர், ப. 187–188.

எண்ணத்தாலும் பிற உயிர்களைத் துன்பப்படுத்தக்கூடாது என்று தம்மபதத்திலும் புத்தர் கூறியுள்ளார்.

"மரணத்திற்கு எல்லோரும் அஞ்சுகின்றனர். மற்ற உயிர்களையும் தன்னைப்போல் எண்ணி ஒருவன் கொல்லவும் கூடாது; கொலைக்கு உடன்படவுங் கூடாது" (த.127)

"நிற்பனவும் திரிவனவுமாகிய எவ்வுயிரையும் துன்புறுத்தாமலும், வதைக்காமலும், வதைக்க காரணமாயில்லாமலும் எவன் உள்ளானோ அவனையே நான் பிராமணன் என்று சொல்லுவேன்" (த.403)

வாழ்வை விரும்பாத உயிரே இல்லை. எனவே பிற உயிர்களுக்குத் துன்பம் செய்வது சிறந்த அறமாகக் கருதப்பட மாட்டாது என்ற செய்தி மேலும் ஆறு[1] இடங்களில் விளக்கப்பட்டுள்ளது.

எவ்வுயிரையும் கொலை செய்தல் கூடாது என்னும் அறத்தை நிலை நாட்டும் நோக்கில் வள்ளுவர் 'கொல்லாமை' என்ற ஓர் அதிகாரத்தை அமைத்துள்ளார். அதில்,

"அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்" (குறள். 321)

என்று கொல்லாமையை வலியுறுத்துகிறார். மேலும் பிற உயிர்களையும் தம் உயிர் போல் கருதிப் பகுத்துண்ணும் பண்பு வேண்டும் (குறள். 322); அருளின்றிக் கொலை செய்வோர் மறுபிறவியில் வறுமை அடைந்து இழிதொழில் வாழ்க்கையைப் பெறுவர்; இத்தகையோர் மெய்ப்பொருளை உணரமுடியாது (குறள். 330) என்றும் கூறி நல்லாற்றுப்படுத்துகிறார். இக்கொல்லாமை அறத்தைச் சாத்தனாரும்,

"மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்"[2]

என்று உரைத்துள்ளார். அதோடு,

'கொலையாளி எனப்பெயர் பெற்றவன் நரகத்தை அடைவான்'[3]

---

1. ப. ராமஸ்வாமி, தம்மபதம், 128,140,244,268,387,388.
2. மணி., 16: 84-85.
3. தண்டலையார் சதகம், 27.

என்று கூறிப் பிற்கால நீதிநூலும் எச்சரிக்கை செய்கிறது. இவ்வாறு கொல்லாமையும் அகிம்சையும் பௌத்தர் பின்பற்றிய பேரறங்களாகத் திகழ்கின்றன.

## மருளுடைமை

"உலக மக்களில் பெரும்பாலோர் மயக்கத்தோடு வாழ்கின்றனர். நில்லாது மறைந்து போகும் பொருளெல்லாம் அவர்களுக்கு நிலைத்த பொருள் போல் காட்சியளிக்கிறது. கானல் நீருக்கும் அவர்கள் காண்கின்ற களவுக்கும் வேறுபாடில்லை. அதனை மயக்கமென்று கூறுவதை விடப் புல்லறிவு என்று குறிப்பிடலாம்."[1] இத்தகு மருளுடையார் பிறவிக்கு வித்தாகும் ஆசைகளால் பிணிக்கப்படுவர் என்பதை,

> "பொய்யில் மெய்யைக் கற்பனை செய்து கொண்டு மெய்யில்
> பொய்யைக் காணும் மருளுடையார் மெய்ப்பொருளை
> ஒருபோதும் அடைவதில்லை. அவர்கள் வெறும் ஆசைகளைத்
> தொடர்ந்து அலைவார்கள்" (த.11)

என்று தம்மபதம் எடுத்துரைக்கிறது.

மயக்க உணர்வே பிறவிக்கு ஏதுவாகும் என்பதை,

> "பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
> மருளானாம் மாணாப் பிறப்பு" (குறள். 351)

என்ற குறளும் புலப்படுத்துகிறது.

## பேதைமை

ஆக்கம், செல்வம், புகழ் முதலியவற்றை ஊதியமாகப் பெறவே ஒவ்வொரு மனிதனும் செயல்படுகின்றான். ஆனால் எளிய வாழ்வின் தருமங்களையும் பேணாமல் புகழ், அறம் முதலியவற்றைப் போகவிட்டு, கேடு, வறுமை, பழி, பாவங்களையே ஏற்கத்துணிந்து நிற்கும் போது பிடிவாதம் கலந்த அறியாமைக்கு என்ன பெயரிடுவது? பேதைமை என்றுதான் கூற வேண்டும். இக்குணமுடைய பேதையருக்குப் பெரியோரைப் பேணிக் கொள்வோம் என்ற பெருநோக்கு இருந்தாலாவது அருமையான செயல்களைச் செய்யலாம். ஆனால் சிறியோர் உணர்ச்சியுள் அதுவும்

1. தே. ஆண்டியப்பன், குறள்கண்ட நாடும் வீடும், ப. 440.

இல்லை என்பதால் பேதையரின் பேதைமையைப் புத்தர்,

> "அகப்பை குழம்பின் சுவையை அறியாது, அதுபோல் வாழ்நாள் முழுவதும் பேதை ஞானியோடு பழகிவந்தாலும் தருமத்தை அவன் அறிவதில்லை" (த.64)

என்று எல்லோரும் புரிந்து கொள்ளும் எளிய நடையில் இரங்கல் நயத்தோடு கூறியுள்ளார். பேதையரின் அறிவின்மையை,

> "சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
> பேணிக்கொள் வோமென்னும் நோக்கு" (குறள். 976)

என்று திருக்குறளும் புலப்படுத்துகிறது.

பேதையரின் அறியாமையைப் புலப்படுத்துவதில் புத்தரும் வள்ளுவரும் ஒன்றுபட்டாலும் கூறும் முறையில் வேறுபடுகின்றனர். பெரியோருடன் பழகியும் திருந்தாதவர் பேதையர் என்பது புத்தரின் பொன்மொழி. பெரியோருடன் பழக வேண்டும் என்ற எண்ணங்கூட இல்லாதவர் பேதை என்பது குறள்மொழி. அறியாமை நிறைந்த சிறியோரின் உள்ளத்தைப் புலப்படுத்துவதில் புத்தரினும் வள்ளுவர் சிறந்திருக்கிறார் என உணரலாம்.

## தீச்செயல்

ஒருவன் செய்யும் செயல்கள் நற்பயனளித்தல் வேண்டும். அதோடு அறமும் புகழும் பொருந்தி நல்லனவாய் அமைதலும் வேண்டும். இக்கருத்தில் புத்தரும் வள்ளுவரும் ஒன்றுபடுகின்றனர். தம்மபதம் தீயொழுக்கம் என்னும் இயலில் தீவினைக்கு அஞ்ச வேண்டும் என்றும், நல்வினைகளை நயந்து செய்தல் வேண்டும் என்றும் எடுத்துரைக்கிறது:

> "மனிதன் பாவத்தைச் செய்து விட்டால் அதையே திரும்பத் திரும்பச் செய்யாதிருப்பானாக. அவன் அதில் திளைத்திருக்க வேண்டாம். பாவமூட்டை மிகவும் துக்ககரமானது" (த.115)

இன்னாச் செயல்களை அறியாது செய்துவிட்டால், மீண்டும் அச்செயல்களைச் செய்தல் கூடாது என்பதே வள்ளுவரின் வாய் மொழியாகும்.

"எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று" (குறள். 655)

என்று பாடியுள்ளார்.

தவறு செய்வது மனித இயல்பு. ஆனால் செய்த பிழைகளைச் சிந்தித்துப் பார்ப்பதால் திருந்துவதற்கு வாய்ப்பாகலாம். அதனால் எஞ்சிய வாழ்விலேனும் நல்லோராய் வாழ்வதற்குப் புத்தரும் வள்ளுவரும் வழி காட்டியுள்ளனர். இஃது இருவரின் அருள் உள்ளத்தைப் புலப்படுத்துகிறது.

## ஒப்பீடு

மனத்துக்கண் மாசின்மை பற்றிப் புத்தரும் வள்ளுவரும் எடுத்துரைக்கின்றனர். மனுதருமத்தில் இவ்அறம் இடம் பெறவில்லை.

அறஞ்செய்தலின் மேன்மையைப் புத்தரும் வள்ளுவரும் ஒரு சேரக் கூறுகின்றனர்.

அன்பினால் பகையையும் தணிக்கலாம் என்ற கருத்தைப் புத்தரும் வள்ளுவரும் வலியுறுத்துகின்றனர்.

தம்மபதத்திலும் திருக்குறளிலும் இடம்பெற்றுள்ளஅவாவறுத்தல் என்னும் அறநெறி மனுதருமத்தில் காணப்படவில்லை.

புத்தர் கூறிய சொல்லியவாறு செய்தல் வேண்டும் என்ற அற நெறியை வள்ளுவரும் வலியுறுத்துகிறார். இந்நெறியை மனு கூறவில்லை.

தன் குற்றம் நோக்கல் வேண்டும் என்ற அறநெறியைத் தம்மபதமும் வள்ளுவமும் விளக்குகின்றன. இந்நெறி மனுவால் வலியுறுத்தப் ப்படவில்லை.

புத்தரும் வள்ளுவரும் வகுத்துரைக்கும் அடக்கமுடைமையை மனு வலியுறுத்தவில்லை.

மனிதன் பேதைமையிலிருந்து நீங்கி மெய்யறிவு பெறுவதற்குப் புத்தரும் வள்ளுவரும் வழிகாட்டியுள்ளனர்.

நன்மையின் பொருட்டுப் பொய்கூறும் அறநெறியை மூன்று அறநூலாரும் வரவேற்கின்றனர்.

புறங்கூறி வாழும் வாழ்வைப் புத்தரும் வள்ளுவரும் வெறுக்கின்றனர்.

கடுஞ்சொல் கூறாமையை மூன்று அறநூலாரும் வலியுறுத்து கின்றனர். பயனுடைய சொற்களைப் பேசுவதையும் பயனற்ற சொற்களைப் பேசாமல் இருத்தலையும் தம்மபதமும் வள்ளுவமும் விளக்குகின்றன.

கோபம் கூடாது என்னும் நெறியைப் புத்தரும் வள்ளுவரும் ஒருசேர வலியுறுத்துகின்றனர்.

அமைதியின்மையைக் கூறிப் புத்தர் அழுக்காறாமையை வலியுறுத்துகின்றார். இக்கருத்திற்கு வள்ளுவரும் உடன்படுகின்றார்.

தற்பெருமை பேசுவதைப் புத்தரும் வள்ளுவரும் வரவேற்கவில்லை. கள்ளாமை என்னும் அறத்தைத் தம்மபதமும் திருக்குறளும் போற்று கின்றன. நட்பின் பயனைக்கூறி நல்லார் நட்பைப் புத்தரும் வள்ளுவரும் வலியுறுத்துகின்றனர்.

பண்புடையாரின் மேன்மையைத் தம்மபதமும் குறளும் சிறப்பிக் கின்றன.

ஏற்படும் தீமைகளைக் கூறிக் கள்ளுண்டலுக்குப் புத்தரும் வள்ளுவரும் தடை விதிக்கின்றனர். தண்டம் விதிப்பதன் வாயிலாக மனு கள்ளுண்ணாமையை வலியுறுத்துகின்றார். கொல்லாமையைப் புத்தரும் வள்ளுவரும் வலியுறுத்துகின்றனர்.ஏற்படும் நன்மையைக் கூறி நல்வினை செய்தலைப் புத்தரும் வள்ளுவரும் வற்புறுத்துகின்றனர்.

# 7. அறம் உணர்த்தலில் திருக்குறளின் சிறப்புக்கள்

## முன்னுரை

பண்டைக்காலம் முதற்கொண்டு திருக்குறளை அனைத்துலகச் சார்புடைய இலக்கியமாகவே அறிஞர்கள் கருதி வருகின்றனர். இந்திய அறஇலக்கியங்களோடு திருக்குறளை ஒப்பிட்டு ஆராய்ந்து பார்க்கையில் அது ஒப்புயர்வற்ற அறஇலக்கியமாகத் தோன்றுகிறது. இந்நூல் பிறமொழி அறநூல்களுள் காணப்பெறாத சிறப்பியல்புகள் பலவற்றைக் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. அவ்விலக்கியங்களுள் இடம்பெற்றுள்ள அரிய கருத்துக்களும் உணர்த்தும் முறைகளும் திருந்திய வடிவில் முழுநிறைவுடன் திருக்குறளில் காணப்படுகின்றன. ஆனால் வடிவாலும், கருத்துவளத்தாலும், கூறும் முறைகளாலும் திருக்குறள் பிற அற நூல்களினின்று சிறந்து விளங்குகின்றது.

## பிற அறநூல்களும் திருக்குறளும்

புத்தர் அருளிய அறவுரைகளும் சங்கவிதிகளும் அடங்கிய திரிபிடகங்கள் எனப்படும் மூன்று தொகுதிகளில் ஒரு சிறுபகுதியே தம்மபதம். புத்தர் கூறிய நான்கு வாய்மைகளும் அட்டாங்க மார்க்கமும் அறநெறியே ஆயினும் அவை எல்லோராலும் பின்பற்றக்கூடிய எளிய நெறிமுறைகளன்று. வாழ்க்கை வாழ்வதற்கே. இன்பமுடன் வாழ்வதற்கே என்ற கொள்கைக்கு முரணான கருத்துக்கள் புத்தநூலின் பெரும்பகுதியாக அமைந்துள்ளன.

தருமசாத்திரங்களுள் மனுதரும சாத்திரமே சிறப்பான நூல். அந்நூலில் காணப்பெறும் உயிர்களின் தோற்றம், வேதமானிட வகுப்பு, காலக்கணக்கு, கீழ்ப்பிறப்பு மாறி உயர்வடைதல், வேதத்தின் வாய்மை ஆகிய பகுதிகளை நீக்கிவிட்டால் அறத்தை உலகிற்கு அறிவிக்கும் பகுதிகள் அதில் மிகக்குறைவாகவே தோன்றும்.

திருக்குறள் சாதி சமயக்கலப்பின்றி அறத்தை மட்டுமே உணர்த்துவதற்காகத் தோன்றிய முதல்நூல்; தனிநூல். "வள்ளுவரின் முப்பால் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பகுப்புக்களை உடையது.

வள்ளுவரின் அறத்துப்பால் உலகிலுள்ள அறங்கள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்து விளங்குவது. பொருட்பால் அர்த்தசாத்திரம் அனைத்திற்கும் மணிமுடியாக மிளிர்வது. காமத்துப்பால் இவ்வுலகத்தலைமை இன்பம் என்று கவிராயர் கூறிய இல்இன்பத்தை நுகர்வார் வையத்து வாழவேண்டிய முறைப்படி வாழ்ந்து இன்பக்கடலாடப் பெருந்துணை புரியவல்லது"[1] எனும் கருத்து காட்டத்தக்கது. இந்த அமைப்பையும் பாகுபாடுகளையும் மனுதருமம், தம்மபதம் ஆகிய இருநூல்களிலும் காண இயலாது.

"மனுதருமமும் தம்மபதமும் அறவழிப்படும் உண்மைகளைக் கூறினாலும் சாதிமதச்சார்பு பற்றியமையால் அறஞ்சொல்லும் தகுதியில் நடுவுநிலைமையையும் பொதுமையையும் அவை இழந்துவிட்டதால் வள்ளுவரை விஞ்சக்கூடிய சிறப்பு அவற்றிற்கு இல்லை. வள்ளுவரின் குரல் கம்பீரமாக எழுவதற்கு இந்த நேர்மையே காரணம்."[2] மேலும் திருக்குறள் யாப்பு வரையறையோடு கவிதைச்சுவையும் இயற்றப்படிருப்பதால் நவில்தோறும் நூல்நயம் பயப்பதாக அமைந்துள்ளது. குறட்பாக்கள் எல்லாம் சூத்திரத்தை விடவடிவில் சிறியவை. எளிதில் நினைவில் இருக்கத்தக்கவை. திருக்குறள் தரும் இலக்கிய இன்பத்துள் கால்பகுதியை மட்டுமே மற்ற அறநூல்களுள் காணலாம். ஆகவே உள்ளடக்கத்தாலும், புறத்தோற்றத்தாலும், உணர்த்தும் முறையாலும், இலக்கிய நயத்தாலும் திருக்குறள் வீறுடன் விளங்குகிறது எனலாம்.

புத்தரின் மறைவிற்குப்பிறகு அவரது வாய்மொழிகள் புத்தபிக்குகளால் தொகுக்கப்பட்டு எழுத்து வடிவம் பெற்றன. புத்தர் பலர் வாழ்ந்த செய்தியும் நோக்கற்குரியது. பலர் கருத்துக்களின் கலப்பே தம்மபதம்.

மனுக்கள் பலர் வாழ்ந்தனர். மனுவினால் தொடங்கப்பட்டு பிருகு முனிவரால் முற்றுப்பெற்றது மனுதரும சாத்திரம். இரு சான்றோர்களின் கருத்துக்கலவையை நூலுள் காணலாம்.

"தனியொரு மனிதனால் திட்டமிட்டுத் தெளிவான ஒரேமுறையை முதலிலிருந்து முடிவுவரை நன்கு பின்பற்றி இயற்றப்பட்ட திருக்குறளைப்போன்ற அறநூல் பண்டை இந்திய அறநூல்களிடையே வேறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை"[3] எனும் கூற்று

1. ராய. சொக்கலிங்கம், வள்ளுவர் தந்த இன்பம், ப. 11.
2. மு. அண்ணாமலை, வள்ளுவர் தனித்தன்மை, ப. 43.
3. க.த. திருநாவுக்கரசு, இந்திய அறநூல்களும் திருக்குறளும், ப. 97.

குறிப்பிடத்தக்கது. திருக்குறளின் அமைப்பும் அழகும் பிற அறநூல்களிடையே இடம்பெறவில்லை.

மனிதன் மேன்மை அடைவதற்குப் பௌத்த சமயம், துக்கம், துக்காரணம், துக்கநீக்கம், துக்கநீக்கத்துக்கு உரிய வழிகள் என்ற நான்கு நெறிகளைக் கூறுகிறது. அவ்வாறே மனுதருமம் மக்களுடைய ஒழுக்கத்தைப் பிரமசாரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சன்யாசம் என்று நான்கு நிலைகளில் பாகுபடுத்தி உரைக்கிறது. பழந்தமிழ் நூல்களிலும் தொல்காப்பியத்திலும் இல்லறநிலையும் துறவற நிலையும் காணப்படுகிறது. அவ்வாறே திருவள்ளுவரும் இல்லறம், துறவறம் என்று இரண்டாக வகுத்தார். இதற்கு உரையாசிரியர் பரிமேலழகர், 'அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடு உடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகள் ஒழித்துப் பொது இயல்புபற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலையாற் கூறப்பட்டது' என்று கூறியுள்ளார். இவ்விரு நிலையும் தவிரப் பிரமசரியமும் வானப்பிரத்தமும் பெரும்பான்மை பற்றிய வழக்கு அன்று. அவை வருணந்தோறும் வேறுபாடு உடையன. ஆதலால் அவற்றை இருபிரிவினுள் அடக்கிக் கூறியுள்ளார். சுருங்கக்கூறி விளங்க வைக்கும் தன்மையால் திருக்குறள் செறிவுடைய நூலாகத் திகழ்கிறது.

## பொதுமைக் கருத்துரைத்தல்

திருவள்ளுவரின் திருக்குறள் எல்லாக் காலத்திற்கும் எல்லா இனத்தாருக்கும் பொதுவாயதோர் விழுமிய நூல் என்பது, உலகப்பொதுமை, உலகப்பொதுமறை, காலப்பொதுமை, கற்றுணரும் பொதுமை, சாதிப்பொதுமை, சமயப்பொதுமை என்னும் பின்வரும் பகுதிகளில் விளக்கப்படுகின்றது.

## உலகப்பொதுமை

“கௌதமருடைய சீடர்கள் எப்போதும் கருத்துடன் விழிப்பாயிருக்கிறார்கள்” (த.294–299) என்று தம்மபதம் புத்தருடன் அவரது சீடர்களின் புகழ்பாடும் நூலாகத் திகழ்கிறது. மனுதரும சாத்திரம். “அந்தணனே மேலானவன், அல்லாதான் தாழ்ந்தவனே யாவான்” (மனு.4:245) என்று பிராமணர் பெருமையைப் பேசுகிறது. இந்த இரு அறநூல்களின் நோக்கிற்கு மாறுபட்டதாகத் திருக்குறள் திகழ்கிறது.

'ஒன்றே குலம் ஒருவனே தேவனும்' யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்பன மெய்யுணர்வாளர் பெற்ற தெளிவுகளாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அத்தகைய உயர்நோக்கு இயல்பாகப்பெற்று விளங்கிய மெய்யுணர்வாளர் திருவள்ளுவர். அதனால், அனைத்துலக மனிதனைப் பாடினார். சாதி, சமய, இன, இட, மொழி வேறுபாடற்ற மனித சமுதாயத்தை அவர் காணவிழைந்தார். அவருடைய வாய்மொழியான 1330 குறட்பாக்களில் தமிழ், தமிழர், தமிழ்நாடு எனும் சொற்களோ இடம்பெறவில்லை.

தம்மைப்பற்றிய குறிப்பு ஒன்றையும் திருவள்ளுவர் தமது நூலில் வெளிப்படுத்தவில்லை. அதோடு சேர, சோழ, பாண்டியர் என்ற பெயர்களும் வில், புலி, கயல் ஆகிய கொடிகளும், பனை, ஆத்தி, வேம்பு ஆகியவற்றின் தார்களும் குறிக்காமலே அரசியல் பற்றி எழுதியுள்ளார். இதனால் தமிழ்நாட்டில் தம் நூலைப் படைத்த திருவள்ளுவர் குறுகிய எல்லைகளை எல்லாம் கடந்து உலகளாவிய நோக்குடன் வழிகாட்டும் வான்பொருளாகத் திருக்குறளைப் படைத்துள்ளார். உலகப் பொதுமறையாகத் திகழும் திருக்குறள் உலகளாவிய கருத்துக்களைக் கூறுவதில் நிகரற்று விளங்குகிறது. உலகையும், உலகத்து வாழும் உயிர்த் தொகுதிகளையும் பொதுவாகக் காட்டும் முறையில் அது சிறப்புடன் திகழ்கிறது.

'ஆதி பகவன் முதற்றே உலகு' (குறள். 1)
'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' (குறள். 140)
'வேண்டாரை வேண்டாது உலகு' (குறள். 670)
'எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு' (குறள். 11)
'வானின் றுலகம் வழங்கி வருதலான்' (குறள். 11)

என்று பல குறட்பாக்களில் உலகு எனக்குறிப்பிட்டு, 'உலக வழக்கம் இது' என எடுத்துக்காட்டுதலே பெருவழக்காகக் காணப்படுகிறது.

## உலகப் பொதுமறை

புத்தரின் போதனையாகிய அறவழியைக் கூறுவது தம்மபதம்.

"வேதங்களில் பல இடங்களில் பலவாறாகச் சிதறிக்கிடப்பவற்றைத் திட்டமாகவும் நுட்பமாகவும் முறைப்படுத்தித் தொகுத்துக்கூறுவதே மனுதரும சாத்திரமாகும். அதனால் வேதங்களின் குறிக்கோள் எதுவோ,

அதுவே மனுதரும சாத்திரத்தின் குறிக்கோள் ஆகும்"[1] என்று மொழி பெயர்ப்பாசிரியர் கூறுகிறார். இதனால் வேதங்களின் சுருக்கநூல் மனுதரும சாத்திரம் என்பது தெளிவு.

இவ்வாறே திருக்குறளும் வேதங்களின் சாரமாகக் கருதப்படுகிறது. பண்டு நான்கு மறைகளும் மிகப்பரவலாக விரிந்து கிடந்தன. பின் அடங்கி ஒடுங்கிக் குறள் வடிவமாகியது. இதற்குச் சான்றாக,

"வேத முதனூல் விரிந்து பொருள் குறுகிப்
போதகுறனூற் பொருள் விரியை – ஓத அளிக்கும்
திருக்குறளாய் அன்றுலகந் தாவிக்
களிக்கும் நெடுமால் கழல்"[2]

என்ற பாடலை எடுத்துக்காட்டியுள்ளார் அறிஞர். திருக்குறளை வேதத்தோடும் இறைவனின் திருவவதாரத்தோடும் உவமைப்படுத்திக் கூறியுள்ளார். இதன் பொருட்செறியை அறிய,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (குறள்.1)

என்ற ஒரு குறளே போதுமானது. இக்குறளில் அகரம் முதலிலும், உலகு என உகரம் இறுதியிலும் இடம்பெற்றுள்ளது. ஏனெனில் அவை பிரணவப் பகுதியாகவும் மங்கலமாகவும் கருதப்படுகின்றன. வேதத்துள் முதலிலும் ஈற்றிலும் ஓதப்படுவது பிரணவமந்திரம். ஆதி என்ற சொல்லின் இறுதியில் 'இ' இடம்பெற்றுள்ளது. "இது மகேசுவர சூத்திரம் பதினான்கனுள் முதற்சூத்திரமாகிய அஇஉ என்பதைக் குறிப்பதாகும்.

அ — என்பது நிர்குணப் பிரமத்தையும்

இ — என்பது சிற்சக்தியையும்

உ — என்பது விஷ்ணுவையும்

உணர்த்தும். முதற்குறள் ஈரடி, எழுசீர், இருபத்தைந்து எழுத்துக்களை உடையது. முதலடி நான்கு சீர்களில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பொருட்களையும், இறுதியடி மூன்று சீர்களில் நாற்பொருளையும் முப்பாலால் கூறினார். தத்துவங்கள் இருபத்தைந்து என்பதுபட

1. திருலோக சீதாராம், மனுதர்ம சாஸ்திரம், அறிமுகம் ப. 6.
2. அப்பனையங்கார், திருக்குறள், செந்தமிழ், தொகுதி 48, பகுதி. 11.

இருபத்தைந்து எழுத்துக்களால் கூறினார். இவ்வாறு வள்ளுவர் வேதப்பொருளையும் தத்துவக் கருத்துக்களையும் வைத்துக் குறளைச் செய்தமையால் இது உலகப்பொதுமறை, உத்தரவேதம் என்ற பெயர்களைப் பெறுவதாயிற்று."

பௌத்த சமயத்தின் வேதமாகக் கருதப்படும் தம்மபதம் பௌத்தர்களால் மட்டுமே பின்பற்றக்கூடிய நெறிமுறைகளைக் கொண்டது. மனுதருமம் வேதங்களின் சுருக்க நூலென்றால் அது எல்லா மக்களாலும் எல்லாக் காலங்களிலும் பின்பற்றக்கூடிய நெறிமுறைகளைக் கூறக்கூடியதாக இருத்தல் வேண்டும். அத்தகு தகுதியுடைய நூலாக மனுதருமம் இல்லை.

திருக்குறள் தோன்றிய காலத்திலேயே கல்விச்செருக்குடைய சங்கத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தோன்றிய காலம் முதல் இன்றுவரையிலும் வாடாது அழியாது வளரும் தனிப்பெருமை படைத்தது. இதன் சிறப்புக்களை நோக்கிப் பலபெயர்களைப் படைத்து வழங்கினர். பொய்யாமொழி, உள்ளக்கமல வெங்கதிர், உள்ளிருள் நீக்கும் ஒளி, பிணக்கிலாமொழி என்னும் பெயர்கள் திருக்குறள் வேதத்தின் சாரம் என்பதைப் புலப்படுத்துகின்றன.

## காலப்பொதுமை

"ஒரு நூலின் பெருமை காலத்தாற் காணப்படும் என்பது மொழிநூல் வல்லார் துணிபாகும். காலம் என்னும் கடுவாரியில் அகப்பட்டு அதனை எதிர்த்து வெற்றிபெற வலியற்ற மறப்பென்னும் கடலுள் ஆழ்ந்து போகின்ற நூல்கள் உலகில் பலவாகும். ஆனால் உயரிய உண்மைகள் அமைந்த நூல்கள் காலஞ்செல்லச்செல்ல வளர் மதியம்போல வளர்ந்தோங்கி எங்கும் தண்ணொளி பரப்பி உலகம் உள்ளளவும் வாழையடி வாழையென வருகின்ற மக்களனைவர்க்கும் தமது வண்மையையும் வளத்தையும் அளித்து மேம்படச்செய்கின்றன"[2] என்னும் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் கருத்திற்குரிய நூலாக அமைவது திருக்குறள். முக்காலத்திற்கும் பொதுவாய விழுமிய உண்மைகள் நிறைந்து திகழ்கின்ற காரணத்தால் திருக்குறளைக் காலம் கடந்த நூல் என்று கூறுவது மிகையாகாது.

---

1. அ. சண்முகம்பிள்ளை, திருக்குறள் ஆராய்ச்சி, செந்தமிழ், தொகுதி–6, பகுதி–5.
2. ரா.பி. சேதுப்பிள்ளை, திருவள்ளுவர் நூல்நயம், ப. 19.

"ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே எழுதப்பட்ட ஒருநூல் இன்றும் உலகம் எவ்வளவோ மாறி வளர்ந்துள்ள இந்த நிலையிலும் பெரிதும் பயன்படும் நூலாக விளங்குவது வியக்கத்தக்கதாகும். எல்லாக்காலத்து மக்களுக்கும் பொதுவாக அமைந்துள்ள பான்மையை – காலங்கடந்து வாழும் பொதுமையை திருக்குறளில் காண்கிறோம்"[1] என்பர் அறிஞர் மு. வரதராசனார்.

சமய அடிப்படையில் எழுதப்பட்ட தம்மபதமும் சாதிநோக்கில் எழுதப்பட்ட மனுதருமமும் அக்காலத்தில் வாழும் மக்கள் வாழ்க்கைக்கே பயன்படத்தக்கனவாய், அக்காலத்தில் மாந்தர் கருத்தைப் பெரிதும் கவர்கின்ற பொருள்களைப் பற்றியனவாய் இருப்பதால் அவை இன்றைக்குப் பயன்குன்றிப் போய்விட்டன.

தம்மபதம் கூறும் அறநெறிகளுள் பெரும்பான்மையானவை துறவிகளுக்கே, குறிப்பாகப் பௌத்த பிக்குகளுக்கே உரியன. அந்நெறிகளை அக்காலப் பிக்குகள் மேற்கொண்டாலும் இரந்துண்ணல், நிலத்திடை கிடத்தல் போன்ற நெறிகளை இக்காலப் பிக்குகள் மேற்கொள்வர் என்பது ஐயமே.

வருணாசிரம அறங்களை வலியுறுத்தும் மனுநெறிகள் அக்காலத்தில் குறிப்பிட்ட பகுதிகளில் வாழ்ந்த மக்களால் மட்டுமே ஏற்றுக்கொள்ளத் தக்கனவாக உள்ளன. குருகுலக்கல்விமுறை, அரசியல் நெறிகள், வானப்பிரத்த தருமம், குற்றங்களுக்காகக் கடுந்தண்டம் விதித்தல் ஆகிய அறநெறிகள் எக்காலத்திற்கும் ஏற்ற நெறிகள் அன்று.

அதனால் எக்காலத்திற்கும் பொதுவான உண்மைகள் பொதிந்ததாய், பயில்தொறும் புதிய எழுச்சியும் உணர்ச்சியும் தந்து மக்களுக்கு உறுதி பயக்கின்ற நூல் திருக்குறள் என்று கூறுவதில் மிகையில்லை.

### சாதிப்பொதுமை

தருமசாத்திரம் குறிப்பிட்ட ஒரு சாதியினரின் நலத்திற்காக, முன்னேற்றத்திற்காக ஒழுகலாற்று விதிகளை வகுத்துரைக்கிறது. பிரமாவின் உயர்ந்த இடமான முகத்தில் பிறந்ததால் பிராமணன் உயர்ந்த பிறப்பினன். பிரமாவின் தாழ்ந்த இடமான காலில் பிறந்ததால் சூத்திரன்

---

1. மு. வரதராசனார், பொதுமைநூல், வள்ளுவர் ஈராயிரம் ஆண்டு சிறப்புமலர், ப. 4.

தாழ்ந்த பிறப்பினன் என்பது மனுவின் கருத்து. அவ்வுயர்வு தாழ்வுக்கேற்றவாறே அன்னார் ஒழுகியும் வந்தனர் என்று தருமநூல் எடுத்துரைக்கிறது. இக்கொள்கைக்கு முரணாக வள்ளுவர்,

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" **(குறள். 972)**

என்று பாடியுள்ளார். இவ்வகையில் வள்ளுவர் வேறுபட்டு விளங்குகிறார்.

தனிப்பட்ட சாதியினருக்காகவோ, துறவிகளுக்காகவோ வள்ளுவர் அறம்பாடவில்லை. பிறப்பால் சாதி வேற்றுமையோ, தொழிலால் வகுப்பு வேற்றுமையோ, வளத்தால் உயர்வுதாழ்வுப் பாகுபாடோ அற்ற சமுதாயத்தை வள்ளுவர் காணமுயன்றார். அதனால் சாதாரண மனிதன் மனிதனாக வாழ, இல்லறத்தில் ஈடுபட்டு ஏற்றமுற, துறவை மேற்கொண்டு ஆன்மீக அனுபவத்தைப் பெற, சமுதாய வாழ்வில் தனிமனிதன் பிறரோடு நல்லதொரு மனித உணர்வைப் போற்றி வளர்க்க வள்ளுவர் குறட்களைப் படைத்தார். "அவர் பாடும் மனிதன் தமிழகத்தில் வாழ்பவன் மட்டுமன்று. கங்கைக்கரையிலும் காவிரிக்கரையிலும் வாழ்பவன் மட்டுமன்று. அவன் அனைத்துலக மனிதன். புகழ்மிக்க பண்டைக்கால மனிதன் மட்டுமன்று. பொலிவுமிக்கப் புதுமைக்கால மனிதன் மட்டுமன்று. எதிர்கால விண்வெளி மனிதனும் ஆவான்! இந்த அனைத்துலக மனிதப்பண்பு திருக்குறளின் உயிர்மூச்சாகும். இதற்கு அடுத்தநிலையில் தம்மபதத்தைக் கூறலாம்"[1] என்ற அறிஞர் தம் கருத்தும் நோக்கற்குரியது.

சாதி, குலம், பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறுகின்ற தன்மை வள்ளுவரிடம் இல்லை. அதனால்,

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்" **(குறள். 973)**

எனச் சிறந்த தீர்ப்பும் அளித்துள்ளார் திருவள்ளுவர்.

## சமயப்பொதுமை

திருவள்ளுவரிடம் இறைநம்பிக்கை இருந்தது. ஆனால் அது குறிப்பிட்ட ஒருசமயம் சார்ந்ததன்று. கடவுள் வாழ்த்தோடு முப்பாலைத் தொடங்கிய திருவள்ளுவர் இறைவனை, வாலறிவன், மலர்மிசை ஏகினான்,

---

1. க.த. திருநாவுக்கரசு, இந்திய அறநூல்களும் திருக்குறளும். ப. 95.

வேண்டுதல் வேண்டாமை இலான் இருவினையும் சேரா இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதவன், அறவாழி அந்தணன், எண்குணத்தான் இறைவன் என்ற பொதுச்சொற்களால் குறிப்பிட்டுள்ளார். அதனால் "சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகில் கூறிப் பொருள் இது என்ற வள்ளுவன்"[1] என்று கல்லாடம் அறிவுறுத்துகிறது.

எல்லாச்சமங்களையும் ஊடுருவிப் பார்த்து அடிப்படை உண்மையை மட்டும் உணர்த்தும் பான்மையைத் திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்தில் காண்கின்றோம். இத்தகைய சமயப்பொதுமையுணர்வு பத்தொன்பதாம் நூற்றாண்டில் தலையெடுத்து இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சிபெற்று வருகிறது. பல்வகைச் சமயத்தாரும் ஒருங்கே அமர்ந்து அன்புடன் பேசிப் பழகும் காட்சியைச் சில நூற்றாண்டுகளுக்கு முன் எங்கும் கண்டிருக்க முடியாது. இத்தகைய உலகம் இன்று பெற்றுவரும் வளர்ச்சியை அன்றே அத்தனை நூற்றாண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவரின் உள்ளம் பெற்றிருந்தது"[2] என வள்ளுவச் சிறப்பினை மு. வரதராசனார் போற்றுகின்றார். இத்தன்மையால் சமயவாதிகள் எல்லோரும் திருக்குறளைத் தத்தம் சமயநூல் என்று போற்றி மகிழ்கின்றனர்.

"கௌதமபுத்தர் மாயாதேவியினுடைய கருவிலிருந்து வலதுவிலா வழியாக அவதரித்தருளிய காலத்து, நீலத்தாமரைமேல் ஏழடி நடந்தார் என்ற வரலாறு மலர்மிசை ஏகினான் என்னும் குறட்தொடரில் கூறப்பட்டுள்ளது என்பர்."[3] அன்றியும் பொறிவாயில் ஐந்து அவித்தான் என்பதும், வேண்டுதல் வேண்டாமை இலான் என்பதும் மாரனை வென்ற வீரன் ஆதலைவிளக்கியன. 'அறவாழிஅந்தணன்' என்பதும் தர்மசக்கரத்தை உலகில் பலவகையாக உருளச்செய்த நீத்தோன் ஆதலின் வந்த பெயர்.

இவ்வாறு பௌத்த சமயத்தின் அடிப்படையான கொள்கைகள் நாயனார் நூலில் காணப்படுவதால் திருக்குறள் பௌத்த மதச்சார்பாய் எழுந்த நூல் என்று கருத ஏதுவாகிறது.

இவ்வகையில் உயரிய சமயக்கொள்கைகளை எல்லாம் தனக்கு அங்கங்களாய் அமைத்துக்கொண்டு அவையனைத்திற்கும் தலையாய் நிற்கும் தகுதி வாய்ந்த தனிநூலாகத் திருக்குறள் விளங்குகிறது.

---

1. கல்லாடம், 14.
2. மு. வரதராசனார், பொதுமை நூல், வள்ளுவர் ஈராயிரம் ஆண்டு மலர், ப. 4.
3. ச. தண்டபாணிசேசிகர், திருக்குறள் அமைப்பும் அழகும், ப. 159.

## வேறுபட்ட கருத்துரைத்தல்

ஒத்த முகம் மூவர்பாற் காண்கை அரிதாதல் போல முற்றும் ஒத்த வாழ்க்கை நிலைபெற்றார் மூவரைக் காண்கையும் அரிதாம். அதனால் காலத்தாலும் இடத்தாலும் மொழியாலும் வேறுபட்ட சமயநூலாரும், தருமநூலாரும் அறநூலாரும் வேறுபட்ட கருத்துக்களைக் கூறுகின்றனர். இவ்வேற்றுபட்ட கருத்துக்களால் புலப்படும் வள்ளுவத்தின் சிறப்பியல்புகள் குறித்த செய்திகள் இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றன.

## அந்தணர் பற்றி

"அந்தணர் என்ற சொல்லுக்கு அழகிய, குளிர்ந்த அருளுடையவர் என்பது பொருள்."[1] இத்தகு உயர்ந்த பொருள் வாய்ந்த அந்தணர் என்ற சொல்லைக் குறிப்பிட்ட ஒரு குலத்தினருக்கு மட்டுமே மனு பயன் படுத்தியுள்ளார்.

> "பிரம்மாவின் முகத்திலிருந்து வெளிப்பட்டமையினாலும்,
> வேதங்களைப் பெற்றிருப்பதாலும் படைக்கப்பட்ட யாவற்றிலும்
> அந்தணன் சிறந்து விளங்குகிறான்" (மனு.1:93)

> "பிராமணப்பிறவி என்பது உண்மையில் தர்மங்களின் வடிவமாக
> இருப்பது. தர்ம விளக்கத்தைப் புலப்படுத்தா நின்ற
> பிராம்மணன் ஞானத்தால் முக்தி அடைகிறான்" (மனு.1:98)

என்பது மனு கூறும் அந்தணர் குறித்த சிறப்பு.

பிரம்மாவின் முகத்திலிருந்து பிராம்மணர் தோன்றினர் என்பது ஆதாரமற்ற உண்மையாகும். பார்ப்பனக்குலத்தவர் அனைவருக்கும் அந்தணர் என்றசொல் பொருந்தாது என்பதை, "பிராமணன் என்பது பிறப்பினால் அன்று. எவனிடம் சத்தியமும் தருமமும் நிலைத்துள்ளனவோ அவனே பிராமணன்" (த.392) என்று புத்தர் கூறுகிறார. எல்லா உயிர்களிடத்தும் செம்மையான அருள்காட்டிப் பேணி வாழ்கின்ற அருள் நெஞ்சம் படைத்தவரே அந்தணர் என்பதைத் திருவள்ளுவர்,

> "அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுகலான்" (குறள். 30)

---

1. ஆ.வே. இராமசாமி, வள்ளுவர் காட்டும் மனிதவாழ்க்கை, ப. 7.

என்று பாடியுள்ளார். அறவோரை அந்தணர் என்றும், இறைவனை அறவாழி அந்தணன் என்றும் அவர் கூறியுள்ளார். "அந்தணர் என்பது ஒரு சாதிப் பெயரன்று, குணப்பெயர் என்பது. அந்தணர் என்போர் அறவோர் என்ற குறிப்பு மறுப்பாலும் பெறப்படுகிறது"[1] என்பார் வ.சுப. மாணிக்கம்.

அறநெஞ்சம் படைத்தவர் யாராயினும் எக்குடிப் பிறந்தவராயினும் எந்நிலையில் இருப்போராயினும் இல்லறத்தாராயினும் துறவறத் தாராயினும் ஆணாயினும் பெண்ணாயினும் அவர் அந்தணர் ஆவர். செந்தன்மை பூண்டொழுகும் அறநெஞ்சம் இல்லாதவர் பார்ப்பனக்குலத்தில் பிறக்கினும் வேறு எக்குலத்தில் பிறக்கினும் அந்தணராகார்.

பிறப்பினால் உயர்ந்தவர் பிராமணர் என்பது மனுவின் கருத்து. இக்கருத்திற்கு மாறாகப் பிறப்பினால் வருவதன்று பிராமணநிலை; சத்தியமும் தருமமும் உடைய யாவரும் அந்நிலையை அடையலாம் என்று புத்தர்பெருமான் கூறுகின்றார். எல்லா உயிர்களிடத்தும் அருளுடைய யாவரும் அந்தணரே என்று உயிர்ப்பொதுமை நோக்கில் கூறும் இக்குறளின் தனித்திறம் போற்றற்குரியதாகிறது.

## அரசர் பற்றி

தருமசாத்திரக்கால அரசியலில் குறித்த மன்னன், தெய்வதிக் பாலர்களின் அம்சமாக விளங்குகிறான். ஏறிட்டுப் பார்ப்பவர்களின் கண்ணையும் மனத்தையும் காந்தச் செய்வதால் யாரும் அரசனுக்கு எதிரிலே நின்று பார்க்கக்கூடாத வராகின்றனர் (மனு.7:6). "அரசியலில் அரசுரிமை பிறப்புரிமையால் வருகிறது. அவன் ஆளும் நாடு அவனது உடைமை. அமைச்சர் முதலாய அரசுப்பணியாளர்களை மன்னனே தேர்ந்தெடுத்துப் பணியில் அமர்த்துகின்றான். அரசனே நாட்டிற்கு உயிர். முதன்மையும் சிறப்பும் அரசற்கே உரியன! அவன் தயவினால் பொருளும் வெற்றியும் கிடைக்கும். அவன் பகையால் மரணமே. அத்தகையவன் மிகுந்த ஒளி படைத்தவன்" (மனு.7:11). அரசனது நோக்கம் நாட்டை இடத்தால் விரிவுபடுத்துவது. பகைவர் தரும் திறையே புகழ்ச்செல்வம் (மனு.7:206) எனக்கூறிய மனு மன்னனால் ஆளப்படும் நாடு பற்றிய செய்திகளைக் குறிப்பிடவில்லை. அரசுரிமையைத் துறந்து சென்றவராதலால் புத்தர்பிரானும் அரசு பற்றிய செய்திகளைக் குறிப்பிடவில்லை.

---

1. வ.சுப. மாணிக்கம், இலக்கிய விளக்கம், ப. 58.

திருக்குறள் மனுவின் கொள்கையிலிருந்து முற்றிலும் மாறுபடுகின்றது. மன்னரின் அன்றாடக்கடமைகள், அரண்மனை, திருமணம், உணவு, உடை, அந்தப்புரம் பற்றிய செய்திகள் காலத்திற்கும் இடத்திற்கும் மாறும் இயல்பினவாதலால் அவைபற்றிக் குறிப்பிடவில்லை. வேந்துரிமை, பிறப்புரிமை என்பது பற்றிய குறிப்புகளும் குறளில் யாண்டும் தென்படவில்லை. இறைமாட்சி அதிகாரத்தில் அரசன் வருவழி கூறாது அவனிடம் இருக்கவேண்டிய அரசியல் புகழையே பேசியிருக்கிறார்.

''அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு'' (குறள். 382)

என்பதே வள்ளுவர் கூறும் மன்னனின் இயல்புகளாகும். முடியாட்சி, குடியாட்சி, பிறவாட்சி என்ற வகைபற்றிக் கூறாது வேந்தரின் சிறப்புப்பற்றியே வள்ளுவர் கூறினார். 'குடிதழீஇக் கோலோச்சும் மன்னனையே' வள்ளுவர் அறிமுகப்படுத்துகின்றார். மன்னன் ஆளும் 'வளந்தருநாடு' (குறள். 739) பற்றிய செய்திகளையும் விளக்கியுள்ளார்.

## அகத்தியர் பற்றி

கொல்லாமையை எல்லா நூல்களும் வலியுறுத்துகின்றன. ஆனால் ஓர் அறத்தை வலியுறுத்துவதற்காக மற்றோர் அறத்தை மெலிவிக்கும் பண்பு மனுதரும சாத்திரத்தில் காணப்படுகிறது.

''புசிக்கத்தக்க பறவை விலங்குகளையும் வேள்விக்கோ, தாய் தந்தையரின் நன்மைக்கோ ஒருவன் கொல்லலாம். முன்னாளில் அகத்தியர் தமது தாய் தந்தையரின் பொருட்டு உயிர்வதை செய்திருக்கிறார்'' (மனு.5:22)

இவ்வாறு கொல்லாமையை வலியுறுத்துவதற்காக மனு, தமிழ் முனிவர் அகத்தியர் செயலை இழிவாகக் கூறியிருத்தல் ஏற்புடையதன்று. இக்கருத்திற்கு மாறாக வள்ளுவர்,

''ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்'' (குறள். 899)

என்று கூறியிருப்பது நோக்கற்குரியது. அகத்தியரை, 'ஏந்திய கொள்கையார்' என்று வள்ளுவம் குறிப்பிடுகிறது. இதற்கு அரணாகப்

பரிமேலழகரும், 'உயர்ந்த விரதங்களை உடைய அகத்தியர்' என்று குறிப்பிடுகின்றார். தனக்கு வந்த நோயைத் தாங்கிக்கொள்ளுதலும், பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாமையுமே தவமாகும். கொல்லாமலும் புலால் உண்ணாமையுமாகிய உணவொழுக்கம் உடையார்க்கே தவம் நிலைக்கும். இத்தகு வள்ளுவநெறிக்கேற்ப வாழ்வு நடாத்திய அகத்தியர் உயிர்வதை செய்திருப்பாரா? என்பது ஆய்விற்குரியது. புலவர்களுக்கெல்லாம் தலைமைப் புலவனாகச் சங்கத்தில் வீற்றிருந்து அகத்தியர் ஆன்றோராகவும் அரளாளராகவும் திகழ்ந்திருப்பார் என்பது தெளிவு.

தருமசாத்திரம் வடநூலாதலால் தமிழ்மாமுனிவர் அகத்தியரின் ஏற்றத்திற்கு இழிவு கற்பித்திருக்கலாம். ஆனால் தமிழ் மறையோ இன வேற்றுமை, மொழி வேற்றுமை, இடவேற்றுமை, மனவேற்றுமை, பணவேற்றுமை, குணவேற்றுமை, காலவேற்றுமை இவற்றிற்குப் பகையாய் எங்கும் பரவி நிற்கும் வேற்றுமையாகிய தத்துவத்தை விளக்குகிறது. அதனால் திருக்குறள் தத்துவப்பொது நூலாக விளங்குகிறது; தெய்வத்தன்மை பெற்றிருக்கிறது.

## அறமுரைத்தலில்

அறத்தை வலியுறுத்தம் தம்மபதமும் மனுதருமமும்,

"அறநெறியில் ஒழுகுபவர் இம்மையிலும்
மறுமையிலும் இன்புறுகிறார்கள்" (த.169)

"அறங்களை மேற்கொண்டு ஒழுகுபவன்
இம்மையில் புகழையும் மறுமையில்
அளவிட்டுரைக்க இயலாத இன்பத்தையும் அடைவான்" (மனு.2:9)

என்று எடுத்துரைக்கின்றன. இம்மையிலும் மறுமையிலும் இன்பம் என்னும் ஊதியமளிக்கும் கருவியாக அறம் கருதப்படுகிறது. இரு அறநூலாரும் கூறுவதைப்போலவே திருவள்ளுவரும்,

'அறத்தான் வருவதே இன்பம்' (குறள். 39)

என்று கூறுகிறார். ஊதியம் பற்றிய கருத்தும் குறளில் இடம் பெற்றுள்ளது. இக்கருத்துடன் மிக எளிமையான, ஆனால் சிறப்புடைய மற்றொரு செய்தியும் இடம்பெற்றிருக்கிறது. மக்கள் தங்கள் வாழ்க்கையில் பொருளைப் பெறுவதற்கும் இன்பத்தை அடைவதற்கும் அறம் கருவியாகப்

பயன்படுவது அல்லாமல் அதற்கென்று தனிக்குறிக்கோளும் உள்ளது. திருவள்ளுவரின் உயிர்நோக்கினை,

"நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று" (குறள். 222)

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு" (குறள். 211)

என்ற குறட்பாக்கள் புலப்படுத்துகின்றன. இதனால் அறத்தை அறத்திற்காகவே செய்வது சிறப்புடையதாகக் கருதப்பட்டமை தெளிவாகிறது. பிறிதொரு நன்மையை அடையவேண்டும் என்னும் நோக்கில் அறத்தைச் செய்வது அறத்தை விலைகூறி விற்பதாகும். அறத்துறையில் வாணிக நோக்கோடு செயலாற்றுவோரைச் சங்கப்புலவர், 'அறவிலை வாணிகர்' என்று கடிந்துரைப்பதை,

"இம்மைச் செய்தது மறுமைக்காமெனும்
அறவிலை வாணிகன் ஆயலன்"[1]

என்ற பாடலடிகளால் அறியலாம். அறத்தை அறத்திற்காகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் தமிழ்ச்சமுதாயத்தில் வேரூன்றி வளர்ந்திருந்தது. அதற்கேற்பத் திருவள்ளுவருடைய அறக்கொள்கையும் மிகப் பரந்துபட்டதாக, என்றைக்கும் பயன்படும் சிறப்புடையதாக, குறிக்கோள் நோக்குடையதாக இருக்கிறது என்பது தெளிவு.

## ஆன்மநேயம் பற்றி

"ஆன்மநேயம் என்றால் ஆன்மாவும் ஆன்மாவும் நேயங்கொள்ளல். ஒருமை உடன் சேர்ந்திருப்பதனால் எவ்வகை வேற்றுமையையும் நேயத்தின் வலிவாற் பொருட்படுத்தாமல் எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி நடந்துகொள்ளுதல்"[2] என்பர் அறிஞர். இந்த ஆன்மநேய ஒருமைப்பாட்டை உணர்த்துவதில் அறநூலார் வேறுபடுகின்றனர். விரதங்களிலும் வேள்வியிலும் நம்பிக்கை உடைய மனுநூலார்,

"வேள்விக்கென்றே பசுக்கள் பிரமனால்
படைக்கப்பட்டன" ( மனு.5: 39)

1. புறம்., 134.
2. அழகரடிகள், திருக்குறளின் ஆன்மநேய ஒருமை, திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு சிறப்புமலர், ப. 69.

என்று கூறுகின்றார். இறைவழிபாட்டிலும் வேள்வியிலும் நம்பிக்கையற்ற பௌத்தநூலார், உயிர்க்கொலையை விரும்பாது,

"யாகங்கள் ஆயிரம் செய்வதை விட
தம்மைத் தாமே அடக்கிக்கொண்ட
ஒருவரை வணங்குதல் மேலானது" (த.104)

என்று அறிவிக்கின்றார். உலகில் உயிர்களாகப் பிறந்தவை அனைத்தும் நன்றாக வாழவேண்டும் என்பதில் திருவள்ளுவர் அழுத்தமான கருத்துடையவர். மக்களாயினும் மற்றச் சிற்றுயிர்களாயினும் அவை அதனதன் இயைபில், உரிமையில் வளர்ச்சியில் தடையின்றி உயிர் வாழவேண்டும் என்தை,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று" (குறள். 259)

என்று கூறுகின்றார்.

கொல்லாமை, புலால் உண்ணாமை, இன்னா செய்யாமை என்னும் அதிகாரங்கள் எல்லா உயிர்களின் உயிர்வாழ்க்கைக்கும் பாதுகாப்புத் தருகின்றன. அதோடு பொருட்பாலில்,

'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்றுகூறி, மக்களேயன்றி எல்லா உயிர்களும் ஒரே இனம் என்பதை வலியுறுத்துகின்றார். இதனால் வேற்றுமை கருதாது,

"அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" (குறள். 80)

"மன்னுயி ரோம்பி ஆருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை" (குறள். 244)

எனவரும் குறட்களில் ஆன்மநேய ஒருமைப்பாட்டை வள்ளுவர் புலப்படுத்துகின்றார். அன்புடைமைக்கும் அருளுடைமைக்கும் அடை-யாளமாக ஆன்மநேய ஒருமை எடுத்துக்காட்டப்படுகிறது.

இவ்வாறு மன்னுயிர்க்கெல்லாம் இனிதாக நடந்துகொள்ளும் மாந்தரின் வாழ்க்கையே மாண்புறு வாழ்க்கை என்பதை வள்ளுவம் வெளிப்படுத்துகிறது.

## சான்றோர் பழிக்கும் வினைபற்றி

"வேத காலத்திலிருந்து வேள்வி செய்தல் உயர்ந்தோர் தொழிலாகக் கருதப்படுகிறது. நாட்டிற்கு இன்றியமையாத செயலாகவும் வேண்டப்படுகிறது. ஏனெனில் மழைவளம் பெறுவதற்கும், அறிவுப் பெருக்கத்திற்கும், அறமுதலாகிய நான்கு உறுதிப்பொருட்கள் நிலை பெறுவதற்கும் வேள்வி செய்யப்படுகிறது."[1] இத்தகு அறச் செயல்களுக்கு அடிப்படைக்காரணமாக வேள்வியைச் செய்ய முயல்கையில் அதற்குத் தேவைப்படும் பொருட்கள் யாவிலும் ஒன்று குறைந்தால், ஈயாத வைசியனின் பொருட்களை வலிந்து கவர்ந்து வந்து வேள்விக்குப் பயன்படுத்தலாம் அல்லது நான்காம் வருணத்தானின் பொருட்களைக் கேளாமலும், வலிந்தும், களவிட்டும் கொண்டுவரலாம் (மனு.11:5). வேள்வி செய்யப்படும் பொருள் அதை உடையவனுக்குப் பயன்தருமாதலால் அவ்விதம் செய்தலும் அறச்செயலாகும் என்பது மனுநெறி. அதோடு பசித்திருப்பவன் தனக்கு யாதொன்றும் கிடைக்கவில்லை என்றால் தருமம் செய்தறியாதவனின் பொருளைக் களவாடியும் பெறலாம் (மனு.11:16) என்று அறமற்ற செயல்களைச் செய்வதற்கும் மனு அனுமதிக்கின்றார்.

ஆனால் அறநெறியாளராகிய வள்ளுவர் அறமும் புகழும் பயக்காத செயல்களைச் செய்தல் கூடாது என்று வலியுறுத்துகிறார். 'இடுக்கண் படினும்' இளிவந்த செயல்களைச் செய்தல் கூடாதென எச்சரித்த வள்ளுவர்,

> 'செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை' (குறள். 656)
> 'ஒளிமாழ்கும் செய்வினை ஓஒதல் வேண்டும்' (குறள். 653)

என்றும் ஆணையிடுகின்றார்.

> 'எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் நலந்தரு செயலே அறமாகும்'. எனவே வள்ளுவம் வாழ்நாளில் செய்யத்தக்கது நல்லறமே என வலியுறுத்துகிறது.

சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்தாவது அறச் செயல்களைச் செய்தல் வேண்டும் என்பது மனுநெறி. ஆனால் பாவமும் பழியும் பயக்கும் வினைகளைச் செய்யற்க என்பது வள்ளுவநெறி.

---

1. பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), ஐங்குறுநூறு, ப. 14.

## கொலையின் ஆக்கம் பற்றி

கொல்லாமையாகிய அறமே நன்னெறியாகக் கருதப்பட்டாலும்,

> "வேள்வியிலும் சிரார்த்ததிலும் ஒருவர்க்கு உண்பிக்கும்போது மட்டும் உயிர்வதை செய்யலாமன்றி ஏனைய போது கூடாது என்று மனு கட்டளையிடுகின்றார்" (மனு.5.41).

ஏனெனில் "வேதம் விதிக்கும் வதைகளை வதையென்று கருதற்க. அறங்களை விதிக்கும் வேதம் வதையை விதிப்பினும் அது நல்லறத்தின் பாற்பட்டதாகவே இருக்க முடியும்" (மனு.5:44) என்று சமாதானமும் கூறுகின்றார். இதனால் வேதம் கூறுவதெல்லம் நல்லறமேயாதலால் வேள்விக்காக உயிர்வதையும் செய்யலாம் என்பது தெளிவாக்கின்றது.

உலகில் இறைவனது ஆணையால் வாழுகின்ற உயிர்களைக் கொன்று அதனால் எய்தற்பாலதாகிய ஆக்கம் அளவிறந்ததாயினும் அவ்ஆக்கம் கருதிக் கொலை செய்தல் பெருங்கேடு விளைவிக்கும் என்று வள்ளுவர் கூறுவதை,

> "நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
> கொன்றாகும் ஆக்கங் கடை" (குறள். 328)

என்னும் குறளில் அறியலாம். கொலை செய்தல் தீது என்பதை மனு ஏற்றுக்கொண்டாலும் வேள்விக்காகக் கொலையும் செய்யலாம் என்கிறார். வேள்வி செய்தல் சமயஞ்சார்ந்த நெறி. இறைவழிபாட்டில் நம்பிக்கையற்ற புத்தர் உயிர்வதைக்குக் காரணமான வேள்வியை விரும்பவில்லை. கொல்லாமையே பௌத்த சமயத்தின் உயிரோட்டமாகும்.

சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகில் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவமாதலால் வேள்விக்காக் கெலை செய்தல் வேண்டும் என்ற நெறியை வள்ளுவர் வலியுறுத்தவில்லை.

## தண்டனை விதித்தல் பற்றி

மனுதருமநூல் சாதி வேற்றுமையை அடிப்படையாக்கொண்டு வழக்கு, தண்டம் முதலியவற்றில் சாதிக்கொரு நீதியாகவும் குலத்துக்கொரு நீதியாகவும் அமைத்துக் கூறுகிறது. அறங்கூறவையத் தலைவனான நீதிபாலன் குற்றம் செய்தவனுக்கு அவனது சாதியை அறிந்தே தண்டனை விதிக்க வேண்டும்.

ஒரு குற்றத்தை உயர்சாதியினர் செய்தால் எளிய தண்டனையும் தாழ்ந்த சாதியினர் செய்தால் கடுமையான தண்டனையும் விதிக்கப்பட்டது.

> "அந்தணனும் சத்திரியனும் ஒருவருக்கொருவர் வசைமொழிந்து கொண்டால் அறநெறி வழுவாத மன்னன் அந்தணனுக்கு இருநூற்றைம்பது பணமும் சத்திரியனுக்கு ஐந்நூறு பணமும் அபராதம் விதிக்க" (மனு.8:276)

> "நாலாம் வருணத்தினன் துவிஜர்களை வைதால் அவனுடைய நாவை அறுக்க" (மனு.8:270)

என்ற கருத்துக்களைக் கூறும் நூலினை, "தரும சாத்திரம் என்று உரைப்பின் அறக்கடவுள் நாணித்தலை கவிழுமென்று சொல்லவும் வேண்டுமோ! முறைசெய்யும் வேந்தர் எவரும் இத்தரும நெறியை மேற்கோளாகக்கொண்டு முறைசெய்ய ஒருப்படுவரோ"[1] என்ற கருத்தும் நோக்குதற்குரியது. மரணமும் தண்டனையும் அனைவர்க்கும் பொது என்று பௌத்தம் கூறுகிறது.

வள்ளுவர் தம் அறநூலில் சமன்செய்து சீர்தூக்கும் கோல்போன்று நடுவுநிலை வழுவாத பொதுநீதியையே கூறியுள்ளார்.

## களவும் தண்டனையும் பற்றி

மனிதன் உழைத்து வாழவேண்டும். பிறர் உழைப்பால் தேடிய பொருளைக் கவர நினைத்தலும் கவர்தலும் திருட்டு எனப்படுகிறது. திருடுதல் பெருங் குற்றமாகக் கருதப்பட்டதால்,

> "தங்கம், வெள்ளி, பட்டாடைக்ளைத் திருடியவனை மரணம் வரையில் தண்டிக்கவும்" (மனு.8:320)

என்று மனு மொழிகின்றார். வள்ளுவரும் கள்ளாமை, வெஃகாமை என்ற இரு அதிகாரங்களைப் படைத்துப் பிறர் பொருளுக்கு ஆசைப்படக்கூடாது என்னும் அறநெறியை வலியுறுத்துகிறார். பிறன் பொருளைக் கவர்வேன் என்று நெஞ்சில் நினைப்பதே குற்றம் என்பதை, 'உள்ளத்தால் உள்ளலும் தீதே' (குறள் 282) என்று சாடுகின்றார்.

திருடாமையை இரு அறநூலாரும் வலியுறுத்துகின்றனர் என்பது

---

1. மறைமலையடிகள், திருக்குறள் ஆராய்ச்சி, ப. 28–29.

தெளிவு. ஆயினும் மனிதர் தவறு செய்வது இயல்பு. பிறக்கும்பொழுது யாரும் திருடராகப் பிறப்பதில்லை. வறுமைச் சமூதாயத்தில் இல்லாமை எதிர்ப்படும் சூழலில் பிறர் பொருளைக் கவர முயல்தல் இயல்பு. திருட முயன்ற சூழலுக்கேற்பத் தண்டனை வழங்கவேண்டும். அதுவும் உலகோர் ஏற்கும் வகையில் தண்டனை அளித்தல் திருடர் திருந்துவதற்கு ஏதுவாகும். அல்லது திருடியவர் எல்லோருக்கும் ஏற்றத்தாழ்வு கருதாது, நடுவுநிலை பிறழாது தண்டனையளிப்பது சாலச்சிறந்தது. ஆனால் இதற்கு முரணாக மனு உறவுக்கேற்ப, சாதிக்கேற்பத் தண்டனை வழங்குமாறு கூறுவதை,

> "களவு செய்தவன் உடைமையாளனுக்கு அன்னியராயின்
> நூறுபணமும், சம்பந்தப்பட்டவனாயின் ஐம்பது பணமும் தண்டம
> விதிக்க" (மனு.8:325–330)

> "திருடன் நான்காம் வருணத்தாயின் எண்மடங்கும்
> வைசியனுக்குப் பதினாறு மடங்கும், சத்திரியனுக்கு
> முப்பத்திரண்டு மடங்கும் அந்தணனுக்கு அறுபத்து நான்கு
> மடங்கும் தண்டனை விதிக்க" (மனு.8:336)

என்ற கருத்துக்கள் புலப்படுத்துகின்றன. இப்போக்கு மக்களிடையே பெரும் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துகிறது.

தண்டனையால் தீயோரைத் திருத்த முடியாது. 'திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என்பதை நன்கறிந்த வள்ளுவர் விளையும் நன்மை, தீமைப் பயன்களைக் கூறித் திருத்த முயல்கிறார். அதனால் பிறர் பொருளை விரும்புவோர்க்குக்.

'குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்' (குறள். 171)

'பொல்லாத சூழக் கெடும்' (குறள். 176)

'வீயா விழுமம் தரும்' (குறள். 284)

என்றுகூறி எச்சரிக்கை செய்வதோடு,

> "கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
> தள்ளாது புத்தே ளுலகு" (குறள். 290)

என்று இன்பப்பயனையும் கூறி நல்லாற்றுப்படுத்தும் திறன் போற்றற் குரியது எனலாம். திருடனைத் திருத்துவதற்காகக் கொடுமையான

தண்டனையையும், உறவுமுறையையும், சாதிமுறையையும் நோக்காது நடுவழிக்கொள்கையை வள்ளுவர் பின்பற்றியிருப்பது திருடன் திருந்து வதற்கும் மீண்டும் திருடாமைக்கும் ஏதுவாக அமைகின்றது.

## பெண்கல்வி பற்றி

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற நிலை மனுவின் காலத்தில் நிலவியிருந்தது. பெண்கல்வியை மனு வற்புறுத்தவில்லை. ஏனெனில் மனுவின் காலத்தில் உபநயனம் செய்யப்பெற்றவரே கல்வி கற்கத் தகுதி உடையவராகக் கருதப்பட்டனர். நான்காம் வருணத்தாருக்கும் பெண்களுக்கும் உபநயனம் செய்யப்படவில்லை (மனு.2:37). அதனால் இவர்களுக்குக் கல்வி கற்கும் உரிமையும் இல்லை என்பதை,

> "பெண்களுக்கு விவாகமே உபநயனம்; கணவனுக்குப் பணிபுரிந்
> திருத்தலே குருகுலவாசம் எனப்படும்" (மனு.2:67)

என்பதனால் அறியலாம். கணவனுக்குப் பணிபுரியும் பெண்களுக்குக் கல்விதேவை என்பதை மனு அறிவிக்கவில்லை. கல்வியின் தேவையை வலியுறுத்தும் புத்தர் பெண் கல்வியை விதந்து கூறவில்லை. ஆனால் மக்களாய்ப் பிறந்தாரெல்லாம் கற்க என்கின்றார் வள்ளுவர். கற்றற்கு இன்னார் உரியர், இன்னார் உரியரல்லர் என்ற ஆளொதுக்கம் திருக்குறளில் அறவே இல்லை. 'வாழ்வு வேண்டின் வேண்டுக கல்வி' என்னும் அடிப்படையில் மிகச்சுருக்கமாக,

> "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (குறள். 392)

> "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு" (குறள். 396)

என்று இயம்பியுள்ளார்.

ஆண், பெண் ஆகிய இருபாலரும், நூல்களைக் கற்று, அறிவுடையராய் இருத்தல் வேண்டும் என்பதே வள்ளுவரின் கருத்தாகக் காணப்படுகிறது. ஆதலால் அனைவருக்கும் எண்ணும் எழுத்தும் இன்றியமையாதன என்று கூறியுள்ளார். மேலும்,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" (குறள். 393)

என்ற குறளிலும் ஆண், பெண் என்னும் வேற்றுமையின்றிக் கற்றவர்களே கண்ணுடையவர் என்றும் மற்றவர்கள் முகத்தில் இரண்டு புண்ணுடையவர் என்றும் பொதுவாகவே வள்ளுவர் கூறிப்போந்தார்.

"எல்லோரும் கற்க, பெண்டிரும் கற்க என்றவாறு வள்ளுவர் பிரித்து விதந்திலர். ஏன்? பால் காரணமாகக் கல்வி மறுக்கும் இழிபினைத் தங்காலத்துக் கண்டிலர். பரத்தை வழிப்பிறந்த மாதவி கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை எனப்புகழப்பட்டாள்"[1] எனும் கருத்து நினைக்கத்தக்கது. மேலும் தமிழகத்தில் பல நல்லிசைப்புலமை மெல்லியலார்கள் வாழ்ந்தனர், நூலியற்றினர் என்பதைச் சங்கநூல்கள் அறிவிக்கின்றன.

வள்ளுவர் கருத்தும் நம் தமிழக வழக்கமும் இவ்வாறிருக்க, அறிதற்கு உரிய மக்கள் ஆண் மக்களே என்றும் பெண்களுக்கு அவ்வுரிமை எவ்வாற்றானும் கிடையாதென்றும் மனுதருமம் கூறுவது ஒருசிறிதும் பொருந்தாததாகும். அதனால் தாய்ப்பெண்டிரைக் கற்கவிடாது ஒதுக்கும் பண்பு வள்ளுவத்தில் இல்லை.

## அடிமைகள் பற்றி

மனுவின் காலத்தில் பெண்களும் நாலாம் வருணத்தாரும் அடிமைகளாக நடத்தப்பட்டனர். பெண்களுக்கு எந்நிலையிலும் உரிமை அளிக்கப்படவில்லை. அவர்கள் ஆடவர்களைச் சார்ந்தே வாழ்ந்தனர் என்பதை,

"இளமையில் தந்தையினாலும் பருவகாலத்தில் கணவனாலும்,
முதுமையில் மைந்தராலும் காக்கப்பட வேண்டியவர் ஆதலால்
மாதர் எஞ்ஞான்றும் தம்மிச்சையாக இருக்கக்கூடாதவராவர்"
(மனு.9:3)

என்பதனால் அறியலாம். மேலும் மேன்மக்களாகக் கருதப்பட்ட அந்தணர்களுக்கு நாலாம் வருணத்தவர்கள் ஏவல் புரிந்தனர். இவர்களுக்கு, "கூலி கொடுத்தோ, கொடுக்காமலோ அந்தணர் வேலை

---

1. வ.சுப. மாணிக்கம், வள்ளுவம், ப. 191.

வாங்கினர்'' (மனு.8:412). அவர்களும் மறுமை இன்பம் நாடி அந்தணரிடம் பணிபுரிந்தனர். இவர்களைத்தவிரச் சமூதாயத்தில், எழுவகைத் தொழிலாளர் இருந்தனர்.

> ''போரில் சிறைபிடிக்கப்பட்டவன், பக்தியினால்
> தொண்டுபூண்டவன், பரத்தையினிடமாகப் பிறந்தவன், விலை
> கொள்ளப்பட்ட அடிமை, தானமாக வழங்கப்பட்ட பணியாளன்,
> பரம்பரையாகத் தனது குலமே ஒரு குடும்பத்திற்குத் தொண்டு
> பூண்டவன், குற்றத்திற்குக் கழுவாயாக வேலை செய்து வருபவன்
> எனத் தொழிலாளர் எழுவகையாவர்'' **(மனு.8:414).**

இவர்களிடமிருந்து பொருளை அந்தணன் வலிந்து கொள்ளலாம். இவர்களால் ஈட்டப்பட்ட பொருளும் அந்தணனாகிய தலைவனுக்கே உரிமை உடையதாகும். அவர்கள் ஈட்டிய பொருளைத் தருமத்திற்காகச் செலவு செய்யவும் தலைவன் அனுமதி வேண்டும்'' (மனு.8:415) என்று கூறும் மனுநெறியை அதர்ம நெறியெனக் கூறலாம். அரசனை விட அந்தணர்களுக்கு அதிகமான உரிமைகள் அளிக்கப்பட்டிருந்ததால் தருமசாத்திரக் காலத்தை அந்தணர்களின் பொற்காலம் என்று கூறினால் அது மிகையாகாது.

மனு கூறும் அடிமைக்கொள்கை நம் நாட்டில் தொல்பழங் காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகளை அடிப்படையாகக்கொண்டது. காலத்திற்கேற்ப மாறியும் வந்துள்ளது. இன்றைய நிலையில் அவற்றின் பயன்பாட்டை நம்மால் எளிதில் அறிய இயலவில்லை. காலத்தால் முந்திய நிலையினை அறிவுறுத்துவதால் அவை ஒளி குன்றியனவாக நமக்குத் தெரிகின்றன.

திருக்குறளில் பெண்ணின் பெருமை பேசப்படுகிறது. அறத்துப் பாலில் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள? (குறள். 54) என்று வினவும் வள்ளுவர், பொருட்பாலில் 'பெண்ணே பெருமை உடைத்து' (குறள். 907) எனவும், காமத்துப்பாலில் 'பெண்ணின் பெருந்தக்கது இல்' (குறள். 1137) என்று விடை பகர்ந்தள்ளதையும் காணலாம். மேலும் பெண்ணை வாழ்க்கைத்துணைநலம் என்றும், கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள (குறள் 1101) என்று மங்கை தரும் இன்பத்தை வள்ளுவர் போற்றிப் புகழ்கின்றாரே தவிரப் பெண்ணை இழிவுபடுத்தும் விதிகள் குறளில் யாண்டும் இடம்பெறவில்லை.

## கடமைசெய்யாச் செல்வர் பற்றி

இல்லறத்தில் ஈடுபடுவான் தன் மனைவி, மக்கள், விருந்து, அரசு முதலானவர்களுக்குச் செய்யும் கடன்கள் உள்ளன. அவை கடமையாகும். "வழக்காற்று ஒழுக்க நெறியின் அடிப்படையில் கடமை என்பது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் தான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தன்னைச் சார்ந்துள்ள உற்றவர், உறவினருக்கும், சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் உலகிற்கும் ஆற்றவேண்டிய அரும்பணிகளாகக் கருதப்படலாயின. அவற்றைச் செய்கின்றபொழுது பயன் கருதாது குறி எதிர்ப்பை நோக்காது செய்வது சாலச்சிறந்தது."[1]

இருமுதுகுரவர், மனைவி, மக்கள் இவர்களைப் பேணுதலைக் கடமையாகக் கருதவேண்டும் என்பதை,

> "தாய், தந்தையர் தவித்திருக்க, பேருக்காக மற்றவர்க்குத் தானம் செய்கின்ற செல்வன் பாவமே செய்கின்றான்" **(மனு.11:9)**

> "தன்னால் காக்கப்படவேண்டிய பெண்டு பிள்ளைகளைப் புறக்கணித்து விட்டு, மறுமை இன்பத்தை மட்டும் நாடித் தானம் செய்பவனுடைய கொடை, இம்மை, மறுமை இரண்டினுக்கும் நலிவைத்தருவதாகும்" **(மனு.11:10)**

என்று மனு விளக்குகின்றார். பெற்றோரையும் குடும்பத்தாரையும் பேணிப் பாதுகாக்காது மற்றவர்க்குச் செய்யும் அறம் அருளில்லாதவன் செய்யும் செயலாகக் கருதப்படுகிறது.

"அருளில்லாதவன் செய்யும் அறமும் இருளடைந்த தன்மையதே. உள்ளத்தில் அருள் இல்லாது செய்யும் எந்த அறமும் உண்மையான அறமாகா. அறத்திற்கு உயிர் அருளே. அருள் இல்லாத கொடைகள் வெறும் ஆரவாரத் தன்மையானதாக அமையும்."[2]

வள்ளுவர் கடமை இவை என்று அறிந்து சான்றாண்மை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லவை எல்லாம் கடமையாகும் என்னும் பொருளில்,

---

1. க.த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், ப. 34.
2. இ. சுந்தரமூர்த்தி, வான்மறை வள்ளுவர், ப. 98.

"கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு" (குறள். 981)

என்று பாடியுள்ளார். தனிமனிதன் குடும்பத்தார்க்குச் செய்யவேண்டிய செயல்களை மட்டும் கடமை என்று மனுதருமம் கூறுகிறது. நல்லனவற்றை எல்லாம் ஆற்றவேண்டிய கடமைகளாகக் கருதவேண்டும் எனத் தனிமனிதன் சமூதாயத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளையும் வள்ளுவம் வலியுறுத்துகிறது. இது வள்ளுவரின் பரந்துபட்ட பொதுநோக்கைப் புலப்படுத்துகிறது.

## இறைபற்றி

மனிதன் திடீரென்று தீயோனாவது இல்லை. நல்லவனாவது மில்லை. பலநாள், பலவருடப் பழக்கத்தினாலேயே அவன் குணம் அமைகிறது. எனவே ஆசை அழிந்து, அறியாமை நீங்கி, மெய்யறிவு பெறுவதற்கு அட்டாங்க மார்க்கமாகிய எட்டுப்படிகளும் பயிற்சி நிலையங்களாக அமைந்துள்ளன. மனம், மொழி, மெய்களில் தூய்மை, கருத்துடைமை, இடைவிடாத ஊக்கம் இவைகளின் உதவியால் ஐயமும் மயக்கமும் இல்லாத அறிவுபெற்றுத் தியானம், சமாதி மூலம் மெய்ஞானத்தையும் இறுதியில் நிருவாண முக்தியையும் பெறமுடியும். இதற்குக் கடவுளுணர்ச்சியும் வழிபாடும் வேண்டுவதில்லை என்பது புத்தர் கூறும் அறநெறி. இப்பௌத்த அறநெறியில் மனுவுக்கும் வள்ளுவருக்கும் உடன்பாடு இல்லை.

உலகத்தோற்றத்திற்கு இறைவனே காரணம் என்று மனு முதல் இயலில் கூறியுள்ளார். மேலும்,

"பரமாத்மனுக்கு நரன் என்று பெயர். அவனால் முதலில்
படைக்கப்பட்ட நீருக்கு, நாரம் என்றுபெயர். அவன் நீரில்
இயங்கியதால் நாரணன் என்றுபெயர் ஏற்பட்டது" (மனு.1:10)

என்ற இறை உண்மையை தருமசாத்திரம் கூறுகிறது.

உலகம் கடவுளால் படைத்து இயற்றப்பட்டது. அதற்குத் தோற்றம், நிலை, இறுதி என்னும் முத்தொழில்கள் உண்டு. உலகம் கடவுளையே முதலாக உடையது என்பது திருவள்ளுவரின் கொள்கை. 'உலகியற்றியான்', ' ஆதிபவன் முதற்றே உலகு' என்னும் தொடர்களால் இவ்வுண்மை விளங்கும்.' மேலும், அறவாழ்வு அல்லது ஒழுக்கம்

நிலைபெறுவதற்குக் கூட, இறைஉணர்வும் வழிபாடும் மிக இன்றி யமையாதன என்று வற்புறுத்தியவர் நாயனார். அறவாழி அந்தணன் என்றும், பொறிவாயில் ஐந்தவித்தான் ஒழுக்கநெறி என்றும் வள்ளுவர் கூறியிருப்பதும் ஈண்டு நோக்கற்குரியது.

'கடவுள் வாழ்த்து' என்னும் பகுதியில் மட்டுமன்றி, வகுத்தான், வகுத்தவகை, முறைசெய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்கு இறை எனவரும் தொடர்களாலும் நாயனார் கடவுளுண்மையினை வலியுறுத்துகிறார்.

கடவுளுண்மையினையும் வழிபாட்டினையும் திருவள்ளுவர் வற்புறுத்திய பின்னரே சங்கநூல்களில் கடவுள் வாழ்த்துப்பாடல் அமைவதாயிற்று எனலாம். திருவள்ளுவர் நாத்திகர் அல்லர். அதோடு நாத்திகத்தில் அவருக்குச் சிறிதும் உடன்பாடு இல்லை என்பது தெளிவு.

## உழவுத்தொழில் பற்றி

நாட்டு மக்களுக்கு உயிரோட்டமளிக்கும் உணவுப்பொருட்களை உற்பத்தி செய்யும் வேளாண்மைத்தொழிலை மனு சிறப்பிக்கவில்லை. மாறாக,

> "பிராம்மண சத்திரியர்கள் வாணிபம் செய்து பிழைத்தபோதும்
> உடல்முயற்சியும், பிறர் தயவை நாடத்தக்கதாயுமுள்ள விவசாயத்
> தொழிலை மேற்கொள்ளக்கூடாது. (மனு.10:83)

என்று கூறியுள்ளார். இன்ப வாழ்வைத் துறந்த புத்தர்பிரான் உலக மக்களின் உயிர் வாழ்விற்கு இன்றியமையாத உழவுத்தொழில் பற்றிச் சிறப்பிக்கவில்லையாயினும் உழவுத்தொழிலைச் செய்தல் கூடாது என்று கடிந்து கூறவில்லை. ஆனால் திருவள்ளுவர் இத்தொழிலுக்கு 'உழவு' என்னும் ஓரதிகாரமே இயற்றியுள்ளார். அரசன் படைபலம் உடையவன், பணபலம் உடையவன், அதிகாரம் உடையவன். அவன் வாழ்வும் ஆட்சிச்சிறப்பும் உழவர் வழியே இயங்கும் என்பது வள்ளுவநெறி. அதனால்,

> "பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
> அலகுடை நீழ லவர்" (குறள். 1034)

என்று மன்னன் வாழ்வையும் செல்வத்தையும் உழவனின் வாழ்வின்கீழ்க்

கொண்டுவந்து நிறுத்தியுள்ளார். உழவர் வாழ்வில் துன்பம் உண்டு; இடையூறு உண்டு; ஈத்துவக்கும் இன்பமும் உண்டு. உலக நலங்கருதித் துன்பப்படுபவரே உயர்ந்தவர். மற்ற மக்கள் அவரைத் தொழுவர். அவர்பின் செல்வர் என்பதை,

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்" (குறள். 1033)

என்றார் வள்ளுவர். வேளாண்மை செய்யும் தாளாளர். பிறரிடம் குறைகூறி ஒரு பொருளை இரவார். தம்மிடம் வந்து இரப்பவர்க்கு அவர் வேண்டிய பொருளைத் தவராது கொடுப்பதும், உலகில் உள்ள பசிநோய் நீங்க ஆருயிர் மருந்தாய உணவைப் படைத்து நாட்டையும் வீட்டையும் பாதுகாப்பதும் வேளாண்மைத்தொழிலே. ஆதலால் பாரதியும், "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாடியுள்ளார்.

உலகாளும் மன்னன், மேல்வருணத்தைச் சேர்ந்தவனாதலால் கீழ்வருணத்தார் செய்யும் உழவுத்தொழிலை மேற்கொள்ளக்கூடாது என்பது மனுநெறி, நாட்டை ஆளும் மன்னன் முதல் காட்டில் திரியும் வேட்டுவன் வரை யாவர்க்கும் இன்றியமையாது வேண்டும் உணவும், உடைக்கு வேண்டிய பஞ்சும் உழவுத்தொழிலால் கிடைப்பதே. அதனால் உலகு புரப்பதில் அரசனை விட உழவரே உயர்ந்தவர். உழவுத்தொழிலே ஒப்பற்ற தொழில் என்ற வள்ளுவநெறி போற்றற்குரியதாகும்.

## கூறியன கூறாமை

மனுவும் புத்தரும் வலியுறுத்திக் கூறிய மணஒழுக்கம், தீண்டாமை, நியோகம், வட்டித்தொழில் ஆகிய அறங்கள் வள்ளுவத்தில் இடம்பெறவில்லை.

## மணஒழுக்கம் பற்றி

மனு தருமசாத்திரத்தில் குழந்தைமணம், எண்வகைமணம், பொருந்தாமணம், காதல்மணம், கலப்புமணம், பலதாரமணம், மறுமணம் என்று பல்வேறு வகையான மணங்கள் பற்றிச் சுட்டப்பட்டுள்ளன. ஆனால் திருவள்ளுவர் ஒரு குறளிலேனும் மணவொழுக்கம் பற்றிக் கூறவில்லை. இல்லறத்தார் மேற்கொள்ள வேண்டிய கடமைகளையும் ஒழுக்கங்களையும் வரையறுத்துக்கூறிய வள்ளுவர், திருமணம் செய்துகொள்ளும் முறைபற்றிக் கூறாததால் மனுவிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றார்.

இதற்குக்காரணம் அவரது உலகளாவிய நோக்கே எனலாம்.

"மனு கூறிய கருத்துக்கள் குறிப்பிட்ட ஒருகாலத்தில், குறிப்பிட்ட ஓர் இடத்தில் வாழ்ந்த, குறிப்பிட்ட ஒரு சாதி மக்களுக்கே பெரிதும் பயன்படுவதாக உள்ளது. கங்கைக்ரையில் ஆரியர் வாழ்ந்த காலத்திய பழக்கவழக்கங்களையே அது வானளாவப் பேசுகிறது"[1] என்பர். ஆதலால் வடநாட்டார் வழக்கிலிருந்த திருமண முறைகளைப் பற்றி மனு கூறியிருப்பதில் வியப்பில்லை. வள்ளுவரின் கொள்கை சாதி, சமய, இன, இடவேற்றுமைகளைக் கடந்து அனைத்துலக மனிதன் மண்ணில் நல்லவண்ணம் வாழ வழிகாட்டுவது.

## தீண்டாமை பற்றி

நாட்டு மக்களிடையே ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் வளர்ப்பதற்கு ஆன்றோர்களால் கலப்புமணம் வற்புறுத்தப்பட்டது. இதனால் சாதிவேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் மறையலாம். ஆனால் அறத்தை நிலைநாட்ட வேண்டிய தருமநூலார்,

> 'தாழ்ந்தோருடன் உறவு கொள்ளக்கூடாது' (மனு.3:244)

> "தாழ்ந்தவர் கேண்மையை விலக்கி வாழ்பவன் மேலானவன்" (மனு.3:245)

என்று கூறுகின்றார். மேலும் கலப்புமணத்திற்குக் கடுமையாகத் தடைவிதிக்கின்றார். கலப்புமணம் புரிவோர் நரகடைவர் எனக்கூறி, அச்சுறுத்தும் தன்மையை,

> "தாழ்குலத்துப் பெண்ணுடன் ஒரேபடுக்கையில் சமமாகப் படுக்கும் அந்தணன் நரகம் அடைவான். பிள்ளை உண்டாக்கினால் பிராம்மணத் தன்மை இழந்துபோகும்" (மனு.3:17)

> "எவனுக்குத் தாழ்ந்த சாதிப்பெண்ணிடமாகப் பிறந்த பிள்ளை தென்புலக்கடன் ஆற்றுகிறானோ, அவன் தரும் அவிசைத் தேவரும் தீண்டமாட்டார்கள். அவனுக்குச் சுவர்க்கம் ஆகிய நன்மைகளும் இல்லை" (மனு.3:18)

என்ற கருத்துக்களால் அறியலாம். மேலும் தாழ்ந்த சாதிப்பெண்ணின்

---

1. S. Radhakrishana, Indian Philsophy, Vol.1, P. 259.

மூச்சுக் காற்றுப்படுதல் கழுவாயே இல்லாத பெரும் பாவமாக மனுவால் கருதப்படுகிறது (மனு.3:19). தாழ்குலப் பெண்ணை மணப்பவன் பதிசூன் என்று அழைக்கப்பட்டான். தீண்டத்தகாத சாதியினர் பாகிய சாதியினர் எனப்பட்டனர் (மனு.10:25). இவ்வாறு தீண்டாமையை வலியுறுத்தும் நோக்கில் மனுவின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

இல்லற இன்பத்தைச் சிற்றின்பமாகக் கருதிய புத்தர்பெருமான் இதுபற்றிய செய்திகளைக் கூறவில்லை. ஆனால் வள்ளுவரிடம் சாதி, குலம், சிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறுகின்ற தன்மை இல்லை. ஏற்றத்தாழ்வு இல்லாத உலகைப் படைத்துக்காட்டியதில் வள்ளுவருக்கு நிகர் வள்ளுவரே எனலாம்.

## நியோகம் பற்றி

பண்டைக்கால இந்திய மக்கட் சமுதாயத்தில் தன் கணவனால் மகப்பேறு வாய்க்கப்பெறாத ஒரு பெண் தன் கணவனது விருப்பப்படி வேறு ஆடவரை மருவிப் புதல்வரைப் பெறுதலும், ஆடவர் இளங் கைம்மைப் பெண்டிரைக் கூடிப் புதல்வரைப் பெறுதலும் ஆகிய இழிந்த வழக்கங்கள் இருந்தன. "மகாபாரத்தில் வியாசர் இம்முறைப்படியே திருதராட்டினன், பாண்டு, விதுரர் ஆகியோர் பிறக்கச் செய்தருளினார். குந்திதேவியும், இம்முறையைக் கடைப்பிடித்தே பஞ்சபாண்டவர்களைப் பெற்றெடுத்தாள். இப்பழக்கத்திற்கு நியோகம் என்று பெயர்."[1] இப்பழக்கத்தை மனுதருமம்,

> "சந்ததி இன்றிக் குலமே முடிவடையுமானால் அப்போது ஒரு
> பெண் தனது கணவன், மாமனார் முதலியோரின் ஒப்புதலின்
> மேல் தனது மைத்துணன் அல்லது கணவனுக்கு
> ஏழுதலைமுறைக்குட்பட்டபங்காளி இவர்களுடன் கூடியிருந்த
> குலத்தின் வளர்ச்சியை முன்னிட்டுத்தக்க பிள்ளையைப்
> பெறலாம்" (மனு.9:59)

என்று எடுத்துரைக்கிறது. நியோகம் என்னும் இழிமுறைச்செயல் தெய்வப் புலவருக்குச் சிறிதும் உடன்பாடன்று. ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்பதே திருவள்ளுவர் கொள்கை. மணம் செய்துகொண்ட இருவர் மணமுறிவு செய்து கொள்வதையும் வள்ளுவர் விரும்பவில்லை என்பதை,

---

1. ந.ரா. முருகவேள், திருவள்ளுவர் உடன்படாத கொள்கைகள் சில, திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு சிறப்புமலர், ப. 31.

''இன்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண்டனள்'' (குறள். 1315)

என்ற குறளால் அறியலாம். இதனால் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கற்புநெறியில் அசைக்கமுடியாத உறுதிப்பாடுடையவர் திருவள்ளுவர் என்பது தெளிவு.

## வட்டிக்தொழில் பற்றி

இன்றைக்கு வளர்ந்து வரும் சமுதாயத்தில் மக்களிடையே வட்டிக்குக் கொடுக்கல் வாங்கல் தொழிலாகக் கருதப்படுகிறது. இத்தொழில் மனுவின் காலத்திலும் நடைமுறையில் இருந்தது. வருண அடிப்படையில் வட்டி வசூல் செய்யப்பட்டது. ''நால்வருணத்தாருக்கும் முறையே இரண்டு. மூன்று, நான்கு, ஐந்து வட்டிகள் வாங்குதல் தவறாகக் கருதப்படவில்லை'' (மனு.8:142) என்னும் மனுநீதி மக்களிடையே வேற்றுமையை வளர்க்கும் செயலாகவே கருதப்படுகிறது. பேராசையின் விளைவே வட்டித்தொழில்.

ஆசையைக் களைய முயன்ற புத்தர் வட்டித்தொழில் பற்றிக் கூறவில்லை. உலகப்பொதுமறையாகப் போற்றப்படும் வள்ளுவத்தில் வட்டித்தொழில் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை. ஒல்லும் வகையெல்லாம் அறஞ்செய்தல் வேண்டும் என வலியுறுத்திய அறவோராகிய வள்ளுவர் வட்டித்தொழிலை இழிதொழிலாகக் கருதியிருக்கலாம். அல்லது வட்டித்தொழில் வைசியருக்கே உரிய தொழிலென மனு கூறியிருப்பதைப்போல, குலத்தொழில் பற்றி எவ்விடத்திலும் வள்ளுவர் கூறவில்லை. வருண அடிப்படையில் வட்டி விதிக்கும் மனுநெறியை அறநெறி எனக் கூற இயலாது. ஏனெனில் மனுவின் கொள்கைப்படி நாலாம் வருணத்தார் சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் வாழ்வோராவர். மேல்வருணத்தார் மூவருக்கும் அடிமைத் தொழில் செய்வோராக மனு கூறுகின்றார். அடிமைகளாகத் தாழ்நிலையில் வாழும் மக்களுக்கு அதிக வட்டி விதிக்கும் நெறி நன்னெறியன்று.

## கூறாதது கூறல்

தருமசாத்திரத்திலும் தம்மபதத்திலும் காணப்படாத, காமத்துப்பால் வள்ளுவத்தில் இடம்பெற்றுள்ளது.

'வள்ளுவர் வாழ்வில் நம்பிக்கை உள்ளவர். வாழ்வாவது மாயம்.

நாளை மண்ணாவது திண்ணம் என்று கூறவில்லை. வாழ்வாங்கு வாழ்ந்து மேலுலக வாழ்விற்கு வழிதேட வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து."[1] இல்வாழ்வையும் அரசபதவியையும் துறந்த புத்தர்பெருமானின் போதனைகளடங்கிய தம்மபதத்திலும், பிராமணரின் புகழ்பாடும் மனுதருமத்திலும் காணப்படாத காமத்துப்பால் உலகப்பொதுமறையில் இடம்பெற்றிருப்பது அதன் பெருமைக்குத் தக்க சான்றாகும்.

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉ மேவற்றாகும்"[2]

என்பர் தொல்காப்பியர். அதனால், "இன்பப்பசி என்பது உயிரியல்பு. அப்பசியாற்றல் இன்றியமையா ஒழுக்கமாகும். இயற்கையை மறித்தல் தலைவந்த குழவியைத் தாய்க் கருப்பையில் மீண்டும் அடக்கப்புகுவதை யொப்பது. நகையாடற்கு உரித்து என்றும் பிறப்புண்மையைச் சீர்தூக்கித் தெளிந்த வள்ளுவர் காமத்தப்பால் வகுத்தார். இயல்பாய, இன்ப வேட்கையை நசுக்கப்புகின் உள்ளம் தாங்காது உணர்ச்சி மீதூர்ந்து கூடா வொழுக்கங்களாய் இயல்புணர்ச்சி இறுதியில் திரிபுணர்ச்சியாய் வாழ்க்கை வற்றிப்போம் என்று அஞ்சி, இருபத்தைந்து அதிகாரங்களாகக் காமத்துப்பாலை விரிவு செய்தார்"[3] என்பர் வ. சுப. மாணிக்கம்.

காமம் என்பது உலகியல்பு. அதனால் காமத்துப்பால் உயிருடையார் யாவரும் கற்றற்குரியது. வாழ்வு வேண்டுவோர் யாவரும் ஒழுகற்கு உரியது அதனால் காமத்தின் சிறப்பை,

'புலத்தலின் புத்தேள் நாடு உண்டோர்' (குறள். 1323)

'வேட்ட பொழுதின் அவையவை போலும்' (குறள். 1105)

என்று காதலர் வர்ய்ச்சொற்களினால் புலப்படுத்துகிறார். அவ்வாறே காமவுணர்வின் செவ்வியை,

"மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செல்வி தலைப்படு வார்" (குறள். 1289)

என்று சிறப்பிக்கின்றார். காமம் இயல்பு என்பதற்காக அதனைத் துய்க்குமுறை கல்லாதே தோன்றும் என்பது பிழை. மக்கள் அல்லா பிற

1. அ-இ. பரந்தாமனார், காமத்துப்பால் ஆராய்ச்சி, செந்தமிழ், தொகுதி–63, பகுதி–1
2. தொல். பொருள், 219.
3. வ.சுப. மாணிக்கம், வள்ளுவம், ப. 224.

உயிர்களுக்குக் காமநூல் கற்கும் பேறு இல்லை. மக்களும் கல்லாதே காமம் நுகர்வரேல் அது அஃறிணையோடு ஒப்பப் பொதுநுகர்வாகும்.

காமத்துப்பால் இலக்கியச்சுவைக்காக எழுதப்பட்டதன்று.' காதல் மணம் நுகரும் இளம் ஆடவரும் மகளிரும் கற்கத்தகும் பருவநூல் ; ஒழுக்கநூல். "ஒருவனும் ஒருத்தியும் வகுப்பு பேத மாறுபாடுகளெல்லாம் கடந்து, காமமுற்றுக் காதலித்துக் களவியலில் ஒழுகிக் கற்பியலில் நின்று கண்ட நல் இன்பத்தை நாகரிக முறையில் இன்றைய ஆணும் பெண்ணும் உணர்ந்து வாழ்வதற்குப் படம்பிடித்துக் காட்டுகிறது காமத்துப்பால்"[1] என்பர் ராய. சொக்கலிங்கம். அதனால் வாழ்வைத் தொடங்குவதற்குப் பயன்படும் பயிற்சிநூல் திருக்குறள் என்பது தெளிவு.

1. ராய. சொக்கலிங்கம், வள்ளுவர் தந்த இன்பம், ப. 12.

# பார்வை நூல்கள்

## தம்மபதம்

### தமிழ் மொழிபெயர்ப்பு நூல்கள்


1. தி. இராசகோபாலன் , புத்தரின் அறநெறியும் அருளுரையும் தி. இராசகோபாலன் வெளியீடு. சென்னை, 1990.

2. அ.லெ. நடராசன், தம்மபதம், அன்னை கஸ்தூரிபாய் குருகுலம், வேதாரண்யம், 1979.

3. ஏ.வி.எம். முருகன், தர்மபாதை, கார்த்திக் பதிப்பகம், சென்னை, 1991.

4. ப. ராமஸ்வாமி, தம்மபதம் முல்லை நிலையம், சென்னை, 1987.


### ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்கள்


5. C. Kunhan Raja, Dhammapada, Theosophical Publish ing House, Adyar, 1956.

6. F. Max Mullar, Budha's Dhammapada, Alok Publica tions, New Delhi, 1977.


## மனுதருமம்

### தமிழ் மொழிபெயர்ப்பு நூல்கள்


7. இராமாநுஜாசாரியர், மநுதர்ம சாஸ்திரம், ஸ்ரீபாரதி அச்சுக்கூடம், சென்னை, 1929.

8. சுப்பிரமணிய ஐயர், தர்ம சாஸ்திரம், பொய்யாமொழி பதிப்பகம், சென்னை, 1980.

9. தமிழ்நாடன், மனுதர்மம், சோலைக்குயில் வெளியீடு, சென்னை, 1994.

10. திரிலோக சீதாராம், மநுதர்ம சாஸ்திரம், ஏ.கே. கோபாலன் பப்ளிஷர், சென்னை, 1961.

### ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்கள்

11. G. Buhler, The Laws of Manu, Clarendon Press, Oxford, 1886.

12. Ganganath Jha, Manusmrthi, University of Calcutta, Calcutta, 1924.

## திருக்குறள்

13. பரிமேலழகர், திருக்குறள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1970.

14. கோ. வடிவேலுசெட்டியார், திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் (அறம், பொருள்) ம.ப. கழகம், மதுரை, 1975.

## துணைநூல்கள்

### தமிழ் நூல்கள்

15. வி. அசோக் குமாரன், கம்பனில் தவம், வானதி பதிப்பகம், சென்னை, 1993.

16. மு. அண்ணாமலை, வள்ளுவர் தனித்தன்மை, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1979.

17. அரசு, புலவர், அறப்பளீசுவரர் சதகம் சதகத்திரட்டு, கழக வெளியீடு, சென்னை, 1953.

18. அரசு, புலவர், தண்டலையார் சதகம், சதகத்திரட்டு,, கழக வெளியீடு, சென்னை, 1952.

19. தே. ஆண்டியப்பன், குறள் கண்ட நாடும் வீடும், வானதி பதிப்பகம், சென்னை, 1978.

20. கு.ச. ஆனந்தன், வள்ளுவரின் மெய்யியல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1990.

21. எஸ் இராமகிருஷ்ணன், கம்பன் கண்ட அரசியல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1969.

22 எஸ். இராமகிருஷ்ணன், திருக்குறள் ஒரு சமுதாயப்பார்வை, நியூ செஞ்சரி புக்ஹவுஸ், சென்னை, 1990.

23. ஆ.வே. இராமசாமி, வள்ளுவர் காட்டும் மனிதவாழ்க்கை, வானதி பதிப்பகம், சென்னை, 1958.

24. வி.கே. இராமச்சந்திரன், வாழ்வுநெறி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1967.

25. மா. இராசமாணிக்கனார், தமிழக ஆட்சி, பாரி நிலையம், சென்னை, 1972.

26. இரா. இளங்குமரன், நல்ல துறவராக, குறளாயம், மண்டபம் வீதி, ஈரோடு, 1991.

27. இரா. இளங்குமரன், பண்டைத் தமிழ் மன்றங்கள், கழக வெளியீடு, சென்னை, 1969.

28. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1974.

29. ஔவையார், மூதுரை, கழக வெளியீடு, சென்னை, 1989.

30. கணபதி சாஸ்திரி, வியாசரின் மகாபாரதம், இராமாநுஜாசாரியார் பதிப்பு, சென்னை, 1926.

31. மு. கதிரேசச்செட்டியார், சுக்கிரநீதி, சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, 1982.

32. சோ.ந. கந்தசாமி, திருக்குறள் கூறும் உறுதிப்பொருள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1977.

33. சோ.ந. கந்தசாமி, பௌத்தம், செ.ப. கழகம், சென்னை, 1977.

34. காமாட்சி ஸ்ரீனிவாசன், குறள்கூறும் உறுதிப்பொருள், ம.ப. கழகம், மதுரை, 1975.

35. அ. கிருட்டிணன், கல்வெட்டில் வாழ்வியல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1991.

36. குமரகுருபரன்பிள்ளை, திருமந்திரம், குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1968.

37. புலவர் குழந்தை, திருக்குறளும் பரிமேலழகரும், இளங்கோ புத்தகசாலை, ஈரோடு, 1964.

38. கோபாலகிருஷ்ணமாசாரியர், கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், திருவல்லிக்கேணி, சென்னை, 1958.

39. மு.கோவிந்தசாமி, திருக்குறட் பொருளகராதி, அ.ப.கழகம், அண்ணாமலை நகர், 1972.

40. மு. சண்முகம்பிள்ளை, திருக்குறள் அமைப்பும் அழகும், செ.ப. கழகம், சென்னை, 1972.

41. மா. சண்முகசுப்பிரமணியம், சட்டஇயல், த.ப. கழகம், தஞ்சாவூர், 1984.

42. ஆர்.எஸ். சர்மா, பழங்கால இந்தியாவின் அரசியல் கொள்கைகள், நிலையங்கள், சில தோற்றங்கள், நியூ செஞ்சுரி புக்ஹஸ், சென்னை, 1989.

43. வி.சி. சசிவல்லி, பண்டைத்தமிழர் தொழில்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1989.

44. உ.வே. சாமிநாதையர், குறுந்தொகை மூலமும் உரையும், அ.ப. கழகம், அண்ணாமலை நகர், 1983.

45. உ.வே. சாமிநாதையர், சிலப்பதிகார மூலமும் அரும்பத உரையும், உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 1927.

46. சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும், தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1969.

47. சுவாமி சித்பவானந்தர், கல்வி, தபோவனப் பிரசுராலயம், திருப்பாராய்த்துறை, 1959.

48. அ. சிவலிங்கனார், தொல்காப்பியம், அகத்திணையியல் உரைவளம், ம.ப.கழகம், மதுரை, 1973.

49. இ. சுந்தரமூர்த்தி, வான்மறை வள்ளுவம், நியூ செஞ்சரி புக்ஹவுஸ், சென்னை, 1992.

50. ந. சுப்புரெட்டியார், கல்வி உளவியல் கோட்பாடுகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1995.

51. ந. சுப்புரெட்டியார், காலமும் கவிஞர்களும், எஸ்.ஆர். சுப்பிரமணியபிள்ளை பதிப்பகம், காரைக்குடி, 1958.

52. ச.வே. சுப்பிரமணியன், இலக்கிய உணர்வுகள், தமிழ்ப்பதிப்பகம், சென்னை, 1985.

53. ச.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வகையும் வடிவமும், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1984.

54. புலவர் செந்துறைமுத்து, வள்ளுவர் வகுத்த அறம், கலைமகள் காரியாலயம், சென்னை, 1993.

55. நா. செல்லப்பா, திருமந்திரமும் தம்மபதமும, அரசமாடி வீடு, கொழும்பு, 1993.

56. ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழர் வீரம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1968.

57. ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழ் விருந்து, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1981.

58. ரா.பி. சேதுப்பிள்ளை, திருவள்ளுவர் நூல்நயம், கழக வெளியீடு, சென்னை, 1977.

59. ராய. சொக்கலிங்கம், வள்ளுவர் தந்த இன்பம், சோமு புத்தக நிலையம், மதுரை, 1977.

60. பொ. வே. சோமசுந்தரனார், ஐங்குறுநூறு மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை, 1966.

61. பொ. வே. சோமசுந்தரனார், சீவகசிந்தாமணி மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை, 1974.

62. பொ. வே, சோமசுந்தரனார், திருமுருகாற்றுப்படை மூலமும் உரை யும் கழக வெளியீடு, சென்னை, 1973.

63. பொ. வே. சோமசுந்தரனார், நற்றிணை மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை, 1962

64. மணிமேகலை மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை, 1971.

65. சோமசுந்தரம் செட்டியார், பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற்புராணம், கழக வெளியீடு, சென்னை, 1977.

66. ச. தண்டபாணிதேசிகர், திருக்குறள் அமைப்பும் அழகும், முத்தையா நிலைய வெளியீடு, 1971.

67. தர்மாரெட்டி, திருவள்ளுவரும் வேமனாரும்– ஓர் ஒப்பாய்வு, திரு.ப.கழக வெளியீடு, திருப்பதி, 1984.

68. க.த. திருநாவுக்கரசு, திருக்குறளும் இந்திய அறநூல்களும், ஒப்புரவு அச்சகம், சென்னை, 1988.

69. க.த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதிஇலக்கியம், செ.ப.கழகம், சென்னை, 1977.

70. துரைஅரங்கசாமி, தொல்காப்பிய நெறி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1963.

71. ஔவை. சு. துரைச்சாமிபிள்ளை, பதிற்றுப்பத்து மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை, 1973.

72. ஔவை. சு. துரைச்சாமிபிள்ளை, புறநானூறு மூலமும் உரையும் (முதற்பகுதி), கழக வெளியீடு, சென்னை, 1967.

73. ஔவை. சு. துரைச்சாமிபிள்ளை, புறநானூறு மூலமும் உரையும் (இரண்டா;ம் பகுதி), கழக வெளியீடு, சென்னை, 1972.

74. ஞா. தேவநேயன், பழந்தமிழராட்சி, கழக வெளியீடு, சென்னை, 1971.

75. அ.சு. நவநீதகிருட்டிணன், வள்ளுவர் சொல்லமுதம், இரண்டாம் புத்தகம், கழக வெளியீடு, சென்னை, 1956.

76. அ.சு. நவநீதகிருட்டிணன், வள்ளுவர் சொல்லமுதம், மூன்றாம் புத்தகம், கழக வெளியீடு, சென்னை, 1956.

77. நச்சினார்க்கினியர், கலித்தொகை மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை, 1967.

78. நமச்சிவாயமுதலியார், வாக்குண்டாம், தமிழ்க்கடல் வெளியீடு, சென்னை, 1931.

79. பு. ரா. பக்கிரிசங்கர், பலநாட்டு அரசியல் அமைப்புக்கள், கழக வெளியீடு, சென்னை, 1961.

80. பதிப்பாசிரியர் குழு, இனியவை நாற்பது, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1981.

81. ப. பழனியம்மாள், தமிழில் சதக இலக்கியங்கள், நளினா மங்கை வெளியீட்டகம், மதுரை, 1992.

82. தி.சு. பாலசுந்தரம்பிள்ளை, நாலடியார் மூலமும் உரையும் கழக வெளியீடு, சென்னை, 1972.

83. வல்லை. பாலசுப்பிரமணியம், அருணாசல சதகம், பன்னிரு சதகத்திரட்டு இரத்தினநாயகர் ஸன்ஸ், சென்னை, 1969.

84. மு.பி. பாலசுப்பிரமணியன், இலக்கிய நெஞ்சம், முத்து நிலையம், சென்னை, 1972.

85. புன்னைவனநாத முதலியார், ஆசாரக்கோவை மூலமும் உரையும் கழக வெளியீடு, சென்னை, 1985.

86. மா.வே. மணி, சித்தார்த்த கௌதமபுத்தர், மாருதி பதிப்பகம், சென்னை, 1967.

87. கு. மதுரை முதலியார், திருவள்ளுவர் அரசு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1964.

88. மறைமலையடிகள், தமிழர் மதம், கழக வெளியீடு, சென்னை,1974.

89. மறைமலைய்டிகள், திருக்குறள் ஆராய்ச்சி பாரி நிலையம், சென்னை, 1977.

90. வ.சுப. மாணிக்கம், இலக்கிய விளக்கம், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1973.

91. வ.சுப. மாணிக்கம், திருக்குறட்சுடர், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1987.

92. வ.சுப. மாணிக்கம், வள்ளுவம், பாரி நிலையம், சென்னை, 1969.

93. அ. மாமுண்டியாபிள்ளை, விநாயகர் சதகம், சங்கநிதி அச்சுக்கூடம், சென்னை, 1924.

94. தி. முருகரத்தினம், குறள் கண்ட பொருள்வாழ்வு, ம.ப. கழகம், மதுரை, 1973.

95. தி. முருகரத்தினம், குறள் கூறும் இறைமாட்சி, ம.ப. கழகம், மதுரை, 1974.

96. தி. முருகரத்தினம், வள்ளுவர் வகுத்த அரசியல், ம.ப. கழகம், மதுரை, 1974.

97. இரா. மோகன், சொக்கலிங்கம், ந. நெல்லை, உரைமரபுகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1985.

98. சோ.ந. வீரராகவன், மகாத்மா புத்தர், இமயப்பதிப்பகம், நாகபட்டினம், 1987.

99. க. வெள்ளைவாரணன், சங்ககாலத் தமிழ் மக்கள், நேசனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை, 1954.

100. வேதநாயகம்பிள்ளை, நீதிநூல், கழக வெளியீடு, சென்னை, 1962.

101. இரா. வேலு, திருக்குறளும் கௌடலியமும் – ஒப்பாய்வு, அறம் பதிப்பகம், மதுரை, 1989.

102. மயிலை, சீனி. வேங்கடசாமி, கௌதமபுத்தர், ஸ்டார் பிரசுரம், சென்னை, 1956.

103. ந.மு. வேங்கடசாமிநாட்டார், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை, 1963.

104. எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கிய விளக்கம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1965.

105. க.ரா, ஜமத்கனிநாயர், குமரேச சதகம், பன்னிரு சதகத்திரட்டு இரத்தினநாயகர் ஸன்ஸ், சென்னை, 1955.

106. எஸ். ஜெயலட்சுமி, திருக்குறளும் தம்மபதமும், சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை, 1975.

107. கூ.அ. ராஜ்முகம்மது, உறிந்து தர்மம் பண்டாரவாடை வெளியீடு, பண்டாரவாடை, 1960.

108. கி. லக்ஷ்மணன், இந்திய தத்துவ ஞானம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1987.

## தமிழ்க்கட்டுரைகள்

109. அப்பனையங்கார், திருக்குறள், செந்தமிழ், தொகுதி 48, மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை, 1952.

110. அழகரடிகள், திருக்குறளில் ஆன்மநேய ஒருமை, திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுமலர், தமிழ்நாடு தெய்வீகப்பேரவை, சென்னை, 1970.

111. க. இராமச்சந்திரன், திருக்குறளில் பழக்கவழக்கங்கள், திருக்குறள் சிந்தனைகள், அ.ப. கழகம், அண்ணாமலை நகர், 1979.

112. மா. சண்முகசுப்பிரமணியம், திருக்குறளும் வழக்கியலும், செந்தமிழ், தொகுதி 63, மதுரை தமிழ்சங்கம், மதுரை, 1967.

113. மு. சண்முகம்பிள்ளை, திருக்குறள் ஆராய்ச்சி, செந்தமிழ், தொகுதி 63, மதுரைக் தமிழ்ச்சங்கம், மதுரை, 1967.

114. இரா. சாரங்கபாணி, வள்ளுவர் அரசியலும் பிற இலக்கியத்தார் அரசியலும், வள்ளுவர் வகுத்த அரசியல், திருவள்ளுவர் கழகம், தென்காசி, 1955.

115. சாமி. சிதம்பரனார், சாதியும் தமிழரும், பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், இலக்கிய நிலையம், சென்னை, 1974.

116. கோ. சுப்பிரமணியன், வள்ளுவர் வகுத்த அரசியல் திருவள்ளுவர் வாக்கு திருவள்ளுவர் கழகம், தென்காசி, 1955.

117. ச. தண்டபாணிதேசிகர், காப்பியங்கள், உலகத்தமிழ், ம.ப. கழகம், மதுரை, 1981.

118. அ.கி. பரந்தாமனார், காமத்துப்பால் ஆராய்ச்சி, செந்தமிழ், தொகுதி 63, மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை, 1967.

119. தி. முருகரத்தனம், நீதிநூல்கள், உலகத்தமிழ், ம.ப. கழகம், மதுரை, 1981.

120. ந.ரா. முருகவேள், திருவள்ளுவர் உடன்படாத சில கொள்கைகள், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுமலர், தமிழ்நாடு தெய்வீகப்பேரவை, சென்னை, 1970.

121. மு. வரதராசன், மரபில் நேர்ந்த மாறுதல்கள், முத்துக்கோவை, தமிழகப் புலவர்குழு வெளியீடு, திருச்சி, 1963.

122. மு. வரதராசன், வள்ளுவர் கண்ட அரசியல் அன்றும் இன்றும், வள்ளுவர் வகுத்த அரசியல், திருவள்ளுவர் வாக்கு, திருவள்ளுவர் கழகம், தென்காசி, 1955.

123. மு. வரதராசன், உலகப்பொதுமை, திருவள்ளுவர் வாக்கு, திருவள்ளுவர் கழகம், தென்காசி, 1955.

124. லலிதா காமேஸ்வரன், திருக்குறள் காட்டும் மருத்துவம், திருக்குறள் கருத்தரங்கக் கட்டுரைகள், வள்ளுவர் கோட்டம், சென்னை, 1976.

125. ஜலஜா கோபிநாத், பழந்தமிழகத்தில் குற்றமும் தண்டணையும் தமிழியல் ஆய்வுக்கட்டுரைகள், ம.ப. கழகம். மதுரை, 1990.

### ஆங்கில நூல்கள்

126. R. Caldwell, A Comparative Grammer of Dravidian Languages, University of Madras, Madras, 1956.

127. Chathopadhya Sudhakar, Social Life in Ancient India, Academic Publications, New Delhi, 1965.

128. Dubais Abbus, Hindu Manners Customs and Cer emonies, Oxford University Press, Delhi, 1978.

129. D.D. Herbert H.Gowen, A History of Indian Literature, Seema Publications, Delhi, 1975.

130. Nietzsche, The Will to Power, Walter Haufman Holtingatale, London, 1968.

131. Nilakanta Sastri, A History of South Indiam Oxford University Press, Delhi, 1966.

132. Oldenburg, Herman, Buddha: Life, his Doctorins, His Order, Williams Norgate, London, 1882.

133. Pandurang Vamman Kane, History of Dharma Sastra, Vol-I, Bhandorkar Oriental Research Institute, Poona, 1968

134. N. Prabhu Pandherinath, Hindu *Social Organisation*, Popular Prakashan, Bombay, 1963.

135. S. Radhakrishnan, Indian Philosophy, Vol-I, George Allen, London, 1971.

136. N. Subramanian, Sangam Policy, Asia Publishing House, Madras, 1996.

137. N. Subramanian, The History of Tamil Nadu, Kodel Publishers, Madurai, 1972.

138. Swami Ramananda Bharathi, Manu and Thiruvallur, Sangam Publishers, Madras, 1973.

139. Vibhuti Bhnshan Mishra, From the Vedas to the Manu Samhita, Sterling Publishers Private Ltd., New Delhi, 1982.

Dr. T. P. M. LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERSITY